தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்-81. 82

# அகஸ்தியர் இரண்டாயிரம்

## முதல் இரண்டு பாகங்கள்

(உரையுடன்)

வெளியீடு:
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

1989] [விலை ரூ 50=

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்-81, 82

# அகஸ்தியர் இரண்டாயிரம்

## முதல் இரண்டு பாகங்கள்

(உரையுடன்)

பதிப்பாசிரியர்:

Dr. S. வெங்கடராஜன் L.I.M.

முன்னாள் ஆயுர்வேத பண்டிதர்,

சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சை.

வெளியீடு:

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

1989] [விலை ரூ. 50 = 00

முதற் பதிப்பு – 1958

இரண்டாம் பதிப்பு – 1970

மூன்றாம் பதிப்பு – 1989

# AGASTIYAR IRANTAAYIRAM

S 616.06
VEN

6152

[ ஸ்ரீ சரவணா அச்சகம், சீர்காழி. ]

## பதிப்புரை:

—o—

அகத்தியர் பெயரில் பற்பல சித்த மருத்துவ நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. 'அகத்தியர் 2000' என்ற இந்நூலும் அவற்றுள் ஒன்று. பல மருத்துவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்நூல் மூன்றும் பதிப்பாக வெளிவருகிறது.

'நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்ற குறளின் கருத்துக்கேற்பவே சித்த மருத்துவ முறை அமைந்துள்ளது. இக்குறளில் 'நாடி' என்ற சொல் வினையெச்சமாக வந்திருப்பினும் சித்த மருத்துவ முறைக்குரிய 'நாடி' பார்த்தல் என்ற பெயர்ச் சொல்லின் பொருளும் இங்கே ஏற்புடையதே.

இந்த நூல் முதலில் நோய் நாடுவதற்குரிய வழிகளைக் கூறுகிறது. பிறகு நோய் முதல் நாடும் வழிகளைக் கூறுகிறது. வாத பித்த கபங்களை நாடி மூலம் அறியும் வழிகளை விளக்குகிறது. பிறகு பல்வேறு நோய்களின் குணங்களையும் அவற்றை நீக்கும் முறைகளையும் விரிவாகக் கூறுகிறது.

மருத்துவர்களுக்கேயன்றி நோயின்றி வாழ விரும்பும் பொதுமக்களுக்கும் இந்நூல் பயன்படுவதொன்றாகும்.

நான் பணி ஏற்பதற்கு முன்பு அச்சிடப்பட்ட இந்நூலின் வெளியீட்டுப் பணிகள் அனைத்தையும் கவனித்துக் கொண்ட இம்மகாலின் பதிப்பு மேலாளரும் நூலகருமான திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கு நன்றி. இந்நூலை நன்முறையில் குறித்த காலத்தில் அச்சிட்டுத் தந்த சீர்காழி ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் நன்றி.

நூல் வெளியீட்டுக்குரிய பொருளை நல்கிவரும் நடுவண் அரசுக்கு நனி நன்றி.

தஞ்சாவூர்,
24—10—89.

**மு. சதாசிவம்**
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

## முன்னுரை

இந்த வெளியீட்டில், நமது புராதன வைத்திய நூல் களில்ஒன்ருகிய அகஸ்தியர்2000 என்ற நூல் அடங்கியிருக் கிறது. அகஸ்தியர் முதலிய மஹரிஷிகளாலும், போகர், கொங்கணர் முதலிய சித்தர்களாலும், தமிழில் ஏராள மான வைத்திய நூல்கள் எழுதப்பட்டுத் தற்காலத்தில் பலராலும்வாசித்துக்கையாளப்பட்டுவருகின்றன ஆனுல் நம் தமிழ்நாட்டில், சுமார் 600,700 வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட கலவரத்தில், நமது தமிழ் நூல்களும், ஸம்ஸ் கிருத நூல்களும் அழிந்துபோயின. அவைகளில் எஞ் சியவைகளே, பிற்காலத்தில் நம்நாட்டில் மூலைமுடுக்கு களிலிருந்து சேகரிக்கப்பட்டு, நூல்வடிவமாக்கப்பட்டு பிரசாரத்தில் இருந்து வருகின்றன. நூல்கள் பல சிதைந்துபோய், பலரிடங்களிலிருந்து சேர்க்கப்பட்ட காரணத்திஞல், எந்த நூலும் கோவையாக முதல் இடை கடை அதனதன் இடத்தில் அகப்படவுமில்லை, சேர்க்கப்படவுமில்லை. இந்தக்காரணத்தைக்கொண்டே அகப்பட்டபாடல்களைச் சேர்த்து, அதற்குத் தகுதியான பெயர் வைக்கமுடியாமல், நூலாசிரியரின் பெயரை யும், பாடல்களின் எண்ணிக்கையையும் சேர்த்து அகஸ்தியர்10000 அகஸ்தியர்4000 அகஸ்தியர்1500கொங்கணர் முதல்காண்டம்1000நடுக்காண்டம்1000 கடைக்காண்டம்1000 போகர் 7000 என்ற பெயரால் இத்தொகுதிகளுக்குநாம கரணம் செய்தனர். இந்தத் தொகுதி நூல்களில் தொடர்ந்தாற்போல் எந்த விஷயமும் சொல்லப்பட வில்லை. ஓரிடத்தில் மருந்துமுறையும், அடுத்தாற்போல் ஓர் யோகமுறையும், அதற்கடுத்தபடி ஓர் வியாதியின் குணு குணங்களும், அதன் பிறகு வச்யம் முதலிய மந்தி

ரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சரியான வரிசையில் நூல்களின் பகுதிகள் அமைக்கப்படவில்லை என்ற குற்றம் மட்டில் இருந்தால், அந்த நூல்கள் நமக்கு நன்ருகப் பயன்படும். ஆனுல் அவர்களுக்கு அகப்பட்ட பாடல்களை 1000, 2000 முதலிய முழுத் தொகையாக்குவதற்காகத் தங்கள் கைச்சரக்கைக் கொண்டு தங்கள் பாடல்களைச் சேர்த்திருக்கிருர்கள். இவ்விதம் சேர்க்கப்பட்டபாடல்களை மருத்துவத்தில் அற்பப் பழக்கம் உள்ளவர்களும் எளிதில் கண்டு கொள்ளலாம். ஆனுல், நமது நாட்டில் நூல்களைக் குறை கூறுவதோ, அல்லது அவைகளில் பிற்காலத்திய சேர்க்கை இருப்பதாக எண்ணுவதோ, ஓர் பெரியபாவம் என்ற எண்ணம்வெகுநாளாக இருந்து வருகிறது. பெரும்பாலும் இந்த எண்ணம் நமக்கு நன்மையையே பயத்திருக்கிறது. ஆனுல், சில சமயங்களில் கெடுதலும் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது, இந்த நூல்களையெல்லாம் நன்ருக அலசிப்பார்த்து அவைகளில் நிச்சயமாக மூல ஆசிரியரால் ஏற்பட்டதென்று சந்தேகமில்லாமல் தோன்றக் கூடிய பகுதியை மட்டில் சேர்த்து, புதிய நூல்களை வெளியிடவேண்டிய காலம் வந்துவிட்டது. இப்பணியில், நமக்கு ஸம்ஸ்கிருதத்தில் உள்ள நூல்கள் பயன்படும். ஏனெனில் நம் நாட்டுக்குழப்பத்தில் ஸம்ஸ்கிருத நூல்களும் அழிந்தன என்பது உண்மையேயாயினும், நம் நாட்டின் அதிருஷ்ட வசத்தால் உதித்த வித்யாரண்யரென்ற மஹான், விஜயநகர ராஜ்யத்தைத் தோற்றுவித்த தோடுநில்லாமல், அவருக்கு வாய்த்த லெக்ஷ்மீகடாக்ஷத்தால் வடநாட்டில் பல இடங்களுக்கும் மனுஷ்யர்களை அனுப்பி இந்த நாட்டில் அற்றுப்போன நூல்களையும், அந் நூல்களில் பயிற்சி உடையவர்களையும் வரவழைத்து, நமது கலைகள் விஞ்ஞானம் இவைகளுக்குப் புத்துயிர்

அளித்தனர். நான்குவேதங்களுக்கும் புதிதாக பாஷ்யம் எழுதி வைத்தனர். தர்ம சாஸ்திரத்திற்கென்று ஒரு பெரிய தர்மசாஸ்திரமான பராசர மாதவீயத்தை இயற்றியுள்ளார். அதே விதமாக, ஸங்கீதத்துக்காக ஸங்கீத சாரம் என்ற நூலையும், இன்னும் மற்ற சாஸ்திரங்களுக்காகத் தனி நூல்களையும் இயற்றியுள்ளார். நமது இதிஹாஸ புராணங்களில் சிவபரமான பகுதிகளைப் பல வகையாகத் திரட்டி, சுமார் 40,000 சுலோகங்கள் கொண்ட சங்கரவிலாஸம் என்ற நூலையும் தொகுத்திருக்கிறார். இவ்விதமாகப் பல நூல்களைத்தாமே தொகுத்தும், பலவிடங்களிலிருந்து சேகரித்தும், ஸம்ஸ்கிருதத்திலுள்ள நமது கலை, விஞ்ஞானம் முதலானவைகளைக் காப்பாற்றியுள்ளார். ஆகையால், நமது தமிழ் நாட்டில் நமக்குக் கிடைத்திருக்கும் தமிழ்க் கலைப்பொக்கிஷங்களை சரியாகப் புரிந்துகொண்டு அதைக் கையாளுவதற்கு, அதே கலை சம்பந்தமான ஸம்ஸ்கிருத நூல்கள் அவசியம்.

நமதுஸரஸ்வதிமஹாலில் தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலும், பலகலைகளிலும், சாஸ்திரங்களிலும் வல்லவரான பெரியோர்கள், நூல்களைப் பரிசோதித்துச் சேர்த்தும், பல புது நூல்களெழுதியும் சுமார் கி.பி. 1400 முதல் 1855 வரை இப்பெரிய பணியை இயற்றியுள்ளார்கள். அவர்கள் பார்த்துச் சேர்த்து வைத்திருக்கும் நூல்களில் ஓர் தனிப் பெருமையுள்ளது. அவர்கள் பார்த்துச் சேகரித்த நூல்களுள் இந்த அகஸ்தியர் 2000 ஒன்று. அகஸ்தியர் பெயரால் அச்சானவை சுமார் 50 நூல்களும், இதுவரை அச்சுக்கு வராத நூல்கள் 100ம் கிடைக்கின்றன. அவைகளுள் இந்த அகஸ்தியர் 2000 ஒன்று.

அக்காரணம் பற்றியே இதை வெளியிடவேண்டியது அவசியமெனக் கருதப்பட்டது.

இதில், நாடிபார்த்தல் முதற்கொண்டு நோய்களின் குணுகுணங்கள், அவற்றின் சிகிச்சைகள் எல்லாம் வரிசைக்கிரமமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முறைகளெல்லாம் மிகவும் அருமையாக அமைந்திருக்கின்றன. இதிலுள்ள முறைகள் சரபோஜி மஹாராஜாவிஞல் அவரது "தன்வந்தரீ மஹால்" என்ற ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டு, ஆங்கிலேய வைத்தியர்களால் நோயாளிகளின் நோய் குணமடையும் வரலாறும் வரையப்பட்டு, 'அந்த வரலாறு சீட்டுக்களைக் கொண்டு எந்த முறை கைகண்டது என்று தீர்மானிக்கப்பட்டு, முறைகள் தேர்ந்து எடுக்கப்பட்ட ஆராய்ச்சியில் இந்த அகஸ்தியர் இரண்டாயிரத்திலிருந்து பல முறைகள் கைகண்டவை எனச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலின் முதற்பாகம் இதில் அடங்கியுள்ளது. அடுத்த பாகம் சீக்கிரம் வெளிவரும். இந்த நூல் நமது நாட்டு வைத்தியர்களுக்கு மருத்துவ அறிவை வளப்படுத்தி அதனுல் நம் நாட்டுக்கு நலம் புரியுமென்று நம்புவோமாக.

Dr. S. வெங்கடராஜன்.

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை.

''அகத்தியர் இரண்டாயிரம்'' என்னும் இந்நூல் மத்தியஅரசாங்கத்தின்உதவியுடன்தனித்தனியேமூன்று பாகங்களாகஎமதுசரசுவதிமகாலின்மூலம் முன்னமேயே வெளிவந்துள்ளது. இந்நூலுக்கு ஆதாரமான 14 இலக்கமிட்ட தமிழ்மருத்துவச்சுவடி இந்நூலகத்திலுள்ளஅரிய சுவடிகளில் ஒன்றாகும். இதன் முதலிரண்டு பாகங்கள் தனித்தனியே1958-ம்ஆண்டிலும்,மூன்றாம்பாகம்1963-ம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. இந்த நூலின் முதலிரண்டுபாகங்களின் இரண்டாம்பதிப்புஒரேபுத்தகவடிவத்தில் இப்பொழுது வெளிவருகிறது. பலரும் இந்நூலைப் பெற்றுப்பயனடைந்துள்ளனர்என்பதற்கு இவ்விரண்டாம் பதிப்பின் வெளியீடே சான்றாகும்.

முதற் பதிப்பை ஆர்வத்தோடும், ஊக்கத்தோடும் பதிப்பித்துத்தந்ததோடல்லாமல், இப்பதிப்பின் அச்சகப் பிரதிகளையும் பிழை திருத்தம் செய்துதந்த டாக்டர் திரு. **எஸ். வெங்கடராஜன்**, எல். ஐ. எம். அவர்கட்கு எமது நன்றி உரித்தாகுக.

**நீ. கந்தசாமி,**
கௌரவக் காரியதரிசி,
சரசுவதி மகால் நூல் நிலையம்.

தஞ்சாவூர்,
2—10—70.

## முதற் பதிப்பின் முகவுரை

### முதல் பாகம்

இந்த வெளியீட்டில் "அகஸ்தியர் 2000" என்னும் வைத்திய நூல் முதன் முதலாகப் பதிப்பிக்கப்பட்டிருக் கிறது. அகஸ்தியர் வைத்திய நூல்கள் பல இதுவரையில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இன்னும் சில சுவடிகளி லேயே கிடைக்கின்றன. ஆனல் இந்த நூல் இதுவரை யில் அச்சிடப்படவில்லை. சுவடிகளிலும் நமது சரஸ்வதி மஹால் நூல் நிலயத்தைத் தவிர வேறு இடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இதில் அநேகமாய் எல்லா நோய்களின் குணுகுணங்களும் அவைகளுக்கான சிகிச் சையும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலுள்ள குணு குணங்களோ சிகிச்சைகளோ மற்ற அகஸ்தியர் நூல் களைக்காட்டிலும் மேலானதாகவே கருதவேண்டியிருக் கிறது. இந்த வெளியீட்டில் இந்த நூலின் முதல் பாகம் பாடல்களின் உரையோடு பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம்பாகம் அச்சிடப்பட்டு வருகிறது. இந்த நூல் வைத்தியர்களுக்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயன் படுவதற்காக பாடல்களுக்குப் உரையுடன் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

இந்த நூலை உரையுடன் பதிப்பித்தது, நமது சரஸ்வதி மஹால் தமிழ் வைத்திய வெளியீடுகள் பெரும் பாலானவைகளைப் பதிப்பித்துதவிய Dr.S.வெங்கடராஜன் அவர்களே. அன்னருடைய அரிய சேவைக்கு எமது நன்றி உரித்தாகும்.

இந்த நூலையும் ஏனைய அரிய நூல்களையும் வெளி யிடுவதற்காக நமது பாரத மத்திய சர்க்கார் அவர்கள் அன்புடன் அளித்த நிதி உதவிக்காக அவர்களுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

சரஸ்வதி மஹால்,
20—3—58.

S. கோபாலன்,
கவுரவ காரியதரிசி,

## இரண்டாம் பாகம்

இந்தவெளியீட்டில் **அகஸ்தியர் இரண்டாயிரம்** எனும் அரிய வைத்திய நூலின் இரண்டாவது பாகம் அடங்கியிருக்கிறது. முதல் பாகத்தின் முன்னுரையில் கண்டபடி இந்த நூல் ஏற்கனவே அச்சிடப்பட்டிருக்கும் அகஸ்தியர் நூல்களிலோ அல்லது சுவடிகளிலோ சேர்ந்ததல்ல. இதன் சுவடி சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் மட்டும் உள்ளது. இதில் காணும் முறைகளை அகஸ்தியருடைய மற்ற நூல்களிலுள்ள முறைகளுக்குச் சமமானதாகவோ மேலானதாகவோ சொல்ல வேண்டும்.

இந்தவைத்தியர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் பயன்படும் என்று நம்புகிறோம்.

இந்த நூலை, இதன் முதல் பாகத்தை நமக்காகப் பதிப்பித்துதவிய Dr. ஸ்ரீ S. வெங்கடராஜன் (L.I.M.) அவர்களே பதிப்பித்துள்ளார். அன்னாருடைய அரிய சேவைக்கு எமது நன்றி உரித்தாகுக.

நமது மத்திய அரசாங்கத்தார் நமக்கு அன்புடன் அளித்துள்ள உதவியைக்கொண்டு இந்த நூலையும் நமது நூல் நிலயத்திலுள்ள மற்றும் சில அரிய நூல்களையும் பிரசுரித்துள்ளோம். அவர்களுடைய உதவிக்கு எமது நன்றி.

S. கோபாலன், B.A.,B.L.,
கௌரவ காரியதரிசி,
சரஸ்வதி மகால் நூல் நிலையம்.

தஞ்சாவூர்,
28—3—58.

# PREFACE TO FIRST EDITION

## FIRST PART

In this publication, a medical manuscript in Tamil called AGASTYAR 2000 has been published for the first time The book contains the diagnosis and treatment of almost all the common ailments. We have a very large number of treatises on Medicine in Tamil in the name of Agastyar and most of them have been in print for the last sixty or seventy years. But this manuscript namely Agastyar 2000 is not known elsewhere either in print or in manuscript except in our Library. The diagnosis and treatment of diseases mentioned inthisbookcompare favourably with those in the other treatises attributed to Agastyar. In this publication, about one-half of the manuscript has been published with prose version as the I part, and the II part is being printed and will soon be issued. It is hoped that the rare and valuable recipes in this work will be found useful by Doctors and the public alike.

The book has been carefully edited with prose version by Dr.S. Venkatarajan L. I. M,. who has already edited many of our Tamil publications on medicine. Our thanks are due to him for his valuable services.

We are thankful to the Union Government of India, for their liberal grants that have helped us to publish this and other valuable manuscripts of this Library.

Tanjore,
20—3—1958

S. GOPALAN.
*Honorary Secretary,*
*T.M.S.S.M Library, Committee.*

## SECOND PART

This publication contains the second part of AGASTYAR 2000. It is a rare work of Agastiyar's not found elsewhere. The prescriptions compare favourably with those found in other works of Agastiyar's and other Siddhas. It is hoped that this work will benefit our medical practitioners and the general public.

Our thanks are due to Dr. S. Venkatarajan, L.I.M. who has edited the text with a prose version as he has done it the first part of this work.

We are grateful to the Government of our Indian Union for their timely grant that has helped us to publish this and other valuable manuscripts of the Library.

TANJORE,
28—3 58.

S. GOPALAN, B.A.,B.L.,
*Honorary Secretary,*
T. M. S. S. M. LIBRARY.

# அகஸ்தியர் இரண்டாயிரம்

## பொருளடக்கம்

### முதல் பாகம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | காப்பு | 1 |
| 2 | அவையடக்கம் | ,, |
| 3 | வைத்தியன் நிதானம் | 3 |
| 4 | வைத்யரிடம் நோயாளி அனுகும் முறை | 4 |
| 5 | கடவுள் துதி | 5 |
| 6 | வியாதிகளைப் பரீக்ஷிக்கும் முறை | ,, |
| 7 | வியாதிகளின் சாத்யாசாத்யம் | ,, |
| 8 | கற்ப உற்பத்தி | 6 |
| 9 | சத்த தாதுக்கள் | 7 |
| 10 | மனித ஆயுளுள் தோஷங்களின் காலநிலைமை | ,, |
| 11 | பஞ்சபூதங்கள் உடலை ஆளும் காலக்கிரமம் | ,, |
| 12 | பஞ்சகக்கருவி | 8 |
| 13 | தசவாயு | 9 |
| 14 | பிராணவாயுவின் லட்சணமும் செய்கைகளும் | ,, |
| 15 | அபான வாயுவின் லட்சணமும் செய்கைகளும் | ,, |
| 16 | வியானவாயுவின் லட்சணங்களும் செய்கைகளும் | 10 |
| 17 | உதானவாயுவின் செய்கையும் ஸமானவாயுவின் நிறமும், இருப்பிடமும் | ,, |
| 18 | சமானவாயுவின் குணமும், கூர்மன், நாகன் இவைகளின் நிறமும் | ,, |
| 19 | இதர வாயுக்களின் குணமும், செய்கையும் | 11 |
| 20 | இடைகலை பிங்கலை முதலான தசநாடிகள் | 14 |
| 21 | தசநாடிகளின் இருப்பிடம் | ,, |
| 22 | தசநாடிகள் | 15 |
| 23 | சரீர அமைப்பு | 17 |
| 24 | தேக பரீக்ஷை | 18 |
| 25 | நாடி நிதானம் | ,, |
| 26 | நாடி பார்க்கக்கூடாத நிலமை | ,, |

| | | |
|---|---|---|
| 27 | கைநாடிகளின் இருப்பிடம் | 19 |
| 28 | நாடி பார்க்கும் விதம் | ,, |
| 29 | ஸ்திரீ புருஷர்களுக்கு நாடி பார்க்கும் விதம் | ,, |
| 30 | வாத, பித்த, கப நாடிகளின் கதி | 20 |
| 31 | நாடிகளின் கதிபேதத்திலிருந்து வியாதியின் தன்மையை அறிதல் | ,, |
| 32 | தினத்தில் நாடியின் நிலமை | 21 |
| 33 | வாத, பித்த, கப நாடிகளின் வலிமை | ,, |
| 34 | நாடிகளின் கதிபேதங்கள் | ,, |
| 35 | அம்ருத கலைகளில் செல்லும் நாடி நிலமை | ,, |
| 36 | விஷகலை நாடி நிலமை | 22 |
| 37 | காய்ச்சலுக்கான நாடி லக்ஷணம் | 23 |
| 38 | சகடநாடி லக்ஷணம் | ,, |
| 39 | ருசியும் தோஷமும் | 24 |
| 40 | வாதநாடிக் குறி குணம் | ,, |
| 41 | பித்தத்தின் குறி குணம் | 25 |
| 42 | கபநாடிகளின் மரணக்குறி | ,, |
| 43 | நாடி பார்க்கும் விதம் | ,, |
| 44 | வாத பித்தநாடி லக்ஷணம் | 26 |
| 45 | வாத கப நாடி லக்ஷணம் | ,, |
| 46 | பித்தவாத நாடி லக்ஷணம் | ,, |
| 47 | பித்த நாடி லக்ஷணம் | 27 |
| 48 | வாத சிலேத்ம லக்ஷணம் | ,, |
| 49 | தேகத்தில் நாடி இருக்கும் விதம் | ,, |
| 50 | புணர்ச்சிக்குப்பின் நாடியின் நிலமை | 28 |
| 51 | மரண லக்ஷணம் | ,, |
| 52 | ஒரு மாதத்தில் மரணத்தின் அறிகுறிகள் | ,, |
| 53 | 10 மாதத்தில் மரணத்தின் குறிகள் | ,, |
| 54 | 8 நாட்களுள் மரணக் குறிகள் | 29 |
| 55 | பித்த கோபத்தால் ஏற்படும் மரண லக்ஷணம் | ,, |
| 56 | $2\frac{1}{2}$ நாட்களுள் ஏற்படும் மரண லக்ஷணம் | ,, |
| 57 | சிலேத்தும கோப லக்ஷணம் | 30 |

| | | |
|---|---|---|
| 58 | தேகத்தில் கபம், பித்த கபம் இவைகள் அதிகரித்தாலுண்டாகும் குறிகள் | 30 |
| 59 | மரண லக்ஷணம் | 31 |
| 60 | வாதரோகங்களின் இருப்பிடம் | 32 |
| 61 | வாதத்தின் குணங்கள் | ,, |
| 62 | பித்த குணம் | 33 |
| 63 | வாதசரீரக் கூறு (வாதப்பிரகிருதி) | 34 |
| 64 | பித்த தேகக் கூறு (பித்தப்பிரகிருதி) | 35 |
| 65 | கபதேகக்கூறு | ,, |
| 66 | நாடியுணர்வு | 36 |
| 67 | கபநாடி லக்ஷணமும், ஆஹாரங்களும் | ,, |
| 68 | நாடி ஓடும் கதிபேதங்கள் | ,, |
| 69 | இதுவுமது | 37 |
| 70 | இதுவுமது | ,, |
| 71 | இதுவுமது | 38 |
| 72 | மலப் பரிக்ஷை | ,, |
| 73 | சலப் பரிட்சை | 39 |
| 74 | நேத்திரப் பரிட்சை | ,, |
| 75 | மரண லட்சணம் | 40 |
| 76 | நாக்கின் லட்சணம் | 41 |
| 77 | சாத்யாசாத்யக் குறிகள் | ,, |
| 78 | அஸாத்யக் குறிகள் | 42 |
| 79 | மரண லக்ஷணம் | 43 |
| 80 | வைத்திய லக்ஷணம் | ,, |
| 81 | ரோகங்கள் உற்பத்திக் குறிப்பு | 44 |
| 82 | வியாதிகளின் தொகை | ,, |
| 83 | வாதவியாதிகளின் விபரம் | 45 |
| 84 | பித்த வியாதிகளின் விபரம் | ,, |
| 85 | கப வியாதிகளின் விபரம் | ,, |
| 86 | ரோகத் தொகைகள் | ,, |
| 87 | சுர நிதானம் | 50 |
| 88 | ரஸ தாது, ரத்த தாதுவில் பரவிய சுர நிதானம் | 51 |

| | | |
|---|---|---|
| 89 | பித்த தாது, மேதை தாது கதசுர லக்ஷணம் | 51 |
| 90 | மஜ்ஜைகத, சுக்கிலகத சுரத்தின் லக்ஷணம் | 52 |
| 91 | அ(ஸ்)த்தி கர லக்ஷணம் | ,, |
| 92 | ரோகோத்பத்தி | 53 |
| 93 | வாத ஜ்வர லக்ஷணம் | ,, |
| 94 | பித்த ஜ்வர லக்ஷணம் | ,, |
| 95 | கபச்சுர லக்ஷணம் | 54 |
| 96 | வாத பித்த ஜ்வர லக்ஷணம் | ,, |
| 97 | வாத கபச் சுர லக்ஷணம் | ,, |
| 98 | பித்த கபச் சுரக் குறிகள் | 55 |
| 99 | சன்னிபாத ஜ்வரக் குறிகள் | ,, |
| 100 | வாதசோபச் சுரக் குறிகளும் பித்தசோபச் சுரக்குறிகளும் | ,, |
| 101 | பூதச்சுர லக்ஷணம் | 56 |
| 102 | அசீர்ணச் சுர லக்ஷணம் | ,, |
| 103 | ஆகந்துக ஜ்வரத்தின் காரணங்களும் குறிகளும் (அபிகாதஜ்வரம்) | ,, |
| 104 | மாமாக சுரம் குறிகள் | 57 |
| 105 | ஆதிக ஜ்வரம் (முறைஜ்வரம்) | 58 |
| 106 | குலைப்பு சுரத்தின் குறிகள் | ,, |
| 107 | சீதஜ்வர லக்ஷணமும் விஷமச்சுர லக்ஷணமும் | 59 |
| 108 | சுரத்தில் உபயோகிக்கக் கூடாத வஸ்துக்கள் | ,, |
| 109 | அபத்திய தோஷத்தாலேற்பட்ட சுர லக்ஷணமும் ஸ்திரீசங்க தோஷக்குறிகளும், விஷதோஷக் குறி குணங்களும் | 60 |
| 110 | சீதவிஷ தோஷ லக்ஷணம் | 61 |
| 111 | இரத்த சீவுக, பித்த சீவுக லக்ஷணம் | ,, |
| 112 | கிட்டின சீவுக தோஷ லக்ஷணம் | 62 |
| 113 | தோஷங்களின் மாத்திரை காலம் | ,, |
| 114 | வாத பித்த சிலேத்ம தோஷக்குறிகள் | 63 |
| 115 | வாத சுரத்தின் குறிகள் | ,, |
| 116 | பித்த சுரத்தின் குறிகள் | 64 |

| | | |
|---|---|---|
| 117 | சிலேத்ம சுர லட்சணம் | 64 |
| 118 | இதுவுமது | ,, |
| 119 | சந்நிவாத நிதானம் | 65 |
| 120 | சந்நி நீடிக்கும் காலம் | ,, |
| 121 | சந்திரிகன் குணம் | 66 |
| 122 | தாந்திரீகன் குணம் | ,, |
| 123 | சித்தவிப்ரமன் குணம் | 67 |
| 124 | கண்டகுச்சகன் குணம் | ,, |
| 125 | கர்ணிகன் குணம் | ,, |
| 126 | சீகுவிகன் குணம் | 68 |
| 127 | ருத்திரன் குணம் | ,, |
| 128 | அந்தகன் குணம் | 69 |
| 129 | புக்குநேத்ரன் குணம் | ,, |
| 130 | ரெத்தசாட்டியன் குணம் | ,, |
| 131 | பிரலாப குணம் | 70 |
| 132 | சீதாங்க சந்நிகுணம் | ,, |
| 133 | அபின்யாசன் குணம் | ,, |
| 134 | சுரநிதானம் | 71 |
| 135 | வாதசுரம் | 72 |
| 136 | பித்தச்சுர லக்ஷணம் | ,, |
| 137 | சிலேத்மசுர லக்ஷணம் | 73 |
| 138 | பித்தச்சுரத்தின் வேறு குறிகள் | ,, |
| 139 | வாத பித்த லக்ஷணம் | ,, |
| 140 | வாத சன்னி சுர லக்ஷணம் | 74 |
| 141 | திரிதோஷ சுரம் | ,, |
| 142 | வாத பித்த அய்யக்குறி குணம் | ,, |
| 143 | பித்த வாத அய்யக்குறிகள் | 75 |
| 144 | திரிதோஷக் குறிகள் | ,, |
| 145 | வாத கபக் குறிகள் | 76 |
| 146 | சன்னிவாத சுர லக்ஷணம் | ,, |
| 147 | பித்த வாத சிலேத்ம ஜ்வரக் குறிகள் | 77 |
| 148 | வாத பித்த சிலேத்மக் குறிகள் | ,, |

| | | |
|---|---|---|
| 149 | சேத்தும சுரம் | 78 |
| 150 | அதிசாரச் சுர லக்ஷணம் | ,, |
| 151 | ஆமச்சுர லக்ஷணம் | ,, |
| 152 | அத்திசுர லக்ஷணம் | 79 |
| 153 | கபவாத சுர குறிகள் | ,, |
| 154 | விஷ சுர லக்ஷணம் | 80 |
| 155 | ஆதி சுர லக்ஷணம் | ,, |
| 156 | சுரம் அதிகரிக்கக் காரணம் | ,, |
| 157 | சுரவகைகளில் லங்கனக்கிரமம் | 81 |
| 158 | லங்கனம் செய்யக்கூடாதவர் | ,, |
| 159 | லங்கனத்திற்காகாதவர் | ,, |
| 160 | கஷாயங்கள் (வாதசுரத்திற்குச் சித்தாமல்லி கஷாயம்) | 82 |
| 161 | சுரங்களுக்கு முன்னையாதிக் கஷாயம் | 83 |
| 162 | சோபம், சுரத்திற்குப் பார்ங்கியாதி கஷாயம் | 84 |
| 163 | தோஷ சுரத்திற்குச் சித்த மட்டிக் கஷாம் | 85 |
| 164 | ஸகல சுரங்களுக்கும் சிறுகாஞ்சோரிக் கஷாயம் | ,, |
| 165 | சந்நிபாத ஜ்வரங்களுக்கும் சுக்காதிக் கஷாயம் | 86 |
| 166 | வாந்தி, ஜ்வரத்திற்கு வில்வாதி கஷாயம் | ,, |
| 167 | ஸகல ஜ்வரத்திற்கும் பாதிரி கஷாயம் | 87 |
| 168 | திரிதோஷ ஜ்வரத்திற்குப் பார்ங்கியாதி கஷாயம் | 88 |
| 169 | கபசுரம், வாதசுரத்திற்குத் தூதுவளையாதி கஷாயம் | ,, |
| 170 | திரிதோஷ ஜ்வரத்திற்கு முஸ்தாதிக் கஷாயம் | 89 |
| 171 | திரிதோஷ ஜ்வரத்திற்குக் கொத்தான் கஷாயம் | ,, |
| 172 | பித்த ஜ்வரத்திற்கு விரேசனம் | 90 |
| 173 | பித்த ஜ்வரத்திற்கு "கோரைக்கிழங்காதிக் கஷாயம்" | ,, |
| 174 | மாந்த ஜ்வரத்திற்கு "குடூச்யாதி கஷாயம்" | 91 |
| 175 | சித்தப் பிரமையுடன் கூடிய பித்த சுரத்திற்குக் "குடூச்யாதி கஷாயம்" | 92 |
| 176 | பித்த சுரத்திற்குக் "கதலி ரஸாயணம்" | ,, |

177 சிலேத்ம ஜ்வரத்திற்கு வாஸாதி கஷாயம் 93

178 கபம், வயிற்று நோய்களுக்கு நிலக்குமிழ் சுடாயம் ,,

179 குளிருக்கு "வாஸாதி கஷாயம்" 94

180 குளிர் ஜ்வரத்திற்குச் "சிறுகாஞ்சோறியாதி
கஷாயம்" ,,

181 குளிர் ஜ்வரத்திற்குப் "படோலாதி கஷாயம்" 95

182 வெதுப்புக் (காங்கைக்)குக் குடுத்யாதி கஷாயம்" ,,

183 வாந்தி, ஜ்வரம் முதலியவைகளுக்கு
"வாஜாதி கஷாயம்" 96

184 தாப ஜ்வரத்திற்கு "ஏலாதி கஷாயம்" 97

185 கப, தாப ஜ்வரங்களுக்குத் தூதுவளையாதி கஷாயம் ,,

186 அதிஸார ஜ்வரத்திற்கு "மாதளம்பிஞ்சாதிக்
கஷாயம்" 98

187 அதிஸார ஜ்வரத்திற்கு நாகல்கொழுந்து கஷாயம் ,,

188 அதிஸார(ஜ்வர)த்திற்குக் "கருவாழைப்பூக்
கஷாயம்" 99

189 சுரத்துடன் கூடிய அதிஸாரந்தீரத்தாடிமாதி
கஷாயம் 100

190 அதிஸார ஜ்வரத்திற்கு "முத்தக்காசுப் பீட்டு" ,,

191 விஷஜ்வரத்திற்கு "முருவிலிக் கஷாயம்" 101

192 எல்லாவித ஜ்வரங்களுக்கும் "கொட்டைக்
கரந்தைக் கஷாயம்" ,,

193 எவ்வித ஜ்வரங்களுக்கும் கடுக்காயாதிக் கஷாயம் 102

194 ஜ்வரங்களுக்கு பேராமட்டிக் கஷாயம் ,,

195 வாந்திக்கு வில்வபத்திரிக் கஷாயம் 103

196 ஜ்வரத்தின்மேல் இருமலுக்கு "இண்டிலைக்
கஷாயம்" ,,

197 ஜ்வரத்திற்கு "கொன்றைத்தோல் கஷாயம்" ,,

198 ஆமஜ்வரத்திற்குப் "பாவட்டையாதிக் கஷாயம்" 104

199 மாந்தத்திற்கு "வேர்க்கொம்புக் கஷாயம்" 104
200 வாதசுர நிதானமும் சிக்காதிக் கஷாயமும் 105
201 வாத சுரத்திற்குச் சித்தாமல்லிக் கஷாயம் ,,
202 வாத சுரத்திற்குக் குடூச்யாதி கஷாயம் 106
203 வாத ஜ்வரங்களுக்குத் திரிபலாத்யம் கஷாயம் 107
204 சுரத்திற்குக் "கண்டங்கார்யாதிக் கஷாயம்" 108
205 குளிர் ஜ்வரத்திற்குக் "காய்வேளையாதிக் கஷாயம்" 109
206 முறை ஜ்வரத்திற்குக் "கண்டகாரிக் கஷாயம்" ,,
207 குளிர், குலைப்பு ஜ்வரத்திற்குப் பேராமட்டிக் கஷாயம் 110
208 சத்தியுடன் கூடிய ஜ்வரந்தீரப் பொரி கஷாயம் ,,
209 சத்தி குன்மம் ஜ்வரத்திற்கு லாஜாதி கஷாயம் 111
210 குளிருடன் கூடிய சுரத்திற்குத் "தசமூலாதி கஷாயம்" ,,
211 குளிர் ஜ்வரத்திற்குக் "குடூச்யாதி கஷாயம்" 112
212 குளிர் ஜ்வரத்திற்குச் "சுக்காதிக் கஷாயம்" 113
213 குளிர்ந்த ஜ்வரத்திற்குக் "கொத்தமல்லியாதிக் கஷாயம்" 114
214 குளிர் ஜ்வரத்திற்கு "வாஸாதி கஷாயம்" ,,
215 குளிர் ஜ்வரத்திற்குத் தேவதார்வாதி கஷாயம் 115
216 குளிர் ஜ்வரத்திற்குச் "சேவகனர் எண்ணெய்" ,,
217 வாத சிலேத்ம சுரக்குறி குணங்கள் 116
218 பித்த சிலேத்ம ஜ்வரத்தில் அருசிக்குச் சுக்காதி கடாயமும் "குடூத்யாதி கஷாயமும்" 118
219 சிலேத்ம ஜ்வரங்களுக்கு 'வாஸாதி கஷாயம்" 119
220 உடம்பு வலிக்குத் "தேவதார்வாதிக் கஷாயம்" 120
221 கப ஜ்வரங்களுக்குக் "கோட்டாதி கஷாயம்" ,,
222 வாதசிலேத்ம ஜ்வரத்திற்குத் தேவதார்வாதி கஷாயம் 121
223 வாதசிலேத்ம ஜ்வரத்திற்குக் கொடிக் குமிழ் கஷாயம் 122

224 சந்நிபாத ஜ்வரத்தின் குறிகுணங்கள் 123

225 நிவேதனப் பொருள்கள் ,,

226 கிரகங்களுக்கும் தேவதைகளுக்கும் பூஜை கிரமங்கள் 124

227 ஜ்வரம், எரிச்சலுக்குப் பச்சிலைக் கஷாயம் ,,

228 கபம், பித்தம், நெஞ்சுக்கரிப்புக்குக் "கருவேலங் கடுகு" 125

229 சந்நிவாதச் சுரத்திற்குச் சிகித்ஸாக்ரமம் 126

230 சந்நிபாத ஜ்வரத்திற்குப் "பலாகுடுச்யாதி கஷாயம்" ,,

231 பற்பல ஜ்வரங்களுக்கும்" சுண்டியாதிக் கஷாயம்" 127

232 சுரங்களுக்குக் "கரிப்பாலைத் தண்டாதிக் கஷாயம்" 128

233 வாத கப, சந்நிபாத ஜ்வரங்களுக்குக் "கோவையெண்ணெய்" 129

234 பித்த ஜ்வர குணம் 131

235 பித்த ஜ்வரத்திற்கு "வில்வாதிக் கஷாயம்" முதலியன ,,

236 பித்த ஜ்வரத்திற்குக் குடுச்யாதி கஷாயம் 133

237 பித்த ஜ்வரம், இரத்தக் கழிச்சலுக்கு "உசீராதி கஷாயம்" ,,

238 எவ்வித ஜ்வரங்களுக்கும் அதிமதுராதிக் கஷாயம் 134

239 பித்த ஜ்வரத்திற்கு இலுப்பைப்பூவாதி ,, 135

240 மாந்த பித்த ஜ்வர குணம் ,,

241 பித்த ஜ்வரத்திற்கு ஹரீதகீயாதி கஷாயம் 136

242 தாக ஜ்வர குணம் 137

243 தாகச் சுரத்திற்கு ஹிதமான வஸ்துக்கள் ,,

244 தாகந்தீர இளநீர் (ம்ருத்யாதி நீர்) 138

245 உழலைதீரக் கழுநீர் (வானவாத்திரம்) ,,

246 அழலை, ஜ்வரத்திற்கு வாழைக்கனிநீர் 139

247 உமிழ்நீர் வாந்திக்குப் "பன்னீர்ப் பூச்சு" ,,

| | | |
|---|---|---|
| 248 | வாதசந்நிக் குறி குணங்கள் | 140 |
| 249 | வாதசந்நியை அறியும் விதம் | ,, |
| 250 | சுரங்களுக்குத் திராக்ஷாதிக் குடிநீர் | ,, |
| 251 | உள்காங்கைக்குக் கொத்தமல்லிக் கடாயம் | 141 |
| 252 | அதிசார நிதானம், பித்தவதிசாரக் குணம் | ,, |
| 253 | பித்த அதிசாரத்திற்குக் கோஷ்டாதி கஷாயம் | 142 |
| 254 | பித்தசுரம், பித்த அதிஸாரங்களுக்கு முஸ்தாதி கஷாயம் | ,, |
| 255 | தாபஜ்வரம், விஷசுரம் சந்நிபாத ஜ்வரங்களுக்கு முலைப்பாலெண்ணெய் | 143 |
| 256 | வாத பித்த சுர குணம் | 145 |
| 257 | வாதபித்தசுர, அதிசாரங்களுக்கு வேர்க் கொம்புக் கடாயம் | ,, |
| 258 | பித்த ஜ்வரங்களுக்குத் "திரிபலாதிக் குடிநீர்" | 146 |
| 259 | செவ்வியாதிக் கஷாயம் | 147 |
| 260 | பித்த ஜ்வரம், அதிஸாரம் முதலியவை தீரக் "கீழாநெல்லிக் குடிநீர்" | 148 |
| 261 | ஜ்வரத்திற்குக் கொத்தமல்லியாதிக் கடாயம் | 149 |
| 262 | வாதபித்த ஜ்வரத்திற்குச் சிதேவி செங்கழுநீரெண்ணெய் | ,, |
| 263 | பித்த சிலேஷ்ம ஜ்வர குணம் | 150 |
| 264 | பித்த அதிஸாரத்திற்குக் குடுச்யாதி கஷாயம் | 151 |
| 265 | பித்தஜ்வர, அதிஸாரங்களுக்கு நிம்பாதி ,, | 152 |
| 266 | பித்தஜ்வர, அதிஸாரங்களுக்குச் (சுக்காதி கஷாயம்) | 153 |
| 267 | பித்த அதிஸாரங்களுக்கு (முஸ்தாதி கஷாயம்) | ,, |
| 268 | அதிஸாரங்களுக்கு (வெட்பாலையாதி ,, | 154 |
| 269 | பித்த கபஜ்வரங்களுக்குக் குடுச்யாதி ,, | ,, |
| 270 | சிலேத்ம ஜ்வர நிதானம் | 155 |
| 271 | தாகத்திற்குக் கண்டங்கத்திரிக் கடாயம் | 156 |
| 272 | பித்தகப ஜ்வரங்களுக்குச் "சுண்ட்யாதி கஷாயம்" | 157 |

| | | |
|---|---|---|
| 273 | குடூச்யாதிக் கஷாயம் | 158 |
| 274 | வேர்க்கொம்புக் கடாயம் | ,, |
| 275 | குடூச்யாதிக் கஷாயம் | 159 |
| 276 | நன்னாரி வேர் கடாயம் | 160 |
| 277 | அரக்கெண்ணெய் | ,, |
| 278 | முழுத்தஜ்வர லக்ஷணமும் அதற்கான கஷாயங்களும் | 162 |
| 279 | ஷை ஜ்வரத்திற்குத் திராக்ஷாதிக் கஷாயம் | 163 |
| 280 | ஷை ஜ்வரத்திற்குக் "கோஷ்டாதிக் கஷாயம்" | 164 |
| 281 | ஷை ஜ்வரத்திற்கு தாமரை இலைச் சுருள் ,, | ,, |
| 282 | முழுத்தச் சுரத்திற்குச் "சகதேவி எண்ணெய்" | 165 |
| 283 | விஷமஜ்வர லக்ஷணமும், நிம்பாதி கஷாயம் முதலியவைகளும் | 167 |
| 284 | ஜ்வரத்திற்குக் குடஜாதிக் கஷாயம் | 169 |
| 285 | ஜ்வரங்களுக்குத் தேவதார்வாதி கஷாயம் | 170 |
| 286 | விஷம ஜ்வரங்களுக்கு மரிசாதி நெய் | ,, |
| 287 | விஷமச் சுரத்திற்கு வெருகங்கிழங்கு எண்ணெய் | 171 |
| 288 | தாந்திரிக சந்நிக்கு மருந்துகள் குடூச்யாதி கஷாயம் | 172 |
| 289 | சைத்ய தோஷம் தீர இலாமிச்சைக் கஷாயம் | 173 |
| 290 | சந்நிக்குச் சங்காதி கஷாயம் | ,, |
| 291 | தந்திரிகச் சந்நிக்கு முசுறு முட்டைத் தைலம் | 174 |
| 292 | அந்தக சந்நி, அந்தக சந்நியின் லக்ஷணங்கள் | 176 |
| 293 | அந்தகச் சந்நிக்கு உசீராதி கஷாயம் | 177 |
| 294 | ருக்வாங்க சந்நிக் குறிகள் (ருத்திர சந்நி) | ,, |
| 295 | சித்தபிரம சந்நி (சித்த விப்ரமம்) லக்ஷணங்கள் | 178 |
| 296 | சித்தப்பிரம சந்நிக்குச் சிறுபஞ்ச மூலாதிக் கஷாயம் | ,, |
| 297 | ஷை (சித்தவிப்ரமன்) சந்நிக்குப் பூசனிப்பூ நஸ்யம் | 179 |

| | | |
|---|---|---|
| 298 | சீத ஜன்னிக்குப் பேய்ப்பருத்தி எண்ணெய் | 179 |
| 299 | சீதாங்க சந்நி லக்ஷணங்கள் | 181 |
| 300 | சீதாங்க சந்நிக்குச் சுரைத்தண்டுக் கஷாயம் | ,, |
| 301 | சீதாங்க சந்நிக்குச் சித்ரமூலாதி கஷாயம் | 182 |
| 302 | சீதாங்க சந்நிக்கு "ஆயில்ய எண்ணெய்" | 183 |
| 303 | கண்டகுச்ச சந்நி நிதானம் | 184 |
| 304 | கர்க்கணிக சந்நி லக்ஷணங்கள் | ,, |
| 305 | கர்க்கணிக சந்நிக்குச் "சிறுதேக்குக் கஷாயம்" | ,, |
| 306 | கர்க்கணிக சந்நிக்கு "முக்கூட்டெண்ணெய்" | 185 |
| 307 | புக்குநேத்திர சந்நி லக்ஷணங்கள் | 187 |
| 308 | இரத்தாக்கிஷ சந்நி லக்ஷணங்கள் | ,, |
| 309 | இரத்தாக்கிஷ சந்நிக்குக் கம்பந்திராய்க் கஷாயம் | 188 |
| 310 | பிரலாப சந்நிக் குறிகள் | ,, |
| 311 | சிங்குவாக சந்நிக் குறிகள் | 189 |
| 312 | பதிமூன்றுவித சந்நிகளுக்குப் பொதுவான மருந்துகள் | ,, |
| 313 | அபின்யாச சந்நி லக்ஷணம் | 190 |
| 314 | சுகசந்நிக் குறிகள் (Hysteria) | ,, |
| 315 | வாதசந்நிக் குறிகள் | 191 |
| 316 | சந்நிவாதக் குறிகள் | ,, |
| 317 | முகவாதசந்நிக் குறிகுணங்கள் (Facial paralysis) | 192 |
| 318 | வெடிசந்நி ரோக லக்ஷணங்கள் | ,, |
| 319 | வெடிசந்நிக்கு அரீதகீச் சூரணம் | ,, |
| 320 | வெடிசந்நிக்குப் பிப்பில்யாதி எண்ணெய் | 193 |
| 321 | கபால வியாதிக் குறிகள் | 194 |
| 322 | கபாலச் சந்நிக் குறிகள் | ,, |
| 323 | சந்நிகளுக்கு அஞ்சனம் | ,, |
| 324 | கலிக்கம் போடும் முறை | 195 |
| 325 | பலக்ஷய ஜ்வரக் குறிகள் | ,, |
| 326 | பித்த சந்நிக் குறிகள் | 106 |

327 சேத்துமச் சந்நிக் குறி குணங்கள் 196
328 பித்த சூசிகாவாயு சந்நியின் குறிகள் ,,
329 பித்த சூசிகா வாத சந்நிக்குச் சங்கம்வேர்க் கஷாயம் 197
330 வாத வாத வெறியின் குறிகள் 198
331 வாத பித்த வெறியின் லக்ஷணம் ,,
332 வாத கப வெறியின் குறிகுணங்கள் ,,
333 பித்தவெறி லக்ஷணங்கள் (பித்தப் பைத்தியம்) 199
334 பித்தவாத வெறியின் இலக்ஷணங்கள் ,,
335 பித்தப் பெருக்கின் குறிகள் (பித்தப்பித்தவெறி) 200
336 தேகத்தில் தோஷங்கள் சாதாரணமாக அதிகரிக்கும் காலம் ,,
337 வாதரோகலக்ஷணங்கள் 201
338 கபாலக்கனப்புவலிக் குணங்கள் ,,
339 ஒடு வாத லக்ஷணங்கள் 202
340 வருணவாதக் குறிகுணங்கள் ,,
341 அரியவாத லக்ஷணங்கள், ,,
342 கபாலக்குத்தின் குறி குணங்கள் 203
343 பிரவீச்சின் குறிகள் ,,
344 இதுவுமது 204
345 பிரவீச்சின் அஸாத்யக் குறிகள் ,,
346 பிரவீச்சிற்கு மருந்து ,,
347 பிரவீச்சிற்கு முக்கூட்டெண்ணெய் 205
348 பிரவீச்சிற்குச் சுடர்தைலம் 206
349 உடற்குத்தின் குறிகள் 207
350 குடல் வாதக் குறிகுணங்கள் 208
351 துடிப்புவாத லக்ஷணங்கள் ,,
352 நடுக்கு வாதக் குறிகள் ,,
353 நடுக்குவாதச் சந்நிக் குறிகள் 209
354 வாத ரோகத்திற்கு அர்க்காதி எண்ணெய் ,,
355 குதிரை வலி வாதம் 211

356 குதிரை வலிக்கு அஞ்சனம் 211

357 கபாலவலி, பிசாசு முதலியவை தீர பூவார்பழ நஸயம் 212

358 குதிரைவலி தீர ஈரவெங்காய எண்ணெய் ,,

359 அண்டவாதக் குறிகுணங்கள் 212

360 அண்டவாதத்திற்குப் பெருங்காயக் கஷாயம் 214

361 குடல்வாதம், சூலை, குன்மம் முதலியவைகளுக்கு கழற்சிக் கஷாயம் ,,

362 பக்கச்சூலைக்குப் பெருங்காயக் கஷாயம் 215

363 ஸர்வாங்கவாதத்திற்குச் சாறணைக் கிழங்காதி எண்ணெய் ,,

364 பக்கசூலைக்குச் சாறணைவேராதி எண்ணெய் 216

365 ஸர்வாங்க வாத இலக்ஷணங்கள் 217

366 சகலவாத ரோகத்திற்கும் முஸ்தாதி எண்ணெய் ,,

367 வாதரோகத்திற்கு அரீதக்யாதி கஷாயம் 218

368 சந்துவாதத்தின் குறிகள் 219

369 சூரியவாதத்தின் லக்ஷணங்கள் ,,

370 சூரியவாதத்திற்கு புரோசில் எண்ணெய் 210

371 80 வித வாதரோகங்களுக்குப் சிநேகப் பொட்டணம் 221

372 பித்த நிதானம் 222

373 பித்தரோகம், சுரம், வீக்கம், முதலியவைகளுக்கு மரிசாதி உருண்டை 223

374 பித்தத்திற்குப் பொன்னுங்காணி நெய் 224

375 சத்தி கபாலக் குறிகள் 226

376 சத்திக்குப் பயத்தம் பருப்பு நீர் ,,

377 வறட்சிப்பித்த லக்ஷணங்கள் ,,

378 வறட்சி பித்தத்திற்குச் சீதேவிச் செங்கழுநீர் நெய் 227

379 பித்தத்திற்கு நெல்லிமுள்ளியாதி கஷாயம் 228

380 இரத்தபித்த ரோக லக்ஷணங்கள் ,,

381 ரத்த பித்தத்திற்கு வாஸாதி கஷாயம் ,,

| | | |
|---|---|---|
| 382 | ரத்தபித்தங்களுக்கு வெள்ளைக்கடுக்காய்ச் சூரணம் | 229 |
| 383 | உட்காய்ச்சல் குறிகள் (அஸ்திகாங்கை) | ,, |
| 384 | உட்சுரத்திற்குச் சதாவரிச்சாறு மருந்து | 230 |
| 385 | காங்கைக்குப் பொன்னாங்காணி நெய் | ,, |
| 386 | பித்தகுன்ம நிதானம் | 231 |
| 387 | பித்த குன்மத்திற்கு நால்பாமராதி நெய் (சதுக்ஷீரிநெய்) | 232 |
| 388 | பித்த குன்மத்திற்குச் செங்கழுநீர்க்கிழங்கு நெய் | 233 |
| 389 | பித்த குன்மத்திற்குத் திராக்ஷாதிக் கஷாயம் | 234 |
| 390 | வயிறு வலிக்குச் சிவதைவேர்ச் சூரணமும், திரிபலா கஷாயமும் | 235 |
| 391 | பித்தத்தில் சத்தி குன்மத்தின் குறிகள் | 236 |
| 392 | வச்சிரகாயச் சூரணம் | ,, |
| 393 | சத்தி குன்மத்திற்குக் கெந்தக நெய் | 237 |
| 394 | பித்தவாயு சத்தி குன்மம் இவற்றின் லக்ஷணங்கள் | 238 |
| 395 | பித்த குன்மத்திற்குத் தேங்காய்ப்பாலெண்ணெய் | ,, |
| 396 | எரி குன்மக்குறிகள் | 239 |
| 397 | எரி குன்மத்திற்குத் தேங்காய்ப்பால் மருந்து | 240 |
| 398 | சத்திக்கு பயத்தங் கழுநீர் | ,, |
| 399 | எரி குன்மத்திற்கு டுச்யாதி கஷாயம் | 241 |
| 400 | எரி குன்மத்திற்கு அரிதகிக் கஷாயம் | ,, |
| 401 | சத்தி குன்மத்திற்குக் குமரிவேர்க் கஷாயம் | ,, |
| 402 | எரி குன்மத்திற்கு ஏலாதிச் சூரணம் | 242 |
| 403 | வலி குன்மம் | 243 |
| 404 | சூலேகுன்மத் (வலிகுன்ம)திற்கு கழற்கொடிக் கஷாயம் | ,, |
| 405 | கபால குன்மக் குறிகள் | ,, |
| 406 | வாதகுன்மக் குறிகுணங்கள் | 424 |

| | | |
|---|---|---|
| 407 | இதுவுமது | 244 |
| 408 | இதுவுமது | 245 |
| 409 | குன்மத்திற்கு உள்ளி எண்ணெயும், முடக்கொத்தான் எண்ணெயும் | ,, |
| 410 | வயிறுவலி, சூலை, குன்மத்திற்குப் பிரண்டைஎண்ணெய் | 246 |
| 411 | வாதகுன்மம், நீராமைக்கு உள்ளியாமணக் கெண்ணெய் | 248 |
| 412 | வாதகுன்மத்திற்குச் செவ்வியாதி நெய் | 250 |
| 413 | குன்மம், பீலிகைக்கு வசாதி கிருதம் | 251 |
| 414 | குன்மம், வாயு பாண்டுவிற்கு ஆயில்ய நெய் | 252 |
| 415 | குன்மம், ஈளை, இருமலுக்கு ஹிங்க்வாதி கிருதம் | 253 |
| 416 | குன்மம், ஈளைக்கு இலந்தை நெய் | 254 |
| 417 | ஆமதோஷந்தீரக் கோஷ்டாதி நெய் | 255 |
| 418 | வலி குன்மத்திற்கு வழுதலை நெய் | ,, |
| 419 | குன்மவலிக்கு வெள்ளுள்ளி நெய் | 256 |
| 420 | சூலை, ஈளை, காசத்திற்குத் திப்பிலி நெய் | 257 |
| 421 | வாயு, குன்மம், வலிக்குச் சாறணை நெய் | 258 |
| 422 | குன்மத்திற்கு முருங்கை நெய் | ,, |
| 423 | சூலை. குன்மத்திற்கு, சித்தாமணக்கு வேராதிக் கஷாயம் | 259 |
| 424 | குன்மம், சூலைக்குக் கொட்டைக் கரந்தைக் கஷாயம் | 260 |
| 425 | சூலை, குன்மத்திற்குத் திப்பிலியாதி கஷாயம் | ,, |
| 426 | குன்மத்திற்குத் சிறுவழுதலைக் குழம்பு | 261 |
| 427 | சூலை, விப்புருதி, பெருவயிற்றுச் சிவதை வேர்ச்சூரணம் | ,, |
| 428 | கருஞ்சாதிலவணம் | 262 |
| 429 | கல்லுப்புப் பற்பம் | 264 |
| 430 | சிலேத்ம குன்ம குணம் | ,, |
| 431 | சேத்ம குன்மத்திற்குச் சுண்டியாதி கிருதம் | 265 |
| 432 | குன்மம் சூலைக்குக் கொன்றை நெய் | 266 |

| | | |
|---|---|---|
| 433 | குன்மம், இருமலுக்கு மருக்காரைக் கஷாயம் | 267 |
| 434 | இருமலுக்குத் திப்பிலியாதி கஷாயம் | 268 |
| 435 | வயிற்றுவலிதீர ஏரண்ட மூலாதிக் கஷாயம் | 269 |
| 436 | லசுனேரண்டத் தைலம் | 270 |
| 437 | சூலை, ஈளைக்கு லசுனுதித் தைலம் | ,, |
| 438 | குன்மவலிக்குச் செந்தூரம் | 272 |
| 439 | பஞ்சவித குன்மங்கள், வாயு இவைகளுக்கு ஆதண்டைவேர் கஷாயம் | 273 |
| 440 | வெட்காய் வேளைக் கஷாயம் | ,, |
| 441 | இரத்தகுன்மம், சுவாசத்திற்குச் சதாவரிநெய் | 274 |
| 442 | இரத்தகுன்மத்திற்கு முருங்கை நெய் | 275 |
| 443 | குடல் கரிவாயு நிதானம் | 277 |
| 444 | குடல் வாயு லக்ஷணங்கள் | ,, |
| 445 | தருணவாயுக் குறிகள் | ,, |
| 446 | இதுவுமது | 278 |
| 447 | கபாலவாயு லக்ஷணங்கள் | ,, |
| 448 | குண்டலவாயு இலக்ஷணங்கள் | 279 |
| 449 | குன்மவாயுக் குறிகள் | ,, |
| 450 | அக்கினி மந்தத்தின் குறிகள் | ,, |
| 451 | இதுவுமது | 280 |
| 452 | மந்தாக்னி வாயு லக்ஷணங்கள் | ,, |
| 453 | அக்கினி மந்தக்குறிகள் | ,, |
| 454 | பக்கசூரை, சுரச்சூரை இவைகளின் லக்ஷணங்கள் | 281 |
| 455 | மூலவாயுவின் குறிகுணங்கள் | ,, |
| 456 | பீலிகை வாயுக் குறிகள் | 282 |
| 457 | பீலிகைக்கு லசுனுதி கிருதம் | ,, |
| 458 | பீலிகைக்குக் கடுக்கா யெண்ணெய் | 283 |
| 459 | வயிறு வலிக்கு வச்ரவல்லிக் குடிநீர் | 285 |
| 460 | பெருவயிறுக் குறிகள் | ,, |
| 461 | உதரதோஷம் நீங்கத் திரிகடு எண்ணெய் | 286 |
| 462 | விரேசனத்திற்குத் திருகடு நேர்வாள மாத்திரை | ,, |

463 சுரம், குளிர், இருமலுக்கு வாளை மாத்திரை 287
464 வெப்பப்பாவைக் குறிகுணங்கள் 288
465 பேராமத்தின் லக்ஷணங்கள் (Dropsy) ,,
466 வயிறு நீராமை ரோகக் குணங்கள் 289
467 இதுவுமது ,,
468 மகோதர நோய் உண்டாகக் காரணங்கள் (Ascitis) ,,
469 மகோதர நோய்க் குறிகள் 290
470 மகோதரத்தின் அஸாத்தியக் குறிகள் ,,
471 மகோதரக் குறிகளில் வேறு சில 291
472 மகோதரத்திற்குச் சாறணையாதிக் க்ஷாயம் ,,
473 நீராமை, மகோதரம் முதலியவைக்குப் புங்கம்பட்டைக் கஷாயம் 292
474 மகோதரம், பொருமல் முதலியவைகளுக்குச் சாணக நெய் 293
475 நீர்க் கோர்வைக்கு வாளக்குழம்பு 294
476 சித்திரமூலக் கிருதம் 295
477 மிகக்கித் தைலம் 296


## இரண்டாம் பாகம்


478 பெரும்பாடு, எலும்புருக்கிக்கு "நறுவிலி எண்ணெய் 301
479 எலும்புருக்கி, உதிரமேகத்திற்கு "அத்திப்பட்டையாதிக் கஷாயம் 302
480 மேகம், பெரும்பாட்டிற்கு "இலந்தைச்சாறு மருந்து" ,,
481 ரத்தமேகம் பெரும்பாடு, மாங்கிஷ வடைப்பு கல்லடைப்பிற்கு வெள்ளரிக்காய்ச் சாறு மருந்து 304
482 கெற்ப சூலையுடன் ஏற்படும் ரத்த ரோகக் காரணங்கள் ,,
483 இரத்த ரோகம் அல்லது பெரும்பாட்டின் லக்ஷணங்கள் 305
484 பெரும்பாட்டிற்கு மருந்து ,,

| | | |
|---|---|---|
| 487 | பெரும்பாட்டிற்குச் சதாவரிக்களி | ,, |
| 488 | மஞ்சிட்டு நெய் | 305 |
| 489 | எலும்புருக்கி மேகம், ரத்த பித்தத்திற்கு ஆடாதோடை நெய் | 307 |
| 490 | வாத பித்தம், எலும்புருக்கிக்குச் "செங்கழநீர் எண்ணெய்" | 308 |
| 491 | மூக்கில் ரத்தம் வருகிறதற்குக் கற்றாழை எண்ணெய் | 309 |
| 492 | மூக்கு ரத்தத்திற்கு "எலுமிச்சம்பழ எண்ணெய்" | 311 |
| 493 | இரத்தம் சீழ் முதலானவைகள் நிற்க "அந்திப்பட்டைக் களி" | 312 |
| 494 | கெர்ப்ப விப்புருதி லக்ஷணங்கள் | 313 |
| 495 | கெர்ப்ப சூலைக் குறிகள் | 313 |
| 496 | கெர்ப்பச்சுரோணிக் (கெர்ப்ப சோணிதத்) குறிகள் | 314 |
| 497 | கெர்ப்ப சூரைக் குறி குணங்கள் | ,, |
| 498 | கரச்சூரை(லை)க் குறிகள் | ,, |
| 499 | கரச் சூரைக்குக் கூவிளை வேராதிக் கஷாயம்" | 315 |
| 500 | கரச் சூரைக்குக் "கொன்றையெண்ணெய்" | 316 |
| 501 | மஞ்சள் பற்பம் (சாம்பல்) | 316 |
| 502 | நிதம்ப சூலைக் குறிகள் | 317 |
| 503 | நிதம்ப சூரைக்குப் "பாம்புக் கண்டப் புகை" | 318 |
| 504 | நிதம்ப சூலைக்கு "முடக் கொத்தான் எண்ணெய் | ,, |
| 505 | கெர்ப்பரோகம், உதிரச் சூலை பெருவயிறுக்கு "அத்திக்குழம்பு" | 319 |
| 506 | சுரச்சூலைக் குறிகள் | 321 |
| 507 | சுரச்சூலைக்குப் "பங்கம்பாளைக் கஷாயம்" | ,, |
| 508 | சுரசூரைக் குறிகள் (வேறு) | 322 |
| 509 | பெருஞ்சூரைக் குறிகள் | ,, |
| 510 | சுர சூரைக்கு "வெள்ளுள்ளி எண்ணெய்" | ,, |

| | | |
|---|---|---|
| 511 | மூல ரோக நிதானம் உற்பத்திக் காரணங்கள் | 324 |
| 512 | மூல வாயு ஏற்படும் விதம் | 324 |
| 513 | மூலங்களின் பொதுக் குறிகளும் உள் மூலமும் | 325 |
| 514 | இதுவுமது | 326 |
| 515 | மூலத்தின் பொதுக் குறிகள் | 326 |
| 516 | இதுவுமது | 326 |
| 517 | பிறமூலக் குறிகள் | 327 |
| 518 | உள்மூல லக்ஷணங்கள் | ,, |
| 519 | வாதக் கிராணிக் குறிகள் | 328 |
| 520 | பித்தக் கிராணிக் குறிகள் | ,, |
| 521 | சேத்தும மூலக் குறிகள் | ,, |
| 522 | வாத பித்த மூலக் குறிகள் | 329 |
| 523 | பித்த சிலேத்ம மூலக் குறிகள் | ,, |
| 524 | வாத சிலேத்ம மூலக் குறிகள் | ,, |
| 525 | கடுக்கு மூலக் குறிகள் | ,, |
| 526 | (இதுவுமது) | 330 |
| 527 | மூலத்திற்குப் "பஞ்சாக்கினிச் சூரணம்" | ,, |
| 528 | மூல ரோகத்திற்குக் "காட்டுக் எரணைக் கஷாயம்" | 331 |
| 529 | மூல வியாதிக்குக் "காட்டுக் கருணை மருந்து" | ,, |
| 530 | மூல வியாதி தீரக் "கடுகுச் சூரணம்" | 332 |
| 531 | இரத்த மூலத்திற்குச் "சித்திர மூலாதிக் கஷாயம்" | ,, |
| 532 | சீழ் மூலத்திற்குப் "பாகற்சாறு மருந்து" | 333 |
| 533 | மூலம், மந்தம், கிராணிக்கு "அக்னி க்ருதம்" | ,, |
| 534 | இரத்த மூலம், பாண்டுவிற்கு "அரிதகீகிருதம்" | 334 |
| 535 | சீழ்மூலம் தீர "உத்த ரேணி நெய்" | 335 |
| 536 | இரத்த மூலத்திற்கு "நாயுருவி நெய்" | 336 |
| 537 | மூல ரோகத்திற்கு "வல்லாதிக் கிருதம்" | 337 |
| 538 | சேராங்கொட்டை சுத்திக் கிரமம் | 338 |

539 உள்மூலத்திற்குக் கொம்மட்டியெண்ணெய் ,,

540 உள்மூலம் புறமூலத்திற்கு "அப்பைக் கிழங்கு நெய்" 339

541 சீழ்மூலத்திற்குத் "தேங்காய் பால் நெய்" 340

542 உள்மூல ரோகத்திற்குச்
"சிறு குறட்டையெண்ணெய்" ,,

543 சீழ்மூலத்திற்கு "மாங்கொட்டைக் கடுகு" 341

544 சீழ்மூலத்திற்கு "தான்றிக்காய் கோவா" 342

545 அதிசாரத்திற்கு "பாடாதி கஷாயம் 343

546 அத்ஸாரந்தீர "பெரும் மரப்பட்டை
யாதிக் கஷாயம் ,,

547 பிறமூலத்திற்கு மருந்து வகைகள் 344

548 மூல முளைக்கரைய "மிளகுக் குழித்தைலம்" 344

549 மூலத்திற்கு "கரத்தை யிலைத்திரி" 348

550 பிற மூலத்திற்கு "பூச்சு மருந்தும் புகையும்" ,,

551 மூலம் கரைய "மஞ்சள் லேபட்" 346

562 மூலத்திற்குப் "பேய்த்தும்பை இலைப்பூச்சு" 346

553 மூலத்திற்குக் "கருணைக் கிழங்கு வடகம்" ,,

554 மூலத்திற்கு "இலைக்கள்ளி யிலைப்புகை" ,,

555 மூலத்திற்கு "கார மருந்து" ,,

556 மூல ரோகத்திற்குப் புகை 347

557 மூலப்புண்ணுற மருந்து ,,

558 மூலத்திற்குக் கள்ளிவேர்ப் புகை ,,

559 எரிவுக்குக் கட்டும் மருந்து 345

560 எரிவுக்குச் சீலை ,,

561 மூலமருந்தின் விமுந்ததுக்குக் கருவேலைக் களி ,,

562 வலி, கடுப்பு, சீழுக்குக் "கருணை வடகம்" ,,

563 வகுரவல்லிக் குழம்பு ,,

564 வகுரவல்லிக் குழம்பு 349

565 கருணைக் கிழங்கு லேகியம் ,,

566 குக்குடக் சூரணம் 350

567 மூலக் கிராணி தீர வெள்ளரிப் பிஞ்சு வெதும்பல் ,,

568 மூலத்திற்குக் "கோழிக்கடுகு" 351

569 மூலத்திற்கு மருதம்பட்டைப் பால் ,,

570 வயிறு கடுப்பின் குறிகள் 352

571 வயிறு கடுப்பிற்குப் "பனிச்சை நெய்" ,,

572 குடல் கொதிப்பதின் குறிகள் ,,

573 பித்தக் கொதிப்பிற்கு "முத்தக்காசு நெய்" 353

574 வாயுக் கிராணிக் குறிகள் ,,

575 வயிற்றுவலி, கடுப்பிற்கு வரப்பூலாச் சூரணமும் சந்தனக் குழம்பும் 354

576 வயிற்றுக் கடுப்புத் தீரப் "பெரு மரப்பட்டைக் குடி நீர்" ,,

577 ஆசீரணம், விழுசி, கிராணிக்கு "ஓதியீர்குக் கஷாயம்" 354

578 கிராணிக்குக் "கொத்தமல்லி யாதிக் கஷாயம்" 356

579 அதிஸாரத்திற்கு "மாதுளந் துளிர் மருந்து" ,,

580 வழும்பு, ரத்தக் கழிச்சலுக்கு, "மாம்பட்டைக் கஷாயம்" 357

581 அத்ஸாரம் பித்தக் கழிச்சலுக்கு "அத்திப்பட்டைப் புட கஷாயம் ,,

582 பித்தக் கிராணி குறிகள் 358

583 வாதக் கிராணி லக்ஷணங்கள் ,,

584 கபக் கழிச்சலின் குறிகள் ,,

585 அதிஸாரம், வாயுக் கிராணி மூலம் சங்கிரக் கிராணிக்குக் தக்ர அரீதகீ லேகியம் 359

586 காச நிதானம் 361

587 குவளை விப்புருத் லக்ஷணம் 362

588 காச ரோகத்தில் மரண லட்சணம் ,,

| | | |
|---|---|---|
| 589 | சாத்யா சாத்யக் குறிகள் | 363 |
| 590 | ஈளை, காஸத்திற்கு ''லசுனுத் நெய்'' | ,, |
| 591 | இருமலுக்கு ''வாஸாதிச் சூரணம்'' | 364 |
| 592 | காசத்திற்குக் ''கோஷ்டாதிக் கஷாயம்'' | ,, |
| 593 | காசத்திற்கு ''அழிஞ்சில் பட்டைக் கஷாயம்'' | 365 |
| 594 | சூதிகா காச லக்ஷணமும், மரண லக்ஷணமும் | ,, |
| 595 | சந்தனுதி உருண்டை | 366 |
| 596 | மிடுத்து வாதி உருண்டை | 366 |
| 597 | சந்தனுதி உருண்டை | 367 |
| 598 | சந்தனுதி உருண்டை (வேறு) | ,, |
| 599 | மிருத்வாதி உருண்டை | ,, |
| 600 | தாபசுரம், உஷ்ணத்திற்குக் ''மிருத்வாதி உருண்டை'' | 368 |
| 601 | தாபம் உஷ்ணத்திற்குக் ''கையாந்தகரை அடை'' | ,, |
| 602 | காச ரோக லக்ஷணங்கள் | 369 |
| 603 | காசத்திற்கு மருந்து | 370 |
| 604 | மந்தாரகாரக் குறிகள் | ,, |
| 605 | காசத்திற்குத் ''திரிகடாதிக் கஷாயம்'' | ,, |
| 606 | காசத்திற்குக் ''சாறடையெண்ணெய்'' | 371 |
| 607 | பித்த காசக் குறிகள் | 372 |
| 608 | வாத காசத்தின் லக்ஷணங்கள் | ,, |
| 609 | கபமந்தகாரகாச லக்ஷணங்கள் | 373 |
| 610 | கபரோகத்தின் குறிகள் | ,, |
| 611 | உளமாந்தைக் குறிகள் | 374 |
| 612 | உளமாந்தைக்கு மருந்து | ,, |
| 613 | உளமாந்தைக்கு மருந்து | 375 |
| 614 | உளமாந்தைக்கு ''நிலக்குமிழ் எண்ணெய்'' | ,, |
| 615 | உளமாந்தைக்கு ''குறிஞ்சியிலைகளி'' | 376 |

| | | |
|---|---|---|
| 616 | உளமாந்தை ரோகத்திற்கு "வேங்கைப் பட்டைக்களி" | 376 |
| 617 | உளமாந்தைக்கு "உப்பிலிக் கல்கம்" | 377 |
| 618 | உளமாந்தைக்கு "சிவனார்வேம்பு எண்ணெய்" | ,, |
| 619 | க்ஷயம் உளமாந்தை ஈளை, விப்புருதிக்கு "சங்கெண்ணெய்" | 378 |
| 620 | மூக்கு நீர்ப் பாய்ச்சல் குணம் | 379 |
| 621 | பித்தம், பாண்டு, வெப்புப் பாவை, கய ரோகத்திற்கு எருக்கம் பால் சூரணம் | ,, |
| 622 | கபால வறட்சிக் குறிகள் | 380 |


———

ஹரி : ஓம்.

# அகஸ்தியர் இரண்டாயிரம்.

## காப்பு

பாதிமாதுமை பாகனு ரருளிய
தீதிலா வாகடஞ் செந்தமிழ் செய்திட
நீதியாய் விளக்கிது நிறைய வோதுவ
மாதியாம் பரமனே அருளிதாகுமே (1)

மனிதரானவர் கட்கெல்லா மதியணி யடையார் சோதி
பனியது போலவந்த பாவமாம் வியாதிக்கெல்லா
மினியது குறிப்புங்காட்டி யில்லமா மென்றரோகம்
புனிதனே ! அறியவோதாய் போற்றநின்
தாளே போற்றி. (2)

மன்னுநீ யறியாரோக மளவில்லை யாகிலய்யா
யெண்ணினு லறியப்பண்ணி யெனக்கிது
தெளியவோதாய்
பொன்னின் பாநதி சூழ் வைகைப் புனல்புரி யழலைமேவு
மன்னைதா யுமையாள் பங்கா ! ஆதியே வைரத்தூணும்
(3)

## அவையடக்கம்.

சொல்லு மாந்தர் வினைவழித் தொல்பிணி
புல்லும் வாறும் பொறுப்பவு மீளவுங்
கொல்லு நோயுங் குணமு மருந்துடன்
வல்லி கேட்க வகுத்தனர் நம்பனே. (4)

நம்பர் ரம்மைக் குரைத்தனன் நந்திகொண்
டிம்ப வாகட நூலையியம்பிடக்
கும்ப மாமுனி தான்செய்த செந்தமிழ்ச்
செம்பொனென்றில் பணிபல செய்வர்போல். (5)

செய்ய பாவலர் செந்தமிழ் மிக்கையால்
நொய்யச் சொல்லில் நுவன்ற தென் போலவாம்
பைய வாரிதி தன்னை யெறும்பது
கையினல் கரை சேருவ போலவாம். (6)

மிக்க பாவலர் தம்முடன் மேவியான்
ஒக்க வோர்தியு ணர்ந்தறி யாதது
பக்க மேயதி ருந்திருப் பாற்கடல்
புக்க புஞ்ஞை புசித்தது போலவாம். (7)

(இ-ள்) முன் வினைப் பயனுய் ஏற்படும் பிணிகளிலிருந்து ஜனங்களை மீளச்செய்யவும், அவ்வாறே உயிரைப் போக்கும் தன்மையுள்ள நோயின் குணங்களையும் பரமசிவன் உமையவளுக்கு உபதேசித்தபடி, நந்தி இந்த வாகட நூலை அருளினுர். பசும்பொன் ஒன்றிலிருந்து பற்பல நகைகள் நாம் செய்வதைப்போல அகஸ்தியர் செந்தமிழில் பற்பல பிரிவுகளாக இந்நூலையும் செய்தார் நாம் அவ்வாறு செய்ய ஆரம்பித்தால் அது ஒரு பெரும் சமுத்திரத்தை ஒரு எறும்பு நீந்தி அக்கரை சேருவதைப் போலவும், திருப்பாற்கடலை ஒரு பூனை குடித்தாற்போலவும் ஆகும். (அதாவது வைத்ய சாஸ்திரம் அவ்வளவு பெரியது என்று குறிப்பிடுகின்ருர்.)

பாயிரமுத லாய்த்தானம் பழகிய பத்திஞேடு
வாயுவும் பத்துநாடி வரிசையப்படியே நாடி
நோய்வரும்படி யசாத்யம் நுகரினிற் கஷாயம் சூர்ணம்
தூயலே கியம்நெய் மாத்திரை (துலங்கிய
வடகத்தோடு) (8)

சொன்னதோர் தயிலம் மிக்கச் சுவை ரசவர்க மல்லா
லன்ன பூ வட்டைக்கொம்பு மரியசத் திரந்தன் ஞேடு
யின்ன முங்கேளாய் ரட்சை யிதுமுதல் நயனரோகம்
முன்னமே பெரியோர் சொன்ன முது தமிழ்
பாடல்தானே (9)

ஆயுருவேதஞ் சொன்ன வதன்படி வியாதியுள்ள
நோய்க்குறி குணங்கள் கண்டு நுண்ணிய மருந்து
செய்வோம்
தீயவையறிந்து சூட்டுத் தெளிவினல் பரிகாரத்தால்
மாயவே மறிந்து தானு மறுபடி வியாதியாமே (10)

(இ-ள்) இந்நூலில் தசவாயுக்கள், தசநாடிகள், நோய்கள் வந்திருக்கையில் நாடியின் நிலைமை, சாத்யா சாத்யம் முதலியவைகளுடன் கஷாயம், சூர்ணம், லேகியம், நெய் வகைகள், மாத்திரை, தைலம், ரஸௌஷதங்கள், ஆகார குணங்கள், அட்டைவிதி, கொம்புவைத்து உறுஞ்சுதல், சத்திரவிதி, ரட்சாபந்தன முறைகள், நயனரோகம் முதலானவைகள் கூறப்பட்டுள்ளன. மேலும், ஆயுர்வேத சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி வியாதியின் குறி குணங்களைக் கண்டு, ஜாக்கிரதையாக மருந்துகளைச் செய்யவும். கெடுதலான வியாதிகளுக்குத் தக்க பரிகாரங்களைச் செய்யவும். இல்லாவிடில் நோய்கள் மறுபடியும் உண்டாகும்.

## வைத்தியன் நிதானம்.

பார்தனில் வேதந்தன்னைப் பார்த்ததில் பெரியோன்
சொன்ன
சீர்பெரு வாகடத்தைச் செய்பவர் குணங்கள் கேளாய்
நேருரை மாருனுகில் நினைவுதன் மனைவியன்றி
யாரையு முடன்பிறப்பா மென்றவை யவன்
வல்லானே. (11)

பொய்யது பேசானுகப் புகழறிவுடையானுக
மெய்யது சொல்வானுக வினங்குரு மறவானுக
தொய்யவேதாட்சியுண்டாய்சொல்மனதிரக்கமுண்டாய்
நைவினைப் பாவமன்றி நன்மையில்
நடப்போன்ருனே. (12)

(இ-ள்) தான் சொன்ன சொல் மாறக்கூடாது. தன் மனைவியைத் தவிர்த்துப் பரஸ்திரீகளை தன் உடன்

பிறந்த சகோதரிகளாகக் கொள்வது கடமையாகும். பொய்பேசக்கூடாது. யாவரும் புகழும்படியான அறி வைப்பெற வேண்டும். நிஜமே எப்போதும் பேசுதல் வேண்டும். குருவை மறக்கக்கூடாது. தாட்சண்யமும், மனதில் இரக்கமும் அவசியம் இருக்கவேண்டும். பாவத் திற்குப் பயந்து யாவருக்கும் நன்மை செய்வதையே ஒரு குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

இத்தகைய குணங்கள் வைத்யரிடத்தில் இருத்தல் அவசியம்.

நீதியாய் வாகடத்தை நெறியுடன் திங்கள் தோறும்
ஓதிய பொருள் கடன்னை யுசாவியே யிருப்பானாகில்
தீதிலா னவைக ளுள்ளான் செகமதி லிருக்க மட்டு
மேதினி யதனில்காலன் விதியல்லாமல் வியாதி
யுண்டோ. (13)

சினவெறி யேறு போலத் திடமுள்ளான்
மனதுமுள்ளான்
கனமென வுயிரைக் காக்குங் கருணையான் கதித்தசீரில்
இனமுள்ளா னேத்தமுள்ளா னெற்கையால்
தோற்றமுள்ளான்
மனதில் தயவுமுள்ளான் வைத்தியனாகு மென்றே. (14)

(இ-ள்) வாகடநூலை (வைத்ய சாஸ்திரத்தை) நன் றாகக் கற்று மாதந்தோறும் அதில் கூறப்பட்டிருக்கும் பொருள்களை அளவளாவி வரவேண்டும். தீய குணங் களை ஒழிக்க வேண்டும். இப்பூவுலகில் இருக்கும்வரை யமனின் ஆணைப்படி இறப்புவருமேயன்றி வியாதியினால் வரா !

கோபத்தோடு கூடிய சிம்மம்போல் வைத்யனுக்குத் திடசித்தம் அவசியம் நோயுற்றவனின் உயிரைக் கரு ணையுடன் காப்பாற்ற வேண்டும். நற்குடியில் பிறந்தவ னாக இருத்தல் வேண்டும். நல்ல தோற்றத்தையும் பெற் றிருக்க வேண்டும். மனதில் தயை இருக்கவேண்டும்.

இக்குணங்களை எப்போதும் வைத்தியர்கள் பெற்றிருத்தல் அவசியம்.

### வைத்தியரிடம் நோயாளி அணுகும் முறை.

பண்டுதான் மாந்தர்செய்த பாவத்தால் வந்தநோயைக்
கண்டுதான் ரோகந்தீர்க்குங் காவலன் தன்னை நோக்கி
விண்டுதன் குறைகள் சொல்லி மேவிய தூபங் காட்டிக்
கொண்டுதாம் பூலமீந்து குருவென நினைப்போர்
தானே. (15)

(இ-ள்) முன்வினைப் பயனுலேற்பட்ட நோய்களைத் தீர்க்கும் சக்தியுள்ள வைத்தியரிடம் நோயாளி தன்னிடமுள்ள குறைகளை உரைத்து, அவருக்குத் தூபங்காட்டித் தாம்பூலமீந்து குருவைப்போல் உபசரிக்க வேண்டும்.

### கடவுள் துதி.

ஆதியாங் கடவுளானை யடியினைப் போற்றிச் செய்துத்
தீதுறு வியாதி தன்னைத் தெளிவுடனறிய வேண்டிக்
கோதுறு நல்லோர் சொல்லுங் குணமுடன் பாடல்
தன்னை
நீதியாம் படியுமீதே நெறியுட னுரைக்கலுற்றும். (16)

(இ-ள்) முதலில் இறைவனது திருவடிகளைத்துதி செய்து வியாதிகளின் குறிகளைச் செவ்வனே அறியும் வண்ணம் நல்லோர்களுரைத்த பாடல்களைக் குற்றமற உரைக்கின்றேம்.

### வியாதிகளைப் பரீக்ஷிக்கும் முறை.

நாடியால் முன்னோர் சொல்லும் நன்குறிக்குணங்
களாலும்
நீடிய விழியினுலும் நிலைபெறு முகத்தினுலுங்
கூடிய வியாதிதன்னைக் கூறிடு குணபாடத்தால்
சூடிய குணங்களாலே சுகப்பட மருந்து சொல்வாம் (17)

## வியாதிகளின் சாத்யாசாத்யம்.

குணங்குறி மிகுந்து தோன்றிக் குற்றமேகுறைந்துகாணி
லிணங்குமந் திரமருந்து யிவைகளால் மீள்வதுண்மை
குணங்கொளாக் குற்றமேறிக் குறிகுணங் குறைந்து நின்றால்
கிணங்கிடா வகன்றுசீவன் பிரித்தலால் பேசலாமே. (18)

(இ-ள்) நாடிகளின் கதியின் பேதங்களினால் ஏற்படும் குறிகுணங்கள், விழி, முகத்தின் வேறுபாடுகள், முதலியவைகளை நன்கு பரீக்ஷை செய்து, குணபாடத்தி லுள்ளபடி வியாதிகளின் குறிகுணங்களையும் மனதில் வைத்துக் கொண்டு வியாதிகளைத் தீர்மானித்து மருந்துகள் கொடுக்க வேண்டும்.

நோயின் குறிகள் மிகுந்துதோஷங்கள் பிரகோபிக்காமல் இருந்தால் மந்திரம், மருந்து முதலியவைகளினால் நோய்கள் தீரும்.

திரிதோஷங்கள் பிரகோபித்து நோயின் குறிகள் குறைவாக இருந்தால் நோயாளி இறப்பான்.

## கர்ப்ப உற்பத்தி.

ஆகனுள் விந்துவுண்டா யஞ்சானுள் கருப்போலாகிப்
போகமு வஞ்சுநாழி(ளி)ல் பொருந்திய முட்டைபோல
வேகமாய்த் தீர்க்கமாகி யிரண்டினில் மார்மட்டாகிப்
பாகமா மூன்றுந் திங்கள் பகருந்தி மட்டுமாமே. (19)

மட்டுட னாலாந்திங்கள் வளர்ந்திட்டுப் பாதமெங்குங்
கட்டுட னஞ்சாமாதங் கருதுபூரணமா மாறில்
தட்டுட னெலும்புசீவன் தலைமயிர் நரம்புமேழில்
எட்டுட னறிவாமொன்ப தியல்தச பிறவியாமே. (20)

(இ-ள்) சேர்க்கைக்குப் பின்னர் 5-வது தினத்தன்று கரு(நெகிழுந்தன்மையுள்ள பிண்டம்) வாகி, 15-

வது நாளில் கோழி முட்டையின் அளவையடைகிறது. நாட்கள் செல்லச் செல்ல இது நீண்ட வடிவத்தை யடைந்து பிண்டத்திற்கு மார்பு உண்டாகிறது. 3-வது மாதம் வயிறு ஏற்படும். 4-வது மாதம் பிண்டத்திற்குக் கால் கைகள் உண்டாகின்றன. 5-வது மாதத்திலும் மேற்கூறிய உறுப்புக்கள் நன்ருக வளருகின்றன. 6-வது மாதத்தில் எலும்பு, தலை, மயிர், நரம்பு முதலியவை களுடன் 7-ம் மாதம் சீவனும் உண்டாகின்றது. 8-வது மாதம் அறிவு உணர்ச்சி முதலியவை ஏற்படுகிறது. 9-வது மாதம் முதல் பிரஸவ காலமாகும்.

### சத்த தாதுக்கள்

வருரச மிரத்தமாங்கிஷம் வளர்கின்ற மேதையத்திக்
கருமிகு மஜ்ஜையோடு கலர்ந்தசுக் கிலந்தா னேழாய்
யுருவெனுஞ் சரீரமாகி யுயர் சட்டை ரசமுஞ் சேர்ந்து
பருவரை முலையினுளே! பலபல ரோகந்தானே. (21)

(இ-ள்) இரஸம், இரத்தம், மாம்ஸம், மேதஸ், அத்தி (அஸ்தி), மஜ்ஜை, சுக்கிலம் ஆக இவைகள் சப்த தாதுக்களாகும்.

### மனித ஆயுளில் தோஷங்களின் காலநிலமை.

அய்யுமுப் பத்துமூன்று வருஷமொன் றதிகநாலு
செய்யதிங் களுமாய்ப் பித்தஞ் செய்தியப் படியே சீராய்
உய்யவே வாதம் வந்த படியுறு வயது நூருய்த்
தையலே வாகடத்தின் சாத்திரப் படிகள் தானே. (22)

(இ-ள்) மனிதரின் ஆயுள் சராசரி 100 என்று வைத்துக்கொண்டால், முதல் 33 வருஷம் 4 மாதம் கப காலமாகும். பின்னர் 66 வருஷம் 8 மாதம் வரை பித்தத்தின் காலமாகும். மற்றய 33 வருஷம் 4 மாதம் அதாவது 100 வயது வரை வாதம் அதிகரித்திருக்குங் காலமாகும்.

### பஞ்சபூதங்கள் உடலை ஆளும் காலக்கிரமம்.

மண்ணின்கூ றிருபதாண்டு வளரப்புத் தேயு வாயு
விண்ணின்கூ றுடனே நூறு வயதென விளம்புமப் பால்

எண்ணில்மூ வேமுகோடி ரோகமு மிதமதாகப்
பெண்ணின் மிக்காயமானே! பிரித்துநான்
மொழிகின்றேனே. (23)

(இ-ள்) முதல் 20 ஆண்டுகள் பிருதிவியும், 40 ஆண்டுகள் வரை அப்பும், 60 ஆண்டு மட்டும் தேயுவும் 80 வயது வரை வாயுவும், 100 ஆண்டுகள் வரை ஆகாசமும் இவ்வுடலை ஆளுகின்றன மற்றும் 21 கோடி ரோக வகைகளையும் நான் சொல்லுகிறேன்.

## பஞ்சகக்கருவி.

சீர்பிரி திவியப்புத் தேயுவும் வாயுந்தானும்
பார்பெரு மாகாசத்தோ டைந்துபூ தங்களாகும்
நேர்பிரி திவியின் கூறு நெடுமயி ரெலும்புந் தோலும்
பார்பெரு நரம்போ டெல்லாம் பகர்தசை தன்னோ
டைந்தே. (24)

அப்புவின் கூறுதானு மாடுநீ ருதிரம் வெள்ளை
செப்புமுன் மூளைமஜ்ஜை தேயுவின் கூறேதென்னி
லொப்புமா காரந்துஞ்ச வுயர்பயம் போகஞ்சோம்பு
இப்புவி வாயுவின்கூ றேதென்னி லியம்புவாயே (25)

ஓடலு மிருத்தல்தானு முயர்பெற நடத்தல் நிற்றல்
வாடலுங் கிடத்த லஞ்சும் வளருமா காசமென்னில்
நாடமுன் காமங்குரோத நலம் பெரு மோகம் லோபம்
தேடமுன் மதமோ டைந்துந் தெளிந்துநீ தேர்ந்து
பாரே. (26)

(இ-ள்) பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பது பஞ்ச பூதங்களாகும்.

தேகத்தில் பிரிதிவியின் அம்சங்களாவன:

மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை, இவைகளாகும்.

தேகத்தில் அப்புவின் அம்சங்களாவன:-

நீர், உதிரம், வெள்ளை, பாகங்கள், மூளை, மஜ்ஜை.
தேகத்தில் தேயுவின் அம்சங்கள்:

ஆகாரம், பயம், போகம், சோம்பல், தூக்கம்.
தேகத்தில் வாயுவின் அம்சங்களாவன:-

ஓடுதல், இருத்தல், நடத்தல், நிற்றல், கிடத்தல்.
தேகத்தில் ஆகாசத்தின் அம்சங்கள்:-

காமம், க்ரோதம், மோகம், லோபம், மதம் இவைகளாகும்.

## தசவாயு.

வந்தநற் பிராணனபானன் வளருமா வியானனோடு
தந்தமின் னுதானன் மிக்கச் சமானனும் நாகன் கூர்மன்
சிந்தைசெய் கிருகராதி தேவதத் தனுமல்லாம
லிந்தமா தனஞ்செயன்சொல் லிதுதச வாயுவென்றே. (27)

(இ-ள்) பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்ஜயன் என்பவை தசவாயுக்களாம்.

## பிராணவாயுவின் லட்சணமும் செய்கைகளும்.

பேசுநம் பிராணவாயு பெருகிய நீலவர்ணந்
தேசுநெஞ் சதனில்நின்று சேருமங் குட்டந்தன்னில்
தூசுகே சாதியாகி சொல்லுமூச் சுவாசமாகி
மாசுநிச் சுவாசம்பண்ணி வளரன்னஞ் செரிக்குமங்கே. (28)

(இ-ள்) பிராணவாயு நீல வர்ணமாயிருக்கும். நெஞ்சிலிருந்து கட்டைவிரல் நுனிவரை சஞ்சாரம் செய்யும். மயிர்க்கால்கள்தோறும் சஞ்சரிப்பதுடன் உள் மூச்சுக்கும் வெளி மூச்சுக்கும் ஆதாரமானது. அன்னத்தைச் செரிப்பிக்கும்.

## அபான வாயுவின் லட்சணமும் செய்கைகளும்.

பரிபெரு மபானவாயு பச்சைவர்ணமதாய்க் குய்யம்
புரிபெறு மத்தானம் சேர்ந்து புகழ்மல சலத்தை நீக்கி

வரிபெரு சனஞ்சுறுக்கி வருமன்ன பானத்தைச்
சேர்க்கும்
தரிபெறு வியானவாயுத் தான்வர்ணம் பசுவின் பாலே.

(இ-ள்) அபானவாயுவின் நிறம் பச்சையாகும். குய்யத்தை இருப்பிடமாகக் கொண்டது. மலம், சிறுநீர் முதலியவைகளை வெளிப்படுத்தும். ஆசனத்தைச் சுறுக்கவல்லது மலத்தையும் சேர்க்கும்.

**வியானவாயுவின் லட்சணங்களும் செய்கைகளும்.**

சர்வசந் ததனில் நின்று தானீட்டல் முடக்கல் பண்ணிப்
பெறுமன்ன பானந்தன்னைப் பலப்பட ரேபித்தங்கே
முறுதரு முதானவாயு வுயர்மன்னின் வன்னங் கண்டத்
திருதய மிருந்துதும்மல் யிருமலுங் கினுவு மன்றே (30)

(இ-ள்) வியானவாயு பசுவின் பால் நிறமுள்ளது. உடலில் இருக்கும் எல்லா துவாரங்களிலும் (முட்டுக்களிலும்) இருந்துகொண்டுஉடலைநீட்டுதல்,முடக்கிக்கொள்ளல் முதலான செய்கைகளையும் அன்ன ஆகாராதிகளை உட்செலுத்தவும் கூடியது.

உதானவாயுவின் நிறம் மண்ணின் நிறத்தையொத்தது.ஹ்ருதயத்தை இருப்பிடமாகக்கொண்டது. தும்மல் இருமல், கனவுமுதலியவைகளுக்குக் காரணமானது.

**உதானவாயுவின் செய்கையும்**
**ஸமானவாயுவின் நிறமும், இருப்பிடமும்.**

என்னநின் றெழும்புவித்து யெடுப்பித்தும் நித்திவித்து
மன்னசா ரங்களெல்லா மந்தந்தத் தானஞ் சேர்க்கும்
சொன்னதோர் சமானவாயு தோன்றிய நீலவண்ணம்
பன்னிய நாபிசேர்ந்து பாத்தங்கஞ் சமன்கொண்டாமே.

(இ-ள்) இதையன்றி, மேலெழும்பச் செய்தல், தூக்குவிக்கும் வன்மை, நிற்றல், அன்னரஸத்தை அந்தந்த தாது ஸ்தானங்களுக்குச் சேர்த்தல் முதலியவைகளையும் உதான வாயு செய்யக் கூடியது.

சமானவாயு நீலநிறத்தையுடையது. அதற்குவயிறே இருப்பிடமாகும்.

## சமானவாயுவின் குணமும், கூர்மன், நாகன் அவைகளின் நிறமும்.

கொண்டமுன் னன்னந்தன்னில் கொள்ரச முரோமஞ் சேர்க்குங்
கண்டமுன் னுகவாயுக் காரண வண்ணம் பொன்னு
மண்டரோ மங்களாகி யசைவிலாப் பாடிவிக்கும்
விண்டகூர் மந்தான் வண்ண வெள்ளையாய்ச் சொல்லு மென்றே (32)

(இ-ள்) சமான வாயு, சாப்பிட்ட ஆஹாரத்திலிருந்து ஏற்படும் ரஸதாதுவை மயிர்க் கால்கள் தோறும் சேர்க்கும் தன்மையைப் பெற்றது.

நாகன் என்ற வாயுவின் நிறம் தங்க நிறமாகும். ரோமக் கால்கள் தோறும் தங்கி அசைவையளிக்கும்.

கூர்மனின் நிறம் வெள்ளையாகும்.

## இதர வாயுக்களின் குணமும் செய்கையும்.

சொல்லியவுதர லாடந் தென்றிமெய் சுமந்துகொண்டு
வல்லிய பலமுண்டாக்கி வருபுஷ்டி பண்ணிவாயை
மெல்லிய நயன மூடல் மிகவுமே திறத்தல் பண்ணுங்
கல்லிய கிறுகிருதி கருப்புவர் ணமா மென்றே. (33)

பண்ணிய நாசிநாவில் பசியாத்தித் தன்மஞ்சொல்லி
நண்ணியே யிருத்தல் போதல் நயம்பெரு தேவதத்த
னென்னிய படிகவர்ண மியல்குய்யத் தானஞ் சேர்ந்த
கன்னியே கடிதானத்தில் கலந்துதான் படிப்பித்தாங்கே

படுத்ததை யெழுப்பிவித்தும் பசியுட னிற்கப் பண்ணி
யெடுத்தசோம் பதனைப்போக்கி யியல்புட னாரபாரந்
தொடுத்தபேச் சுண்டாய்மெத்தத் தோன்றிய (தனஞ்ஜெயன்தான்)
விடுத்ததோர் நீலவர்ணம் வீறுமாந் தாத்திலாமே. (35)

தந்திர மாகக்கன்னந் தன்னிலே சமுத்திரம் போலச்
சுந்திர கோஷமாகித் துலங்குநாள் மரணகால
மந்திரநிர்கோஷந்தான் மறையவர்முனிவோர்சொன்ன
இந்திரத் தசசேர்வாயு வென்னலா மறிந்துபாரே. (36)

(இ-ள்) கூர்மன் என்ற வாயு வயிற்றில் வியாபித்து இவ்வுடலை சுமக்கச் செய்கிறது உடம்பிற்கும் பலத்தைக் கொடுக்கிறது. புஷ்டி அளிக்கவல்லது. கண்களைச் சிமிட்டச் செய்யும்.

கிருகிரன் என்ற வாயுவின் நிறம் கறுப்பு, மூக்கு, நாக்கு முதலிய உறுப்புக்களில் நின்று பசியைத் தெரிவிக்கவும், தன்மநெறிகளைப் போதிக்கவும் வல்லது, நடமாடும் சக்தியையும் அளிக்கிறது.

தேவதத்தனின் நிறம் ஸ்படிக நிறமாகும். குய்யம் முதல் தொடைவரை சஞ்சரிக்கும், உடம்பை எழுப்புவிக்கும், பசியைத் தூண்டும். சோம்பலைப் போக்கும்.

தனஞ்சயன் என்ற வாயுவின் நிறம் நீலம். காதில் ஸமுத்திர கோஷம் போன்ற சத்தத்தை உண்டாக்கிஞல் மரணம் சமீபித்திருக்கிறது என்று அறியவும். மந்திரகோஷம் போலவும் காதில் சப்தம் உண்டாகும்.

குறிப்பு:

பிராணன்:— தினமொன்றுக்கு 21600 சுவாசங்கள் வீதம் தேகத்தில் சென்று வியாபிக்கின்றது.

அபானன்:— கீழ்நோக்கிக் குதத்தையும் குய்யத்தையும் பற்றி நின்று மலஜலங்களைக் கழிக்கும்.

வியானன்:- தோலில் நின்று பரிசங்களை அறிவிக்கும்.

ஸமான்ன்:— உதராக்னியை எழுப்பிச் சாப்பிட்ட ஆகாரத்தைத் தேகமெங்கும் வியாபிக்கச்செய்து உடலைப் போஷிக்கின்றது.

உதானன்:- மேல்நோக்கிய போக்குடன் தும்மல் ஏப்பம் இருமல் முதலானவற்றைக் கட்டுப்படுத்துகின்றது.

நாகன்:— கொட்டாவி, விக்கல், கக்கல் முதலிய வைகளை யுண்டாக்கும்.

கூர்மன்:— கண்களில் நின்று இமைப்பிப்பது.

கிரிகரன்:— புருவமத்தியைப்பற்றி நீட்டல், முடக்கல், கோபித்தல், அழுகையுண்டுபண்ணல் முதலான தைச் செய்யவல்லது.

தேவதத்தன்:— விழித்திருக்கையில் ஓடுதல், உலாவுதல், யுத்தம் செய்தல், சிரித்தல், மணமுடைதல் முதலானவைகளைச் செய்யும்.

தனஞ்சயன்: — பிராணன் உடலைவிட்டு நீங்கிய பின்னரும் தான் பிரியாமல் 3 நாட்கள் வரை உடலில் நின்று உடலை வீங்குவித்தல், விரிவித்தல், அழுகச்செய்தல், (Degeneration) முதலானவைகளைச் செய்யும்.

—வைத்திய சித்தாமணி

ஆயுர்வேதங்களிலோ வாததோஷம் அதன் ஸ்தானத்தையும் செய்கைகளையும் அனுஸரித்து 5 வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(i) பிராணவாயு:— மார்பு, கழுத்து முதலான இடங்களில் சஞ்சரிக்கும், புத்தி, ஹ்ருதயம், மனது, இந்திரியங்கள் முதலானவைகளுக்கு வன்மை தரும். துப்புதல், தும்மல், ஏப்பம், மூச்சு விடுதல் முதலான காரியங்களைச் செய்வதுடன் வாயில் போட்டுக்கொண்ட ஆகாரத்தை வயிற்றுள் செலுத்தும்.

(ii) உதான வாயு:— இருப்பிடம் மார்பு, மூக்கு முதல் தொப்பூள்வரை சஞ்சரிக்கும்.

பேச்சு, முயற்சி, காந்தி, பலம், வர்ணம் (தேக நிறம்) ஞாபக சக்தி இவைகளை யளிக்கவல்லது.

(iii) வ்யான வாயு:— இருப்பிடம் ஹ்ருதயம், ஆனாலும் சரீர மெங்கும் சஞ்சாரம் செய்யும்.

நடத்தல், நீட்டல், சுருக்கல், கண்களைச் சிமிட்டுதல், முதலானவைகளைச் செய்வதுடன், சரீரத்தில் ஏற்படும் எந்த அசைவுக்கும் காரணமாகும்.

(iv) ஸமான வாயு:— இருப்பிடம் ஜடராக்னிக்குச் சமீபம், குடலில் எப்போதும் சஞ்சரிக்கும். சாப்பிடும் ஆகாரத்தை ஏற்றுப் பக்குவம்செய்து, ஒவ்வொரு தாதுவுக்கும் செலுத்துகிறது. பாக்கியுள்ளதை வெளித்தள்ளுகிறது.

(v) அபான வாயு:— இருப்பிடம் - குதஸ்தானம் - பின்புறம், மூத்திரப்பை, துடை, குறிகள் இவைகளில் சஞ்சரிக்கும்.

சுக்கிலம், ஆர்த்தவம், மலம், மூத்ரம், கர்ப்பம் முதலானவைகளை வெளியே தள்ளும்.

—அஷ்டாங்க ஹ்ருதயம் சூத் ஸ்தா.

## இடைகலை பிங்கலை முதலான தசநாடிகள்.

வருமிடை பிங்கலை வழுருமுச் சுழிமுனை
யருவுகாந் தாரிதா னத்திபிங் குவையொடு
பொருமலம் புருடனும் புகழ்குரு சிங்கினி
திருவளர் வைரவன் தச சொல் நாடியே. (37)

(இ-ள்) இடகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி பிங்குவை(ஹஸ்தி ஜிஹ்வா), அலம் (அலம்புஷா) புருடன் (பூஷா), குரு, சிங்கினி, வைரவன் இவைகள் தசநாடிகளாகும்.

## தசநாடிகளின் இருப்பிடம்.

இடையிது பிங்கலைநாடி பின்னிரவி பிங்கலைக்குமாகும்
படைபெறு சுழிமுனைக்குப் பார்க்கில்மத் திமமே நாடி
துடைபெருக காந்தாரிக்குச் சொல்லுநீ வலது கண்ணு
மடையவே யத்திபிங்குக் காமிடக் கண்ணுந்தானே. (38)

அலமது வலது கன்ன மாமது புருடனிந்தப்
பலமிடக் கன்னமாகு பார்குரு குகநாடிக்காம்
கிலமிகு சிங்குனிக்குச் சேருகுய்ய நாடியாகும்
நலமிகு வயிரவன்தா நாபியில் நாடியாமெ. (39)

(இ-ள்)

| | |
|---|---|
| இடதுநாசிப்புழை வரை | இடகலே. |
| வலது நாசிப்புழை வரை | பிங்கலே. |
| இவ்விரண்டிற்கு மத்தி | சுழுமுனே. |
| வலது கண்ணில் | காந்தாரி. |
| இடது கண்ணில் | அத்திபிங்கு. |
| வலது காதில் | அலம் நாடியும். |
| இடது காதில் | புருடன். |
| குய்யத்தில் | சிங்கினியும். |
| ,, | குரு |
| நாபியில் | வைரவநாடியும். |

ஆக இத்தேகத்தைச் சூழ்ந்திருக்கின்றன.

குறிப்பு: **தச நாடிகள்.**

இடை:— வலதுகால் பெருவிரலிலிருந்து கத்தரிக் கோல் மாறலாக இடது நாசியைப் பற்றி நிற்பது.

பிங்கலே:— இடதுகால் பெருவிரலினின்று கத்திரிக் கோல் மாறலாகி வலது நாசியில் நிற்கும்.

சுழுமுனே:— மூலாதாரந் தொடங்கி எல்லா நாடி களுக்கும் ஆதாரமாய் நடுநாடியாய்ச் சிரஸளவு (ஆஞ் ஞாசக்ரம்) வரை முட்டி நிற்கும்.

சிங்குவை:— மூலாதாரந் தொடங்கி உண்ணுக்கிலே நின்று சோறு, தண்ணீர் முதலியவைகளை விழுங்கப் பண்ணுவது.

புருடன்:— மூலாதாரந் தொடங்கி வலது கண் வரை நின்று பார்வையைத் தரும்.

காந்தாரி:- மூலாதாரத்திலாரம்பித்து இடதுகண் வரை சென்று பார்வையைத் தரும்.

அஸ்தி:- (அசனே) மூலாதாரத்திலிருந்து வலது காது வரை நிற்கும்.

அலம்புடை:- மூலாதாரந்தொடங்கி இடது காதளவு நிற்பது.

சங்கினி:- மூலாதாரத்திலிருந்து குறியின் அளவு நிற்கும். கொடிபோல் சுற்றிக்கொண்டிருக்கும்.

குரு:- மூலாதாரத்திலிருந்து அபானத்தினளவில் நிற்கும்.

—அகஸ்தியர் வல்லாதி 600 (செய்-45-47)

சொல்லிய வுந்திக்கீழே சுழித்ததோ ரெழுத்தைப்பற்றி
யெல்லேயி லெழுந்தநாடி எழுபத்தீ ராயிரமாம்
வல்லவர் புகழும்நாடி மற்றது வேழுந்தள்ளி
நல்லதோர் நாடிமூன்று நலந்துநீ பார்த்திடாயே, (40)

உந்தியிலெழுந்தநாடி யுறுமுடி கீழ்மேலாகும்
பந்தித்து நிற்குங்காலே பதித்ததா மரையி னூல்போல்
.......................................................................
சுந்திரச் சூழக்கட்டித் துலங்கிடத் தோனுந்தானே. (41)

(இ-ள்) தொப்புளுக்குக் கீழே மூலாதாரத்திலிருக்கும் ஓங்கார வடிவிலிருந்து 72000 நாடிகள் தேகமெங்கும் வியாபிக்கின்றன. அவற்றுள் தசநாடிகளும் அடங்கும் தசநாடிகளுக்குக்குள்ளும் 7 நாடிகளை நீக்கி இடா பிங்கலை சுழுமுனே, என்ற மூன்று நாடிகளே மிகமுக்கியம் என்று பெரியவர்கள் எடுத்திருக்கிறார்கள். உந்தியிலிருந்து புறப்படும் நாடிகள் தாமரைத்தண்டில் காணப்படும் நூல்போல் மெல்லியதாக இருந்து கீழும் மேலும் வியாபிக்கும்.

குறிப்பு:

தாது முறையே தனியிடை வாதமாம்
போதறு பிங்கலே புகன்றது பித்தமாம்

மாது சுழுமுனை வழங்கிடு மையமாம்
ஓது முறை பார்த்துணர்ந்தவர் சித்தரே.

திருமூலர் நாடி (5)

துலக்கவே வேதநாதன் தூண்டினைச் சுழினை காட்டிப்
பலக்கவே யிடைதான் வாதம் பிங்கலை பித்தமாகும்
நலக்கவே சுழிதான் சிலேத்மம் நலமுடன் வலமேவாதம்
கலக்கிடு நதியே பித்த மையது நீரதாமே.

அகஸ்தியர் குருநாடி (9)

(இ-ள்) மேற்கூறிய செய்யுட்களிலிருந்து வாதம் இடகலையின் மூலமாகவும், பித்தம் பிங்கலை நாடியின் வழியாகவும், கபம் சுழுமுனை மூலமாகவும் தேகத்தில் பரவுகிறது என்று புலனாகிறது.

## சரீர அமைப்பு.

என்புறு நரம்பினாலே இயல்புறப் பிணித்துப் பின்னை
யன்புறு சதையைப்பாவி யதிலுறு தோலைப் போற்றி
நன்புறு நிணமு மூளை நன்னிரத் தமதா கித்தான்
துன்புறு வியாதிதோன்றும் நாடிகளறிந்துசொல்லே(42)

விரும்பிய உடற்கண் ணெங்கு மேவியே கலந்து நிற்கும்
நரம்பென்னும் நாடிதன்னை நல்லசாஸ்த் திரத்தினாலே
திருந்தவே யோதியோர்ந்தோர் தெளிவுறப் பார்க்க
(ட)க் கேட்டு
அறிந்துபார்த்திருக்கும்நாடியடவுடனுரைக்கலுற்றேன்

(இ-ள்) கடவுள் இச்சரீரத்தில் காணும் எலும்புகளை முதலில் நரம்பினால் பிணைத்து, பின்னர் அதன்மேல் சதையைச்சிருஷ்டித்துக் காத்திரமாகச்செய்து தோலைப் போற்றியிருக்கிறார். பின்னர் நிணம், மூளை. இரத்தம் வியாதிகளைத் தோற்றுவிக்கும் நாடிகள் முதலானவை கள் உண்டாகின்றன.

வியாதிகளைத் தோற்றுவிக்கும் நாடிகள் உடல், கண்

முதலான உறுப்புகளில் கலந்து நிற்கின்றன. நரம்புகள் என்று கூறப்படும் இந்நாடிகளை நல்ல சாஸ்திர ஆராய்ச்சி செய்த பெரியோர்கள் பார்த்துச் சொல்வதைக் கேட்டு உரைக்கின்றேன்.

## தேக பரீக்ஷை.

நாடியால் முன்னோர் சொல்லும் நன்குறிக் குணங்
நீடிய விழியினாலும் நின்றெழு வெயிலினாலும் [களாலும்
கூடிய குணபாடந்தான் குறித்துடன் பார்த்துப்பின்னும்
சூடிய குணங்களாலே சுகப்பட அறிந்துசொல்லே (44)

(இ-ள்) நாடிகளின் குறி குணங்களாலும், விழியைப் பரீக்ஷிப்பதனாலும் வெயிலினாலும் (காலபேதம்) குண பாடங்களை அறிந்து உபயோகப்படுத்தியும் நோயாளியின் தேக சுகத்தை அறியவேண்டும்.

## நாடி நிதானம்.

ஏறியுங் குறைந்து நின்று மிட்டதோர் குணத்தைக்கூறிக்
கூறிய குணம் பிராயம் குறைவில்லாச் சுகம் வறட்சிப்
பாரிடு குணங்கள் தன்னில் பற்றிடு சுக்கிலத்தில்
வேறிடு குணங்கள் தன்னை விரித்துடனாய்ந்து சொல்லே

(இ-ள்) வாத, பித்த கப நாடிகளின் ஏற்றத் தாழ்வுகள், நோயாளியின் குணம், வயது, ஆரோக்கியம், வறட்சி, சுக்கிலத்தின் குணங்கள் முதலியவைகளையும் தெரிந்து சொல்ல வேண்டும்.

## நாடி பார்க்கக்கூடாத நிலைமை.

எண்ணெயிற் றலையினோடு மாரமாய் நின்றபோது
முன்னு நல் லுணர்வினோடு மூண்டவப் பசியினோடு
திண்மையாய் நடந்தபோது திரிசங்கை மீண்டபோது
பண்ணிய நாடி பார்க்கில் பலித்திடாதென்று சொல்லே.

(இ-ள்) பிணியாளன் எண்ணெய்த் தலையுடன் இருந்தாலும், வேலையின்றி நின்றிருந்தாலும், நல்ல பசியுடன் இருந்தாலும், வேகமாய் நடந்து வந்திருந்தாலும் சந்தேகமுள்ளவனாக இருந்தபோதும் நாடி பார்க்கில் அப்போது அது நன்றாக விளங்காது.

## கைநாடிகளின் இருப்பிடம்.

கரிமுக னடியை வாழ்த்திக் கைதனில் நாடிபார்க்கில்
பெருவிர லங்குலத்தில் பிடித்துட னடுவே தொட்டா
லொருவிர லோடில் வாத முயர்நடு விரலிற் பித்தந்
திருவிரல் மூன்றி லோடில் சிலேத்தும நாடியாமே. (47)

(இ-ள்) கணபதியை மனதில் தியானித்துப் பிணியாளனின் வலதுகைப் பெருவிரலிற்குமேல் 1 அங்குல அளவில் மோதிரவிரல், பாம்புவிரல், ஆள்காட்டிவிரல் இவைகளைக் கூட்டி வைத்து நோயாளியின் நாடியைப் பரீக்ஷிக்கவும். மோதிரவிரலில் ஓடும்நாடி கபமும், மத்தியவிரலில் பித்தமும், ஆள்காட்டி விரலில் வாதமும் புலப்படும்.

## நாடிபார்க்கும் விதம்.

பார்க்கிலோ மணிக்கட்டங்கைப்பற்றியே நெட்டிவாங்கி
ஏர்க்கமூ விரலால்தொட்டு யெழுந்தநன் நாடிதன்னைக்
கூர்ப்புரப் பார்த்துநேர்மை குறைதலுள் வாங்கல் மூன்றில்
சீர்கொள நின்றநாடித் திருக்கரச் செப்புமன்றே (48)

(இ-ள்) நோயாளியின் மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு நெட்டிவாங்கி மேற்கூறிய 3 விரல்களினாலும் நாடியைப் பரீக்ஷைசெய்து தோஷத்தின் நேர்மை, தோஷத்தின் குறைவு, நாடியின் மிகவும் குறைந்த நிலைமை, முதலானவைகளை அறியவும்.

## ஸ்திரீ புருஷர்களுக்கு நாடி பார்க்கும் விதம்.

மருவுமெய்க் குற்றநாடி மதித்திடில் வலக்கை மாந்தர்
அரிவையர்க் கிடக்கைநாடி யமுக்கியே சுட்டாய் மூட்டி

விரைவினில் வெய்யவாத மிகநடு விரலிற் பித்தந்
தருமணி விரலிலய்யந்தானென வறிந்து சொல்லே (49)

(இ-ள்) புருடர்களுக்கு வலக்கையின் நாடியைப் பிடித்துப் பார்க்கவும். ஸ்திரிகளுக்கோ இடதுகை நாடியைப் பார்க்கவும் அப்படிப் பார்க்கையில் மோதிரவிரலில் கபமும், நடுவிரலில் பித்தமும், ஆள்காட்டி விரலில் வாதமும் பேசும்.

## வாத, பித்த, கப நாடிகளின் கதி.

அன்னமே கோழியோனுன் மயிலென நடக்கும் வாதம்
பின்னையோ ராமை யட்டைப் பெருத்திடு பித்தமாகும்
சொன்னவாய் மொழியினுளே! சுத்திய தவளை பாம்பு
முன்னமே அய்யமென்று மொழிந்தனர் முனிவோர்
தாமே.

(இ-ள்) வாதநாடி கோழி, ஒனுன், மயில் இவைகள் நடப்பதைப் போலவும் பித்தநாடி ஆமை அட்டை இவைகளின் நடப்பைப்போலும், கபநாடி தவளை, பாம்பு இவைகளின் கதியைப் போலவும் நடக்கும். இவைகளைப் பழக்கத்தினுல் தெரிந்து கொள்ளவும்.

## நாடிகளின் கதிபேதத்திலிருந்து வியாதியின் தன்மையை அறிதல்.

முன்னமே யோடி நாடி மூன்றையும் பிரித்துக் காணிற்
பின்னிசைந் தோடுமாகில் பிணியது பெரிதுண்டென்
னும்
தன்னிலே நேராயோடில் தாழ்வில்லை யென்று
சொல்லும்
அன்னமின்னிடையினுளே! ஆக்கையின் கூறுதானே.(51)

(இ-ள்) நாடிகள் மூன்றும் ஆரம்பத்தில் முன்னுல் ஓடிப் பின்னர் கொஞ்சம் பின்னுக்கிச் சென்றுல் வியாதி பலத்தது என்றறியவும். நாடிகள் முன்னுக்கியே சென்றுல் வியாதி குணமாகும் என்று அறிந்து கொள்ளவும்.

## தினத்தில் நாடியின் நிலைமை.

உத்தம நாடிதானு மொடுங்கிநிலை பெறிற்
பத்திநின்று படிகள் முழங்கிடிற்—சித்தமாங்
காலை வாதங்கடும்பகற் பித்தமா
மாலை அய்யம்வறிற் குரி துப்பாரே. (52)

(இ-ள்) காலை நேரங்களில் வாதநாடியும், மத்தியானத்தில் பித்தநாடி அதிகமாகவும், மாலையில் கபநாடி அதிகரித்தும் காணப்படும்.

## வாத, பித்த, கபநாடிகளின் வலிமை.

பித்தத்திற் பெரிது வாதம் பெருத்ததிற் சிலேத்திமந்தான்
சத்தியில் மாந்தரதழ நூறக்கால் வாதமாம்
சித்தமாய் மரிக்கும்போது சிலேத்துமமிடுக்கதாகு
மத்தம முனிவர் சொன்ன வாகட நூலின்வாறே. (53)

(இ-ள்) இவ்வித நாடிகளில் பித்தம் மிகக்குறைந்த பலமுள்ளது. அப்பால் வாதமும், கபமும் மிக பலமுள்ளதாக இருக்கிறது. மனிதன் இறக்கும் போது கபம் அதிகரித்திருக்கும்.

## நாடிகளின் கதிபேதங்கள்.

ஏகிய நாடிமூன்று மியம்பிடிற் சந்நியாகு
மாகிய வன்னங்கோழி மயிலென நடக்கும் வாத
வாகிய வாமையட்டை யவையென நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்பு போலது மய்யந்தானே. (54)

## அம்ருத கலைகளில் செல்லும் நாடி நிலைமை.

அமுத மாங்கலைகள் தன்னி லஞ்சுக்கும் நடுவே யோடில்
குமுதமாம் பித்தநாடி கூடியவிரண்டும் வாதந்
திமிதமாஞ் சமனி ரண்டும் சிலேத்தும நாடியென்று
சமுதமா முனியுரைத்த சாஸ்திர நூலதாமே. (55)

## விஷகலை நாடி நிலைமை.

விஷகலை தன்னில் நாடி வெறவற ஒடியேதான்
மசகாமல் மீளுமாகில் மரிப்பது மில்லையென்க
வசைநரம் பதனிலுன்னி யஞ்சயின் னவத்தையாகுங்
கசநரம் பதனிலுன்னிக் கத்திளுற் காலந்தானே. (56)

வெள்ளம்போ லோடியேதான் மீளுமாய் மிமையொன்றில்லை
பள்ளமீன் நஞ்சையுண்டு பறந்துடன் குதித்தாப்போல
தெள்ளிய வசைநரம்பு தெரித்ததால் தீதுண்டென்னுங்
கள்ளமாந் தொண்டைக் கீழே கத்திளுல் காலந்தானே. (57)

(இ-ள்) கை பார்க்கையில் வாதம், பித்தம், கபம் ஆக மூன்று நாடிகளும் "படபட" என்று பேசினல் சந்நி என்று உணரவும்.

வாதநாடியானது, அன்னம், கோழி, மயில் இவைகளின் நடையை ஒத்திருக்கும் (அசைந்து அசைந்து செல்லும் கதி)

பித்தநாடியானது ஆமையின் கதியையும், அட்டையின் கதியையும், (நேராக ஊர்ந்து செல்லுதல்)பெற்றிருக்கும். கபநாடியோ தவளையின் கதியையோ, பாம்பின் கதியையோ கொண்டிருக்கும்.(தத்தி விழிதல், நெளிதல் முதலிய கதி)

அம்ருத கலைகளில் செல்லும் நாடிகளின் விஷயம் புரியவில்லை.

விஷகலையில் நாடிசென்று, பின்னர் வந்தவழியே திரும்பினல் அவர்களுக்குச் சாவு இல்லை என்று சொல்லவும். வசை நரம்பில் நாடி துடித்தால் அவஸ்தையைக் கொடுக்கும். கசநரம்பில் பேசினல் மரணம் என்று அறியவும்.

3 நாடிகளும் மடைதிறந்த வெள்ளம்போல் ஒரே சீராகச் சென்று திரும்பினலும் கெடுதல் இல்லை. நஞ்

சைத் தின்ற மீன்குதித்துத் துள்ளுவதைப்போல வசை நரம்பில் நாடிகள் குதித்தால் கெடுதல் ஏற்படும். தொண்டைக்குக் கீழே நாடி பேசினாலும் மரணம் ஏற்படும்.

### காய்ச்சலுக்கான நாடி லக்ஷணம்.

ஆனதோர் வாதநாடி யடைந்துற வலுவாய்நிற்கு
மூனமா யுடலிற் நோய்க ளுண்டென மொழிபவர்க்குத்
தானமாய் நாடிதானுந் தான்வலு வாகியோடிற்
கானமாங் குழலினளே! காய்ச்சலுண் டாகுந்தானே.
(58)

(இ-ள்) வாதநாடிவலுப்பெற்றிருந்தால் 'காய்ச்சல்' என்று தெரிந்து கொள்ளவும்.

### சகடநாடி லக்ஷணம்.

திறல் செய் விரலைப் பற்றிச் செய்ததோர் கருதில்
மூன்றாய்
பிறியவே சகடநாடி பின்னெழு வாத நாடி
அறியவு தரங்கோ பித் தட்சியே பித்தந் தோன்றில்
உறுபிணி தணிய வென்று ஒதுங்கியே நிற்குந்தானே.
(59)

அசையெனும் நாடிபார்க்கி லதிகப்பட்டா லக்கினியா
மிசையுமுடம்பு சேத்துமங்க ளிழைத்து நடக்கில்
சாவாகும்
வசையின் துடியி னிசையானே! வாத பித்தச் சிலேத்து
மங்கள்
கசையுந் தன்னில் நேரொத்தால் கருமம் முடியுக் கனங்
குழலே! (60)

வாதந்தான் காலிற்தோன்றும் வயிற்றினிற் பித்தஞ்
சேரும்
சேதமே செய்யுமய்யஞ் சித்திரத் திடக்கண் மாதே!
நாதனு ரருளிச்செய்த நாமிது தூசு பாரில்
வேதநூல் விதியிதென்று விளம்பினர் பெரியதோர்
தாமே. (61)

(இ-ள்) விரல்களைப்பற்றி நாடி பார்க்கையில் ஒவ்வொரு நாடிகளையும் மும்மூன்ருய் பிரித்தால் 'சகடநாடி' யாகும். வாதம் ஒதுங்கி நின்ருல் 'வயிறு வேதனை' என்றும், பித்தம் ஒதுங்கி நின்ருல் 'பிணிகள் தீருவதற்கென்றும்' தெரிந்துகொள்ளவும்.

நாடிகள் அதிகமாகத் தோன்றில் அக்கினியை ஒத்ததாகும் உடம்புடன் கபம் இழைந்து நடந்தால் மரணம் என்றும் கொள்ளவும். வாத, பித்த, கபங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தாலும் மெள்ள நடந்தாலும் 'மரணம்' ஆகும்.

வாதநாடி காலில் இருக்கும், பித்தமோ வயிற்றில் இருக்கும். கபநாடி உடலை நசிக்கச்செய்யும்.

## ருசியும் தோஷமும்.

சேத்தும மெழும்பிநிற்கில் தித்திப்பு மிகவேயுண்டாம்
மேத்திய புளிப்பு மீறி லியல்புடல்வாதமாகு
மாத்திய கசப்பு மீறில் வந்திடும் பித்தமென்று
யேத்திய முனிவர் தானு மியல்புடன் விளம்பினுரே. (62)

(இ—ள்) கபம் தேகத்தில் அதிகரித்தால் வாயில் இனிப்புச் சுவை உண்டாகும். புளிப்பு வாயில் நின்ருல் வாதம் அதிகரித்திருக்கிறது என்று தெரிந்துகொள்ளவும் வாயில் கசப்புச் சுவை ஏற்பட்டால் பித்தம் அதிகம் என உணர்ந்துகொள்ளவும்.

## வாதநாடிக் குறி குணம்.

ஆனதோர் வாதனுடி யடைந்துற வலுவாய் நிற்கி
லூனமாயுடலில்நோய்க ளுண்டென மொழிபவற்குத்
தானமாய் நாடிதானும் தான்வலு வாகவோடில்
கானமாங் குழலினுளே! காய்ச்சலுண் டெண்ணலாமே.

(இ—ள்) வாதநாடி வலுவாக ஓடினுல் உடலில் காய்ச்சல் நோய் (ஜ்வரம், காங்கை, முதலியவை) அதிகரிக்கும் என்று தெரிந்துகொள்ளவும்.

### பித்தத்தின் குறிகுணம்.

பித்தநாடி நடக்கும் பொழு தெல்லா
மெத்த வேநெறித் தோடிய வத்தல
முத்தமாழி யிருக்குஞ் சரக்கெனச்
சத்தியாகுஞ் சுடரொளி தாங்குமே (64)

(இ-ள்) பித்தம் தேகத்தில் அதிகரித்தால் வாந்தி யெடுக்கும்.

### கபநாடிகளின் மரணக்குறி.

ஐயமாஞ் சிலேத்துமத்துக் காகிய நாடிதானுந்
தொய்யவே தவளைபோலத் தொங்கியே குதித்திட்டா
லும்
பையவே புரண்டிழுத்து பாம்பென நடைகொண்டாலு
மையணி குழலினளே! மரணமென் றுரைக்கலாமே (65)

(இ-ள்) கபநாடிக்குண்டான இயல்பின்படி, அது தவளைபோல் தத்தித் தத்திக் குதித்தாலும், புரண்டு இழுத்துப் பாம்பைப்போல் நெளிந்து சென்றாலும் ரோகி மரணமடைவான் என்று சொல்லவும்.

### நாடி பார்க்கும் விதம்.

மூன்றுவிரலாம் பெருவிரற்கீழ் முனிவர்தான்றி முன்
பார்க்கத்
தோன்றும்வாதம் நடுப்பித்தந் துலையாச் சேத்தும
மிடத்தென்ப.
கான்று மிகவுங் கரமாயக் கடுகிநடக்கு மவைகண்டால்
ஊன்றும் விரலை விட்டுவிட்டு உபசாரமாய் நடப்பாயே.

(இ-ள்) நோயாளியின் வலது கைக்கட்டை விரலுக்குக் கீழே வைத்தியர் தன் மூன்று விரலையும் ஊன்றிப் பார்க்க, முதல் விரலில் வாதமும், நடுவிரலில் பித்தமும், கடைசி விரலில் கபமும் ஓடும். பின்னர் இம்மூன்று விரல்களினுலும் விட்டுவிட்டு ஊன்றிப்பார்க்கவும்.

### வாத பித்தநாடி லக்ஷணம்.

மயிலென நடக்குமாகில் வாதத்திேனாடு பித்த
...............விடுசுர மாறுநாளை யிலருதி யாகுங்
குயிலெனு மொழியினளே கூடியவிரண்டு மாத
மருகிடா நோயுமத் தானதென் றறிந்து கொள்ளே. (67)

(இ-ள்) வாதமும் பித்தமும் மயில்போல் அசைந்து நடந்தால் ஜ்வரம் 6 நாளையில் தீரும். அப்படித் தீரா விட்டால் 2 மாதத்தில் நிற்கும்.

### வாத கப நாடி லக்ஷணம்.

வாதமு மய்யந்தானும் வலுப்பெற நிற்குமாகில்
மோதிய வியாதிதீர மூன்றுநாள் செல்லுமென்க
ஆதலால் பித்தநாடி யடைந்துற வலுவாய் நிற்கி
லூனமா யுடலில் நோய்க ளுண்டென மொழிபவற்குத்
தானமாம் நாடிதானும் தான்வலுவாகவோடில்
கானமாங் குழலினளே! காய்ச்சலுண்டெண்ணலாமே
(68)

(இ-ள்) வாதமும், கபமும் அதிகரித்து நின்றால் 3 நாட்களில் வியாதி தீரும். பித்தம் அதிகரித்தால் காய்ச்சல் உண்டாகும்.

### பித்தவாத நாடி லக்ஷணம்.

பித்தமும் வாதந்தானும் பிணங்கியே ஓடுமாகில்
சத்தமா முடல்குளிர்ந்து சார்ந்திடு மிருமல்வந்து
மெத்தென விரும்பிப் பின்னை வொத்திடு முடல்கள்நாவு
நெத்தியும் வெளுத்திருக்கும் நேரிது கூறினேமே (69)

(இ-ள்) பித்தமும் வாதமும் சேர்ந்து நின்றால் உடலில் குளிர்ச்சி யேற்படும். இருமல் அடிக்கடி உண்டாகும். தேகம், நாக்கு, நெற்றி முதலான இடங்கள் வெண்மையாக இருக்கும்.

### பித்தநாடி லக்ஷணம்.

வீழ்ந்திடு பித்ததோஷம் வெதுப்பிநா வரண்டு
கொள்ளும்
தாழ்ந்துகண் சுழன்றுகொள்ளுந் தலையது
கிறுகிறென்னுஞ்
சூழ்ந்துநாச் சிவந்து புண்போல் தொண்டையும்
நொந்துகாணும்
வாந்தியா யுடல்நடக்கு மஞ்சணித் திருக்குமன்றே. (70)

(இ-ள்) பித்தநாடி அதிகரித்தால் நாவரட்சி அதிகமாகும். கண்கள் சுழலும். தலைக் கிறுகிறுப்பு ஏற்படும். நாக்குச் சிவப்பாகி வெந்து தொண்டையில் விரணங்களேற்படும். அடிக்கடி வாந்தி உண்டாகும். தேகம் மஞ்சள் நிறத்தை யடையும்.

### வாத சிலேத்ம லக்ஷணம்.

அல்லல்செய்யு மழத்துமுடம் பெல்லாம்
நல்லதாக நாக்குக் குளறிடும்
வில்லைப்போல வளைத்துடல் மேவிடும்
வல்லவாதப் பயித்திய ச்லேத்மமே. (71)

(இ-ள்) உடம்பு அனல்போல் கொதிக்கும். நாக்குக் குளறும். உடம்பு வில்லைப்போல் வளையும். இவை "வாதகப" நாடி லக்ஷணமாம்.

### தேகத்தில் நாடி இருக்கும் விதம்.

மிருத்துட நாடிதானு மரத்தினைப் பின்னிணுப் போல்
துதித்துவெள் ளெலும்பைச்சுற்றித் துயருடன்
வாங்குமாகில்
விதித்ததோர் விதியினுலும் வி..............மையென்று
கதிக்கவே நாடிபார்த்துக் கற்றவர் கூறினரே (72)

(இ-ள்) எப்படி ஒரு கொடியானது மரத்தைச் சுற்றி பின்னிக் கொண்டிருக்கின்றதோ அதைப்போல், தேகத்திலுள்ள எலும்பை நாடிகள் சுற்றி ஏறும்.

### புணர்ச்சிக்குப்பின் நாடியின் நிலைமை.

பெருகுசே ரக்கினிக்குள் போட்டநற் புழுவேபோல
திருவியே வைத்து நாடி நின்றது வோங்குமாகில்
குருகுசேர் மாதரோடே கூடிவந் தாயேயென்று
வெருவுறு தோகை நல்லாய்! விளம்பு நீ
மண்ணுள்ளோர்க்கே. (73)

(இ-ள்) அக்கினியில் போட்ட புழுவைப்போல் துடித்து நாடி அதிகரித்தால், "நீ மாதரைப் புணர்ந்து வந்திருக்கிறாய்" என்று சொல்லவும்.

### மரண லக்ஷணம்.

மெத்தியே யெட்டுநாளு மேவியே நடக்குமாகில்
கொத்தலர் குழலினளே கூடியதிதுவே யென்ன
.... .... .... .... .... .... .... .... ....
சத்தமு மடங்கிமிக்கச் சாவென வறியலாமே (74)

(இ-ள்) மேற்கூறியவாறு 8 நாட்கள் நாடி ஓடினால் மரணம் என்று அறிந்து கொள்ளவும்.

### ஒரு மாதத்தில் மரணத்தின் அறிகுறிகள்.

வாழ்மகன் மடவார்வியாதி வலியவன் கையைவாங்கிக்
கொள்ளென விரலால் தன்னைக் குறித்துடனேசை
பார்க்கில்
தெள்ளனெத் தெறிந்துசற்றே திரிகுணஞ் செய்யுமாகில்
நாளொரு மாதந்தன்னில் நாடியே மரணந்தானே. (75)

(இ-ள்) நாடி திரிகுணமாக ஓடினால் 1 மாதத்தில் மரணம் சம்பவிக்கும் என்று தெரிந்து கொள்ளவும்.

### 10 மாதத்தில் மரணத்தின் குறிகள்.

மரணமே யுனக்குச்சொன்ன மாலயன் தேவர்நாடி
உரகன்வாய் நாவேயுன்னில் ஓங்கியே மரணமாகும்

மரனிதா னட்டை போலங்கது உன்னுமாகில்
கரணமே பத்துமாதங் காலனென் றறியலாமே (76)

## 8 நாட்களுள் மரணக்குறிகள்.

விண்ணுற வெழுந்த நாடி விரைந்தது கீழே நோக்கி
லுன்னுற வதுவே வாங்கி யுயர்தனுப் போலவாகு
மென்னும்நா வலர்போயாகி லெரிந்திடு மெட்டுநாளில்
திண்ணமே போகாதென்று தெளிவுற வறிந்து
கொள்ளே. (77)

(இ-ள்) நாடிகள் கீழ்நோக்கி ஓடினல் உடல் வில்லைப் போல் விரைத்து நிற்கும். 8 நாட்களில் மரணம் நேரிடும்.

## (பித்த கோபத்தால் ஏற்படும் மரண லக்ஷணம்.

அருவென வுன்னுமாகி லந்தித்துப் பித்தமாகும்
வெருவுறு கோபத்தாலே விரைந்தது பிணியேதென்க
கருவுறு கூந்தல் நல்லாய்! கள்ளரால் குலையதென்ன
ஒருபது நாளிலாஞ் (சாவு) உண்மையாயுணர்ந்து
பாரே. (78)

(இ-ள்) பித்தகோபம் இல்லாவிடில் பிணிகள் எவ்வாறு உண்டாகும்? அப்பித்தம் தூக்கி நிற்கக்கண்டால் பத்து நாட்களுள் மரணம் என்று சொல்லவும்.)

## 2½ நாட்களுள் ஏற்படும் மரண லக்ஷணம்.

புரண்டது மருண்டு மேலே பொருந்து நீர் நடக்குமாகி
விரண்டரை னளதென்றி லியம்பினர் மரணமென்க
சுருண்டமென் குழலினளே! சுத்திநா ளெட்டதாகுந்
திரண்டநாள் வந்துதோன்றுஞ் சிக்கெனத் தெளிந்து
பாரே. (79)

(இ-ள்) நாடிகள் பயந்தநடையுடன்புரண்டுபுரண்டு நடந்தால் 2½ நாட்களுள் மரணம்என்றுதெரிந்துகொள்ளவும். இல்லாவிட்டால் 8 நாட்களுள் மரணம் என்று சொல்லவும்.

### சிலேத்தும கோப லக்ஷணம்.

மியல்பிலா நாடிப்பற்றி யொன்றேகிடி லெழுமிய
வாதநாடி
துயர்தரு மொன்றிரண்டில் தோன்றிடில் பித்தநாடி
மயல்தரு மொன்றிரண்டில் மாண்டிடு மற்றநாடி
கயல்கள்வேற் கண்ணினளே! கல்லாதாய்
குறையுந்தானே. (80)

தகைகூற்சிலேத்மங் கோபித்தால் தயங்குமனமுமுள்
கலங்கு
மிகவேகுளிர்ந்து கொதிப்பெய்தும் வீக்கம் பலவாய்
விதராகும்
முகமேகைகால் தான்வெளுத்து மூக்கு நீர்ப்பாய்க்
காசமுமாய்த்
துகளேய் தானே பாரிக்குந் தூங்குமுறக்கந்
துணுக்கமுமே. (81)

(இ ள்) கபம் பிரகோபமடைந்தால் மனவேதனை யுண்டாகும். தேகம் திடீரெனக் குளிர்சியடைவதனல் உஷ்ணம் அதிகரிக்கும். வீக்கமும் உண்டாகும். கை கால்கள் வெளுத்துவிடும். மூக்கிலிருந்து நீரொழுகும். சிறு இருமலும் உண்டாகும். தூக்கமும் அதிகரிக்கும்.

### தேகத்தில் கபம், பித்தகபம் இவைகள் அதிகரித்தாலுண்டாகும் குறிகள்.

அன்றியே சிலேத்துமத்துக் கடையாள முடம்பு
வேர்க்கும்
நன்றென உமிழ்நீர் நாறும் நாவது வெளுத்திருக்கும்
மொன்றிய சிறுநீர் தானு முன்மையா யிழைத்துவீழு
மன்றினில் தோஷந்தன்னை வாக்கினலறிந்து
சொல்வாம். (82)

தாகமும் வெப்புமுண்டாய்த் தலைவலிதானுமுண்டாய்க்
கூசியே நளுநளுந்து கொடியதோர் தித்திப்புண்டாய்

வேகமும் வெதுப்புமுண்டாய் விழிகளும்
சிவந்துகொள்ளும்
பாகுசேர் மொழியினுளே!பயித்தியச்சிலேத்துமமே (83)

(இ-ள்) உடம்பு வியர்க்கும் உமிழ்நீர் நாற்றத் துடனிருக்கும், நாக்கு வெளுத்திருக்கும் சிறுநீர் அதி கரிக்கும். இவை "கபம்" அதிகரித்ததன் குறிகளாம்.

உடம்பில் எரிச்சல், தலைவலி, நளிர்சுரம், வாயில் தித்திப்புச்சுவை, கண்களில் சிவப்பு இவைகள் உண்டா னல் "பித்தமும் கபமும்" பிரகோபித்திருக்கின்ற தென்று அறிந்து கொள்ளவும்.

## மரண லட்சணம்.

இருதுடைமார்பின் கீழே எதிரிடப் பதரி யோடி
முடுகிட வீங்குமாகில் மூவரிலொருவரோடே
பருகிடு தண்ணீர் போலப் பஞ்சிடு கண்ணும் வாயு
மருவிடு மிதுவே கண்டால் மரணமென்
றுரைக்கலாமே. (84)

வற்றிய வலசலங்கள் மற்றுள விழிகளஞ்சி
உற்றிடு செவி கண்ணுக்கு உறுதியின் பரிசல் பார்க்கி
லித்தனை குணமுங்கெட்டு யிருந்ததேயினி நீ கண்டால்
வித்தகர் தன்முன்சென்று மீளுவ தருமையாமே. (85)

நெஞ்சுமே லுடம்புவற்றி நிலைபெற நரம்புதோன்றிப்
பஞ்சுபோல் நாவுங் கண்ணும் பாண்டமும்
வெளுத்துக்காலும்
கொஞ்சிய வண்டம் வீங்கிக் குறுகியே மலமுந் தீயில்
துஞ்சுவ துண்மை யென்று சொல்லலாஞ்
சொல்லலாமே. (86)

(இ-ள்) இருதுடைகள், மார்பின் கீழ்பாகம் (வயிறு) இவைகளில் வீக்கம் கண்டாலும், தண்ணீர்போலப் பேதியானலும், கண்கள் பஞ்சடைந்தாலும் மரணம் என்று தெரிந்து கொள்ளவும்.

மல, சலங்கள் சரியாக இறங்காமல் விழிகள் உட்குழிந்து, காது கேட்காமல் அவஸ்தைப்பட்டால் அந்நோயாளியும் இறப்பது நிச்சயம் என்று அறிந்து கொள்ளவும்.

நெஞ்சும், உடம்பும் மிகவும் மெலிந்து, நரம்புகள் புடைத்துக் காணப்பட்டாலும், நாக்கு கண்கள், உடல் முதலான இடங்கள் வெளுத்துப் போனாலும், அண்டம் (விதை) வீங்கி மலச்சிக்கல் ஏற்படினும், மரணம் சம்பவிக்கும் என்று அறியவும்.

## வாதரோகங்களின் இருப்பிடம்.

எண்பது வாதமாகு மிருவகைப் பகுத்துக்காணில்
நன்புறு அரைக்குமேலே நாற்பது வாதமாகும்
பண்புசே ரரைக்குகீழே பத்துநான் காகுமென்று
வண்டுசேர் குழலினளே! வாதத்தின் கூறுதானே (87)

(இ-ள்) 80 வகை வாதரோகங்களுள் தொப்புளுக்கு மேலே நாற்பதுவகைகளும், கீழே 40 வகைகளும் உடலை வருத்தும்.

## வாதத்தின் குணங்கள்.

வாதத்தின் குணமேதென்னில் மயங்குந்தியங்கும் மலர் சிவக்கும்
பாதங்குளிர்ந்து சருவாங்கம்பற்றிநடக்குமுகங்கடுக்குஞ்
சீதத்துடனே வயிறுபுண்ணாஞ் சிரிப்பித்ததுங்தெறி மூச்சாம்
போதத் தண்ணீர் தான்வாங்கும் புகழும்பஞ்ச குணமாமே. (88)

வாதத்தின் குணத்தைக் கேண்மின் வயிறாதும் பொருமிக் கொள்ளும்
நாதுற்றவுடம்புகைகால் சந்துகள் கடுப்புத்தோணும்
நீதுற்ற சிறுநீர் தானுஞ் சிவந்துடல் கடுத்து வீழும்
போதுற்ற வுப்புசமாய் போதவும் பசித்திடாதே. (89)

கால்கை கடுக்குந் திமிருண்டாங் கண்ணுந் தூங்கிச்
சோபிக்கும்
கோலஞ்செரியு மங்கமெல்லாங் குளிர்ந்த சந்துகனங்
கொள்ளுஞ்
சீலமிகுந்து சீர்காணில் சிறுநீர்வற்றி வருமிகவே
மாலத் தடங்கண் மானனையாய்! மாதேவாத
ரோகமிதே. (90)

(இ-ள்) மயக்கமுண்டாகும். கண்கள் சிவக்கும். கால்கள் சில்லிட்டுப் பின்னர் உடலும் குளிர்ந்து விடும். முகத்தில் குத்து வலியேற்படும். வயிறுபுண்ணாகிச் சீதம் விழும். பெருமூச்சுண்டாகும். தண்ணீர்த் தாகமேற் படும்.

வயிறு ஊதிப்பொருமலுண்டாகும் கை, கால், உடம்பு, தொடையிடுக்கு முதலான இடங்களில் கடுப்பு (வேதனை) அதிகரிக்கும். சிறுநீர் சிவந்து, கடுப்புடன் வெளியாகும். பசி மந்திக்கும்.

கைகால்களில் மதமதப்புடன் வேதனையுண்டாகும், கண்களைச் சுற்றிலும் வீக்கமுண்டாகும். உடலில் குளிர்ச்சியுண்டாகும். தொடையிடுக்கில் வீக்கம் காணப் படும். சிறுநீர் கம்மியாகும். இவைகள் 'வாதம்' அதிகரித்ததின் குறிகளாகும்.

## பித்த குணம்.

உரத்தபித்தங் கோபித்தா லுடலேயுலத்திக் கொதிப்
பெய்தும்
நிரைத்தமேனி மஞ்சணிக்கும் நெறித்தல்வேர்வு
நீர்ப்பாய்தல்
விரைத்த லோடுபித்தமிது மிகவே மூச்சாய் சத்தியுமாய்
பிரட்டும் வாயும் கைப்பினேடு புளிப்பு மாமென்
றேதினரே. (91)

மெய்யே நடுக்குந் தலைவலிக்கு மேனிவெளிருங்
கண் தூங்கு
பொய்யே துயருங் கிருகி ரென்னும போதநயன மஞ்ச
ணித்துக்

கைகால் கடுத்து நீர்சிவந்து கண்ணு முகமுஞ் சன்னி கட்டி
மையார் மேனி யனல் மீறி வருமே பித்த குணமாமே. (92)

(இ-ள்) பித்தம் பிரகோபமடைந்தால் உடம்பில் அனத்தலுண்டாகும். தேகமும் மஞ்சள் நிறமடையும். நரம்புவலி,வியர்வை, மூக்கிலிருந்து நீர்சொரிதல், அதிகமான மேல்மூச்சு, விடாத வாந்தி, வயிற்றுப் பிரட்டல், வாயில் புளிப்பு, அல்லது கசப்புச் சுவை முதலானவைகளுண்டாகும்.

உடம்பில் நடுக்கல், தலைவலி, உடல் வெளுமை நிறமடைதல், தூக்கம், தலைக்கிருகிருப்பு, கண்களில் மஞ்சள் நிறம், கைகால் கடுப்பு, மூத்திரம் சிவந்து இறங்குதல், கண்முகம் முதலியவை அதைத்துக்காணுதல், காங்கை முதலான குறிகளும் காணும்.

## வாதசரீரக்கூறு (வாதப்பிரகிருதி)

உத்ததொரு காரியத்தை மெத்தெனவும் பேச
தெல்லாங் கருத்தாக வுரைப்பதல்லால் [லுள்ள
மெத்தவரும் பொய்யை மெய்யாய் வியந்துரைத்தல்
கனவினுல் மெய் வருத்தல் காணல்
சத்துமனஞ் சலித்திருத்தல் தன்புனலை
விரும்பாதே தழலை வேண்டல்
மத்துமுடல் தூலமாயி ருக்குமாகில்
வாதகுண மிதுமெனவே வகுக்கலாமே. (93)

(இ-ள்) ஒரு காரியத்தைச் செய்யுமுன் அதிகமாகப் பேசுதல், பொய்யை உண்மைபோலச் சோடித்துப் பேசுதல், அடிக்கடி சொப்பனம் உண்டாகி அதனுல் உடம்பு பலஹீனமடைதல், மனம் நிலையில்லாமை, உஷ்ணத்தில் பிரியம் உண்டாதல், உடம்பு ஸ்தூலித்துப்போதல் முதலியவைகள் குறிகளாகும்.

குறிப்பு:

ஆயுர்வேதக் கிரந்தங்களில் 'தேகம் மெலிந்திருக்கும்' என்று கூறப்பட்டிருக்கிறது.

## பித்த தேகக்கூறு (பித்தப்பிரகிருதி).

நல்லதோ ரிளமைதனில் தலைநரைத்த
உடல்மெலிதல் வேர்வெழுதல் நயனங்கடைசிவப்பச்
சொல்லுமுறை மெத்தனவா யிதம்பேசல்
துடியிடை மாதர்மே லின்பத்தோன்றல்காட்டல்
வில்லமரு நுதல்மடவார் விருப்பஞ் செய்தல்
விளங்கியதோர் பொய்யுரைத்தல் வீரம்பேசல்
பலலமரும் பலகலைநூல் பயிற்றல் பாடல்
பயித்தியத்தின் குணமிதெனப் பகருவோமே. (94)

(இ-ள்) இளமையில் தலை நரைத்துவிடல், உடம்பு மெலிதல், அதிக வியர்வை தோன்றல், கடைக்கண்கள் சிவந்துபோதல், இதமான வார்த்தைகளைப் பேசுதல், ஸ்திரீகளின்மேல் அதிகமான மோகம், பொய் பேசுதல், வீரம் பேசுதல், பற்பல கலை நூல் களைத் தெரிந்து கொள்ளுதல் பாடல்களையும் பாடுதல் இவைகள் பித்தப் பிரகிருதிகளின் குறிகள் ஆகும்.

## கபதேகக்கூறு.

துய்யவுட லிறுகல்மனஞ் சிக்கென்னல்
தோகையர்பா லின்பமெல்லாங் கலந்து நீக்கி
பொய்யினொடு களவொழிதல் புலவர் போற்றல்
பொருந்தவே யிருந்து பெறல் புகழ்பாராட்டல்
மையமருந் தலைமயிரு நீண்டுவருந்
தாதுஉண் டிபெறல் மகிழ்ச்சி கூறல்
செய்யமலற் றிருவே சேர்ந்துவாழ்தல்
சேத்துமத்தின் குணமெனவே செப்புவோமே,
(95)

(இ-ள்) தேகம் புஷ்டியாதல், ஸ்திரீ போகத்தில் இச்சை, பொய், திருட்டு இவைகள் இல்லாமை, புலவர்களால் போற்றப்படும் அறிவு வளர்ச்சி, பொறுமை, புகழ்ச்சிபெறுதல், தலைமயிர் நன்ருக வளர்தல், எப்போதும் சந்தோஷமாயிருத்தல், பண வ ச தி க ளு ட ன் (லக்ஷ்மி கடாக்ஷம்) இருத்தல் முதலான குறிகளால் சிலேக்ஷ்மதேகி என்று தெரிந்துகொள்ளவும்.

## நாடியுணர்வு.

மூலமேயெழுந்தநாடி முன்பிரிந்திரண்டுந் தோன்றில்
காலமேநீ யுண்டாய கைப்பொடு தித்திப்பிட்டுக்
கோலமா மடநல்லாளே! குமரியைக் கோட்டி செய்து
ஞாலமே யிரவிகோப நின்றன நாடிதானே. (96)

(இ-ள்) நாடிகள் இரண்டாகப் பிரிந்து காணப் பட்டால் கைப்பு தித்திப்பு இவைகளைச்சாப்பிட்டதாகத் தெரிந்து கொள்ளவும்.

## கபநாடி லக்ஷணமும், ஆஹாரங்களும்.

சேத்துமத் துற்றநாடி சிறப்பது தயங்கியட்டை
யீட்டியே கோழியோஞன் யேத்தியே யியல்பிலாகில்
மூட்டிய பசியில்வாரி முன்னைநாள் தயிருமிஞ்சி
கூட்டியே சார்தலுண்ட குணதுமி மடிகுளிர்ந்தே. (97)

(இ-ள்) சேத்துமநாடி அட்டை, கோழி, ஓஞன் இவைகளின் நடைகளைப் பெற்றிருந்தால்முந்தின தினத்தில் தயிரும் இஞ்சியும் கூட்டிச் சாப்பிட்டதாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## நாடி ஓடும் கதிபேதங்கள்,

குளுந்ததாலன்ன மோஞன் குதித்தடி வைத்தபின்னு
மெழுந்தபாம் போடியங்கு மியல்பதுகண்ட தாகில்

உளுந்துநெய் முட்டைதன்னே டுத்தபால் உடனத்
குழுந்தமாம் பழமுமன்னந் தின்னதிற் [தண்ணீர்
பின்னுண்டானே. (98)

பின்னு அட்டைதானே பின்பிரிந் தோடிமேலே
புண்ணின மன்னங்கோழி யுதறியே நடந்த பாம்பு
தன்னிய தவளைமெற்ற ரிப்பரப் புரளுமாகில்
துன்னிய தானவெப்புத் தன்னின்மே
லுணர்வுசொல்வாம். (99)

(இ-ள்) முதலில் அன்னம், ஓணன், இவைகளின் கதிகளில் நடந்து உடனே பாம்பைபோல்நாடி நெளிந்தால் உளுந்து, நெய், முட்டை, பால், தண்ணீர், மாம்பழம், சாதம் இவைகளிலே தேனுமொன்றைச் சாப்பிட்டிருப்பதாகச் சொல்லவும்.

முதலில் அட்டையின் நடையைப்போல் ஊர்ந்து சென்று, பின்னர் அன்னம், கோழி, அல்லது பாம்பு இவைகளின் நடையைப் பின்பற்றினல் உடம்பில் சூடு அதிகரித்திருக்கிறது என்று தெரிந்து கொள்ளவும்.

## இதுவுமது.

சொல்லவே கேளுமுன்னுட் சோற்வுற வினியவப்பம்
நல்லநெய் தன்னிற்கூட்டி நலம்பெற உண்டமந்த
மில்லமே வளர்த்தபன்னியிறைச்சியுண் டுடனேமாதர்
புல்லவுஞ் செய்தான்கன்னி எண்ணெயு
முழுக்குத்தானே. (100)

(இ-ள்) மேலும் அப்பத்தை நல்லநெய்யுடன் சேர்ந்து உட்கொண்டதாகவும், பன்னியிறைச்சியைச் சாப்பிட்டமாதரைப்புணர்ந்ததாகவும், நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்ததாகவும் சொல்லவும்.

## இதுவுமது.

எண்படு மன்னம்கோழி யேற்றிய நடையினூடே
தன்கெடு பாம்புசீறிக் கலந்துடனருத்துப்போகில்

பண்படு வயிறுநொந்து பொருமிய முச்சுமுண்டாய்த்
தண்பொதிந் துடலம்வேர்க்கு தன்மைனுங்
கூறினேமே (101)

(இ-ள்) முதலில் அன்னம், கோழி இவைகளின் நடையைப்பெற்றுபின்னர்பாப்பின் நடையையடைந்து அதுவும் குறைந்தால், வயிறுவலி, பொருமல், பெரு மூச்சு இவைகளுடன் உடம்பும் வேர்க்கும் தன்மை யுள்ளது என்று கூறவும்.

## இதுவுமது.

குடக்கினில் தவளை மஞ்சைக் குதித்ததைப் பிடிக்க
வோனன்
சடக்கென வெழுந்துசென்னி தன்னிலியசைக்கு மாகில்
விடக்கென நாவிமுன்னுள் வெட்டிய தட்டிறைச்சி
அடக்கமி லுண்டுதூர நடப்பது பனிமழைக்கே. (102)

பனிமழை மஞ்ஞைபார்குழற் பற்றியே தவளையூடே
நனிபெறும் அட்டைதங்கு நலமிது வறிய வேண்டிக்
கனியுட னவலும் பாலுங் கலந்துட னுணர்வதன்றி
பணிதொறுஞ் செம்பால்தான தயிரதில்
மந்தமுண்டே (103)

மந்தமுங் குடலிலூதி மானிட னுணர்ச்சிக்காக
ஒந்துண நாவும்வாயும் முலர்ந்துடல் நோகக்குத்தி
யந்தரம் போயண்ட லமெனத் தழற்சி யுண்டாய்
செந்தழல் குழலிமுன்னல் மருந்திட்ட
குறையுமுண்டே. (104)

குறிப்பு:

இச்செய்யுட்களுக்குப் பொருள் விளங்கவில்லை.

## மல பரீக்ஷை.

மலக்குறி வாதரோக மலமெத்தக் கருக்கும் பித்தந்
கலக்கவே பசுக்குமல்லால்ச் சிவப்போடு காணுஞ்
சிலேத்மம்

பெலக்கவே வெண்மை யாகுமல் லதுசீதமபேருச்
துலக்கிய தொந்தரோகம் பலவிதந் தோணுமாதே. (105)

(இ-ள்) வாதம் அதிகரித்தால்மலம்கருக்கும்,பித்தம் பிரகோபித்தால் பச்சை நிறமாகவோ அல்லது சிவப்பு நிறமாகவோ மலம் வெளியாகும். கபம் ஜாஸ்தியானல் மலம் வெண்ணிறமாக இருக்கும். பலவிதநிறமாக இருந் தால் அந்த தோஷத்தின் குறிகளும் இருக்கும்.

### சலப் பரீட்சை.

மூத்திரக் குறிகள் கேளாய் மொழிந்திடும் வாதம் வெண்மை
காத்திர மூத்தபித்தஞ் சிவப்பொடு சிறுகும் நீரும்
சேத்தும ரோகந்தானும் நுரைப்பொடு சேர்ந்து வீழுஞ்
சாத்திரப் படியே தொந்தம பலவிதந் தோணுந்தானே. (106)

(இ-ள்) வாதம் அதிகமாகில் சிறுநீர் வெண்மையாக இறங்கும். பித்தம் மீறினல் மூத்திரம் சிவப்பு நிறத் துடன் குறைந்த அளவில் வெளியாகும். கபம் ஜாஸ்தி யானல்நுரையுடன்காணப்படும் தொந்தமாகில்எல்லா வித குறிகளுடனும் இருக்கும்.

### நேத்திரப் பரீட்சை.

பசுமையாகியே பற்பவா னேடுகண்விழி பன்னீர்
பொசியு மேலது வாதமாம் பொன்னிற முடைத்தாய்ப்
பிசிதமாகியே சிவந்திடும் விழி யுயர்பித்த
மசிதமாகியே நிறம் விழிதருவதுமய்யே. (107)

மின்னிரெத்தமாய் மஞ்சள்போல் விழிதருஞ்சன்னி
பொன்னிறத்தொடு பசுங்கழல் போன்றுகா மாலைகள்
கன்னிகட்டிய பவளமாங் கக்குவா மிருமல்
லுன்னியிப்படிநேத்திரப் பரீட்சையென் றுணரே. (108)

கண்குறி வாதரோகங் கறுப்பொடு சிவப்பும் நொந்து
தண்புன லாயும் பித்தந் தன்னினி சிகப்புங் காணும்
பண்புடன் சேத்துமந்தா நாறியும் பூளைசாறும்
வெண்சன்னி வாதம்பச்சை மிகுக்கில்கா மாலையாமே.

(109)

(இ-ள்) கண்விழிகள் பசுமை நிறமடைந்து வெண்மையாகக் கண்ணீர் சொரிந்தால் அது வாதத்தினலாகும். கண்ணீர் பொன் நிறத்துடன் சொரிந்து விழியும் சிவந்து காணப்பட்டால் கண்களில் பித்தம் அதிகரித்திருக்கிறதென்று அறியவும். கண்விழி வெண்மையாக இருந்து சிவப்பாகவோ அல்லது மஞ்சள் நிறமாகவோ கண்ணீர் பொழியும் அப்போது சந்நியின் குறியாகும். மேலும் சில சமயங்களில் கண்கள் காமாலையில் காண்பதைப்போல் நல்ல மஞ்சளாகவும், காணப்படும். அதிகச் சிவப்பாகில் 'கக்குவான்' இருமல் என்றும் அறிந்து கொள்ளவும்.

வாதரோகத்தில் கண்கள் கருப்பு நிறமாகவோ சிவந்தோ காணும். பித்தம் அதிகரித்தால் கண்களில் எரிச்சலும் சிவப்பும் ஏற்படும், கபம் அதிகமானல் நாற்றத்துடன், பீளை அதிகரிக்கும். பசுமை நிறமடைந்தால் சன்னிபாதம் என்றும் அவை அதிகமானல் காமாலை என்றும் கண்டு கொள்ளவும்.

## மரண லட்சணம்.

ஓதுநோயினர் மலசலம் விந்துவொடு நீர்
பேதமாயிவை நீரின்விட்ட மிழ்ந்திடப் பெறினுங்
கீதவாயிதழ் நீரது பலநிற முறினு
மாதமொன்றினில் மரணமென்றுரைத்தனர்
வல்லோர். (110)

(இ-ள்) நோயாளியின் மலம், மூத்திரம், விந்து இவைகளைத் தண்ணீரிலிட்டால் அவை உடனே அமிழ்ந்துவிட்டாலும் அல்லது அத்தண்ணீர் பற்பல

நிறங்களை யடைந்தாலும் 1 மாதத்தில் மரணமடைவான் என்று சொல்லவும்.

## நாக்கின் லட்சணம்.

உள்ள நோயினர் நாவது சொரசொரப்புடனே
தெள்ளு பான்னுரரில் வாதமாஞ் சிவப்பொடு பசுமை
கொள்ளு நாவது பித்தமாங் கூறிடுங் கபந்தான்
வெள்ளையாகின் நீர்க் கிறைவாயிடுமிகவே (111)

உலர்ந்துமுட் படுகறுத்து நாவுறுவது சன்னி
கலந்து வன்னமுங் குணங்களுங் காண்பதுதொந்த
மிலங்கு மிக்குண மூன்றுட நாவறண்டிருந்தா
லலங்கலங் குடிலன்ன மெய் சாத்தியமாமே (112)

நாவுறு குறிகள் வாதம் விழுந்துமுட் பரந்துபச்சை
தாவுறில் வாதபித்து தருககுப் பிதனுல் செம்மை
மேவிடு முள்ளுமாகு மிகுந்த சேத்துமஞ் சிகப்பாம்
பாவுமுள் ளொடுதிரைஞ்சு பருமையாம் சன்னிவாதம் (113)

(இ-ள்) நாக்கில் சொரசொரப்புடன் அரிப்பு ஏற்பட்டால் வாததோஷம் அதிகரித்திருக்கிறது என்று அறிந்து கொள்ளவும்.

நாக்கு சிவந்த நிறமாகவோ, பசுமை நிறமாகவோ காணப்பட்டால் பித்தம் ஜாஸ்தியாக இருக்கிறதென்று தெரிந்து கொள்ளவும்.

நாக்கின் நிறம் வெண்மையாகில் கபதோஷம் அதிகப்பட்டிருக்கிறது என்று அறியவும்

சன்னியால் நாக்கில் வரட்சியுண்டாகி, முட்கள் போல் சதை வளர்ந்து கருமை நிறமாகும்.

## சாத்யாசாத்யக் குறிகள்.

முன்னநின்ற நோயினர்க்கு முகப்பிணி யவைகள் பார்த்துப்
பின்னவருள்ளி லக்கணத்தைப் பேரான வைத்தியந் தான்

தன்னறிவி னலறிந்து சாத்யமு மசாத்யமு
மின்னதென்ன வெனவறிந்து விதற்குச்சிகித்ஸை
பண்ணிடுவாம். (114)

(இ-ள்) நோயாளியின் முகம் முதலான அங்கங்களைச் சோதித்து, அவைகளுக்கு உண்டான குறிகளையும் மனதில் வைத்துக்கொண்டு, அறிவையும் உபயோகித்து இந்த நோய் சாத்யமானது, இது அஸாத்யமானது என்று தெரிந்து வைத்யம் செய்யவேண்டும்.

வேண்டிய மருந்தருந்தி நன்மைவேண்டி மிகுபுனல்
தெளிந்து
நின்றசாந் துயில்சுகமாய் நெஞ்சுநிலே குளிர்வுமூக்க
தூண்டுகற் சனுதிச் சோம்பலன்றிச் சுகமூற்சல்
மாண்டிடு தல்வில்லேயேந்த வன்பிணி
கொண்டவர்களுமே. (115)

சுந்தமுட னூனுருசி கலக்கியான முடையாகில்
வத்தபிணியாளருக்கு மற்றொருதீங் கணுகாதா
லிந்தவகை பிளேக்கால்லி லங்கிழையீர் பிழையாரென்
றந்தமுட முன்னூலி னரைந்தமொழிப் பயந்தானே.
(116)

இச்செய்யுட்களுக்குப் பொருள் விளங்கவில்லே.

## அஸாத்யக் குறிகள்.

பகற்குளிரும் நிசியழலும் பயித்தியமும் வாதமுடன்
முகச்சிவப்பும் நாக்கருப்பும் முறிற்கழுத்துந் தலேதூக்கு
மிகக்களேதா னடிக்கடியும்வியன்வைத்துஞ்சூலேயெனப்
பிகத்தவென்ற மொழிமடவாய்! பிழைக்கரிதென்
றுரைத்தாரே. (117)

(இ-ள்) பகலில் குளிரும், இரவில்காயச்சலும்அடிக்கடி வந்தாலும். பித்தம் வாதம் இரண்டும் சேர்ந்துஓடினுலும் முகம்சிவந்து,நாக்கு கருத்திருந்தாலும் கழுத்து, தலே இவைகளைத் தூக்கமுடியாமல்களேப்புடன்தொங்கிவிட்டாலும் அந்நோயாளி பிழைப்பது துர்லபம்

## மரண லக்ஷணம்.

நெஞ்சுகைகால் நாபிதுண்டம் நெடுந்தேக முங்குளிர்ந்து
விஞ்சுதலை மூச்செறிதல் வெம்மையுமாய்த் தாபமுமாய்
துஞ்சுவது போல்நாடி தோணுமலேயிருந்தால்
நஞ்சுவிழி யாயினதோர் நசிப்பதுசீக் கிரந்தானே. (118)

அங்கமது சூம்பித் தேயானங் குமாகி
பங்கமுறு நடையுடனே பருமூச்சி மிகத்தெரிந்து
துங்கமிகு முறககமன்றித் துடர்ந்துடனே மிகுபிணி
யாய்த்
தங்குசுறுங் கிப்பிடித்த சரீரத்தோ ரும்பிழையான் (119)

(இ-ள்) மார்பு, கை, கால், வயிறு முதலான அங்கங்களில் குளிர்ச்சியேற்படும் பெருமூச்சு உண்டாகும் உடலில் எரிச்சல் இருக்கும். நாடி மிகவும் மெல்லியதாக ஓடும். உடல் மிகவும் தளர்ச்சியுற்று. நடக்கும்போது பெருமூச்சு அதிகமாகித் தூக்கம் வராமல் அவதியுற்று ருலும் அந்நோயாளி பிழைப்பது அரிது.

## வைத்திய லக்ஷணம்.

நயன மிகப்புல நாலுநனு தினமுந்
துயர மிகுத்துயிர் தொண்டைமட் டாயினுஞ்
செயல் வைத்தியஞ் செய்தது காணுதிர
அயன் விதித்தறிந் தவறில்லையா (தலா) ல். (120)

நோயுக்குத்தக்க பேரை நுவன்றலு மந்தநோய்க்கு
மேவிட்ட மருந்துசெய்து வேதனை நீக்கல்தானு
மாவிக்கு மொழியாயின்னம் வைத்தியம் செய்யவன்மை
ஆவிக்குத் தக்கரீச னறிவரோ ரொருவரன்றே. (121)

(இ-ள்) மூச்சுள்ளவரையில் நோயாளிக்குச் (உயிர் தொண்டையில் இருக்குமளவு) சிகித்ஸையைச் செய்ய வேண்டும். பின்னர் பிரமன் விதித்த விதிப்படி நடக்கட்டும் என்று கூறவும்.

நோய்க்குத் தக்க பேரைத்தெரிந்து கொள்ளுவதும், அந்த நோய்க்குத் தகுந்த மருந்தைக்கொடுத்து

வேதனையை நீக்குவதும்தான் வைத்யர்களால் செய்ய முடியுமேயன்றி உயிரிலைக்க மருந்து கொடுக்க இயலாது

## ரோகங்கள் உற்பத்திக் குறிப்பு.

எண்ணுங் கருமங்களெல்லா மிசைந் தெனக்கு
நண்ணுங் கலையனைத்தும் நல்குவாம் முன்னுரைந்த
முண்டத்தா னண்டத்தான் மூலத்தான் ஞாலத்தான்
கண்டற்றுன் பெற்ற களிறு (1)

(இ-ள்) நான் எண்ணுங் காரியங்கள் அனைத்தையும் பூர்த்திசெய்து, சகல கலையிலும் தேர்ச்சியை, மண்கை யோட்டைத் தரித்தவரும், ஸர்வவியாபியாகவும், முதல் வனுகவும், பூமியில் இருப்பராகவும், தோன்றும், ஈசன் பெற்ற யானை [விநாயகர்] கொடுக்கப்படும்.

## வியாதிகளின் தொகை.

வாம்லடைத் திலங்குகீர்த்தி மண்ணுல கேழும் வண்மை
உரம்படைத்திலங்குமின்பவுண்மையாய்மனிதர்தங்கள்
சிரங்கழல் நீராய்ச் செப்பு நோயின் பேரெல்லாம்
பரந்தனில் கல்வியோடும் பண்பினுலுரைக்க லுற்றேன். (2)

உரைக்குமிக் குணத்தின் வன்மை யுண்மைவா
கடத்தையெல்லாந்
தரைக்குமே லுரைப்பதென்று சாற்றுவ
தேதற்கொக்கும்
வாக்கிய பிரமன்சொன்ன மாமறை நாலுமண்மே
லுரைக்கியல்குழலேசொல்லவுமனுரவின்விலொக்கும் (3)

ஊமனுர் சொல்லிதென்னவுரைப்பன்று னுரைத்தவீசன்
வாமபா கத்தாள்போற்றி மண்ணிலுண் டானநோயி
நாமனு லாயிரத்து நானூற்றி நாற்பத்தெட்டென்
றுமநோ பின்பேரல்லா மவனிமே லுரைக்க லுற்றேன் (4)

(இ-ள்) இம்பண்ணுலகிலிருக்கும் மாந்தர்களை வருத்தும் நோயின் பெயர்களைக் கூறுகிறேன்.

இருந்தாலும் சாஸ்திரத்திலிருக்கும் வியாதிகளையெல்லாம் சொல்வதென்பது இயலாத காரியம் முக்கியமான

4448 வியாதிவிபரங்களை மாத்திரம் இங்குஉரைக்கிறேன்

### வாதவியாதிகளின் விபரம்.

வரித்திடு வாதபித்த சிலேத்தும வியாதி மூன்றில்
வருத்திடுஞ் சிலதோஷத்தால் வண்மை முன்....
னுரைத்திடு மீரேழ்நூறே தன்னிலெண்பத்திரண்டு
கடுத்தினல் வாதக்கூறின் நோயெனக் கருதலாமே. (5)

(இ-ள்) வாத பித்த, கப தோஷத்தால் ஏற்படும் வியாதிகளுள் வாதத்தினல் மாத்திரமே உண்டாகும் வியாதிகள் 1482 ஆகும்.

### பித்தவியாதிகளின் விபரம்.

கருத்திடு பித்தந்தனில் கலந்திடு மீரேழ்நூறு
வருத்திடு மெண்பதென்ன வறியாததுடனே மூன்று
சருத்தமுற் றுட்டணங்கள் தழற்சியுஞ் சிறிது காட்டு
மருத்திய பித்தந் தன்னில் மருவுமின் நோயுந்தானே (6)

(இ-ள்) பித்ததோஷம் அதிகரித்ததால் உண்டாகும் வியாதிகள் 1483, இந்நோய்களில் தேகத்தில் உஷ்ண மும், அழற்சியும் அதிகரிக்கும்.

### கப வியாதிகளின் விபரம்.

தானெனு மீரேழ் நூறு தன்னிலெண்பத்து மூணு
ஊனுயிர் சீதளத்தி னூழ்வினை யதிகளுசெய்தே
யீனமா முடலும் வற்றி யெழுந்தபின்
நோயதெல்லாந்
தேனமா மொழியாய் வண்ணஞ் சேத்துமஞ்
செப்பலுற்றேன். (7)

(இ-ள்) கபத்தினலேற்படும்வியாதிகள்1483. இவை கள் குளிர்ச்சியினலும், பூர்வ ஜன்ம கர்மாக்களினலும், உண்டாகி உடம்பை வற்றச் செய்யும்.

### ரோகத் தொகைகள்.

உற்றிடுந் சிரஸுதன்னில் ஒதுங்கு முன்னூற்றேழு
மற்றது செவியிலின்றேழ் வாயில் நூற்றெண்பத்தாறு

சுற்றிடுங் கண்ணிணேவுக் கருதிய தொண்ணூற்ருறு
முற்றியகழுத்தி லாறேழ்மூக்கில் மூவொன்பதன்றே. (8)

என்றதோர் கன்னந்தன்னி லின்பதா நோவு நாற்ப
தென்றதோர் நெற்றிதன்னி லியங்குநா லெட்டுநோவு*
துன்றுநற் பிடரிதன்னில் சொல்லுக பத்துநோவு
வென்றிசேர்கரத்தில்நூத்துமுப்பதாம் விளம்பலாமே(9)

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | சிரஸில் | 307 | வியாதிகள். |
| | செவியில் | 7 | ,, |
| | வாயில் | 186 | ,, |
| | கண்களில் | 96 | ,, |
| | கழுத்தில் | 42 | ,, |
| | மூக்கில் | 27 | ,, |
| | கன்னத்தில் | 40 | ,, |
| | நெற்றியில் | 32 | ,, |
| | பிடரி (பின்) | 10 | ,, |
| | கைகளில் | 130 | ,, |

விளம்பிடு வாதநோவு எண்பத்து நாலுமிக்க
உளங்கனி சன்னிமுப்ப தோங்குடல் வாயுமெட்டு
கழங்கமு முப்பத்தேழு சுரப்பனு மறுபத்தாறு
தளங்கொள்விப்புருதிநாலுசாற்றுவைகுருவையெட்டே

அய்யெட்டுப்பிளவை தானுமன்பிணு வுடலின் நின்று
மெய்யுற்ற பவுத்திரமெட்டு மகோதர முப்பதென்ன
உய்யசிக் கிரிவை வெட்டி யொன்பது வுண்மையாகச்
செய்யவண்டொருபத்தெட்டுச் செப்புமவ் வளவுசெப்பு.

செப்புக சலந்தியெண்பத் தொண்ணினிற் செய்கையாக
வொப்புபாண் டிருபத்தெட்டு முண்மையீ ரேழுநூறு
வெப்புகாண் பத்திரண்டாம் விளங்குமின்
நோவதெல்லாந்
தப்பிலா வாதகூறு சாற்றுக தரணிமேலே. (12)

---

* "நோய்" என்பதைக் குறிப்பிட "நோவு" என்று கூறப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | வாத நோய்கள் | 84 | வகை |
| | சன்னி பாதம் | 30 | ,, |
| | குடல் வாயு | 8 | ,, |
| | கழங்கம் | 37 | ,, |
| | கரப்பான் | 66 | ,, |
| | விப்புருதிகள் | 4 | ,, |
| | குறுவை | 8 | ,, |
| | பிளவை | 40 | ,, |
| | பவுத்திரம் | 8 | ,, |
| | மகோதரம் | 30 | ,, |
| | கிரிவைவெட்டி | 9 | ,, |
| | வண்டுக்கடி | 18 | ,, |
| | சிலந்தி | 81 | ,, |
| | பாண்டு | 28 | ,, |
| | வெப்பு | 20 | ,, |

சாற்றைந்நூற் றன்பத்தாறு தானிவை வயிற்றிலென்று
மெத்தமில்த் தண்டுநூத்தெண் பத்தஞ்சென் றியம்ப வாகி
தோத்தமுன் னபானந்தன்னில் சொல்லுக அறுபத்தொன்று
சீதமாம் விரையில்தானே செப்புநீ ரிருபத்தஞ்சே. (13)

செப்புகை யெரிப்பு நூறு திகைப்பு தொண்ணூரு றெண்ணும்
வெப்புமோ ரன்பத்தாறு விளங்கிய லேழுமொன்பாம்
ஒப்பிலா வைசூரியெண்ணும் உண்மைகா மாலையெட்டுத்
தப்பிலா வோடுபாம்பு சாற்றுக விருபத்தேழ. (14)

சாற்றுமுட்டிருபதுள்ளடி தன்னிலே அன்பத்தொன்று
ஆற்றலற்சொறியருபது வழலை நாலு..........
மாத்தொருமட்டில் நோவு வண்மையா யொருநூற் றெட்டு
நொத்துசெஞ்சாலி நோவுசொல்லுக அறுபத்தொன்றே

ஒன்றரை யீரேழ் நூறில் இணங்குமெண் பத்திமூன்று
நன்றுசேர் பித்தரோகம் நாடிநீ ரறிந்து கொள்ளே
நின்றுடலுட்டிணங்கள் நிகழ்தறி தளர்ச்சை நெஞ்சுள்
ளொன்றிய வாயதோன்றி லொறித்திடி லுண்மை
தானே

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | வயிற்றில் | 556 | நோய்களும் |
| | ஆண்குறியில் | 185 | ,, |
| | அபானத்தில் | 61 | ,, |
| | விதையில் | 25 | ,, |
| | கையெரிச்சலில் | 100 | ,, |
| | திகைப்பு (மூச்சு திணரல்) | 96 | ,, |
| | வெப்புப்பாவை | 56 | ,, |
| | வைசூரியில் | 63 | வகைகளும் |
| | காமாலை | 8 | ,, |
| | பாம்பு | 27 | ,, |
| | முட்டு 20 ள் | 51 | ,, |
| | சொறி | 60 | ,, |
| | வழலை | 4 | ,, |
| | மட்டில் நோய் | 108 | ,, |
| | செஞ்சாலி | 61 | ,, |
| | பித்த ரோகம் | 83 | ,, |

உண்மையாங் காலில்மண்ணை யுள்ளொரு
நூற்றெண்ணூறும்
வண்மையாந் துடையில்தானே மகிழ்ந்துசொல்
லிருநூற்றெண்ணு
திண்மையாங்கு றுக்குதன்னில் செப்புக முந்நூற்றுறும்
வண்மையாந் தனத்தில் தானும் வரைந்து நோயாறே
ழென்றே. (17)

ஆறுறு வுந்திதன்னி வழலிவா விருநூறென்றும்
வீறுன முதுகு தன்னில் விளக்குக வெண்பத்தொன்று
பேறுன பிடரிதன்னில் பிசகிடா எழுபத்தைந்து
மாறுத் கைக்கீழ் தன்னில் வகைந்தவைம்பத்து நான்கே
(18)

அன்பதே பத்துமூன்று வார்மூலை யகலமார்புற்
தும்பிபோல் துளைதுளைத்துத் துயர்மிகு மடியல் வீழல்
நம்பியே யிருமலென்ன நடத்திய சுவாசகாசங்
கும்புற்பன் னுகுமுந்நூற் குருவினை லுரைக்கலுற்றேன். (19)

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | காலில் | 190 | வியாதிகளும் |
| | துடையில் | 201 | ,, |
| | குறுக்கில் | 306 | ,, |
| | தனத்தில் | 42 | ,, |
| | தொப்புளில் | 36 | ,, |
| | விலா | 200 | ,, |
| | முதுகில் | 81 | ,, |
| | பிடரில் (முன்) | 75 | ,, |
| | கைக்கு அடியில் | 40 | ,, |
| | மார்பில் | 63 | ,, |
| | இருமல், சுவாசகாசம் இவை | 300 | ,, |

குறியுறு சடத்திற் தானே குறித்தநா லாயிரத்தி
னறிவுற வந்த நானூற்று நாற்பத்தெட் டானநோயிண்
பேரறி புலாதிகளிற் கூடியப் புராரிதன் பாதம் போற்றி
நெறியுறு வியிற்றுனே நிகழ்த்துமா யிரத்தெட்டென்றே (20)

ஆயிரத் தெட்டு நாவி லலங்கார வல்லபத்தால்
மாயுறு விசும்புட்டேறு மலர்வண்ணன் வகுத்தநோய்கள்
எய்வதோர் வினையால் நூத்த றுபதென்றியம்புநோயில்
பாயிரக் காலியம்பக் கம்நூற் றெட்டென் றேதே: (21)

நூற்றுடனெட்டதாகி நுகந்திடு வியாதிதன்னிற்
போற்றிடு முப்பதென்று புகழ்ந்திடு நூலின்மிக்கச்
சாற்றிய நோவதெல்லாந் தலைவனும் வாதபித்தஞ்
சேற்றுமங் கழன்றுயர்த்துத் திரிவித வியாதியென்றே. (22)

திரிவித வியாதி தன்னிற் செப்புவன் வாத மென்னக்
குறியுறுசிரசிற் பத்து குலவிய செயலினாலு

நெறியுறு வாயிற் பன்னேழ் நிகழ்த்திறே மூவேழ் கண்ணிற்
செறியுறு கரத்தினொன்று செப்புக விரண்டு நாலே. (23)
செப்புக விரண்டு மூக்கிற் செறிந்த கன்னத்தில் நாலு
மெப்புறு மிரண்டு நெற்றி விளங்கிய பிடரிலொன்று
ஒப்புக புரத்திலேழு உரைத்திடு வாதம் பத்து
தப்பொலி வாதசன்னி தானெரு பத்து மூன்றே. (24)

(இ ள்) இந்த உடம்பில் ஏற்படும் வியாதிகள் 4448 ஆகும். சரீரத்தில் 1008, நாக்கில் 1008, பூர்வஜன்ம வினையினால் 160, காலில் 108, இவ்வாறுஏற்பட்டவியாதிகளுக்கெல்லாம் தலைவன் வாதபித்த கபங்களாகும்.

சிரஸில் 10, வாயில் 17, கண்களில் 21ம், கரத்தில் ஒன்றுமாகும். மூக்கில் 2, கன்னத்தில் 4, நெற்றியில் 2, பிடரியில் 1, விலாப்புறங்களில் 7, வாதம் 10, வாதசன்னி 13.

## சுர நிதானம்.

சீரான முனிவோர்கள் திரட்டிய தோர்வடநூலின்
பேரான சுரந்தனுக்கு பிறப்புடனும் நிதானமதை
பாரான தமிழதனால் பகர்ந்திடவே தமிழோர்க்குக்
காரான நெடுமால்தன் கடிமலற்றாள் காப்பாமே (1)
விண்ணினிற் தேவர்க்கெல்லாம் விளங்குமா முதல்வன் போல
மண்ணினிலின் னோர்கள் நோய்க்கு வருஞ்சுர முதலேயென்க
நுண்ணிய நிதானந்தன்னை நவிலவே பவழமேனி
கண்ணுதற் கடவுள் பெற்ற கணபதிக் காப்பதாமே (2)

(இ-ள்) முனிவர்கள் வடநூலிலிருந்து திரட்டிஎடுத்தெழுதிய சுரநோயின் நிதானம், உற்பத்தி இவைகளைத்

---

குறிப்பு:— மேலே கூறிய செய்யுட்களிலிருந்து 4448 நோய்களையும் சரியாகக் கணக்கிட முடியவில்லை. கூடியவரை ஊகித்துப் பொருள் கூறப்பட்டிருக்கிறது.

தமிழ் தெரிந்தவர்களுக்குப் பிரயோஜனமாகவேண்டி, தமிழில் செய்ய விஷ்ணுவின் பாதங்களைத் துதிக்கிறேன். ஆகாயமார்க்கத்தில் சஞ்சரிக்கின்ற தேவர்களுக்கு முதல்வன் (கணபதி) எப்படியோ அப்படியே இம்மண்ணினில் வாசம் செய்யும் மனிதர்களுக்கு வரும் நோய்களில் ஜ்வரம் முதலாவதாகும் ஆகவே அதனுடைய நிதானங்களை (குறிகுணங்களை)ச் சொல்ல கணபதி அருள்செய்வாராக.

## ரஸ தாது, ரத்த தாதுவில் பரவிய சுர நிதானம்.

மூதுறு தாதுவொன்றில் மும்மூன்று நாளே நின்று
தாதுவைத் தானேபற்றித் தான்வரு மிகவேயென்க
காதுருவிழியின் மாதே! காசினிநிலனுர் தங்கள்
மீதுரு சுரமேதென்க விளம்பினர் மேலோர்தாமே. (3)

முகமது மிகமினுங்கி முள்ளென மயிர்குச்சிட்டால்
தகமையாஞ் சுரமிரசத் தாதுவில் வந்ததென்க
துகமிரு மிரத்ததாது சுகமிரு நெரியிற் றூற்ற
நகமிரு கைகால்சந்து நடுக்கியே பிளந்த நோவாம் (4)

(இ-ள்) இரஸாதி தாதுக்களில் ஒவ்வொன்றிலும் சுரம் 3 நாட்கள் நிற்கும் முகத்தில் மினுமினுப்பு உண்டாகி, முட்களைப்போல் மயிர்க்கூச்சல் ஏற்பட்டாலும் சுரம் ரஸதாதுவைப் பற்றியது என்று தெரிந்துகொள்ளவும். நகக்கண்கள், கைகால், தொடையிடுக்கு முதலான இடங்களில் நடுக்கலுடன் அதிக வலியுண்டாகும்.

## பித்த தாது, மேதைதாதுகத சுர லக்ஷணம்.

நடுக்கிடு வயிறேயுப்பும் நல்லதோ ருடம்புவற்றிக்
கடுத்திடும் பித்ததாது கலந்திடும் சுரமேதென்க
வடுத்திடும் விழியாய் நோவு வாய்மிக வெருவல் சீத
மிகுத்திடவுடம்பே வற்றும் மேதையிற் சுரமதாமே. (5)

(இ-ள்) நடுக்கலுடன் வயறு உப்புசமாகும். உடம்பு இளைக்கும். கடுப்பு உண்டாகும். அது பித்த தாதுவைப்

பற்றி நின்றஜ்வரமாகும். (மாம்ஸ தாதுவைப்பற்றியது என்றிருத்தல் வேண்டும்)—வாய் பிதற்றலுடன் உடம்பு குளிர்ந்து, மெலிவடையும். இவை மேதோகத ஜ்வரத்தின் லக்ஷணங்களாகும்.

### மஜ்ஜைகத, சுக்கிலகத சுரத்தின் லக்ஷணம்.

காசமுஞ் சுவாசந்தானுங் கதித்தெழு விக்கல்தானும்
மோசமில் மதிமயக்க முயங்குமெய் மிகவுமோய்தல்
மாசமாம் பிராணவாயு பகர்ந்திடும் மபானவாயு
மாசற நடுக்கமுண்டாம் மச்சையிற் சுரமதாமே. (6)

உறக்கமே மிகஉண்டாகி உற்றதோர் ஞானங்கெட்டு
பிறக்குமோர் வார்த்தையெல்லாம் பேய்மொழியாகக் கூறில்
சிறக்குமோர் சுக்கிலத்தைச் சேர்ந்திடுஞ் சுரமேயென்க
இறக்குமேயிளைப்புத்தானுமில்லையென் றுரைக்கலாமே (7)

(இ-ள்) இருமல், பெருமூச்சு, விக்கல், அடிக்கடி மயக்கம், உடம்பு ஓய்ச்சல், பிராண வாயு, அபானவாயு இவைகளை அதிகரிக்கச் செய்யும், நடுக்கலும் ஏற்படும் இக்குறிகளுண்டானால் மஜ்ஜையைப்பற்றிய ஜ்வரமாகும். சுக்கிலத்தைப்பற்றினல், அதிகமான தூக்கம் ஏற்பட்டு, அறிவு கெடும். இளைப்பு இருக்காது. இக்குறிகளினுல் அறியவும்.

### அ(ஸ்)த்தி சுர லக்ஷணம்.

நரம்பெலும் புடம்பு சந்து நறுக்கியே பிளத்தல்போல
யுறம்பெற வந்தாலத்தி யுற்றதோர் சுரமேயென்க
வலம்பெற வடிவேற்கண்ணு!யறிவுறு முனிவோர்தாமும்
நலம்பெற வடநூல்தன்னை நல்கிய பயன்கள்தானே. (8)

(இ-ள்) நரம்பு, எலும்பு, உடம்பு, கை, துடை இவைகளின் இடுக்குகள் முதலான இடங்களில் கடுமையான வலி ஏற்படும். ஜ்வரமும் அதிகமிருக்கும்.

## ரோகோத்பத்தி.

உரமுறு தக்கன்யாகத் துருத்திர னெற்றிக்கண்ணுற்
சுரமுய ரோகம்பற்றி பாபஞ்சொல்லுமிறுத்துச்
சோசன்
திரமுறு கோபஞ்சேர்ந்த மந்தஞ்செப்பு மோகமய
ஞதருதம்
அறமுறு வேர்க்கண்கேளே! அபசாரத் தோடுபத்தே. (9)

(இ-ள்) தக்ஷன் யாகத்தைப் பரமசிவன் நெற்றிக் கண்ணால் அழித்தபோது ஏற்பட்ட கோபாக்கினியே "சுர ரோகம்" ஆயிற்று. இதற்கு பாபம், மிருத்யு, சோசன், கோபம், மந்தன், மோகம், மயன், தருதம், அபசாரம் என்ற பெயர்களும் உண்டு.

## வாத ஜ்வர லக்ஷணம்.

வாதசுரமே குளிர்கம்பம் வானீர் தகைப்பு மயிர்குத்து
போதமூறித் தாபமுடன் புகல்வாய்க்குறடு தாளெடுங்
பேதமாகத் தலைக்கடிகைப் பிளந்தாப் போல (கல்
கன்னந்தோல்
காதுங்கருகிச் சுவாசமுடன் காசமிகவாங் கண்டீரே (10)

(இ-ள்) குளிர், நடுக்கம், வாயில் நீரூறல், பயம், மயிர்க்கூச்சல், உடம்பில் எரிச்சல், வாயைத் திறக்க முடியாமை, தலையைப் பிளக்கும்படியான வலி, கன்னம், தோல், காது முதலான இடங்களில் கருமைநிறம், சுவாசம், இருமல் முதலான குறிகளுடன் ஜ்வரம் இருந்தால் அது "வாத ஜ்வர"மாகும்.

## பித்த ஜ்வர லக்ஷணம்.

வன்னிபோற் சுரமே மூர்ச்சை மதமதி சாரம் வாந்தி
பின்னையுப் புரைப்பதாகம் பெருமுக மதரங் காது
மின்னிடு முருகுங்கண்ணு மேனியும் பிதமாயே
பன்னிடுங் குளிர்ச்சிதோன்றும் பயித்தியச் சுரமதாமே. (11)

(இ-ள்) நெருப்பைப்போல் அனல் வீசும். மூர்ச்சை யுண்டாகும். அதிசாரம் (வயிற்றுப்போக்கு), வாந்தி தாகம் இவைகளேற்படும். முகம், உதடு, காதுகள் இவைகளில் மினுமினுப்புத் தோன்றும். உடம்பும் கண் களும் மஞ்சணிக்கும். குளுரும் தோன்றும்.

### கபச்சுர லக்ஷணம்.

வாந்தியாய் மூக்குநீர்பாய் வைத்துள விரத்தஞ்சீதந்
போந்தநெஞ் செரிப்புக் காருதல்புகல்திமிர்சுவாசகாசம்
சேர்(ர்)ந்தவுட் டிணமேவேண்டல் சிலிர்த்துடல்
வெளுத்துமேனி
காந்தளென் கறத்துமாதே! கபச்சுர ரோகிதானே. (12)

(இ-ள்) சுரத்துடன் வாந்தி, ஜலதோஷம், சீதபேதி, நெஞ்சுக்கரிப்ப, உடம்பில் மதமதப்பு, மேல்மூச்சுடன் இருமல், உ ஷ் ண ம ா ன பதார்த்தத்தில் விருப்பம், உடம்பு வெண்ணிறமடைதல்முதலான குறிகளேற்படில் "கபசுர" மாகும்.

### வாத பித்த ஜ்வர லக்ஷணம்.

தழலென வழத்தியுண்டாய் தக்கவாய் வரண்டுலர்ந்து
யுழலேயோக் காளத்தோடே யுறக்கமு மில்லையாகில்
குடிலுறு தலையுஞ் சந்துங் கொடூரமாய் நொந்துதாகில்
சுழலுறு வாதபித்தச் சுரமெனச் சொல்லலாமே. (13)

(இ ள்) உடம்பு நெருப்பைப்போல் அனல் வீசும். வாய் வரண்டு உலரும்-அழற்சியுடன் வாந்தியாகும். தூக்கமிராது. தலை, மூட்டுகள் இவைகளில் தாங்க முடியாத வலி முதலானவை ஏற்பட்டால் அது "வாத பித்தச்சுர" மாகும்.

### வாத கபச் சுர லக்ஷணம்.

சோம்புடன் திமிரேயாகிற் சொல்மொழி தவறேயாகிற்
தேம்பிடுஞ் சுவாசகாசஞ் சிரத்தொடு சந்துநோதல்

காம்புறு தோமாய் சீதங் காண்பசி யருசியோடே
யாம்படி குணங்கள் வாதத் தையுறு சுரமதாமே. (14)

(இ-ள்) சோம்பல், மதமதப்பு, உளருதல், மேல் மூச்சு, இருமல், மூட்டு, தலை இவ்விடங்களில் வலி, குளுர் அருசி, முதலான குறிகளுடன் சுரம் இருந்தால் அது "வாதகப"ச் சுரமாகும்.

## பித்த கபச் சுரக் குறிகள்.

சாலவே குளுருண்டாகித் தாகமுங் களையுண்டாகிச்
சீலமாங் கோழையாகிற் றிறமுடன் சோம்புமாகி
கோலமா மிருமல் வியர்வை கொடியதா மரோசிதாக
மாலமாய் வாய்க்கசப்பு மையுடன் பித்தவெப்பே. (15)

(இ-ள்) தேகத்தில் குளிர் அதிகரிக்கும். நாவரட்சியும் களைப்பும் ஏற்படும். கோழை வெளியாகும். இருமல், வியர்வை, அரோசகம், வாய்க்கசப்பு முதலான குறிகளுடன் ஜ்வரம் இருந்தால் அது 'பித்தகபச்' சுரமாகும்.

## சன்னி பாத ஜ்வரக் குறிகள்.

சன்னிவாத சுரம் சோம்பு தாகம் பிரமை யழல் மூர்ச்சை
துன்னிவாய்நீ ரரோசிது வாதுதந் தினவு தலை சந்து
கன்னங் கண்த லிந்தபித்தங் கண்ந்தோ லுகிர சிவப்
பருமை
யுன்னுநாக் கருப்பூமை செவுடுறக்க மன்றிக் குளிராமே.
(16)

(இ-ள்) வாதம், பித்தம், கபம் மூன்றும் கோபித்து ஏற்படும் ஜ்வரத்தில் அதிகமான நாவறட்சி, மயக்கம், எரிச்சல், மூர்ச்சை, அரோசகம், அரிப்பு, தலை, மூட்டுகள் இவைகளில் கடுமையான வலி, கன்னங்கள், கண், தோல் முதலான இடங்களில் மஞ்சள் நிறம், நாக்கில் கருநிறம், தூக்கமில்லாமை, குளிர் முதலான குறிகளுண்டாகும்.

## வாதசோபச்சுரக்குறிகளும்பித்தசோபச்சுரக்குறிகளும்

அய்யுயர் வாதசோப மாஞுக்கால் குணமே கேளாய்
மெய்யுடன் சிரஸ¬கம்ப மீறிய குளிருமாகும்

பய்யற வல்குல் மாதே! பயித்தியச் சுரத்தின் சோபந்
திய்யன வழுத்தியென்றுச் செப்பினர் செகத்தி
ஓுள்ளோர்.

(இ-ள்) வாத வீக்கத்துடன் கூடிய சுரத்தில் தலை நடுக்கலும், குளிரும் அதிகமிருக்கும். பித்த வீக்கத்துடன் கூடிய சுரத்தில் அழற்சியேற்படும்.

### பூதச்சுர லக்ஷணம்.

போதமழிந்து பொய்பேசும் போசனத்தில் மிகவாஞ்சை
யேதப்படவே சுரம்சோம்பு மியலா மயிற்குத் திடலாடல்
பேதமதாக விழிவெளுத்தல் ப்ரதாபத் துடனே
தானகைத்தல்
தோதஞ் சந்தில் மிகக்கண்டால் சொல்லும்
பூதச்சுரமென்றே (18)

(இ ள்) நினைவு மறந்து பொய்களை யுரைப்பான், ஆகாரத்தையதிகம் உட்கொள்வான். ஜ்வரம், சோம்பல், மயிர்க்கூச்சல், விழி வெளுத்தல், காரணமின்றிச் சிரித்தல், மூட்டு வலி முதலியவைகளும் இருந்தால் அது "பூதஜ்வர"மாகும்.

### அசீர்ணச் சுர லக்ஷணம்.

விக்கலுங் காசந்தானும் மேலுறு சுவாசந்தானும்
பக்கமும் நெறியுஞ் சந்து பாதமும் நோகல்தானும்
மிக்கதோ ரசீரணத்தில் விளங்கிய சுரமேதானு
மக்கினி மந்தந்தானு மசீரணச்சுரமதாமே. (20)

(இ-ள்) விக்கல், இருமல், மேல்மூச்சு, விலாப் பக்கம், மூட்டுகள், கால் முதலான இடங்களில் கடுமையான வலி, பசியின்மை முதலான குறிகளுடன் சுரம் காணுமேயானால், அது அஜீர்ணச் சுரமாகும்.

### ஆகந்துக ஜ்வரத்தின் காரணங்களும் குறிகளும்.
### (அபிகாதஜ்வரம்.)

மந்தசீத வுட்டினத்தால் மானுர் கலவியோரிருபால்
வெந்த வெய்யில் நடைகோபம் வேலையிவைகள்
தாகமதால்

லெந்த நீரு மாடுதலில் லியலா முறக்கம் விடுதலினு
லிந்த வகையே பதினொன்று லெடுக்கு மபிகாத
சுரமாமே. (20)

வெருவதாம் பதினொன் றென்றி லபிகாதந்தோன்றில
தகுசுர தாபம் வேர்வு தாகமூ டாகஞ் சீத
மிகுவுடம் பதிக நோவு **வீறு**போ சனத்தில் வாஞ்சை
தொகுமதி மயக்கந் தானுந் தோன்றிடு மென்னலாமே
(21)

(இ-ள்) மந்தம், குளிர்ச்சி, உஷ்ணம், புணர்ச்சி, வெயிலில் நடத்தல், கோபித்தல், தா**க**ம், தண்ணீரில் குளித்தல், தூக்கமின்மை, அதிகமாக வழி நடத்தல், அதிகமான சரீர வேலை ஆகிய இந்த பதினொரு வகைக் காரணங்களினாலும் "அபிகாத ஜ்வரம்" (**ஆகந்துகம்**) உண்டாகும்.

பொதுவாக ஜ்வரம், உடம்பெரிச்சல், வியர்வை நாவறட்சி, குளிர், உடம்பில் குத்து**வலி** **ஆகார**த்தில் இச்சை, மயக்கம் முதலான குறிகள் உண்டாகும்.

**மாமாக சுரம் குறிகள்.**

மெய்தான் சிலுத்து வழல்தா**கம்** **வீக்கம்** **கால்கள்**
வயிறதுவுங்
கைகாலெரிப் போடசிதூ நகங் கண்தோலிரத்தமி
லாவெளுப்பு
செய்வாம் பத்தியங் கண்ணழற்சிச் சிரமும் வயறும்
வலிப்பெய்தி
நைவாய் வாந்திக் கண்ணகம் பென்னலா மாகாகச்
சுரமாமே. (22)

(இ-ள்) உடம்பில் குளிர் உண்டாகி, எரிச்சல், நாவறட்சி, முதலானவைகளுடன் கால், வயிறு முதலிய இடங்களில் **வீக்கம்** கைகாலெரிச்சல், நகம், கண்கள், தோல் முதலான இடங்களில் இரத்தம் குறைந்து வெளுத்துப்போதல், கண்களில் வலி, தலை, வயிறு

முதலிய இடங்களில் வலி, வாந்தி முதலான குறிகள் உண்டானும் அது ''மாமாக சுரம்'' எனப்படும்.

## ஆகிக ஜ்வரம் (முறைஜ்வரம்).

ஒன்றுட னிடண்டிலு மோர்மூன்று நாலிலும்
நன்றிடு மஞ்சிலும் நடுவிரற் தன்னிலுந்
துன்றிடு பக்கமுந் தோன்றிடு மாதமுஞ்
சென்றனே மூன்றிலுஞ் சேர்ந்ததே யாகிகம் (23)

(இ-ள்) தினமுமோ அல்லது 2 நாட்களுக்கு ஒரு முறையோ, அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறையோ அல்லது 4 நாட்களுக்கு ஒரு தடவையோ அல்லது 5 நாட்களுக்கு ஒரு முறையோ அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது 3 மாதத்திற்கு ஒரு தடவையோ தீர்மானமாக வரக்கூடிய ஜ்வரத்திற்கு 'ஆகிக ஜ்வரம்' எனப் பெயர்.

## குலைப்பு சுரத்தின் குறிகள்.

அன்னவிரசந் தெரிகின்றவங்கி பித்தந்தனை மறைத்துப்
பின்னைவாதச் சிலேஷ்மத்தால் பெருகுங் குளிரா
லுடற்கனமா
மூன்னவேயில்லா பித்தத்தால் முறியும் வாத
ச்லேஷ்மந்தான்
அன்ன பித்தக் கோபத்தா லலைபோல் குளிரை
வுத்திடுமே. (24)

வுத்ததோர் குளிருண்டாகி யுயர்ந்ததோர்
சுவாசமாகி
மத்ததோர்க் காசதாக மதிமிக மயக்கமாகிச்
செத்திடல் போலவாகித் தீபுரத் சுரமேயாகிற்
குத்துடை மாதேயீது குலைப்பென வறியலாமே(25)

(இ-ள்) சரியாகப் பக்குவமடையாத அன்னரஸம். உடலிலுள்ள ஜாடராக்னி, பித்தம் முதலானதைக் கெடுத்து, வாயுவையும் கபத்தையும் அதிகரித்துத்தாங்க

முடியாத குளிரையும் உடம்பு கனத்தையும்ஏற்படுத்தும் அல்லது பித்தம் குறைவடைவதால் வாதகபங்கள் முறிந்து குளிரை யுண்டாக்கும். இதனுல் சுவாசம் அதிகரித்து இருமல், நாவறட்சி, மயக்கம் முதலான குறிகள் உண்டாகும்.

**சீதஜ்வர லக்ஷணமும் விஷமச்சுர லக்ஷணமும்.**

இனியசீதச் சுரந்தானு மிரசதாது தன்னில் வந்தால்
முனிவதாக நிரந்தரமும் மூன்றேவிடாமல் தான் [சொரிக்கும்
தனியேயன்றி யெத்திகந் தானேர்பொழுது சொரித் [தேகும்
நனிவாம் பின்னுஞ் சபிகாத நன்ருய் விஷமச் [சுரந்துள்ளே. (26)

பத்திலும் நாலினிலும் பனிரெண்டு மூன்றிலுஞ்
சத்தமந் தன்னிலுந் தூன்விட்டு வந்திடி
லுத்தமம் புவியோர்கள் மீதுற..............
மத்துள சுரமென வறிந்து கொள்ளுவீர்.

(இ-ள்) சீத ஜ்வரம் ரஸதாதுவையடைந்தால்மூன்று நாட்களுக்கு விடாமல் ஜ்வரமடிக்கும். அல்லது ஒரு நாளைக்கு ஒருமுறை வந்து விட்டுவிடும்.

4 நாட்களுக்கு ஒரு முறை வீதம்10நாளும், அல்லது 3 நாட்களுக்கு ஒருமுறை 12 நாள் வரையிலுமோ அல்லது 7 நாட்களுக்கொரு முறையோ வரக்கூடிய முறை சுரம் ''விஷம ஜ்வர'' மாகும்.

**சுரத்தில் உபயோகிக்கக் கூடாத வஸ்துக்கள்.**

காரம் புளிதுவர் மதுரமுடன் கசப்புச் சுவாது [போசனந்தான்
சேருங்குளிர்த்திக் குளிர்நீர்தான் சிந்தாசோகங் [கிரிசியுடன்
போரார் விழியார் சங்கந்தான் பொருந்தித்தருண ]சுரந்தன்னில்
நீராதென்ன மாகாதோஷஞ் சேருங்காணும் [திண்ணமிதே. (28)

பூவுஞ்சீவுஞ் சந்தனமும் பொருந்தும் பாக்கும்
[வெத்திலையும்
மேவுங் கொடி சிவ பாடைமெத்தவெல்ல
[மெள்ளெண்ணெய்
தாவுங் காத்து வரும்வீடுதக்கமனையாள் தனைப்பார்க்கல்
நாவுண் ணுருசி மந்தமுடனறுநெய் சுரத்தோர்க்கவ
பத்தியமே. (29)

ஆகாதவ்வ பத்திய தோஷந்தான் ஆயிழை சங்கந்
[தன்தோஷ
மீகா விஷதோஷந்தான் விஷசீதத் தோஷந்தான்
வாகாயிரத்தசிங்குவந்தான் வருமே பித்த சீவுகந்தான்
தோகாய் கிட்டிணசிங்கு வந்தான் தோஷமேழாங்
கண்டீரே. (30)

(இ-ள்) ஆரம்ப நிலையிலுள்ள ஜ்வரத்தில் காரம், புளிப்பு,தித்திப்பு, குளிர்ந்த தண்ணீர், கவலை, வருத்தம் பெண்களின் சேர்க்கை, துவர்ப்பு முதலியவைகளை நீக்க வேண்டும்.

புஷ்பங்களைத் தரித்தல், சந்தனம் பூசிக்கொள்ளுதல் பாக்கு வெத்திலை உபயோகித்தல், வெல்லம், நல்லெண்ணெய் இவைகளையும் அதிகமாக உபயோகம் செய்தல், மனைவியைப் பார்த்தல், நெய் உட்கொள்ளுதல் முதலானவைகள் சுரரோகிக்கு அபத்தியங்களாகும்.

ஆகவே அவை அபத்திய தோஷம், ஸ்திரீ சங்கமத் தோஷம், விஷதோஷம், விஷசீதத்தோஷம், இரத்த சீவுகதோஷம், பித்தசீவுகதோஷம், கிருட்டின சீவுக தோஷம் என ஏழு வகைப்படும்.

## அபத்திய தோஷத்தாலேற்பட்ட சுரலக்ஷணமும் ஸ்திரீசங்கதோஷக்குறிகளும், விஷதோஷக் குறிகுணங்களும்.

தந்தமூர்ச்சை பிரலாபந் தாகப் பிரமைமார் நோவொ
டித்தவிதந்தான் பத்தியந்தா லெடுத்ததோஷம்
[ஸ்திரீசங்கம்
வந்த தோஷம் பிரலாப மார்பெரிப் பங்கை
[கால்குளிர்ச்சி
சிந்தை மயக்கம் போந்திருத்தல் தேகம் நோவு
[கடுக்கலுமே. (31)

அந்த நாடிக் குடிலமுமாய் யதிக தீபமாய் நடக்க
வந்த சுரத்தோடதிதாக மதமா மூர்ச்சை வேர்வாகி
யுந்தியெரிப்புந் தானுண்டாய்யொருக்கள(வ)லிக்குணங்
கண்டக்கால்
தொந்தமான விஷசுர தோஷமென்று மறிவீரே. (32)

(இ-ள்) மூர்ச்சை, பேத்தல், மயக்கம், மார்புவலி, இவைகளேற்படில் அது அவபத்யதோஷ சுரமாகும்.

பேத்தல், மார்பு எரிச்சல், கைகால் குளுர்ச்சி மயக்கம், தேஹத்தில் வலி, இவைகள் ஸ்திரீசங்க தோஷக் குறிகளாம்.

நாடியானது மெலிந்தும், ஜ்வரத்துடன் அதிக தாகம், மூர்ச்சை, வியர்வை, வயிற்றில் எரிச்சல், கண்டக்கால் சதையில் வலி முதலானவைகளிருந்தால் அது விஷசுர தோஷம் என்று அறிந்துகொள்ளவும்.

## சீதவிஷ தோஷ லக்ஷணம்.

ஒருநாள் தன்னி லிரண்டுதரம் முகந்தே மூன்று
நாலுதிரம்
வருமே குளிருங் காய்ச்சலுந்தான் மற்றுந்தாகந்
தலைவலியும்
தருமே களையு நாத்தானுந்தகமுள்போலத்துடித்தக்கால்
செருமேற்பொருவேல் விழியாளே!சீதமான
விஷதோஷமிதே (33)

(இ-ள்) ஒரு நாளைக்குள் 2, அல்லது 3, அல்லது 4 தடவை குளிருடன் காய்ச்சல் வரும். தாகம், தலைவலி, களைப்பு, நாக்குமுள்போலத்துடித்துப் போதல் முதலான குறிகள் ஏற்பட்டால் அது 'சீதவிஷ தோஷ' சுரமாகும்

## இரத்த சீவுக, பித்த சீவுக லக்ஷணம்.

தடித்துச் சிவந்து முள்போல் நாக்குந் தாகமிலாச்
சுரமேறி
யெடுத்தாலிரத்த சீவுகந்தா னினித்தான்
பித்தசீவுகங்கேள்

வெடித்தே முள்போல் நீரற்று மீறுநாவே
பொன்னிறமாய்
தொடுத்தபிரமை மூர்ச்சை சுரந் தொண்டை
வேதனையுண்டாமே. (34)

(இ-ள்) நாக்குத்தடித்துச் சிவப்பாகி, முள்போல் சிறுசிறு கொப்புளங்களேற்படும். தாகமிருந்து, சுரம் அடிக்கும். இது இரத்த சீவுகம் (ரத்த ஜிஹ்வா) ஆகும்

நாக்கு முள்போல் ஆகி ந ா வ ற ட் சி அதிகரித்து மஞ்சள் நிறமாகும். மயக்கம், மூர்ச்சை சுரம், தொண்டை வலி இவைகளும் ஏற்படும், இது "பித்தசீவுக தோஷ" மாகும். (பித்த ஜிஹ்வா)

சீவுகம்-ஜிஹ்வா அதாவது நாக்கு என்று பொருள் படும்.

## கிட்டின சீவுக தோஷ லக்ஷணம்.

நீரும்வத்தி சரசரத்து நிறையமுள்போல் நாக்கறுத்துப்
பாருள்ளறிவு தான் கெட்டுப் பகருமுப்பிச வேர்வையு
டன்
சேருந் தினவுத்தாகமுடன் சீறித்தானு மெழுந்திருத்தல்
வாரும் பொருந்து முலைமாதே! மத்துங் கிட்டிண சீவு
கமே.

(இ-ள்) வாய்நீர் வற்றிப்போய் நாக்கு முள்போல் ஆகும். நாக்குக்கருமை நிறமாகும். அறிவு மழுங்கும் வயிற்று உப்பிசம், வியர்வை, அரிப்பு, தாகம், திடீரென திடிக்கிட்டு எழுந்திருத்தல் முதலான குறிகள் காணில் அது "கிட்டிண சீவுக" மாகும் (க்ருஷ்ண ஜிஹ்வா)

## தோஷங்களின் மாத்திரை காலம்.

தருணசுரத்தி லபத்யத்தால் தானுந் தோஷமேழுக்கும்
வருமிலக்கணங்கள் சொன்னதல்லால் மாத்திரை
வகையேதான் கேளாய்
ஒருமித்தங்கே பதினஞ்சா மொழிந்தாலேழு நாளன்றே
தருமொத்திலங்குங் குழல்மாதே!செப்புங்காணு
முத்தமிழே (36)

(இ-ள்) இவ்வாறு ஆரம்பசுரத்தில்அபத்திய சேவை யினுல் ஏற்படும் 7 வித தோஷங்களின் குறி குணங்களை யும் உரைத்தோம். இவை 7 முதல் 15 நாள் வரை உடலை வருத்தும்.

### வாத பித்த சிலேத்ம தோஷக்குறிகள்.

ஒப்பொடுகுளிர்ந்து வரும்முகம் வேரும் பலகாலு
[முள்ளஞ் சேத்துமமேதிர ளெடுத்து
வெப்பொடு முழங்கால் குளிர்ந்திடுந் தலைவலி
[மிஞ்சிமலமுஞ் சிக்கிடுகில்
கைப்புப் புளிப்புத்தித்திப்புங் கதிக்கும் வாயுங்
[கறுத்து வாதமுட
செப்பும் பித்த சிலேத்துமமுஞ் செய்யுந்தோஷத்
துயராமே. (37)

(இ-ள்) உடலில் குளிர்ச்சி யதிகரிக்கும். நெஞ்சில் கோழை கட்டும். உடம்பில் எரிச்சல் அதிகமாகும். முழங்காலிலிருந்து பாதம்வரைசில்லிட்டுவிடும். தலைவலி உண்டாகும். மலச்சிக்கல் அ தி க ரி க் கு ம் வாயில் கைப்பு,புளிப்பு,தித்திப்பு முதலான பற்பல சுவைகளும் காணும். வாய் கருநிறத்தையடையும். இதுவாதபித்த சிலேத்மம் (சன்னிபாதம்) இம்மூன்றும் சேர்ந்ததன் குறிகளாகும்.

### வாத சுரத்தின் குறிகள்.

வாதசுரத்தின் குணம் கேளீர் வந்து குளிர்தல்
பயப்படுதல்
சீதமிகுந்து துணுக்கெறிதல் செய்யமேனி
சிலுப்பெறிதல்
தேதங்கண்டு தலைநோகுந்தீருந்தொப்புள் சலங்கடுக்கும்
பாதமொழிந்த நீர்குடியால் பலகால் வெதும்பி
விடாததுவே.(38)

(இ-ள்) தேகத்தில் குளிர்அதிகரிக்கும். பயம் தோன் றும். உடம்பு சில்லிட்டு அடிக்கடி தூக்கிப் போடும். மயிர்க் கூச்சலறியும். தலைவலியேற்படும். தொப்புளைச்

சுற்றி வலியும், நீர்க்குத்தலும் உண்டாகும். தாகம் அதி கரிக்கும். இவை வாதசுர லக்ஷணங்களாகும்.

### பித்த சுரத்தின் குறிகள்.

பித்த சுரத்தின் குணங்கேளாய் பிதத்து முழுத்தும்
பேய்போல்
மெத்தத் தண்ணீர் தாகமெனு மிகவுங்கைக்கும்நாவுலரு
முற்றுஞ் சிறுநீர் மலந்தானு மொழிசேர் குதத்திலம்
மிக்குஞ்
சுத்திப் பார்க்கு முகமுங் கடுக்குஞ் சொல்லாமிடறும்
புண்ணுமே. (39)

(இ-ள்) பிதற்றலும், புரளல் முதலானவை யதிகமாகக் காணும். அதிகமான தண்ணீர் தாகமேற்படும். நாக்கில் கசப்புச் சுவை காணும். நாவறட்சி உண்டாகும். சிறுநீர் மலம் முதலானவை தடைபடும். நாலாபக்கங்களும் பார்த்து விழிப்பான். கடுப்புவலி அதிகமாயிருக்கும்.

### சிலேத்மசுர லட்சணம்.

முகத்து நீர் வேர்க்கு முள்ளுவோக்காள மொடு
தேக்கிடு வாய்னீர் தானுந் தித்திக்கும் நெஞ்செரிக்கும்
தாக்கிடு மதுதானெனுந் தான்பல சிந்தையாகும்
வாக்கினில் நல்லோர் கேளீர் சேற்று மச்சுரத்தின்
வாறே. (40)

(இ-ள்) முகத்தில் அதிகமாக வியர்வை காணும். ஒக் காளம் உண்டாகும். வாயில் தித்திப்புச் சுவை ஏற்படும் நெஞ்சில் எரிச்சல் காணும் மனம் ஒரே நிலையில் இராமல் அலையும். இவை கபச்சுரக் குறிகளாகும்.

### இதுவுமது

வாய்னீர் கொளுத்தியுடல் பல விதமாய் வலந்தான
டைக்கும்
தானே குளிர்ந்து மிகவெதுப்புந் தரியா திருமல் வருந்
தலது தானுண்டாந்
தேனே நாவுந் தித்திக்குச் சிறந்த மூக்கு நீர்ப்பாயு
மானே விழியாய் சிலேத்துமமாய் வந்த சுரத்தின்
வகையறிவே. (41)

(இ-ள்) மலச்சிக்கலுண்டாகும். உடலில் குளிர்ச்சி, வெப்பம் இவ்விரண்டும் மாறி மாறி காணப்படல், நாக்கில் தித்திப்புச்சுவை ஏற்படுதல். மூக்கொழுதல் முதலான குறிகளும் சிலேத்ம ஜ்வரத்தில் காணும்.

ஆ. கவி (187)

## சந்நிவாத நிதானம்.

மிக்க சந்திரிகன் தாந்திரீகன் விப்பிரமன் கண்டகுச்சன்
உக்கிர கண்ணி கன்சீகு வீகன்னுத்திர னந்தகன் பார்
புக்கு நேந்திர னிரத்தசாட்யன் புகழு பிரலாபகம்
சீதார்க்கன்
தக்க அபின்யாசன் தன்னுடனே சாற்றுஞ்சன்னி
பதிமூன்றே. (1)

(இ-ள்) சந்நிபாதம் 13 வகைப்படும். அவையாவன:-

1. சந்திரிகன். 2. தாந்திரீகன். 3. விப்பிரமன். 4. கண்டகுச்சன் 5. கண்ணிகன். 6. சீகுவீகன். 7. உத்திரன் 8. அந்தகன். 9. புக்குநேத்திரன். 10. இரத்த சாட்யன். (சீதகன்) 11. பிரலாபகன். 12. சீதார்க்கன். (சீதாங்கன்) 13. அபின்யாசன் என்பன.

## சந்தி நீடிக்கும் காலம்.

சந்திரிகனே மூநாளந் தாந்திரிக னிருபத்தஞ்சாம்
மந்தகன் பத்துநாளா மபின்யாசன் பதினஞ்சேநாள்
முந்துசீதாங்கள் பதினஞ்சு கண்ணிகன் மூன்று மாதம்
வந்தருத்ர னிருபது வழுத்துபிரலாபகன் பதினலே (2)

பத்துநா ளிரத்தசாட்டிப் பகருசீதக னேழுநா
ளொத்தபதி மூன்றுகண்ட குச்சனேரெட்டுப்புக்கு
நேத்திரன்
சித்தவிப்ரமனிருபத்துநா ளுந் திகழுஞ்சன்னிநாள்கண்டு
மெத்தனவுஞ் சிந்தாமணியின் விதத்தையுரைத்தோங்
கண்டீரே (3)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சந்திரிகன் | 7 | நாள் வரை உடலை வருத்தும் |
| தாந்திரிகன் | 25 | ,, |
| அந்தகன் | 10 | ,, |
| அபின்யாசன் | 15 | ,, |
| சீதாங்கன் | 15 | ,, |
| கன்னிகன் | 3 | மாதங்கள் |
| ருத்ரன் | 20 | நாட்கள் |
| பிரலாபன் | 14 | ,, |
| ரத்த சாட்டியன் | 10 | ,, |
| சீதகன் | 7 | ,, |
| கண்டகுச்சன் | 13 | ,, |
| புக்கு நேத்திரன் | 8 | ,, |
| சித்தவிப்ரமன் | 24 | ,, |

என்று 'சிந்தாமணியில்' காணப்படுகிறது

## சந்திரிகன் குணம்.

வாக்குத்தானிறை செலுத்தும் வருந்துஞ் சூலை காச
முடன்
தாக்கும் வேதனையுடம் புலருஞ் சாத்துங் குணங்களிவை
கண்டால்
நீக்குஞ் சந்திரிக னீதென்று நிலையைக் கண்டு புவிமீதில்
காக்கவுயிரை பருந்தழித்துக் கருதிப் பாரீர் புதவீரே(4)

(இ-ள்) நோயாளி பிரலாபிப்பான், உடம்பில் வலி, இருமல் இவைகளேற்பட்டுத் தேகம் மெலியும், இவை சந்திரிக சந்தி லட்சணங்கள்.

## தாந்திரீகன் குணம்.

தூக்கம் பெருக்குஞ் சுரந்தோன்றும் சுவாசமடரும்
பிரமையுமாம்
தாக்கும் வேதனையதிசாரந் தாகம் நெஞ்சைத் தினவு
தின்னும்

நாக்குங் கறுத்துத் தடிப்புண்டாம் நாடியடரும் மேல் மூச்சு மாக்குங் குணங்க ளிவைகண்டா லறிவீர் தாந்தி ரீகனிதே (5)

(இ-ள்) அதிகமான தூக்கம் ஏற்படும். சுரம் அதிக மிருக்கும். மேல்மூச்சுவாங்கும், மயக்கமேற்படும் உடம்பு வலி, கழிச்சல், நெஞ்சு எரிச்சல், நாக்கில் கறுமை நிறம், தடிப்பு, முதலான குறிகள் காணில் அது தாந்திரீக சந்நியாம்

## சித்தவிப்ரமன் குணம்.

மோகம் பெருக்கும் விருமையுமா முதிருந்தாகஞ் சிறப்புடனே
வாகாம் பிரலாபதீத முடன் மண்ணு(மனது) நிறைந்த வைக்கலியத்
தாகம்பீளை கண்ணதைநிலச்சாய்த்துப்பார்க்குங்குணங் கண்டால்
ஆகாச் சித்த விப்பிரம னறிவீர் புவியில் மடவீரே. (6)

(இ-ள்) மயக்கமேற்படும். தாகமதிகரிக்கும். அதிக மாகப் பிரலாயிப்பான். மனது ஒரே நிலையில் இராமல் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் தாகம் ஏற்படும் கண்களில் பீளை சாறும் தலையை யொருபக்கமாய்ச் சாய்த்துப்பார்ப்பான் இவை சித்தவிப்பிரம சந்நி லக்ஷணங்களாகும்.

## கண்டகுச்சகன் குணம்.

தாபமேல் மோகமாகும் வாதமாந் தலைவலிக்கும்
கோபமே மேச்சுவாசம் கூறிய பிரலாபந்தான்
தூபமாங் கண்டகுச்சன் சொன்னவிக் குறிகள் கண்டால்
பாவமாம் வாகடத்தின் படியீதெனவே குறியீரே. (7)

(இ-ள்) உடம்பு எரிச்சலுடன் மயக்கம் காணும். தலைவலி யுண்டாகும். கோபம் அதிகரிக்கும். மேல் மூச்சு காணும். இக்குறிகள் காணப்பட்டால் அது கண்டகுச்ச சந்நியாகும்.

## கர்ணிகன் குணம்.

காய்ச்சல் பெருகுமேல் மூச்சாங் காதினடியில் தான்வீங் கும்
வாச்சல் நடுக்கல் பிரலாபம் வளரும் நோவும் நெஞ்சுல ரும்

வாச்சல் வயிறு வலியுடனே வருத்து மெய்யைமிக
நோகும்
பூச்சக்கர்ணிகன் குணங்கண்டால் பொல்லாதென்னும்
புலவீரே. (8)

(இ-ள்) சுரமடிக்கும் மேல்மூச்சு வாங்கும். காதின டியில் வீக்கமிருக்கும். நடுக்கலேற்படும். உளரல் இருக் கும் நெஞ்சில் வரட்சையதிகரிக்கும். வயிற்றுவலி உண் டாகும் உடம்புவலியும் ஏற்படும் இவை கர்ணிக சந்நி யின் குறிகளாகும்.

## சீகுவிகன் குணம்.

உடம்பு நடுங்கி நாவிசித்து உரத்தேயிழுக்குஞ் சுவாச
முடன்
தடம்பு காசஞ் செகுட்டுடனே சாற்றுமூமைத் தபமுடன்
நடம்பு முடம்பின் பலங்குறையும் நமனுருஞ்சீவிக
நீதென்று
குடம்போல் முலையீர்! உமக்கென்று குணங்களு
ரைத்தோ மறிவீரே. (9)

(இ-ள்) தேகமெங்கும் நடுக்கலுண்டாகும் நாக்கு இழுத்துவிடும், மேல்மூச்சு வாங்கும். இருமல் இருக்கும். உடம்பெரிச்சல் அதிகமாயிருக்கும். உடம்பு பலமும் குறைவடையும். இவை சீகுவிகன் குறிகள் எனத் தெரிந்து கொள்ளவும்.

## ருத்திரன் குணம்.

மோகம்பிரலாபதாபமும் மொழியும் நெஞ்சு நோவாகும்
வேகம் பிரமை யிளைப்புடனே வேதனையாகும் மிகத்
தாபம்
பூகச்சுவாச மிவைகண்டால் பொல்லாச்சந்நிருத்திரகன்
பாகமொழியா யுமக்குரைத்தோம் பாராய்நூலின்
படிதானே. (10)

(இ-ள்) மயக்கம், வாயுளரல், நெஞ்சுவலி, மூர்ச்சை, இளைப்பு, உடம்புவலி, எரிச்சல், மேல்மூச்சு இவைகள் காணப்பட்டால் அது "ருத்திர சந்நியாகும்".

### அந்திகன் குணம்.

தலையைலிக்கும் மோகிக்கும் தாகமெடுக்கும் விக்கலுட
னுலையில்காய்ச்சல் மிகத்தோன்றுமுடம்புநாக்குஞ்
சந்தாபங்
குலையை நடுக்கு மந்தகன் தான் கூறுஞ்சந்நியெனச்
சொல்லுஞ்
சிலையையெடுத்த நுதல்மாதே தெரியச்சொன்னே
மறிவீரே (11)

(இ-ள்) தலைவலி, மயக்கம், தாகம், விக்கல், சுரம் இவைகள் அதிகமாகத் தோன்றும். உடம்பிலும் நாக்கிலும் எரிச்சல் காணும். நடுக்கல் உண்டாகும். இக்குறிகள் அந்தகசந்நியின் லக்ஷணங்களாகும்.

### புக்குநேத்ரன் குணம்.

கண்ணேபெருக்குஞ் சுவாசமுடன் காதுங்கேளாச்
சுரந்தோன்றும்
நண்ணுய்மோகம் பெரிதாகும் நாடுபிரலாப நடுக்க
லுடன்
தண்ணுர் புவியில் தான் படுக்குஞ் சாற்றுங் குறிகளிவை
கண்டால்
பெண்ணே! புக்கு நேத்திரன் பேரைச்சொன்னே
மறிவீரே. (12)

(இ-ள்) கண்கள் பெரிதாகும் (விழிகள் பிதுங்கும்), சுவாசம் அதிகரிக்கும், காது கேட்காது, சுரம் அதிகரிக்கும் மயக்கம் ஏற்படும். உளரல், நடுக்கல் முதலியவை யுண்டாகிக் குளிர்ச்சிக்காக வெறும் தரையில் படுக்க ஆரம்பிப்பான். இவை "புக்குநேத்திர" லக்ஷணங்களாகும். (பக்ன நேத்திர சந்நி).

### ரெத்தசாட்டியன் குணம்.

குருதிதோன்ற வாந்திக்கும் கூறுமூர்ச்சைச் சுரமோகம்
பருதிபோலத் தாகிக்கும் பகட்டும் விக்கல் விறுமை
யதாம்

துருகிக் கழிச்சல் நினைவறியாத் தோன்றும் வசனம்
மெய்நோகும்
இருகும் மெய்யிற்பொன் பச்சை யிரத்த சாட்டியக்
குறிதானே (13)

(இ-ள்) இரத்தம் தோன்றும் வரை வாந்தியெடுக்கும், மூர்ச்சை, சுரம், மயக்கம், அதிகதாகம், விக்கல், கழிச்சல், நினைவு தடுமாற்றம், உடம்புவலி முதலான குறிகளேற்படில் அது "இரத்தசாட்டியனு"கும்.

## பிரலாப குணம்.

உடம்பு நடுக்கும் பிரதாபிக்கு முள்ளமறியா நினைப்
பாகும்
தடம்பு நினைவுந் தானன்றித்தாகம் பெருகும் புறந்
தாள்கள்
பிடம்பு வீக்க மிவைகண்டால் பிரலாபசந்நியீதென்றே
கடம்பு மலரின் குழல் மாதே! கருதிச்சொன்னே
மறிவீரே. (14)

(இ-ள்) உடம்பில் நடுக்கமேற்படும். எரிச்சலெடுக்கும் நினைவு அழியும் தாகமதிகரிக்கும். புறந்தாளில்வீக்கமேற்படும். இவை பிரலாப சந்நிக் குறிகளாகும்.

## சீதாங்க சந்நிகுணம்.

பனியென மெய்யுமாகும் பசியாவாந்தி மிகச்செய்யும்
கனிமைபாந் தாகம் விக்கல் கழிச்சல் சேட்டிமமுமாகுந்
துனிமையாந் தினவுமாகுஞ் சுவாசமார் பிளேப்புக்கம்ப
மினிமையாங் குளிருமெய்யில் சீதாங்கத்தியல்பு
தானே (15)

(இ-ள்) தேகம் பனிக்கட்டியைப்போல் சில்லிட்டுப்போம். பசியேற்படாது. வாந்தி அதிகரிக்கும் தாகம், விக்கல், நழிச்சல், கபம், அரிப்பு, மேல்மூச்சு, மார்பில் சுழித்து வாங்குதல், நடுக்கம், குளிர் முதலான பற்பல குறிகளும் காணும். இது "சீதாங்கச் சந்நி"யாகும்.

## அபின்யாசன் குணம்.

மூவகைத்தோஷந்தானும் முகமொடு தூக்கந்தானு
மவ்வகை மெய்சயியாது மருவுஞ்சுவாசம் பெரிதாகு

மெவ்வகைப் பசியுமில்லா திருக்குமேல் குறிகள் கண்டால்
கவ்வகைப் பயனுமபினியாசன் கருதிமனுவுக்குரை யீரே. (16)

(இ-ள்) வாதம், பித்தம், கபம் முதலான 3 தோஷங்களும் பிரகோபிக்கும். தூக்கம் அதிகமாகும். மூச்சுவிடுதல் மிக பயங்கரமாயிருக்கும். பசி இராது. இவை "அபின்யாச சந்நியின்" குறிகள்.

## சுர நிதானம்.*

ஆகாத உண்டிக்கெல்லாமாசிரா மத்தைப் பத்திப்
போகாத உதிரத்தீயைப் பிரம்பது வீசப்பண்ணும்
பாகாரு மொழிபினுளே ! பங்கயன் விதித்த நூலின்
வேதாவின் வியாதிநீதி விளம்பினேந் தமிழினாலே. (1)

ஆங்காரக் கோபத்தாலு மடிவெயிற் காய்கையாலு
மாங்கிலாப்படுக்கையாலும்பசித்தபோதுண்ணுதாலும்
தாங்கொணுச் சுமையினாலு மஞ்சரு கிலேயீறலாலுந்
தேங்கிய மலக்கட்டாலுந் தீயநோய் சுரமதாமே. (2)

பண்டையில் மலச்சிக்காலும் பழயதோ ரசனத்தாலு
முண்டியில் பொல்லாங் காலும் மொண்டொடி வருத்தத்தாலுங்
கண்டுயி லாமையாலுங் கடும்புனல் வெட்டத்தாலு
மிண்டிய சுமைகாளாலும் வெதுப்புவந்துற்றவாரே. (3)

(இ-ள்) தேகத்தில் சாப்பிட்ட உணவு சீரணமாகாமல் ஆமதோஷமாகி வயிற்றிலுள்ள ஜடராக்னியை வெளியே வீசச்செய்யும். அப்போது தொட்டால் சுரம் காயும். மேலும் கோபத்தினாலும், வெயிலில் நடப்பதாலும், படுத்திருப்பதாலும், பசித்தபோது சாப்பிடா

---

*சுரநிதானத்தைத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருப்பதைப் பார்த்தால், வெவ்வெறு புத்தகங்களிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டிருக்கலாமோ என்ற ஐயம் எழுகின்றது இருந்தபோதிலும் சுவடியிலுள்ளபடி பதிப்பிக்கப்பட வேண்டிய முறையை யனுசரித்து அவைகளைப் பிரசுரம் செய்கின்றோம்.

மலிருப்பதாலும், அதிகமாகத் தலையில் சுமையைத் தூக்குவதாலும், புகையிலையைப் போடுவதாலும், மலச் சிக்கலாலும் சுர நோய் உண்டாகும். நீடித்த மலச் சிக்கல், பழயமுது சாப்பிடுதல், ஆகாரம் சரியாக இல்லாமலிருத்தல், அதிகமான வருத்தம், தூங்காமலிருப்பது, தண்ணீரில் அதிகமாகக் குளிப்பது, பாரத்தைச் சுமப்பது, இவைகளாலும் ஜ்வரம் ஏற்படும்.

**வாத சுரம்.**

நடுக்கித் திகைத்து மயிர்க்குத்துந் நளிர்ந்து தலையை
நோவதுவுங்
கடுக்கித் தாமுரி நிமிர்ந்து கண்ணும் வாயுங்கருகி.........
யிடுக்கி நீர்வாய் வருவது மிரைக்கு மிளைகரும்
வாய்துவர்க்கும்
மடக்கி வலிக்கு முடம்பெல்லா மறிவாய்
வாதசுரமென்றே.

(இ-ள்) உடம்பில் நடுக்கலுண்டாகும். பயங்கொள்வான் மயிர்க்கூச்சலுண்டாகும் தலைவலி, கண்கள், வாய் இவற்றில் கருநிறம், வாயில் நீர் ஊறல், இறைப்பு, தேக இளைப்பு, வாயில் துவர்ப்புச் சுவை, உடம்பில் வலி முதலிய குறிகள் கண்டால் அது "வாதசுர"மாகும்

**பித்தச்சுர லக்ஷணம்.**

பித்தச்சுரத்தின் குணங்கேளீர்! பிதற்றுமுழற்று
முடம்பெல்லாம்
மெத்தத்தண்ணீர் தான்வேண்டு மிகவுங்கைக்கும்
நாவுலரும்
முத்தச்சிறுநீர் மலந்தானு மொழிசேர் நயனம்
மஞ்சணிக்கும்
சுத்திப்பார்க்கு முகங்கடுக்குஞ் சொல்லாமிடறும்
புண்ணுமே. (5)

(இ-ள்) பிதற்றல், உடம்பு எரிச்சல், தண்ணீர்த் தாகம், வாயில் கைப்புச்சுவை நாக்கு உலர்ந்து போதல் சிறுநீர் மஞ்சளாக இறங்குதல், மலமும் மஞ்சளாதல்,

கண்களில் மஞ்சள் நிறம், முகத்தில் எ ரி ச் ச ல், வாய் வேக்காளம் முதலான குறிகள் காணும்.

## சிலேத்ம சுர லக்ஷணம்.

மூக்குநீர் வெள்ளோக்காளம் முடுகிடுஞ்சுவாசமுண்டாந்
தேக்கிடும் வாய்நீரூறித் தித்திப்புங் குளிருஞ் செய்யும்
..............ன் வெழுத்திருக்கும் பலபலவுறக்கமுண்டாந்
தீக்குமே நெஞ்செரிக்குஞ் சேற்றுமச்சுரமதாமே. (6)

(இ-ள்) மூக்கிலிருந்து நீர் ஒழுகும் வெண்மை நிறமாக வாந்தியாகும். சுவாசம் அதிகரிக்கும். ஏப்பம் உண்டாகும். வாயில் தித்திப்புச் சுவையுடன் நீர்ஊறும். குளிர் அதிகரிக்கும். அதிகமான நித்திரை, நெஞ்சுக் கரிப்பு முதலான குறிகள் காணில் அது "கபச் சுரமாம்".

## பித்தச்சுரத்தின் வேறு குறிகள்.

நாசிநீர் சிவப்புமுண்டாய் தலைவலி ஞேவு முண்டாய்
கூசவே நழுந்து கொம்பிக் கொடியதோர்
அழத்தியுண்டாய்
வாசமென் குழலாய் தாக மருவிடு நோவுமுண்டாய்
பேசலாம் வெப்பிற்றண்மை பித்தத்தின் சுரமதாமே (7)

(இ-ள்) மூக்கிலிருந்து வடியும் நீர் சிவந்து, தலைவலியுடன் தேகம் அழற்சியுற்று, தாகம முதலானவை ஏற்படில் அதுவும் பித்தசுரக் குறிகளாம்.

## வாதபித்த லக்ஷணம்.

சந்தொடு தலையும் நொந்துதழத்தியேரளைப்புமுண்டாய்
வந்துமேல் வெதுப்பி வாயும் வறண்டுதான்
கருகிப்பின்னை
கந்தரந் தாழ்ந்துறக்கங் காரிருள் திகைப்புண்டாகு
மத்தரத்தனத்தினுளே!வாத பித்தத்தின் வெப்பே (8)

(இ-ள்) மூட்டுகளிலும். தலையிலும்,வலியுடன்உடம்பிலும் எரிச்சலுண்டாகும். வா ய் வறண்டுபோய்க்

கருமை நிறமாகும் தோள்பட்டைகள் கூனும், தூக்கம் இருட்டு முதலான சமயங்களில் திடுக்கிட்டு எழுவான் இது வாத பித்தச்சுர லக்ஷணங்களாகும்

### வாதசன்னி சுர லக்ஷணம்.

உண்டிடவுறக்கமில்லை யுழத்தியே யழத்தி வெப்புக்
கொண்டிடாக் குளிரைப்பண்ணும் கோபிக்கும் கறுக்கு
நாக்கு
அண்டமும் வீங்கிப் பின்னும் அலறியே உடம்பு வீங்கும்
வண்ட மாகுழலினளே!வாதத்தின் சந்திதானே (9)

(இ-ள்) தூக்கம் வராது உடம்பு எரிச்சலும், உளரலும் அதிகரிக்கும். தாங்கமுடியாதபடி குளிருண்டாகும் நாக்குக் கருமை நிறத்தையடையும். விதை வீங்கி, அதன் பிறகு உடம்பு வீங்கும். இது 'வாதசந்தி'' யாகும்.

### திரிதோஷ சுரம்.

விக்கலெடுக்குந் தலைவலிக்கும் வெள்ளோக்காளம்
போக்கிவிக்கும்
மொக்கவலிக்கு முடம்பெல்லாம் உழத்தித்தவிக்கு
முட்டணமாம்
திக்குந் திரைக்கும் நெடுமூச்சாஞ்செவியும்வயறும்தான்
வலிக்கும்
பக்கம்வலிக்கும்திரிதோஷம்பகராய்நீயும்பகராயே (10)

(இ-ள்) விக்கல், தலைவலி, வெண்மை நிறமான வாந்தி,உடம்புவலி உடம்பில் உஷ்ணத்துடன் எறிச்சல், நீண்ட பெருமூச்சு, காதுவலி, வயிற்று வலியும், விலாப் புறம் வலியும் ஏற்படும்.

### வாத பித்த அய்யக் குறிகுணம்.

தித்தித்திருக்கும் நாவுலரும் சிறுக்குங்கடுக்கும் பசியில்லை
முத்திவலிக்குமுகங்கடுக்கு மூக்கில் நீராய்க்கண் சிவக்கும்

சத்தியெடுக்கும் வயிரிழியாத் தும்பம்போல கிடத்திவிடுந்
தெத்தும் பித்த வாத அய்யின் சேருங் குணங்க
ளிவைதானே (11)

(இ-ள்) வாயில் தித்திப்பு நிற்கும் நாக்கு வரண்டு போம். முகம் சிறுத்துவிடும் பசியெடுக்காது முகத்தில் கடுப்புவலிதோன்றும் மூக்கிலிருந்து நீர்வடியும் கண்கள் சிவந்துபோம். அதிகமான வாந்தி உண்டாகும். பேதியாகாமல் கட்டையைப்போல உடலைக் கிடத்திவிடும். இவை வாதபித்த கபக் குறிகளாகும்.

## பித்தவாத அய்யக் குறிகள்.

அசரு முலையும் நடுக்கிவிடும் அடுத்தே வெதுப்பு
மழத்திவிடும்
பசருங் கண்ணுஞ் சிவந்துவரும்பலகால் தண்ணீர் தான்
வேண்டும்
முசறு மவிக்கு முடம்பெல்லா முழுதுமுழத்தி வருங்
கண்டாய்
நசையும் பித்தவாதமய்யின் நவின்ற குணங்க
ளிவைதாமே (12)

(இ-ள்) நடுக்கல் அதிகரிக்கும், எரிச்சலும், அழற்சியும் உண்டாகும். கண்கள் சிவக்கும்,அடிக்கடி தண்ணீர் தாகமுண்டாகும். உடம்பு முழுவதிலும் எரிச்சல் வரும். இது "பித்த வாத அய்யக்" குறிகுணங்களாகும்.

## திரிதோஷக் குறிகள்.

சிக்கும் வயறு தலைவலிக்குஞ் சிறுக இருமல் தானெ
டுக்குங்
கைக்குங் குளிருங் கால் வலிக்குங் கண்ணு முதடுந்தான்
கறுக்குந்
திக்குந் திகைக்கும் பசியெடுக்குஞ் சிவனே சிவனே
யென்று விக்கும்
குக்கி யிருக்குந் திரிதோஷ குணங்களிவை தான்
கண்டாயே. (13)

(இ-ள்) வயிறு வலிக்கும். கொஞ்சமாக இருமல் இருக்கும். வாயில் கசப்புச்சுவைஏற்படும் குளிர் அதிகரிக்கும் கால்வலி ஏற்படும் கண்ணும் உதடும் கறுக்கும். அடிக்கடி திகைப்பு ஏற்படும். பசி அதிகமாயிருக்கும்

### வாத கபக் குறிகள்.

தடிக்குங் கடுக்கு முடம்பெல்லாந் தலையுஞ் சனக்குந்
தாள் வலிக்கு
முடக்குமுடம்புங்குரல்கம்மும்முழத்துறுவுமுள்ளடங்கும்
குடிக்குங் குளிரும் வாய்திறவாச் கூழு மிறங்கா
வெதுப்பிவரும்
விடக்கும் வேர்க்கும் விட்டுவிடும் மேல்மூச்செறியும்
சத்தி வரும்
மடக்கும் வாதமய்ய மென்று அறிவோரறிந்து
கொள்வீரே. (14)

(இ-ள்)உடம்பு கடுக்கும். தலைகனக்கும். முழங்கால் வலியும் ஏற்படும் உடம்பில் முடக்கம் உண்டாகும் நாக்கை அசைக்க இயலாது. குளிர் அதிகமாகும். கூழ் முதலான பதார்த்தங்கள் உட்செல்லாது. எரிச்சல்இருக்கும் வியர்வைஅடிக்கடிவியர்க்கும் மூல்மூச்சும். வாந்தியும் ஏற்படும். இவை "வாதகபக்" குறிகளாகும்.

### சன்னிவாத சுர லக்ஷணம்.

அடித்தகொண்டி போல்கிடக்கு மறிவைக் குலைக்கும்
பேச்சில்லை
கொடிக்கும் சிவனிராதென்று நோக்கிமேலே மூச்செரியு
மிடங்குங் கண்ணு நாவிழுந்து வெற்பராராத் திளைப்பு
மில்லை
தடித்த தசையுங் கால்குளிருஞ் சன்னிவாத சுர
மென்றே. (15)

(இ-ள்) நோயாளி போட்ட இடத்திலேயே கிடப்பான். அறிவிழப்பான். பேச்சு இராது. ஆகாயத்தை

நோக்கியபடி மேல் மூச்சு மெள்ள விடுவான், கண்கள் நாக்கு இவைகள் வீழ்ந்துவிடும் தசை தடிக்கும். காலில் குளிர்ச்சி ஏற்படும், இவை"சன்னிவாத சுரத்தின்" குறி களாம்.

## பித்தவாத சிலேத்ம ஜ்வரக் குறிகள்.

காயமுடம்புதான் தடிக்குங்கண்ணுஞ்சிவக்கும்நாவுலரும்
வாயுங் கறுக்கும் வயிரிழியா மந்தம் பாயிற் கிடவாதுப்
பாயுமுழத்தித்தானதிகம்பத்திவலிக்குமொருபுறத்தைப்
பேயும்பிடித்ததெனவாகும்பித்தவாத சேற்றுமமே (16)

(இ-ள்) உடம்பில் ஜ்வரம் உண்டாகும். தடிப்பு களேற்படும். கண்கள் சிவக்கும். நாக்கு வறண்டுபோம். வாய் கறுக்கும். மலச்சிக்கலுண்டாகும் பாயில் ஒரே இடத்தில் கிடக்காமல் இங்குமங்கும் புரளுவான்.ஒருபக் கமாக வலி இருக்கும், பேய் பிடித்தால் எப்படி தவிப் பானே அப்படி ஆவான் இவை"பித்தவாத சிலேத்மக்" குறிகளாகும்.

## வாதபித்த சிலேத்மக் குறிகள்.

தலையுமுடம்புந் திமிர்ந்து வரும் தன்னைத்தானே.........
.................முன்னே வெதுப்பு மறிவழியு
மலையும் படுக்கைக் கொட்டாது வழுத கண்ணீர் தான்
வடியும்
வளையும் வாத பித்தமுடன் வருசேத் துபமதின் வடி
விதுவே. (17)

(இ-ள்) தலை,உடம்பு இவைகளில் ஒருவித மதமதப்பு உண்டாகும், அறிவு அழியும், படுக்கைக் கொள்ளமாட் டான், கண்ணீர் அடிக்கடி பொசியும். இவை "வாத பித்த சிலேத்மக்" குறிகள்.

### சேத்தும சுரம்.

திகைக்குங் கடுங்குங் கால்கரமுஞ் சிறுகப்பேச்சு மூச்சு
வரும்
பகைக்கும் வருவார் தம்மோடே பசித்தேனென்றும்
பாடு சொல்லும்
வகைக்குமிடந்தா னில்லையென்று வயிறுங் கழியாதினைப்
பெடுக்கும்
முகைக்குந் தலைக்கும் வேர்வெடுக்கு முளறி மிராஞ்
சேத்துமமே. (18)

(இ-ள்) திகைப்புஅதிகமாகும்கை கால்கள்கடுக்கும் கொஞ்சம் பேசினாலும் மேல்மூச்சு வாங்கும். அடுத்து வருபவர்களிடம் பகைத்துக் கொள்வான் பசிஇருக்கிற தென்று கூறமாட்டான் மலம் கழியாது. சுவாசமேற் படும் தலையில் வியர்வையுண்டாகும். இவை "கப" சுரக் குறிகளாம்.

### அதிசாரச்சுர லக்ஷணம்.

அறவே வெதுப்பு முள்ளலைக்கு மடிக்கடிக்குநீர்
தாதாவென்று
முறவேயுடம்பு கிடக்கவொட்டா தூதுங்காத்து
வயிரிழியும்
முறுக்குமுடம்பு தான்கடுக்கு முகமும் வேர்க்குந்
தலைவலிக்குந்
தாறுநாத் துயரு மதிசாரச் சுரமென் றறிவோர்
சாற்றியதே (19)

(இ-ள்) உடம்பினுள் எரிச்சலதிகரிக்கும், அடிக்கடி "தண்ணீர் கொடு" என்று கேட்பான். ஒரு இடத்தில் கிடக்கமாட்டான். வாயுப்பரிந்து மலம் போகும். முகத்தில் வியர்வை, உடம்புவலி, தலைவலி இவைகளும் உண்டாகும். இவை அதிஸார ஜ்வர லக்ஷணங்களாகும்.

### ஆமச்சுர லக்ஷணம்.

ஆமச் சுரத்தின் குணஞ்சொல்லி லதிகமாக வெதுப்பி
விக்குஞ்
சாமந்தோரு கெழுந்திருக்குந் தானே முறக்க
முண்டாகுஞ்

சேமமாக உடம்பிலேக்குஞ் சிக்கப் பண்ணும் பசியில்லே
நாமந்தளருமுடம்போயும்நடுக்கியிருக்குமிதுதானே (20)

(இ-ள்) உடம்பில் அதிகமான எரிச்சல் உண்டாகும் ஒவ்வொரு சாமத்திலும் எழுந்திருப்பான். தூக்கமும் வரும். உடம்பு இளைத்துவிடும். பசி இராது. உடம்பில் ஒய்ச்சலும் அதிகமாகும்.

## அந்திசுர லக்ஷணம்.

அந்தி சுரத்தின் குணஞ்சொல்லி லறவே வெதுப்பு
முடம்பெல்லாம்
மெத்திக் கலங்கு முள்ளளேயும் வெள்ளோக்காளம்
போக்குவிக்கும்
சத்திகெடாது நீர் சிவக்கும் தம்பம்போலேகிடத்திவிடும்
வத்தி வலிக்கும் வயிறிழியா வண்ணதாகு ருணந
தானே. (21)

(இ-ள்) உடம்பில் எரிச்சல் அதிகமாகும். மனம் கலங்கும். வெள்ளோக்காளமெடுக்கும், சிறுநீர் சிவந்து இறங்கும் கட்டைபோல் கிடப்பான். உடம்பில் வலியும் உண்டாகும். மலம் போகாது.

## கபவாத சுர குறிகள்.

சந்தொடுதலேயும் நொந்து தள்ளியே மிளைப்பு முண்டா
யந்தியுமழத்திநீங்காச் சுவாசமு மாகுங்கண்டாய்
நொந்துதான் சந்துதோறுங் குளிரும் நுண்
ணிடையாய் கேளாய்
வந்திடு காசமய்யின் வாதத்தின் சுரமதாமே (22)

(இ-ள்) மூட்டுகள், தலே மூதலா = இடங்களில் வலி-இளைப்பு, சாயங்காலத்தில் தேகச்சூடு, சுவாசம், மூட்டுகளில் சிலிசிலிர்ப்பு, இருமல்முதலானகுறிகளுமுண்டாகும்

## விஷ சுர லக்ஷணம்.

பிந்தந்தான் மொன்..................டாய்
மொத்தலார் குழலினுளே கொன்றென்று
மூன்றிரன்றும்
பத்துடனிருநாலாறும் நின்றுதான் பரந்து காயும்
வித்தக மாகத் தேவர் விஷசுரமென்னலாமே (23)

(இ-ள்) ஒன்று, இரண்டு, மூன்று, பத்து, எட்டு இந்நாட்களில் திரும்பத்திரும்ப வரக்கூடிய ஜ்வரம் விஷ ஜ்வரமாகும்.

## ஆதி சுர லக்ஷணம்.

ஆற்குமன்ப ஞுதிசுரத்துடனடவைக் கேள்மின்
வேற்கும் வெதுப்பிங் கண்சிவக்கும் வெந்நீர் வேண்டும்
பாலன்னும்
பார்க்கப் பயமா யிருக்குதென்றும் பலகாற் கண்டகவி
சீர்க்கும் வயறு சிக்குவிக்கும் தெருவிற் [பாடுஞ்
புறப்பட்டோடிடுமே (24)

(இ-ள்) உடம்பில் வியர்வை உண்டாகும், கண்கள் சிவப்பு,வெந்நீர், பால் இவைகளில் விருப்பம் உண்டாகும். அடிக்கடி பயப்படுவான். தொண்டையில் சப்தமுண்டாகும்: மலச்சிக்கல் அதிகரிக்கும்.

## சுரம் அதிகரிக்கக் காரணம்.

மெய்யில்வந்த யினஞ்சுரப்தான் விட்டேவிட்டு
வெதுப்புவிக்குங்
கையில் வெதுப்புங் கால்வெதுப்புங் கன்னங் காலில்
கனக்கவைக்கும்
உய்யுமுழலே வந்தவரை ஓடிக் கட்டிக் கொள்ளுமது
அய்யோ பிழையேன் காணென்று மதிகமாகுஞ்
சுரந்தானே. (25)

(இ-ள்) ஆரம்ப நிலையிலுள்ள சுரம் விட்டுவிட்டே வரும். காலில் கனமேற்படும். எரிச்சலும் உண்டாகும். பின்னர்சுரம் அதிகரிக்கும். நோயாளி "ஐயோ!பிழைக்க மாட்டேன்" என்று அடிக்கடி சொல்வான்.

### சுரவகைகளில் லங்கனக்கிரமம்.

வாதமான சுரமாகில் மருவும் பட்டினி மூன்றுரும்
சூது பித்தச் சுரமாகில் ஒன்றேயாகு முபவாசம்
சீதமான சுரமாகில் செய்ய நாளே யேழாகு
மாதே சுரத்தின் குத்தம் வர வருந்தவேண்டாம் மருந்து
கொண்டே. (26)

(இ-ள்) வாதசுரத்தில்3 நாட்கள்பட்டினிபோடவும். பித்த சுரத்தில் ஒரு நாள் உபவாஸம் இருந்தால் போதும். குளிர் சுரத்தில்7 நாட்கள் உபவாஸம் இருக்க வேண்டும். ஆகவே சுரத்தில் மருந்துகள் கொடுத்துக் குற்றங்களை உண்டாக்கவேண்டாம்.

### லங்கனம் செய்யக்கூடாதவர்.

தொக்கமுமாய் மூத்தோர் தூரத்திற் சுமந்தோர் மத்த
மிக்க பாரிடித்தோர் பின்னை விஷமுண்டோ ரய்ய
மேற்றோ
ரக்கெனக் காமத்தையா லடியுண்டோர் சிறியோர்
ரிக்கண மொழியாய் கேளாயிவர்க்கு [மூத்தோ
லங்கனமாகாதே. (27)

(இ-ள்) வயது முதிர்ந்தோர்,வழிநடந்தோர், பாரத்தைச் சுமந்தவர்,விஷம்உண்டவர், ஸ்திரிபோகம் செய்தவர்,சிறு குழந்தைகள், இவர்களுக்கு லங்கனம் உதவாது.

### லங்கனத்திற்காகாதவர்.

பாலகர் கிழவர் தாது பாவிய நட்டர் கண்ணில்
சீலநோ யானோர் மத்தச் சயங்கொண்டோர் கிராணி
யாளர்

சாலமுன் வழிநடந்தோர் தாங்குகெர்ப்பிணிசேர்மாதர்
காலமா யிவர்கட்கெல்லாங்கடியலெங்கனமாகாதே(28)

(இ-ள்) குழந்தைகள், கிழவர், தாதுநஷ்டமானவர் கண்ணோயுள்ளவர், க்ஷயரோகி, கிராணியுள்ளவர், வழிப் பிரயாணம்செய்தவர், கெர்ப்பிணிமுதலானவர்களுக்கும் லங்கனம் (உபவாஸம்) உதவாது.

**கஷாயங்கள் (வாதசுரத்திற்குச்சித்தாமல்லி கஷாயம்)**

மிக்கசித்த மல்லி பேர்மல்லி முள்ளி
வில்வங் கண்டகாலி பாதிரித் தோலோடு
தக்க நிலக்குமிழ் முத்தம் நிலவேம்போடு
தருவாகைத் திப்பிலியுங் கோட்டமல்லால்
சுக்குமிகு நெருஞ்சிலோடு தோடை சீந்தில்
சுகமான பற்படகஞ் சரியாய்க் கொண்டு
பக்குவமா யிருநாழி நீரெட்டொன்ருய்
பருகில் வெகு வாதசுரம் பரந்துபோமே. (29)

| | |
|---|---|
| (இ-ள்) சிற்றுமல்லி | பேராமல்லி |
| முள்ளி | வில்வம் |
| கண்டங்கத்திரிவேர் | பாதிரித்தோல் |
| நிலக்குமிழ் | கோரைக்கிழங்கு |
| நிலவேம்பு | வாகை |
| திப்பிலி | கோஷ்டம் |
| சுக்கு | நெருஞ்சில் |
| ஆடாதோடை | சீந்தில்கொடி |
| பற்பாடகம் | |

இவைகளை வகைக்குச் சரியெடையெடுத்து (1பலம்) ஒன் றிரண்டாக விடித்துச் சுத்த ஜலம் 1 படி விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகும்வரை வற்றவைத்து வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை பருக வாத சுரம் நீங்கும்.

## சுரங்களுக்கு முன்னையாதிக் கஷாயம்.

முன்னைபாதிரி முள்ளி முதிர்கண்டங் காலி கோரை
பின்னை தூதளை சீந்தில் பெருமரப் பட்டை சித்தமட்டி
சொன்னகாஞ் சோரித் தோடை துளசிவேப் பலகு
ரோணி
நன்னிலக் குமிழ் புடோலும் நல்லவா லுளுவை கூட்டே.
கூட்டிவெட் பாலைவித்து கோட்டம் நற் கொத்தமல்லி
வாட்டிய வரத்தையோடு மதுரமுமேலந்தானு
நாட்டிய திரிகடுகோர் நற்றிரி பலையுங் கூட்டி
தீட்டிய நீரெட்டொன்றுய்ச் செய்திடச் சுரங்கள்போமே

| | |
|---|---|
| (இ-ள்) முன்னைவேர் | பாதிரிவேர் |
| முள்ளி | கண்டங்கத்திரிவேர் |
| கோரைங்கிழங்கு | புன்னைவேர் |
| தூதுவேளைவேர் | சீந்தில்கொடி |
| பெருமரப்பட்டை | சிற்றுமுட்டிவேர் |
| காஞ்சொறிவேர் | ஆடாதோடைவேர் |
| துளசிவேர் | வேப்பம் ஈர்க்கு |
| கடுகரோகிணி* | நிலக்குமிழ் |
| பேய்ப்புடல் | வாலுளுவெயரிசி |
| வெட்பாலைவித்து | கோஷ்டம் |
| கொத்தமல்லி விதை | சிற்றரத்தை |
| அதிமதுரம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| நெல்லிவற்றல் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | |

---

குறிப்பு:- *பொதுவாக இச்சரக்குகளை இடித்துத் தூளாகவே வைத்துக்கொண்டு. முதல் நாள் இரவு ஷிசூரணத்தில் ஒரு பெரிய மேஜைக்கரண்டியளவு எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு 1½ சேர் ஜலம் விட்டுஅப்படியே ஊறவைக்கவும் மறுநாள் காலை இதை அடுப்பின் மேலேற்றி 2 அவின்ஸாக வற்றவைத்துக் கொண்டு வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் 2 வேளை காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்து ஒன்றிரண்டாக
விடித்து ஒருபாத்திரத்திலிட்டு8மடங்குசுத்தஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றிஎட்டிலொன்றுக்கி இறக்கிவடிகட்டி உட்கொண்டால் சுரங்கள் தீரும்.

**சோபம், சுரத்திற்குப்பார்ங்கியாதி கஷாயம்.**

சிறுதேக்கு கோரையொடு கஞ்சாங் கோரை
சேர்முதியார் கூந்தல்சிறு குறட்டைசோற்றி
உறுசிறுகாஞ் சோரிமுள்ளி சாரணத்தி
னுற்றநீர் முள்ளிமட்டி ரெண்டு முன்னு
மறுமுக்கா வேளை வெள்ளை வக்கணுவும்
வளரும்பா வட்டையும்கோ டமுதவல்லி
குருமுருவிலி ஆணு வேர் நன்னுரி
கொத்தமல் லிசுக்கு முத்தங்கூட்டே. (32)

முத்தமால் கரந்தியொடு கண்டங்காலி
முதர்படகம் வசம்பு முதல் முந்நீர்விட்டுச்
சுத்தமாய்க் காய்ச்சியதில் கடுக்காய் ரோணி
சுகமான சீரகமுந் துலங்கக் கொண்டு
மத்தநாள் முதலாக வரைத்துக் கொள்ள
மானேயிப் புவியில்வாழ் மனிதர்க்கெல்லாம்
சித்தமாய் சுரங்கள் வெகு சோபவீக்கந்
தீராத ரோகமெல்லாந் தீர்ந்துபோமே. (33)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சிறு தேக்கு | கோரைக்கிழங்கு |
| | காஞ்சாங்கோரை | முதியார் கூந்தல் |
| | சிறுகுறட்டைவேர் | பாற்சோத்திவேர் |
| | சிறுகாஞ்சோறிவேர் | முள்ளி |
| | சாரணைவேர் | நீர்முள்ளி |
| | முக்காவேளை வேர் | வெள்ளைவக்கணு வேர் |
| | பாவட்டை வேர் | சீந்தில் கொடி |
| | உருவிலி வேர் | ஆணு வேர் |

| | |
|---|---|
| நன்னாரிவேர் | கொத்தமல்லிவிதை |
| சுக்கு | கண்டங்கத்திரிவேர் |
| விஷ்ணுக்ராந்தி | வசம்பு |
| பற்பாடகம் | |

இவைகளை வகைக்கு 1 பலம்வீதமெடுத்துக் காயவைத்து ஒன்றிரண்டாக்கிக்கல்லுரலிலிட்டு இடித்துக்கொள்ளவும் இந்தச் சூரணம்1 பலத்துடன் 8மடங்கு சுத்த ஜலம் விட்டுறவைத்து எட்டிலொன்றாகக்காய்ச்சி இறக்கிஅதனுடன் கடுகரோகிணி-சீரகம் இவ்விரண்டும் (வகைக்கு 1 வராகனெடை) எடுத்துக் கஷாயம் விட்டரைத்துக் கஷாயத்துடன் குழப்பி உட்கொள்ளவும்.

தீரும் நோய்கள் :— சுரங்கள், சோபம், வீக்கம் முதலியவை.

### தோஷ சுரத்திற்குச் சித்த மட்டிக் கஷாயம்.

சித்தமட்டி பசும்பயறு சிறந்தபற் பாடகம் வில்லையோடு
கொத்தமல்லி வகைசமனாய்க் குறுகநீர்
விட்டெட்டொன்றாய்
மெத்தப்பருகப் பழவரிசி மெய்யாய்க் காய்ச்சிக்கொள்ள
நித்தத்துயராம் தோஷசுரம் நிலைவிட்டோடிப்
போய்விடுமே. (34)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சித்தாமுட்டி வேர் | வில்வ ஓடு |
| | பச்சைப்பயறு | கொத்தமல்லி விதை |
| | பற்பாடகம் | |

இவைகளைச் சரி எடுத்துத் தூள்செய்து எட்டு மடங்கு சுத்தஜலம் விட்டுஎட்டிலொன்றாக்கி வடிகட்டிச்சாப்பிட எவ்வகைத் தோஷ ஜ்வரங்களும் தீரும்.

### ஸகல சுரங்களுக்கும் சிறுகாஞ்சோரிக் கஷாயம்.

சிறுகாஞ்சோரி குருந்தோட்டி சிறந்தசுக்குச் சீந்திலொடு
மறுவாந்தோடை வேப்பீர்க்கு வளரும்படகஞ்
சமன்கொண்டு

தறுகாய்நீர்விட் டெட்டொன்றாய் தானேமானே
குடிப்பீராய்
குறுகா தோடுஞ் சுரங்கள் வெகு கோடாகோடி
யோடிடுமே. (35)

(இ-ள்) சிறுகாஞ்சோரிவேர் ஆடாதோடைவேர்
குருந்தோட்டிவேர் வேப்பீர்க்கு
சுக்கு பர்ப்பாடகம்.
சீந்தில்கொடி

இவைகளைச் சரியெடையெடுத்து இடித்து,ஒரு பாத்திரத்தில் விட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேல் ஏற்றி எட்டிலொன்றாக்கி வடிக்கட்டி உட்கொள்ள ஸகல வித ஜ்வரங்களும் தீரும்.

### சந்நிபாத ஜ்வரங்களுக்கும் சுக்காதிக் கஷாயம்.

ஏத்தசுக்கோ டரத்தையெருக்குவேர்
நாற்ற நொச்சிக் கொழுந்து நாற்றமுஞ்
சேற்ற நீருழக் காய்தினங் கொள்
மாற்ற லா சன்னி வாதசு ரங்களே. (36)

(இ-ள்) சுக்கு சித்தரத்தை
எருக்கவேர் நொச்சிக்கொழுந்து

இவைகளை இடித்து8மடங்கு தண்ணீர் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி (ஒரு உழக்கு) தினந்தோறும் பருகவும். சந்நிபாத சுரங்கள் தீரும்.

### வாந்தி, ஜ்வரத்திற்கு வில்வாதி கஷாயம்.

வில்வவேர் நன்னாரி விளா நன்னாரியும்
புல்லுவேர் பயருடன் பொரியும் வெல்லமும்
நல்ல நீர் குறுணியும் நாழி யாக்கியே
சொல்ல நீர் வாந்தியுஞ் சுரமுஞ் சோருமே. (37)

(இ-ள்) வில்வவேர் நன்னாரிவேர்
விளாவேர் மாகாளிவேர்
பச்சை பயறு நெற்பொரி

இச்சரக்குகளைச் சமனெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, எட்டு மடங்கு தண்ணீர்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கி, வடிக்கட்டி வெல்லம் சேர்த்துப் பருகவும். வாந்தி, ஜ்வரம் இவை தீரும்.

பாதிரியும் பெருங் குமிழு முன்னை முத்தம்
பற்படகஞ் சிறுதேக்கு கண்டகாலி
ஓதரிய கொத்தமல்லி கடுக்காய் சுக்கு
ஓங்குதா மரைவளையம் பேராமல்லி
நீதிசெறி வழுதலையும் வில்வவேரு
நெருஞ்சில்வேர் சமனுகக் காய்ச்சிக்கொள்ள
சீதசுரம் வாதசன்னி போமென்றீசன்
தெளிந்தவர் நூ லுணர்ந்ததிது
திண்ணந்தானே. (38)

(இ-ள்) பாதிரி பெருங்குமிழ்வேர்
முன்னைவேர் கோரைக்கிழங்கு
பற்பாடகம் சிறுதேக்கு
கண்டங்கத்திரி கொத்தமல்லி விதை
கடுக்காய்த்தோல் சுக்கு
தாமரையிலையின் உட்சுருள் பேராமல்லி
கத்திரிவேர் வில்வவேர்
நெருஞ்சில் வேர்

இவைகளைச்சமனெடுத்து இடித்து வைத்துக்கொள்ளவும் இதில் ஒரு பெரியஸ்பூனளவு எடுத்து (1சேர்) ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கிப் பருகிவரச்சீத ஜ்வரம், வாதசன்னி, இவ்விரண்டும் தீரும்.

**திரிதோஷ ஜ்வரத்திற்குப் பார்ங்கியாதி கஷாயம்.**

தென்சிறு தேக்கு நிலவேம்பு திப்பிலிகோட்ட முத்தக்
காசு
மான்சிறு கஞ்சாபற்பாடகம் பருத்தசீந்தில் அகத்திவேர்
எந்தியிருநாழி நீர்விட்டுயெட்டொன்ருக்கி யிறக்கியபின்
மோந்து குடித்துக் குணம்பாரீர் மூன்று சுரமும்
வாராதே. (39)

(இ-ள்) சிறுதேக்கு நிலவேம்பு
திப்பிலி கோஷ்டம்
கோரைக்கிழங்கு கஞ்சா
பற்பாடகம் சீந்தில்கொடி
அகத்திவேர்

இவைகளை வகைக்கு 1 பலம்வீதம் எடுத்து இடித்து2 படி சுத்தஜலம்விட்டுஅடுப்பின்மேலேற்றிஎட்டிலொன்ருக்கி வடிக்கட்டிஉட்கொள்ளத்திரிதோஷத்திஞலும்ஏற்பட்ட சுரங்கள் தீரும்.

**கபசுரம், வாதசுரத்திற்குத் தூதுவளையாதி கஷாயம்.**

தூதுவேளை யின்புர லாடாதோடை
சொன்னசங்கின் வேர் சுக்கு வீழிகூட்டி
மாதுவளர் திப்பிலியும் பற்பாடகம்
வழுதலையு காலியுடன் சமனே கூட்டி
யீதனீர் நான்கு மெட்டொன்ருக்கி
இதனுடனே தேன் கலந்து இசைந்தேகொள்ள
தீதுபுரி சுரமய்யின் சுரம் வாதத்தின்
சேர்ந்தசுர மிவையனைத்துஞ் சேராதென்னே.
(40)

(இ-ள்) தூதுவேளை இம்புராவேர்
ஆடாதோடை சங்கம்வேர்
சுக்கு வீழிவேர்
திப்பிலி பற்பாடகம்
கத்திரிவேர்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, 4 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கி வடிக்கட்டித் தேன் கலந்து உட்கொள்ளவும்.

கபஜ்வரம், வாதஜ்வரம், இவைகள் தீரும்.

**திரிதோஷ ஜ்வரத்திற்கு முஸ்தாதிக் கஷாயம்.**

பற்றுதென்ன முத்தக் காசு பறிக்குங் கொன்னைத்
தோல் சுக்கு
முற்றா முதிரா நீள்கடுக்காய் மோதும் ரோகணிச்
சமூலமும்
செற்று தோரொன் றிருகழிஞ்சு சேரக் கூட்டி
யெட்டொன்றாய்க்
குற்றா திப்பிலி மேற்றூவிக் குடியீர் திரிசுரந்
தோன்றாதே. (41)

(இ-ள்) கோரைக்கிழங்கு கொன்னைப்பட்டை
சுக்கு கடுக்காய்
கடுகரோகிணி

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு (2½ வராகனெடை) வீத மெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் 8 மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கிப் பருகவும்.

முத்தோஷங்களினாலுமேற்பட்ட ஜ்வரங்கள் தீரும்

**திரிதோஷ ஜ்வரத்திற்குக் கொத்தான் கஷாயம்.**

நல்லகொத்தான் கிராம்பறுகு நாணப்புல்லு
நிலவேம்பு காரை
யல்லல்படாதே ஆடாதோடை யானதெல்லாம்
வெண்குன்றிவேர்
மொல்லைப்படாதே தான் காய்ச்சி முசியா
தெடுத்துக்குடிப்பீராய்த்
தொல்லைப்படவே வென்றாங்காண் தோன்றாந்
திரிசுரந்தோன்றாதே. (42)

(இ-ள்) கொத்தான் கிராம்பு
அறுகு நாணல்புல்
நிலவேம்பு காரை
ஆடாதோடை வெண்குன்றிவேர்

இவைகளைச் சமமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்தில் விட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டுஅடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கி இறக்கி வடிகட்டிக்கொண்டு உட்கொள்ளவும். திரிதோஷ ஜ்வரங்களும் தீரும்.

## பித்த ஜ்வரத்திற்கு விரேசனம்.

இந்தப் பித்தஜ்வரந்தனக்கு யிரண்டொருநாள்
பட்டினியாய்
அந்தப்பித்த முடையார்க்கு வலமேகழிய வகைகேளாய்
அந்தப்பயறு கடுக்காயு மாருங்கொத்த மல்லி சுக்கு
முந்தக் காய்ச்சிக் கொடுத்திடுநீ முறியார்
கழியுமொகுமொகென்றே. (43)

(இ-ள்) பித்த ஜ்வரத்தில் முதல் 2 நாட்கள் உபவாஸம் இருக்கவும். அவர்களுக்குப் பேதிக்கு ஆக வேண்டுமெனில்,

பயறு கடுக்காய்த்தோல்
கொத்தமல்லி விதை சுக்கு

இவைகளைச் சமனெடுத்து இடித்து வைத்துக் கொண்டு எட்டு மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கி வடிகட்டி உட்கொள்ளவும் நன்ருக வயிறு பேதியாகும்.

## பித்த ஜ்வரத்திற்கு "கோரைக்கிழங்காதிக் கஷாயம்"

முத்தக்காசு பற்படாக முந்திரி கைப்பழம் வேர்க்கொம்பு
ஒத்தக் கடுக்காய் கடுகரோகணி ஒள்ளிக் கொன்றைப்
பழங்கூட்டி

கற்றைக் குழலே யெட்டொன்ருய்க் கண்டுசர்க்க ரையி
லருந்த
சித்தத்துடனே பித்தசுரந் தீருங்காணு
திண்ணமிதே. (44)

(இ-ள்) கோரைக் கிழங்கு பற்பாடகம்
திராக்ஷைப்பழம் சுக்கு
கடுக்காய்த்தோல் கடுகரோகிணி
சரக்கொன்னைப்பழம்

இவைகளைச் சமனெடையெடுத்து இடித்துஒருபாத்திரத்திலிட்டு எட்டு மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கிக் கற்கண்டைச் சேர்த்து உட்கொள்ளப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

**மாந்த ஜ்வரத்திற்குக் "குடுத்யாதி கஷாயம்"**

சீந்தித் தண்டுங் கடுக்காயுஞ் சிவதை வேருங்
களிப்பாக்குங்
காய்ந்த சுக்கு ரோகணியுங் கலந்த வெள்வெங்
காயமுமாய்
சேர்ந்த சமோத பொடுதலைவே லிப்பருத்தி சிறு
நிலவாகை வேருடனே
ஏந்து தனத்தா ரிவையெல்லா யெட்டொன்ருகக்
கொடுப்பீராய்
மாந்த மான சுரம் மாறி வயிறுங்கழியும் வனமயிலே(45)

(இ-ள்) சீந்தில் கொடி கடுக்காய்த்தோல்
சுத்திசெய்த சிவதைவேர் களிப்பாக்கு
சுக்கு கடுகரோகிணி
வெள்ளை வெங்காயம் ஓமம்
பொடுதலை வேலிப்பருத்தி
நிலவாகைவேர்

இவைகளைச் சமனெடை யெடுத்து, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கி வடிக்கட்டி உட்கொள்ளவும்.

மாந்த ஜ்வரங்கள் தீர்ந்து, வயிறுபேதியும் ஆகும்.

### சித்தப் பிரமையுடன் கூடிய பித்த சுரத்திற்குக் ''குடுச்யாதி கஷாயம்''

புகலுஞ்சீந்தில் பற்பாடகம் பூசு சந்தனமிலாமிச்சம்
திகழும் வேர்க்கொம் பிருவேலி சித்தமட்டியுடன் காசு
தகவே யோரொன்றோர்கழஞ்சு தண்ணீரிரண்டு நாழிவிட்டு
சுகமாய்க் காய்ச்சிக் குடிப்பீராய் சித்தபிரமையுடன் பிறந்து
தேனேமானே செலக்கண்ணுய் பித்தத்துடனே
வந்தசுரம் பேசாதோடிப் போய்விடுமே. (46)

(இ-ள்)

| | |
|---|---|
| சீந்தில்கொடி | சந்தனத்தூள் |
| பற்பாடகம் | இலாமிச்சம் வேர் |
| சுக்கு | வெட்டிவேர் |
| சித்தாமுட்டி வேர் | கோரைக்கிழங்கு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்து வடிக்கட்டி உட்கொள்ளவும். சித்தபிரமையுடன் கூடிய பித்த ஜ்வரங்கள் தீரும்.

### பித்த சுரத்திற்குக் ''கதலி ரஸாயனம்''

இடிந்த அத்திப்பட்டையுட னிசையுங்கதலிப்பழம் பிசைந்து
வடிந்த நீருநெல்லிக்காய் வருந்துஞ்சாறுதான் கூட்டி
பிடித்து வறுத்த சீரகமும் பிரியமுடன்சர்க் கரைகலந்து
குடித்த பொழுதே பித்தசுர மணுகாதோடிப் போய்விடுமே.

(இ-ள்) நல்ல வாழைப்பழங்களைக் கொண்டுவந்து (பேயன்) அதனுடன் அத்திப்பட்டைச் சூரணத்தை இட்டுப் பிசைந்து வைக்கவும். அதிலிருந்து சாறு இறங்கும். அதற்குச்சரி அளவுநெல்லிக்காயையிடித்துப் பிழிந்த சாற்றையுஞ் சேர்த்து அதனுடன் வறுத்த சீரகச் சூரணத்தையிட்டு சர்க்கரையிட்டு உட்கொள்ளவும். பித்த ஜ்வரங்கள் உடனே தீரும்.

## சிலேத்ம ஜ்வரத்திற்கு வாஸாதி கஷாயம்.

ஆடாதோடை நிலவேம்பு அடருங்கையாந் தகரைசங்கு
தோடாவேரும் பொரும்பில் சுக்கு சேர்ந்தமிளகுஞ்
சமன்கொண்டு
வாடாநீர் வளர்த் தெட்டொன்ருய் வருந்தத்
தேனுமுடன் கூட்டி
போடாநீரீற் கொள்வீராய் போற்றுஞ்
சேத்துமசுரம் போமே. (48)

(இ–ள்) ஆடாதோடைவேர் நிலவேம்பு
கையாந்தகரை சங்கம் வேர்
பொரும்பில் சுக்கு
மிளகு

இவைகளைச் சமனெடுத்து ஒன்றிரண்டாக விடித்து 8மடங்கு சுத்த ஜலம்விட்டுஅடுப்பின்மேலேற்றி எட்டில் ஒன்ருக்கி வடிக்கட்டிக்கொண்டு சிறிது தேன் கூட்டி உட்கொள்ளவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## கபம், வயிற்று நோய்களுக்கு நிலக்குமிழ் கடாயம்

நிலக்குமிழ்வேர் சிறுதேக்கு தேவதாரம்
நிலவேம்பு பற்பாடகம் கடுக்காய் சுக்கு
துலக்கமிகு முத்தமொடு வசம்புநேராய்
சொன்ன நீ ரிருநாழி சுவறக் காய்ச்சி
கலக்கமில்லா தேன் கூட்டிக் கழந்துழக்கு
மருந்து கொள்ளக் கொடிய வய்யம்
விலக்கறிய வயிற்றுநோயுளைப்புத்தீரும்
வேதமதுமுனியுரைத்தான்விளம்புங்காலே(49)

(இ–ள்) நிலக்குமிழ்வேர் சிறுதேக்கு
தேவதாரு நிலவேம்பு
பற்பாடகம் கடுக்காய்த்தோல்
சுக்கு கோரைக்கிழங்கு
வசம்பு

இவைகளை வகைக்கு (1கழஞ்சு வீதம்)எடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகு மட்டும் எரித்து வடிக்கட்டிக்கொண்டு தேன் சிறிதுவிட்டு அருந்தவும்.

கபம்,வயிற்று நோய்கள்,வயிற்றுவலி முதலானவை தீரும்.

### குளிருக்கு ''வாஸாதி கஷாயம்''

ஆடாதோடை நன்ஞரி யகலுஞ் சிறுவழு தலையுடனே
பாடா திலங்கும்பற்பாடகம்பங்கம்பாளைவேர்க்கொம்பு
தேடாசீந்தில் சந்தணமுஞ் செப்பவறியதிவையினைத்துங்
கூடா நீர்விட் டுழக்காக்கிக் குடித்தார் குளிரைக்
கெடுத்தாரே. (50)

(இ-ள்) ஆடாதோடைவேர் நன்ஞரிவேர்
சிறுகத்திரிவேர் பற்பாடகம்
ஆடுதீண்டாப்பாளை சமூலம் சுக்கு
சீந்தில்கொடி சந்தணத்தூள்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$வராகனெடை எடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு. அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் வற்றவைத்து உட்கொள்ளவும். குளிர் தீரும்.

### குளிர்ஜ்வரத்திற்குச் ''சிறுகாஞ்சோறியாதி கஷாயம்''

சிறுகாஞ்சோரி பாவட்டை சிறுவழுதலை நன்ஞரி
கறிகாஞ்சாறடைவேர்க்கொம்புகண்டங்காலிகாவளையுந்
தறுகாசீந்தில் பற்படகந் தண்ணீரிரண்டு நாழிவிட்டுக்
குறுகக் காய்ச்சிக் குடிப்பீராய் குளிருஞ்
சுரமும் வராதே (51)

| | |
|---|---|
| (இ-ள்) சிறுகாஞ்சோறிவேர் | பாவட்டை |
| சிறு கத்திரிவேர் | நன்னரிவேர் |
| சாறடைவேர் | சுக்கு |
| கண்டங்கத்திரிவேர் | காய்வேளைவேர் |
| சீந்தில்கொடி | பற்பாடகம் |

இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு வீதமெடுத்துஇடித்து, தண்ணீர் 2படி (சின்னப்படி 1) விட்டு ஒரு உழக்காகு மட்டும் வற்றவைத்து உட்கொள்ளவும். குளிர் ஜ்வரம் தீரும்.

## குளிர் ஜ்வரத்திற்குப் "படோலாதி கஷாயம்"

இப்பனர் தங்கள்ரோணு பிடப்புடோல முத்தக்காசு
பற்படா சீந்தில் குப்பை பையவே நய்ய வந்து
அப்பினர் தேனோடு மளர் வினரென்னக் கேட்டு
வெப்பினர் குளிருநாரும் வினவினர் விடை
கொண்டாரே. (52)

| | |
|---|---|
| (இ-ள்) பேய்பிடல் | கோரைக்கிழங்கு |
| பற்பாடகம் | சீந்தில்கொடி |
| குப்பைமேனி | |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்து 8 மடங்கு சுத்தஜலம்விட்டுஎட்டிலொன்றாக்கி வடிகட்டித் தேன் கூட்டி உட்கொள்ளக் குளிர் ஜ்வரம் தீரும்

## வெதுப்புக் (காங்கைக்)குக் "குடுச்யாதி கஷாயம்"

சீந்தில்வேலி விலாமிச்சு சிறுகாஞ்சோறி பற்படக
மாய்ந்த முத்தங் கொத்தமல்லி யடர்சரக் குள்ளி
நிலவேம்பு
சேந்து பத்துங் குடிநீராய் சிறுகக் காய்ச்சிக்குடிப்பீராய்
கூந்தல் வெதுப்பைக் கெடுத்துவிடும் விடாதாகில்
விதியின் கொள்கையிதே. (53)

(இ-ள்) சீந்தில்கொடி விளாமிச்சம் வேர்
சிறுகாஞ்சோறிவேர் பற்பாடகம்
கோரைக்கிழங்கு கொத்தமல்லி
பூண்டு நிலவேம்பு
கொடிவேலிவேர்

இச்சரக்குகளை வகைக்கு 1வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக விடித்துத் தண்ணீர் 8 மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, 8ல் ஒன்றான பின் இதை இறக்கி வடிக்கட்டிக் கொண்டு அருந்தவும்

காங்கைகள் தீரும். இந்த கஷாயத்தில் நீங்கா விட்டால் அந்நோய் எம்மருந்தினாலும் தீராதெனவறிந்து கொள்ளவும்.

## வாந்தி, ஜ்வரம் முதலியவைகளுக்கு ''லாஜாதி கஷாயம்''

நெற்பொரியும் பசும்பயரும் வில்வமுல்லை
நேரியசீ ரேலமுட னெல்லிமுள்ளி
முற்படவே யிளநீரி லொன்றாய்க் காய்ச்சி
முதிர்நீரை இருத்தருந்த முதிர்த்துபோன
சொற்பெரிய சத்திகுன்ம சுரத்திற்சத்தி
துயரமுடன் கிறுகிறுப்பு உழலைமூச்சு
நற்பெரிய முனியுரைத்த படியே நானும்
நாடாதென் றேயுரைத்தேன் நலமிதாமே (54)

(இ-ள்) நெற்பொரி பச்சைப்பயறு
வில்வவேர் முல்லைவேர்
ஏலக்காய் நெல்லிவற்றல்

இவைகளைச் சமனெடுத்து இளநீர் விட்டு அடுப்பின் மேல்ஏற்றி எரித்து வடிகட்டி உட்கொள்ளவும்.

வாந்தியுடன் கூடிய குன்மம், வாந்தியுடன் கூடிய ஜ்வரம், கிறுகிறுப்பு, உழலை, மூச்சுவாங்கல் முதலானவை தீரும்.

## தாபஜ்வரத்திற்கு "ஏலாதி கஷாயம்"

ஏலமதுரஞ்செங்கழுநீர்கோட்டமிலாமிச்சிருவேலி சுக்கு
மூலமிகுசந்தனம்நன் னாரிமுத்த முதிபடகஞ்
சமன்கூட்டி முந்நீர்விட்டுக்
கோலமுட னெட்டொன்றாய்க் காய்ச்சிப்பின்னை
குடித்திடவே பத்தமுதல் குறுவெற்போடு
காலமிகு தாபசுரந் தீருமென்று கருணையுடன்
முனியுரைத்தார் காணலாமே (55)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | ஏலக்காய் | அதிமதுரம் |
| | செங்கழுநீர்க்கிழங்கு | கோஷ்டம் |
| | விலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| | சுக்கு | சந்தனத்தூள் |
| | நன்னாரிவேர் | கோரைக்கிழங்கு |
| | பற்பாடகம் | |

இவைகளை வகைக்கு $\frac{1}{4}$ வராகனெடையெடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகு மட்டும் வற்றவைத்து உட்கொள்ளத் தாபஜ்வரங்கள் தீரும்.

## கப, தாபஜ்வரங்களுக்குத் தூதுவளையாதி கஷாயம்.

தூதளைகீழ்காநெல்லி சங்கின் வேர் சுக்குத் தோடை
பேதநற்சிறுதேக்கோடு பெருத்ததிப் பிலியும் பின்னை
நாதமாஞ் செவ்வியத்தோல் நல்லநீர் நாலொன்றாக்கில்
வேதமா மய்யின் தாபச் சுரங்களும் விட்டுப்போமே (56)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | தூதுவளைவேர் | கீழாநெல்லிவேர் |
| | சங்கம்வேர் | சுக்கு |
| | ஆடாதோடைவேர் | சிறுதேக்கு |

யானைத்திப்பிலி செவ்வியம்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி உட்கொள்ளவும் கபஜ்வரம், தாபஜ்வரம் முதலானவைகள் தீரும்.

## அதிஸார ஜ்வரத்திற்கு "மாதளம்பிஞ்சாதிக் கஷாயம்".

மூளைமா தளம்பிஞ்சதிவிடயம் முத்தக்காசு பெருமரத்
தோல்
தகைசோ சுக்கு விளாங்காயின் சதையோ ரொன்று
கழஞ்சு கொண்டு
வகையாய்க் கட்டியிரு நாழி யுழக்காய்க் காய்ச்சி
வைப்பீராய்
பகையாய் வந்த வதிசாரத் சுரத்தைப் போக்கும்
பாரீரே. (57)

| (இ-ள்) | | |
|---|---|---|
| | மாதளம்பிஞ்சு | அதிவிடயம் |
| | கோரைக்கிழங்கு | பெருமரத்தோல் |
| | சுக்கு | விளாம்பழச்சதை |

இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு ( $1\frac{1}{4}$ வராகனெடை ) வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக் காகும்வரை யெரித்து வடிக்கட்டி உட்கொள்ளவும். அதிஸாரத்தோடு கூடிய ஜ்வரங்கள் தீரும்.

## அதிஸார ஜ்வரத்திற்கு நாகல்கொழுந்து கஷாயம்.

மாவடம்புகழ்நாவக்கொழுந்துபுளியரரைவணக்குறிஞ்சி
நுணாவிலை கருவாழைப்பூவும்
தாவகைக்கோர் கழஞ்சு யிருநாழி நீரால் தகைமைபெற
உழக்காக்கித் தன் தொடித்துடனே
பூவில்வரு திப்பிலியும் வெங்காரங் கூட்டி பொருந்த
நீர் மேற்பொடியும் புகழவே கொள்ளாய்
நாவில்வரு தாபமொடு அதிசார சுரமும் நாலுநாள்
மாறலொடு நாசமாய் விடுமே. (58)

(இ-ள்) நாவக்கொழுந்து, புளி நுணுவிலை
புளிவண்ணக்குறிஞ்சி கருவாழைப்பூ

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமளவு வற்றவைத்து இறுத்து, திப்பிலி, வெங்காரம் இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துப் பொடிசெய்து போட்டுஉட்கொள்ளவும்.

தாபம், அதிஸார ஜ்வரம், நாலு நாட்களுக்கு ஒரு முறை ஏற்படும் முறைஜ்வரம் முதலானவை தீரும்.

**அதிஸார(ஜ்வர)த்திற்குக் 'கருவாழைப்பூக் கஷாயம்'**

கருவாங் கதலிப் பூமுத்தங் கழரும் விடத்தேற்
கொழுந்தேங்கி
னுருவார் பாளை பெருமரத்தோ லோடுமாதளம் பிஞ்
சிருகழஞ்சு
தருவா நீர்வார்த் தெட்டொன்றுய்ச் சாருமில வம்பிசின
திவிடயம்
ஒரு மாத்திரையாய்க் கொண்டக்கால் லுயரதிசார
மொளிந்திடுமே. (59)

(இ-ள்) கருவாழைப்பூ கோரைக்கிழங்கு
விடத்தேரிக்கொழுந்து தென்னம்பாளை
பெருமரப்பட்டை மாதளம்பிஞ்சு

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வாரகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக நறுக்கி அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றுகும்வரை எரித்து வடிக்கட்டி, அதனுடன் இலவம் பிசின், அதிவிடயம் இவ்விரண்டையும் பொடிசெய்து போட்டு உட்கொண்டால் அதிஸாரங்கள் (அதிஸாரத் துடன் கூடிய ஜ்வரங்கள்) தீரும்.

## சுரத்துடன் கூடிய அதிஸாரந்தீரத் தாடிமாதி கஷாயம்.

மாதளை கடம்பு புங்கின் வாய்ந்தவேர் திப்பிலத்தின்
மீதிளங் கொழுந்துசுக்குத் திரிபலை விரும்பிக் கூட்டி
நீதியி லிரண்டுநாழி நீருழக் காகக்கொண்டால்
சூதன முலையினுளே! சுரத்தினதி சாரம்போமே. (60)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | மாதளை ஓடு | கடம்பு |
| | புங்கம் வேர் | திப்பிலிக்கொழுந்து |
| | சுக்கு | கடுக்காய்த்தோல் |
| | நெல்லிவற்றல் | தான்றித்தோல் |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்றவைத்துச் சாப்பிடவும். ஜ்வரத்துடன் கூடிய அதிஸாரங்கள் தீரும்.

### அதிஸார ஜ்வரத்திற்கு "முத்தக்காசுப் பிட்டு"

முடித்துக் கனத்த கருங்குழலாய்! முத்தக்காசு மாம்பட்டை
இடித்து நனைத்துப் பிட்டாக்கி யிறுகப்பிழிந்திட் டதிவிடையம்
தடித்த யிலவம் பிசின் தூவி தகமைபெறவே கொள்விராய்
துடித்துவிழுந்த வதிசாரச் சுரத்தைப் போக்குஞ் சொன்னேமே. (61)

(இ-ள்) கோரைக்கிழங்கு, மாம்பட்டை இவ்விரண்டையும் கொண்டுவந்து நன்றாக இடித்துத் தண்ணீர் விட்டு பிசறிக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அதன் மேல் ஒரு மெல்லிய துணியை வேடாகக் கட்டி அதன் மேல் மேற்சொன்ன தூளையிட்டு அதற்குத் தக்கப்படி மற்றொரு பாத்திரத்தால் மூடி அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும். சிறிது நேரஞ் சென்றபின், பாத்திரத்தை இறக்கிச் சூரணம் ஆறிய

பின் அதைப் பிழிந்து, அந்தச் சாற்றுடன் அதிவிடயம், இலவம்பிசின் இவ்விரண்டையும் பொடிசெய்துபோட்டு உட்கொள்ளவும் அதிசார ஜ்வரங்கள் தீரும்.

### விஷஜ்வரத்திற்கு ''முருவிலிக் கஷாயம்''.

*முருவிலிநன் ஞரியோடு வெள்வெங்காய
முதிர் வசம்பாச்சோற்றி சிறுகுறட்டைமால
காந்தம் வகையொன்ருக்கிப்
பெருகநல்ல நீர்விட்டுக் காய்ச்சிக்கொள்ள
பலத்தவிஷ ஜ்வரவீக்கம் பெயர்ந்துபோமே. (62)

(இ-ள்) முருவிலி — நன்ஞரிவேர்
வெள்வெங்காயம் — வசம்பு
பாச்சோற்றி — சிறுகுறட்டை
மருள் கிழங்கு

இவைகளைச் சமனெடுத்து இடித்து8மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகு மட்டும் எரித்து வடிக்கட்டி உட்கொள்ளவும் விஷ ஜ்வரங்கள், வீக்கம் முதலானவை தீரும்.

### எல்லாவித ஜ்வரங்களுக்கும் ''கொட்டைக்கரந்தைக் கஷாயம்''

கொட்டைக்கரந்தை பாவட்டைக் கூறும்பிரமி
கழற்கொழுந்து
ஓட்டிக்கொள்ளுமாடாதோடையுலராவீழியிவையாருங்
கட்டிக்கொள்ளுங் காங்ச்சலுக்குக் கஷாயம்வைத்துக்
கொடுப்பீராய்
விட்டுப் போகுஞ் ஜ்வரங்களெல்லாம் வேறு மருந்தும்
வேண்டாமே. (63)

---

*குறிப்பு:— ஷை செய்யுளில் சீர் சரியாக இல்லை.

(இ-ள்) கொட்டைக்கரந்தை பாவட்டை
பிரமி கழற்கொழுந்து
ஆடாதோடை விழிவேர்

இவைகளைச் சமனெடுத்து இடித்துக் கஷாயம் வைத்துச் சாப்பிட்டால் எவ்வித ஜ்வரங்களும் தீரும்.

எவ்வித ஜ்வரங்களுக்கும் ''கடுக்காயாதிக் கஷாயம்''

கடுக்காய்தாரங் கொத்தமல்லிங் கடிய வசம்பு
வெங்கோட்ட
மெடுத்தார் சுக்கு நிலவேம்பு யிரண்டுமட்டின யுடன்
கூட்டிப்
பொடித்தூளாக்கி நீர் விட்டுப் பொங்கக் காய்ச்சி
யெட்டொன்றாய்
குடித்தார் தம்மை ஜ்வரம் விட்டுக் குடிபோமென்று
கூறினதே. (64)

(இ-ள்) கடுக்காய்த்தோல் கொத்தமல்லிவிதை
வசம்பு வெள்ளைக் கோஷ்டம்
சுக்கு நிலவேம்பு

இவைகளைச் சரியெடையெடுத்துத் தூளாக்கி 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும்வரை வற்றவைத்துக் கக்ஷாயமாக்கி உட்கொள்ள எவ்வித ஜ்வரங்களும் தீரும்.

ஜ்வரங்களுக்குப் ''பேராமட்டிக் கஷாயம்''

கார்மட்டுங் கருங்குழல் செய்யவாய்
வார்மட்டு வன்முலை மாதுகேள்
பேர் மட்டியுஞ் சுக்குங் குடிப்பீரா
யூர்விட்டுப் பின்னேடுஞ் சுரங்களே. (65)

(இ-ள்) பேராமட்டி, சுக்கு இவ்விரண்டையும் சம

எடை யெடுத்து இடித்துக் கஷாயமிட்டுப் பருகிவர எவ்விதமான ஜ்வரங்களும் தீரும்.

**வாந்திக்குப் "வில்வபத்திரிக் கஷாயம்".**

வில்வபத்திரி வேறுசிறு மட்டியும்
வல்ல சுக்கும் வளம்பெறக் காய்ச்சியே
நல்ல தேனில் நயந்து குடித்திட
கொல்ல வந்திடுஞ் சத்தி குறுகுமே. (66)

(இ-ள்) வில்வப்பத்திரி, சிற்றுமுட்டி, சுக்கு இம்மூன்றையுஞ் சமனெடுத்து இடித்து எட்டு மடங்குஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்து இறுத்துத் தேன் கூட்டிப்பருகவும். எவ்வித வாந்திகளும் தீரும்.

**ஜ்வரத்தின்மேல் இருமலுக்கு "இண்டிலைக் கஷாயம்"**

இண்டிலை தூதளை யிசங்கு திப்பிலி
கண்டறி சுக்குடன் கலந்து வெந்தநீர்
உண்டபின் ஞெருதிறம் இருமல் வந்திடில்
தெண்டனுந் தருவன தேய்ந்து தீருமே. (67)

(இ-ள்) இண்டம் இலை தூதுவளைவேர்
சங்கன்வேர் திப்பிலி
சுக்கு

இவைகளைச் சிதைத்துச் சுத்த ஜலம் 8 மடங்கு விட்டுஒரு பங்காகும் வரை வற்றவைத்து உட்கொள்ள ஜ்வரத்தின் மேல்வந்த இருமல் தீரும்.

**ஜ்வரத்திற்குக் "கொன்றைத்தோல் கஷாயம்"**

கொன்றைத்தோல் கொத்தமல்லி குமரிச்சருகுங் கடுக்காயு
மொன்றக் காய்ச்சி ரோகணியும் மொக்கக் கலந்து
கன்றிக்கிடந்தமலந்திரண்டு கடுகிக்கழியுய் [குடிப்பீராய் வகை சொன்னேன்
விண்ணிற்கொடிய வேந்தாகும் வெப்புஞ் சுரமும் வாராதே. (68)

(இ-ள்) கொன்றைத்தோல் கொத்துமல்லிவிதை
கத்தாழஞ்சரகு கடுக்காய்த்தோல்
கடுகரோகிணி

இவைகளைச் சமனெடை (வகைக்கு 2 வராகனெடை) எடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 1 மடங்காகும்வரை வற்றவைத்துப் பருக.

**ஆமஜ்வரத்திற்குப் "பாவட்டையாதிக் கஷாயம்".**

கூறுகின்ற பாவட்டை கொன்றகேரண்டமுடன்
வீறுடன் வேலிப்பருத்தி வேரிவையுஞ்—காறுகின்ற
நன்மிளகு கூட்டி நயமாய்க் கஷாயமிடில்
சென்மமில்லை யாமசுரஞ் செப்பு. (69)

(இ-ள்) பாவட்டைவேர் கொன்றைப்பட்டை
ஆமணக்கம்வேர் வேலிப்பருத்திவேர்
மிளகு

இவைகளைச் சமனெடுத்து இடித்து 8 மடங்கு தண்ணீர் விட்டு ஒரு பங்காகும்வரை வற்றவைத்துப் பருகவும் மலச்சிக்கல் தீர்ந்து ஒன்றிரண்டு தடவை பேதியாகும். ஜ்வரம். காங்கை இவைகள் தீரும்.
**ஆமஜ்வரங்கள்** தீரும்.

**மாந்தத்திற்கு "வேர்க்கொம்புக் கஷாயம்".**

நன்றாக வேற்கொம்பு நற்கடுசா றடைவேரு
மொன்றுய்க்கஷாயமிட்டு உண்டுவிடி-லன்றேதான்
ஓடுமே மாந்தம் ஒளியால் நாடு விட்டு
வாடுமே கெட்டு மனம்— (70)

(இ-ள்) சுக்கு, சாறடைவேர் இவ்விரண்டையும் நசுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்றாக்கிப் பருகிவர மாந்தங்கள்தீரும்.

### வாதசுர நிதானமும் சுக்காதிக் கஷாயமும்.

வாதசுரத்தின் குணமதுவும் வயறுபொருமு மலமிருகும்
போத உடலுங் குலைந்துளமை பொருந்தாசத்தி
யருவருப்பும்
நீதமறவே நெஞ்சுழத்தும் நினைவுமறந்து உறக்கமத்து
மேதஞ் சிலிர்த்து விஷம்போன்று மெய்யும் நடுங்கிக்
கடுப்பாமே. (1)

கடுக்குங் கைகால் தலை நோவும் கனவு அனத்தல்
மிகச்சோர்வு
தடுக்கும் நாவும் மெய்கலங்கும் தானேயேழு ளுளளவும்
கொடுக்குமன்ன மாகாது குருநெல் லரிசி சுக்கு பற்
பாடஞ் சீந்தில்
யெடுத்தே சீலை தனிற்கட்டி நீர்யெட் டொன்றுக்கிமிகச்
செலுத்தே. (2)

(இ-ள்) வாதசுரத்தின் குணம்:—வயிறுபொருமும். மலச்சிக்கலேற்படும் உடம்புவலியேற்படும். தீராதவாந்தி யெடுக்கும் அருவருப்பு உண்டாகும் நெஞ்சு எரிச்சல் உண்டாகும். நினைவு தடுமாறும். தூக்கம் வராது மயிர்க் கூச்சல், உடம்பு நடுக்கம் வலி, கைகால், தலைவலி அதிகமான பலஹீனம், நாக்கு உளரல், முதலான இக் குறிகள் உண்டாகும்.

7 நாட்கள் வரை சாதம் போடக்கூடாது

மருந்து:— சுக்கு பற்பாடகம்
சீந்தில் கொடி அரிசி

இவைகளைச் சமனெடுத்து இடித்து ஒரு மூட்டையாகக் கட்டி 8 மடங்கு ஜலம் விட்டு அதிலிட்டுக் கஷாயமாக்கி உட்கொள்ளவும்.

### வாத சுரத்திற்குச் சித்தாமல்லிக் கஷாயம்.

மிக்கசித்த மல்லிபேர்மல்லி முள்ளிவில்வங்
கண்டங்காலி பாதிரித் தோலோடு

தக்கநிலத்தில் குமிழ்முத்தம்
நிலவேம்போடு தனிவாகை திப்பிலி தன்
கோட்டம்
சுக்குமிளகு நெருஞ்சியொடு தோடைசீந்தில்
சுகமாம் பற்படகஞ் சரியாகப்
பக்குவமாயிருநாழி நீரேட்டொன்ருய்
பருகில் வெகுவாதசுரம் பறந்துபோமே. (3)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சித்தாமல்லி | பேராமல்லி |
| | முள்ளிவேர் | வில்வவேர் |
| | கண்டங்கத்திரிவேர் | பாதிரிவேர் |
| | நிலக்குமிழ்வேர் | கோவைக்கிழங்கு |
| | நிலவேம்பு | வாகைவேர் |
| | திப்பிலி | கோஷ்டம் |
| | சுக்கு | மிளகு |
| | நெரிஞ்சில் | ஆடாதோடை |
| | சீந்தில்கொடி | பற்பாடகம் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்துத் தூள் செய்து கொள்ளவும். ஷை தூளில் 1 பலம் எடுத்து சுத்த ஜலம் சின்னபடி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகும் வரை வற்றவைத்து உட் கொள்ளவும். வாத ஜ்வரங்கள் தீரும்.

## வாத ஜ்வரத்திற்குக் குடுச்யாதி கஷாயம்.

பரந்த சீந்தில் மலைதாங்கிப்பகரும் லாமிச்சசிறுகாஞ்
சோறிவேர்
விரைந்து கொன்னைத்தோல் சுக்கிந்துப்பு
வேண்டுந்திரிபலைகடுகுரோகணியும்
திரண்ட சேவகன்பூடு சிறுதேக்குத் திப்பிலிமூலஞ்
செல்வியமும்
நிரந்தகஷாயமது விட்டு நேர் திப்பிலிப்
பொடிகூட்டி நீர் கொள்வாதசுரந்திரே (4)

(இ-ள்) சீந்தில்கொடி பொன்முசாட்டைவேர்
இலாமிச்சம்வேர் சிறுகாஞ்சோறிவேர்
கொன்னைத்தோல் சுக்கு
இந்துப்பு கடுக்காய்த்தோல்
நெல்லி வற்றல் தான்றிக்காய்த்தோல்
கடுகரோகிணி சேவகனார் கிழங்கு
சிறுதேக்கு திப்பிலிமூலம்
செவ்வியம்.

இவைகளைச் சரியெடை (வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை) யெடுத்து ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொண்டு இதற்கு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதனுடன் திப்பிலிச்சூரணமிட்டுப்பருகிவரவாதஜ்வரங்கள் தீரும்.

### வாத ஜ்வரங்களுக்குத் திரிபலாத்யம் கஷாயம்.

இயல்பா நெல்லிக் கடுகுதாணி இலவங்கந்தா மரை
வளையம்
வியல்சேர் சந்தக் கொன்னைத்தோல் வேர்க்கொம்பு
டனே பற்படக
மயல்பேர் மட்டிசித்தமட்டி வாடாதோடை யிருவேலி
சியல்சேர் சீந்தில் கோட்டஞ் சுக்கு சிறுகாஞ்சோறி
லாமிச்சே. (5)

மிக்கோர் தேவதாரமுடன் பிரியார் கண்டங் காலிவேர்
மிக்கோ ரொன்றுக் கழஞ்செடையாய் மிகநீர் புனலெட்
டொன்றாக்கி
தக்கோர் கிஷாயத் தானருந்த தண்குளி பாரஞ்சுரங்கள்
விட்டு
சிக்காதோடு மென முனிவர் செய்தார் வாதஞ்
சுரங்கண்டே. (6)

(இ-ள்) நெல்லிவற்றல் கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல் கிராம்பு

| | |
|---|---|
| தாமரையிலையின் உட்சுருள் | சந்தனத்தூள் |
| கொன்னைப்பட்டை | சுக்கு |
| பற்பாடகம் | பேராமுட்டி |
| சிற்றாமுட்டி | ஆடாதோடைவேர் |
| வெட்டிவேர் | சீந்தில்கொடி |
| உயர்ந்தகோஷ்டம் | சுக்கு |
| சிறுகாஞ்சோறிவேர் | இலாமிச்சம்வேர் |
| தேவதாரு | கண்டங்கத்திரிவேர். |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்றவைத்து, இறுத்துக் கஷாயத்தைப் பருகிவர வாத ஜ்வரங்கள் தீரும்.

**சுரத்திற்குக் "கண்டங்காரியாதிக் கஷாயம்".**

கண்டங்காலி முத்தக்காசு சிறுகாஞ்சோறி சீந்தில் வட்டுத்
துண்டஞ்சேர்த்துத் திப்பிலிபற் படகந் தோன்றுஞ் சிறுதேக்கு நிலவேம்பு
கொண்டொரொன்று முக்கழஞ்சு கூட்டியிருநாழி புனலுழக்காய்
அண்டங்கருகி வருவருப்போ டூறும் வானீர் சுரம்போக்கே. (7)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கண்டங்கத்திரிவேர் | கோரைக்கிழங்கு |
| | சிறுகாஞ்சோறிவேர் | சீந்தில்கொடி |
| | திப்பிலி | பற்பாடகம் |
| | சிறுதேக்கு | நிலவேம்பு |

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச்சுத்தஜலம் சின்னபடி 1விட்டு அடுப்பின் மேலேற்றி ஒருஉழக்காகும்வரைவற்ற வைத்து உட்கொள்ளவும். அருவருப்புடன் வாயில் நீர் அடிக்கடி ஊறும் (பித்த) ஜ்வரங்கள் தீரும்.

**குளிர் ஜ்வரத்திற்குக் ''காய்வேளையாதிக் கஷாயம்''**

காவளைவே லிப்பருத்திக் கஞ்சாங்கோரை
கத்தாழை முடக்கித்தான் கடுக்காய் சுக்கு
தேவைமிகு சிறுகுறிஞ்சா சிறுகாஞ்சோறி
சீர்வேம்பின் பட்டையதின் சிறந்த யீர்க்கு
மேவுசங்கின் பட்டையுடன் பதக்கு நீரும்
மேவிவந்து கொள்சீத ஜ்வரங்களெல்லாங்
கோவை நறுங் கனிவாயாய் முனி வாய்வந்த
குளிர் மாறுஞ் சுரமீளுங் கூறினேமே. (8)

| (இ-ள்) | | |
|---|---|---|
| | காய்வேளைவேர் | வேலிப்பருத்திவேர் |
| | கஞ்சாங்கோரை | கத்தாழைவேர் |
| | முடக்கித்தான்வேர் | கடுக்காய்த்தோல் |
| | சுக்கு | சிறு குறிஞ்சான் |
| | சிறுகாஞ்சோறிவேர் | வேப்பம்பட்டை |
| | வேப்பம் ஈர்க்கு | சங்கம்வேர்ப்பட்டை |

இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்து இடித்துச் சுத்த ஜலம் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து உட்கொள்ளவும். குளிர் ஜ்வரங்கள் தீரும்.

**முறை ஜ்வரத்திற்குக் ''கண்டகாரிக் கஷாயம்''**

கூறுமுறையின்சுரந்த னக்குக் கொண்டே
காண்டங்காலி படோல சீந்தில்
வீறுவெட்பாலை விழலரிசி மிக்கமுத்தம்
பற்பாடகம் வேர்க்கொம்பு
பேறுள சிறுகாஞ்சோறி நிலவேம்பு பேணிப்
புனலெட்டொன்றாக்கி
ஆறியதனை யருந்துங்காண் அண்டர் முறையின்
வெதுப்பென்னே. (9)

| (இ-ள்) | | |
|---|---|---|
| | கண்டங்கத்திரிவேர் | பேய்புடல் |
| | சீந்தில்கொடி | வெட்பாலையரிசி |

| | |
|---|---|
| விழலரிசி | கோரைக்கிழங்கு |
| பற்பாடகம் | சுக்கு |
| சிறுகாஞ்சோரி | நிலவேம்பு |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 8 மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்ருக்கி அருந்தவும். முறை ஜ்வரங்கள் தீரும்.

**குளிர், குலைப்பு ஜ்வரத்திற்குப் 'பேராமட்டிக் கஷாயம்'**

முறையே குளிருங்குலைபெய்து மூளுந்தாகஞ்சந்து
கள்ளேம்
நிறையு மயிற்குத் திடுங்குடையும்
நெஞ்சுஞேங்கொட்டாவிவிடும்
பொறைசேரிதற்குப்பேர்மட்டி பொருந்துஞ்
சுக்கு நீர்காய்ச்சி
மறைநேரிடையாய்ப் பருகிவர மாரிப்போமிவ் வாதை
களே.

(இ-ள்) பேராமுட்டி வேர் சுக்கு

இவ்விரண்டையும் வகைக்கு ½ பலம் எடுத்து இடித்துச் சூரணம் செய்து 8 மடங்கு ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகவற்றவைத்துப்பருகிவரவும்.

குளிர்ஜ்வரம், குலைப்பு, (மேல்மூச்சு வாங்கல்) தீராத நாவரட்சி, மூட்டுவலி முதலானவை தீரும்.

**சத்தியுடன் கூடிய ஜ்வரந்திரப் ''பொரி கஷாயம்''**

பருங்கூ விளேவே ரிருகழஞ்சு பயந்தா னிருனழிவிட்டாங்
கிருந்தே பொரிசிலையுங்கட்டி யிட்டே நீர்சுவ றக்காய்ச்சி
மருந்தாம் பொரியைக் கூழ்போல மசியப்
பிசைந்து தேன்கலந்து
அருந்தீர் நீர்தான் சத்திவெதுப் பலேந்தே விரைவில்க்
கண்டீரே. (11)

*குறிப்பு:— 68ம் நெம்பர் செய்யுளையும் பார்க்கவும்.

(இ-ள்) வில்வவேர் 2½ வராகனெடை எடுத்துத் தூளாக்கி சின்னபடி 1 சுத்தஜலம் விடவும். அதனுடன் நெற்பொரியை ஒரு துணியில் முடிச்சாகக்கட்டி அதிலிட்டுக்கஷாயம் சுண்டுமளவும் காய்ச்சவும். பின்னர் இதனைக்கீழிறக்கி மூட்டையைப் பிசைந்து, பொரி கூழாகிய பின் அதனுடன் தேன் சிறிது விட்டு சாப்பிடவும். வாந்தியுடன் கூடிய சுரங்கள் தீரும்.

**சத்தி குன்மம் ஜ்வரத்திற்கு "லாஜாதி கஷாயம்"**

நெற்பொரியும் பசும்பயறும் வில்லமுல்லை
நேரியசி ரேலமுட னெல்லிமுள்ளி
முற்படவே யிலநீரி லொன்றுயக்காய்ச்சி
முதுநீரை யிறுத்தருந்த முதிர்ந்துபோன
சொற்பெரிய சத்திகுன்மம்சுரத்தின்
துயரமுடன் கிறுகிறுப்பு உழலைமூச்சு
நற்பெரிய முனியுரைத்த படியேநானும்
நாடாதேயென் றேயுரைத்தேன்
நலமிதாமே. (12)

(இ-ள்) நெற்பொரி பச்சைப்பயறு
வில்வவேர் முல்லைவேர்
ஏலக்காய் நெல்லிமுள்ளி

இவைகளை வகைக்கு ஒருபலம் வீதமெடுத்து இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு இளநீர்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றுக்கி இறுத்து உட்கொள்ள: வாந்தியுடன் கூடிய வயிற்றுவலி, ஜ்வரம், கிறுகிறுப்பு, உடம்பு எரிச்சல், மேல்மூச்சு முதலானவை தீரும்.

**குளிருடன் கூடிய சுரத்திற்குத் "தசமூலாதி கஷாயம்"**

கெடுத்தார்பெரிய வாகைமுன்னை கிளர்ந்தபெரிய
குமிழ்நெருஞ்சில்
வடுத்தானில்லாக் கூவிளைவேர் வளர்சித்தமட்டி
பேர்மல்லி

6152

அடுத்தார் புகழும் பாதிரிகண் டங்கத் தரிசிறு வழு
தலைவேர்
எடுத்தாருள்ளி கோட்டமிள கிவைவேர்க் கொம்பு
திரிபலையே (13)

திரிபலையுடனே யிவையெல்லாஞ் சேரக்கூட்டி
யொருநிறையாய்
யப்பிலிருநாழிகள்விட்டேயமரக்காய்ச்சியெட்டொன்றாய்
செப்பியகுடிநீர் தனையாற்றித் தேனிற்குடிக்கக்
குளிர்ந்துவரும்
வெப்பிவையெல்லா முடல்தன்னை விட்டே
யோடிவிடுங்காணே (14)

(இ-ள்)

| | |
|---|---|
| வாகைவேர் | முன்னைவேர் |
| பெருங்குமிழ்வேர் | நெருஞ்சில் |
| வில்வவேர் | சித்தாமுட்டி |
| பேராமல்லி | பாதிரி |
| கண்டங்கத்திரி | சிறுவழுதலை வேர் |
| பூண்டு | கோஷ்டம் |
| மிளகு | சுக்கு |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 8 மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்றவைத்து உட்கொள்ளவும். இக்கஷாயத்துடன் தேன் கூட்டிச் சாப்பிடவும். காங்கை, சுரம் எல்லாம் தீரும்.

**குளிர் ஜ்வரத்திற்குக் ''குடுச்யாதி கஷாயம்''**

காஞ்சீந்தில் தோடைவில்வங் கற்சூரை முந்திரிகை
சீதேவிமுத்தம்
வாஞ்தாமரை பெருங்குறும்பை வருசிறு மூலமி
லுப்பைப்பூ

நாணுமுத்தந்திரிபலேதிரிகடுகு நன்னாரிநறும்பி சினில
வேம்பு
பேணார்செவ்வியம் விழலரிசி விடையம்பேணிக்
கஷாயந்தே
…………னருந்தகுளிருஞ்சுரமருந்திதுவே (15)

| | |
|---|---|
| (இ-ள்) சீந்தில்கொடி | ஆடாதோடை |
| வில்வவேர் | பேரீச்சங்காய் |
| திராக்ஷைப்பழம் | சீதாசெங்கழுநீர் |
| கோரைக்கிழங்கு | தாமரைக்கிழங்கு |
| பெருங்குரும்பை | (மருள்வேர்) திப்பிலி |
| இலுப்பைப்பூ | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | நன்னாரிவேர் |
| நறும்பிசின் | நிலவேம்பு |
| செவ்வியம் | விழலரிசி |
| அதிவிடையம் | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டிலொன்ருக்கி இறக்கவும். இதனையுட்கொள்ளக் குளிர் ஜ்வரங்கள் தீரும்.

### குளிர் ஜ்வரத்திற்குச் ''சுக்காதிக் கஷாயம்''

மருவும் வேர்க்கொம் பிருகழஞ்சு வளர்சா
றணைவேரொருகழஞ்சு
குருகுங் குமிழ்பேர் மட்டியில்வேரறுகழஞ்சு வெள்ளுள்ளி
பெருகுமிரண்டு கழஞ்சுபெய்யும் புனலங்கிரு நாழி
கருதியிட்டுழக்காயுண்ணுகா யந்திப்பிலி தான்கலந்தே.

| | |
|---|---|
| (இ-ள்) சுக்கு | 2 கழஞ்சு |
| சாறணைவேர் | 1 கழஞ்சு |
| குமிழ்வேர் | 6 ,, |
| பேராமுட்டிவேர் | 6 கழஞ்சு |
| பூண்டு | 2 ,, |

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 2 படி விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்ற வைக்கவும். இதில் திப்பிலிச் சூரணஞ்சேர்த்துப் பருகவும். குளிர் ஜ்வரங்கள் தீரும்.

### குளிர்ந்த ஜ்வரத்திற்குக் ''கொத்தமல்லியாதி கஷாயம்''

கலக்குங் கொத்த மல்லியிரு கழஞ்சு வேர்க்கொம் பொருகழஞ்சு
நிலத்துநாரத் திலைகூட்டி நீரு மிரண்டு நாழிவிட்டு
உலக்கக் காய்ச்சி உழக்காக்கி உள்ளேசெல்லப் பருகு வீரேல்
மலக்குங் குளிர்ந்த சுரத்தையெல்லா மகத்துங் கொடியமருந்திதுவே (17)

(இ-ள்) கொத்தமல்லிவிதை 2 கழஞ்சு
சுக்கு 1 ,,
நாரத்தையிலை ,,

இவைகளை இடித்துச் சுத்த ஜலம் 2 நாழி விட்டு, அப் பாத்திரத்தை அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக்கி உட்கொள்ளக் குளிர் ஜ்வரங்கள் தீரும்.

### குளிர் ஜ்வரத்திற்கு ''வாசாதி கஷாயம்''

ஆடாதோடை பேய்ப்புடலோடலருஞ் சீந்தில்பற்படகம்
நீடாங் கண்டங் கத்திரிவேர் நிலவேம்புடனே நிறைசுக்கு
வாடாக் குடிநீர் தேன் கலந்து வடித்துக் கலக்கிக் குடிப்பீராய்
கோடாகோடி சுரம்விட்டுக் குளிரும் சுரமும் வாராதே. (18)

(இ-ள்) ஆடாதோடை பேய்ப்புடல்
சீந்தில்கொடி பற்பாடகம்
கண்டங்கத்திரி வேர் நிலவேம்பு
சுக்கு

இவைகளைச் சமன்(1 கழஞ்சு) எடுத்து இடித்து ஒருபாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி1விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக்கித் தேன் விட்டு உட்கொள்ளவும். பற்பல குளிர் ஜ்வரங்கள் தீரும்.

### குளிர் ஜ்வரத்திற்குத் "தேவதார்வாதி கஷாயம்"

தேவதா ரஞ்சுக்குங் குமிள்வேர் முத்தஞ்
சிறுதேக்குக் கண்டங்காலி பற்பாடகம்
பாவுங்கோட் டங்கடுக் காய்திப்பிலி
பகருங் கழஞ்சாய் நீர் புகட்டி
மேவிக்க ஷாயந்தனில்த் தேன் கலந்து
விரவில் கொடுக்க உடலதனில்
தாவிக் குளிருஞ் சுரம் வெப்புத்
தாழந்தே பறந்து போமென்னே. **(19)**

| | | |
|---|---|---|
| (இ ள்) | தேவதாரு | சுக்கு |
| | குமிழ்வேர் | கோரைக் கிழங்கு |
| | சிறுதேக்கு | கண்டங்கத்திரி வேர் |
| | பற்பாடகம் | கோஷ்டம் |
| | கடுக்காய்த்தோல் | திப்பிலி |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாகவிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றுகு மட்டும் எரித்து வடிகட்டித் தேன் கூட்டிப் பருகவும். குளிர் ஜ்வரம், காங்கை முதலானவை தீரும்.

### குளிர் ஜ்வரத்திற்குச் "சேவகனார் எண்ணெய்"

பறந்திடு சேவகன் பூடு பதினைம்பல வேர்முன்னை பாதிரி
கூவிளை நெருஞ்சில் பெருங்குமிழ் பேராமட்டி
சிறந்த கிறுவழுதலை கண்டங்காலி கொள்ளு
சிவதைக் குருவிக் கரும்பு செழுங்கோரை யருதி

பிறங்கிலந்தையைம்பலஞ் சித்தமட்டி பதினைம்பல
வேர்பெரிய வாகையினே றொன்றிருபலமாய்
நிறந்திகழ் நறுக்கியிடுத்துக் கலனே பதக்கு
நீர்வார்த்து யெட்டுநா ளூறிக் காய்ச்சே. (20)

காஞ்சது முக்குறுணியாலல் வடித்தங்கதிலெங்
கரைத்ததி மதுரங் கடுநெல்லி தாளிக்காய்
யாஞ்சு கொள்ளுஞ் சந்தனங் கோஷ்டந் தேவதார
மட்டவங்க மிருவேலி யழுக்கிரு வசம்பு
மீஞ்சையில்லா நன்னாரி நறும்பிசினேடேல
மிலவங்கஞ் சதகுப்பை யிந்துப்புடனே
வாஞ்சையுடனே குங்கிலியம் பச்சிலை மஞ்சிட்டி
வனரிலாமிச்சங் கோரொன்று கழஞ்சுவாங்கே. (21)

வாங்கியரைத்துக் கரைத்து மானனையாயெண்ணெய்
மற்றதிலே அஞ்ஞாழி பதினாழி பால்விட்
டாங்கெரித்துப் பதத்தில் வடித்து மிகமிடையார்
வரத்தலையில் வார்த்துடம்புதனில் பூசிவிடவே
தீங்குவினை தவிர்ச்சிவனை தொழுமடியாரிடத்தே
சென்றணுகா வாற்த போற்சிதைந்து மிகப்பயந்
தீங்குநிற்கவரி தேன் விட்டேகிவிடு முலகோரிது
திரமாயஞ்சுமிக் சுரமென்றியம்பினரே. (22)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சேவகனார்பூண்டு | 15 பலம் |
| | முன்னை | பாதிரி |
| | வில்வவேர் | நெருஞ்சில் |
| | பெருங்குமிழ் | பேராமுட்டி |
| | சிறுகத்திரிவேர் | கண்டங்கத்திரிவேர் |
| | கொள்ளு | சிவதைவேர் |
| | குருவிக்கரும்பு | கோரைக்கிழங்கு |
| | இலந்தை | |

| | |
|---|---|
| முதலான சரக்குகள் வகைக்கு | 5 பலம் |
| சிற்றாமுட்டி | 15 பலம் |
| வாகைவேர் | 2 பலம் |

இவைகளைச் சிறு துண்டுகளாக்கி ஒரு கல்லுரலிலிட்டு இடித்துத் தூளாக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 14 மரக்கால் ஜலம் விட்டு அப்படியே ஊறவைக்கவும் 8 நாட்கள் சென்றபின், இதை அடுப்பின் மேலேற்றி 3 மரக்காலாகும் வரை வற்றவைக்கவும். இக்கஷாயத்தையிறுத்து அதனுடன்

| | |
|---|---|
| அதிமதுரம் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| சந்தனத்தூள் | கோஷ்டம் |
| தேவதாரு | வெட்டிவேர் |
| அமுக்கிராக்கிழங்கு | வசம்பு |
| நன்னாரிவேர் | நறும்பிசின் |
| ஏலக்காய் | கிராம்பு |
| சதகுப்பை | இந்துப்பு |
| குங்கிலியம் | பச்சிலை |
| மஞ்சிஷ்டிவேர் | இலாமிச்சம்வேர் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஷை கஷாயம் விட்டரைத்து, சுத்தமான நல்லெண்ணெய் 5 படி (25 சேர்) பசுவின்பால் 10 படி (50 சேர்) இவைகளையும் சேர்த்து ஒன்று கலந்து, எரித்துப் பதத்திலிறக்கவும், இதை வடிக்கட்டி வைத்துக் கொண்டுத்தலையிலும், உடம்பிலும் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ் செய்யவும். சுரங்கள் அனைத்துந் தீரும்.

## வாத சிலேத்மசுரக்குறி குணங்கள்.

பேராதிரும்ம் நாவூறும்பெருகுஞ்சத்தியுறக்கமுண்டாம்
சீராருடல முற்குழிருஞ் சிறந்த மலமோ டுகிர் வெளிறு
நீராமூக்கில் வாயதனில் நீருண்டாம ஞட்செல்லும்
விரவெற்றீரா வெதுப்புங்கண் வெளிறுந்தீயும் வெயிலும்
வேண்டிடுமே. (23)

வேண்டும்பலகால் கொட்டாவி மெய்யில் ரோமஞ்
சிலிர்க்குமிகத்
தூண்டு மயக்குந்தெளிவுண்டா ந்துடைக்கீழ்கையேதான்
சேர்க்குங்
ஈண்டிங் குடைச்சல் வாதசிலேத்ம ஜ்வரமென்றிதை
யறிந்து
மீண்டுமிரண்டுபட்டினிதான்விட்டுச்செய்யும்படிகேளே,

(இ-ள்) விடாமல் இருமலுண்டாகும். வாந்தி ஏற்படும். தூக்கம் அதிகரிக்கும். உடலில் குளிர் ஏற்படும். மலச்சிக்கல் ஏற்படும். மலமும் வெண்மையாகும். மூக்கு, வாய் முதலான இடங்களிலிருந்து நீர் பொசியும். சீக்கிரமாகச் சிகித்சைக்கு வசப்படாது. தேகத்தில் காங்கை, கண்களில் வெளுப்பு தீ, வெய்யில் இவைகளில் இச்சை முதலான குறிகள் காணும். அடிக்கடி கொட்டாவி உண்டாகும். உடம்பில் மயிர்க்கூச்சல் உண்டாகும். மயக்கமேற்படும். துடையிடுக்கில் கை வைத்துக் கொண்டு உறங்குவான் உடம்பில் குத்துவலியேற்படும். இக்குறிகள் கண்டால் "வாத சிலேத்ம ஜ்வரம்" என்று தெரிந்து கொள்ளவும்,

இந்நோய் ஏற்பட்டால் 2 நாட்கள் பட்டினி இருக்கவும்.

### பித்தசிலேத்ம ஜ்வரத்தில் அருசிக்குச்சுக்காதி கடாயமும், "குடுச்யாதி கஷாயமும்"

கேளுமூன்று நாளருசி கிளர்வேர்க்கொம்பு கொட்பயறு
மூளும்பொரியிங்கிவைகொண்டுமுற்குடிநீரிட்டுப்பின்னை
நாளும்பெருக வேழுசென்றால் நாடிக்குடிநீ ரிடுமருந்து
நீடுஞ்சீந்தில் மாதளைவேர் நெடிதாமேலிலாலம் வேர்
தேடே.

தேடுமுத்தக் காசுக்குச் சேரவொன்று முக்கழஞ்சு
ஈடும்பெற்ற நீரிலிட்ட தெட்டுலொன்றாகியபின்

நீடுந்திப்பிலிப் பொடிநீசெய் திட்டினியருந்த மெய்
வாடும் பித்தசிலேத்மசுரங்கள் மாறுமே
காண்ணுட்டவரே.

(இ-ள்) சுக்கு பயறு
பொரி (நெற்)

இவைகளைக் கஷாயம் வைத்துக் கொடுக்கவும் 7 நாட்கள் சென்றபின்

சீந்தில்கொடி மாதளைவேர்
ஆலம்வேர் கோரைக் கிழங்கு
சுக்கு

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்தஜலம் விட்டு, அடுப்பின்மேலேற்றி எரித்து $\frac{1}{8}$ பாகமாக வற்றியபின் இறக்கி வடிகட்டிக்கொண்டு திப்பிலிச் சூரணம் ஒரு குத்தளவு போட்டுப்பருகவும். பித்த சிலேத்ம ஜ்வரங்கள் தீரும்.

**சிலேத்ம ஜ்வரங்களுக்கு ''வாஸாதி கஷாயம்''**

ஆடாதோடை சிறுதேக்கு யடருங்கையாந் தகரைசங்கு
தேடாவேரும் பொரும்பில்சுக்குஞ் சேர்ந்தமிளகுஞ்
சமன்கொண்டு
வாடாநீர்வார்த் தெட்டொன்ருய்வருந்த
தேனுமுடன்கூட்டி
போடா நீருட்கொள்வீராய் பொன்றுஞ்
சேற்றுமசுரமாறிடுமே (27)

(இ-ள்) ஆடாதோடை சிறுதேக்கு
கையாந்தகரை சங்கம்வேர்
பொரும்பில்வேர் சுக்கு
மிளகு

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு, அடுப்

பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து வடிக் கட்டித் தேன் கூட்டி உட்கொள்ளவும். சிலேத்ம ஜ்வரங்கள் தீரும்.

### உடம்பு வலிக்குத் ''தேவதார்வாதிக் கஷாயம்''

மாறிலோ தேவதார மானசெவ் வியங் கடு
வீறிலரத்தோ ரோகணி திப்பிலி மரமஞ்சளுடன்
தேறியொன் றிருகழஞ்சு சேரிலெட்டொன்
றூறியுந் திப்பிலி யோடுண்ணநோதை லோயுமே.(28)

(இ-ள்) தேவதாரு — செவ்வியம்
கடுக்காய்த்தோல் — அரத்தை
கடுகரோகிணி — திப்பிலி
மரமஞ்சள்

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டி லொன்றுகும்வரை எரித்து வடிக்கட்டித் திப்பிலிச்சூரண மிட்டுப் பருகவும். உடம்பு, கடுப்பு வலிகள் தீரும்.

### கப ஜ்வரங்களுக்குக் ''கோட்டாதி கஷாயம்''

ஓயும் கோட்டம் பெருங் குறும்பை
யுடனே சந்தம் பேய்முசுட்டை
ஆயுங் கடு ரோகணி வேப் பலகு
திப்பிலி சிறுதேக் கதிவிடயம்
ஓயுஞ் சீந்தில் திரிபலையோ
டேநாகப்பூ பெருங் குமிழ்வேர்
தேயுந்தேவ தாரநலஞ்
சேரும் புடோல முத்தக்காசே. (29)

சேர்ந்தோரொன்று சிறந்த கழஞ்சுரெண்
டேந்து நீரிலெட் டிலொன்றுனபின்
போந்த திப்பிலி போட்டுக் குடித்திட
சாந்தமாகுஞ் கபச்சுரமானதே. (30)

(இ-ள்) கோஷ்டம் (உயர்ந்தது) பெருங்குறும்பை
சந்தனத்தூள் — பேய்முசுட்டை

| | |
|---|---|
| கடுகுரோகிணி | வேப்பம் ஈர்க்கு |
| திப்பிலி | சிறுதேக்கு |
| அதிவிடயம் | சீந்தில்கொடி |
| கடுக்காய்த்தோல் | தான்றிக்காய்த்தோல் |
| நெல்லிமுள்ளி | சிறுநாகப்பூ |
| பெருங்குமிழ்வேர் | தேவதாருக் கட்டை |
| பேய்ப்புடல் | கோரைக்கிழங்கு |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றுகும் வரை எரித்து வடிகட்டித் திப்பிலிச் சூரணமிட்டுக் குடிக்கவும். கபச்சுரங்கள் தீரும்.

**வாதசிலேத்ம ஜ்வரத்திற்குத் தேவதார்வாதி கஷாயம்.**

ஆனதேவ தாரமுடன் மற்றவேர்க் கொம்படர்
கொள்ளுப்
பானல் போலும் விழியாய்! பற்படகம் கொத்தமல்லி
சீனமிளகு திப்பிலி முந்திரிகைப் பழமுத்தக்கா [வசம்பு
சானதோ ரொன்றிருகழஞ்சு தண்ணீரிரண்டுநாழி
விட்டே. (31)

விட்டுக் காய்ச்சி யுழக்காளுல் மேவும்பெருங்கா
யம்கால்தா
னிட்டுக்குடிப்பீ ராமாகி லிடரேசெய்தங் குடல தன்னி
லொட்டித்திரியும் வாதசிலேட் டிமமாஞ்சுரங்க
ளிவையெல்லா
முட்டுப்பட்டுந் தடுமாறி முறிந்தேயேகுங் கண்டாயே.
(32)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | தேவதாரு | சுக்கு |
| | பற்பாடகம் | கொத்தமல்லி |
| | வசம்பு | மிளகு |
| | திப்பிலி | திராக்ஷைப்பழம் |
| | கோரைக்கிழங்கு | |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின்

மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்றவைத்து, வடிக் கட்டிப் பெருங்காயம்8குன்றியெடையெடுத்துக் கலந்து உட்கொள்ளவும். வாதகப ஜ்வரங்கள் தீரும்.

## வாதசிலேத்ம ஜ்வரத்திற்குக் கொடிக்குமிழ் கஷாயம்

கண்டோர் புகழுங் கொடிக் குமிழ்வேர்
கடுக்காய்சீந்தில் வேப்பீர்க்கோ
டுண்டா மிலுப்பைப்பூவேர்க்கொம்
புடனேயாடா தோடையில் வேர்
திண்டோர் செறியும் பெருங்குமிழ் முந்
திரிகைப்பழம் பங்கம்பாளை
கொண்டே யோரொன்றிருகழஞ்சு
கூட்டியிடித்துக் கொள்வீரே. (33)

கொள்ளும் புனல்தா னிருநாழிக்குள்ளே காய்ச்சிப்பின்
தெள்ளும் புனல்தானுழக்காளுல் திப்பிலி
இந்துப்புத்தேனும்
விள்ளும்படியே நீர்தான் மேல்வீசிக் குடிப்பையாமாகில்
உள்ளுங் காயும் வாதசிலேத்ம சுரமுடல் விட்டேகி
யோடிடுமே. (34)

(இ-ள்)

| | |
|---|---|
| கொடிக்குமிழ்வேர் | கடுக்காய்த்தாதால் |
| சீந்தில்கொடி | வேப்பீர்க்கு |
| இலுப்பைப்பூ | சுக்கு |
| ஆடாதோடைவேர் | பெருங்குமிழ்வேர் |
| திராக்ஷைப்பழம் | ஆடுதீண்டாப்பாளைவேர் |

இவைகள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 2 படி (சின்னபடி 1) விட்டு அடுப்பின் மேலேற்றி யெறித்து ஒரு உழக்காக வற்றவைத்து அதனுடன் திப்பிலித்தூள் இந்துப்பு, தேன் இவைகளையொன்று கலந்து பருகவும். வாத கப ஜ்வரங்கள் தீரும்.

## சந்நிபாத ஜ்வரத்தின் குறிகுணங்கள்.

உடல்சேர் சந்நி வாதசுரத் துண்டாங் குணத்தை
யுரைத்திடுகிற்
பிடரேநொந்து தலை நேருமறிவுகெடும் பிதற்று மிருமலிளைப்புமறப்
படரும் புண்போ லுடல்நோவாம் பக்குந் தண்ணீர்த்
தாகமுண்டாம்
விடமே போல வாய்க்கசப்பா மிகவும் வெதுப்பு
முழலையுண்டே. (35)

உண்டே கழிச்சல் நாவுலரும் மோதுமிதற்கு வாய்நாசி
விண்டே புண்ணாய் நாக்கறுக்கும் மிகுமுழுக்கம்
புண்ணுறத்
தண்டேன் மொழியாய்! சத்தியுமாய் தள்ளிப்
பரிகாரஞ்செய்யிற்
கண்டே வணங்குங் கணபதி கழிக்கப்பூசை
வழங்கிடுமே. (36)

(இ-ள்) பிடரி, தலை முதலான இடங்களில் தாங்க முடியாத வலியேற்படும். அறிவு கெடும். அடிக்கடி பிதற்றுவான். இருமல், இளைப்பு இவைகளுண்டாகும். உடலும் புண்போல்நோகும் தண்ணீர்த் தாகம் உண்டாகும். வாய் விஷத்தை உண்டாப்போல கசக்கும். உடலில் உஷ்ணம், அழற்சி, கழிச்சல் முதலானவையேற்படும் நாக்கு உலர்ந்துபோம். வாய் நாசி இவைகள் புண்ணாகும். நாக்கில் கறுமை நிறமும் சேரும். வாந்தியெடுக்கும்.

பரிகாரம்:- கணபதி பூஜைசெய்தால்குறைவடையும்.

## நிவேதனப் பொருள்கள்

இடுநெற்பொரியும்பாலுஞ் சீனியு மாங்கனியுமிளநீருஞ்
சுடுமப்பமுமாலங்காயுந் துவரைப்பொரியுங்கடலைகளும்
நெடுநற் கரும்புஞ் சிறுகிழங்கு நெய்யுந் தேனுஞ்
சர்க்கரையுஞ்
வடுவற்றிடும் பாகும்பயறு மதமுகற்குவ ழங்கிடுமே. (37)

(இ-ள்) நெற்பொரி பால்
சீனி மாம்பழம்
இளநீர் அப்பம்
ஆலங்காய் துவரை
பொறி கடலை
கரும்பு சிறுகிழங்கு
நெய் தேன்
சர்க்கரை பாகு
பயறு

முதலான வஸ்துக்கள் கணபதியின் நிவேதனத்திற்கு உகந்தவைகளாகும்.

**கிரகங்களுக்கும் தேவதைகளுக்கும் பூஜை கிரமங்கள்**

வழங்குந் தேவபூசைகளு மற்றக்கிரக சாந்திகளும்
முழங்கும்பிராமணபோசனமும்மொழியும்பலசாந்தியும்
பழங்குந் திரப் பரிகாரம் பண்ணுந் தண்ணீருணர்வு பின்னை
கழங்கும் பருந்துஞ் சேகரத்தாய் கருதிப் புகல்வன் காசினிக்கே. (38)

(இ-ள்) மேலும் பகவதாராதனைகளும், கிரகங்களுக்கு சாந்திகளும், பிராமணர்களுக்குப் போஜனமும், இதர சாந்தி பரிகாரங்களும் செய்யவும்.

**ஜ்வரம், எரிச்சலுக்குப் பச்சிலைக் கஷாயம்.**

காசில் சாணுக்கிப்பொன்னுங்காணி சமூலமுங்கொள்
பேசில் மாமபூவும் பிறங்கில் நிலவேரும்
தேசு செரியும் சிறுபயறுந் தன்னுடனே
மாசிலா நெல்லு மடமடவே கூட்டிடுமே. (39)

கூட்டிய கொத்தமல்லி குணவிய மணவிளைடை
போட்டுநீ வறுத்து நெல்லுப் பொரிந்ததோர் பதமதானல்
யீட்டிய வெண்ணெய் போட் டங்கித் தண்ணீர் விட்டிறக்கி
காட்டிடுபற்படகந்தன்னைகரைத்துநீகுடித்திடாயே. (40)

குடித்தபோது கொடிய சுரத்துடன்
பிடித்த தாகம் பெருகுமுழலையுக
தடித்ததென்னத் தபனமு மாறிடும்
வடித்து நீரை வதகயினிற் கொள்ளுமே. (41)

(இ-ள்) சாணுக்கிப்பூண்டின் சமூலம்
பொன்னுங்காணிச் சமூலம்
மாம்பூ
பிறங்கில்வேர்
சிறுபயறு
நெல்
கொத்தமல்லிவிதை

இவைகளையொரு சட்டியிலிட்டு வறுக்கவும். நெல் நன்றாகப்பொரிந்தவுடன்வெண்ணெய்போட்டுதண்ணீர் 8 மடங்கு விட்டு ஒரு உழக்கு ஆகும் வரை எரித்து வடிக் கட்டி உட்கொள்ளவும். இந்த கஷாயத்துடன் பற்பாடகத்தை (1 வராகனெடை) எடுத்து அரைத்துப் பருகவும். ஜ்வரம், தாகம், எரிச்சல், வெப்பம் இவைகளைத் தீர்க்கும்

**கபம், பித்தம், நெஞ்சுக்கரிப்புக்குக் 'கருவேலங் கடுகு'**

கொண்டுபின் வேலந்தோலைக் குறுகவேயிடித்து நீரின்
மண்டவேகரைத்துக் காய்ச்சி வற்றிநா லொன்றதானல்
றண்டிடமது ரமேலந் தயங்குவேர்க கொம்பிந்துப்பு
விண்டிடுங்கொத்தமல்லி மிளகுகடுக்காய் கூட்டே (42)

கூட்டியோர் நிறையிற்கொண்டு குலவியபுளியந்தோலின்
னீட்டிய சாற்றினலே இவையரத்தேமுன் காய்ந்னு
காட்டிய கஷாயத்திட்டுக் காய்ச்சியே திரண்டவாறே
மீட்டிநீயிறக்கிக் காலின் விசையுடனக்கிக்கொள்ளே (43)

அடக்குசிலேத் துமங்கள் பித்த மடந்தநெஞ்சுரப்புத்
திடத்தநாவறட்சித் தண்ணீர்த் தாகமிங் கிவைகள்தீரும்
மடக்கிநீ யரிசிதன்னை வறுத்துப்பின் னிலவேர்சுக்குச்
சடக்கென நீதான் சீலேதனில் கட்டிக்கஞ்சிகாய்ச்சே (44)

(இ ள்) கருவேலம்பட்டையைக்கொண்டுவந்து கல் உரலிலிட்டு இடித்து 8 மடங்கு தண்ணீருடன் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்து நாலிலொன்முன பின்னர் இறக்கவும். இக்கஷாயத்துடன்,

| | |
|---|---|
| அதிமதுரம் | ஏலக்காய் |
| சுக்கு | இந்துப்பு |
| கொத்தமல்லிவிதை | மிளகு |
| கடுக்காய்த்தோல் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்துப் புளியம் பட்டைச் சாறு விட்டரைத்துக் கலந்து மறுபடியும் அடுப்பில் வைத்து நன்முக இறுகிய பின்பு இறக்கவும்.

இதில் ஒரு சுண்டைக்காயளவெடுத்து 2 வேளை உட்கொள்ளக் கபம், பித்தம், நெஞ்சுக்கரிப்பு, நாவறட்சி தண்ணீர்த்தாகம் முதலானவை தீரும்.

பத்தியம்:— அரிசியை வறுத்து, சுக்கு, நிலவேர் இவைகளையும் மூட்டைகட்டிப்போட்டுத்தண்ணீர்விட்டு கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும்.

**சந்நிவாதச் சுரத்திற்குச் சிகித்ஸாக்ரமம்.**

காய்ச்சியே கொடுத்துப் பின்னைக் கருதுநாள் ஏழுசென்றால்
நோச்ச போரிரண்டு நேர மதுவன்ற பட்டிணிதான் விட்டு
தீச்சிடுஞ் சந்நிவாதஞ் செலுஞ்சுரந் தீரும் வண்ணம்
மூச்சறக் குடிநீர்க் காய்ச்சு முதற்குடி நீயே. (45)

(இ-ள்) முன் கூறிய கஷாயத்தை ஏழு நாட்களுக்குக் கொடுக்கவும். பின்னர் 2 வேளையும் ஆகாரம் சாப்பிடாமல் பட்டினியாக இருக்கவும். சந்நிபாதம் தீரும்.

**சந்நிபாத ஜ்வரத்திற்குப் ''பலாகுடுச்யாதி கஷாயம்,**

நீராசேரி சித்தமட்டி சிறுகாஞ்சோறி நன்ஞரி
நெடிதான போர்மட்டி நிகழ்ந்தவிதை தன்னிலவே

தார்செறிமுத் தக்காசு வேர்க்கொம்பு சீந்தித்தண்
டோரொன்று கழஞ்சாகத் தனித்தனி
கொண்டிடித்து
வாராம்புனலங் கிருநாழி வார்த்தெட்டொன்றாய்
வற்றினதிப்பிலிதேன் வகைப்படியிட்டருந்திற்
சூராசெறியுஞ் சந்நிவாதஞ் சுரஞ்தீருமடவே சொல்
வன்னிரண்டாங்குடிநீர் துடியிடைவேல்விழியே(16)

(இ-ள்) சித்தாமுட்டிவேர் சிறுகாஞ்சோறிவேர்
நன்னாரிவேர் பேராமுட்டிவேர்
கோரைக்கிழங்கு சுக்கு
சீந்தில்கொடி

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னபடி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்றவைத்துத் திப்பிலிச்சூரணம், தேன் இவைகளையும் அதிலிட்டு உட் கொள்ளவும். சந்நிபாத ஜ்வரங்கள் தீரும்.

### பற்பல ஜ்வரங்களும் "கண்டியாதிக் கஷாயம்.

வேற்கொம்பு திரிபலை தாமரைவளையங் கோட்டம்
வெட்பாலையரிசி புடோல வேம்பீர்க்கு சந்தம்
மேற்றங்கு மிருவேலி கொத்தமல்லி நெய்தற்
கிழங்கு பற்பாடக மிலாமிச் சுடனே
பார்தங்கு முந்கிரிகைப் பழமுடனே பேரீச்சுப்
பழந் தேவதார மிலுப்பைம்பூ முத்தக் காசு
சீர்தங்கு ரோசனை பங்கம் பாளையுடன்
சிறுகாஞ்சோறி கொள்ளோ ரிருகழஞ்சே. (47)

இருநாழி நீரெட் டொன்றாகக் காய்ச்சிக்
கருதான தேன்திப் பிலிதூள் கலந்தாரென்றே
யருதாகக் கெட்டாகு சுரமானதெல்லாம் வாங்கிப்
பருகாத முன்னம் பாருமிது போமே. (48)

| | |
|---|---|
| (இ-ள்) சுக்கு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| தாமரையிலையின் உட்சுருள் | கோஷ்டம் |
| வெட்பாலையரிசி | பேய்ப்புடல் |
| வேப்பம் ஈர்க்கு | சந்தனத்தூள் |
| வெட்டிவேர் | கொத்தமல்லி விதை |
| நெய்தற்கிழங்கு | பற்பாடகம் |
| இலாமிச்சம்வேர் | திராக்ஷப்பழம் |
| பேரீச்சம்பழம் | இலுப்பைப்பூ |
| கோரைக்கிழங்கு | குரோசானி ஓமம் |
| ஆடுதீண்டாப்பாளைவேர் | |
| சிறுகாஞ்சோறிவேர் | தேவதாகு |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதம் எடுத்து இடித்துத் தூள் செய்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி (சின்னப்படி ஒன்று) விட்டு எட்டிலொன்றாகும்வரை வற்றவைத்து இறுத்துத் தேன், திப்பிலிச்சூரணம் இவ்விரண்டையுமிட்டு உட்கொள்ளவும். பற்பல ஜ்வரங்களும் தீரும்.

**சுரங்களுக்குக் ''கரிப்பாலைத் தண்டாதிக் கஷாயம்''.**

பாராய் கறிப்பாலைத்தண்டு படருங்குதிரை வாலிகுமிழ்
சீரார் வேர்க்கொம் பதிவிடயம் கிருதேக் கோடு கண்டகாலி
நீரார் கோட்டம் பெருங்குரும்பை நிலவேம்போடு கீழ்நெல்லி
வாரா விட்டுணுக் ராந்தி கொத்த மல்லிமா மதுர மரமஞ்சள். (49)

மஞ்சாற் குழலா யோரொன்று வாங்கிக் கழஞ்சாகக்
கெஞ்சா திருநாழியுனலெட்டொன்றாக்கியபின்[கொண்ட
பஞ்சாரித்துப் புத்தேன்திப் பலிமேற் பொடியாய்ப் பருகிடிலே
நஞ்சா யெரியுஞ் சுரமிவைதான் நளிநீ ரெனவே குளிர்ந்திடுமே. (50)

| | |
|---|---|
| (இ ள்) கறிப்பாலேத்தண்டு | நிலக்குமிழ் |
| முதியார் கூந்தல் | சுக்கு |
| சிறுதேக்கு | அதிவிடயம் |
| கண்டங்கத்திரிவேர் | கோஷ்டம் |
| பெருங்குறும்பை | நிலவேம்பு |
| கீழாநெல்லி | விஷ்ணுக்கிராந்தி |
| கொத்தமல்லிவிதை | அதிமதுரம் |
| மரமஞ்சள் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை **வீதமெடுத்து** இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம்சின்னப்படி ஒன்று (2½ சேர்) விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக் காகக் காய்ச்சி, அதனுடன் இந்துப்பு, தேன், திப்பிலிச் சூரணம் இவைகளையிட்டுஉட்கொள்ளவும். குளிர்காய்ச் சல் முதலானவை தீரும்

## வாதகப சந்நிபாத ஜ்வரங்களுக்குக் ''கோவையெண்ணெய்''

குளிருங்காக்கங் கோவைநொச்சிக் குலப்பேய்ப்பருத்திச்
சமூலமற்ற
வெளிரும் வேலிப் பருத்தியுடன் மிக்கவாத மடக்கியிலை
ஒளிருஞ் சாறென்றிரு நாழி உள்ளே கரைக்கு மருந்
தரத்தை
தெளியுஞ் சிவனர் வேம்புடனே தேவதாரஞ்
செவ்வியமே.

செவ்விதா னிலக்குமிழ்வேர் சிறுமூல மிந்துப்புமின்
கெவ்வமில்லாத்தியாலியோடிலவங்கம் வெட்பாலையரிசி
குவ்வுளோ ரோண் சீதேவி குலவு மீசுரமூலி
கவ்வையோர் தகரைகண்டங் காலிசிவதை வேர்க்
கொம்பே. (52)

கொம்பே வெளுத்தைப் பிசினேடமுக்கிராவேர்
சுழல் வாலுளுவை
வம்பே செறியு மரமஞ்சள் வளர்சித்தமட்டி கருஞ்சீரகம்

நம்பேரொன்று கழஞ்சு கொண்டு நறுக்கியரைத்துக்
கரைத்ததிலே
நிம்பந்தில மேரண்ட வெண்ணெய் நிறையிற் கூட்டி
யெரித்திடுமே. (53)

எரித்து வடித்துத்தலேதனிலு மிட்டேயுள்ளுங்
கொடுத்துநக்க
முரித்தாய் மன்னில் வாதசிலேத்தும சுரத்தினுட் புகுந்து
திரித்தே சந்நி வாதசுரத் தைத்தீற்குமெண்ணெ
யிதுவேபார்
மரித்தே போக வேண்டாம்நீர் வல்லீராகிற்
செய்யீரே. (54)

(இ-ள்) கோவைத்தண்டு நொச்சி
பேய்ப்பருத்தி சமூலம் வேலிப்பருத்திவேர்
வாதாமடக்கியிலே

இவைகளின் சாறு வகைக்குச் சின்னப்படி 1 இவைகளை யொன்றுகலந்து.

| | |
|---|---|
| சிவனர் வேம்பு | தேவதாரு |
| செவ்வியம் | நிலக்குமிழ் வேர் |
| திப்பிலி | இந்துப்பு |
| ஆத்திப்பூ | ஆலம் விழுது |
| கிராம்பு | வெட்பாலேயரிசி |
| சீதேவிசெங்கழுநீர் | முதியார் கூந்தல் |
| தகரைவிதை | கண்டங்கத்திரி வேர் |
| சிவதை வேர் | சுக்கு |
| வெளுத்தப் பிசின் | அமுக்கிராக் கிழங்கு |
| வாலுளுவையரிசி | மரமஞ்சள் |
| சித்தாமுட்டிவேர் | கருஞ்சீரகம் |

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை எடுத்து இடித்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து விழுதாக்கி முன்சாற்றிலே கலந்து,

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | (5 சேர்) |
| நல்லெண்ணெய் | ,, |
| விளக்கெண்ணெய் | ,, |

இவைகளையும் சேர்த்து ஒன்ருக்கி அடுப்பின் மேலேற்றி நன்ருக எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தில் காலஞ அளவெடுத்து உள்ளுக்கும் கொடுத்துத் தலையிலும் தேய்க்கவும். வாதகபச் சுரங்கள் சந்நிபாத ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

## பித்த ஜ்வர குணம்.

செய்யும் பித்தசுரந்தன்னிற் திகழுங்குணங்கள்
நாவுலரும்
பெய்யுஞ் சிறுநீர் சிவந்திருக்கும் பித்தஞ்சத்தி
யோக்காளம்
மெய்யும் வெதும்பும் வாய்கைக்கு மிடருவாய்புண்
ணுயுடம் பழத்தும்
நய்யக்கழியு மலமுடனே நயனந்தானு மஞ்சணித்தே(55)
மஞ்சாற்குழலாய் முகங்கறுக்கும் வாங்குந் தண்ணீர்
ருளிர்ந்துசிலிர்த்
தெஞ்சாவன்னம் வேண்டாங்கிதுதான் பித்தசுரமென்க
அஞ்சாதிதுதான் தோன்றினநாள் அன்றே தண்ணீ
ரடவுசொல்வேன்
விஞ்சாவில்ல வேரால் மிக்கக்கழஞ்சு கூட்டாயே. (56)

(இ-ள்) நாக்கு உலர்ந்துவிடும். சிறுநீர் சிவப்பாக இறங்கும் வாந்தியெடுக்கும். உடம்பில்எரிச்சல்அதிகரிக்கும். வாயில் கசப்புச்சுவை ஏற்படும். வாயில் அடிக்கடி புண்களுண்டாகும் கழிச்சலுண்டாகும் கண்கள் மஞ்சள் நிறமாகும். முகம் கறுநிறத்தையடையும் குளிர்ந்த தண்ணீரில் ஆசையதிகரிக்கும். அதிகமாகக் குளிரும். மயிர்கூச்சலுண்டாகும். சாப்பாடு இறங்காது. இவைகள் பித்த ஜ்வர லக்ஷணங்களாகும்.

**பித்த ஜ்வரத்திற்கு "வில்வாதிக் கஷாயம்" முதலியன**

கூட்டு சிற்றமட்டி சுக்கு கொண்டு மூன்று கழஞ்சு கட்டி
யீட்டுந் தண்ணீர் தனிற்காய்ச்சி யிறக்கியாத்திக்
கொடுத்திடுக

வாட்டும் வழுக்கை யிளநீரை வைத்தேயுலையாய்ச்
சோருக்கி
யூட்டு மெழுநாளிப்படியே யுவந்தெட்டாளு ளொன்று
செய்யே. (57)

இன்றும் வில்வம்வேர் கொம்புடனே சிற்ற மட்டிநேற்
றென்றும் பொரிபாதிரிவேர் சுரைத் தண்டொவ்
வொருநிறையாய்
கான்றங் கொத்த மல்லி பசும் பயறுகையாலோர்
பிடியிரண்டு
போன்று நாழி நீருழக்காய் பொரித்தூள் தேன்கூட்டிப்
புகட்டே. (58)

**(இ-ள்)** வில்வவேர் சிற்றுமுட்டிவேர்
சுக்கு

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கஷாயம் வைத்துக் கொடுக்கவும்.

2. வழுக்கையிளநீரை ஒரு பாத்திரத்திலிட்டு அதில் அரிசியையிட்டுச் சோருக்கிக் கொடுக்கவும். 7 நாட்களுக்கு இவ்வாறு கொடுக்கவும்.

3. வில்வவேர் சுக்கு
சிற்றுமுட்டி பாதிரிவேர்
சுரைத்தண்டு

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை
கொத்தமல்லி விதை ஒரு பிடி
பச்சைப்பயறு ,,

இவைகளையுமிட்டு இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக வற்றவைத்து உட்கொள்ளவும். உட்கொள்ளுமுன் நெற்பொரியின் தூள், தேன் இவைகளைக் கூட்டிச் சாப்பிடவும்.

## பித்த ஜ்வரத்திற்குக் குடுச்யாதி கஷாயம்.

புகழுஞ் சீந்தில் பற்படகம் பூசுசந்தன மிலாமிச்சந்
திகழும் வேர்க்கொம் பிருவேலி சித்தமட்டி முத்தகாசு
தகவேயொன்றோர் கழஞ்சுதனிற் தண்ணீரிரண்டு
சுகமாமு ழக்காயாக்கிக் குடித்தால்ச் [நாழிவிட்டுச்
சோறும் பித்தசுரந்தானே. (59)

(இ-ள்) சீந்தில்கொடி பற்பாடகம்
சந்தனத் தூள் இலாமிச்சம் வேர்
சுக்கு வெட்டிவேர்
சித்தாமுட்டிவேர் கோரைக்கிழங்கு

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை யெரித்துப் பருகவும். பித்த ஜ்வரங்கள் தீரும்.

## பித்த ஜ்வரம். இரத்தக் கழிச்சலுக்கு உசீராதி கஷாயம்

தானேயிருவேலி வேர்க்கொம்பு டன்தங்குமிலாமிச்
சரசந்தோல்
கானே சேர்முத் தக்காசு காஞ்சோறிபங்கம்
பாளைகோட்டம்
தானே கழஞ்சொன் றிருநாழி தண்ணீருழக் காய்
ஊனே யுருக்கும் பித்தஜ்வர முதிரக் கழிச்சல் [காய்ச்சி
மாறிடுமே. (60)

(இ-ள்) வெட்டிவேர் சுக்கு
விலாமிச்சம்வேர் கோரைக்கிழங்கு
காஞ்சோறிவேர் ஆடுதீண்டாப்பாளை
கோஷ்டம் அரசம்பட்டை

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் $2\frac{1}{2}$ சேர் விட்டு அடுப்பின் மேலேற்றி

காலேயரைக்கால் சேராகுமட்டும் வற்றவைத்து உட்கொள்ளவும். பித்த ஜ்வரம், இரத்தக் கழிச்சல் முதலானவை தீரும்.

**எவ்வித ஜ்வரங்களுக்கும் அதிமதுராதிக் கஷாயம்.**

மாருமதுரஞ்சித்தமட்டி வளர்பேரீச்சம் பழஞ்சந்தனம்
வீருவேர்க்கொம் பிருவேலி வேப்பீற்குடனே திரிபலேயுந்
தேருதேவ தாரமுந்திரி கைப்பழந்தாம ரைவளேயம்
கூருமெலும்பிச் சம்பூவும் குலவும் படோல
மிலாமிச்சே. (61)

மிச்சமில்லாதோ ரொன்றுவென்றிக் கழஞ்சா மிருநாழி
பச்சைநீர்தான் வார்த்துழக்காய் பரிந்து காய்ச்சித்
தேனுடனே
இச்சைக்கூராஞ் சர்க்கரையு மிட்டுக்குடிக்கச்
சுரமெல்லாம்
மச்சமாக வோடு மென்று வரைந்தார் முனிவரானவரே
(62)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | அதிமதுரம் | சித்தாமுட்டிவேர் |
| | பேரீச்சம்பழம் | சுக்கு |
| | வெட்டிவேர் | வேப்பீர்க்கு |
| | கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| | தான்றித்தோல் | தேவதாரு |
| | திராக்ஷைப்பழம் | தாமரையிலேயினுட் |
| | எலுமிச்சம்பூ | பேய்ப்புடல் [சுருள் |
| | இலாமிச்சம்வேர் | |

இவைகளே வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்றவைத்து வடிகட்டித் தேனும் சர்க்கரையும் கூட்டிப் பருகிவரவும்.

## பித்த ஜ்வரத்திற்கு "இலுப்பைப்பூவாதி கஷாயம்"

ஆளவிலுப்பைப்பூ வெட்பாலே யரிசிபற்பாடக
மரமஞ்சள்
கான மிகுந்த நன்னாரி கழுநீர்க் கிழங்கு வேர்க்கொம்பு
பான மிகுந்த முந்திரிகைப்பழந்தா மரையின்
வளையமுடன்
ஊனறதா னெருசழஞ்சு வந்தேவாங்கென் ருேதினரே
ஓது தண்ணீ ரிருநாழி ஊட்டுழக்காய் காய்ச்சியிதில்
பாதி முலைப்பாலிட்டுப் பருகிற் பித்தசுரமெல்லா
மோது பிலங்களவை குறைந்து மீனுநீ ரெனவே
குளிருமெண்ணு
காதும் விளைவென் றருள்முனிவர் கருதிப் புகன்று
காட்டினனே. (64)

(இ-ள்)

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | வெட்பாலையரிசி |
| பற்பாடகம் | மரமஞ்சள் |
| நன்னாரிவேர் | செங்கழுநீர்க்கிழங்கு |
| சுக்கு | திராக்ஷைப்பழம் |
| தாமரையிலையினுட் சுருள் | |

இவைகளை வகைக்கு 40 குன்றியிடை எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு $2\frac{1}{2}$ சேர் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து இறுத்து அதனுடன், முலைப்பால் $\frac{1}{2}$ உழக்கு விட்டு உட்கொள்ளவும். பித்த ஜ்வரங்கள் தீரும். குளிர் ஜ்வரங்களுக்கும் நல்லது.

### மாந்த பித்த ஜ்வர குணம்.

குணஞ்சேர் மாந்த பித்தசுர மென்றிதுதான் செய்யுங்
குணங்கேளும்
தினந்தான் சற்றே குளிர்ந்திருக்கும் சிக்கு மலங்கள்
கழியாது
கனந்தான் படவே வெதுப்புங் கை கால்தான் சுடுக்கு
நாபிசுத்த
மனந்தான் சலிக்க வலிக்குமுந்தி வயிறு கழிய
வழி செய்யுமே. (65)

**(இ-ள்)** உடல் குளிர்ந்திருக்கும். மலச்சிக்கலேற்படும். உடம்பில் எரிச்சல் உண்டாகும். கைகால்கள் கடுக்கும். வயிறு வலிக்கும். பின்னர் ஒரு தடவை மலப்பிரவ்ருத்தி உண்டாகவாரம்பிக்கும்.

## பித்த ஜ்வரத்திற்கு ஹரீதகியாதி கஷாயம்.

செய்யுங் குணங் கடுக்காய் கொத்தமல்லி
சிவதைப்பயறு வேர்க்கொம்பு
நைய்யுங் கடுகரோகிணியும் நறுக்கிக்காய்ச்சிக்
கொடுத்திடுகிற்
தொய்யும் வயிறு கழியும் பின் ாதான்றுங் கோட்டம்
வேப்பீர்க்கு
உய்யும் சிறுகாஞ் சோறிதேக் குடனே சத்த
நிலவேம்பே. (66)

நிலந்தான் புகழு மதிமதுரம் நெடியதாமாடா
தோடையின்வேர்
நலஞ்சே ரும்பற் படகமுடன் முந்திரிகைப்பழங்
காஞ்சோறி
சலந்தா னிருநாழியிற்காய்ச்சி யுழக்கிற்சர்க்க ரையிட்டு
கலந்தோர் குடிக்கிற் பித்தசுர மோடுங்
கண்டீருடம்பைவிட்டே. (67)

| | | |
|---|---|---|
| **(இ-ள்)** | கடுக்காய்த்தோல் | கொத்தமல்லிவிதை |
| | சிவதைவேர் | சுக்கு |
| | பயறு | கடுகரோகிணி |

இவைகளைச்சமனெடுத்து இடித்து8மடங்குஜலம்விட்டுக் காய்ச்சிப்பருகவும். வயிறு பேதியாகும். பின்னர்,

| | |
|---|---|
| கோஷ்டம் | வேப்பீர்க்கு |
| சிறுகாஞ்சோறிவேர் | சிறுதேக்கு |
| நிலவேம்பு | அதிமதுரம் |
| ஆடாதோடைவேர் | பற்பாடகம் |
| திராக்ஷைப்பழம் | காஞ்சோறிவேர் |

இலைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்றவைத்துச் சர்க்கரையிட்டு, உட்கொள்ளவும். பித்த ஜ்வரங்கள் தீரும்.

**தாக ஜ்வர குணம்.**

உடம்பிற் தோன்றுந் தாகசுரத் துள்ள குணத்தைக்
கேளுமினி
திடஞ்சேர் நலம்போ லேகாயுந் தீட்டுந்தாக மாற்றுமற்
கடந்த கைகால் வயிறெரிக்கு கடுக்குமழலா யுடம்
பழத்துங்
கிடந்து புரளு மெழுந்திருக்குங் கிளர்ந்த நாவு மூலர்ந்
திடுமே. (68)

வரளும் நாக்கு அக்கரம்போல் வடவைபோலவே
யெரியும்
புரளும் பித்தந் தன் வாயாற் போதவூறு மூர்ச்சிக்குந்
திரளுந் தனமாதே! யுழற்று செய்யும் வாதை
பலவிதற்குந்
தாளம் போலக் குளிர்களு நீர்தனிற் பூவைப்பொட்டண
மாய்க்கட்டே. (69)

(இ-ள்) சுரமடிக்கும், தாக வறட்சி அதிகமாகும். கை, கால்கள், வயிறு முதலான உறுப்புகளில் வலியேற்படும் உடம்பில் அழற்சியுண்டாகும். அடிக்கடி படுக்கையில் புரளுவான் எழுந்திருப்பான். நாக்கு உலர்ந்து போகும். வடவாக்னிபோல் உடம்பு தகிக்கும். பித்தம் வாயில் ஊறும். அடிக்கடி மூர்ச்சையடைவான்.

**தாகச்சுரத்திற்கு ஹிதமான வஸ்துக்கள்.**

கட்டிப்பன்னீர் கஸ்தூரி கதிக்குஞ் சந்தனங் கற்பூரம்
பொட்டிற்றப்பி முகந்திருக்க பொறுக்குந் தபனமு
மூலபித்த
மேட்டிக்கமுநீர் கஸ்தூரி உடனே சந்தனம் பன்னீரும்
பட்டிற்பொறியுங் குங்குமம் பச்சைக்கற்பூ
ரமுந்தேடே. (70)

தேடியரைத்துக் கரைத்துமண்ணிற் சிறந்த
காகத்தினில் வரத்தங்
கோடிமுன்னே கலந்ததனை வைத்துயர்த்தெறிநீர்
முகக்கவிடிற்
கூடிநின்றபித்தமுடன் கொடிதா முழலைப் பரிதாபம்
வாடியிருக்கும் படியுழலைப் வருத்துந்தாகச்
சுரம்போமே. (71)

(இ-ள்) குளிர்ச்சியான தண்ணீர் புஷ்பங்களைப் பொட்டணமாகக் கட்டிப்போட்டு, அதனால் முகம் கழுவவும். பன்னீர், கஸ்தூரி, சந்தனம், கஸ்தூரி மஞ்சள் முதலியவைகளையரைத்துத் தலைப் பொட்டில் பூசி இவைகளையே சிறு மூட்டையாகவும் கட்டி முகர்ந்து வரவும். உடம்பு எரிச்சல், வெப்பம், பித்தம் இவை போம்.

செங்கழுநீர்க்கிழங்கு, கஸ்தூரி, சந்தனம், பன்னீர், குங்குமம் பச்சைக்கற்பூரம்இவைகளை நன்கு அரைத்துத் தண்ணீருடன் கலந்து பருகிடினும் பித்தங்கள், எரிச்சல், தாகச்சுரம் முதலானவைகள் தீரும்.

## தாகந்தீர இளநீர் (ம்ருத்யாதி நீர்).

போமேகைகால் முகங்காடிப் புகட்டிக் கழுவிக்
கொப்பளித்துத்
தேமேவிளநீர் தனைச்சீவித் தெளிய ஆற்றியது தண்ணீர்
பூமே வியவர் கடரெல்லாம் புகழு மிருத்தியாதி தன்னைக்
காமேவியதா ரெனுங்குழலீர் கரைத்தே கரத்தாற்
கொடுத்திடுமே. (72)

(இ-ள்) கை, கால்கள், முகம் முதலான உறுப்புக்களைக் கழுவி, வாயையும் கொப்பளித்துவிட்டு, ஒரு இளநீரைச் சீவி ஒரு பாத்திரத்திலிட்டு, 4 அல்லது 5 தடவை ஆற்றி உட்கொள்ளக் கொடுக்கவும்.

## உழலைதீரக் கழுநீர் (வானவாத்திரம்).

கொடுநீசமமாப் பச்சரிசி யிலங்குநீரிற் கழுநீரை
வடுவேதீர வடித்ததிலே வாசந்தேலஞ் சீரகத்தி

ஞெடுபார் புகழ்சாத் திரவேதி யுவக்குங் கோரோ
சனையுரைத்துக்
கொடுசீ ஸியிலது உழலைதன்னைக் குலைக்கும்வான
வாத்திரமே. (73)

(இ-ள்) பச்சரிசியைக் கழுவியெடுத்த கழுநீருடன், ஏலக்காய், சீரகம், சாத்திரவேதி (கொடுக்காய்ப்புளி) கோரோசனை முதலியவைகளைப்பொடிசெய்துபோட்டுச் சர்க்கரை சேர்த்து அருந்தவும். உழலை அதாவது உடல் காங்கைகள் தீரும்.

## அழலை, ஜ்வரத்திற்கு வாழைக்கனிநீர்.

அத்திமரத்தின் வேர்வெட்டி அதிலேகலசம் வைத்தூறி
மெத்தவிந்தத் தண்ணீரில் மிகவுஞ்சீனி பேயனேனுஞ்
சுத்தவாழைக் கனிச்சாரத் துலங்கக் கலந்து பருகிடுகிற்
சித்த மயக்கமுழலைசுரந் தீருஞ் செய்துபாராயே. (74)

(இ-ள்) அத்திமரத்தின் வேரில் கொஞ்சம் செதுக்கி அதனடியில் ஒரு பாத்திரத்தை வைக்கவும். அதிலிருந்து பால் வடியும். அதில் பேயம் பழத்தை நறுக்கி நன்றாகக் கலந்து உட்கொள்ளவும். மயக்கம், எரிச்சல், ஜ்வரங்கள் முதலியவை தீரும்.

## உமிழ்நீர் வாந்திக்குப் "பன்னீர்ப் பூச்சு".

பாராயினிநீ மாறுதிதற்கம் பகருமிழ்நீர் மிகக்கொடுத்து
நீராய்சத்தி பண்ணிவித்து நிறையச் சாந்தும் பன்னீரும்
சீராருடம்பு தனிற்பூசி சிறக்கப்பேர்ந்து வைத்தக்காற்
போகாருழலை பரிதாபம் பொருந்து சுரமும்
போய்விடுமே. (75)

(இ-ள்) அதிகமாக உமிழ்நீர் வெளிவரும். தண்ணீர் போல வாந்தியாகும் அதற்கு நோயாளியின் உடலில் பன்னீரைப் பூசிவைத்தால் எரிச்சல், சுரம் முதலியவைகளுடன் முற்கூறிய குறிகளும் நீங்கும்

### வாதசந்நிக் குறி குணங்கள்

பொனவிற் பரிகாரங்கள் பொருத்த பலவுஞ் செய்தால்
தானமுத்தெழுந்த தாபங்களது தீந்தா.........
லானமைக் குழலீரும்போ தணுகிடும் வாதசந்நி
யீனமுத் தடராவண்ண மிதன்குணமறிந்து செய்யே (76)

(இ-ள்) பரிகாரங்கள் செய்தபோது தாபங்கள், சுரம் முதலானவைகள் நீங்கிப் பின்னர் மாதரையணுகும் போது திரும்பவும் உண்டானல் அது வாதசந்நியாகும்.

### வாதசந்நியை அறியும் விதம்.

அறியும்நாடி களும்தூய வணிமுகக்குறியும் வேராய்க்
குறிகளும் மந்தமான குணமுஞ்செய் குறியுங்கண்டே
நெறியுட னவைகள் தன்னை நீங்கியே பேணிக்கொண்டு
பிறிவிலா திருந்து நீதான் பின்பரி காரஞ்செய்யே. (77)

(இ-ள்) நாடிகள், முகக்குறிகள் முதலியவைகளைப் பார்த்து வாதசந்நியை நிச்சயிக்கவும்.

### சுரங்களுக்குத் திராக்ஷாதிக் குடிநீர்.

செய்திடுங்குடிநீர்கேள் முந்திரிகைப்பழம்வேர்க்கொம்பு
நெய்தலின் கிழங்குசந்த நெடுங்குமிழ் முத்தக்காசு
கொய்தசெங் கழுநீர்நத்தச் சங்கிருவேலி லாம்பிச்சு
மைய்மிலிலுப்பைப்பூவோ டதிமதுரமும்
நீயதுகொள்ளே. (78)

கொள்ளும் வெள்ளுலோத்திரம் குலவுதாமரைக்கொடி
யுள்ளுநீயு வந்துதண்ணி லொக்க விதுகூட்டியே
துள்ளுநீ ரிரண்டுநாழி தோயத்துழக் கதானபின்
நள்ளிரா விடிந்தபோது நாவினி லருந்திடாயே. (79)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | திராக்ஷைப்பழம் | சுக்கு |
| | நெய்தல்கிழங்கு | சந்தனம் |

| | |
|---|---|
| குமிழ்வேர் | கோரைக்கிழங்கு |
| செங்கழுநீர்க்கிழங்கு | சங்கம்வேர் |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| இலுப்பைப்பூ | அதிமதுரம் |
| வெள்ளிலோத்திரம் | தாமரைக்கொடி |

இவைகளை வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, சுத்த ஜலம் 2 நாழி (சின்னப்படி ஒன்று) விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்கானப்பின் இறக்கி விடியற்காலையில் அருந்தவும்.

**உள்காங்கைக்குக் கொத்தமல்லிக் கடாயம்.**

அருந்தவே கொத்தமல்லி சீந்திலான முத்தக்காசு வேர்ப்பீர்க்கு
இருந்ததானி நெல்லிமேலெழும் புடோலுடன் கரும்பு
பொருந்தவோர் கழஞ்சிரண்டு பொங்கிருநாழிநீரில்
வருந்திட வுழக்க தாமருந்தருந்த மாறுமே. (80)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கொத்தமல்லி விதை | சீந்திற்கொடி |
| | கோரைக்கிழங்கு | வேப்பீர்க்கு |
| | தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| | கரும்பு | பேய்ப்புடல் |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காகிய பின்பு இறக்கி உட்கொள்ளவும். காங்கைகள் நீங்கும்.

**அதிசார நிதானம், பித்தவதிசாரக் குணம்.**

மாறும்பித்தவதிசாரம் வருத்துங் குணங்கள் கேளுமினி
கூறுங்கிளியே பலவிதமாய்க் குழைவயறு கழியுமிக
வீறும் வயிற்று நடுவே நேரம் வேண்டா துணவு வயிறுதிரைக்கு
மூறுந் தண்ணீர் வேண்டும்நதிப் புண்டாஞ் சற்றே வெச்செனவே. (81)

(இ-ள்) பலவிதமாக வயிறு பேதியாகும் வயிற்றில் வலியுண்டாகும். உணவு உட்செல்லாது வயிற்றில் இரைச்சல் அதிகமாகும். அடிக்கடி தாக வரட்சியேற் படும்.

### பித்த அதிசாரத்திற்குக் கோஷ்டாதி கஷாயம்.

வெச்சென வெண்ணிருக்குந் தவிப்புண்டா மிகப்பேன்
தலைவிட்டூர்ந்துவரு
மச்சந்தருங்கண்ணு யிதனுக்காகுங் குடிநீரடவு
சொல்வேன்
மெச்சுங்கோட்ட மதிவிடய மிருவேலி லாமிச்சந்தோல்
பச்சென்றிருங் காவிரந்தோல் பற்படாகமத்திப்
பட்டையுமே. (82)

பட்டங்காக வோரொன்று பதறிக் கழஞ்சாய்
நிறுத்ததிலே
விட்டங்கிருநா ழிபுனல்தான் மிகவும்வற்றி யுழக்காலல்
கொட்டங்காற்றி லதிசாரங் குலையுமெனவே தொல்புவி
கட்டங்குறவே மாமுனிவர் கருதியரைந்தார் [யில்
காதலித்தே. (83)

(இ-ள்) பேதி அதிகரித்துத் தவிப்பான். தலையில் பேன்களும் ஊறுமுணர்ச்சி உண்டாகும்.

இவைகளுக்கான கஷாயம்:—

| | |
|---|---|
| கோஷ்டம் | அதிவிடயம் |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| ஆவாரம்பட்டை | பற்பாடகம் |
| அத்திப்பேட்டை | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்ற வைத்து உட்கொள்ளவும். அதிஸாரங்கள் தீரும்.

### பித்தசுரம் பித்த அதிஸாரங்களுக்கு முஸ்தாதி கஷாயம்

காராமுத்தக் காசுசத்தங் கம்முங் கோட்டம் நன்னாரி
சீராசிறுகாஞ் சோறியுடன் தேவதாரம் பற்பாடகம்

நீராம் நளினந் தனில்வளையம் நிகர்வேர்க் கொம்பு
தன்னுடனே
பாராய்பங்கம் பாளையுடனசமோ தகமுந் தேடுகவே(84)
தேடுஞ்சேர வோரொன்று சிறந்தகழஞ்சாய்
நிறுத்ததிலே
ஓடும் புனல்தானிருநாழி யுடனே விட்டங் குழக்காக்கி
போடும்புதிய வதிவிடயம் பொடிநீர் போட்டருந்து
பித்தசுரம்
வாடும் பித்தவதிசாரம் மாறுமுடலு மங்காதே. (85)

| | |
|---|---|
| (இ-ள்) கோரைக்கிழங்கு | சந்தனத்தூள் |
| கோஷ்டம் | நன்னாரிவேர் |
| சிறுகாஞ்சோறிவேர் | தேவதாரு |
| பற்பாடகம் | தாமரையிலையினுட் சுருள் |
| சுக்கு | ஆடுதீண்டாப்பாளை |
| ஓமம் | [வேர் |

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து அதனுடன் அதிவிடய சூரணம் போட்டு(மூவிரல்கொள்ளுமளவு) உட்கொள்ளவும்.

பித்த ஜ்வரங்கள், பித்த அதிஸாரங்கள் முதலானவை தீரும்.

தாபஜ்வரம், விஷசுரம், சந்நிபாதஜ்வரங்களுக்கு
முலைப்பாலெண்ணெய்.

மங்கைப்பால் நானாழி பசும்பால்வள ரிள
நீரும்நாழியொரு நாழியெண்ணெய்
வேங்கைகொடு பிடுங்கும்வேர் சித்தமட்டிசீதே
வியார்முத்தக் காசோ டிருவேலிலாமிச்சு
சங்கைபெறு நன்னாரி யமுக்கிரா வரத்தை
சதகுப்பை நாகப்பூச் சந்தமகில் கோட்டந்

திங்களணி சடைமுடியா ரருள் சேருமருந்து
சிந்திக்கவென்றே பச்சிலை மாஞ்சில் கொள்ளே (86)

கொள்ளுமதுரங் கச்சோலங் கொண்டே செவ்
வள்ளிக்கொடி யேலமு ரோகணிவேர்க்
கொம்போடிலவங்கம்
வுள்ளுமர மஞ்சளுடனே தேவதாரம் வோரொன்
றிருகழஞ்சு வேர்க்கொம் பைங்கழஞ்சு
மெள்ள வரைத்துக் கரைத்துப் பதத்திலே வடித்து
மேலும்பூசித் தலைமேலும் வார்த்திடவே
துள்ளுபரி தாபசுரம் விஷசுரம் சந்நிவாத சுரந்
தணிந்து போமே. (87)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | முலைப்பால் | 4 படி |
| | பசுவின் பால் | 1 ,, |
| | இளநீர் | 1 ,, |
| | சுத்தமான நல்லெண்ணெய் | 1 ,, |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| வேங்கைவேர் | சித்தாமுட்டிவேர் |
| சீதேவிசெங்கழுநீர் | கோரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| நன்னாரிவேர் | அமுக்கிராங்கிழங்கு |
| சிற்றரத்தை | சதகுப்பை |
| சிறு நாகப்பூ | சந்தனத்தூள் |
| அகில்கட்டை | கோஷ்டம் |
| அதிமதுரம் | பூலாங்கிழங்கு |
| செவ்வல்லிக்கொடி | ஏலக்காய் |
| கடுகரோகிணி | சுக்கு |
| கிராம்பு | மரமஞ்சள் |
| தேவதாரு | |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து

இடித்து இளநீர் விட்டு நன்முக வரைத்து, அவைகளை யொன்று கலந்து அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத் தலையிலும், உடலிலும் பூசிக் கொண்டுவரத் தாபஜ்வரங்கள், விஷஜ்வரங்கள், சந்நி பாத ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

### வாத பித்த சுர குணம்.

துணிந்தே தோன்றும் வாதபித்தச் சுரத்தின்
குணங்கே ளுடம்புலையும்
பணிந்தே கூந்தல் விடுவதுவும் பத்துவதுவு மாயிருக்குந்
திணிந்தே வயிறு கழியுமுடல் தானேவற்று முகம்
வியர்க்குந்
தணிந்து விடாமல் மிகவெதும்புந் தந்தங் கன்னஞ்
சிலிரிடுமே (88)

சிலபோதுணர்ச்சி கெட்டிருக்குஞ் சிறுகா லேவாய்
தித்திக்கும்
பலகாலும் வாய் கைத்திருக்கும் படருள் ளுழலை
யுளதாகுந்
தலமீதிதற்கும் பரிகாரந் தண்ணீரடைவு தனைப்புகலில்
பலகார் விழியாய் முனிவேர்க் கொம்பாறு கழஞ்சு
தேடுகவே. (89)

(இ-ள்) உடம்பில் குத்துவலி யேற்படும் தலைமயிரை அவிழ்த்தும் கட்டுவதுமாக இருப்பான், வயிறு கழிச்சல் உண்டாகும். முகம் வற்றும். வியர்வை அதிகமாகும். உடம்பில் எரிச்சல் அதிகரிக்கும். பற்கள், கன்னம் முதலான இடங்கள் சில்லிடும். சிற்சில சமயங்களில் உணர்ச்சி கெடும். சில நேரங்களில் வாயில் தித்திப்புச் சுவையுண்டாகும். பொதுவாக வாயில் கைப்புச் சுவை யிருக்கும். உள் காங்கை நிற்கும்.

### வாதபித்தசுர, அதிசாரங்களுக்கு வேர்க்கொம்பு கடாயம்.

தேடும் பொரியுஞ் சிறுபயறுந் தேவதார முக்கழஞ்சும்
பேடும் புதிய விருநாழி புனலில்க் காய்ச்சி நாழிசெய்து

நாடும் புனலிப் படியெழு நாளுங் காய்ச்சிக்கொடுத்ததற்
கோடுங்குவடு நிகரமுலேயாய்!முற்முடி நீரடைவு [பின்
கூறுகவே. (90)

*கூறுஞ் சீந்தில் கழஞ்சாகக் கூட்டும் புனலங் கிருநாழி
உள்ளுட்டுழக்காய் காய்ச்சி நீடும் படுந்திப்பிலிப்
பொடியை
யிட்டருந்து நெறியறிந்தே. (91)

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | சுக்கு | 6 கழஞ்சு | ($\frac{3}{4}$ பலம்) |
| | பொரி | 4 ,, | ($3\frac{3}{4}$ வராகனெடை) |
| | சிறு பயறு | ,, | |
| | தேவதாரம் | ,, | |

இவைகளை யிடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் $2\frac{1}{2}$ சேர் விட்டு, அடுப்பின் மேலேற்றிப் பாதியாகச் சுண்டக் காய்ச்சவும். இதனைப் பருகவும்.

(2) சீந்தில்கொடி ஒரு கழஞ்சு ($1\frac{1}{4}$ வராகனெடை) யெடுத்துச் சுத்தஜலம் 2 படி விட்டு ஒரு உழக்காக்கித் திப்பிலிச் சூரணம் ஒரு குத்தளவு போட்டு உட்கொள்ளவும்.

ஜ்வரங்கள், அதிஸாரங்கள் முதலானவை தீரும்.

**பித்த ஜ்வரங்களுக்குத் "திரிபலாதிக் குடிநீர்".**

அறிந்தே யிரண்டாங் குடிநீ ரடைவு கேளுந்திரிபலையுஞ்
செறிந்த விளாவிலாமிச்சுச் சீவும் வேர்க்கொம்
போரொன்றுப்
பிறிந்த கழஞ்சிறு நாழிபெரு நீர் புகட்டி யுழக்காக்கி
உறுஞ்சி விடுங் காண் திப்பிலிதே னுடனே குடிநீ
ருண் கலந்தே. (92)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| | தான்றித்தோல் | விளா |
| | இலாமிச்சம்வேர் | சுக்கு |

* இச்செய்யுளின் சீர் சரியில்லை.

இவைகள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து சுத்தஜலம் $2\frac{1}{2}$ சேர் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கித் திப்பிலிச் சூரணம் மூவிரல் கொள்ளுமளவும், தேனும் கூடவிட்டு உட்கொள்ளவும்.

## செவ்வியாதிக் கஷாயம்.

கலங்காதே செவ்வியங் கடுக்காய் கடுகரோகிணி சீந்தில் தண்டோ
டிலங்காவெனில் சேர் பற்படாக மிலாமிச்சுடனே மரமஞ்சள்
சலங்கா துறுங்காஞ் சோறிதேவ தாரகஞ் சிறுமூ லகஞ்சுக்குப்
பலங்காணுறி லொன்றேரு கழஞ்சிற் பயந்தானிரு நாழிகூட்டே. (93)

நாழி தானேருழக்காஞல் நறுக்கித் தூயதிப்பிலித்தூள்
ளாழி மேவா திந்துப்பு வதுவே கலந்து கொண்டிடவே
தாழி மேவுங் குவளை விழிச் சயில மேவுந்தனமாதே!
கோழி கூவி விடிவளவில் குடித்தே தடித்துக் குலாவிடுமே. (94)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | செவ்வியம் | கடுக்காய்த்தோல் |
| | கடுகரோகிணி | சீந்தில்கொடி |
| | பற்பாடகம் | விலாமிச்சம்வேர் |
| | மரமஞ்சள் | தேவதாரு |
| | காஞ்சோறிவேர் | திப்பிலி |
| | சுக்கு | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டுஅடுப்பின்மேலேற்றி ஒரு உழக்கு ஆகுமட்டு மெரித்துத் திப்பிலிச் சூரணம், இந்துப்பு இவ்விரண்டையும் போட்டுப் பருகவும். விடியற்காலை 4 மணி சுமாருக்குச் சாப்பிடவும்,

## பித்த ஜ்வரம், அதிஸாரம் முதலியவைதீரக் "கீழாநெல்லிக் குடிநீர்".

குலவுங் கீழ்காநெல்லி புடோல கோட்டஞ்
சிறுதேக்கு சீந்தில்
நலவுசந்தனத்துடனே வேப்பலகு நாகப்பூபங்கம்பாளை
தல மேவிய காஞ்சொன்றி தேவதாரங்குமிழ்
முத்தக்காசு நன்னாரி
கலையார் மெருங்குரும்பை கடுகரோகிணியே ரதி
விடையே

அதிகங்கொள்ளாதொருகழஞ்சதாகக்கொண்டங்கதனை
கதிதங்கிருநாழி புனலின் காய்ச்சியுழக் கொன்றுன்கால்
விதிதந்தருள் சாதிப்பிலித்தேன் விட்டேயதனிற்
கலந்துகொண்டு
மதிகொண்டதனை யிருகரத்தால் வாங்கிப்பருகாய்
மனமுவந்தே. (96)

| (இ-ள்) | | |
|---|---|---|
| | கீழாநெல்லிச்சமூலம் | பேய்புடல் |
| | கோஷ்டம் | சிறுதேக்கு |
| | சீந்தில்கொடி | சந்தனத்தூள் |
| | வேப்பீர்க்கு | சிறுநாகப்பூ |
| | ஆறிதீண்டாப்பாளை | காஞ்சோறிவேர் |
| | தேவதாரு | குமிழ்வேர் |
| | கோரைக்கிழங்கு | நன்னாரிவேர் |
| | பெருங்குருப்பை | கடுகரோகிணி |
| | அதிவிடயம் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் $2\frac{1}{2}$ சேர் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக மட்டும் எரித்துத் திப்பிலிச் சூரணம், தேன் இவ்விரண்டையு மிட்டு உட்கொள்ளவும். பித்த ஜ்வரம், அதிஸாரம் முதலானவை தீரும்.

## ஜ்வரத்திற்குக் ''கொத்தமல்லியாதிக் கடாயம்''

உவந்தே கொத்தமல்லியுடனே சீந்தில் காஞ்சோறி
மருதஞ்
சிவந்தே யிருக்குங் கொன்றைத்தோல் சிறுமூலகமு
முத்தக்காசு
நவந்தானை பற்பாடக நன்னாரியிருவேலி
யவந்தீர குதிரைவாலி புடோலஆனதேவதாரமுமே (97)

தாராகுழலாய் வறள்முள்ளிவேர் தயங்குமிலாம்பிச்
சோறொன்று
நேராகத்தான் கழஞ் சரையாய் நிறுத்துக்கொண்டங்
கிருநாழி
சீராய்நீரிலிட்டுழக்காய் சிறுகக்காய்ச்சித் திப்பிலி தேன்
காராரிருளே போய்விடிந் துண்டால் கலங்கிச்
சுரம் போங்கனி மொழியே. (98)

| (இ-ள்) | | |
|---|---|---|
| | கொத்தமல்லிவிதை | சீந்தில்கொடி |
| | காஞ்சோறிவேர் | மருதம்பட்டை |
| | கொன்றைத்தோல் | திப்பிலி |
| | கோரைகிழங்கு | பற்பாடகம் |
| | நன்னாரி | வெட்டிவேர் |
| | முதியார்கூந்தல் | பேய்ப்புடல் |
| | தேவதாரம் | வறள்முள்ளிவேர் |
| | இலாமிச்சைவேர் | |

இவைகளை வகைக்கு 20 குன்றியளவெடுத்து இடித்துச் சூரணித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்ற வைத்துத் திப்பிலிச் சூரணம், தேன் இவ்விரண்டும் சேர்த்து விடியற்காலையில் உட்கொள்ளவும். ஜ்வரங்கள் தீரும்.

## வாதபித்த ஜ்வரத்திற்குச்
## சீதேவி செங்கழுநீரெண்ணெய்

மருந்தாஞ் சீதேவிவேர் சேவகன் பூடுடனே சீந்திற்
கிழங்கு
கடுதாமிலாமிச்சிருவேலி கடுகரோகிணி சீந்திலவங்க

மிருஞ்சீர மதுரங் கோட்டமேலஞ் செவ்வள்ளிக்கொடி
முருந்தார்தகையார் பெருங்குரும்பை முத்தக்காசு
துவற்சிகையே. (99)

சிகைசேர் மயிலே நன்னாரி சேரும் வேர்க்கொம்போ
ரொன்று
மிகைபார் மூன்று கழஞ்சு கொண்டு விரும்பியரைத்துக்
கரைத்ததிலே
வகையே நாழி யெண்ணெய் விட்டு வடித்துத் தலையில்
வார்த்துடம்பிற்
றுகையே பூசவாத பித்தசுரம் போமென்று
சொல்லுவரே.

(இ-ள்) சீதேவிசெங்கழுநீர்க்கிழங்கு, சேவகனார் பூண்டு, சீந்தில் கிழங்கு, விளாமிச்சம்வேர், வெட்டிவேர், கடுகரோகிணி, சீந்தில்கொடி, கிராம்பு, சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், கோஷ்டம், ஏலக்காய், செவ்வல்லிக்கொடி, பெருங்குறும்பை, கோரைக்கிழங்கு, கடுக்காய்த்தோல், நன்னாரிவேர், சுக்கு

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதம் எடுத்துச் சூரணம் செய்துதண்ணீர்விட்டரைத்துநல்லெண்ணெய் 5 சேர் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இத் தைலத்தைத் தலையில் தேய்த்துக் கொண்டுவர வாதசுரம் தீரும்.

## பித்த சிலேஷ்ம ஜ்வரகுணம்.

சொல்லும் பித்தசிலேட்டிம மாஞ் சுரத்தின்
குணங்கேளுடல் குளிரும்
மெள்ளமூச்சுண்டா யிருக்குமெத்த வெதும்பு
மிருமலுண்டாம்

வல்லநாவும் வரண்டிருக்கு மயக்கமுடம்பு வற்றுதங்
கல்லலுறவே பிதற்றும் வேர்வாகுமாறு படாமல்
அலைந்ததுவே (101)

அலைந்து தளந்து கழுத்தடியும் விடாமலே வேற்கும்
துடர்ந்த விருகண்வெளிறுமினிச் சொல்லும்
பரிகாரங்கேளும்

படர்ந்து சுக்கு கொத்தமல்லி பய்யநறுக்கிச் சீலைதன்
றடஞ்சேர் முலையாய்! கட்டியதைத் தண்ணீர் [னில்
தனிலிட்டுக்காய்ச்சே. (102)

காய்ச்சியிறக்கும் போதுபொரி கையாற்போட்டுப்
பின்னிறக்கி

வாச்சமருந்தை யிப்படியே வகையாய்க் காய்ச்சி
கூச்சமறவே கொண்டு பின்முற்குடிநீரடைவு [யேழளவு
கேள் கிளிபோற

பேச்சு மலைபோல் முலையும் பிடிபோல் நடையு
முளமயிலே!

(இ-ள்) உடலில் குளிர் அதிகமாகும். மூச்சு மெது வாக வெளிவரும். உடம்பில் எரிச்சலேற்படும். இருமல் ஏற்படும். நாவரட்சி யுண்டாகும். மயக்கம், உடம்பு இளைத்தல், பிதற்றல், அதிகமான வியர்வை இவைகளதி கரிக்கும். உடம்பு தளர்ச்சியுறும் கழுத்துப் பக்கத்தில் வியர்வை அதிகரிக்கும். கண்கள் வெண்மையுறும்.

சுக்கு, கொத்தமல்லி விதை இவ்விரண்டையும் நசுக்கி ஒரு துணியில்முடிந்து ஒரு பாத்திரத்திலிட்டுதண் ணீர் விட்டு நன்றாகக் காய்ச்சி இறக்குந் தருணத்தில் அதில் பொரியையிட்டுச்சுண்டவைத்துஉட்கொள்ளவும் இக்குடிநீர் பித்தகப ஜ்வரத்தைக் கண்டிக்கும்.

**பித்த அதிஸாரத்திற்குக் "குடுச்யாதி கஷாயம்".**

உளங்கொள் சீந்தில் திரிபலையுடன் வெட்பாலையரிசி
மற்றக்

குளஞ்சேர் கழுநீர்கிழங்குடனே கூடவோரொன்று
நிறைகூட்டி

துளவிடித்து நீர்விட்டுச் சுவற வெரித்தெட் டொன்ருக்கி
இளங்கொங் கைமுகிழ் முலையா யெட்டா நாளங்கிது
கொள்ளே. (104)

(இ-ள்) சீந்தில்கொடி கடுக்காய்த்தோல்
தான்றித்தோல் நெல்லிவற்றல்
வெட்பாலையரிசி செங்கழுநீர்க்கிழங்கு

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் எட்டு மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகும் வரை வற்றவைத்துப் பருகவும்.

பித்தஜ்வரம், அதிஸாரம் முதலானவை தீரும்.

**பித்தஜ்வர, அதிஸாரங்களுக்கு ''நிம்பாதி கஷாயம்''**

இதுதான் கொண்ட பின்னிங்கி ரண்டாங்குடிநீ
ரடவுகேள்
முதுவேப் பதனிற் பட்டைபுடோல் முத்தஞ்சந்த
மிருவேலி
மதுவார் நளினந் தனில்வளையம் வளர்வெட்பாலை
யரிசிக்குக்
கதுவார் நெல்லிக் கடுதான்றிக் கடுரோ கணியுங்
கடிதுகொள்ளே. (105)
கடிகாந்தேவ தாரமுத்தக் கா சோடிலாமிச் சிரு
கழஞ்சாய்
வடநீரிருநாழி யிட்டுவத்த வெரித்திட் டொன்ருக்கிப்
படிகா செடை தேன் மேல்வீசிப் பருகிங் கிதற்குப்
பின்னுமொரு
குடிநீ ரடைவு கேள் சுக்குக் கொத்தமல்லியுங்
தோட்டமுமே. (106)

(இ-ள்) வேப்பம்பட்டை பேய்ப்புடல்
கோரைக்கிழங்கு சந்தனத்தூள்
வெட்டிவேர் தாமரையிலையினுட்
சுருள்

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | சுக்கு |
| நெல்லிவற்றல் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | கடுகரோகிணி |
| தேவதாரு | கோரைக்கிழங்கு |
| இலாமிச்சம் வேர் | |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் 2½சேர்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகும் வரை யெரித்து வடிக்கட்டித் தேன் சிறிதளவு விட்டுப் பருகவும்.

**பித்தஜ்வர, அதிஸாரங்களுக்குச் (சுக்காதி கஷாயம்)**

கோட்டமான வேப்பலகுகொடியாஞ்சீந்தில் மரமஞ்சள்
வாட்டமில்லாக்கறிப்பாலைவளர் தண்டுடனேயதிமதுரம்
மீட்டஞ் சிறுகாஞ்சொறியுடனே யிம்பூரலினே
டிருகழஞ்சா
மீட்டுநீர் தானிருநாழி விட்டுக் காய்ச்செட்
டொன்ருகவே. (107)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சுக்கு | கொத்தமல்லிவிதை |
| | கோஷ்டம் | வேம்பீர்க்கு |
| | சீந்தில்கொடி | மரமஞ்சள் |
| | கரிப்பாலைத்தண்டு | அதிமதுரம் |
| | சிறுகாஞ்சோறிவேர் | இம்புரல்வேர் |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சூரணஞ்செய்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கி இறக்கவும். இதனைப் பருகிவரவும்.

**பித்த அதிஸாரங்களுக்கு (முஸ்தாதி கஷாயம்)**

ஒன்ருயத்தாளுெருகழஞ்சுடனே குடியங்கின்னமுங்கேள்
குன்ரு முத்தக்காசு கோட்டங் கொன்றைப்
பழத்தோலிலாமிச்சு

கன்று வடவிக் கச்சோலம் காட்டுமரமஞ்சளுடனே
நன்றுமிரண்டு கழஞ்சு தண்ணீர் நாலொன்றுய்த்
தேனுடன்பருகே. (108)

(இ-ள்) கோரைக்கிழங்கு கோஷ்டம்
கொன்றைப்பழத்தோல் இலாமிச்சம்வேர்
காட்டுப்பூலாங்கிழங்கு மரமஞ்சள்

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சூரணஞ்செய்துச் சுத்தஜலம் $2\frac{1}{2}$ சேர் விட்டு நாலிலொன்ருகக் காய்ச்சித் தேன் விட்டுப் பருகவும்.

## அதிஸாரங்களுக்கு (வெட்பாலையாதி கஷாயம்)

பருக்கும் வெட்பாலை விழலரிசி பருசாம்வேர்க்கொம்
பிருவேலி
நறுக்குத் தாணிக்கடுநெல்லி நலதாமுத்தக்காசுபுடோல்
கருக்குஞ் சமோதி லாமிச்சு கழஞ்சாய்நிறுத்தய்கிருநாழி
யிருக்கும் புனலெட்டொன்றுக்கி யிருதிப் பிலியி
லிவையருந்தே. (109)

(இ-ள்) வெட்பாலையரிசி விழலரிசி
சுக்கு வெட்டிவேர்
தான்றிக்காய்த்தோல் கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல் கோரைக்கிழங்கு
பேய்ப்புடல் இலாமிச்சம்வேர்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கித் திப்பிலிச் சூரணமிட்டுப் பருகவும்.

## பித்த கபஜ்வரங்களுக்குக் குடுச்யாதி கஷாயம்

அருந்துஞ் சீந்தில் வேப்பலகு அரிதகிமுத்தக்
காசுபுடோல்
திருந்துஞ் சிறுதான்றி யதிமதுரம் தேவதாரம் நன்னாரி

வருந்தும்படிதிப் பிலிகழஞ்சாய் வாங்கியிருநாழிபுனலில்
பொருந்தும் படி யிட்டொன்ருய்ப் போதக் காய்ச்சும்
புகுந்திருந்தே. (110)

புகுந்துநீயெட் டொன்ருக்கிப் பொடியாங்
கண்டசர்க்கரையை
மிகுந்திடாமற் சற்றேமேல் வீசிக் குடிப்பையாகில்
*கில்லுகந்திராய் பித்த சிலோத்தும சுரங்களுள்ள
தெல்லா
மகந்தேநடுநடுங்கியகன்றுபோமென்றைரந்தனரே (111)

(இ-ள்) சீந்தில் கொடி — வேப்பீர்க்கு
கடுக்காய்த்தோல் — கோரைக்கிழங்கு
பேய்ப்புடல் — தான்றிக்காய்த்தோல்
அதிமதுரம் — தேவதாரு
நன்னரி வேர் — திப்பிலி

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துச்
சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி
எட்டிலொன்ருகும் வரை வற்றவைத்து கல்கண்டு சேர்த்
துப் பருகவும். பித்த கபஜ்வரங்கள் நீங்கும்.

### சிலேத்ம ஜ்வர நிதானம்.

அரையக்கோள் சிலேத்துமசுரத்தி னடவேயுடம்பு
நொந்துழத்து
நிறையுமிரும விளைப்புண்டாம்நெஞ்சுமிருகி மனந்தவளு
மறையும் நினைவுகெடாது மயங்கிடுமங்குடனே
நெளியுமுட
லுறையும் மலமுஞ் சுரந்தானுரைக்கி லுடல்தான்
வெளிறும் விரைகுழலே. (112)

விரைவாந் துயிலாதாவாகும் விழிதுஞ்சாது மிக்காது
புரைசேருடம்பு குளிர்ந்திருக்கு புகந்துடல்
குளிருமுடனே தான்

---

* சீர் சரியாக இல்லை.

திரைசேர்கலனஞ் சமுதாக்குஞ்சிவனைத்துதியா தன்
சமயத்
துரைசேர்விபூதி துலங்கவரு முடல்வெப்பெனவே
யுழலையுண்டே. (113)

(இ-ள்) உடம்பில் வலியேற்பட்டு, எரிச்சலும் உண்டாகும். இருமல், மூச்சுத்திணரல் இவையேற்படும். நெஞ்சிலுள்ள கபம் இறுகி மனது அல்லலுறும். நினைவு பேதலிக்காது. அடிக்கடி மயக்கமுண்டாகும். அடிக்கடி சோம்பல் முறிப்பான். உடல் வெண்ணிறமாகும். மலச்சிக்கலும் உண்டாகும். உடம்பில் குளிர்ச்சியதிகமாகும். ஆனல் உள்காய்ச்சல் இருக்கும்.

### தாகத்திற்குக் 'கண்டங்கத்திரிக் கடாயம்'

உண்டாந் தண்ணீரடைவுதனக் குரைக்கிற்
சுரந்தோன்றியநாளே
கண்டங்காலி சுக்குவில்வங்கடிதாய்க்கட்டிக் கலைதனிலே
கொண்டாங் கொருநிறை யாய்க்கூட்டிக்கட்டி யிருநாழி
தண்டார் நீரிட்டெட்டொன்ருய் தானுய்க்காய்ச்சிக்
(கொடுப்பீரே). (114)

கொடுத்தேகஞ்சி யடவுதனை கூறக்கேள் பாதிரிவில்வம்
விடுத்தேகுமிழ்வேர் நன்னரி வனத்திலிட்டுக் காய்ச்சிப்
னடுத்தேயிருநாழி யதுநாலாயதனைவடித் [பின்
துண்ணிலப்பொன்னை
யெடுத்தேயெரித்திவ் வுலைதனிலிட்டுக் காய்ச்சிக்
கொடுத்திடுமே. (115)

(இ-ள்) (1) கண்டங்கத்திரி வேர் சுக்கு
வில்வவேர்

இம்மூன்றையும் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையளவு எடுத்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்துப் பருகக் கொடுக்கவும்.

(2) பாதிரிவேர் வில்வவேர்
குமிழ்வேர் நன்னாரிவேர்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாக வற்றவைத்துக்கொடுக்கவும்

**பித்தகப ஜ்வரங்களுக்குச் 'கண்டயாதி கஷாயம்'**

கொடுநீ சோறு மிவ்வுலையைக் கொண்டேயாக்கு மிளநீ
ரொடுநா ளேழு மிப்படியே யுணவுகொடுத்தங்
கெட்டாநாள்
வடுவே யில்லா முற்குடிநீர்வகைதா னிரண்டுபட்டினியை
விடுவேர்க் கொம்பு திப்பிலியும் வெண்சந்தமுந்தி
ரிகையுமே. (116)

திரிந்தோரொன்று நாற்கழஞ்சு சேர்த்தங்கிருநா
ழிபுனலில்
யிருந்தே காய்ச்சி யெட்டொன்றாய்க்
கிக்காற்பெருங்காய முந்தேனும்
பருந்தே னுனதிப்பிலியும் பையமேலே வீசிப்பருகி
யருந்தேன் மொழியாய்! பின்னிரண்டா
மடைவேகாய்ச்சி யருந்துகவே. (117)

(இ-ள்) (1) இளநீரை உலைவைத்து அதில் அரிசியை யிட்டுச் சோறாக்கி 7 நாட்கள் முற்கூறிய குடிநீருடன் சாப்பிடவும்.

(2) சுக்கு திப்பிலி
வெண்சந்தனம் திராக்ஷப்பழம்

இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து இதனுடன் பெருங்காயம், தேன், திப்பிலிச் சூரணம் இவைகளையிட்டுப் பருகி வரவும்.

## குடுச்யாதிக் கஷாயம்.

அரிதாஞ்சீந்தில் பற்படகம் மான்சிறு மூல கஞ்சுக்குப்
பரிதான் கேஞுமுள்ளிதன் வேரும் பரிந்தோரொன்று
கழஞ்சரையாய்
சொரிந்தே நாழியிட்டுச்சுவறி யெட்டொன்றுனக்காற்
கரிதாத் திப்பிலி தேன்கலந்தே யாருந்தீர்
கரத்தெடுத்தே. (118)

(இ-ள்) சீந்தில் கொடி பற்பாடகம்
திப்பிலி சுக்கு
முள்ளிவேர்

இவைகளை வகைக்கு 20 குன்றி நிறையெடுத்துச் சுத்த ஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ ($1\frac{1}{4}$சேர்) விட்டு எட்டிலொன்ருக வற்ற வைத்துத் தேன், திப்பிலித்தூளிட்டுப் பருகவும்.

## வேர்க்கொம்புக் கடாயம்.

கரவேர்க் கொம்ப துகடுக்காய் கடுகுரோகிணி சவ்விய
மரமஞ்சலுடனே தேவதார மோரொன் றிருகழஞ்சு
பரமாயிருநாழி புனலிற் பரிந்தே யெட்டொன்ருக்கி
யுரமாகிய திப்பிலிதேனிந் துப்புடனே
கூட்டியருந்திடுமே. (119)

(இ-ள்) சுக்கு கடுக்காய்த்தோல்
கடுகரோகிணி செவ்வியம்
மரமஞ்சள் தேவதாரு

இவைகள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடையெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகக் காய்ச்சித் தேன், திப்பிலிச் சூரணம், இந்துப்பு இவைகளைக் கூட்டிப்பருகவும்.

## குடுச்யாதி கஷாயம்.

அருந்து நஞ்சமுதாக்குஞ்சிவ னுளரு மர்ச்சனையாய்
பொருந்தும் வகைபிரிந்துவென்று போர்ந்தபிறவிப்
பிணியால்
வருந்தும் வாதபோக்கவகை யறியாமாந்தர் திருந்து
குறவாற் றெரிசித்த சிவனேயாகு மருந்திலே தீர்ந்து
வகையதுபோல் சொல்விதாக
வருந்து முடலுளதிசாரம் பருகுஞ் சேட்டிம சுரத்தோ
டிளைப்பிருமல் மாறிப் போய்விடுமே. (120)

மாறுபடு சீந்தில் மரமஞ்சள் சிறுமூலகம்
மெறுகுழி முந்திரிகை யின்கனி செவ்வியம்
பாறுசிறு காஞ்சோறி பற்படகநற் காயங்
காறுபல கண்டமுள்ளி கத்திரியின் வேரே. (121)

வேரிவையோரொன் றிருகழஞ்சரைகள் கொண்டே
நீரிரு நாழிதன்னிற் நீபிடுக வெட்டிப்
போரினிய்யங் கோழியவுற்ற கனவற்றே
சீரினிய திப்பிலிகள் தேனுடனருந்தே (122)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சீந்தில்கொடி | மரமஞ்சள் |
| | திப்பிலி | திராக்ஷைப்பழம் |
| | செவ்வியம் | சிறுகாஞ்சோறி |
| | பற்பாடகம் | பெருங்காயம் |
| | கண்டங்கத்திரிவேர் | முள்ளுக்கத்திரிவேர் |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துத் தூளாக்கிச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கித் தேனும் திப்பிலிச் சூரணமுமிட்டுச் சிவனை அர்ச்சித்து உட்கொள்ளவும் அதிஸாரம், கபஜ்வரம், இளைப்பு, இருமல் முதலானவை நீங்கும்.

## நன்னாரி வேர் கடாயம்.

அருந்திரு நன்னாரி யடர் தூது வளைவட்டங்
கிருந்தி காஞ்சோறி யிசங்கிவை யிலவேர்
தாரஞ்சோருஞ் செறியாடர்வுற்ற திரிபலை
பொருந்தி வளர்சுக்குடன் இம்பூறல்
பங்கம்வேரே. (123)

பங்கமற வொன்றிருகழஞ்சி வைகள் கொண்டே
பொங்குமிரு நாழிபுனல் போதவதில் வீசி
கொங்கிலவு வெட்டிலொரு கூறுகுருகத்தேன்
திங்களெனு முப்பிளெடு திப்பிலியினுண்ணே (124)

(இ-ள்)

| | |
|---|---|
| நன்னாரிவேர் | மாகாளிக்கிழங்கு |
| தூதுவேளை வேர் | காஞ்சோறிவேர் |
| சங்கம்வேர் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிமுள்ளி |
| சுக்கு | இம்புரல்வேர் |
| ஆடுதீண்டாப்பாளை | |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்துத் தேன், இந்துப்பு, திப்பிலிச் சூரணம் இவைகளையுமிட்டுப் பருகவும்.

### அரக்கெண்ணெய்

உண்ணுஞ் சிலேத்மசுரத்திற்கு அரக்கெண்ணெயைச்
சொல்வேன்
பன்னும் பசும்பொன் மெழுகும்பதி னைம்பலந்தான்
தூணிநீரிலிட்டடங்
கென்னும் படிகாய்ச்சிக் குறுணியென்றார்
சீலைதனிற்பிழிந்து
நண்ணுந் தயிர்நீ ரெண்ணெயிவை நாநாழியுங்
கலந்திடுமே (125)

கலந்தே வரைத்தங்கிதனுடனே கரைக்குமருந்து
சதகுப்பை
கலந்தானுள்ள வதிமதுரஞ் சந்தங்கோட்ட மரமஞ்சள்
குலஞ்சோரத்தை யேலமமுக் கிராவேரிலாம்பிச்சீரகமும்
பலஞ்சேர் கடுகுரோகிணியு மதில்செண் பகப்பூத்
தேவதாரமுமே. (26)

தார்சேர்நீர்வள் ளிக்கிழங்கு தயங்குமுத் தக்காசுடனே
நீர்சே ரிருவேலி யிலைவேரும் நிகரிலவங்கம்
பெருங்குரும்பை
கார்சேர் குழலாய்! கழஞ்சரையாய்க் கடிதாயரைத்துக்
கரைத்தெரித்து
சீர்சேர் பதத்தில் வடித்ததனைச் சிரத்தேவைத்து
மாத்துகவே. (127)

சிரத்தும் வைத்தங் குடம்பினுந் தான் செறியப்பூசி
மாற்றிவிடில்
ஓரத்தில்சேர்த்து மச்சுரத்தி னுடன்பிறந்த
சிலேத்துமமும்
வரட்சிதானும் பழவெதுப்பும் வன்மஞ்செய்யுந்
தலைநோயும்
பரத்திலோடி விடுமெனவே பகர்ந்தார் முனிவர்
பார்த்னிலே (128)

(இ-ள்) பொன்மெழுகு 15 பலமெடுத்து 4 மரக்கால் சுத்த ஜலத்தினுடன் அடுப்பின் மேலேற்றி 2 மரக்காலாகும் வரை வற்றவைத்து அதனுடன்,

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | - சின்னப்படி 2 |
| தயிரின் தெளிவு நீர் | ,, |

இவைகளையும் கூட்டிக்கொள்ளவும். பின்னர்

| | |
|---|---|
| சதகுப்பை | அதிமதுரம் |
| சந்தனத்தூள் | கோஷ்டம் |
| மரமஞ்சள் | சிற்றரத்தை |
| கடுகரோகிணி | செண்பகப்பூ |
| தேவதாரு | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| கோரைக்கிழங்கு | வெட்டிவேர் |
| கிராம்பு | பெருங்குறும்பை |

இவைகளை வகைக்கு 20 குன்றியளவெடுத்து முன் சொன்ன தயிர்நீர் விட்டு, நன்றாகவரைத்துஎண்ணெய்க் கலவையுடன் குழப்பி அடுப்பின் மீதேற்றி மெழுகு பதத்திலிறக்கவும்.

இத்தைலத்தைத் தலையில் தேய்த்துக்கொண்டும் உடம்பில் தேய்த்துக்கொண்டும் வரக் கபஜ்வரங்கள், வரட்சி, உஷ்ணம், தலைவலி முதலானவை தீரும்.

### * முழுத்தஜ்வர லஷணமும் அதற்கான கஷாயங்களும்

பார்மேல் முழுத்த சுரப்தன்னைப் பகரக்கேளுந்
தலைசுழலுஞ்
சீர்வாய் கைக்கும் பற்கடிக்கும் சிவக்கு விழியும் சிறுநீறும்
நீர்தான் மூக்கில் வருமூறிநிவிர்க்குஞ் சரீரமுள்ளழற்றுங்
கார்சேர்க் கண்ணிற் பீளையுண்டாங் கலையை மறக்கும்
வேர்வெழுமே. (129)

வேர்க்கு முறுகும் வயிரிழியும் வீணேபகர்ந்து
தலைநோவாம்
பார்க்கில் வெறிபோ லேமயக்கும் பகர் நாப்புண்ணுஞ்
சுவாசமுண்டாஞ்
சேர்க்கொள் ளறிவுகெடவே பூர்ச்சிக்குமுலைப்
பிதற்றுமிதற்
கேர்க்குமின்நீ ருலையில்சோ ரேழுநாளு
மவித்துண்ணே. (130)

உண்டே யேழுபட் டனிவிட்டுயெர்க்கமுற் குடிநீர்
வகை சுக்கு
பண்டே முனிவர் பகரும்பற்படகம் மிலாமிச் சிருவேலி
கண்டேமுத்தக் காசொடு சந்தனமொன் றிரண்டு
கழஞ்சிற்
கொண்டேயிருநா ழியுமுழக்காய்க் குறுகக் காய்ச்சிக்
கொடுத்திடுமே. (131)

(இ-ள்) தலைச்சுற்றல் உண்டாகும். வாயில் கசப்புச் சுவை காணும். பற்களை அடிக்கடி 'நற நற' வென்று

---

* முழுத்த ஜ்வரம் என்பது என்னவென்று புலப்படவில்லை. பித்த ஜ்வரத்தின் குறிகளும், ஸந்நிபாத ஜ்வரக் குறிகளும் காணப் படுகின்றன.

கடிப்பான், விழி சிவந்துவிடும். அதிகமாக மூத்திரம் வெளியாகும். மூக்கிலிருந்தும் நீர் கசியும். சரீரத்தில் எரிச்சலுண்டாகும். கண்களில் பீளை சாறும். வியர்வை அதிகரிக்கும். வயிறு கழிச்சலேற்படும். தலைவலி உண்டாகும். வெறி பிடித்தவன்போல் மயங்கி மயங்கிப் பார்ப்பான். நாக்கில் புண்கள் ஏற்படும். மேல்மூச்சு உண்டாகும். பிதற்றலும் இருக்கும்.

இக்குறிகளுடன் ஜ்வரம் ஏற்பட்டால் ஏழு நாட்களுக்கு சோற்றை அவித்து (புனப்பாகக் கஞ்சி)க் கொடுக்கவும், இல்லாவிடில் 7 நாட்களுக்குப் பட்டினியும் போடலாம். பின்னர்,

| | |
|---|---|
| சுக்கு | பற்பாடகம் |
| இலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| கோரைக்கிழங்கு | சந்தனத்தூள் |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்து எட்டு மடங்கு (பட்டணம்படி 1) ஜலம்விட்டு 8ல் ஒன்றுகும் வரை வற்ற வைத்துக் கொடுக்கவும் ஜ்வரம் தீரும்.

**ஷை ஜ்வரத்திற்குச் திராக்ஷாதிக் கஷாயம்.**

அருந்து முந்திரி கைப்பழம் வேப்பீர்க்க னற்சந்த
மிருவேலி சுக்குடன்
பெருங்குரும் பைமர மஞ்சள்நன் ஞரிவேர் பேர்த்தோ
ரொன்றங் கிருகழஞ் சாகவே
பொருந்துநீரங் கிருநாழிகொண்டங்கிதற்போட்டெரித்
தெட்டிலொன் றுனபோது
வருந்து வோருகிற் தீருமென் றுசேவற் கா்ந்தன்
சொன்ன வாகடஞ் சொல்லுமே. (132)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | திராக்ஷைப்பழம் | வேப்பீர்க்கு |
| | சந்தனத்தூள் | வெட்டிவேர் |

சுக்கு பெருங்குறும்பை (மருள்)
மரமஞ்சள் நன்னாரிவேர்

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை யெடுத்து இடித்து, 2படி தண்ணீர் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் கொதிக்க வைத்து உட்கொள்ளவும்.

**ஷை ஜ்வரத்திற்குக் "கோஷ்டாதிக் கஷாயம்"**

சொல்லுங் கோட்ட மதிமதுரந் தூயமுந் திரிகைப் பழஞ்சந்தம்
மொல்லும் வேப்பங் கடிகையத னுடனே கடுகுரோகிணியும்
வல்லபடியொன் றிருகழஞ்சுவளந்தா னிருநாழியிலிட்டே
யல்லுள் ளெரித்தெட்டொன்றாக்கி யருந்தத்தீரும ருஞ்சுரமே. (133)

(இ-ள்) உயர்ந்த கோஷ்டம் அதிமதுரம்
திராக்ஷைப்பழம் சந்தனத்தூள்
வேப்பங்கொட்டை கடுகரோகிணி

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்து முன்போல் 2 படி தண்ணீர்விட்டு எட்டிலொன்றாக்கி அருந்தவும். ஜ்வரங்கள் தீரும்.

**ஷை ஜ்வரத்திற்கு "தாமரை இலைச்சுருள் கஷாயம்"**

அருந்தா மரையில் வளையஞ்சுக் காடாதோடை நன்னாரி
பருந்தா னிலுப்பைப் பூச்சிவதை படர்பீர்க் குச்செங் கழுநீரு
மருந்தா ரமுரோ கணியுமிரு கழஞ்சாய் வளர்ந்தா னிருநாழியிலிட்
டிருந்தே யெட்டி லொன்றாயி வைசர்க் கரைதே னுடனுகரே. (134)

(இ-ள்) தாமரையிலையினுட்சுருள் நன்னாரிவேர்
ஆடாதோடைவேர் இலுப்பைப்பூ
சிவதைவேர் பீர்க்கம்வேர்

செங்கழுநீர்க்கிழங்கு தேவதாரு
கடுகுரோகிணி

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடையெடுத்து இடித்துச் சுத்த ஜலம் பட்டணம் படி ஒன்று விட்டு எட்டிலொன்ருக வற்றவைத்து சர்க்கரை, தேன் இவைகள் விட்டு உட்கொள்ளவும்.

குறிப்பு:— பேதியுடன் கூடிய ஜ்வரத்தில் இக்கஷாயத்தைப் பருகக்கூடாது.

### முழுத்தச் சுரத்திற்குச் "சகதேவி எண்ணெய்"

நுகராய்முழுத்த சுரந்தீரும் துணிந்தோ ரெண்ணெ யடவுசொல்வன்
நிகர்சீ தேவிச்சித்தமட்டி நெடுஞ்சீந் திற்தண் டிவையெல்லாம்
பகரோ ரொன்று பன்னிரண்டு பலந்தா னிடத்துங் [கிருதூணி
நிகரா நீரிட்டுக்காய்ச்சி நாலொன்ருக்கிப்
பிழிந்துகொள்ளே. (135)

பிழிந்து செஞ்சந் தனமதும்பின்னுமிலாமிச்ச மிருவேலி
மொழிந்தகோட்டஞ் செண்பகப்பூ முத்தஞ் சந்தம் நன்னாரி
மொழிந்தநாகப் பூவரத்தை யுடனே சாத்திரவெறிக் கிழங்கு
பொழிந்தநீர்தா மரைவளையம் புகலுந்தேவ தாரமுமே. (136)

தார்சே ரேலமிலவங்கந் தக்கோலம்புட் டியிலுடனே
கார்சேர்வள்ளி செவ்வல்லி கச்சோலம் வல்லிருவேலி
கூர்சேர் முத்தக் காசுசத குப்பையரேணுக மஞ்சிட்டி
யார்சேர் சடையார் புகல்கழஞ்சொன் றரையா
யரைத்துக் கரைத்திடுமே. (137)

கரையும்நெய்யு முரிபால்கலந் தேயிருநாழி யைப்பின்னை
விரையாயெரித்துப் பதத்திறக்கி வெனபச்சைக் கற்பூ ரங்கழஞ்சு

முரைய வதட்குட்ப் போட்டுவடித் துவந்தே தலையில்
வைத்துடம்பிற்
புரையத்தப்பிப் பூசித்துடைக்கப் போமே வியாதி
புகலுகவே. (138)

புகலுமுழுத்தச் சுரவரட்சி போகாப் பித்த
முள்வெட்கை
யிகலும் பழய வெதுப்பிதுதான் எட்டினுடனே
யிரண்டொன்று
திசையும் புகழுந் திருஞான சம்மந்தன் தான்
துதித்திடவே
யகலுமேவா கடனூலறிந்தேபுகன்ரு ரவனியிலே. (139)

(இ-ள்) சீதேவிசெங்கழுநீர் (நெய்ச்சட்டி)
சித்தாமுட்டிவேர் சீந்தில்கொடி

இவைகள் வகைக்கு 12 பலம் வீதம் எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 8மரக்கால் சுத்த ஜலம் விட்டுஅடுப்பின் மேலேற்றி நாலிலொன்ருக வற்ற வைக்கவும்.

இக்கஷாயத்தைப் பிழிந்து இறுத்துக்கொண்டு,

| | |
|---|---|
| செஞ்சந்தனம் | அதிமதுரம் |
| விலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| கோஷ்டம் | செண்பகப்பூ |
| கோரைக்கிழங்கு | சந்தனத்தூள் |
| நன்ஞரிவேர் | சிறுநாகப்பூ |
| சித்தரத்தை | தண்ணீர்விட்டான் கிழங்கு |
| தாமரையிலையினுட் கருள் | தேவதாரம் |
| ஏலக்காய் | கிராம்பு |
| தக்கோலம் | செவ்வல்லிக்கொடி |
| பூலாங்கிழங்கு | கோரைக்கிழங்கு |
| சதகுப்பை | அரேணுகம் (காட்டு மிளகு) |
| மஞ்சிட்டி | சடாமாஞ்சில் |

இவைகளை வகைக்கு 60 குன்றியெடை வீதமெடுத்து இடித்து, ஷை கஷாயம் விட்டு அரைத்துப்

பசுவின் நெய் சின்னப்படி $\frac{1}{2}$
பசுவின் பால் பட்டணம்படி 1
* நல்லெண்ணெய்

இவைகளுடன் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்து பதத்தில் இறக்கவும். ஆறியபின் வடிகட்டிப் பச்சைக் கற்பூரம் $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்து வெள்ளைத்துணியில் மூட்டையாகக் கட்டி அந்த எண்ணெயில் தோய்த்துத் தோய்த்துப் பிழியவும். இவ்வாறாகப் பச்சைக் கற்பூரம் முழுவதையும் கரைத்துவிடவும்.

இத்தைலத்தைச் சிரஸிலும், உடம்பிலும் தேய்த்துக் கொண்டு ஊறியபின் துடைத்துவிடவும்.

தீரும் நோய்கள்—முழுத்தஜ்வரம், வரட்சி, பித்தம் உட்சூடு, தேகக் காங்கை முதலியவை.

## விஷமஜ்வர லக்ஷணமும், நிம்பாதி கஷாயம் முதலியவைகளும்.

அவஞ்சேர் விஷம சுரத்தினடைவைக்கேளுங் கைகாயும்
நவஞ்சேருங்கால் காயாது நாவும்வரளு முழுத்திவிக்கும்
முவந்தே புகட்டிவிக்கும் பிழையேனென்னுந்
.தலைநோவாம்
நிவந்த சந்தி மொழியகலு நெடிதே காயும்
அமர்ந்திடுமே. (140)

அமரும் விட்டு விட்டுழலு மதிகமாக வுள்ளழலுந்
தருமம் விதன முறமயக்குந் தானே தெளிய
மிதுதனக்குக்
கமரும் பொருந்தும் வேப்பந்தோல் கடுக்காய் சீந்திற்
படோல வேர்க்கொம்பு
யிமருந் தோடை நிலவேம்புங் கிவைதானென்றிங்
கிருகழஞ்சே. (141)

---

* செய்யுளில் கூறப்படவில்லை. இருந்தாலும் இதைச் சேர்த்துக் கொள்ளலாம்.

இருநாழி தண்ணீர்விட்டே யுழக்காய்க் காய்ச்சிப்
பருகின்னங் குடிநீர் பகரக் கேளும் வேர்க்கொம்பு
தருவாம் மெட்பாலேயரிசி சாதங்கொத்த மல்லிசீந்தில்
மருவாம் விலாமிச்ச பற்படகம் வளராடாதோடை
யில்வேரே. (142)

வேரோ ரொன்றிரு கழஞ்சுகொண்டு விரையத்தக்க
திட்டிவைதனை
நீரோ ரிரண்டு நாழிதன்னில் நீயிட்டெரித்து ழக்காக்கி
பேரோ தியசர்க் கரையிட்டுப் பருகத்தீரு
மின்னமொன்று
காரோ வேணு மொழியிஞளே கழறக் கேழாய்
காதலுற்றே. (143)

(இ-ள்) உள்ளங்கை, கைகள் இவைகளில் சூடு இருக்கும். ஆனல் கால்கள் ஜில்லிட்டுப்போம். நாவறட்சி ஏற்படும். "நான் பிழைக்கமாட்டேன்" என்று அடிக்கடி பிதற்றுவான். தாங்க முடியாத தலை வலி உண்டாகும். மூட்டுகளில் வேதனை இருக்கும். ஜ்வரம் விட்டு விட்டு அடிக்கும் உடம்பில் எரிச்சலும் ஏற்படும்.

இவைகளுக்குக் கஷாய வகைகள்:—

(2) வேப்பம்பட்டை — கடுக்காய்த்தோல்
சீந்திற்கொடி — பேய்ப்புடல்
சுக்கு — ஆடாதோடைவேர்
நிலவேம்பு

இவைகள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து, 5 சேர் தண்ணீர் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்றவைத்து வடிகட்டிச் சாப்பிடவும். விஷம ஜ்வரம் தீரும்.

(2) சுக்கு — வெட்பாலேயரிசி
கொத்தமல்லி — சீந்தில்கொடி
இலாமிச்சம்வேர் — பற்பாடகம்
ஆடாதோடைதேர்

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சின்னப்படி 1 படி தண்ணீர்விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக்கி இறக்கவும். இதனை வடிகட்டிச் சர்க்கரை சேர்த்து உட்கொள்ளவும். முற் கூறிய ஜ்வரம் தீரும்.

### ஜ்வரத்திற்குக் ''குடஜாதி கஷாயம்''.

உற்றவெட்பா லையிலரிசி யுடன்பற் படக மதிமதுர
சற்றே வருமதில் நிலவேம்புந் தானுஞ்சிறுகாஞ்
சொறிவேரும்
துற்றே யிருக்குமங் காசுபுடோலச் சொல்லுந்
தெர்ப்பைப் புல்லுநெல்லி
கற்றே புகழுங் கடுதாணிக் கண்டங்காலிக்
கோட்டமுமே. (144)

கோட்டஞ்சேர் சேவகன் பூடு கொன்றைப்பழங்
கடுகரோகிணியு
மீட்டமுடனென் றிருகழஞ்சா மிருநாழிதண் ணீரிலிட்டு
நாட்டமறவே யுழக்காக்கி நயந்தே குடிப்பீ ராமாகில்
வாட்டு மரிய சுரங்களெல்லா மாறிப்போமென்
றுறைத்தாரே. (145)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | வெட்பாலையரிசி | பற்பாடகம் |
| | அதிமதுரம். | நிலவேம்பு |
| | சிறுகாஞ்சொறிவேர் | கோரைக்கிழங்கு. |
| | பேய்ப்புடல் | தர்ப்பைப்புல் |
| | நெல்லிவற்றல் | கடுக்காய்த்தோல் |
| | தான்றித்தோல் | கண்டங்கத்தரிச் சமூலம் |
| | கோஷ்டம் | சேவகன் பூண்டு |
| | கொன்றைப்பழம் | கடுகரோகிணி |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் சின்னப்படி

ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்ற வைத்து வடிகட்டிச் சாப்பிடவும். எவ்வித ஜ்வரங்களும் தீரும்.

**ஜ்வரங்களுக்குத் "தேவதார்வாதி கஷாயம்".**

உரைக்குந் தேவதாரஞ்சுக்குடனே கோட்டம் பற்படகம்
விரைத்தங் கியமுத் தக்காசு வேண்டுங் கடுக்காய்
மகிழம்வேர்
தரைக்கு ளெழுவட் டினிற்தங்கும் சிறுமூலகஞ் சிறுதேக்
கரைக்குஞ் சிறியதிப் பிலியொன் ருகக்கழஞ்சு
நீகொள்ளே. (146)

கொள்ளுந் தண்புனல் கொண்டிரு நாழியி
லுள்ளு நீரிட்டு ழக்கதுவாக்கியே
விள்ளிடாமல் விழுங்குவை யாகில் மேற்
றுள்ளி நின்ற சுரங்கள் விட்டேகுமே. (147)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | தேவதாரு | சுக்கு |
| | கோஷ்டம் | பற்பாடகம் |
| | கோரைக்கிழங்கு | கடுக்காய்த்தோல் |
| | மகிழம்வேர் | திப்பிலி |
| | சிறுதேக்கு | யானைத்திப்பிலி |

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மேலேற்றிஒரு உழக்காகும் வரை எரித்து வடிக்கட்டி உட்கொள்ளவும். ஜ்வரங்களனைத்துந் தீரும்.

**விஷம ஜ்வரங்களுக்கு "மரிசாதி நெய்"**

ஏகுமிதற்குநெய்ப்பண்ணு மியல்பைக்கேளு மிளகுமஞ்ச
ளாகும் நிலவேர் துகழஞ்சோ டரிதான்றியம் பிசி
ஞென்று
வாகுபெறவே கழஞ்சரை வகையிற்பா லும்நெய்தானும்
பாகுசேரொவ் வொருநாழி பரிந்தே வார்த்துக்
கரைத்திடுமே. (148)

கரைத்தரைத்துப் பதத்தினிலே வடித்துத்தோரங்
கழஞ்சு நெய்தா னருந்துவீரே கமலமாதின்
விரைத்தோ டையற் புயமேவு திருமா லன்பா
மெய்க்கருணையெனக்குளிர்ந்துமெள்ளமெள்ள
விரைத்தடத் தோள் வனமதிப்போ மேலராய்ந்து
வஞ்சரைத்தா னசாய்வ தெனவே சாய்ந்து
தரைக்குள் ளோர் விஷமவனடக் குவதேபோலத்
தானடக்கும் விஷமசுரந் தன்னைத்தானே (149)

(இ-ள்) மிளகு மஞ்சள்
நிலவேர்

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை
தான்றிப்பிசின் –20 குன்றியெடை

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்துத் தூளாக்கி,
பசுவின் பால் — சின்னப்படி $\frac{1}{2}$
பசுவின் நெய் — ,,

இவைகளுடன் கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்திலிறக்கவும். இந்நெய்யில் $1\frac{1}{4}$ வராகனெடையளவு எடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடனே உட்கொள்ளவும். விஷம ஜ்வரங்கள் தீரும்.

**விஷமச் சுரத்திற்கு ''வெருகங்கிழங்கு எண்ணெய்''**

தானனையவெருகங் கிழங்குசமூலத் துடன்தறித்துத்
தண்ணீர்நா நாழிவிட்டு நாழியாக்கி
மானநீ வடித்துப்பால் நாழி யெண்ணெய்
மருவவே நாழிவிட்டு யெரித்துவாங்கி
தேனனயாய்க் காசெடைகொள் நஸ்யம்பண்ண
தேர்ந்தேவி ஷமச்சுரம்போம் தீர்க்கமாகும்.

---

குறிப்பு:— ''நிலவேர்'' என்ற சரக்கு நிலவேம்பாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

வானனையாய் வேல்க்கண்ணுய்! முனிவர் தாமும்
வையகத்தி னியல்புசொன்ன வகையிதாமே(150)

(இ-ள்) வெருகன் கிழங்கைச் சமூலத்துடன் எடுத்துக் கொண்டுவந்து சிறுசிறு துண்டுகளாக நறுக்கி (ஒரு பலம் எடுத்து)ச் சுத்தஜலம் சின்னப்படி 2 விட்டு அடுப்பின் மேலேற்றி, நாலிலொன்ருகும் வரை வற்ற வைக்கவும். இதனுடன்,

| | |
|---|---|
| பசுவின் பால் | — சின்னப்படி ½ |
| நல்லெண்ணெய் | „ |

இவ்விரண்டையும் சேர்த்து, மறுபடியும் நீர் சுண்டும் வரை வற்றவைத்து இறக்கி, வடிகட்டவும். இந்த எண்ணெயில் காலஞ அளவெடுத்துஉட்கொண்டு,மூக்கிலும் 3 அல்லது 4 சொட்டுகள் வீதம் நஸ்யமாகவும் இட்டால் விஷம ஜ்வரங்கள் அனைத்தும் தீரும்.

## தாந்திரிக சந்நிக்கு மருந்துகள்
## குடுச்யாதி கஷாயம்.

சீந்தில் முத்தங் கூவளைவேர் சீரகம்
பேய்ப்புடல் கொத்த மல்லி சுக்கு
பேர்ந்திடு தேக்குச் சிறுமூலம்
பொருந்திய தோர்புன லிருநாழி
மாந்திடவுழக்காய் நீகாய்ச்சி
வருந்திக் குடித்து விடுவீராய்
போர்ந்திடுந் தந்திரிகச் சந்நியது
பெரியோ ருரைத்த படிபோமே. (1)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சீந்தில்கொடி | கோரைக்கிழங்கு |
| | வில்வுவேர் | சீரகம் |
| | பேய்ப்புடல் | கொத்தமல்லி |
| | சுக்கு | சிறுதேக்கு |
| | திப்பிலி | |

இவைகளை வகைக்கு ($1\frac{1}{4}$ வராகனெடை) எடுத்து இடித்து தண்ணீர் சின்னப்படி 1 விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கி வடிகட்டிச் சாப்பிடவும் தாந்திரிக சந்நி தீரும்

## சைத்ய தோஷந்தீர ''இலாமிச்சைக் கஷாயம்''

லாம்பிச்சம் வேர் பற்படக நன்னாரிசுக்
 கிலகு சித்தமட்டி பேர்மட்டி
சோம்புவகை சீந்தில் புடோல் கடுகரோகிணி
 சுறுக்கான திப்பிலி மல்லிகூட்டி
ஆம்புதிய நீருமிரு நாழிவிட்டு
 அதிற்காய்ச்சி யுழக்காக்கி அருந்துவீரால்
தாம்பழக வந்தசைத்ய தோஷமெல்லாஞ்
 சாறுது விட்டகலுஞ் சாற்றினேமே. (2)

(இ-ள்)

| | |
|---|---|
| இலாமிச்சைவேர் | பற்பாடகம் |
| நன்னாரிவேர் | சுக்கு |
| சித்தாமுட்டிவேர் | பேராமுட்டிவேர் |
| சோம்பு | சீந்தில்கொடி |
| பேய்ப்புடல் | கடுகரோகிணி |
| திப்பிலி | கொத்தமல்லிவிதை |

இவைகளை இடித்து (வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை) ஒரு பாத்திரத்திலிட்டுப் புதிய தண்ணீர் சின்னப்படி 1விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து உட்கொள்ளவும். சீதளங்கள் தீரும்.

## சந்நிக்குச் ''சங்காதி கஷாயம்''

வந்தசங்கம் வேர்குறிஞ்சி முக்காவேளை
 வருமினிய காவேளை மானேகூட்டி
இந்ததோர் வில்வ நாய்த்துளசிந்
 ததரமுத்தந் தூதுவேளை

குந்தார குறுந்துசிறு காஞ்சொன்
றிக்கொடிவே விமுருங்கை வேரதுவும்
பந்தேகுதிரை வாலி சுக்கு
படர்சிறு தேக்கு மரத்தையுமே. (3)

மரந்திப்பிலி மிளகுமஞ்ச ளான செவ்வியமிலாமிச்சந்
திறமாய் ரோகிணி தன்னேடுதிருந்தக் கழஞ்சிடை யிருநாழி
உரமா நீரிற்தகத்திட்டு உழக்காய்க் காய்ச்சிக்கொள் வீராய்
பார்மாந் தந்திருக சன்னியது பாருமென்றூர் பெரியோரே. (4)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சங்கம்வேர் | சிறுகுறிஞ்சிவேர் |
| | முக்காவேளை | காய்வேளைவேர் |
| | வில்வம் | நாய்த்துளசி |
| | கோரைக்கிழங்கு | தூதுவேளைவேர் |
| | குருந்தம்வேர் | சிறுகாஞ்சோறிவேர் |
| | கொடிவேலிவேர் | முருங்கைவேர் |
| | முதியார்கூந்தல் | சுக்கு |
| | சிறுதேக்கு | சித்தரத்தை |
| | திப்பிலி | மிளகு |
| | மஞ்சள் | செவ்வியம் |
| | இலாமிச்சம்வேர் | கடுகுரோகிணி |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி I விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக வற்றவைக்கவும். இக்கஷாயத்தை உட்கொள்ளத் "தந்திரிக சந்நிகள்" தீரும்.

**தந்திரிகச் சந்நிக்கு "முசுறு முட்டைத் தைலம்"**

பாரிடுதோடை துராய்நொச்சியர் வேலிப்பருத்தி துளசியது
மீறிடுவேளை சிறுகுறிஞ்சி முதியார்கூந்தல் சாறுரிகொள்
சீறிடு முசுறு முட்டைநன்னரி செம்முள்ளி காஞ்சோறி சிறுபீளை

வேரிடுதேவதார மிளகுசந்தம் வெண்கோட்டம் திப்பிலி
தேக்கிந்து. (5)

இந்துவென்ன நிலவேம்பு சீரகமிரண்டு மிகநேர்
செவ்வியஞ் சிறுமூலஞ் சுக்கு
மந்தம்விடு வசம்பு சதகுப்பை சிங்கி
வருகம்பிப் பிசினோமம் வகைக்கொரு கழஞ்சாய்
முந்துநிம்ப வெண்ணெயுட நல்லெண்ணெய் முலைப்பால்
முதரவரைக் கரைத்துநீ வடித்துத்
தந்திரிக சந்நிக்கு நஸ்யம்விடு கொள்ளு
தலையிலிடு வுடல்பூசு சந்நிவிடு மென்றே. (6)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆடாதோடைவேர் | திராய்வேர் |
| நொச்சி | வேலிப்பருத்திவேர் |
| துளசி | வேளைவேர் |
| சிறுகுறிஞ்சான் | முதியார் கூந்தல் |

முதலான சாறுவகைகள் வகைக்கு சின்னப்படி $\frac{1}{4}$ எடுத்து ஒன்றாக்கி அதனுடன்,

| | |
|---|---|
| முசுருமுட்டை | நன்னாரிவேர் |
| செம்முள்ளி | சிறுகாஞ்சோறிவேர் |
| சிறுபீளைவேர் | தேவதாரு |
| மிளகு | சந்தனத்தூள் |
| வெண்கோஷ்டம் | திப்பிலி |
| இந்துப்பு | நிலவேம்பு |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| செவ்வியம் | திப்பிலி |
| சுக்கு | வசம்பு |
| சதகுப்பை | கற்கடசிருங்கி |
| கம்பிப்பிசின் | ஓமம் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$வராகனெடை வீதமெடுத்துமேஷ் சாறுகளில் ஏதேனுமொன்றை விட்டு நன்றாக வரைத்து அதனுடன்,

நல்லெண்ணெய் — சின்னப்படி ½
வேப்பெண்ணெய் — ,,
முலைப்பால் — ,,

முதலியவைகளைச் சேர்த்து, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் 3 அல்லது 4 சொட்டுக்கள் எடுத்து மூக்கில் நஸ்யமிடவும். இதையே தலை, உடல் முதலான இடங்களிலும் பூசிவரவும். தந்திரிக சந்நிகள் தீரும்.

## அந்தக சந்நி

### அந்தக சந்நியின் லக்ஷணங்கள்.

அந்தக னென் னுஞ்சந்நி அழுந்தச் செய்யுங் குணங்கேள்
வந்து துயிலும் வயிறெறிக்கும் வளருந் தலையு மிகச்
சுழன்று
முந்த நடுக்குந் தாகிக்கு முதிரும் விக்க லுடனிரும
லிந்த விதமே செய்தக்கா லிதுவும் பத்தில்
கொன்றிடுமே (7)

அய்யோவுடலை நோகிதென்னு மசந்துகிடக்குங் காணுது
பொய்யே யல்ல தவனமுடன் பொருந்தாத் தன்மை
பொருந்தாது
மெய்யே பேச வெழுந்திருக்கு மேலாம் பொருளே
நினவாக்குந்
தெய்யா தெய்யா வெனக் கொட்டும் திரும்பாச்
சந்நி திரும்பாதே. (8)

(இ-ள்) அடிக்கடி தூங்கி வழிவான். வயிற்றில் வேதனையுண்டாகும். தலைச்சுற்றலேற்படும். உடம்பில் நடுக்கமேற்படும். தாகம் அதிகரிக்கும். விக்கல், இருமல் இவைகள் ஏற்பட்டு 10 நாட்களுள் நோயாளியைக் கொன்றுவிடும்.

உடல் வலியுடன் அசந்து கிடப்பான். இந்நோய் வந்தால் பிழைப்பது அரிது.

### அந்தகச் சந்திக்கு "உசீராதி கஷாயம்"

இருவேலி பற்பகடஞ் சுக்கு கோட்ட
மிதமான சிறுதேக்கு மிலாமிச்சங் கூட்டி
மறுவிடவே யிருநாழி புனல்விட் டங்கே
வளமாகக் காய்ச்சியு ழக்காய்க்கொண்டு
உருவுடையர் கொங்கையர்பா லொக்கக்கூட்டி
யுரைத்திடுகோ ரோசினையு மொன்றுயச்
அருகிடுநீர் அந்தகச் சந்திதீர [சேர்த்து
அறிவுடையோ ருரைத்தபடி யாகுந்தானே (9)

| | |
|---|---|
| (இ-ள்) வெட்டிவேர் | பற்பாடகம் |
| சுக்கு | கோஷ்டம் |
| சிறுதேக்கு | இலாமிச்சம்வேர் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னபடி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்ற வைக்கவும். இக்கஷாயத்தை இறுத்து இதற்குச் சரியளவு முலைப்பால் சேர்த்துக் கோரோசனையும் ($\frac{1}{4}$ வராகனெடை) கூட்டி உட்கொள்ளவும். அந்தக சந்நி ரோகம் தீரும்.

### ருக்வாங்க சந்நிக் குறிகள் (ருத்திர சந்நி)

இருக்கு வாங்க சந்நியது வெனில் கோப மோகமுடன்
முறுக்கு நெஞ்சு தலைநோகும் முதிருந்தாகும் நீரிழிவு
மறுக்கு முடலந் நடுக்கியது வாய்விட்டலற்று மயலாகும்
சிறுக்கு முகமே வேர்க்குமது தீராதிருபதில்
சாவாமே (10)

(இ-ள்) நோயாளி அடிக்கடி கோபித்துக்கொள்வான். மயக்கம் போடும். நெஞ்சுவலி, தலைவலி, முதலானவைகளேற்படும். தாகம் உண்டாகும். அதிகமாக நீர் போகும். உடலில் நடுக்கமுண்டாகும். வாய் விட்டலறுவான். முகம் சிறுத்துப்போம். வியர்வை உண்டாகும். 20 நாளில் மரணத்தை விளைவிக்கும்.

**சித்தபிரம்ம சந்நி (சிந்தவிப்ரமம்) லக்ஷணங்கள்.**

சித்தப் பிரும முடல்நோவா மதீதமாய் பித்தங்
கோபிக்கும்
வாதத் துடனுய் நடுங்கியது மயங்கி விறுமை
கண்ணு முக்கி
நீதமுடனே நிமைமூடி நெந்தே விழித்து அசந்திருக்கும்
போதப் பனிரெண் டாகதினமே பொருந்து
மருந்து கொள்வாயே. (11)

(இ-ள்) உடலில் வலியேற்படும். அதீதமாகப் பித்தம் அதிகரிக்கும் வாதமும் அதிகரித்து உடல் நடுங்கும். மயக்கம் உண்டாகும். கண்களை மூடிமூடித் திறந்து விழிப்பான். பிறகு மறுபடியும் மூடிக்கொள்வான் 12-வது நாளன்று மருந்து உட்கொள்ளவும்.

**சித்தப்பிரம்ம சந்நிக்குச் "சிறுபஞ்ச மூலாதிக் கஷாயம்".**

மருந்துகுமிழ் பெரு வாகைபேர் மல்லி மருவும்
பாதிரித் தோல்கண்டங் காலி வழுதலை
திருந்து சிறுதேக்கு நிலவேம்பு சித்தமட்டி
செவ்வியஞ் சீரகந் திப்பிலியாம்
வருந்துங் கண்டத்திப் பிலமூலமது சுக்கு
மல்லி சிறுகாஞ்சோறி செவ்வியமுத்த
மருந்தும் புனலிருநாழி யுழக்காய்ச் காய்ச்சி
யான கற்கந் திப்பிலியாஞ் சித்தப்பிரம
மகன்றிடுமே. (12)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | குமிழம்வேர் | வாகைவேர் |
| | பேராமல்லிவேர் | பாதிரிப்பட்டை |
| | கண்டங்கத்திரி | வழுதலைவேர் |
| | சிறுதேக்கு | நிலவேம்பு |
| | சித்தாமுட்டிவேர் | செவ்வியம் |
| | சீரகம் | திப்பிலி |
| | கண்டத்திப்பிலி | சுக்கு |
| | கொத்தமல்லிவிதை | சிறுகாஞ்சோறி வேர் |
| | செவ்வியம் | கோரைக்கிழங்கு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒருபாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்துடன் திப்பிலிக் கற்கம் 1 வராகனெடை கூட்டிப் பருகவும். சித்தபிரம (சித்த விப்ரம சந்நி) தீரும்.

**ஷை (சித்தவிப்ரமன்) சந்நிக்குப் பூசனிப்பூ நஸ்யம்**

அகண்டபெரும் பூசனிப்பூக் குங்குமப் பூவு
மணி முலைப்பால் கஸ்தூரி நஸ்யம் விடமாதே
புகன்றதிரி தோஷம்விடு விறுமைசந்நி யகலும்
புத்தி செய்யு மற்றுவிஷம் போகுமது வென்ன
அகண்டகனி வாயுணர்வு தோணுமென விண்ணோர்
அறிவுடனே சொன்னதிது வாகுமதுவென்ன
நிகண்டவிஷ தோஷமெல்லாம் நீங்கிவிட வென்று
நிதமான பெரியோர்களுரையான வாறே (13)

(இ-ள்) பெரும்பூசனிப்பூகுங்குமப்பூ இவ்விரண்டையும் கசக்கி, முலைப்பாலும் கஸ்தூரியும் கூட்டி மூக்கில் நஸ்யமாக இடவும். விப்ரமசந்நி நீங்கும். புத்தியைநாசமாக்கும் தன்மையுள்ள விஷம் போலக் கொடுமையான இந்நோய் குணமாகும்

**சீதஜன்னிக்குப் "பேய்ப்பருத்தி எண்ணெய்"**

உரைத்த பேய்ப்பருத்தியிலைச் சாறுநாழி
யுற்ற நொச்சித் தழுதழை குறட்டைச்சாறு
நிரைத்தபங் கம்பிச்சி யுத்தம தாளி
நேரான சீதேவிச் சாறுரிய தென்ன
பரைத்த சிவனார் வேம்பு ஈசுரை நன்னாரி
படர்ந்த குமிழ் ஓரிலைத்தா மரைச்ச மூலம்
யரத்தையதிமதுரம் தேவ தாரம் வெண் கோட்ட
மானசெவ் வியம்பெருங் குறும்பையு
மடைந்தே. (14)

ஆனவிரு சீரகம் உள்ளியிந் துப்பு
யரியசன்ன சாலே கடுகுடன் வசம்பு
மான சதகுப்பை வெளுத்தைப் பிசின்
வாருமினி யிஞ்சிச் சாறுமித ளேடு
ஈனபடி நிம்ப வெண்ணெயெள் ளெண்ணெய்விளக்
கெண்ணெயெரித் துடன்பூசி முடிக்கு மதித்தால்
தாஞெருகா செடையெண்ணெ யுள்ளே கொடுக்
கத்தணியு மதசீத சன்னிமறி படுமே. (15)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | பேய்ப்பருத்தியிலேச்சாறு | 1 படி |
| | நொச்சிச்சாறு | ½ ,, |
| | தழுதாழைச்சாறு | ,, |
| | குறட்டைச்சாறு | ,, |
| | ஆடு தீண்டாப்பாளேச் சாறு | ,, |
| | உத்தாமணிச்சாறு | ,, |
| | சீதேவி செங்கழுநீர் (நெய்ச்சட்டி)ச்சாறு | ,, |

இவைகளே யொன்று கலந்து,

| | |
|---|---|
| சிவனர் வேம்பு | பெருமருந்து வேர் |
| நன்னரிவேர் | குமிழம்வேர் |
| ஓரிலேத்தாமரைச்சமூலம் | சிற்றரத்தை |
| அதிமதுரம் | தேவதாரம் |
| வெள்ளேக் கோஷ்டம் | செவ்வியம் |
| பெருங்குறும்பை(மருள்வேர்) | சீரகம் |
| கருஞ்சீரகம் | பூண்டு |
| இந்துப்பூ | லவங்கப்பட்டை |
| கடுகு | வசம்பு |
| சதகுப்பை | வெளுத்சைப்பிசின் |

இவைகளே வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டுச் சூரணம் செய்து, இஞ்சிச்சாறு விட்டு நன்ருக வரைத்து,

வேப்பெண்ணெய் — சின்னப்படி ½
நல்லெண்ணெய் — ,,
விளக்கெண்ணெய் — ,,

இவைகளுடன் ஒன்றாகக் கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து இறக்கி, வடிக்கட்டிக் கொண்டு, தலையில் பூசிவரவும். இதனையே காலணு அளவெடுத்து உள்ளுக்கும் சாப்பிடவும். சீத சன்னிகள் தீரும்.

### சீதாங்க சந்நி லக்ஷணங்கள்.

சீதாங்கசந்நி யுடல்குளிரு மிருமுஞ்
சீறியிடும் விக்கல் சிந்தமுடல் நோகும்
வாதையிடும் வாந்தி வயிறிழியும் நடுக்கு
மயங்கிவரு மூர்ச்சை வாதையுடன் மாதே!
பாதமுடலங்கள் நோவுமது கண்டு
பாரினிய வேத முனிவரிது சொல்ல
லீதமுன் ஞேதல்பதி ஞறில்விடுமென்றே
மேவிவரு நாளின் வியன்றுரைப்ப துவே. (16)

(இ-ள்) உடலில் குளிர்ச்சியுண்டாகும். இருமலேற்படும். அடிக்கடி விக்கலுண்டாகும். உடம்புவலி, அதிகமான வாந்தி, வயிற்றுப்போக்கு, நடுக்கல், மூர்ச்சை இவைகள் உண்டாகும். கால்வலி அதிகமாக இருக்கும். 16 நாட்கள் சென்று குணம் கொடுக்கும்.

### சீதாங்க சந்நிக்குச் ''சுரைத்தண்டுக் கஷாயம்''

சுரைத்தண்டு தூதுவேளை சுக்கு கோட்ட
துய்யபூ சினிததண்டு துலங்கக்கூட்டி
உரைத்தலாமிச் சிலவங்கஞ் சந்தமுள்ள
சரிநீ கொண்டுவிரு நாழிநீரில்
நுரைத்திட வேகாய்ச்சி யுழக்காய்க் கொண்டால்
நோக்கறுமே சீதாங்கச் சந்நிபோக

வாத்துடனே வருமாதே! வானோர் சொன்ன
மருந்திதுவே வாகட நூல் வழுத்துமாதே! (17)

(இ-ள்) சுரைத்தண்டு — தூதுவேளைவேர்
சுக்கு — கோஷ்டம்
பூசனித்தண்டு — இலாமிச்சம்வேர்
கிராம்பு

இவைகளை வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து உட்கொள்ளவும். சீதாங்க சந்நிகள் தீரும்.

### சீதாங்க சந்நிக்குச் ''சித்ரமூலாதி கஷாயம்''

அறிவான கொடிவேலி முன்னைகூ விளையு
மானகண்டங்காலிவட்டத்திருப்பிபெருமரத்தோல்
முறியாத சித்தமட்டி சுக்குகொடுகி ராம்பு
முன்தேவ தாரஞ்சிறு தேக்கதி விடையம்
பிரியாத புங்கின்தோ லாயில் பட்டை
பேரினிய திப்பிலமூ லபற்ப டாகம்
குழியாம ரத்தைககி ஷாயம்நீர் கொண்டு
கூட்டுத் தேன் திப்பிலி கற்கமுடன் கொள்ளே (18)

(இ-ள்) கொடிவேலிவேர் — முன்னைவேர்
வில்வவேர் — கண்டங்கத்திரிவேர்
வட்டத்திருப்பிவேர் — பெருமரப்பட்டை
சித்தாமுட்டிவேர் — சுக்கு
கிராம்பு — தேவதாரு
சிறுதேக்கு — அதிவிடயம்
புங்கம்பட்டை — ஆயில்பட்டை
திப்பிலிமூலம் — பற்பாடகம்
சிற்றரத்தை

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை விதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி $\frac{1}{8}$ பாகமாகும்வரை வற்றவைத்து வடிக்கட்டிக் கொள்ளவும். இதனுடன் திப்பிலிக் கற்கம் 1 வராகனெடையும், தேன் சிறிதும் விட்டு, உட்கொள்ளவும். சீதாங்க சந்நிகள் தீரும்.

### சீதாங்க சந்நிக்கு ''ஆயில்ய எண்ணெய்''

கொள்ளாயில் பட்டைகல் முருசுவேருங்
கொன்றவே ருவாய்வேர்மா விலங்கைசுவேரும்
வில்லாத ஊமத்தின்வே ரெருக்கின்வேரும்
மேவுசந்நி ஞாயறுமுருங் கைவேர்புங்கு
தள்ளாத உத்த மதா ணிவேர் துளசி
சரிகொண்டு உள்ளிவசம் புடன்தகத்து
துள்ளாதே வேப்பெண்ணெய் தன்னி
லெரித்திடுமெய் சோறுமது
சீதாங்கமும் கண்டே. (19)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | ஆயில்யப்பட்டை | கல்முருசுவேர் |
| | கொன்றைவேர் | உகாவேர் |
| | மாவலிங்கைவேர் | ஊமத்தைவேர் |
| | எருக்கம்வேர் | சந்நிஞாயறு (சந்நிநாயகம்)வேர் |
| | முருங்கைவேர் | புங்கம்வேர் |
| | உத்தாமணிவேர் | துளசி |
| | பூண்டு | வசம்பு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை விதமெடுத்து இடித்துத் தண்ணீர் விட்டு நன்றாக வரைத்து, வேப்பெண்ணெய் $2\frac{1}{2}$ சேருடன் குழப்பி. அடுப்பின் மேலேற்றி பதத்தில் எரித்து இறக்கவும் இத்தைலத்தை உடம்பில் நன்றாக தேய்க்கவும். சீதாங்க சந்நிகள் தீரும்.

### கண்டகுச்ச சந்நி நிதானம்.

கண்டகுச்ச கன்சந்நி கடிதாம் விறுமை யாமிருக்கு
மண்டைதிரும்பும் பொய்பேசு மானேதானே
யெழுந்திருக்கு
யுண்டாமூச்சுமிருமலோடுமுடல்நோம்வாயுமரோசிக்கும்
கொண்டார் விக்கல் தலைநோகக் குறைவார் பதிமூன்
றுந்தினமே. (20)

(இ-ள்) அவனையறியாமலே தலை ஒரு பக்கமாகத் திரும்பும். பொய் பேசுவான். பெருமூச்சு உண்டாகும். தானாகவே எழுந்திருப்பான். இருமல், உடம்பு பாரம் முதலியவைகளுண்டாகும். வாயில் ருசியின்மையுண்டாகும் விக்கலும், தலைவலியும் ஏறபடும். 13 வது தினத்தன்று குறைவடையும்.

### கர்க்கணிக சந்நி லக்ஷணங்கள்.

கர்கணிகச் சந்நியுடன் விருமை தானே
காணும் விக்கல் நாவிரியும் கருத்துவேறு
முற்கலங்க விருமுமெய் நடுக்குஞ் செவிடாகும்
முகம் வீங்கு மெழுந்திருக்கும் படுக்கும் பாரில்
நற்கமல முகம் வேர்க்கும் நாக்குங் காயும்
நாளதுவுந் தொண்ணூறு நலுக்குங் கண்டீர்
நிற்குமது மருந்ததினால் குணமுண்டாகும்
நிசமாகவேபெரியோர் நிகர் சொன்னாரே. (21)

(இ-ள்) விக்கல் உண்டாகும். புத்தி கலக்கமடையும், இருமல் உண்டாகும். உடம்பு நடுக்கும். காது கேளாது. முகத்தில் வீக்கம் அதிகமாயிருக்கும். அடிக்கடி படுக்கையைவிட்டு எழுந்திருப்பான். படுப்பான், முகத்தில் வியர்வை அரும்பும். நாவறட்சியேற்படும். 90 நாட்கள் சென்று குணமடையும்

### கர்க்கணிக சந்நிக்குச் "சிறுதேக்குக் கஷாயம்".

பண்ணுஞ் சிறுதேக் கரத்தைபாதிரி சீந்தில் கூவிளை
பற்படகம்

நண்ணுகண் டங்காலி சிறுகாஞ்சொன்றி ஞங்குவுங்
கற்சூரை முந்திரிகையுடனே
வெண்ணுசந்த தாரமகில் கோட்டலாமிச்ச மிருவேலி
திப்பிலி மூலமதுகூட
விண்ணகநீ ரிருநாழி யுழக்காய்க் காய்ந்து வீசுதேன்
திப்பிலித்தூள் மேவுகற்கணிக்கே. (22)

(இ-ள்)

| | |
|---|---|
| சிறுதேக்கு | சிற்றரத்தை |
| பாதிரிவேர் | சீந்தில்கொடி |
| வில்வவேர் | பற்பாடகம் |
| கண்டங்கத்திரிவேர் | சிறுகாஞ்சோறிவேர் |
| பேரீச்சங்காய் | திராக்ஷைப்பழம் |
| சந்தனத்தூள் | இலாமிச்சைவேர் |
| கோஷ்டம் | திப்பிலிமூலம் |
| வெட்டிவேர் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து மழைநீர் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்துத் தேன், திப்பிலிச் சூரணம் இவ்விரண்டையும் வகைக்கு ஒரு வராகனெடையிட்டு அருந்தவும் கர்க்கணிக சந்நிகள் தீரும்.

**கர்க்கணிக சந்நிக்கு "முக்கூட்டெண்ணெய்"**

மேவுவரு மதற்குநீ யெண்ணெய்தானே
வெண்ணெச்சி வேலிப்பருத்தி பொடுதலையின்
காவுசேர் தலைச்சுருளி கருஞ்சூரை யிலையுங்
கதித்ததோர்சாறு நாழியளவதாக
ஆவினிய பேய்ப்பீர்க்கு நாழிச்சாறுடனு
மமுக்கிராக் கருஞ்சூரை குருந்துவே ரதுவு
மீவுநற் சீராங்கிராம்பு கொத்தமல்லி
யிதனுடன்கற் கடகசிங் கியுஞ்சேரே. (23)
இதமான திப்பிலிமா சகாய்யினிய
கம்பிப்பி சினுள்ளி வகைகூட்டிப்

பதமான வேரண்டெள் ளெண்ணெய்கூட
வேப்பெண்ணெய் படிசரியாககொள்
மருந்தரைத்திட்டு
நிதமாகக் காய்ச்சிவடித்துக் கொண்டிடமேல்
நீங்குமது சந்நிவாதம் விடும்
விதமான காசுநிறை கொண்டுவீரால்
மீரு துகர் கணிசந்நி மீண்டிடுமே. (24)

(இ-ள்) வெண்ணொச்சிச்சாறு வேலிப்பருத்திச்சாறு
பொடுதலைச்சாறு பெருமருந்து இலைச்சாறு
கருஞ்சூரையிலைச்சாறு பேய்ப்பீர்க்கிலைச்சாறு

இவைகளை வகைக்கு ஒரு படி வீதமெடுத்து ஒன்றாகக் கலந்து, இதனுடன்,

| | |
|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | கருஞ்சூரைவேர் |
| குருந்துவேர் | சீரகம் |
| கிராம்பு | கொத்தமல்லி விதை |
| கற்கடசிங்கி | திப்பிலி |
| மாசிக்காய் | கம்பிப்பிசின் |
| பூண்டு | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துமுன் சாறு விட்டு நன்றாக வரைத்து அதனுடன்,

ஆமணக்கெண்ணெய் – சேர் $1\frac{1}{4}$
நல்லெண்ணெய் ,,
வேப்பெண்ணெய் ,,

இவைகளை கூடவிட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். சூடாறுமுன் வடிக்கட்டி ஒரு சீசாவில் பத்திரப்படுத்தவும்.

இந்த எண்ணெயில் ஒரு காசெடை உள்ளங்கையில் இட்டு நக்கவும் இந்த எண்ணெயையே உடம்பின் மேலேயும் பூசவும் கர்கணிக சந்நிபாதம் தீரும்.

## புக்குநேத்திர சந்நி லக்ஷணங்கள்.

மீளரிய புக்குநேத்ர சந்நிதானேவிழியாது கண்மூடு
கேளாது சேகிடாம தளர் மயங்கி கிடுகிடெனத் துயிலுந்
தாள என கைசோருஞ் சத்தியொரு பக்கஞ் சாய்வாகும்
நாக்கு முள்வாங்கு மென்ன
நாளான எட்டதனில் போக்குமுயிர் தன்னை நலமிலாப்
பாங்கு கெடுமிதனை விடுமென்று நடவே. (25)

(இ-ள்) கண்களைத் திறக்க முடியாது. கண்மூடி விடும். மயங்கி மயங்கி விழுவான். தூக்கம் அதிகரிக்கும். கைகால்கள் சோர்ந்துவிடும். வாந்தியுண்டாகும். தலை ஒரு பக்கம் சாயும் நாக்கு உள்ளே இழுத்துவிடும் எட்டு நாட்களுள் உயிர் நீங்கும்.

## இரத்தாக்கிஷ சந்நி லக்ஷணங்கள்.

நடத்துமிரத் தாக்கிஷ சந்நி தோணில்
நாக்குடனு முதடுபுண்ணு மிரத்தம் பாயு
மடக்க மில்லாச் சுரம் வெகுவாம் தாங்கரஞ்சு
மங்கமதிற் சேட் டைசெய்யு மூர்ச்சையாகி
விடத்தையுண்டாப் போல்வயிறு மூச்சுங்கோபம்
விக்கலுடன் மேயிருமல் சிரஞ்சுரன்று
திடத்தமுள்ள நாக்குதடு கறுக்கும் பதினேறு
ளுள் சென்ம மறுசென்ம மிரத் தாக்கிஷ
மென்றே. (26)

(இ-ள்) நாக்கு, உதடு இவை புண்ணுகும். வெடிப்புக்களேற்பட்டு இரத்தமும் வெளியாகும். சுரம் அதிகமாகும். கைகால்களில் சேஷ்டைகள் அதிகமாகும். மூர்ச்சை யுண்டாகும் விஷத்தைச் சாப்பிட்டவன் போலப் பேதியாகும். கோபம் அதிகரிக்கும். விக்கல் இருமல், தலைச் சுற்றல் முதலான குறிகளும் ஏற்படும் நாக்கும் உதடும் கறுமை நிறத்தையடையும். பதினேறு நாட்கள் சென்று உயிரைப்போக்கும் தன்மையுடையது.

### ''இரத்தாக்கிஷ சந்நிக்குக் கம்பந்திராய்க் கஷாயம்''

கம்பந்துராய் தூதுவளை வழுதலைவேர் முத்தக்
காசுசிறு தேக்குடனே மரமஞ்சள் கூடத்
தம்பமுள்ள பூசினித் தண்டுசரி கொண்டு
தண்ணீரு மிரு நாழி காய்ந்து
வெம்பியது உழக் கான பின்னே வாங்கி
விரைந்து குடித் திடமிறுகி மீளுங் கண்டீர்
அம்பரமர் மிரத்தாக்கிஷ சந்நி தானே
அறிவோர்க ளுரைத்த மருந்
தாகுந்தானே. **(27)**

**(இ-ள்)** கம்பந்திராய் — தூதுவேளை
சிறுகத்திரிவேர் — கோரைக்கிழங்கு
சிறுதேக்கு — மரமஞ்சள்
பூசணிக்கொடி

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகச் செய்து வடிக்கட்டி உட்கொள்ளவும் இரத்தாக்கிஷ சந்நிகள் தீரும்.

### பிரலாப சந்நிக் குறிகள்.

கேளாய் நீ பிரலாப சன்னி யுடல் குளிருங்
கிடந்துமது வாய்விண்டு சொல்லாது சொல்லுந்
தாளாது குளிரும் நகைத்திரும லுண்டாந்
தாகமுடன் மூர்ச்சை நோகு முடலெங்கும்
வீளாது வாந்தி விக்கல் வாயுலர்தல்
மெய்விட்ட லத்திச் சுரம் வருவதென்ன
நாளன பதினறு செல்லுமது வென்ன
நாடும்பி ரலாப சந்நியிதன்னிலேயே. (28)

**(இ-ள்)** உடலில் குளிர் உண்டாகும். அடிக்கடி காரணமில்லாமல் சிரிப்பான், உளருவான், இருமல், தாகம் மூர்ச்சை முதலானவைகளும் ஏற்படும். தேகம்

முழுவதிலும் வலி உண்டாகும். வாந்தி, விக்கல், நாவறட்சி, அஸ்தி ஜ்வரம், இவைகளும் ஏற்படும். 14 நாட்களுக்குப் பிறகு குண முண்டாகும்.

**சிங்குவாக சந்நிக் குறிகள்.**

இயல்பான சிங்சிவை சந்நியிவை கேளீர்
இருமலுடன் நாக் கிழுத்து வாய் குளரும்
மயலாகு மெய்யுங் கேளாது காது
மாறுது மூர்ச்சை தாக மதுவாக
முயலாது சோறுமுடி யாது கைகால்
முட்டாக வருமது கொட்டாவிதானே
செயலாகப் பதினறு நாட்செல்லுங் கடினந்
தீராது சிங்கவை கண்டவிழ்தங்
கொள்ளே. (29)

(இ-ள்) இருமலுடன், நாக்கு இழுத்து, வாய் குளரும் மயக்கமுண்டாகும். காது கேட்காது. தாகம் அதிகரிக்கும். கை, கால் சோர்ந்துவிடும். அடிக்கடி கொட்டாவி வரும் 16 நாட்கள் கழித்துக் குணம் உண்டாகும்.

**பதிமூன்றுவித சந்நிகளுக்குப் பொதுவான மருந்துகள்.**

கொள்ளென்ன முத்துபவழமுத்ராட்சங் கூறு
கலங்கொம்புத் திருசவித்து
தெள்ளிய கிறும்பு திப்பிலி யரத்தை
சிறுதேக்குக் கோட்ட மதிமதுரஞ்சுக்கு
வெள்ளியுடன் பொன்னும் வில்வக்காயோடு
வெவ்வேறு முலைப்பாலில் மிறும லுரைத்து
உள்ளபடி நாவில் தளம்பண்ணு மீளும்
உயிர்மீதில் வருந்தோஷம் பதிமூன்றும்விடுமே. (30)

(இ-ள்) நல்முத்து, பவழம், ருத்ராட்சம், மான் கொம்பு, புத்திரசீவி விதை, கிராம்பு, திப்பிலி, சிற்

றரத்தை, சிறுதேக்கு கோஷ்டம், அதிமதுரம், சுக்கு வெள்ளி, பொன், வில்வக்காயோடு, இவைகளினை முலைப்பாலுடன் இழைத்து அடிநாக்கில் தடவவும். பற் பல சந்நிகளும் தெறிக்கும்.

**அபின்யாச சந்நி லக்ஷணம்.**

விடம்போன்ற வவின்யாச சந்நிசிலேத்ம
வாதமிகு பித்தமீறி முகம்பழுத் திருக்கும்
உடம்பு நொந்தால் பாதசுரங் கண்டிருக்கும்
மொழியாது துயிலும் ஒழியாது காணே
தடம்போன்ற வியர்வையது வாதை மிகவாகுந்
தாளாது உப்புசந் தானேறு மென்ன
நடம்போன்ற பதினைந்து நாளில் கொல்லும்
நன்ருகா வுவினியாச சந்நியது வென்னே. (31)

(இ-ள்) வாதம், பித்தம், கபம், இம்மூன்றும் தேகத்தில் அதிகரித்து முகம் சிவந்துவிடும். உடம்பில் வலி ஏற்படும் கால்களில் சூடு இருக்கும். தூக்கம் வராது. வியர்வையதிகரிக்கும். உடலில் வாதையதிகமாயிருக்கும் வயிறு உப்பிசமாகும் 15 நாட்களுள் நோயாளியைக் கொல்லும். இவைகள் "அவின்யாச சந்நிக்" குறிகளாகும்.

**சுகசந்நிக் குறிகள். (Hysteria)**

துணுக்கு துணுக்கா யெடுத்தெறியுந்
துகிலைக் கீறும் விறை விறைக்கு
மினுக்குப்பேசா வசைபேசும்
மெதுத்தார் முகத்தில் துப்பிவிடுந்
தனுக்கும் பேசாவசை சொல்லுந்
தாங்காதுடல்நீர் வலத்தின்னுங்
கனக்கும்படியே சுகசந்நி
கண்டோர் பெருகப் பேசுவதே. (32)

(இ ள்) சிறுசிறு துண்டுகளாகத் துணியைக் கிழிப்

பான். ஆண் குறியும் எழும்பும். எல்லோரையும் வாயில் வந்தபடி திட்டுவான். அவனுடன் எதிர் வாதாடுவோர் முகத்தில் துப்புவான். தன்னைத்தானே தனக்குள்ளே வைது கொள்வான். இவை 'சுக சந்நிக்'' குறிகளாம்.

**வாதசந்நிக் குறிகள்.**

கைகொட்டி யோடுவதுங் கண்ணைச்சோற வலிப்பதுவும்
பையச்சிரித்தே அழுவதுவும் பலகால் மருட்போலிருப்
பதுவும்
மெய்யைப் பலகா லுணர்த்துவதும் வேண்டாதாகிற்
பிதற்றுவதும்
நிமையைப் பொருத்த குழலீரே! வாத சந்நி
யிதுவாமே. (33)

(இ-ள்) அடிக்கடி கைகளைக் கொட்டி ஓடுவதும் கண்களைச் சிமிட்டுவதும், காரணமில்லாமல் சிரிப்பதும் உடனே அழுவதும், சிற்சில சமயங்களில் பயந்தவன் போல் காணுவதும், உடம்பை அடிக்கடி தொட்டுக் கொள்வதும் தனக்கு வேண்டாத வஸ்துக்களைப் பற்றிப் பிதற்றுவதும் "வாதசந்நி'' ரோகத்தின் குறிகளாகும்.

**சந்நிவாதக் குறிகள்.**

கையுங் காலுமொரு மொருபக்கங் கனக்கச் சேர்த்துக்
சாய்வாக்கி
மெய்யுமறவேமெலிந்துவரும்வெதுப்பிநாவுந்தடுமாறுஞ்
செய்யுங் குணங்கள் நாடிதன்னைச் செப்புஞ் சந்நி
வாதமென
உய்யும் படியும் வகை காண உலகோ ரறிய
வுரைத்தோமே. (34)

(இ-ள்) ஒரு பக்கத்துக் கையும் காலும் கனத்து இழுபட்டுச் சாய்வாகும். உடல் மிகவும் மெலியும் நாக்கு வெந்து பேச்சுத் தடுமாறும். இம்மாதிரியான குறிகள் கண்டால் "சந்நிவாதம்'' என்ற ரோகம் என அறியவும்.

**முகவாதசந்நிக் குறிகுணங்கள். (Facial paralysis.)**

கண்ணித் தலையில் புருவத்தில் காதில் செவிட்டில்
குத்துண்டாய்
பண்ணிப் பதைக்கில் முகந்தன்னைப் பக்கம்பத்தி
யேறிடுகில்
வெண்ணில் சொல்லு முகவாத மிடருஞ்சந்நி யீதென்று
கண்ணிச் சொன்னேஞ் சிலர்வாழ நாடுங் குணங்க
ளிவைகண்டே. (35)

(இ-ள்) கண்கள், தலை, புருவம், காது, பொட்டு முதலானவிடங்களில் குத்து வலியுண்டாகும். முகத்தை ஒரு பக்கமாக இழுத்துவிடும், இவை 'முகவாதசந்நி' குறிகள்.

**வெடிசந்நி ரோக லக்ஷணங்கள்.**

காதிற்குள்ளே திரண்டெழுந்துக் கதிக்கக் குத்தி
வலியுண்டாய்
சேதப்படவே முகமதனைத் திருகி நாக்குந் தடுமாறி
வேதப்படியே வெடிசந்நி விழுந்தே யிழுக்குஞ்
சேத்துமமும்
பேதப்படவே வியாதிதன்னைப் பிரித்துப் பெருகப்
பேசினரே. (36)

(இ-ள்) காதினுள் உருண்டையாகத் திரண்டு எழுந்து, குத்துவலியுண்டாகும். முகத்தை யிழுத்து, நாக்குத் தடுமாறும். பொதுவில் கபம் அதிகரிக்கும். இவை "வெடிசந்நி"யின் லக்ஷணங்களாகும்.

**வெடிசந்நிக்கு "அரீதகீச் சூரணம்".**

கடுக்காய் நறுக்கிப் பொடி செய்து கதித்தயிந்துப்
பதுவுடனு
மடுக்க மிளகு திப்பிலியு மதுவும் வெச்சில் பொடியாக்கி
தடுக்காஞ் சாத்தில் சதாவரித் தண்ணீர் கொண்டே
யருந்துவீரால்
வெடிக்குஞ் சந்நி சீரெட்டும் விட்டே மலமுங்
கழிந்திடுமே. (37)

| | |
|---|---|
| (இ-ள்) கடுக்காய்த்தோல் | இந்துப்பு |
| மிளகு | திப்பிலி |

இவைகளைச் சேர்த்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இச் சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தண்ணீர்விட்டான் கிழங்குச் சாற்றுடன் உட்கொள்ளவும். வெடிசந்நிகள் தீரும். ஒரு தடவை மலப் பிரவ்ருத்தியும் ஆகும்.

## வெடிசந்நிக்குப் "பிப்பில்யாதி எண்ணெய்"

உத்திடு திப்பிலி யுடனதிமதுர
முத்தியுள்ள செவ்வல்லி வெளுத்தைப் பிசினேடு
மத்தமா தேவியுடன் தூதுவேளை கவி
கொள்வட்டதுவுட னித்தமாய்ப்
பத்திநிலக் குமிழ் மிளகுநன் ஞரிபார்
முத்தமாவாரை நாயுருவி நிலவேம்பு
வுத்திடுக வெண்ணெயது பத்திடுக வெடி
சன்னியொக்கவது துயரமாறுமே. (38)

| | |
|---|---|
| (இ-ள்) திப்பிலி | அதிமதுரம் |
| செவ்வல்லிக்கொடி | வெளுத்தைப்பிசின் |
| உத்தாமணிக்கொடி | தூதுவேளைவேர் |
| நிலக்குமிழ்வேர் | மிளகு |
| நன்ஞரிவேர் | கோரைக்கிழங்கு |
| ஆவாரம்விதை | நாயுருவிவேர் |
| நிலவேம்பு | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை யெடுத்து, இடித்துச் சூரணஞ்செய்து நல்லெண்ணெய் $1\frac{1}{4}$ சேர் விட்டு ஒன்ருகக் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும் இந்த எண்ணெயைத் தலையிலும் காதிலும் குத்திவர "வெடி சந்நிகள்" தீரும்.

### கபால வியாதிக் குறிகள்.

கண்டந் தன்னில் மேல்மூன்று கதிக்க மண்டை
வறட்சியினுல்
துண்டம் புருவங் கூடுதலுஞ் சுழியிற் கண்ணிற்
குத்துண்டா
மண்டுந் துயர மிகவுண்டாம் வலேபோல் கண்ணுந்
தெரிவரிதா
மண்டை முழுதும் பரந்து குத்தும் வருத்துங் கபால
வியாதியிதே. (39)

(இ-ள்) கழுத்திற்குமேல் மண்டை வறட்சியாகிப் புருவங்கள் கூடும் நடுமையத்தில் குத்துவலியுண்டாகும். அதிகமாக வேதனையைத் தரும். கண்களும், வலேயினுல் மறைக்கப்பட்டதைப் போன்று பார்வையயடையும். மண்டை முழுவதிலும் குத்துவலி உண்டாகும். இவை "கபால வியாதி"க் குறிகளாகும்.

### கபாலச் சந்நிக் குறிகள்.

பெருத்த நரம்பு பிடரிதன்னைப் போய் பிரிய
வொட்டாது
வருத்த மிகுந் தலேகாது மதிக்குந் தினவு மிகவுண்டாம்
திருத்த முடனே யீடாடித் வெளியில் திரிய வொட்டாது
கருத்தைக் கெடுத்துத் திமிரேறுங் கபால சந்நியெனக்
கருதே. (40)

(இ-ள்) பிடரி நரம்பு வலிக்கும். தலே, காது முதலான விடங்களில் அதிக நமைச்சல் உண்டாகும். வெளியில் சஞ்சரிக்க முடியாது. உடம்பில் ஒருவித மதமும் ஏறும். புத்தியைக் கெடுக்கும்.

### சந்நிகளுக்கு "அஞ்சனம்"

கருதுபெரு வாகைவித்து மிந்துப்புக்கதித்த மிளகு
திப்பிலியும்
பெரிதுபசுவின் மூத்திரத்தில் பேணியரைத்து
நாள் மூன்று

மருவுங் குளிகைக்கயிராக வைத்துநிழலி லுலர்த்தியுட
னுருவார் சந்நிக்கஞ்சனமா யுரைத்தேயிடுவீ
ரொண்டொடியே (41)

(இ-ள்) வாகைவிதை இந்துப்பு
மிளகு திப்பிலி

இவைகளைச் சமனெடையெடுத்து இடித்துச் சூரணஞ் செய்து ஒருகல்வத்திலிட்டுப் பசு மூத்திரம் விட்டு நன்ருக 3 நாட்கள் அரைக்கவும் பின்னர் இதனை நீண்ட மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இதனை நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தி 6 மாதங்கள் சென்ற பின் எவ்வித சந்நிகளுக்கும் கலிக்கமாகப் போடவும்.

குறிப்பு:— **கலிக்கம் போடும் முறை**

ஒரு சுத்தமான சந்தனக்கல்லில் மழைநீர் ஒரு சொட்டுவிட்டுமுன்கூறியமாத்திரையைக்கையிலெடுத்து அதில் நான்கு அல்லது ஐந்து தடவைகள் உரைக்கவும் இந்த விழுதை ஒரு செம்புக்கோலில் இரு நுனிகளிலும் ஒரு பயற்றம்பருப்பளவு வைத்து இரு கண்களுக்கும் போடவும்.

## பலக்ஷய ஜ்வரக் குறிகள்.

தாகம் பிருமை மேயிழைப்பு சந்து நோவு குளிர்
மூர்ச்சை
யாகும ரோசகங் குத்திருமி லறவே சோம்பல் லெழில்
முகங் கண் பேத மாகிப்பெய் யூமைபித் தாதிக்கம்
கண் மூக்காக நீராங்கண்ட மடையும் பலட்சயச்[வாய்க்
சுரமாமே. (42)

(இ-ள்) தாகம், மயக்கம், இரைப்பு, மூட்டுக்களில் வலி, உடலில் குளிர், மூர்ச்சை, ருசியின்மை, இருமல், சோம்பல், முகம், கண் முதலான உறுப்புக்கள் கோளாறு அடைதல், பித்தம் அதிகரித்தல், (காங்கை) கண்களிலிருந்தும், மூக்கிலிருந்தும் நீர் வடிதல், முதலான குறிகள் காணப்படில் "பலக்ஷய ஜ்வரம்" என்று தெரிந்து கொள்ளவும்.

### பித்த சந்நிக்கு குறிகள்

உள்ளுடல் தண்ணீர் தாக முண்மையின் பி தாப
மூர்ச்சை
கொள்ளிடும் பிரமை மோகங் கூறிடுஞ் சுரமே காணுந்
தள்ளும்விப் பிரமையாகும் சாற்றுமிக்குறியே கண்டால்
கள்ளமாம் பித்த சந்நி கண்டிடுங் குணங்கள் தானே(43)

(இ-ள்) அதிகமாகத் தண்ணீர் தாகமுண்டாகும். மூர்ச்சையடைவான். மயங்கிவிழுவான். சுரம் அடிக்கும் மயங்கி மயங்கி விழுவான். இக்குறிகள் கண்டால் "பித்த சந்நி" எனத் தெரிந்து கொள்ளவும்.

### சேத்துமச் சந்நிக் குறி குணங்கள்

அஞ்சியாம் வாந்தி செய்யு மங்காம நடுக்கு மார்புங்
கஞ்சியாம் நோவுந் தானுங் காசமாஞ் சுவாசந் தானு
மஞ்சுவாமாகுமிஞ்சி யாகுமேயிளைப்புப்பிலனில்லே
தஞ்சியாமங்கம் பத்துஞ்சுந்நிசந்தநீர் சாற்றுவீரே. (44)

(இ-ள்) அடிக்கடி வாந்தி ஏற்படும். தேகம் நடுங்கும். மார்பும் படபடவென்றடித்துக் கொள்ளும். மார்பு வலியும் உண்டாகும் இருமலுடன் மேல்மூச்சும் ஏற்படும். இவைகள் "கபசந்நியின்" லக்ஷணங்களாகும்.

### பித்த சூசிகாவாயு சந்நியின் குறிகள்

தலையுங்கனத்து வுடல்குளிருந் தக்கமுகமுஞ் சந்நிகட்டு
மலையும்பிடரிதானிசிக்கு மயக்கும் வியர்வு மதிகமதாம்
துலையுங் குளிர்ச்சி பேலேவேதான் வொக்க சரீரம்
சிலீரென்னும்
குலையுந் தந்தந்தான் பிறமுங் கூசுங்கைகளால்
விரல்தனிலே (45)
தனிலேபக்கந் தான்சீவு சக்திவயத்தில் கட்டிவிழும்
புனிபோல் நாசி தனில்நீராய் பசபசன்றே
தினவுமுண்டாங்
கனிபோலுடம்பு புண்ணுகி கதித்தேநாளில் வெளுத்து
வரும்

முனிதானருளிச் சொன்னகுறி மூற்கன்பித்த
சூசிகாசந்நியே. (46)

(இ-ள்) தலை பாரம், உடலில் குளிர், முகத்தில் குளிர்ச்சி, பிடரி இசிவு, மயக்கம், வியர்வை, அதிகமான தாகம், சரீரம் முழுவதும் சில்லிட்டு விடுதல், பற்களில் கூச்சம், கை, கால், விரல் இவைகளில் நடுக்கம், வாந்தி, வயிற்றில் கட்டி மூக்கிலிருந்து பனிநீர்போல் நீர் வெளியாதல், மூக்கில் "பச பச" வென்று அரிப்பு, உடம்பில் புண்களேற்பட்டு, நாளடைவில் வெண்மை நிறமடைதல், முதலான குறிகள் ஏற்படில் அது "பித்த சூசிகா சந்நி" எனத் தெரிந்துகொள்ளவும்.

***பித்த சூசிகா வாத சந்நிக்குச் 'சங்கம்வேர்க் கஷாயம்'**

சங்கம்வேரு வெள்ளறுகு தக்க அசுவ கந்தியுடன்
இனிதானெருக்குப் புங்குமிவை யோரயிலந்தை
கொன்றையுடன்
பரிதா மரிதகிப் பட்டையுடன் பருத்த வேர்க்கொம்புத்
திப்பிலியும்
குலிதான் மூலம் (பேர் மூலம்) குதித்த தண்ணீர்
நாலொன்றுய்க் காய்ச்சிக் குடிப்பீரே. (47)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சங்கம்பேர் | வெள்ளறுகு |
| | அமுக்கிராக்கிழங்கு | எருக்கம் வேர் |
| | புங்கம்பட்டை | இலத்தைப் பட்டை |
| | கொன்றைப்பட்டை | கடுக்காய்த்தோல் |
| | சுக்கு | திப்பிலி |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சூரணித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றுக வற்றவைத்து உட்கொள்ளவும். சந்நிகள் தீரும்.

* இச் செய்யுளின் சீர் சரியாக இல்லை.

### * வாத வாத வெறியின் குறிகள்.

வாதவாத வெறியெடுத்தால்மயங்குமறிவு தனைப்பேசுங்
காதல் கொள்ளுங் கோபமில்லை கண்கள் தோறுங்
கடுக்கு தென்றும்
பேதமொருநா ழிகை பேசும் பிள்ளைப் பிதாவே
தானுனக்கு
ஓதுஞ் சிவனே நீறணியும் மொருக்காலன்றி மடக்கி
விடும். (48)

(இ-ள்) புத்தி மயக்கம் ஏற்படும். ஆசையேற்படும். கோபம் வராது. கண்களைச் சுற்றிலும் கடுப்பு வலி உண்டாகும். சில சமயங்கள் தானாகவே பேசிக்கொள் வான்.

### வாத பித்த வெறியின் லக்ஷணம்.

வாத பித்த வெறியெடுத்தால் மயங்கிச் சினக்கும்
வார்த்தை சொல்லும்
ஓதும் பலகால் கண் சிவக்கும் முவக்கு மறிவு டன்பேசும்
பேதம் பேசு மறிவுண்டாம் பிணங்குமங்க மடக்கிவிடும்.
பாதி நேரஞ்சத்திவரும்பாடியோடி யெழுந்திருக்கும் (49)

வாத பித்த வெறி ஏற்பட்டால் மயக்கத்துடன், கோபித்துக்கொண்டு வார்த்தை சொல்வான். அடிக் கடி கண்கள் சிவக்கும் புத்தி நிதானத்துடன் பதில் சொல்வான். சிற்சில சமயங்களில் தானே பேசிக் கொள்வான். கை, கால்கள் முடங்கும். வாந்தியும் உண்டாகும்.

### வாத கப வெறியின் குறி குணங்கள்.

வாதசேத்தும பித்தெடுத்தால் மடக்கிக் கிடக்குங்
களைத்துவரும்
ஏதும்பேசு மறிவுடனே ஏறப்பார்க்குங் கண்மூடுங்
காதல்கொள்ளும்பசியமருங்கண்டாருடனே நலம்பேசும்
ஏதுசெய்வேன் சிவனே என்னும் மெறியுமருவு
முடன்தானே. (50)

* வாதம் இருமடங்கு கோபிக்கும் ஸபத்ய ரோகம்

(இ-ள்) கை கால்கள் மடங்கிக் கிடப்பான். களேப்பு உண்டாகும். புத்தியுடனே பேசுவான். எல்லோரையும் ஏற இறங்கப் பார்ப்பான். கண்கள் மூடும் ஆசை யுண்டாகும். ப சி யி ர ா து. எல்லோருடனும் நல்ல வார்த்தைகளைப் பேசுவான். "நான் என் செய்வேன்" என்றும் அடிக்கடி உளருவான்.

### பித்தவெறி லக்ஷணங்கள் (பித்தப் பைத்தியம்)

பித்தமான வெறியெடுத்தால் பிரட்டை பேசும்
நாக்கறுக்கும்
பத்தியேறுஞ் சுரங்களெல்லாம் பாடுமெச்சில்
தனைத்தின்னுஞ்
சுத்திச்சுத்தி மயங்கிவிழுந் துணியையெடுங்குங்
கிழித்தெறியு
மெத்தவாதைபேசிவரு மிடுக்கேயுண்டு கல்லெறியும் (51)

(இ-ள்) தாறுமாறாகப் பேசும் நாக்குக் கறுத்து விடும். உள் காங்கையிருக்கும் பாட்டுப் பாடுவான். எச்சிலை பதார்த்தங்களை உட்கொள்வான். சுத்திச்சுத்தி மயங்கி விழுவான், துணியைக் கிழித்துக் கொள்வான். பிறர் நோகப் பேசுவான். எல்லோர் மேலும் கற்களை யெடுத்தெறிவான். இவை பித்தம் அதிகரித்தாலுண் டான பைத்திய ரோகமாகும்.

### பித்தவாத வெறியின் இலக்ஷணங்கள்.

பித்தவாத வெறியெடுத்தால் பிரட்டைபேசு
முடன்மருவுஞ்
சுத்தத்தோடே நீறணியுஞ் சொன்ன வார்த்தை
யசத்துவிடு
மெத்தச்சிவக்கும் கண் களெல்லாம் விழிக்கு முறுகு
மறிவுடனே
சற்றுநேரம் நலம் பேசும் சண்டைபேசுந்
தன்குணமே. (52)

(இ-ள்) தாறுமாறாகப் பேசுவான், நன்றாகஸ்நானம் செய்து விபூதி பூசிக்கொள்வான். சொன்ன சொற்களைக் கடைப்பிடிக்க மாட்டான். கண்கள் அதிகமாகச் சிவப்

பாகும். விழிகள் பிதுங்கும். நல்ல புத்தியுடனே சில சமயம் பேசுவான். திடீரெனச் சண்டையிடுவான். இக் குறிகள் காணப்பட்டால் இவை "பித்தம் வாதம் இவ் விரண்டும் சேர்ந்த பைத்தியம்" என்று தெரிந்து கொள்ளவும்.

**பித்தப் பெருக்கின் குறிகள். (பித்தப்பித்த வெறி)***

உணர்ச்சி கெட்டிடு மோதுமி லச்சைபோம்
பணைத்தெழுந்து பாடுமதப் பியங்
கணக்கி ளேடைறி யாதொரு காரியம்
பிணக்க மாய்விடும் பித்தம் பெருக்கிலே. (53)

(இ-ள்) உணர்ச்சி குறையும். வெட்கம் இராது திடீரென எழுந்து பாடத் தொடங்குவான். கணக்கின்றி (நிதானமின்றி) எல்லாக்காரியங்களையும்செய்துகெடுத்து விடுவான். இவை பித்தப் பெருக்கின் குறிகளாகும்.

பித்தமே மோகித்தக்கால் பெருகிய மயக்கமுண்டாங்
கொத்தலர் குழலினுயே! குலைப்பெரும் பீச்சதாகு
மத்தனே யய்யவெற்பில் பரத்தையைச் சேர்ந்தனுகில்
நித்தலும் வெப்புத்தானே நிறையவே வீசுந்தானே (54)

**தேகத்தில் தோஷங்கள் சாதாரணமாக அதிகரிக்கும் காலம்**

காலையில்பத்தும் பித்தக் கடும்பகலகதுமெய்த்து
மாலையில் பத்தும்வாதம் வயங்கியே பத்துமய்ய
மேலிடுமொத்தக்கூத்தில்மிகுத்திடும்பித்தம்பத்துங்
காலமே விடியப்பத்துங் கதித்தோர்
வாதமாமே. (1)

வாதமே கதித்தபோது வாயுவுமெழும்பிழுஞ
மாதிமே விருமலாகிய துடித்திடுஞ் சந்நிவாதம்
பேதகஞ்சீக் கிராணி பெருவயறுதிரதோஷம்
போதவும் விருமிதென்று பொகுந்திட
முனிவர் சொன்ஞர். (2)

---

குறிப்பு: இச்செய்யுளின் பொருள் விளங்கவில்லை.

(இ-ள்) காலையில் 10 நாழிகைவரை பித்தத்தின் காலமாகும். கடும்பகல் 10 நாழிகைவரை கபத்தின் காலமாகும். மாலை 10 நாழிகை வரை வாதத்தின் காலமாகும்.

இவ்வாறே இரவில் 30 முதல் 40 நாழிகை வரை பித்தமும், பின்னர் 10நாழிகை கபமும், கடைசி பத்துநாழிகை வாதத்தின் காலமாகவும் ஆகும்.

வாதம் அதிகரிக்கும் போது உடலில் வாயு அதிகரிக்கும். இருமலும் உண்டாகும். கிராணி, பெருவயறு, ரத்ததோஷம் முதலானவைகளும் உண்டாகும்.

### வாதரோக லக்ஷணங்கள்.

காலகையுலர்ந்து திமிருண்டாம் கண்ணுந்தூங்கிச்
சோபித்துக்
கோலஞ்செரியு மங்கமெல்லாங் குதித்துச் சற்றே
கனங்கொண்டு
சீலமிகுந்து சீர்காணச் சிறுநீர் வற்றி முடுகுமென்ன
வாலத்தடங்கண் மானனையாய்!மாதே!வாதரோகமிதே

(இ-ள்) கை, கால் இளைத்து மதமதப்பும் ஏற்படும். தூக்கம் அதிகமாகும் கண்களில் வீக்கமும் உண்டாகும். உடம்பு கனமாகும். சிறு நீர் குறைவடையும். இவை வாதரோகத்தின் லக்ஷணங்களாகும்.

### கபாலக்கனப்புவலிக் குணங்கள்

ஓடியுளைந்தேமறுகிவரும்ஒருக்கால்விடாமல்மிகக்குத்தும்
வாடிக்காயம்வறண்டுவரும்வலுப்பாய்ப்பத்துமுளைவாகத்

குறிப்பு:— ஆயுர்வேத கிரந்தங்களில் காலையில் கப காலமாகவும் மத்தியானம் பித்தத்தின் காலமாகவும், சாயங்காலம் வாதத்தின் காலமாகவும் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறே இரவிலும் தோஷங்கள் அதிகரிக்கும் காலமாகும். ஆகவே வித்தியாஸத்தைக் கவனிக்கவும்.

தோடிப் புணர்ச்சிதனைச் செய்யாச்சிறுநீர் தெளிந்து
கருகிவரும்

நாடிக்கபாலக் கனப்புவலி நயந்தே நாளில்
நல்குவதே (4)

(இ-ள்) உடம்பு முழுவதிலும் குத்துவலியேற்படும் உடம்பு சோர்ந்துவிடும். வரட்சி அதிகமாகும். சிறுநீர் கருமை நிறத்துடன் தெளிவாக வெளியாகும்.

## ஓடு வாத லக்ஷணங்கள்.

ஓடிய வாதமாகிலுடலது நெஞ்சுஞ் சந்துந்
தேடிய கால்கள் கைகளதீதமாய்ப் பிறக்க வொண்ணு
வாடிடு மேனிதானும் வரண்டிடும் நாவும் பல்லும்
ஓடிடு முடல்கள் தோறு முளைவுடன் குத்துமுண்டே. (5)

(இ-ள்) தேகம், நெஞ்சு மூட்டுகள், கை, கால்கள் இவைகளை யசைக்கவியலாது. உடம்பும் வாட்டமுறும் நாக்கு, பற்கள் இவை வரண்டுபோம். உடலில் குத்து வலியும் உண்டாகும்.

## வருணவாதக் குறிக்குணங்கள்.

உதரஞ்சுரந்து மயக்கமுடன் வாந்தியுள்மூச்சதுவுண்டா
யதரமுங் கருகி மேலுமறப் (புடன்) மேல் கழுத்து
திதமிது வருணவாதந்திருமுனி யருளிச்செய்த[நோவாந்
பதமுறு வேத நூலின் படியிது பகர்ந்ததாமே. (6)

(இ-ள்) வயிறு வீங்கும். மயக்கம் ஏற்படும். வாந்தி உள்மூச்சுஉண்டாகும். உதடுகறுமை நிறத்தையடையும் கழுத்து வலியும் ஏற்படும் இவை "வருணவாத" லக்ஷணமாகும்.

## அரியவாத லக்ஷணங்கள்.

மூச்சுவாங்கி நாவறண்டு மூக்கும் வாயும் சுழித்துமேல்
பேச்சு முட்டாய்வேர்வருவிபெருக்கந்தபனஉழலையுடன்

கா(ய்)ச்சல் குளிரு மறப்புடனே கனத்துப் புறந்தா
ளதைத்திடினு
மாச்சு மரண முடனென்று மரியவாத மீதாமே (7)

(இ-ள்) மேல்மூச்சு அதிகமாகி நாவறட்சியுண்டாகும் மூக்கும் வாயும் கோணலாகும். பேசமுடியாது. வியர்வை யதிகரிக்கும். உடலில் எரிச்சல், அழற்சி முதலானவையுண்டாகும் சுரமடிக்கும் புறந்தாள்வீங்கும் மரணத்தையும் விளைவிக்கும்.

## கபாலக்குத்தின் குறி குணங்கள்.

புருவச்சுழியில் குத்திநின்று போகப்பிரியும் பல்லு
லுருவக்குத்து முச்சிதனிலோடி மருகுஞ்சிரந்தன்னில்
மருமொய்த்தளக வல்லியிரே!
மறுசொற்படிக்குமிடமில்லை
பெருகக்கபாலக் குத்திதென்று பேசப்பகர்வீர்
பெய்வளையே. (8)

(இ-ள்) புருவ மத்தியில் குத்துவலியுண்டாகும். பற்களும் ஆடும். மண்டையுச்சியிலும் தாங்கமுடியாத வலியுண்டாகும் இவை "கபாலக்குத்தின்" லக்ஷணங்களாகும்.

## பிரவீச்சின் குறிகள்.

பிடரேவலித்து நேரமிது போகுப்பிரியஒண்ணுது
உடலேமருகித் தலைகனத்து யுடனேயடுத்தித்
திமிருண்டாய்
விடமேயருந்து மாந்தும்போல் மிகுமேயுடலில்
நாள்தோறு
மிடரேபண்ணும் பிடரிவலியிதுவும் பிரவீச் செனலாமே

(இ-ள்) பிடரிவலி நாழி ஆக ஆக ஜாஸ்தியாகும் தலைபாரம், உடலில் மதமதப்பு இவைகளுடன் விஷம் சாப்பிட்டவன் வேதனைப் படுவதுபோலவேதனையையும் தரும். தினந்தோறும் பிடரிவலி உண்டாகும், இவை "பிரவீச்சின்" குறிகளாகும்,

### இதுவுமது.

அடுத்தடுத் தெடுத்துக்குத்தியதிகமாய்வியர்த்து விம்மிப்
படுத்துநாத்தடுக்கிப் பேசி பல்லதுகிட்டி நெஞ்சு
மடுக்கவே கட்டிச்சீறி அங்கமும் பிறகே வீழில்
தடுக்கிடப் பிரவீச்சென்று செப்பினர்
முனிவர்தாமே. (10)

(இ-ள்) பிடரியை அடிக்கடி குத்தும். அதிகமாக வியர்வை யுண்டாகும். பேசும்போது நாக்குத் தடுமாறும். பற்கள் கிட்டும். நெஞ்சுக்கட்டு உண்டாகும். இவைகளும் 'பிரவீச்சின்' குறிகளாகும்.

### பிரவீச்சின் அஸாத்யக்குறிகள்.

குத்தத்தொடுத்தமூணுநாள்கொல்லாதிருக்கிலேழாநாள்
அத்தைத்தள்ளி லொன்பதாநாள் சந்தேசுரமும்வந்திடு
உத்தேஉளமூச்சதுவுதவ வதிர மேல்நோக்கில் [கில்
செத்தாரிவரேதிண்ண மெனத்தெளிந்தே
யுரையுமென்றனரே. (11)

(இ-ள்) வலி எடுத்தபின் 3-ம் நாள் உயிரைப் போக்கும். அல்லது 7-வது நாள் கெடுதலை விளைவிக்கும். அல்லது 9-வது நாள் நோயாளியைக் கொன்றுவிடும். (பிரவீச்சுடன்). சுரம், மேல்மூச்சு, மேல் நோக்கிய பார்வை இவைகளும் காணில், அதுநோயாளியைக் கொல்லும்.

### பிரவீச்சுக்கு மருந்து.

புன்றலுக் கீவாத் தண்ணி புதிய தேன்முலைப்பால் சுக்கு
கண்டெமுசந்து கோட்டங் கடிய வெள் ளுள்ளி காந்தம்
சின்றேறமுகிதுப் பலுப் புத்திற முடனரைத்துக் கூட்டி
வந்திற்ற குத்துக்கெல்லா மருந்திதுகொடுக்கநன்றே(12)

(இ-ள்) சுத்தத் தண்ணீர், புதியதேன், முலைப்பால், சுக்கு, கோஷ்டம், பூண்டு, காந்தம், இந்துப்பு இவைகளை அரைத்து உட்கொள்ளவும்.

## பிரவிச்சிற்கு ''முக்கூட்டெண்ணெய்''

நத்தைச்சூரி நாயுருவி நல்லசாறணைகொடிவேலி
சுத்தவிழியாதொண்டை சொல்லும் வெள்ளைவேலெ
ருக்குடனே
முத்தத்தூதளை புங்கம்விரை முன்னைவில்வ மீசுரைவேர்
இத்தச்சேவுக நன்னாரி இனியோரிலைத் தாமரையே(13)
அரையா முத்தமஞ்சளுள்ளி அதுவே வசம்பு
வேர்க்கோம்பு
கரையாமிளகு திப்பிலியுங் கடுகோடோமம் வெங்காரம்
விரைவார்கெந்தம் நேர்வாளம் வேண்டுங் கோட்ட
மதிமதுரம்
யுரையார் பூமிச்சக்கரையும் புதியநெல்லி
வெளுத்தைப்பிசின் (14)
பிசினொன்று கழஞ்சுகொண்டு பின்னல்
லெண்ணெய் நறுநெய்யும்
வசவேப்பெண்ணெய் சித்தாமணக்கு மருவி
யெண்ணெயிவை வடித்துப்
பூசுமேலி லரைச்சாமம் பொழுது பூகவிடுவதெனில்
நாசுவேதான் பட்டையது நன்றூறி விடுவேது. (15)
வேதுபிடித்து முன்னுழுந்து விரவியுள்ளி
யிரண்டினுமாய்
யோதுமொவ்வொன்றெருபலமாய் முன்னமெண்ணெய்
தனிற்போடு
பேதமில்லை மறந்ததுதான் பெரியோர் பொறுமின்
இதமதனை
மாதே!யிதனை வழுவாமல் மனத்திலுறுதி
கொள்வீரே. (16)

| | |
|---|---|
| (இ-ள்) நத்தைச்சூரிச்சமூலம் | நாயுருவிச்சமூலம் |
| சாறணைவேர் | கொடிவேலிவேர் |
| ஆதண்டைவேர் | வெள்வேலம்பட்டை |
| எருக்கம்வேர் | கோரைக்கிழங்கு |
| தூதுவேளைவேர் | புங்கம் விதை |
| முன்னை | வில்வம் |

| | |
|---|---|
| பெருமருந்துவேர் | சேவகன் பூண்டு |
| நன்னாரிவேர் | ஓரிலைத்தாமரைச் |
| மஞ்சள் | பூண்டு [சமூலம் |
| வசம்பு | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| கடுகு | ஓமம் |
| வெங்காரம் | சந்தனத்தூள் |
| சுத்திசெய்தநேர்வாளம் | கோஷ்டம் |
| அதிமதுரம் | பூமிச்சக்கரைக் கிழங்கு |
| நெல்லிவற்றல் | வெளுத்தைப்பிசின் |

இவைகளை உலர்த்தி வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையளவு எடுத்து இடித்துச் சூரணஞ்செய்துகொண்டு,

நல்லெண்ணெய் $1\frac{1}{4}$ சேர்
நெய் ,,
வேப்பெண்ணெய் ,,
ஆமணக்கெண்ணெய் ,,

இவைகளுடன் ஒன்றுகலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இம்மருந்தை நோயாளியின் உடம்பில் பூசி $\frac{1}{2}$ ஜாமம் (3 மணிநேரம்) ஊற வைத்து வேது பிடிக்கவும்

உளுந்து, பூண்டு இவ்விரண்டையும் வகைக்கு ஒவ்வொரு பலமெடுத்து, முன்கூறிய முக்கூட்டெண்ணெய் ($\frac{1}{2}$ சேருடன்) சேர்த்துப் பூசிக்கொண்டு வேது பிடிக்கலாம்.

## பிரவீச்சிற்குச் ''கூடர் தைலம்''

இரதங்கெந்தகம் வெள்ளுள்ளி யியல்பாமரிசஞ்
செங்கொட்டை
சரசமறவே ஆவெண்ணெய் தன்னோடொக்க
வரைத்தெடுத்து
புரமேகுத்தும் பிரவீச்சையுடனே குத்தியுரம்பண்ணிக்

கரவாதுடனே கலைசுருட்டிக்கலையில்
கொழுத்தித்தைலமிடே (17)

இடவேதைலங் காசெடைகொள் ளிஞ்சிச்சாறு
முலைப்பால் தேன்
உடனே உள்ள கொள்ளவது வுரத்தால்
வேம்பினெண்ணெயுட
னிடவே கலந்து தானங்களிதுவும் பொருத்தலாகுமென
சடமே போடா திருப்பதெனத்தறுகா திதுவுந்
தான்கண்டீர்* (18)

(இ-ள்) சுத்திசெய்த பாதரஸம் பூண்டு
,, கெந்தகம் மிளகு
,, சேராங்கொட்டை

இவைகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை எடுத்துக் கொள்ளவும் முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்ருகக் கறுப்பாகும்வரை அரைத்துக் கொள்ளவும் பின்னர் சேங்கொட்டை, முதலான சரக்குகளையிட்டு நன்ருக அரைக்கவும். பசுவின் வெண்ணெய் 5 பலம் சேர்த்து மெழுகாக்கி அடுப்பின் மேலேற்றி நெய்யாகக் காய்ச்சிக் கொள்ளவும். இந் நெய்யில் ஒருகாசடையள வெடுத்து இஞ்சிச்சாறு, முலைப் பால், தேன் இவைகளில் ஏதேனுமொன்றுடனுட் கொள்ளவும். இந்நெய்யுடன், சிறிது வேப்பெண்ணெய் சேர்த்து பிரவீச்சில் வலியிருக்குமிடங்களிலும் பூசலாம் குணம் கொடுக்கும்.

**உடற்குத்தின் குறிகள்.**

வேர்த்து வெதும்பிப் பற்கிட்டி விரைத்துக்
குத்தித்தாகித்து
சீர்த்தமிகுந்து கஞ்சிதண்ணீர் தேடுங்கொள்ள
வொட்டாது.
பார்த்து மனுஷாயிருக்கச்சே பறியும்வாயு கீள்நோக்கி

---

குறிப்பு:— முந்தின செய்யுளின் கடைசி இரு பாதங்களுக்கும் சரியான பொருள் விளங்கவில்லை.

பேர்த்துப்பகர்ந்து உடற்குத்துப் பேணிச்சொல்வார்
பெரியோரே. (19)

(இ-ள்) உடலில் வியர்வையரும்பும். பற்கள் கிட்டிக் கொள்ளும் வலியும் உண்டாகும். தாகம் அதிகமாகும் கஞ்சியைக்கூட சாப்பிடமாட்டான். வாயுப்பறியும். இவை "உடற்குத்தின்" லக்ஷணங்களாகும்.

## குடல் வாதக்குறி குணங்கள்.

உடலிடை ஓடிமீண்டு உழைந்து கால் சந்து கைகள்
குடலிடை கூப்பிட்டோடிக் குமறிடுங் குடலில் தங்கும்
கடலிடைத் தரங்கமென்னக் கலக்கிடும் நலக்க நிற்கும்
நடலிடைக் குடல் வாதத்தின் குணமென
நவின்றதாமே. (20)

(இ-ள்) வாயு தேகம் முழுவதும் வியாபித்துக் கால்கள், மூட்டுகள், கைகள் முதலியவைகளில் வலியை யுண்டாக்கும். குடலில் இரைச்சலுண்டாகும். சமுத்திரத் திலேற்படும் அலைகளைப்போலக் குடலைக்கலக்கும் இவை "குடல் வாதக்" குறி குணங்களாம்.

## துடிப்புவாத லக்ஷணங்கள்

ஓடுந் துடிக்கு முடலேறவும் பார்க்கும்
நீடுஞ் செறிந்துடலில் நின்றடங்கும்—தேடுந்
துடிப்புடைய வாதமென்னத் தோகைநல்லீர் வந்து
தடுக்கு மதுவென்றே தரி. (21)

(இ-ள்) உடலில் பூராவும் சஞ்சரிக்கும். துடிப்பு உண்டாகும். பின்பு தானகவே சமனமாகும். இவை "துடிப்புவாதக்" குறிகளாகும்.

## நடுக்கு வாதக் குறிகள்.

நடுக்குஞ் சுழற்சி செய்யும் நாவறட்சி வெப்பு
மடுக்கடுக்க வம்பாவை யர்க்கு — முடுக்கிக்

கிடுகிடெனக் கொண்டே கெடியில்விழத்தள்ளும்
நடையினிய உள் நடுக்கு வாதம். (22)

(இ-ள்) உடல் பூராவும் நடுங்கும். தலைச்சுற்ற லேற்படும் நாவறட்சியை யுண்டாக்கும். உடம்பில் அழற்சியை ஏற்படுத்தும். உடம்பு கிடுகிடென ஆடிக் கிழே கொண்டு தள்ளும், இவை "நடுக்குவாதக்" குறி குணங்களாகும்.

**நடுக்குவாதச் சந்நிக் குறிகள்.**

நடுக்குஞ் சுழற்சி செய்யு நாத்தடுக்கிப் பேசும்
கடுக்கும் குழையு மிருகால் வாராது—மடக்கொடியீர்
நடுக்குவாத சந்நி நம்பியிது மீளாது
தடுக்குமது வென்றே தரி. (23)

(இ-ள்) முன் கூறியது போலவே உடல் பூராவும் நடுங்கும். தலைச்சுற்றலும் ஏற்படும். நாக்குப் புரளாமல் திக்கித்திக்கிப் பேசுவான். உடல் வலிக்கும். இரு கால்களும் குழையும். நடக்க முடியாது. இவை "நடுக்குவாத சந்நிக்" குறிகளாகும்.

**வாத ரோகத்திற்கு "அர்க்காதி எண்ணெய்"**

எருக்கு குருந்து வெருமருந்து இருவகைச் சூரைச் சிறு
குறும்பை
மருக்கொள் கொன்றைச் சிறு நிம்பம் வரிசேர் வட்டுக்
தூதுவளை
பருத்திக் கொடுவே லாதண்டை பரிமுதிற
வேர்க்கொண்டு
நறுக்கி யோரொன் றிருபலம் நல்நீர்விட்டுக் காய்ந்து
கொள்ளே (24)

கொள்ளே சுக்குத் திப்பிலியுங் கொடியமிளகு
பெருங்காயம்
வெள்ளை வெங்கா யுள்ளியுடன் வெளுத்தைப் பிசின்
சேர் வெந்தயமும்
நள்ளே தீர்க்கு மிந்திப்பு நற்சீரகமு மோதகமுத்

தள் ளாதொக்க நேர்வாளம் சரிகொள் கருஞ்சீ ரகங்
கூட்டேன். (25)

கூட்டேயொன்று முக்கழஞ்சு கொள்ளும்
வேரொன்றிரு பலமும்
நாட்டிலளவு நாழியதால் நாலொன்ருகக் காய்ந்த
தண்ணீர்
தேட்டி டெண்ணெய் நறு நெய்யுஞ் செறிய விரண்டு
படியாகக்
கூட்டி யெரிக்கி லொரெண்ணெய் குறையும்
வாதரோகமிதே. (26)

| | |
|---|---|
| **(இ-ள்)** எருக்குவேர் | குறுந்தம்வேர் |
| கடமருந்துவேர் | சூரைவேர் |
| கருஞ்சூரைவேர் | சிறுகுறும்பை |
| கொன்றைவேர் | வேப்பம்பட்டை |
| தாதுவேளைவேர் | பருத்தவேர் |
| கொடிவேலிவேர் | ஆதண்டைவேர் |

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 5படி தண்ணீர்விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்ருகச் செய்து இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும் பின்னர்,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பெருங்காயம் |
| வெள்ளைவெங்காயம் | பூண்டு |
| வெளுத்தைப்பிசின் | வெந்தயம் |
| இந்துப்பு | சீரகம் |
| ஓமம் | சுத்திசெய்த நேர்வாளம் |
| கருஞ்சீரகம் | |

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடையெடுத்து, இடித்து முற்கூறிய கஷாயம் விட்டு நன்ருகவரைத்து, அதனுடன்

சுத்தமான நல்லெண்ணெய் சின்னபடி 1
" நெய் "

இவ்விரண்டையும் சேர்த்து, எல்லாவற்றையுமொன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும். இந்த எண்ணெயை உடம்பில் பூசிக்கொண்டும் உள்ளுக்கு (1 வராகனெடை யளவு) உட்கொண்டும் வர, வாத ரோகங்கள் தீரும்.

### குதிரை வலி வாதம்.

எண்ணெய்சந்நி வாதத்துள் ளிதுவுங் குதிரை
வலியென்னில்
கண்ணிற் றலையில் கதுப்பதாங் கையுங்காலு
மொருபக்கம்
வெண்ணீர் நுரையு மிகுந்துதள்ளு மிகவே திருக
வலியுண்டா
விண்ணைப் பார்த்து விழிநிற்கு மீளாதிதுவே
திண்ணமதே (27)

(இ-ள்) கண்கள், தலை இவைகளில் வலியேற்பட்டு, கையும் காலும் ஒரு பக்கமாக இழுக்கும். வாயிலிருந்து வெண்மை நிறமுள்ள நுரை தள்ளும். அதிகமான வலி யும் உண்டாகும். கண் விழிகள் மேல்நோக்கிய பார்வை யாக ஆகும். சிரமஸாத்யமானது.

### குதிரை வலிக்கு அஞ்சனம்.

சுக்கு மிளகு திப்பிலியும் சோமனுப்பு வெள்ளுள்ளி
தக்க கொந்தள மதிற்பருப்புத் தானுகா வசம்பு
மிவைகூட்டி
ஒக்கத் தேசிகன் பழச்சாற்றில் ஒவ்வொன்றரைத்து
அஞ்சனவுண்டே
மெய்க்குங் குதிரை வலிபூத மீளத்தேசிப்
பழத்திலிடே. (28)

(இ-ள்) சுக்கு மிளகு
திப்பிலி இந்துப்பூ
பூண்டு கொந்தளம்பழப் பருப்பு
வசம்பு

இவைகளைச் சமனெடுத்துச் சூரணித்து, ஒரு கல்வத்தி லிட்டு எலிமிச்சம்பழச் சாறு விட்டுக்கையோயாமல்நன்

ருக 2 நாட்கள் அரைத்து நீண்ட மாத்திரைகளைத் திரட்டிவைத்துக் கொள்ளவும். இதனைக் காயவைத்து பத்திரப்படுத்தி வேண்டும்போது எலுமிச்சம்பழச்சாற்றி லுரைத்து இரு கண்களிலும் பயற்றும் பருப்பளவு அஞ்சனமாகத் தீட்டவும். குதிரைவலி வாயு தீரும்.

**கபாலவலி, பிசாசு முதலியவை தீர பூவார்பழ நஸ்யம்**

பூவார் பழமும் பழவரைப்பு புதிய மிளகு மிந்துப்பு
ஆவித் தடங்கு மகத்திற்பா லதிலோடொக்கப் பொடி
கொண்டு
தாங்கா முலைப்பாலதில்கலக்கித் தப்பாதிரண்டுநாசிவிட
பாவக் கபால வலிதானும் பிசாசு மகன்று
போமென்றே (29)

(இ-ள்) பூவார் பழம் பழய அரப்பு
(இலுப்பைக்கட்டி)
புதிய மிளகு இந்துப்பு
*கூரைநீர்

இவைகளை வகைக்குச் சரியெடை எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, ஒரு சிம்டா எடுத்து சிறிது முலைப்பாலுடன் கலந்து இரு மூக்கிற்குள்ளேயும் நஸ்யமாக இடவும்: கபாலவலி, பிசாசு முதலானவை தீரும்.

**குதிரைவலி தீர "சூரவெங்காய எண்ணெய்"**

வெங்கா யுள்ளி நேர்வாள மிளகுசுக்குத் திப்பிலியும்
நண்பாய்க் கடுகுபெருங்காயம் நற்சீரகமும்வெந்தயமும்
மண்பார் விளைந்த கெந்தமும் வசம்பு வெளுத்தைப்
பிசின் காரம்,

---

*ஆவித்தடங்கு மகத்திற்பால் - காட்டெருமைப்பால் என்ற சரக்காக இருக்கலாமோ என்று சந்தேகம் எழுகிறது இதற்கு பதில் கூகைநீரை உபயோகப் படுத்துகிறார்கள், ஆகவே அதற்குக் "கூகைநீர்" என்ற பொருள் கூறப் பட்டுள்ளது,

யிண்போ தோமந்துரிசுடனே இவைதான் கூட்டிமிகக்
கொள்ளே. (30)

கொள்ளே குதிரைவாலவுரி குருந்து நொச்சி யாடா
தொடை
யுள்ள குருவட்டுமுருங்கை மூலிதூ துவளை
வெள்வேல் மிக்கச் சாறணையு மீருமல் கொடிவேலி
யுள்ளே யெரித்து வேப்பெண்ணெ யுதவக் குதிரை
வலிபோமே. (31)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | வெங்காயம் | பூண்டு |
| | சுத்திசெய்தநேர்வாளம் | மிளகு |
| | சுக்கு | திப்பிலி |
| | கடுகு | பெருங்காயம் |
| | நற்சீரகம் | வெந்தயம் |
| | சந்தனத்தூள் | வசம்பு |
| | வெளுத்தைப்பிசின் | வெங்காரம் |
| | ஓமம் | |

இவைகளைச் சரியெடையெடுத்து, இடித்துவஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்னர்,

| | |
|---|---|
| முதியார்கூந்தல் | அவுரி |
| குருந்து | நொச்சி |
| ஆடாதோடை | முருங்கை |
| தூதுவேளை | வெள்வேலம்பட்டை |
| சாறணைவேர் | கொடிவேலி வேர் |

இவைகளையும் வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்து இடித்துத்தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து வேப்பெண் ணெயுடன் ($1\frac{1}{4}$ சேர்) குழப்பி அடிப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டி 1 காசெடை யளவு தினந்தோறும் உட்கொள்ளக்குதிரைவலி வாதம் தீரும்.

## அண்டவாதக் குறிகுணங்கள்.

கொண்டிடிங் குடிலந்தங்குங் குரைந்தொரு விரையில்
தொங்கு

மண்டிய விரையிலொன்றைவலித்ததையுட்லில்வாங்கும்
பண்டுதா னண்டவாதம் பற்றியே கனலே யென்று
அண்டரு முனிவர்தாமு மறியே யுரைக்கலுற்றார் (32)
வந்துபொருமு மண்டபத்தில் வலித்துமிகவே சுகந்
தோன்று
நொந்தவுடம்புண் போலுழைந்து நோவினுடனே தலை
வலியு
மிந்தப்படியேயிவைதோன்றும்மிகவேபக்கச்சூலையெனத்
தொந்திப்புடனே வருமென்னில் சொல்லுங்
குணங்களிதுவாமே. (33)

(இ-ள்) குடல் விரையில் இறங்கித் தொங்கும்அதனுல் மற்றொரு விரை மேலேயேறிக் கொள்ளும். வலி அதிகமாயிருக்கும்.

விரையில் வீக்கமும் ஏற்படும். உடம்புநோய், தலைவலி இவைகளுமேற்படும். இவற்றைஅண்டவாதத்துடன் கூடிய பக்கசூலையெனத் தெரிந்து கொள்ளவும்

### அண்டவாதத்திற்குப் 'பெருங்காய கஷாயம்'

காணுமல முருமிக் காயங் கழற்பருப்பு
பூணுங்கொத்தான் சுக்குடன்பேர்ந்து-வேணுமென
பண்ணீர் கஷாயம் பருகீர் பருகினக்கால்
விண்ணிலண்ட வாதம்போம் விட்டு (34)

(இ-ள்) பெருங்காயம் கொத்தான்
கழற்சிப் பருப்பு சுக்கு

இவைகளைச் சமனெடை யெடுத்து இடித்துச் சுத்தஜலம் 8 மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டில் ஒன்ருக்கிவடிக்கட்டிப்பருகவும். அண்டவாதங்கள் தீரும்

### குடல்வாதம், சூலை, குன்மம் முதலியவைகளுக்கு "கழற்சிக் கஷாயம்".

கழல்மணி வெள்ளையுள்ளி கடியதோர் முருங்கப்பட்டை

அழலுடன் சுக்குக்கொள்ளு அஞ்சுரெண்
டாகக்கொள்ளக்
குழலிடை யோசைபோலக் குமுறிடுங் குடல் வாதங்கள்
பழகிய சூலே குன்மம் பாய்ந்திதங் கொள்ளுமன்றே. (35)

(இ-ள்) கழற்சிப் பருப்பு பூண்டு
முருங்கைப்பட்டை சுக்கு
கொள்ளு

இவைகளைச் சமனெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு5மடங்குசுத்தஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றிப் பாதியளவாகச் சுண்ட வைக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவர பலவிதமான இரைச்சலுடன் கூடிய குடல் வாதங்கள், சூலே குன்மம் முதலானவை தீரும்.

## பக்கச்சூலேக்குப் ''பெருங்காயம் கஷாயம்''

பெருத்தகாயம் வெள்ளுள்ளி பேணுமரீசு வேர்க்கொம்பு
விருத்த மிகுந்த சாறணைவேர் வெட்டி யிடித்துக்
காய்ச்சுகிலோ
திருத்தமாக மூன்றொன்றாய்ச் செல்லக் காய்ந்துக்
கொண்டிடுகில்
ஒருத்தர் தமக்கும் நில்லாமல் ஓடும் பக்க சூலேயதே (36)

(இ-ள்) சுத்தமான பெருங்காயம் பூண்டு
மிளகு சுக்கு
சாறணைக்கிழங்கு

இவைகளைச் சமனெடை யெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 3 மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி மூன்றிலொன்றாகும் வரை வற்றவைத்துப் பருகவும். பக்கச் சூலேகள் தீரும்.

## ஸர்வாங்கவாதத்திற்குச்
## ''சாறணைக்கிழங்காதி யெண்ணெய்''

சாரணைக் கிழங்குயிந்துப் புத்தழ விடைசுக் குள்ளி
சீறுசித் திரத்து மூலி செம்பொனின் காரம் வாளம்

வீறதாய்வெந்தேரண்டயெண்ணெய்யில்விழுங்குவீராய்
கூறிய கள்ளிப் பாலுங் கூட்டியுங் கொள்ளலாமே. (37)

(இ-ள்) சாறணைக்கிழங்கு — இந்துப்பு
சுக்கு — பூண்டு
சித்திரமூலம் — வெங்காரம்
சுத்திசெய்தநேர்வாளம்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை யளவெடுத்து இடித்து ஆமணக்கெண்ணெய் 1 சேர், கள்ளிப் பால் (¼சேரும்) விட்டு ஒன்றாகக் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் 2 ஸ்பூனளவெடுத்து உட்கொண்டு வரவும். நன்கு பேதியாகும். பக்கச் சூலைகள், சர்வாங்கவாதம் இவை தீரும்.

**பக்கசூலைக்குச் ''சாறணைவேராதி யெண்ணெய்''**

சாறணை வேரிந்துப் புத் தருவீழிவேர்
கூறிட நாக(ர)ம் பலமொன்று கூட்டு பலமொன்று
வீருடன் காரம் எண் கழஞ்சு விரைநேர்வாளமன்பதுவும்
பேறுள்ள கள்ளிப்பா லாமணக்குப் பெருகியயெண்ணெ
யிரு நாழியுமே. (38)

(இ-ள்) சாறணைக்கிழங்கு — இந்துப்பு
வீழிவேர் — சுக்கு

இவைகள் வகைக்கு 1 பலம்.
எண்ணெய் வெங்காரம் — 1 பலம்

சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு—50(எண்ணிக்கையில்)
கள்ளிப்பால் — சின்னப்படி 1
ஆமணக்கெண்ணெய் — ,,

முதலில் வேர் வகைகளையும், கடைச் சரக்கையும் ஒரு கல்லுரலிலிட்டு இடித்துக்கொண்டுநேர்வாளப்பருப்பையும் போட்டுத்தண்ணீர்விட்டுநன்றாகவரைத்து ஆமணக்

கெண்ணெயுடன் குழப்பிக் கள்ளிப்பாலேயும் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனை வடிக்கட்டி ஒரு ஸ்பூனளவெடுத்துக் காலேயில் உட்கொள்ளவும், நன்கு பேதியாகும். பக்க சூலே அண்டவாதம் முதலியவை தீரும்.

## ஸர்வாங்க வாத இலக்ஷணங்கள்.

கடுக்கு முளையுங் கனத்து மிக நொந்து
படுத்து முழுதங்கம் பார்க்கு-மடுத்த
சர்வாங்க வாத மெனத் தாரணி யோர்பேச
மறிவாக வம்புவிக் கெல்லாம். (39)

(இ-ள்) உடம்பு முழுவதிலும் கடுப்பு வலியும், உளேச்சலும் உண்டாகும் தேகத்தில் பாரம் அதிகமாகும். இவை ''சர்வாங்க வாத'' லக்ஷணங்களாகும்.

## சகலவாதரோகத்திற்கும் ''முஸ்தாதி எண்ணெய்''

குத்த முத்த மொடு கொடிவேலி வெள்ளறுகு
கூறுநிம்பமொடு கொன்றையுங்
குலவெருக்கிளெடு யிலேமுதல் கள்ளி
கொள்குறிஞ்சி மிளகரணையு
முந்து நொச்சி யாடா தோடையீசுர
மூலி வீழியா தண்டையு
முற்று மாவிலங்கை யோடுத்தாலிளெரு
முள்ளி தூதளேமு றுங்கைவேர்
கந்து நந்தி ஞேடுயுங்குவுத்தமரி
கரிய மஞ்சளுகி ஞிஞ்சிவெண்
காரமுள்ளியொடு தாரமோதகமுங்
கார்செறிந்துலவு சாகமு
இந்த வெள்ளிலெண்ண யெரியுநிம்பவெண்ணெ
யதில் மருந்துகள் வெந்துதா
னிதமதாக வடி பூசு மேலினி
யிராது வாதமிது வென்னவே. (40)

| | |
|---|---|
| (இ-ள்) கோரைக்கிழங்கு | கொடிவேலிவேர் |
| வெள்ளெறுகு | வேம்பு |
| கொன்றைப்பட்டை | எருக்கிலை |
| கள்ளி | குறிஞ்சி |
| மிளகரணை | நொச்சி |
| பெருமருந்துவேர் | ஆடாதோடை |
| வீழிவேர் | ஆதண்டைவேர் |
| மாவிலங்கை | முள்ளி |
| தூதுவளை | முருங்கைவேர் |
| உத்தாமணி | கறிமஞ்சள் |
| இஞ்சி | எண்ணெய் வெங் |
| பூண்டு | ஓமம் [காரம் |

இம்மருந்துகளை வகைக்கு 1வராகனெடைவீதமெடுத்து ஒரு கல்லுரலிலிட்டு இடித்துத் தூளாக்கி, அதனுடன்

சுத்தமான நல்லெண்ணெய் $1\frac{1}{4}$ சேரும்
வேப்பெண்ணெய் —$1\frac{1}{4}$ சேரும்

விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இத்தைலத்தை உடம்பில் பூசித் தேய்க்கவும். வாத ரோகங்கள் தீரும்.

## வாதரோகத்திற்கு ''அரீதக்யாதி கஷாயம்''

கடுக்காய் சுக்குக் கத்தாழை கழியுங் கோட்டங்
காக்கணமு
மடுக்காந் திப்பிலிவங்கத்துதுடைபொடுதலையாமணக்கு
முடுக்கா நொச்சி யிம்பூரல் மூடிக்காய்ச்சி
யெட்டொன்றுய்க்
குடித்தால் நல்ல குடல்வாதங் கோடிகோடி
போய்விடுமே. (41)

| | |
|---|---|
| (இ-ள்) கடுக்காய்த்தோல் | சுக்கு |
| கத்தாழைச்சருகு | கோஷ்டம் |
| வெள்ளைக்காக்கணம்வேர் | திப்பிலி |
| ஆடாதோடை | பெர்டுதலை |

ஆமணக்குவேர் நொச்சியிலை
இம்புராவேர்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, அடுப்பின் மேலேற்றிச் சுத்தஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு எட்டிலொன்ருக வற்ற வைத்து இறக்கி வடிக்கட்டி உட்கொள்ளவும். வாத ரோகங்கள் தீரும்.

### சந்துவாதத்தின் குறிகள்.

சந்தைப்பற்றி விடாமல் நின்று சாயுநேர மிகுந்துளைந்து
நேர்ந்தபடியே யாளவத்தி நோக்குங் கெட்டுத்தாதுக்கு
இந்தப்படியே யிடறுபண்ணு மிதுவுமருமை மாருது
வந்தவடியே மசகிநிற்கில் வருந்துஞ் சந்துவாத மிதே(42)

(இ-ள்) வாயு சந்திகளை (மூட்டுக்களை)ப்பற்றிநின்று சாயங்கால வேளையில் மிகுந்த வேதனையைத் தரும். உடலும் இளைக்கும் தாதுக்களைக் கெடுக்கும். இம் மாதிரியே கொஞ்ச நாட்கள் இருந்துவரும். இவை சந்து வாதத்தின் (ஸந்நிவாதம்) குறிகளாகும்.

### *சூரியவாதத்தின் லக்ஷணங்கள்.

சூரியவாதந்தானே தும்மல் வலியுந் தலைகனப்பும்
பாரியவிருமல் கண்ணீர் பறிந்துடல் கடுக்குமெய்யுஞ்
சோறவே தினவுங் காதில் துடர்ந்திடும் நினைவுகெட்டுச்
சூரியன் காணில் நோகுமந்தியில் துலைந்தே நிற்கும் (43)

(இ-ள்) தும்மல், வலி, தலைகனம், இருமல், கண்ணீர் வடிதல், உடம்புக் கடுப்பு, காதில் அரிப்பு, முதலான குறிகளுடன் நினைவுதடுமாறும். சூரியோதயத்தில் தலைவலி யாரம்பித்து நேரம் ஆக ஆக அதிகரித்துச்

* இதனையே ஆயுர்வேதத்தில் "சூர்யாவர்த்தம்" என்று கூறுகிருர்கள்.

சாயங்காலத்தில் குறைந்து, பின்னர் விட்டுவிடும் இதுவே சூரியவாத ரோகமாகும்.

### சூரியவாதத்திற்கு "புரோசில் எண்ணெய்"

துலங்கிய புரோசில் சாறு ஆதண்டை நொச்சிச்சாறு
இலங்கிய வரசம் பட்டைச் சாறுடன் வகைக்கீர் நாழி
விலங்கிய வாட்டுப்பா லெண்ணாழி யெண்ணெய்
பலங்கொள்நா நாழிகூட்டிப் பரிந்தரைச் சரக்குஞ்
சேர்த்தே. (44)

சேர்த்திடு கார் போகஞ் செவ்வியம் கஸ்தூரி மஞ்சள்
ஏத்தகல் மதங் கல்நாறு இலவங்க மிளகு சுக்கு
தோற்ற செவ்வல்லி யுள்ளி துலங்கிய வசம்பு கூட்டிப்
பார்த்தெரி பதமாய் மூழ்கப் பருதியின் வாதம்
போமே. (45)

| | | |
|---|---|---|
| (இ-ள்) புரசயிலைச்சாறு | ஆதண்டைச்சாறு | |
| நொச்சிச்சாறு | அரசம்பட்டைச்சாறு | |
| இவைகள் வகைக்கு | — சின்னப்படி | ஒன்று |
| ஆட்டுப்பால் | — ,, | நான்கு |
| சுத்தமான நல்லெண்ணெய் | ,, | இரண்டு |

இவைகளையொன்று கலந்து, இதனுடன்

| | |
|---|---|
| கார்போகவரிசி | செவ்வியம் |
| கஸ்தூரிமஞ்சள் | கல்மதம் |
| கல்நார் | கிராம்பு |
| மிளகு | சுக்கு |
| செவ்வல்லிக்கொடி | பூண்டு |
| வசம்பு | |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடையெடுத்து இடித்துச் சூரணமாகச் செய்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இத்தைலத்தினால் தலை முழுகிவரச் சூரியாவர்த்தம் தீரும்.

## 80 வித வாதரோகங்களுக்கும் சிநேகம் பொட்டணம்

புன்னையா மணக்கம் வித்து புனதலை வேப்பம்வித்து
மன்னிய மகிழம் வித்து வன் கழல் கோடிவித்து
தென்னங்காய் புங்கம்வித்துச் சிறந்ததோ ரிலுப்பை
வித்தும்
பன்னிய பருத்திவித்தும் பரிவுடனெக்கக் கூட்டே. (46)

தக்கதோ ரரத்தைகோட்டஞ் சணவிரை வசம்பு விற்று
மிக்கவங் கோலவித்து வெள்ளுள்ளி கடுகோடெள்ளு
தெக்கணு மூர்த்திவித்து சிறந்ததே ரிந்துப்புக்
குக்கிலும் வசம்புகூட்டிக் குத்தியாடையில்கட்டே. (47)

கூட்டியே அஞ்செண்ணெய் காய்ச்சியே சுவறப்பண்ணி
பொட்டண மதுதான் சுற்றப் புரையற வொத்துவீரா
யிட்டமாய் நடைமேல் வந்த எண்பது வாதமேகுந்
திட்டமாயிதுவேதீரும்சிறந்திடுமுனியுஞ்சொன்னார் (48)

(இ-ள்)

| | |
|---|---|
| பின்னைப்பருப்பு | ஆமணக்கம்வித்து |
| வேப்பம்பருப்பு | மகிழம்விரை |
| கழற்கோடிப்பருப்பு | தேங்காய் |
| புங்கங்கொட்டை | இலுப்பைப்பருப்பு |
| பருத்திவிதை | |

இவைகளை எடுத்துக்கொண்டு இதனுடன்

| | |
|---|---|
| சிற்றரத்தை | கோஷ்டம் |
| சணல்விதை | வசம்புவிதை |
| அழிஞ்சில்கொட்டை | பூண்டு |
| கடுகு | எள்ளு |
| குக்கில் | இந்துப்பு |
| வசம்பு | *தட்சிணமூர்த்திவித்து |

இவைகளையும் வகைக்குச்சரி ($1\frac{1}{4}$ வராகனெடை) யெடை கூட்டிக், கல்லுரலிலிட்டிடித்து ஒரு மெல்லிய வெள்ளைத் துணியில் மூட்டையாகக் கட்டி, நல்லெண்ணெய், வேப் பெண்ணெய் ஆமணக்கெண்ணெய், புங்கெண்ணெய்,

*'ருத்ராக்ஷ'மாக இருக்கலாமோ எனத்தோன்றுகிறது.

இலுப்பெண்ணெய் ஆகிய இந்த 5 வித எண்ணெயிலும் வகைக்கு ½ சேர் வீதமெடுத்து ஒன்றாக கலந்துஅடுப்பின் மேலேற்றிச் சூடாக்கி அதில் முன்சொன்ன கிழியை நனைத்து, நனைத்து வாத ரோகிக்கு ஒத்தடம் கொடுக்கவும். 80 வித வாத ரோகங்களும் தீரும்.

## பித்த நிதானம்

மெய்யே நடுக்குந் தலைவலிக்கு மேனிவெளிறுங்
கண் தூங்கும்
பொய்யே துயருங் கிறுகிறுக்கும் போதநயனம்
மஞ்சணிக்கும்
கைகால் கனத்துத் தானவத்தங் கண்டு முகமுஞ்
சன்னிகட்டும்
மையார் மெய்யாவனல் மீளுமறிவாம்
பித்த ரோகமிதே. (49)

(இ-ள்) உடல் நடுக்கும், தலைவலியுண்டாகும், உடல் வெளுமை நிறமடையும், கண்கள் தூங்கும், தலை கிறு கிறுப்பு, கண்களில் மஞ்சள் நிறம் கை கால்களில் பார உணர்ச்சி, முகம் வீங்கிக் காணுதல், அஸ்திகாங்கை முதலானவை "பித்தம் அதிகரித்தலாலுண்டாகும்" குறி குணங்களாகும்.

குறிப்பு:– 92 நெ. செய்யுளையும் பார்க்கவும்.

பித்தஞ்சுழத்து கிறுகிறுத்துப் பெருக்க நடுக்கித்
துயராகில்
ஒத்தக்கூத்தி லுடனிட்டு உவர்ந்திப்பாகிச் சள்ளிட்டு
சித்தத்துளங்கா திளநீரில் சிறுபயறுஞ் சீரகமு
மித்தைப்பசும்பால் நெற்பொரியு மிகவேகாய்ந்து
கொள்ளுவதே. (50)

(இ-ள்) பித்தம் அதிகரித்துத் தலை கிறுகிறுத்தாலும் நடுக்கமேற்பட்டாலும் அதற்கு மருந்து:

சிறுபயறு சீரகம்
நெற்பொரி

இவைகளை வகைக்கு 1 வராகனெடையெடுத்து, இடித்து

இளநீர் — சின்னபடி $\frac{1}{2}$
பசுவின்பால் — ,,

இவைகளுடன் சேர்த்து அடுப்பின் மேலேற்றிபாதியாகு மட்டும் எரித்து உட்கொள்ளவும். பித்தம் முதலானவை தீரும்.

### பித்தரோகம், சுரம், வீக்கம், முதலியவைகளுக்கு ''மரிசாதி உருண்டை''

மிக்கமிளகு நேர்வாளம் மீருமல் கூட்டியொரு மூன்றாய்
தக்கதனவே தேசிக்காய் தன் சாறள விலெனவெந்து
ஒக்கக்கூட்டியரைத்துண்டை ஒருப்படு சூரைக் காயளவு
நக்கத்தேசிகன் பழச்சாற்றில் நன்றாய் சுழற்றும்
பித்தமிதே (51)

பித்தமுதலாய்ச் சுரவீக்கம் பெருத்தவாய்சல் மறிப்புச்
சுத்தப்படவே விரேசனமாம் சுகமாய் முட்டுகளைத்
தீர்க்கும்
மெத்தச்சுடவே வெந்நீர்கொள் விரோசிப்பாகுஞ் சக்தி
மெத்தப்பூரே யெனுமிடத்து விட்டந்தப் பசுப்பால்
கஞ்சிகொள்ளே (52)

(இ-ள்) மிளகு 1 பலம், சுத்திசெய்த நேர்வாளம் 3 பலம். இவ்விரண்டையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு எலிம்பிச்சம்பழச் சாறுவிட்டு நன்றாக மையாகும் வரை யரைக்கவும். பின்னர் இதனைச் சூரைக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைக்கவும்.

வேண்டும்போது இதில் ஒன்றை எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றிலுரைத்து உட்கொள்ளவும்.

பித்த மயக்கம், சுரம், வீக்கம், இவைகள் நீங்கும் நன்கு பேதியாகும். மூட்டுவலிகளைத் தீர்க்கும். வெந்நீர் உட்கொள்ளவும். பேதியாகும். பசும்பால் விட்டகஞ்சி சாப்பிடவும்.

## பித்தத்திற்குப் "பொன்னாங்காணி நெய்"

பத்தர்கள் தமக்குறி படிவுபெறிபொன்னுங்காணி
பங்கிலுறை சீதேவியும்
பரியதோர் தாழைவிழுது நீருடன் பன்றிகுறும்
பனையதுகுத்தமொடு நன்னாரி
முத்தியவிலாமுச்சு மொய்குழற்கிருவேலியுமொக
முசுக்கை கையாந்தகரை
முதிர்கரும்பதனில் நீரும் முந்திரி
பேரீச்சுடன்
மத்திடுமதித்தாவின்று பாராக
மும்வள்ளி நீர்வள்ளியும்மா
விட்டதொரு தண்ணீ ரளாவினது கொண்டதை
வளமாக ஆறவைத்து
இத்தனையு மெத்தளவி லெட்டிலொன்றுக்கி
இருநாழிநெய்யும் விட்டு
இன்னோர்கடைச்சரக்.
கியல்பாக கொள்கவினியே (53)

கோட்டமெடு செண்பகஞ் கொத்தமல்லி மதுரமுங்
குலவுநற் சீரகமதுங்
கோலங்கச் சோலமும் தக்கோலமாஞ்சிலொடு
கொண்டிடு சதகுப்பையுமத்
துட்டத் திரி கடுகு மோருபச்சிலையேலமுஞ்
சுகமான செவ்வல்லியுந்
துத்துருக் கடுதாணி நெல்லிமுள்ளி
துய்யபே ரேலமதுவு
மட்டையாமருக்குலவு மலையிலிருவேலியு
மாதேவர் முழுதுமாக
மாசந்தன மேடுவாச மத்தினுறுப
மென்வனிதம்ப மெதுவுடனே
முட்டவது விதனையு முக்கழுஞ் சளவாய்
முயன்றிடுக நெய்யது விழில்

முடுகாது பித்த ரோகமது வாராது
முனிவரருள் செய்ததிதுவே. (54)

(இ-ள்) பொன்னுங்காணிச் சீதேவிச்
சாறு செங்கழுநீர்ச்சாறு
தாழைவிழுதுச் சாறு நிலப்பனைக்
கிழங்குச் சாறு
கோரைக்கிழங்குச் சாறு நன்னாரி சாறு
இலாமிச்சஞ் சாறு வெட்டிவேர்சாறு
முசுமுசுக்கைச் சாறு கையாந்துரைச்
சாறு
கருப்பஞ் சாறு திராக்ஷைப்பழச்
சாறு
பேரீச்சைச் சாறு தண்ணீர்விட்டான்
கிழங்குச்சாறு

இவைகளை யொன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்துக்கொண்டு அதனுடன்
சுத்தநெய் 2படி (சின்னப்படி 1) விட்டு ஒன்று கலந்து,

| | |
|---|---|
| கோஷ்டம் | செண்பகமொட்டு |
| கொத்தமல்லிவிதை | அதிமதுரம் |
| சீரகம் | கச்சோலம் (பூலாங்கிழங்கு |
| தக்கோலம் | சடாமாஞ்சில் |
| சதகுப்பை | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| பச்சிலை | ஏலக்காய் |
| செவ்வல்லிக்கொடி | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிவற்றல் |
| வெட்டிவேர் | பெரிய ஏலக்காய் |
| தேவதாரு | சந்தனத்தூள் |

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதமெடுத்து

இடித்துச் சூரணித்து முன்சொன்ன மருந்துகளுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். பித்த ரோகங்கள் தீரும்.

### சத்தி கபாலக்குறிகள்.

மெத்தத்துரத்தி மிக [1]மேதினயெல்லாஞ்சுழன்று
குத்திக் கபாலமிக்க கொண்டேத்துஞ்—சத்தி
யெடுக்குங் கிறுகிறுக்கு மிவ்வலியுதீர்ந்து தடுக்
கடங்குஞ் சத்தி கபாலம். (55)

(இ-ள்) உடம்பில் மயக்கமுண்டாகும். தலைவலி அதிகமேற்படும். வாந்தி எடுக்கும். கிறுகிறுப்பு உண்டாகும்.

### சத்திக்குப் ''பயத்தம் பருப்புநீர்.''

பயத்தினில் பருப்பைப்போக்கிப் பருகிடநீரைவிட்டு
வியப்புர விரசியங்கே விரையநீருத்திக்கொண்டு
நயப்படிசீனிகூட்டிக் குடித்திடநலமீதென்று
தியக்கிடுஞ் சத்திமாறித் தீர்வது திண்ணந்தானே (56)

(இ-ள்) பயத்தம்பருப்பில் நீரைவிட்டு நன்ருக வரைத்துத் தண்ணீருடன் குழப்பிச் சர்க்கரையிட்டுப் பருகவும். வாந்திகள் தீரும்.

### வறட்சிப்பித்த லக்ஷணங்கள்.

[2]தலையும்வலித்து உடம்புலர்ந்து காதுங்கெட்டுத்
துயருண்டாய்
நிலையுங்கெட்டு மறபுண்டாய் நினையாத ரேகங்
கனப்புமதாய்
புலையும் வறட்சிப்பித்தமென வுரைக்கமுனிவோர்
சொன்ஞரே. (57)

---

1. ''மேதினி'' என்பதற்கு பதில் ''மேனி'' யென்றிருக்கலாம் என்று தோன்றுகிறது.

2 இச் செய்யுளில் ஒரு சீர் குறைவாக உள்ளது.

(இ-ள்) தலைவலி, உடம்பு உலர்ந்து போதல், காது கேளாமை, மனது வருத்தம், மனக்கலக்கம், உடல் கனம் இவைகள் காணப்பட்டால் அது "வறட்சிபித்த" மாகும்.

**வறட்சி பித்தத்திற்குச் "சீதேவிச் செங்கழுநீர் நெய்"**

சீதேவியார் பூட்டின சாறுதான் குறுணி
சிறந்த பால் நாழி நெய்யிரு நாழி விட்டு
மாதுசத குப்பை கொத்தமல்லி மதுரங்
கோட்டஞ் செண்பகஞ் சந்த மேலஞ்சீரகம்
கோதிலா கற்கண்டை யங்கழஞ் சரைத்துக்
கரைத்து நெய்காய்ச்சிப் பதத்தில் வடிப்பீராய்
தீதிலா வாரத்தில் தலைவார்த்துக் கட்ட
சசித காது வறட்சி பித்தந் தீருந்தானே. **(58)**

(இ-ள்) சீதேவிச் செங்கழுநீர்ச்சாறு — 1 மரக்கால்
பசுவின் பால் — சின்னப்படி $\frac{1}{2}$
பசுவின் நெய் — சின்னப்படி 1

இவைகளை யொன்று கலந்து, இவற்றுடன்

| | |
|---|---|
| சதகுப்பை | கொத்தமல்லி விதை |
| அதிமதுரம் | உயர்ந்த கோஷ்டம் |
| செண்பகமொட்டு | சந்தனத்தூள் |
| ஏலக்காய் | சீரகம் |
| கற்கண்டு | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துப் பால் விட்டரைத்துச் சாறு கூட்டிய நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

இந்த நெய்யை வாரத்தில் ஒரு முறை தலைக்கிட்டு முழுகிவர, வறட்சி பித்தங்கள், காது மந்தங்கள் தீரும்.

### பித்தத்திற்கு ''நெல்லிமுள்ளியாதி கஷாயம்''

பாரிசைந்த நெல்லி முள்ளி பாங்குடனே கூவிளைவேர்
சீரிசைந்த சீரகமுஞ் சேர்ந்த சுக்கும்—வேரிசைந்த
சித்தமட்டியும் பொரியும் சிறக்கக் கஷாய மிடில்
பித்தம் விட்டுப் போமதனைப் பேசு. (59)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | நெல்லிமுள்ளி | வில்வவேர் |
| | சீரகம் | சுக்கு |
| | சித்தாமுட்டிவேர் | பொரி |

இவைகளைச் சமனெடுத்துச் (1 வராகனெடை) ஒன்றிரண்டாக விடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றுக்கி வடிகட்டி உட்கொள்ளவும், பித்தங்கள் தீரும்

### இரத்தபித்த ரோக லக்ஷணங்கள்.

அண்டியே யிருமல் குற்றுமடிக்கடி யிரத்தம் வீழும்
மண்டியே யுடலும்வற்றி வழுவற்று உலைந்துவாயும்
மண்டியுஞ் சுருங்குநாளும் பதங்கெட வருமேயாகில்
உண்டில்லையென்ன ரத்தரோகமென்
றுரைக்கலாமே. (60)

(இ-ள்) குத்திருமல் உண்டாகும் கோழையுடன் ரத்தம் விழும். உடம்பு இளைக்கும். உடம்பில் கடுப்பு வலியேற்படும். பசி மந்தப்படும்.

### ரத்த பித்தத்திற்கு ''வாஸாதி கஷாயம்''

போதியீர் தோடையிலை போகத்தொரு முந்திரிகை
நீதிலா நற்குடிநீர் செய்திடீர்—மாதிரியாய்
அக்காரங்கூட்டி யருந்தீரருந்தியபின்
உட்கார ரெத்தபித்த மோடே (61)

(இ-ள்) ஆடாதோடையிலை
திராக்ஷைப்பழம்

இவ்விரண்டையும் சமனெடுத்து இடித்து ஒரு பாத்திரத்தில் இட்டு 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்ருக்கிச் சர்க்கரைக் கூட்டிப் பருகவும். இரத்த பித்தங்கள் தீரும்.

ரத்தபித்தங்களுக்கு ''வெள்ளைக்கடுக்காய்ச் சூரணம்''

வெள்ளைக்கடுக்காய் விரைபோக்கிமெலியும்
பொடியதனுடனே
தெள்ளித்தெள்ளித் தேன்விட்டுச் சேர்த்துக்
குழைத்துவருந்திடுநீ
உள்ளித்திருந்து துரத்துவினையோங்கு
மிரத்தபித்தமெல்லாம்
மெள்ளப்போனுரைப்பொழுதே வேண்டிச்செய்யும்
விலகாதே. (62)

(இ-ள்) வெண்மை நிறமுள்ள கடுக்காய்களையெடுத்து உடைத்து விதைகளை நீக்கிச் சூரணம் செய்து மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேன் விட்டு நன்ருக குழைத்து உட்கொள்ளவும். நாளைக்கு 5 அல்லது 6 தடவைகள் உட்கொள்ளவும். உடலை வருத்தும் இரத்த பித்தம் தீரும்.

## உட்காய்ச்சல் குறிகள் (அஸ்திகாங்கை)

வத்திமேல் வெளுத்துக்காய மயங்கிடுஞ் சோபமாக்கும்
பத்தியே தலைநோவுண்டாம் பகலிரவிராமல்காயு
முத்தபோர் தென்னமரத்தில் ஓல்லிபோலுள மேலுற்று
முற்றுமே யனலெழும்பு முழுதுமுட்காய்ச்சலாமே (63)

(இ-ள்) உடல்மெலிந்து, வெளுத்துவிடும். அடிக்கடி மயக்கமுண்டாகும் உடம்பில் வீக்கமும் ஏற்படும். தலைவலியுண்டாகும். இரவு, பகல் என்று பாராமல் ஜ்வரம் அடிக்கும் உடல், தென்னை மரத்தைப் போல் ஆகும். (அதாவது உடலிலுள்ள சதைப்பற்று நீங்கிக் குச்சியைப் போல் ஆவான்) காங்கையும் உண்டாகும்.

## உட்சுரத்திற்குச் ''சதாவரிச்சாறு'' மருந்து

ஆவின் பாலுட னன்புறு சீனியு
மேவு சாத்திர வெரியுமாகவே
தாவி நாற்பது நாள் தான் (சாப்பிட)
பாவுமுட்சுர மோடிப் பதுங்குமே. (64)

(இ-ள்) பசுவின் பாலில் சீனிபோட்டு அதனுடன் தண்ணீர் விட்டான் கிழங்குச் சாற்றைச் சேர்த்து தினமும் காலை வேளையில், 40 நாட்கள் உட்கொள்ளவும். உட்சுரங்கள் நீங்கும்.

## காங்கைக்குப் ''பொன்னுங்காணி நெய்''

பொன்னுங்காணி முசுமுசுக்கைப் புதிய தாழிப்
பழம்பாசி
நந்நீர்ப்பூலா விலைச்சாறு நல்லசித்தமட்டி சீதேவி
முன்னுர் தாழை விழுதிச்சாறு முந்தப் பசுப்பாலிளநீரு
மன்னுர் கோட்ட மதிமதுரம் வருநற்சீரகம்
நெல்லியுடன். (65)

உடன் கொத்தமல்லி சண்பகப்பூ உற்ற
நாகரமாஞ்சிலுடன்
விடநற் தேத்தாங் கொட்டை சந்து மிக நன்னுரி
முத்தக்காசு
படத்தயி லாமிச் சிருவேலி பரிவாய் முக்கழஞ்
சோரொன்று
அடந்தே நெய்யின் சீனியுடன் அளாவிக் கொள்ளுமது
போமே. (66)

(இ-ள்) பொன்னுங்காணிச் சாறு முசுமுசுக்கைச் சாறு
பழம் பாசிச்சாறு நீர்ப்பூலா விலைச்சாறு
சித்தாமுட்டிச்சாறு நெய்ச்சட்டிச் சாறு
தாழை விழுதுச்சாறு

இவைகள் வகைக்குச் சின்னப்படி $\frac{1}{2}$

| | | |
|---|---|---|
| பசுவின்பால் | — | ,, |
| இளநீர் | — | ,, |

இவைகளை யொன்று கலந்து இதனுடன்

| | |
|---|---|
| கோஷ்டம் | அதிமதுரம் |
| சீரகம் | நெல்லிவற்றல் |
| கொத்தமல்லிவிதை | சண்பகமொட்டு |
| சுக்கு | சடாமாஞ்சில் |
| சீவிய தேத்தாங் கொட்டை | நன்னாரிவேர் |
| கோரைக்கிழங்கு | இலாமிச்சைவேர் |
| வெட்டிவேர் | |

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதமெடுத்துச் சூரணித்துச் சாறுகூட்டிய பாலுடன் குழப்பிப்

பசுவின் நெய் சின்னப் படி 1

விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். பின்னர் இதனுடன் சர்க்கரை வேண்டிய அளவு கூட்டி வைத்துக் கொள்ளவும்.

இந்நெய்யில் ஒரு காசெடை யெடுத்துக் காய்ச்சின பாலுடன் சேர்த்துச் சாப்பிடவும்.

உட்காய்ச்சல் நீங்கும்.

### பித்தகுன்ம நிதானம்.

உண்டியை மறக்கலாக்கு முவட்டி நெஞ் செரிக்கலாக்கு
மண்டி நின்றெதிரெடுத்து வயிற்றையேவலிக்கலாக்கும்
பண்டு முன் பழமலத்திப் பயித்தியஞ் சேர்வதாக்கும்
விண்டு தான் பித்தகுன்ம மிதுவென விளம்பினாரே. (1)

தலையுங் கனத்து ஓங்காரந் தானேமிகவே வாயூறல்
நிலையுங் கெட்டுக் கிறுகிறுத்து நின்றே வியர்த்து
நெஞ்செரிக்கு

குலையுஞ் செய்யும் பித்த குன்மம் கொள்ளுங் குணமு
மிதுவென்று
கலையால்வல்லதமிழ்வாணர்கண்டே பெருகப் பேசுவரே

(இ-ள்) சாப்பாடு செல்லாது. நெஞ்சைக் கரிக்கும் அதையும் மீறிச் சாப்பிட்டால் வாந்தியாகும் வயிற்று வலியேற்படும் மலச்சிக்கலுடன் பித்தம் அதிகரிக்கும்.

தலைபாரம், ஓக்காளம், வாயில் நீரூருதல், தலை கிறு கிறுப்பு, வியர்வை, நெஞ்சுக்கரிப்பு. முதலான பற்பல குறிகள் கண்டால் அது "பித்த குன்மம்" என்ற ரோகமாகும்.

## பித்த குன்மத்திற்கு "நால்பாமராதி நெய்" (சதுக்ஷீரிநெய்)

பெருத்தவாலின் பட்டையுடன் பெரிதா
மரசுயிலுப்பையத்திப்
பருத்தநாவல் மருதிலந்தை பனீச்சைப்பட்டை
பலங்கள் பத்தாய்
வருத்தியடித்து நீர்பதக்கு வார்த்துக்காய்ச்சி
நாலொன்ருய்
திருத்தமுடனும் நீர்வடித்துச் செலுத்தீராவின்
பால்படியே. (3)
படியே கொள்மிளகு திப்பிலியும் பருத்தசுக்குங்
கடுக்காயும்
வெடித்த நெல்லிக்காய் தோடு வேண்டுந்தாணிக்
காயுடனே
பிடித்துவெள்ளி லோத்திரமே பேணிவகைக்கோ
ரிருகழஞ்சு
வடித்தே நெய்நாழி கழஞ்சுகொள் மாறும்
பித்தகுன்மமிதே. (4)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | ஆலம்பட்டை | அரசம்பட்டை |
| | அத்திப்பட்டை | இலுப்பைப்பட்டை |
| | நாகப்பட்டை | மருதம்பட்டை |
| | இலந்தைப்பட்டை | ஈச்சம்பட்டை |

இவைகளை வகைக்கு 10 பலங்கள் வீதமெடுத்து சிறுசிறு துண்டுகளாகவெட்டிஒருபாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 4 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி நான்கிலொன்ருக வற்றவைக்கவும். இதனுடன் பசுவின்பால் சின்னப்படி 1 விட்டு,

| | |
|---|---|
| மிளகு | திப்பிலி |
| சுக்கு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| *வெள்ளிலோத்திப்பட்டை | |

முதலான சரக்குகளை வகைக்கு 2½ வராகனெடை யளவெடுத்து இடித்துக் கஷாயத்துடன் கரைத்துப்

பசுவின் நெய் — 5 சேர்

விட்டு ஒன்ருக்கி, அடுப்பின்மீதேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு 1 கழஞ்சு வீதம் காய்ச்சியபாலுடன் தினம் 2 வேளை உட்கொள்ளவும். பித்த குன்மங்கள் தீரும்.

**பித்த குன்மத்திற்குச் ''செங்கழுநீர்க்கிழங்கு நெய்''**

மாருன செங்கழுநீர் கிழங்கு நெய்தல்
வளராம்பல் தாமரையின் கிழங்குமிக்கத்
தேருன நீர்வள்ளிக்கிழங்கு நாவல்
திரண்ட முகிளொன்று பதிறுபத்திஞேடு
பேரான பதக்குநீர் விட்டெட்ரொன்ருய்க்
கிப்பிழிந்த திலேவெட்டி லாமிச்சம்வேர்
கூறுகு முத்தக்காசு மதிமதுரஞ் சந்தங்
கொண்டு நேர் கழஞ்சரைத்துக்கொள்ளலாமே. (5)

கொள்ளாவின் பால்நாழி நெய்நாழி விட்டுக்
கூட்டியுட னெரித்து வடித்துக்கொண்டு

* இது கிடைக்காவிடில் விளாம்பட்டையை யெடுத்துக் கொள்ளவும்.

விள்ளாமல் நிதமுங் கழஞ்சிடையே கொள்ள
மீருது பித்தகுன்மம் விடுமிதென்க
தள்ளான மயக்கமுடல் லெரிப்புந் தீருந்
தன் வயத்தில் வலித்திருந்த வாயுத் தீரும்
துள்ளாது தானடங்கும் வாதையென்ன
சொன்னுரே வானெடுங்கண் கோகைமாதே. (6)

(இ-ள்) செங்கழுநீர்க்கிழங்கு நெய்தல் கிழங்கு
ஆம்பல் கிழங்கு தாமரைக்கிழங்கு
தண்ணீர்விட்டான் கிழங்கு நாகமொட்டு

இவைகளை வகைக்கு 26 பலம் வீதம் எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிச் சுத்தஜலம் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி $\frac{1}{8}$ பாகமாகும் வரை வற்றவைத்து வடிக்கட்டிக் கொள்ளவும். இக்கஷாயத்துடன்,

வெட்டிவேர் இலாமிச்சம்வேர்
கோரைக்கிழங்கு அதிமதுரம்
சந்தனத்தூள்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்து இடித்து ஷை கஷாயம் விட்டரைத்துக்கொண்டு,

பசுவின் பால் — சின்னபடி $\frac{1}{2}$
பசுவின் நெய் — ,,

இவைகளையும் ஒன்று சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய்யைத் தினந் தோறும் 1 கழஞ்சு (40 குன்றியெடை) எடுத்து உட்கொள்ளவும். பித்த குன்மங்கள் தீரும்.

**பித்தகுன்மத்திற்குத் ''திராக்ஷாதிக் கஷாயம்''.**

தோகை வளர் முந்திரிகைப் பழமிரு பலமாய்க்
கொண்டு தூய நீர் நாழி விட்டுரா வடுப்பிலூறி
மீகையுட னுழக்காக வடித்துக்கொண்டு
மென் பொடியாய்ச் சிவதைவேர் பிறத்தோல் தூளு

மாகயிவை கழஞ்சுடன்சர்க் கரைகழஞ்சுங்
　　கூட்டியருந்து நீர் வயிறிழியும் வாதை தீரு
மாகனேயாய் பித்தகுன்மம் விடுகுங் கண்டீர்
　　பாருலகில் தானிதற்கே பகரலாமே: (7)

(இ-ள்) திராக்ஷைப்பழம் (காய்ந்தது) — 2 பலம் எடுத்துச் சுத்தஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ படிவிட்டு இரவு முழுவதும் ஊறவைத்து மறு நாள் காலேயில் அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்துக் கொள்ளவும். இதனுடன் *சுத்திசெய்த

சிவதைவேர்ச் சூரணம் — $1\frac{1}{4}$ வராகனெடை
சர்க்கரை — $1\frac{1}{2}$ வராகனெடையும்

போட்டுக் காலேயில் பருக, 4 அல்லது 5 தடவை பேதியாகி பித்தகுன்மங்கள் தீரும்.

## வயிறு வலிக்குச் "சிவதைவேர்ச் சூரணமும், திரிபலாகஷாயமும்"

பகர்கின்ற சிவதைவேர் பொடிகழஞ்சு சுக்கு
　　பாவியதோர் பொடிகழஞ்சு தேன்கழஞ்சு
　　　　கூட்டி
நிகருடனே தானருந்தி கடுநெல்லி தாணி
　　நீர்காய்ச்சிக் கஷாய மதனுடன் பின்குடிக்கத்
தகருமலம் வயறுடையும் சுலியும் வலிதீரும்
　　சமஞக வாயுவது நிலேயாகுமென்ன
துகரதுருவு தமிழிவிசை கவியோர்கள்தானே
　　நோக்கமுடன் பித்தகுன்மம்
　　　　போக்கிவிடுமாமே. (8)

---

*சுத்திமுறை:—சிவதைவேரின் உள் நரம்பை நீக்கிவிட்டு மேல் பட்டையை மாத்திரம் எடுத்து வைத்துக் கொண்டு பசுவின் பால் விட்டூறவைத்து அடுப்பின்மேலேற்றி பால் சுண்டும் வரை காய்ச்சவும் பின்னர் இதனேயுலர்த்திச் சூரணித்து வைத்துக் கொள்ளவும்.

(இ-ள்) சுத்திசெய்த சிவதைவேர்ச் சூரணம் 40 குன்றிநிறை.

சுக்கு ,,

இவ்விரண்டையும் ஒன்று கலந்து தேன் $1\frac{1}{4}$ வராகனெடை விட்டுக் குழைத்து,

கடுக்காய்த்தோல் நெல்லிவற்றல்
தான்றித்தோல்

இம்மூன்றையும் இடித்துக் கஷாயமிட்டு அனுபானமாகப் பருகிவர நன்கு மலப் பிரவிருத்தியாகும் வயிற்றுவலிகளும் தீரும். வாயு தன் நிலையை யடையும்.

## பித்தத்தில் சத்தி குன்மத்தின் குறிகள்

பித்தத்தில் வெதுப்புப்பத்திம்பெருத்திடுஞ்சத்திகுன்மம்
சித்தத்துள் வலத்தெரிந்து தெளிவுறக் கழிச்சலாகி
மெத்ததா நீரலோடே மிகுந்து தானிரத்த மூத்துங்
கைத்தது நாக்குந் தானும் கதித்திடில் பித்தமாமே. (9)

(இ-ள்) உடலில் பித்தத்துடன் தேககாங்கையதிகமாகிப் பேதியாகவாரம்பிக்கும். தண்ணீர்போலக் கழிச்சலும் ஏற்படும். இரத்த வாந்தியுண்டாகும். நாக்கு கைக்கும்.

## வச்சிரகாயச் சூரணம்.

கதித்த பாலுடுவை முக்காவேளை கண்டங்காலி
துதித்திடு சித்திர மூலஞ் சீந்தில் துலங்கிய உத்தாமணி
சதித்திடுஞ் சங்கு அனிச்சை தழைந்த தூதளை முருங்கை
விதித்திடு சித்தமட்டி குப்பைமேனி நாயுருவி
சிவதைவேர் பலங்களாமே. (10)

பலமுள மிளகு சுக்கு பாவுதிப் பிலியரத்தை குப்பை
சலம் வளர் வசம்பு கோட்டந் தன்னுட னேலஞ் சீரகம்
நலமதி மதுர மிலவங்கம் கருஞ்சீரகம் நாடியகடுக்காய்
சண்பகப்பூ

உலகிடையிலிவையோரொன்றாய் வச்சிரகாயமா யுரை
செவ்வாயே (11)

(இ-ள்) பாலுடுவி

| | |
|---|---|
| (இரப்பர்கொடி) | முக்காவேளைவேர் |
| கண்டங்கத்திரிவேர் | சித்திரமூலவேர் |
| சீந்தில் கொடி | உத்தாமணிக்கொடி |
| சங்கம்வேர் | அனிச்சைவேர் |
| தூதுவேளைவேர் | முருங்கைவேர் |
| சித்தாமுட்டிவேர் | குப்பைமேனி |
| நாயுருவிவேர் | சுத்திசெய்த சிவதைவேர் |

இவைகளின் காய்ந்ததூள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| திப்பிலி | சிற்றரத்தை |
| சதகுப்பை | வசம்பு |
| கோஷ்டம் | ஏலக்காய் |
| சீரகம் | அதிமதுரம் |
| கிராம்பு | கருஞ்சீரகம் |
| கடுக்காய்த்தோல் | சண்பகப்பூ |

இவைகளையும் வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, எல்லாவற்றையும் ஒரு கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொண்டு வரப் பித்தக்குன்மம் தீரும்.

3. ''சத்தி குன்மத்திற்குக் கெந்தக நெய்''

உரமுடன் பசுவின் பாலு முயர்ந்திடு மிளநீர் நெய்யும்
திரமுடன் கலந்துதானே தீதற ஒரு நாளூறி
வாமுடன் கெந்தஞ் சாதிக்காய் சந்தனம் வகைநாலு
கழஞ்சதாக
சரசமென மென்பொடி தூவிகாய்ந்து நெய்தால்
கொள்ளச் சத்திகுன்மம் சாட்டிடுமே. (12)

(இ-ள்) பசுவின் பால் — சின்னபடி $\frac{1}{2}$
இளநீர் — ,,
பசுவின் நெய் — ,,

இவைகளை ஒரு நாள் முழுவதும் ஊறவைத்து,

சந்தனத்தூள் சாதிக்காய்
சித்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்.

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து, நன்கு இடித்து வஸ்திரகாயஞ்செய்து, பால் கலந்த நெய்யுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு, தினமும் 1 வராகனெடையளவெடுத்து காய்ச்சிய பாலுடன் உட்கொள்ளவும். சத்திகுன்மங்கள் தீரும்.

## பித்தவாயு, சத்திகுன்மம் இவற்றின் லக்ஷணங்கள்.

நெஞ்சுமெரித்துப் பிழித்தேக்கா யதின்றே யுதிரப் பொருமலுமாய்
தஞ்சமறவே சத்தியுமாய் தங்காதறுகா மலந்தீயும்
மஞ்சப்பித்த வாயுவிது மதிக்கச் சொன்னேம் வாய் கைக்கும்
தஞ்சப்படவே சத்திகுன்மத் தானே செய்யுங் குணமாமே. (13)

(இ-ள்) நெஞ்சில் எரிச்சலுண்டாகும். ஏப்பம் அதிகமாகும். இரத்தம் அதனுடன் வெளிவரும். வயிற்றுப் பொருமல் உண்டாகும். அடிக்கடி வாந்தியாகும். மலச் சிக்கலுண்டாகும். வாயில் கசப்புச் சுவையுண்டாகும். இவை சத்தி குன்மக் குறிகளாகும்.

## பித்த குன்மத்திற்குத் தேங்காய்ப்பாலெண்ணெய்.

தானெடுத் தெங்கின் காயின் தன்பால் நாழி யேரண்டம் நாழி
வானெடுமிந்துப் பொருபல மருவுமுள்ளி பலமொன்றுங்

கானெடுங்கள்ளிப்பா லிருகழஞ்சு கதிச்ச நமச்சாரமிரு
கழஞ்சு
மானெடுங் கண்ணுய் காய்ச்சி மருவிடுமஞ்சள் பித்த
குன்மமற்றிடுமே (14)

(இ-ள்) தேங்காய்ப்பால் சின்னப்படி ½
ஆமணக்கெண்ணெய் ,,

இவைகளை ஒன்று கலந்து,

| | |
|---|---|
| இந்துப்பு | 1 பலம் |
| பூண்டு | ,, |
| கள்ளிப்பால் | 2½ வராகனெடை |
| நவச்சாரம் | ,, ,, |

இவைகளை நன்ருக வரைத்துப் பால்சேர்ந்த எண்ணெயுடன் குழப்பி யடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு சிறு தேக்கரண்டியளவு எடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடனே அதிகாலையில்உட்கொள்ளவும். 4 அல்லது 5 தடவை மலப்பிரவர்த்தியாகிப் பித்தங்கள் தீரும்.

## உ. எரிகுன்மக்குறிகள்.

வயிற்றை யெரித்துக் குடல்புறட்டி வாய்நீர்
கனத்துத்தலைகனத்து
உயிற்றை யணையக் கிறுகிறுத்து ஓங்காரித்து
எப்பமுண்டாய்
மயிற்கால்வழியே வியர்வாகி வயிறும் பொருமிக்
கண்டிடுகி
லியிற்றை எரிக்குங் குன்மமென்ன இமையோர்
சொன்ன குறியாமே. (15)

(இ-ள்) வயிற்றில் எரிச்சலுண்டாகும். குடல் பிரட்டலும் ஏற்படும். வாயில் நீர் ஊறும் தலைபாரம், மயக்கம், ஓக்காளம். ஏப்பம் மயிற்கால் தோரும் வியர்வையரும்புதல், வயிறுப் பொருமல், முதலான குறிகள் கண்டால் "எரி குன்மக்" குறிகளாகும்.

### எரிகுன்மத்திற்குத் ''தேங்காய்பால் மருந்து''

குறியான தேங்காய்பா லிளநீருங்கூட்டி
குலவியதோர் செண்பகப்பூ சிறுகீரை வேரும்
பொறியான கொடும்பைவேர் வெள்ளுள்ளியுடனே
பொருந்தியுடன் காய்ச்சி வடி
வெல்லமுடன் கொள்ள

வெரியாக வெரிகுன் மம் வலியும் வீடுமென்ன
மிகுநிலத்து மனிதருடல் குளிருமது திண்ணம்
முறியாதே நீர்காய்ச்சிக் கொடுமுனிவர் சொன்ன
மொழியான வாகடக்கவி பயந்தோமே (16)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | தேங்காய்ப்பால் | இளநீர் |
| | செண்பகப்பூ | சிறுகீரைவேர் |
| | பொன்னுங்காணிவேர் | பூண்டு |

இவைகளை ஒன்ருக்கி நன்ருக வரைத்துக் குழப்பி வெல்லம் கூட்டி அடுப்பின் மேலேற்றி இறுக வைத்து உட்கொள்ளவும்.

எரிகுன்மம், வலி இவைகள் நீங்கி, உடலுக்குக் குளிர்ச்சி தரும்.

### சத்திக்கு ''பயத்தங் கழுநீர்''

பயத்திலுமியைப் போக்கி பரிவுள நீரை விட்டு
வியப்புறக் காய்ச்சிப் பின்னை விரைந்து நீர்
தன்னினூடே
நயப்புறச் சீனி கூட்டி நலம்பெறக் குடித்தபோதே
தியக்கிடு சத்தி மாறிச் சீர்கொள்ளுந்
திண்ணந்தானே. (17)

(இ-ள்) பச்சைப்பயிற்றை குத்தி உமியை நீக்கி அதனை ஒரு பாத்திரத்திலிட்டு சுத்தஜலம் விட்டுக்கழுவி அக்கழுநீருடன் சீனிகூட்டி, அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்துக் கொடுக்கச் சத்திகள் மாறும்.

### எரி குன்மத்திற்குக் "குடுச்யாதி கஷாயம்"

சீந்தில் சுக்கு சிறுகுருந் தோட்டிவேர்
சாந்த வேலிலாமிச்சஞ்சந்தனம்
போந்த கூவிளை பொங்கிரு நாழிநீர்
காய்ந்த போதெரி குன்மங் கடக்குமே (18)

(இ-ள்) சீந்தில்கொடி சுக்கு
சிற்றாமுட்டிவேர் இலாமிச்சம் வேர்
சந்தனத்தூள் வில்வவேர்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை **வீதமெடுத்து** இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச்சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அதை அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி உட்கொள்ள "எரிகுன்மம்" தீரும்

### எரிகுன்மத்திற்கு "அரீதகீக் கஷாயம்"

பயத்தொடு கடுக்காய் சுக்கு பகுந்திரு கழஞ்சு கொண்டு
வயற்கரைத் தண்டு மந்து மறுகுருந் தோட்டி வேரும்
நயக்கடு வெட்டிக்கூட்டி நயம்பெறக் காய்ச்சிக்கொள்ள
இயற்புறுங் கைகால் நின்று எரிகுடல் மறுகும்
போமே. (19)

(இ-ள்) கடுக்காய்த்தோல் சுக்கு
சுரைத்தண்டு குறுந்தோட்டிவேர் (பலா)

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கி வடிக்கட்டிக் கொண்டு உட் கொள்ளவும். **கைகால் வலி,** எரிகுன்மம், **குடல்** வாயு முதலியவைகள் தீரும்

### சத்தி குன்மத்திற்குக் குமரிவேர்க் கஷாயம்

குமரிவேர் கொன்றை சுக்குக் குலவுரோ கணியுமிந்தும்
அமர்குளப் பாலை சீந்தி லானசந்ததி மதுரந்

தமரமாய்க் காய்ச்சிப் பின்னைத் தானது துகர்ந்தபோது
மதுரமாஞ் சத்திகுன்மம்செய்குடல்மறுகும்போமே.(20)

| | |
|---|---|
| (இ ள்) கத்தாழைவேர் | கொன்றைவேர் |
| சுக்கு | கடுகரோகிணி |
| இந்துப்பு | குளப்பாலைவேர் |
| சீந்தில்கொடி | சந்தனத்தூள் |
| அதிமதுரம். | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சின்னப்படி $\frac{1}{2}$ சுத்தஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கி உட்கொள்ளவும். வாந்தியுடன் கூடிய குன்மம் குடல் வாயுமுதலானவை நீங்கும்

## எரி குன்மத்திற்கு 'ஏலாதிச் சூரணம்'

ஏலமிலவங்கமிந்துப்புத்திப்பிலியுஞ்
சாலவருஞ் சாதிக்காய் சடாமாஞ்சில்—வேலனையக்
கோட்டஞ்சிறுதேக்குக் கூடுசிங்கி செண்பகப்பூவுமிளகு
வாட்டந்திரிபலை சிறுமூல சுக்குத்தேன் வாங்கு. (21)

| | |
|---|---|
| (இ–ள்) ஏலக்காய் | இந்துப்பு |
| கிராம்பு | திப்பிலி |
| சாதிக்காய் | சடாமாஞ்சில் |
| உயர்ந்தகோஷ்டம் | சிறுதேக்கு |
| கர்கடசிங்கி | செண்பகப்பூ |
| மிளகு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| திப்பிலி | சுக்கு |

இவைகளைச்சரி எடையெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனுடன் குழைத்து உட்கொள்ள எரிகுன்மம், சத்தி குன்மங்கள் தீரும்.

## ௫௧ வலி குன்மம்.

பண்டுமுன் வயிற்றைப்பற்றிப்பலப்பலவலிக்கையாலுங்
கொண்டுநின்ருகாரத்தைக்குமட்டியேயெடுக்கையாலும்
மண்டியே காயம்வற்றி மயங்கிட உலத்தலாலும்
வண்டுசேர் குழலினுளே ! வலிகுன்ம வாயுவாமே. (22)

(இ-ள்) வாயு வயிற்றைப்பற்றி வலியை உண்டாக்கும் வயிற்றைக் குமட்டும் வாந்தி உண்டாகும். அதனுல் உடம்பு இளைக்கும். இவை "வலிகுன்ம வாயு" என்ற நோயாகும்.

## சூலேகுன்மத் (வலிகுன்ம) திற்கு 'கழற்கொடிக் கஷாயம்'

கழல்மணி வெள்ளையுள்ளி கதித்தமுருங்கைத்தோல் வசம்பு
மழலிடை கொள்ளுஞ்சுக்கு மப்புநேர் ஊக்காய்கொள்ள
குழலிடை உள்ளி போலக்குத்திய வாயுவெல்லாம்
பழகிய சூலேகுன்மம் பத்திடா தோடுந்தானே. (23)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கழற்சிப்பருப்பு | வெள்ளைப்பூண்டு |
| | முறுங்கைத்தோல் | வசம்பு |
| | சுக்கு | |

இவைகளைச் சரியெடை யெடுத்து நசுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு8மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக்கி எரித்து வடிக்கட்டி உட்கொள்ளவும் மிக்க வேதனை தரும் வலிகுன்மம் தீரும்.

## ௬ கபால குன்மக் குறிகள்

தலையுங் கனத்து வலித்துயர்ந்து தநுகா தமற்றுந் துயர்ந்துடம்பு
மலையும் நடுக்குங் கிறுகிறுக்கு மயருதுச்சிக் கண்ணவை

முளையுங் குத்திப் பிடரி நரம்புளையு மனந்தல் வாயூறுங்
கலையில் பற்றி யுடலங்கிங் கதிக்குங் கபாலக்
குன்மமிதே. (24)

(இ-ள்) தலைபாரமேற்படும். தலைவலியும் உண்டாகும். உடம்பில் நடுக்கமேற்படும். மயக்கம், தலையுச்சி வலி, கண்களில் வலி, பிடரி, நரம்பு இவைகளில் தாங்க முடியாத வலி, வாயில் நீரூறல், முதலான பற்பல குறிகளும் காணும் இவை கபாலக் குன்மத்தின் இலக்ஷணமாகும்.

## வாதகுன்மக் குறிகுணங்கள்.

ஈரலும் நெஞ்சும் பற்றி யெரித்திடு முளையும் பக்கம்
தார் செரி கபாலந்தானுங் கனத்துடல் புரட்டச்சத்தி
நேர்படக் கிறுகிறுத்து நினைவறக் குடல் வலிக்கில்
வார்படு முலையினுளே ! வாத குன்மமாம் வகை
கண்டாயே. (25)

(இ-ள்) ஈரல்குலை, நெஞ்சு இவைகளில்எரிச்சலுண்டாகும் உளைச்சலேற்படும் தலையில் பாரமுண்டாகும். வாந்தியேற்படும்.குடலில்வலியுண்டாகும். இவை "வாத குன்மக்" குறிகளாகும்.

## இதுவுமது.

சந்துகா லுழைந்து பத்தித் தழலெழ வயத்தில் மற்று
மந்தகாரணங்கள் தன்னில் அதிகமாஞ் சரீரவாதை
வந்துதான் தோன்று நாழில் வகைபடர் வாத குன்மம்
மந்தமா முனிவர் சொன்ன வாறிது வேதமாமே. (26)

(இ-ள்) முட்டுகள், கால்கள் இவைகளில் உளைச்சல் அதிகமாகி, வயற்றில் எரிச்சலும் உண்டாகும். உடம்பு வலி அதிகமாகும். இவைகளும் 'வாத குன்மக்" குறிகளாகும்.

## இதுவுமது

உளையுமுடம்பு தனிலெங்கு முளையாதிருக்கில் கிறு
கிறுப்புக்
களையுமிகுந்து வறளத்திக் கனக்கக்காந்தி மாநீரும்
விளையும்வெப்பு மிகவுண்டாய் விடாதேதிமிர்க்குந்
தலைகனக்கும்
வளையும் புருவநுதளாளே!வளமாம்
வாதகுன்மமிதே. (27)

(இ-ள்) உடம்பில் கடுப்புவலி (உளைச்சல்) உண்டாகும் கிறுகிறுப்பும் ஏற்படும். களைப்பும் அதிகரிக்கும். உடம்பில் காங்கை ஏற்படும். உடம்பில் மதமதப்புஏற்பட்டு தலைபாரம் உண்டாகும். இவை வாதகுன்மக்குறி குணங்களாம்.

## குன்மத்திற்கு ''உள்ளி எண்ணெயும், முடக்கொத்தான் எண்ணெயும்''

உள்ளியிஞ்சி யிந்துப்பு உற்றசிவதை சிவாதையுடன்
கொள்ளுநிலவாகை வேரதுவுங் குலவுமிளகுந்திப்பிலியு
முள்ளேரண்ட எண்ணெயுடனுறவே முடக்கொத்
தானிலைகொள்
தள்ளா தொக்கக் கழற்கொடியுஞ் சாறணை
வேர்க்கொடி வெனவுமே. (28)

காட்டில் நொச்சிநில வாகைக்கடிய கொன்றைக்
கழலுடனே
ஒட்டுவேராயின் வேர்முருங்கையுத்தசிவதைசெம்முள்ளி
காட்டாமணக்கு யெண்ணெயுடன் கடியவுள்ளியிந்துப்பு
வேட்டம்பெரிய கள்ளியுடன் மிகவே கூட்டீர்
குன்மம்போமே (29)

(இ-ள்) பூண்டு இஞ்சி
இந்துப்பு சுத்தி செய்தசிவதைவேர்
நிலவாகைவேர் மிளகு
திப்பிலி

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்து இடித்துச் சூரணித்து ஆமணக்கெண்ணெய் சின்னப்படி $\frac{1}{2}$ யுடன்கலந்து அடுப்பின்மேலேற்றிச் சிவக்கும்படி எரித்து இறக்கி வைத்துக்கொள்ளவும்.

இதில் 2ஸ்பூனளவெடுத்துப் பாலுடன் சாப்பிடவும்

(2) முடக்கொத்தானிலை — கழற்கொடி இலை
சாறணைவேர் — நொச்சியிலை
நிலவாகைவேர் — கொன்றைவேர்
கழற்கொடிவேர் — ஆயில்யவர்
முருங்கைவேர் — சுத்திசெய்த
செம்முள்ளிவேர் — [சிவதைவேர்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்து இடித்து அம்மியின் மேல்வைத்து நன்கு தண்ணீர் விட்டரைத்துக் காட்டாமணக்கெண்ணெய் சின்னப்படி $\frac{1}{2}$யுடன் கலந்து அதனுடன்

கள்ளிப்பொருக்கு — இந்துப்பு
பூண்டு

இவைகளையும் $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்து இடித்துப் போட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி உட்கொள்ளவும். இதில் 1 ஸ்பூனளவெடுத்துத் தினம் 3 வேளை உட்கொள்ளக் குன்மம் தீரும்

### வயிறுவலி, சூலை, குன்மத்திற்குப் ''பிரண்டை யெண்ணெய்''

கூட்டிடுபிரண்டைச்சாறுகுறுணிகொள்வேப்பஞ் சாறுங்
காட்டினிலுத்தாமணி சுதித்திடக் குறுணிச்சாறும்
தேட்டமாய்த் தேங்காய்ப்பால் முன் னுழியுங் கலந்து
சேர்த்து
நாட்டினில் சித்தாமணக் கெண்ணெயிரு நாழிதான்
கலந்திட்டாயே. (30)

நலந்திடுகாட்டெருமைப்பால்பலநாலு நற்சாறணைவேர்
நாலு பலம்
உலர்ந்திடு கடுக்காயு மன்பதுகொள் வெள்ளுள்ளி பலம்
நாலு கொள்ளுமியல்
கலந்திடு நேர்வாளம் பருப்புமரைப்பலங்கொள் கல்லுப்
பிந்துப்பு திப்பிலியுஞ் சுக்கும்
பெலந்திடு பெருங்காயம் வசம்பு கொடிவேலி பேதமுட
ணிரு கழஞ்சிடையரைப்பதுவே. (31)

அரைத்துடன் கலந்தெண்ணெய் காய்ச்சி வடிவுதனை
அன்றுடங் கழஞ்செடை யெட்டுநாள் கொள்ள
உரத்திடு வயிற்றுவலி சூலை பெருவயிறும்
ஊது குடல் வாதமுடன் குன்மம் விடுங் கண்டீர்
துரத்திவிடு நீராமை வெப்புப்பாவை யகன் றிடுமெய்
சுத்தமுள பசுவின்பால் பத்தியமதாக
வரத்துடன் முனிசொன்ன வாகடத்தின்
வகையான பரிகார விதியாகு மாதே. (32)

(இ-ள்) பிரண்டைச்சாறு வேப்பஞ்சாறு
உத்தாமணிச்சாறு
இவைகள் வகைக்கு ஒரு மரக்கால்

தேங்காய்ப்பால் சின்னப்படி$\frac{3}{4}$லும்

சித்தாமணக்கெண்ணெய் சின்னப்படி$\frac{1}{2}$யும் சேர்த்து
ஒன் றுகலந்து

| | |
|---|---|
| காட்டெருமைப்பால் (கூகைநீர்) | 4 பலம் |
| சாறணைவேர் | — 4 ,, |
| கடுக்காய்த்தோல் | —50 (எண்ணிக்கையில்) |
| பூண்டு | — 4 பலம் |
| சுத்திசெய்தநேர்வாளம் | — $\frac{1}{2}$ ,, |
| கல்லுப்பு | — $2\frac{1}{2}$ வராகனெடை |
| இந்துப்பு | — ,, |
| திப்பிலி | — ,, |

| | | |
|---|---|---|
| சுக்கு | — | $2\frac{1}{2}$ வராகனெடை |
| பெருங்காயம் | — | ,, |
| வசம்பு | — | ,, |
| கொடிவேலிவேர் | — | ,, |

இவைகளை சூர்ணித்து முன் சொன்ன சாறு கலந்த எண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி நன்ருகக் கொதிக்கவைத்துப் பக்கத்தில் இறக்கி வைத்து வடிக் கட்டிக் கொள்ளவும்.

இந்த எண்ணெயில் தினந்தோறும் $1\frac{1}{4}$ வாரக னெடையெடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடன் 8 நாட் களுக்குச் சாப்பிடவும்.

வயிற்றுவலி, சூலை, பெருவயிறு, குட்லவாதம், குன் மம் நீராமைக்கட்டி, வெப்புப்பாவை முதலான ரோகங் கள் தீரும் பசுவின் பால் சாதம் மாத்திரமே சாப்பிட் டுப்பத்தியமாக இருக்கவும்.

## வாதகுன்மம், நீராமைக்கு
## "உள்ளியாமணக் கெண்ணெய்"

ஆனவெள்ளுள்ளி பலமறுபதாக அது துவைத்து
நீர்விட்டுக் காய்ச்சி நாநாழிவடித்துக்
கானகத்தில் வளர்ச்சிவதை மூக்கரட்டைபுன்
முறுங்கை
கடுநெல்லி தானியுட னுமணக்குவேரும்
வானவர்சொல் மாவிலங்கை நில்வாகை நொச்சி
மருவு சாறணை வேரும் வகைச்சூஞ்சு பலமாய்
தானதக்கித் தூணிநீர் கொள்ளு நாநாழி வடித்துச்
சரியாக யோண்டத் தைலங்கள் பண்ணே (33)

பண்பாகும் விழலரிசி ஆயிற்றேல் வசம்பு
பார்சுக்குத் திப்பிலி மிளகு செவ்வியமும்
நண்பான வெட்பாலையரிசி அரேணுகமும்
நற்சீரகங் கருஞ்சீரகங் கடுகு

மண்பாரிவிந்துப்பு யவட்சாரங் கொடிவேலி
வட்டத்திருப்பிவேர் பெருமரத்தோலும்
கண்காண நீகடுகு சிறுதேக்கு பெருங்குரும்பை
கடுகுரோகணி வெடியுப்புக் கல்லுப்
புங்காணே. (34)

காரமுள திப்பிலிமூல மதிவிடயங்கடிய
பெருங்காயமுடன் வகைக்கு நாற்கழஞ்சாய்
சீர்பாவநேய வரைத் தேகமுடன் செய்து
சேர்பொர்ந்து கள்ளிப்பாலுழக்குப்போந்து
தேர்வதுகாய்ந்து பதமாகக் கழஞ்சு பதமாகக்
கழஞ்சு தினங்கொள்ளு வாதகுன்மநீராமை
பாரமுள வெப்புப்பாவை பெருவயிறு பத்தாது
குடல்வாத சூலை பறந்திடவே. (35)

(இ-ள்) பூண்டு 60 பலமெடுத்து நசுக்கி ஒரு பாத்தி ரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றிச் சின்னப்படி ஒரு படியாக ஆகும் வரைவற்ற வைக்கவும் இதனுடன்,

| | |
|---|---|
| சுத்திசெய்த சிவதைவேர் | மூக்கரட்டைவேர் |
| புன்முருங்கை | கடிக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| ஆமணக்கம்வேர் | மாவிலங்கைவேர் |
| நிலவாகைவேர் | நொச்சிவேர் |
| சாறணைவேர் | |

இவைகளை வகைக்கு 5 பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு4மரக்கால் சுத்தஜலம்விட்டுஅடுப்பின் மேலேற்றி சின்னப்படி ஒன்றாகும் வரை வற்றவைத்து வடிக்கட்டிக் கொண்டு அதனுடன், சித்தாமணக்கெண் ணெய் — சின்னப்படி ஒன்று சேர்த்துக் கொள்ளவும். பின்னர்,

| | |
|---|---|
| விழலரிசி | ஆயில்யப்பட்டை |
| வசம்பு | சுக்கு |

| | |
|---|---|
| திப்பிலி | மிளகு |
| செவ்வியம் | வெட்பாலையரிசி |
| காட்டுமிளகு | சீரகம் |
| கருஞ்சீரகம் | கடுகு |
| இந்துப்பு | யவச்சாரம் |
| கொடிவேலிவேர் | வட்டத்திருப்பிவேர் |
| பெருமரப்பட்டை | சிறுதேக்கு |
| பெருங்குரும்பை | கடுகரோகிணி |
| வெடியுப்பு | கல்லுப்பு |
| திப்பிலிமூலம் | ஆதிவிடயம் |
| பெருங்காயம் | |

இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதமெடுத்துச் சூரணித்து முன் சொன்ன கஷாயம் விட்டு நேகவைத்து எண்ணெயுடன் கலந்து, கள்ளிப்பால் 1 உழக்கும் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துப் பசுவின் பாலுடன் காலை நேரங்களில் சாப்பிடவும்.

வாதகுன்மம் நீராமைக் கட்டிவெப்புப்பரவை பெருவயிறு குடல்வாதம் சூலை முதலான நோய்கள் தீரும்.

**வாதகுன்மத்திற்குச் ''செவ்வியாதி நெய்''**

பத்தியுள்ள செவ்வியங் கொடிவேலி விழலரிசி
பார் கொத்தமல்லி திரிபலைகூட்டி

சித்தியுள்ள சுக்குத் திப்பிலியு மிளகு
சீராக முக்கழஞ்சது வரைத்திட்டே

பத்தியுள்ள ஆவின்பால் நாழிநெய் நாழி
பதமாகக் காய்ந்துவடித்திறுத்தெடுத்தே

நித்தியமும் நீர் கழஞ்சு நெய் கொள்ளும்போது
நில்லாது வாதகுன்மம் விடுமாமே. (36)

(இ-ள்) செவ்வியம் — கொடிவேலிவேர்
விழலரிசி — கொத்தமல்லிவிதை
கடுக்காய்த்தோல் — நெல்லிவற்றல்
தான்றித்தோல் — சுக்கு
திப்பிலி — மிளகு

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை யெடுத்துச் சுத்த ஜலம் விட்டு நன்றாக வரைத்துப்

பசுவின் பால் — சின்னப்படி $\frac{1}{2}$
,, நெய் — ,,

இவற்றுடன் கலக்கி, அடுப்பின் மேலேற்றி நன்றாகக் கொதிக்கவைத்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு தினந்தோறும் $1\frac{1}{4}$ வராகனெடை நெய் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். வாதகுன்மம் தீரும்.

**குன்மம், பீலிகைக்கு ''வசாதி கிருதம்''**

ஆமே வசம்புவெள்ளுள்ளி கடுதாணி
அரிய கொடிவேலி சுக்கு மிளகு திப்பிலியும்
தாமே விழலரிசி தனித்தொரு கழஞ்சாய்
தனிப்பசுவின் பால்விட்டு தானில்க்காக
வேமே ஒருநாழி ஆவிநெய்தனில்
வெந்தாறி நேரமது முக்கழஞ்சருந்த
போமே குடல்மீதில் வாயிருமல் குன்மம்
பொருந்தாது பீலிகை வருந்தாதுதானே. (37)

(இ-ள்) வசம்பு — பூண்டு
கடுக்காய்த்தோல் — தான்றிக்காய்த்தோல்
கொடிவேலிவேர் — சுக்கு
மிளகு — திப்பிலி
விழலரிசி

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாக வரைத்துப் பசுவின் நெய்

சின்னப்படி½யுடன் கலந்து ஒன்ருகக் குழப்பி அடுப்பின் மேல் வைத்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும். இந் நெய்யில் $3\frac{3}{4}$ வராகனெடை யளவெடுத்துக் காய்ச்சிய பாலுடன்உட்கொள்ளவும் குடல்வாயு, இருமல்,குன்மம் பீலிகை முதலான நோய்கள் தீரும்.

## குன்மம், வாயு, பாண்டுவிற்கு ''ஆயில்ய நெய்''

ஆயில்தோல் பதினறு பலமிடித்து
ஆவின்பால் குறுணி நீர் குறுணி விட்டு
ஓயத்தான் காய்ச்சிநா நாழிவடித்து
ஒருநாழி நெய்விட்டு யெவச்சாரத்துப்பு
செயவிது செவ்விய மோரொன்று கழஞ்சு
திறமாக வரைத்துக் கரைத்துநெய் வடித்தால்
மாயத்தால் வருகுன்மம் முதிர்வாயு பாண்டுவும்
வாராதுகிராணி அதிசாரமறி படுமே. (38)

(இ-ள்) ஆயில்யப்பட்டை (பூதீகம்) 16 பலம் எடுத் துக்கல்லுரலிட்டு ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்தி ரத்திலிட்டு அதனுடன் பசுவின் பால் 1 மரக்காலும், தண்ணீர் 1 மரக்காலும் விட்டு, அடுப்பின் மேலேற்றி பெரியபடி 1 ஆகும் வரை வற்ற வைத்துக்கொண்டு அதனுடன்,

பசுவின் நெய் — சின்னப்படி ½
எவச்சாரம் — இந்துப்பு
செவ்வியம்

இவ்வகைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யளவெடுத்துப் பால் விட்டரைத்து, முன்சொன்ன நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி நன்ருக எரித்துப் பதத்தில் இறக் கவும். இந்நெய்யில் 1 வராகனெடை எடுத்துக்காய்ச்சிய பாலுடனே . உட்கொள்ளக் குன்மம், வாயு, பாண்டு, கிராணி, அதிஸாரம் முதலான ரோகங்கள் தீரும்.

## குன்மம், ஈளை இருமலுக்கு ''ஹிங்க்வாதி கிருதம்

அதிபெருங்காயஞ் சுக்குமிளகு திப்பிலியிந்துப்பு
முதிர் வெடியுப்பு மீசுரமூலி வேர் வசம்பு மோமம்
கொதி யெவட்சாரம் கருஞ்சீரகங் கொத்தமல்லி
மதி வளா வெட்பாலே கச்சோலம் முக்கிரா
வரவிந்தம் தானே. (39)

தாது மாதளம்புளி கருஞ்சீரகம் கொடிவேலி
தனித்தனி கழஞ்சு கொண்டு
மாதுசேராவின் பாலதிரைத்துநெய்யு
மீதுடன் நாழி கூட்டி விளவியே யெரித்துவாங்கி
போதுடன் கழஞ்சுகொள்ளப்
போகிடும் குன்மமீளே. (40)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | பெருங்காயம் | சுக்கு |
| | மிளகு | திப்பிலி |
| | இந்துப்பு | வெடியுப்பு |
| | பெருமருந்துவேர் | வசம்பு |
| | ஓமம் | எவச்சாரம் |
| | கருஞ்சீரகம் | கொத்தமல்லிவிதை |
| | வெட்பாலேயரிசி | கச்சோலம் (பூலாங்கிலங்கு) |
| | அமுக்கிராக்கிழங்கு | தாமரைக்கிழங்கு |
| | மாதுளேயோடு | சீரகம் |
| | கொடிவேலிவேர் | |

இவைகளைத் தனித்தனியே $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்து இடித்துப் பசுவின் பால் விட்டு நன்ருக வரைத்துப் பசுவின் நெய் சின்னப்படி $\frac{1}{2}$ யுடன் கூட்டி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந் நெய்யில் $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடன் உட்கொள்ளவும். குன்மம், ஈளை இருமல் இவைகள் தீரும்.

## குன்மம், ஈளைக்கு ''இலந்தை நெய்''

போகிடு மிலந்தைத்தோல் பதிறுறு பலம் போந்து
தேகிடுநீர் குறுணி எட்டொன்றாய்க் காய்ச்சிக்கொண்டு
வாகிடு சன்னசாலைக் கடுகு சுக்கு மிந்துப்புத்
தாகிடு மிளகு ஓமம் திப்பிலி கருஞ்சீரகம்
சாற்றுவோமே. (41)

சாற்றுசித்திர மூலிவேர் சிறுமூலந் தனித்தனிக்
கழஞ்சதாக
ஊற்றாவின் பால் விட்டங்கே வளம்பெற வரைத்துக்
கொண்டு
சேற்று நெய்நாழி விட்டுத் திரள்வெளக் காய்ச்சிறித்தம்
பாற்று நீ கரஞ்சு கொள்ளப் பாருமே
(போகுமே) குன்மமீளை. (42)

(இ-ள்) இலந்தைப்பட்டை 16 பலம் எடுத்துத் துண்டுகளாக்கி இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 1 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கவும். இக்கஷாயத்துடன்,

| | |
|---|---|
| சன்னலவங்கப்பட்டை | கடுகு |
| சுக்கு | இந்துப்பு |
| மிளகு | ஓமம் |
| திப்பிலி | கருஞ்சீரகம் |
| கொடிவேலிவேர் | யானைத்திப்பிலி |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையளவெடுத்து இடித்துப் பசுவின் பால்விட்டு நன்றாக வரைத்துப் பசுவின் நெய் சின்னப்படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யில் ஒரு கழஞ்சு எடுத்துக் காய்ச்சிய பாலுடன் தினந்தோறும் உட்கொள்ளக் குன்மம், ஈளை முதலான நோய்கள் தீரும்.

### ஆமதோஷந்திரக் ''கோஷ்டாதி நெய்''

பாறிடு கோட்டம் பதினறு பலங் கொண்டங்கே
ஊறிடுநீரும் விட்டு ஒரு நாழிகாய்ச்சி வாங்கிக்
கூறிடுதிரி கடுகு வெள்ளுள்ளியு மரைத்துப் பாலில்
தேறிடுநெய் நாழியிற் காய்ச்சித் தினங்கொள்ளாம
தோஷ (குணமு)ந் தீருந்தானே. (43)

(இ-ள்) உயர்ந்த கோஷ்டம் – 14 பலம் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, 8 மடங்கு சுத்த ஜலம் (பெரிய படி $2\frac{3}{4}$)! ஊறவைத்து, அடுப்பின் மேலேற்றி ஒரு நாழியாகும்வரை வற்றவைத்துவடிகட்டிக் கொண்டு இதனுடன்,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பூண்டு |

இவைகளை வகைக்கு 1 வராகனெடையெடுத்துப் பசுவின் பால்விட்டு நன்ருக அரைத்து விழுதாக்கிக் கலந்து பசுவின் நெய் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு ஒன்ருக்கி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய்யை வடிக்கட்டித் தினம் 2 வேளை 1 ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடன் உட்கொள்ளவும். ஆமதோஷங்கள் தீரும்.

### வலி குன்மத்திற்கு ''வழுதலை நெய்''

தீரமுள்ள வழுதலைவேர் நாகநந்திக் கிழங்கு
திரிபலை கொடிவேலி யிந்துப்புகூட்டிப்
பாரமுடனேரொன்று முக்கழஞ்சு கள்ளிப்
பாலுமுக் கழஞ்சும் பசுவி நெய்யில்
காரமுடன் காய்ச்சி வடி முக்கழஞ்சு நெய்கொள்
கழியும் வயி றதுவிடும் வலியு முடன் விடுகச்
சாரமுள வெந்நீராற் சுத்தி செய்
திட்டு தரித் திராவென்ன வலிகுன்மந்தானே

(இ-ள்) வழுதலைவேர்
(சிறுகத்திரி வேர்) நாகநந்திக்கிழங்கு

கடுக்காய்த்தோல் — நெல்லிமுள்ளி
தான்றித்தோல் — கொடிவேலிவேர்
இந்துப்பு — கள்ளிப்பால்

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதமெடுத்து, அம்மியின்மேல் வைத்து தண்ணீர் விட்டு நன்றாக வரைத்துப்

பசுவின் நெய் — 1 படியுடன்

குழப்பியடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு, காலை நேரங்களில் இந்நெய்யில் $3\frac{3}{4}$ வராகனெடை யெடுத்து உட்கொள்ளவும். நன்றாகப் பேதியாகும். வயிற்று வலிகளும் தீரும். புழங்குவதற்கு வெந்நீரையே உபயோகிக்கவும். வலிகுன்மங்கள் தீரும்

## குன்மவலிக்கு ''வெள்ளுள்ளி நெய்''

வலியவெள் ளுள்ளிபதி னறுபலத் துக்கு
வாற்றுநீர் தூணிநா லுழிவடித்துக்,
கலியான திப்பிலி யொருபலமிந்துப்
புக்கூட்டி யொருபலம ரைத்தாட்டுப்பாலில்
பொலிய விரு நாழிபுகட்டி நெய் நாழி
பொருந்திடக் காய்ந்து வடித்து முக்கழஞ்சு
சலியாது கொண்டுவரக் குன்மவலிதீரும்
தாரணியோர்க் குரைவாகடத்திநூலே. (45)

(இ-ள்) பூண்டு 16 பலம் எடுத்து, ஆற்றுநீர் 4 மரக்கால் விட்டு அடுப்பின்மேலேற்றி 4 நாழியாகும்வரை வற்ற வைக்கவும். இதனுடன்,

திப்பிலி — 1 பலம்
இந்துப்பு — 1 பலம்

இவ்விரண்டையும், ஒரு அம்மியின்மேல் வைத்து ஆட்டுப்பால் விட்டு நன்றாகவரைத்து.

ஆட்டுப்பால் — 2 நாழியும்
பசுவின் நெய் — 1 நாழியும்

கூடவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப்பதத்தில் இறக்கிவைத்துக் கொள்ளவும்.

இந்நெய்யில் $3\frac{3}{4}$வராகனெடையெடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடனே உட்கொள்ளவும். குன்ம வலிகள் தீரும்.

**சூலை, ஈளை, காசத்திற்குத் ''திப்பிலி நெய்''**

வாகுடைய திம்பிலி சிறுமூலஞ் சுக்கு
வரிசையுள கொடிவேலி மிளகுமோ ரொன்று
பாகுபட முப்பலந் தகத்து நீர் விட்டுப்
பரிவுடனெட்டொன்றாய் வடித்துப்பின் கொண்டு
ஆகுசிறு திப்பிலி நண்ணரைப் பல
மரைத்து நெய்நாழி புகட்டியது காய்ச்சி
நோகும் வர உள்ளுக்குக் கழஞ்சுகொள் வித்தால்
நோக்காது சூலையுள் ளீளைதழர் கொண்டே. (46)

| | | |
|---|---|---|
| (இ ள்) | திப்பிலி | சிறுமூலகம் |
| | சுக்கு | கொடிவேலிவேர் |
| | மிளகு | |

இவைகள் வகைக்கு 3 பலம் எடுத்து ஒன்றிரண்டாக விடித்துச் சுத்தஜலம் பெரியபடி 3 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும்வரை வற்றவைத்துக் கஷாயத்தை யிறுத்துப்,

பசுவின் நெய்—சின்னப்படி ஒன்று

விட்டு ஒன்று கலந்து, திப்பிலி $\frac{1}{2}$ பலமெடுத்துக் கல்கமாக்கி நெய் கூட்டிய கஷாயத்துடன் சேர்த்து, எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டவும்

இந் நெய்யில் $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்துப் பசுவின் பாலுடன் காலை மாலை யிருநேரமும் உட்கொள்ளவும். சூலை ஈளை, இருமல், குளிர் முதலான ரோகங்கள் தீரும்.

### வாயு, குன்மம், ''வலிக்குச் சாறணை நெய்''

தழைகின்ற சாறணைச் சாறெரு பதக்குத்
தாணிகடு நெல்லிகொடி வேலியிந் துப்புத்
துளைகின்ற பெருங்காய மசமோதகஞ் சுக்குத்
திப்பிலி மிளகொடு சொல்லவொரு பலமாய்
குழைகின்ற வெண்ணெ யுடநெய் நாழி கூட்டிக்
குறுகும் பதமாக்கி கொள் நேரமுங் கழஞ்சாய்
வளைகின்ற வாயுவும் குன்மமும் வலியும்
விட்டு விடுப் வந்த முட்டுகளும் விடுமே. (47)

(இ-ள்) சாறணைச் சாறு-2 மரக்கால் எடுத்துக் கொண்டு அதனுடன் பசுவின் நெய் பெரியபடி 1 விட்டு ஒன்று கலந்து,

| | |
|---|---|
| தான்றிக்காய்த்தோல் | கடுக்காய்த்தோல் |
| நெல்லிவற்றல் | கொடிவேலிவேர் |
| இந்துப்பு | பெருங்காயம் |
| ஓமம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துச் சூரணமாக்கி முன் சொன்ன சாறு கலந்த நெய்யுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் $1\frac{1}{4}$ வராகனெடை யளவெடுத்துத் தினம் 2 வேளை சூடான பசுவின் பாலுடனே உட்கொள்ளவும். வாயு, குன்மம், வலி, விட்டு விட்டு வரும் மூட்டுவலி முதலான நோய்கள் தீரும்.

### குன்மத்திற்கு ''முருங்கை நெய்''

முருங்கைவே ராடாதோடை முதிரிகொடிவேலி தூதளை
நெருங்கவேர் பலம்பதினறுநீ ருகுறிணிவிட்டுச்
சுருங்கவே யெட்டொன்றுக்கி தோணிநெய் நாழிவிட்டு
முருங்கைவித் தொருபலமரைத்துக் காய்ச்சிக்கொள்
மூச்சில்யீளையுங் குன்மம் போமே. (48)

(இ-ள்) முருங்கைவேர் ஆடாதோடை
கொடிவேலிவேர் தூதுவேளைவேர்

இவைகளை வகைக்கு 16 பலம்வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து $\frac{1}{8}$ பாகமாகச் சுண்டவைக்கவும் பின்னர் பசுவின் நெய் பெரியபடி 1 விட்டு, ஒன்று கலந்து, இதனுடன் முருங்கைவித்து ஒரு பலம் எடுத்து அரைத்துப்போட்டு எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் ஒரு வராகனெடை எடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடனே உட்கொள்ள சூலை, குன்மம் முதலான ரோகங்கள் தீரும்.

**சூலை, குன்மத்திற்கு சித்தாமணக்கு வேராதிக் கஷாயம்.**

சித்தாமணக்குக் கூவிளைவேர் சிவதைச் சாறணைக்
கொடிவேலி
ஒத்த பங்காய் திப்பிலி பெருங்காயம் உள்ளி
வசம்பிந்துப்பு
பெத்தார் கழஞ்சிடைநீதகத்துப்பின்னிருநாழி நீர்விட்டு
உத்தே காய்ந்து உழக்காய்க்கொள் ஓதுங்குங்குன்ம
சூலைகளே. (49)

(இ-ள்) சித்தாமணக்கம்வேர் கொடிவேலிவேர்
வில்வவேர் திப்பிலி
சுத்திசெய்தசிவதைவேர் பெருங்காயம்
சாறணை வேர் பூண்டு
வசம்பு இந்துப்பு

இச்சரக்குகளை வகைக்கு ஒரு கழஞ்சு ($1\frac{1}{4}$ வராகனெடை) வீதமெடுத்து, ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காகும் வரை வற்றவைத்து உட்கொள்ளவும். குன்மம், சூலை, முதலான நோய்கள் தீரும்.

### குன்மம், சூலைக்குக் ''கொட்டைக் கரந்தை கஷாயம்''.

கொட்டான் கரந்தை பாவட்டைக் கொடிக்கழல் வேர்
வெள்ளுள்ளி
மட்டா யொவ்வொரு கழஞ்சியிடை வறுக்குங்கொள்ளு
மறுகழஞ்சு
தட்டாய் தகர்த்தங் கிருநாழித் தண்ணிருடனே தான்
காய்ச்சி
முட்டா ருழக்காய்க் கொள்பவற்கு முதிராக் குன்மம்
சூலையுமே. (50)

(இ-ள்) கொட்டைக்கரந்தை பாவட்டைவேர்
கழற்கொடிவேர் பூண்டு

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கொள்ளு—$7\frac{1}{2}$ வராகனெடையும் சேர்த்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச்சுத்தத் தண்ணீர் சின்னப்படி 1 விட்டு, எட்டிலொன்றாக்கி இறக்கவும். இக் கஷாயத்தைப் பருகிவரக் குன்மம், சூலை முதலானவை தீரும்.

### சூலை, குன்மத்திற்குத் திப்பில்யாதி கஷாயம்.

முதிராதிப்பிலி சிறுமூலமுடனுஞ்சுக்குக் கழஞ்சிடையாய
சதிராசெவ்வல்லிக் கொடியாறு கழஞ்சுதகத்துவிருநாழி
நதிதான் விட்டு உழக்காக்கி நளிருஞ் சித்தாமணக்
கெண்ணெய் விட்டுத்
துதியாக் கொள்வீ ராமாகில் துலையுங் குன்ம
சூலைகளே. (51)

(இ-ள்) திப்பிலி சிறுமூலகம்
சுக்கு

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யள்வெடுத்துக் கொள்ளவும். செவ்வல்லிக்கொடி —$7\frac{1}{2}$ வராகனெடை யெடுத்து எல்லாவற்றையுங்கல் லுரலிலிட்டிடித்துச்சுத்த

ஜலம் சின்னபடி 1 விட்டு அடுப்பின்மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்றவைத்து இதனுடன் சித்தா மணக்கெண்ணெய் 1 மேஜைக் கரண்டி அளவிட்டுக் காலை வேளையில் பருகவும்.

4 அல்லது 5 தடவை பேதியாகிக் குன்மம், சூலை முதலான ரோகங்கள் தீரும்.

### குன்மத்திற்குச் "சிறுவழுதலைக் குழம்பு"

வழுதலைப் பழந்தா ஞற்பதுடன் உப்பு நாழி மோர்
குறுணி
பழுதில் லாதே பானையிட்டுப் பானை நெல்லில் மாதம்
வைத்து
விழுதாச் செய்த குழம்பு காசிடையு மிகுத்த பழத்தி
லொன்றருந்திவரப்
பழுதுபட்டே குன்மம் விழும் பார்க்கப் போமோ
பார்தனிலே. (52)

(இ-ள்) வழுதலைப்பழம் (சிறுகத்திரிப்பழம்) —40
உப்பு — சின்னப்படி ½
மோர் — மரக்கால் 1

இவைகளை யொரு பானை தனிலிட்டு, மேலோடுபோட்டு மூடிச்சீலை செய்து நெல்லில் 1 மாதம் புதைத்து வைக்கவும் பின்னர் இதனையெடுத்து, அப்பழத்தில் ஒன்றும், சிறிது குழம்புமாக தினம் 2 வேளை உட்கொள்ளவும். குன்மம் தீரும்.

### சூலை, விப்புருதி, பெருவயிற்றுக்குச் "சிவதை வேர்ச்சூரணம்"

திரிகாந்தத் திரி சடுகு வகைக்கொரு கழஞ்சு
சிவதைவேர் முப்ப திரு கழஞ்சென்ன
முறிவான பழவெல்ல முப்பத்தாறு கழஞ்சுடனே
முன் மருந்து பொடி கூட்டிச் சேர்த்துக் கூட்டி
நெறியான வெருகடி நிதமும் நீ கொள்ள
நீடு மது சூலை விப்புருதி வீக்க

மறியாத பெருவயிறு அட்டபீலிகையு
மகலுமென வேதமுனி அருள் செய்த
நூலே. (53)

(இ-ள்) சுத்திசெய்த காந்தம் —1¼ வராகனெடை
சுக்கு ,,
திப்பிலி ,,
மிளகு ,,
சுத்திசெய்த சிவதை வேர் 40 ,,
பழயவெல்லம் 45 ,,

இவைகளை யொரு கல்வத்திலிட்டு நன்றாக விடித்து வைத்துக்கொண்டு தினம் வொரு கடியளவெடுத்துக் காலையில் உட்கொள்ளவும்.

சூலை, விப்புருதி, வீக்கம், பெருவயிறு, 8வித பிலீகை ரோகங்கள் முதலானவை தீரும்.

**கருஞ்சாதிலவணம்.**

செய்திடு கருஞ்சாதி லவ்ணங்கேள் சித்திர மூலவேர்த்
தோல்
நொய்யவே பேர்ந்துகள்ளிப் பொருக்குட
னிலைகள்ளித்தோல்
வெய்யவெண்ணமுக்கிராவேர்வகைக்கிரண்டிடைதாகத்
தையலே! சாறணைவேர் பதினெட்டுப் பலந்தூள்
தாமே (54)

பலமுள்ள காடியெட்டு மரக்கால் புகட்டிப்
பாங்குடனே ஞெளட்டெரித்தூறி
விலகிட வடித்து வைத்து வெருதான் கருங்கொள்நாழி
சலமிரு நாழிவிட்டு சேர்ந்திடக் காய்ந்திறுத்து
நலமுள்ள உப்பஞ்ஞாழி மண்படால் நாடியே
கரைத்திடாயே. (55)

கரைத்தசா ரத்தினோடு வெள்ளுளி கண்டு பன்னிரு
பலந்தா
னரைத்து நீ கரைத்து யெண்ணெய் அழந்திடு
உழக்கு நெய்யுந்

திறத்துடனுழக்கு ஆட்டு நீரது தெறிந்துழக்கு
மரத்துள கள்ளிப்பாலு மருவிட உழக்கதாமே. (56)

உளம் பெரு புளிப்பொருக்குச் சுட்ட சாம்பல்
ஓமமாந் திப்பிலி கொடிவேலி
வளம்பெற வோரொன் றிருகழஞ்சு
மென்பொடி தூவி வத்தி
தளம் பெறக் காய்ந்து உப்பாயித்
தரித்திடிலிறக்கி வைத்துத்
களங்கமற் றிடவே குன்மங் காசெடை
கொள்ளலாமே. (57)

(இ-ள்) சித்திரமூலவேர்ப்பட்டை கள்ளிப்பொருக்கு
இலைக்கள்ளித்தோல் அமுக்கிராக்கிழங்கு
இவைகள் வகைக்கு 2 பலம்
சாறணை வேர் 18 பலம்

இவ்விரண்டையும் ஒரு கல்லுரலிலிட்டு இடித்துக்காடி 8 மரக்கால் விட்டு தினந்தினம் 1 மரக்கால் வற்றும்படி 8 நாட்களுக்கு எரித்துவரவும் பின்னர் இதனைவடிக்கட்டிக் கொண்டு தனிப் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். கருங்கொள் 1 படியுடன் மறுபடியும் சின்னப்படி 1 தண்ணீர் சேர்த்து ½படியாகும் வரை வற்றவைத்துஅதை யும் முன் கஷாயத்துடன் இறுத்துக்கொள்ளவும். இத னுடன்உப்பு நாழியும்போட்டுக் கரைத்துக்கொள்ளவும்

பூண்டு 12 பலமும் சேர்த்து அரைத்துக் கலந்து, நல் லெண்ணெய் 1 உழக்கு பசுவின் நெய் — ஒரு உழக்கும் சேர்த்து, வெள்ளாட்டுக் கோமியம் 1 உழக்கு, கள்ளிப் பால் ஒரு உழக்கு, இவைகளுடன்,

புளியம் புரணீசுட்டசாம்பல் ஓமம்
திப்பிலி கொடிவேலி வேர்

இவைகள் வகைக்கு 2½ வராகனெடை யளவெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து முன் கூட்டியே மருந்து

வகைகளுடன்சேர்த்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்துக் கெட்டியாக்கி லேகிய பதத்தில் இறக்கவும்

இதில் ஒருவராகனெடையெடுத்துத்தினம் 2 வேளை சாப்பிடக் குன்மங்கள் தீரும்.

### கல்லுப்புப் பற்பம்.

கொள்ளுகல்லுப்பு ஒருபடி வறுத்துச் சதுரக்
கள்ளிப்பால் கூட்டியரைத்து அதிலிட்டு
வில்லு மேல் மூடிமண் செய்து
வேண்டும் வரளிப் புடமிட்டு
புள்ளுமெடுத்து வாங்கியது
பொருந்தி யேழு புடமுற்போல்
கொள்ளு கழஞ்செடை வயற்றுவலி
குன்மம் பீலிகை குறைந்திடுமே. (58)

(இ-ள்) கல்லுப்பு 1படியெடுத்துஒருசட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றி நன்றாக வறுத்து, இறக்கி, அதனுடன் கள்ளிப்பால்விட்டு நன்றாக அரைத்து வில்லைதட்டிக் காயவைக்கவும். இவ்வில்லைகளை வாயகன்ற சட்டியில் வைத்து,மேல் மூடியிட்டுச் சீலைமண் செய்து வேண்டிய அளவு வரளிகளை யடுக்கி அதனிடையில் வைத்துப் புடமிடவும். இவ்வாறு திரும்பத் திரும்பக் கள்ளிப்பால் விட்டுஅரைத்து7 புடங்கள்போடவும் சுத்தமானபற்பம் கிடைக்கும்.

இப் பற்பத்தில் $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துத் தண்ணீருடன் பருகிவர வயிற்றுவலி, குன்மம், பீலிகை முதலான ரோகங்கள் நீங்கும்.

### சிலேத்ம குன்ம குணம்.

சத்தியுடனு யுடல் புரட்டும் தானே நெஞ்சு பிளந்தெரியு
மெத்துமீளை யிருமலுடன் மெய்யுந் திமிராய் வாயூறல்

உற்றே உதரந் தனிலுன்னி ஊசிபோல மிகக்குத்தித்
தித்திக்கும் வாய் கண் தூங்குஞ் சேத்தும
குன்ம மீதாமே. (59)

(இ-ள்) அதிகமான வாந்தியுடன் தேகத்தை முறிக்கும். நெஞ்சில் வலியேற்படும், ஈளை, இருமல் இவைகளேற்படும். உடம்பில் மதமதப்பும் உண்டாகும் வாயில் உமிழ்நீர் ஊறும். வயிற்று வலி யுண்டாகும். வாயில் தித்திப்புச் சுவையும் ஏற்படும். கண்கள் தூங்கி வழியும்.

சேத்ம குன்மத்திற்குச் ''சுண்ட்யாதி கிருதம்''

இதமாஞ் சுக்குக் கொடிவேலி யிதிற்சிறுமூலந்
திப்பிலியும்
விதமாஞ் செவ்விய மெவட்சார மிவையோரொன்
றிருகழஞ்சாய்
பதமாம் பசுப்பால் தனிலரைத்துப் பாலும்நாழி
நெய்நாழி
நிதமாய்க் காய்ச்சிக் கழஞ்செடை கொள் நேரமய்யின்
வலிபாண் டீளையுமே. (60)

(இ-ள்) சுக்கு கொடிவேலிவேர்
சிறுமூலம் திப்பிலி
செவ்வியம் யவச்சாரம்

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து, அம்மியின்மேல் வைத்துப் பசுவின்பால் விட்டு நன்றாக வரைத்துப்

பசுவின் பால் சின்னப்படி $\frac{1}{2}$
பசுவின் நெய் ,,

இவைகளுடன் குழப்பி யடுப்பின் மேலேற்றி நன்றாக எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும். இதில் 1 வராகனெடை யெடுத்துப் பசுவின் பாலுடன் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

கபகுன்மம், பாண்டு, ஈளை, முதலான ரோகங்கள்தீரும்.

## குன்மம், சூலைக்குக் கொன்றை நெய்

பாண்டமிரு கொன்றைவேர் கொடிவேலிவேர்
பருத்தபெருங் குறும்பைவேர் சீந்தில்வட்டு
மூண்டமருக் காரைவேர் பங்கம்பாளை
மூக்கரட்டை படோல்புங்கு வெட்பாலைவேரும்
வேண்டவிரு பலந்தகத்துநீர் பதக்குவிட்டு
மிகவத்தி யிருநாழி வடித்துவாங்கி
மீண்டசிறு மூலமுடன் திப்பிலியு கதிவிடயம்
வெட்பாலை யரியத்தித்திப்பிலி கொள்வாயே. (61)

திப்பிலியுள் முத்தக்காசேல மோமம்
செவ்வியம் சிறுதேக்கு நிலவேம்பதாவரிசி
வெப்பெனவரும் பெருங்காயஞ் சன்னசாலைக்கடுகுடன்
வேலிப்பருத்திவேர் சீரகமும் வெவ்வேர்
நெருப்பியொரு கழஞ்செடைக ளாவின்பா லரைத்து
ஒழிவு தரு நெய்நாழி பால் நாழிவிட்டுத்
துப்பிவிடா தெரித்துநெய் முக்கழஞ்சு தானே
தாங்கொள்ள அய்யிலுள்ள சூன்மசூலை
தறுகாதே. (62)

| | | |
|---|---|---|
| (இ ள்) | கொன்றைவேர் | கொடிவேலிவேர் |
| | பெருங்குறும்பை வேர் (மருள்) | சீந்தில்கொடி |
| | மருக்காரைவேர் | ஆடுதீண்டாப்பாளைவேர் |
| | மூக்கரட்டைச் சமூலம் | பேய்ப்புடல் |
| | புங்கம்வேர் | வெட்பாலைவேர் |

இவைகள் வகைக்கு 2 பலம் வீதமெடுத்து, இடித்துச் சுத்தஜலம் 2 மரக்கால்விட்டு அடுப்பின் மேலேற்றிச் சின்னபடி ஒன்ருகும் வரை வற்ற வைத்து இதனுடன்,

| | |
|---|---|
| சிறுமூலம் | திப்பிலி |
| அதிவிடயம் | வெட்பாலையரிசி |
| யானைத்திப்பிலி | கோரைக்கிழங்கு |
| ஏலக்காய் | ஓமம் |
| செவ்வியம் | சிறுதேக்கு |
| நிலவேம்பு | பெருங்காயம் |
| லவங்கப்பட்டை | கடுகு |
| வேலிப்பருத்திவேர் | சீரகம் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யளவெடுத்து, அம்மியில் வைத்து நசுக்கிப் பசுவின் பால்விட்டு நன்றாக வரைத்து விழுதாக்கிப்

பசுவின் நெய் — சின்னப்படி $\frac{1}{2}$
பசுவின் பால் ,,

இவைகளையுஞ் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கவும்.

இந்நெய்யில் $3\frac{3}{4}$ வராகனெடையளவெடுத்துத் தினம் 2 வேளை காய்ச்சிய பாலுடன் உட்கொள்ளவும்

கபத்தினாலுண்டாகும் குன்மம், சூலை, முதலான ரோகங்கள் தீரும்.

**குன்மம், இருமலுக்கு "மருக்காரைக் கஷாயம்"**

தறுகாத மருக்காரை வெட்பாலைபுங்கு
தழைசீந்தில் கொடி பங்கம் பாளைகொடிவேலி
குறுகாத பேய்ப்புடல் கொன்றைவேர் குரும்பை
கூட்டுசரி கொண்டுபலம் போட்டிருநாழி நீரில்
மறுகாத படிகாய்ந்து உழக்கதாய் வடித்து
வாங்கிவரு திப்பிலிமென் பொடியதாக
முறுகாமல் கொள்வார்க ளய்யில்வரு குன்ம
மொசுமொசுத் தூறுமவர்க்
கிருமலற்றிடுமே. (63)

| (இ ள்) | மருக்காரைவேர் | வெட்பாலையரிசி |
|---|---|---|
| | புங்கம்வேர் | சிந்தில்கொடி |
| | ஆடுதீண்டாப் பாளைச் சமூலம் | கொடிவேலிவேர் |
| | பேய்ப்புடல் | கொன்றைவேர் |
| | குறும்பை (தென்னை) | |

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்துக் கல்லுரலி லிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்றவைக்கவும். இக்கஷாயத்தை யிறுத்தித் திப்பிலிச் சூரணம் ஒரு குத்தளவு போட்டுப் பருகவும். குன்மம், இருமல் முதலான ரோகங்கள் தீரும்.

## இருமலுக்குத் "திப்பில்யாதி கஷாயம்"

இருமலற்றிடு திப்பிலி சிறுமூல மேலமிவை
யொற்ற வேலிப் பருத்திவேர் முத்தம்
பொருமலத்திடு கடுகுரோகிணி விழலரிசி
பேரானைத் திப்பிலி நிலவேம்பு மருக்காரை
கருமறப் பெருங்காய மசமோதகங்
காவுசிறு தேக்குடன் வெட்பாலைவித்து
மருவியிற்றிடை சீரகங் குறும்பை செவ்வி
யமுஞ்சரி கஷாயங் கற்கந்திப் பிலியே. **(64)**

| (இ-ள்) | திப்பிலி | சிறுமூலம் |
|---|---|---|
| | ஏலக்காய் | வேலிப்பருத்திவேர் |
| | கோரைக்கிழங்கு | கடுகரோகிணி |
| | விழலரிசி | யானைத்திப்பிலி |
| | நிலவேம்பு | மருக்காரைப்பழம் |
| | பெருங்காயம் | ஓமம் |
| | சிறுதேக்கு | வெட்பாலையரிசி |
| | சீரகம் | குறும்பை |
| | செவ்வியம் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யளவெடுத்து இடித்து வைத்துக்கொண்டுச் சுத்தஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு எட்டிலொன்ருகும் வரை வற்ற வைக்கவும். இக் கஷாயத்துடன் திப்பிலிக்கல்கம் 1 வராகனெடை கூட்டிப்பருகவும், இருமல் தீரும்.

### வயிற்றுவலி தீர ''ஏரண்டமூலாதிக் கஷாயம்''

கஷாயமிடுசித்தா மணக்கம்வேர் வில்வவேர்
நின்று சாரணைக் கொடிவேலி
விசாரம்விடு சிவதைசிறு மூலம் வேர்க்
கொம்பு கருங் கொள்ளு வெள்ளுள்ளி
வசாரமிடு சரிகொண்டு நீரிரு நாழி
வார்த்துழக் காய்க்காய்ந்து பின்வடித்த நீரிற்
நிசாரமிடு மிந்துப்புத் திப்பிலி பெருங்காயம்
நீபொடிமேற் றூவவலி நிற்குந்தானே, (65)

(இ-ள்) சித்தாமணக்கம்வேர் வில்வவேர்
சாறணைக்கிழங்கு கொடிவேலிவேர்
சுத்திசெய்தசிவதைவேர் சிறுமூலம்
சுக்கு கருங்கொள்ளு
பூண்டு

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துக் கல் உரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்தி விட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்ற வைக்கவும் இக் கஷாயத்தையிறுத்து இதனுடன்,

இந்துப்பு திப்பிலி
பெருங்காயம்

இம்மூன்றையும் வகைக்கு $\frac{1}{2}$ வராகனெடை யெடுத்துச் சூரணித்துக் கஷாயத்துடன் சேர்த்துப் பருகவும். வயிற்று வலிகள் தீரும்.

### லசுனோரண்டத் தைலம்

வலியவெள்ளுள்ளி பலம் நூறு தூணி
நீர்வார்த்து வற்றி நாநாழி பிழிந்துவடித்து
நலியவே சித்தாமணர் கெண்ணெய் நாழி
நற்சுக்குத் திப்பிலிமிளகு கடுகுநெல்லி
தோலியுள்ள தான்றிக்காய் பெருங்காயந் தூது
வளை துவர்ச்சிகைவிழலரிசி கொடிவேலியோமங்
கெலியுள்ள அத்தித்திப் பிலியிந்துப்பு
கிளரும் வகைப் பலங்களரை காய்ச்சிநிதங்
கொள்ளே. (66)

(இ-ள்) பூண்டு—100 பலம் எடுத்து இடித்துச் சுத்த ஜலம் 4 மரக்கால்விட்டு அடுப்பின் மேலேற்றிச் சின்னப் படி 2 ஆகும் வரை வற்றவைத்துச்

சித்தாமணக்கெண்ணெய் -- 5 சேர் சேர்த்து

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுகு |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| பெருங்காயம் | தூதுவளைவேர் |
| பிஞ்சுக்கடுக்காய் | விழலரிசி |
| கொடிவேலிவேர் | ஓமம் |
| யானைத்திப்பிலி | இந்துப்பு |

இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதமெடுத்து இடித்துச் சூரணஞ்செய்து கஷாயம் சேர்த்த எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்துப் பசுவின் பாலுடன் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

### சூலை, சுளுக்கு ''லசுனாதித் தைலம்''

நிதங்கொள்ளு வெள்ளுள்ளி பலநூறு வில்வ
நேரான பெருவாகைக் குமிழ் சிவதை முன்னை

சதங்கொள்ளு பாதிரி கொடிவேலி சாறணை
தன்னொச்சில் சித்தா மணக்குவேர் செவ்வியம்
விதங்கொள்ளு நாகநந்தி புன் முருங்கை மேவு
மாவலிங்கை நிலவாகை வெருபதங் கொள்ளு
கடுதாணி நெல்லியிவை யோரோன்று
பத்துயிடி நீர் தூணி எட்டிலொரு பங்கே. (67)

பங்காக நொச்சியிலைச் சாறுநாழி
பருவேலிப் பருத்தியுடைச் சாறுநாழி
தீங்காகும் வெத்திலைச்சாறு நாழி
தீர்க்கமுடன் கலந்து கற்கமாகக் காய்ந்து
ஈங்காரு திப்பிலி பொடியுந்தூ
விறக்கிக் கழஞ்செடைகொள் ளய்யின்குணந்
தோங்காதே போஞ்சூலை வலியீளையோடுந்
துடராது காண் மானே!
புவியுள்ளோர்க்கே. (68)

(இ-ள்) பூண்டு — 100 பலத்துடன்

| | |
|---|---|
| வில்வம் | பெருவாகைவேர் |
| குமிழ்வேர் | சிவகைவேர் |
| முன்னைவேர் | பாதிரிவேர் |
| கொடிவேலிவேர் | சாறணைவேர் |
| நொச்சிவேர் | சிற்றுமணக்கம்வேர் |
| செவ்வியம் | நாகநந்திவேர் |
| முருங்கைப்பட்டை | மாவலிங்கம்பட்டை |
| நிலவாகைவேர் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிமுள்ளி |

இவைகளை வகைக்கு 10 பலமெடுத்து ஒரு கல்லுரலி விட்டு ஒன்றிரண்டாகவிடித்து, ஒரு பானைதனிலிட்டுச் சுத்தஜலம் 4 மரக்கால் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றுகும் வரை வற்ற வைக்கவும். இக்கஷாயத்தை யிறுத்து அதனுடன்

நொச்சிலைச்சாறு பெரியபடி 1

பருத்தியிலைச்சாறு — பெரியபடி 1
வெற்றிலைச்சாறு ,,

இவைகளையுஞ் சேர்த்து, *சுத்தமான ஆமணக்கெண்ணெய்—பெரிய படி ஒன்றும் விட்டு, திப்பிலிச் சூரணம் 1 பலமும் சேர்த்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும்.

இந்த எண்ணெயைத் தினம் 2 வேளை ஒரு கழஞ்சளவு உட்கொள்ளவும். சூலை, வலி, ஈளை முதலான ரோகங்கள் தீரும்.

### குன்மவலிக்குச் ''செந்தூரம்''

கடுகரோகிணி அரிதாரகெந்தகங் காரீயங்
காந்தம ரைப்பொடி
முடுகுதிப்பிலி மிளகு சுக்குடன் முதிய சாரணை
கடுதாணி நெல்லியும்
அடுகுமரிச்சாற்றில் சமன்கொண்டரைத்துச்செப்பினில்
வைத்துச் சேலைமண்செய்து
கடுகெருப் புடமிட்டுப் பணவெடைகலந்து
வேணிடைகொள்வலி போக்குமே. (69)

(இ-ள்) கடுகரோகிணி சுத்திசெய்த தாளகம்
சுத்திசெய்தகெந்தகம் ,, காரீயம்
,, காந்தம் ,, அரப்பொடி
திப்பிலி மிளகு
சுக்கு சாறணைவேர்
கடுக்காய்த்தோல் நெல்லிவற்றல்
தான்றித்தோல்

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுச் சோற்றுக் கற்றாழைச்சாறு விட்டுநன்றாக 4 ஜாமங்கள்

* செய்யுளில் கூறப்படவில்லை ஆயினும் இதனைக் கூட்டிக் கொள்ளவும்.

அரைத்துச் சிறு சிறு வில்லைகளாகத் தட்டி உலர வைக்கவும். பின்னர் இவைகளையொரு அகலில் வைத்துச் சீலைமண் செய்து, காய்ந்தபின் வேண்டுமளவு வரளிகளையடுக்கி அதற்குள் வைத்துப் புடமிடவும். புடமாறியபின் மருந்துகளை எடுத்து நுணுக்கி வைத்துக் கொள்ளவும்.

இந்த செந்தூரத்தில் $3\frac{1}{3}$ குன்றியளவு எடுத்துத் தேனுடன் குழப்பி உட்கொள்ளவும். வயிற்று வலிகள் தீரும்.

## பஞ்சவித குன்மங்கள், வாயு இவைகளுக்கு ''ஆதண்டைவேர் கஷாயம்''

கூறுமா தண்டைவேர் கூற்வசம்பு வெள்ளுள்ளித்
தேறு கஷாயந் தினங்கொள்ளில் – வீறுடனே
பஞ்சகுன்ம வாயு பறந்திடுமே மெய்யனவே
தஞ்சமுனி யோனுரைக்கத் தான். (70)

(இ-ள்) ஆதண்டைவேர் வசம்பு
பூண்டு

இவைகளைச் சமனெடுத்து (1பலம்) இடித்து, 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து உட்கொள்ள 5 வித குன்மங்கள், வாயு, முதலானவை தீரும்.

## வெட்காய் வேளைக் கஷாயம்.

தான வெட்காவேளை தனியே கஷாயமிட்டு
மான லவணமஞ்சு மதிக்காயங்—கானமுட
நன்றாகக் காய்ச்சி நயந்தாரை........
.... .... .... .... .... .... .... .... .... .... .... (71)

(இ-ள்) வெள்ளைக்காய் வேளையைத் தனியாக எடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்றாக்கி இறுத்து, இதனுடன்

இந்துப்பு பெருங்காயம்

இவ்விரண்டையும் சேர்த்துப் பருகவும்.

**இரத்தகுன்மம், சுவாசத்திற்குச் ''சதாவரிநெய்''**

மூண்டி சுத்துக் காறதேர் மூலமுஞ் சடைச்சிவேரும்
வேண்டிய சதாவரிவை குறுணி கொண்டுகாண்ட
வெண்கரும்பு வாழைக் கிழங்குசெவ் விளநீர்பாலும்
நீண்ட திருவேலிச் சமூலமுஞ் சாரங்கொள்ளே. (72)

கொண்டபின் பசுவின் நெய் குறுணியுஞ் சேர்த்துயோக
மண்டி டுமதுரஞ் சந்த மிலுப்பைப்பூ லாமிச்சேலந்
திண்ட கற்சூரந் திராட்சை திப்பிலி கோட்டங்கல்நார்
மண்டிடு மாஞ்சில் செண்பக மஞ்சளுங்
கிராம்பதாமே. (73)

காராய் கோரோசனைநிமிளைகழஞ்சிரண்டாகக்கொண்டு
நேராக வரைத்து வெந்து நித்தமுக் கழஞ்சு கூட்டச்
சீராக பஞ்சதாரையுங் கதலி பேயன் கனியிற் தின்ன
வாராது ரெத்த குன்ம மறுகிடுஞ் சுவாசம் போமே.(74)

(இ ள்) *சுத்துக்காற்தேர் மூலச் சாறு — சடைச்சிவேர்ச் சாறு
தண்ணீர்விட்டாங் கிழங்குச்சாறு — வெண்கரும்பின்சாறு
வாழைக் கிழங்குச் சாறு — செவ்விளநீர்
பசுவின் பால் — வெட்டிவேர்ச் சாறு

இவைகளை வகைக்கு ஒரு மரக்காலளவெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு அதனுடன்,

---

*காத்தொட்டி (நாகபலா) வேர்ச்சாறாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

பசுவின் நெய் — 1 மரக்கால் சேர்த்து

| | |
|---|---|
| அதிமதுரம் | சந்தனத்தூள் |
| இலுப்பைப்பூ | இலாமிச்சம்வேர் |
| பேரீச்சங்காய் | திராக்ஷைப்பழம் |
| திப்பிலி | கோஷ்டம் |
| கல்நார் | சடாமாஞ்சில் |
| செண்பகப்பூ | மஞ்சள் |
| கிராம்பு | கோரோசனை |

சுத்திசெய்த பொன் நிமிளை

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்து முன் சொல்லிய சாறு ஏதேனுமொன்றைவிட்டு நற்றாக வரைத்துச் சாறு கூட்டிய நெய்யுடன் குழப்பி யடுப்பின் மேலேற்றிப் பதமாகும் வரை (நீர் சுண்டும் வரை) எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும்

தினந்தோறும் இந்நெய்யில் 3¾ வராகனெடை யெடுத்துச் சர்க்கரை, பேயன் வாழைப்பழம் இவை களுடன் சாப்பிட்டு வரவும். இரத்தகுன்மம், சுவாசம் முதலான நோய்கள் தீரும்.

௯. இரத்த குன்மத்திற்கு "முருங்கை நெய்"

வனமுருங்கை யூர்முருங்கை சாறணையிரண்டு
வரு புளிச்சைக்கீரை கொடிவேலிவேருஞ்
சினமுடைய திப்பிலிமூலம் வெள்ளுள்ளி
செவ்வியம் வசம்பிவை பலங்களவை பத்துக்
கனமுடைய புனல் தூணி காய்ந்து நாநாழி
கடுகவடி நெய்படியும் பால்படியுங்கூட
இனமுடையத் தாளீசங் கோட்ட மேல மகில்
தாரமிடு குப்பை திப்பிலி வெள்ளுள்ளி
வசப்போடு கழஞ்சு. (75)

களஞ் சென வேரொன்று கடிந்தரை கரைத்து
முளங்கென வெரித்து முருங்கை நெய் வடித்து
உளங் கொள்வதற்கு வோடுங்குவதி ரத்தக்
களங்கமுட குன்மங் கடந்துவிடு மென்றே. (76)

| | |
|---|---|
| (இ-ள்) காட்டு முருங்கை | நல் முருங்கை. |
| சாறணைவேர் | சிவப்பு புளிச்சைக்கீரை |
| வெள்ளைப் புளிச்சைக்கீரை | கொடிவேலிவேர் |
| கண்டந்திப்பிலி | பூண்டு |
| செவ்வியம் | வசம்பு |

இவைகளை வகைக்கு 10 பலங்கள் வீதமெடுத்து, சிறு சிறு துண்டுகளாகநறுக்கியொருபாத்திரத்திலிட்டு4 மரக்கால் சுத்தஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி பெரிய படி ஒன்ருகும்வரை வற்றவைக்கவும், இதனுடன்,

| | | |
|---|---|---|
| பசுவின் பால் | — | பெரிய படி 1 |
| ,, நெய் | — | ,, |

இவைகளையும் விட்டுத்

| | |
|---|---|
| தாளீசபத்திரி | உயர்ந்த கோஷ்டம் |
| ஏலக்காய் | அகில் கட்டை |
| சதகுப்பை | திப்பிலி |
| பூண்டு | வசம்பு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்து இடித்து முன் கஷாயம் விட்டு, நன்ருக வரைத்துக் கஷாயம் கலந்த நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யை வேளைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் காய்ச்சிய பசுவின் பாலுடன் காலை மாலை உட்கொள்ளக் கொடுக்கவும். இரத்த குன்மங்கள் தீரும்.

## வாயு நூல்.

## குடல் கரிவாயு நிதானம்.

போசனம் பொதுத்துக் காத்துப் பூவையர் புணர்ச்சி
கெடும்
வாசமாம்பனியின்கைகால்வருந்திடும்நடையும்நெஞ்சுள்
பேசின கருமங் கேடும் முன்னர்வுடன் மீது நாவால்
கூசுகார் முண்டனென்னுங் குடல்கரி வாயுவாமே. (1)

(இ-ள்) போசனத்தில் இச்சையிராது. பெண்களிடமும் ஆசையுண்டாகாது. கை கால்கள் சில்லிடும் நடை, நெஞ்சு, இதர வேலைகள் முதலானது தளர்ந்து போம். "இவை குடல் கரிவாயு" லக்ஷணங்களாகும்.

## குடல் வாயு லக்ஷணங்கள்

குடலில்வலிக்குங்காலுழையுங் குமிறுமிரையு மந்திக்கும்
உடலிலடங்கி யொடுங்கிநிற்கு மொருக்காலன்றிப்
புரண்டிருக்கும்
கடலில்தரங்கமதுபோலக் கத்துமுடலே வாதைசெய்யுந்
திடலில் பெருந்தவறை போல் சிதைக்குங்
குடலில் வாயுவிதே. (2)

(இ-ள்) குடலில் வலியுண்டாகும். கால்களில் கடுப்பு ஏற்படும். வயிறு இரையும். பசி மந்தமாகும். வாயு தேகத்தில் சஞ்சரிக்கும், அடிக்கடி புரளுவான், சமுத்திரத்திலுள்ள அலைகளின் ஓசையைப்போல் குடல் இரையும். மிகுந்த வேதனையைத் தரும். இவைகள் "குடல் வாயுவின்" லக்ஷணங்களாகும்.

## தருணவாயுக் குறிகள்.

ஓடியுளைந்து மருகிவரும் ஒருக்கால் விடாம லேகுத்தும்
வாடிக்காயம்வறண்டுவரும்வலுவாய்ப்பத்துமுளைவாகுந்
தேடிப் புணர்ச்சி தனைச் செய்யாச் சிறுநீர் வெளிந்து
கருகிவரும்
நாடிக் காயக் கனப்புவலி நடந்தே நாழில்நல்வகுதே (3)

மண்டிய முதரந்தன்னில் மறைக்குழல் கிளியேகேளாய்!
கொண்டதோ ராகாரத்தைக் குழப்பியே தருமையாக்கு
முண்டிடில் புளித்தெரித்தே உடனுடன் மலமுந்தள்ளும்
விண்டிடில் தருணவாயு வாமென விளம்பலாமே. (4)

(இ-ள்) வாயு தேகத்தில் முழுதும் சஞ்சாரம்செய்து குத்துவலியை யுண்டாக்கும் தேகம் வறண்டு விடும். கடுப்புமேற்படும். ஸ்த்ரீகளிடத்தில் இச்சையிராது மூத்திரம் சுத்தமாகக் கறுத்து வெளியாகும்.

சாப்பாட்டைத் தள்ளும், அதிகம் உட்கொண்டால் புளிற்தேப்பம் உண்டாகும். மலமும் இளகும் இவை "தருண வாயு" லக்ஷணங்களாகும்.

## இதுவுமது.

பத்தியங் கொண்டபோது பலப்பட மலமுந் தள்ளி
நித்தமும் புளித்தேக்கிட்டு நின்று நீர் நெடுவலாகிக்
சத்தியுந் தழன்று காட்டித் தறுகிடா தேப்பமாகி
யத்தனைக் குணமுண்டானு லத்தரு(ண)வாயுவாமே. (5)

(இ-ள்) பத்தியமாக ஆகாரம் புசிக்கையிலேயே அது சீரணிக்காமல் கழிச்சலேற்பட்டுத் தினந்தோறும் புளித்தேப்பம் உண்டாகும் வாயில் நீர் சுரக்கும். வாந்தியேற்படும் ஏப்பமும் உண்டாகும் இவைகளும் 'தருண வாயு'க் குறிகளாகும்.

## கபாலவாயு லக்ஷணங்கள்.

வயித்தை யழக்கி மேல்நோக்கி வாய்நீர் பெருத்துத்
தலைகனத்து
யுயித்தையழத்தித்தலைக்குத்தாய்ஒடியடங்குமுடல்தனி
லதிகப்படவேவருத்திவிக்கு மனந்தல்மிகவே யுண்டாகுந்
குயில் சொற்பயிலுங் கொடியிடையீர்! கொதிக்குங்
கபாலக்குணமிதுமே. (6)

(இ-ள்) வயிற்றை மேல்நோக்கிப் பிடித்திழுக்கும் வாயில் நீரூறும். தலை கனக்கும். தலைவலியும் உண்டாகும். உடல் முழுவதிலும் வாயு சஞ்சரிக்கும். வேதனையைக்கொடுக்கும். மனக்கவலையைத்தரும். இவை "கபால வாயுவின்" குறிகளாகும்.

### குண்டலவாயு இலக்ஷணங்கள்.

கந்திக்கு முதிரந்தன்னில் கதித்திடும் கூப்பிட்டோடும்
விண்டிசை விரும்பித்தின்னில் மேன்படுமுறண்டு
கைபோல்
தெண்டிச் சிதைந்துவுல் பின்னுஞ் சிதைந்துடல்
பரந்தடங்கிக்
கொண்டிபோ லுடலில் குத்துங் குண்டலவாயுவாமே(7)

(இ-ள்) குடலில்வாயுஇரையும் சாப்பிட்டஆகாரம் மேல்நோக்கிவரும். உடல் முழுவதும் வாயு அதிகரித்து கொண்டு மாட்டியிருப்பதைப் போன்ற வலியை யுண்டாக்கும். இவை குண்டலவாயு இலக்ஷணங்களாம்.

### குன்மவாயுக் குறிகள்.

மறந்திடுமன்னந் தன்னில் வயத்தினில் வலியுந்
தோன்றுஞ்
சிறந்திடுங்கஞ்சித்தண்ணீர்தேடிடுங்கொள்ளவொட்டா
விறந்திடாத்துயரந் தோன்று மிருகுதல் களருமானால்
வறண்டுடல் பிரிந்துகொண்டு மல்லிய குன்ம
வாயுவாமே. (8)

(இ-ள்) சாப்பாட்டைக் கண்டால் வயிற்றில் வலியுண்டாகும். கஞ்சி சாப்பிடப் பிரியப்படுவான். ஆனால் உட்கொள்ள முடியாது. அதிகமான வேதனையைத்தரும் உடலில் வரட்சி ஏற்படும். இவை குன்மவாயுக் குறிகுணங்களாகும்.

### அக்கினி மந்தத்தின் குறிகள்

உண்டியிற் பொருமலானு முடல்விழப் பித்தத்தாலுங்
கொண்டுதான் கவிழ்ந்து தண்ணீர் கொதிப்புடன்
வெடிப்பினாலு

மண்டிரே வெளுத்துக் காயமயங்கிட வுலர்தலாலு
மண்டர்தம் வேதம் பேசுமக் கினி மந்தமாமே. (9)

(இ-ள்) சாப்பிட்டால் வயிற்றில் பொருமலேற்படும் உடலில் பித்தம் கெடும் தண்ணீரையடிக்கடிபருகுவான் உடல் வெளுத்துப்போம் சரீரம் இளைக்கும். இவை அக்கினி மந்தக் குறிகளாகும்.

### இதுவுமது.

வந்துமிகுத்துப் பசியெழுப்பும் வயிறுமழத்தி மந்திக்கு
கிந்தைதனிலே நினைந்ததெல்லாஞ் செல்லுங்
கொள்ளவொட்டாது
யிந்தவிதமே செய்தக்கால் இதுவேயக்கினி மந்தமென
வந்தபடியே முன்னோரு மருளிச் செய்ததிதுவாமே. (10)

(இ-ள்) அதிகமாகப் பசியேற்படும். வயிற்றில் அழற்சியுண்டாகும். மந்தமாக இருக்கும். மனதுக் கிசைந்ததையெல்லாம் சாப்பிடத் தோன்றும். ஆனால் உள்ளே செல்லாது. இவைகளும் "அக்கினி மந்த" லக்ஷணங்களாம்.

### "மந்தாக்கினி வாயு லக்ஷணங்கள்"

நின்று பசி மிகுந்து நின்ற வயறளவும்
வேண்டினது தின்ன விரும்புமே—மீண்டுமது
சந்தோஷமாகித் தயவாகி வாந்தி செய்யு
மந்தாக்கினி யென்னும் வாயு. (11)

(இ-ள்) அதிகப் பசியெடுத்து வேண்டிய ஆகாராதிகளைப் புசிக்கத் தோன்றும், அப்படிச் சாப்பிட்டால் அது வாந்தியாகும் இது 'மந்தாக்கினி வாயு' லக்ஷணங்களாம்.

### அக்கினி மந்தக்குறிகள்.

வலமுங் கழியுங் கிறுகிறுக்கும் வறண்டே வயிறு
வலித்துளையும்

சிலமுமிகுந்து விழுந்திருக்குஞ் சிறுகவிரத்தம் வலத்தில்
விழும்
பலமுங் குறைந்து நயனமுகம் பேதப்படவே
வெளுத்துவரு
மலையுங் குணங்களிது கண்டா லக்கினி மந்த மிது
வாமே. (12)

(இ-ள்) கழிச்சலேற்படும். தலை கிறுகிறுப்பு உண்டாகும் தேகம் வறண்டு வயிறு வலி ஏற்படும் மலத்தில் இரத்தம் போகும். பலக்குறைவு உண்டாகும். கண்கள் முகம் முதலான உறுப்புகள் வெண்மையாகும். இவை களும், அக்கினி மந்தக் குறிகளாகும்.

*** பக்கசூரை, சுரச்சூரை இவைகளின் லக்ஷணங்கள்.**

பக்கமாஞ் சூரை தோன்றில் பலப்பட வுதரந் தன்னி
லொக்கவே சுரமுந்தோன்றி யுள்ளபேர்க்குளதே
யென்னில்
மிக்கதோர் சூரையென்று விதனமற்றிருப்பதென்று
தக்கதோர் சுரத்தின் சூரைதானெனப்பேசுவாறே. (13)

(இ-ள்) வயிற்றில் வலியேற்படில் அதைப் பக்க சூரையாகவும், அதனுடன் சுரமும் அடித்தால் சுரச் சூரையாகவும் கூறுகின்றனர்.

**மூலவாயுவின் குறிகுணங்கள்.**

வத்தி வலந்தீயும் மந்திக்கும் மேல்வெளுக்குஞ்
சத்து மிரைச்சல் தணியாது—முத்து
மூலமாம் வாயு வென முன்னோ ருரைத்தபடிச்
சீலமாய்க் காண்போர் தெளிந்து (14)

(இ-ள்) உடல் இளைத்து, மலச்சிக்கலேற்படும் தேகம் வெளுத்துப்போகும். வயிற்றில் இறைச்சலுண் டாகும். இவை "மூலவாயு" லக்ஷணங்களாகும்.

---

குறிப்பு:— * சூரை என்பது சூலை என்பதின் திரிபு.

## பீலிகை வாயுக் குறிகள்.

வலத்தை யிறுக்கு மந்திக்கும் வலுவாயுதரந் தனிற்
புரளும்
பலத்தை குறைக்கு மீரலோடு பெருகக் கனத்துத்
திரண்டேறு
மூலத்து மசனங் குறைந்துவரு மோங்காரித்தேப்ப
மிகப்புளிக்கும்
குலத்தில் பெரிய பீலிகையின் குணத்தைக் கேளீர்
குறியாமே. (15)

(இ-ள்) மலச்சிக்கலேற்படும். வயிற்றில் பசி இராது. குடலில் வாயு சஞ்சரிக்கும். தேகத்தில் பலம் குறையும் ஈரல்குலை பெருத்துவிடும். ஆகாரம் சிறுகச் சிறுகக் குறைவடையும். அப்படிச் சாப்பிட்டாலுந் ஓக்காளம், புளித்தேப்பம் முதலானவைகள் உண்டாகும். இவைகள் "பீலிகை வாயு" லக்ஷணங்களாம்.

## பீலிகைக்கு "லசுனதி கிருதம்"

குறியாயுள்ளிப் பல்நூறு கூட்டுஞ் சாறணை நூறுபலம்
நெறியாயிடித்து நீர்புகட்டி நீரிருதூணி யதுவிட்டுக்
குறியாய் திரிபலைதிரி கடுகொடிவேலி சீரகமிரண்டுஞ்
சிவதையுடன்
கறியாம் பெருங்காய மதிமதுரங் கடுகுரோகிணி
செவ்வியமே. (16)

செம்மையான வெட்பாலைத் தேவதார மிந்துப்பு
நம்மைப் போற்றும் பொன்முசுட்டை நாகநந்தி
யிலவங்கந்
தம்மைக் களைநீ ரேலமுடன் தனியா யிரண்டு
கழஞ்சரைத்துக்
சமமதித்தாவி நெய்யதனில்தானே வடிக்கொள்
பீலிகைத் தரியாதே. (17)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | பூண்டு | — 100 பலம் |
| | சாறணைவேர் | ,, |

இவற்றைக் கல்லுரலிலிட்டுநன்ருகவிடித்து,ஒரு பெரும்

பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 8 மரக்கால் விட்டு, அடுப்பின்மேலேற்றி ஒரு மரக்காலாகும் வரை வற்ற வைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். இதனுடன்,

பசுவின் நெய் — பெரியபடி 1 விட்டு,

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| கொடிவேலிவேர் | சீரகம் |
| சுத்திசெய்தசிவதைவேர் | பெருங்காயம் |
| அதிமதுரம் | கடுகுரோகிணி |
| செவ்வியம் | வெட்பாலையரிசி |
| தேவதாரு | இந்துப்பு |
| பொன்முசுட்டைவேர் | நாகநந்திவேர் |
| கிராம்பு | ஏலக்காய் |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை யளவெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து, கஷாயஞ் சேர்ந்த நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும் இதை வடிக்கட்டிக் கொள்ளவும்.

வேளைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யளவெடுத்துத் தினம் காலை, மாலை காய்ச்சின பசுவின் பாலுடன்உட்கொள்ளவும் பீலிகை தீரும்

## பீலிகைக்குக் கடுக்கா யெண்ணெய்

தரியாக் கடுக்கா யிருநூறு சாரணைபணிரெண்டானபலம்
துரிசாக் கோமூத் ரம்பதக்குச் சுவறக்காய்ந்தங்கிருநாழி
வரியாத்திப்பிலி யைங்கழஞ்சும் மதியுப்பாறு கழஞ்
செடையும்
அரிய மிளகு ஐங்கழஞ்சு அரப்பொடிப் பதகுக்
கழஞ்சாமே. (18)

பத்துநேர் வளஞ் சுத்தியதாய் பண்ணிமூன்று கழஞ்
செடையு
மொத்தச்சுக்கு முக்கழஞ்சுவெள்ளுள்ளி பணிரெண்டு
கழஞ்சுடனே
சுத்தக் காந்த மைங்கழஞ்சு சோமன்காய முக்கழஞ்சு
மேத்தி யரைத்து விளக்கெண்ணெய் விட்டுக் காய்ச்சீர்
பீலிகைக்கே. (19)

(இ-ள்) கொட்டை நீக்கிய கடுக்காய் — 200
(எண்ணிக்கையில்)
சாறணைக்கிழங்கு 12 பலம்

இவைகளை பொருு கல்லுரலிலிட்டு, ஒன்றிரண்டாக விடித்து ஒரு பாத்திரத்திலிட்டுப்பசுமூத்திரம்2மரக்கால் விட்டுச் சின்னப்படி ஒன்ருகும் வரை அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும் இவற்றுடன்,

| | | |
|---|---|---|
| திப்பிலி | $6\frac{1}{4}$ | வராகனெடை |
| இந்துப்பு | $7\frac{1}{2}$ | ,, |
| மிளகு | $6\frac{1}{4}$ | ,, |
| சுத்திசெய்த அரப்பொடி | 15 | ,, |
| சுத்திசெய்த நேர்வாளம் | $3\frac{3}{4}$ | ,, |
| சுக்கு | $3\frac{3}{4}$ | ,, |
| பூண்டு | 15 | ,, |
| சுத்திசெய்த காந்தம் | $6\frac{1}{4}$ | ,, |
| சோமணுதி காயம் | $3\frac{3}{4}$ | ,, |

இவைகளை இடித்து, முன் தயார் செய்த கஷாயத்தை விட்டு நன்ருக வரைத்து,

சுத்தமான ஆமணக்கெண்ணெய் — சின்னப்படி 1 விட்டுஅதனுடன்குழப்பியடுப்பின்மேலேற்றிக்கொதிக்க வைத்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் 1 ஸ்பூனளவெடுத்துத் தினம் 2வேளை காய்ச்சிய பாலுடன் உட்கொள்ளவும். பீலிகை தீரும். 2 தடவைகள் பேதியாகும்.

### வயிறு வலிக்கு "வச்ரவல்லிக் குடிநீர்"

குண்டமதில் பிரண்டையரிந் திட்டுப் புனல் விட்டுக்
குறுகினபின் வீராழி யிறுத்துக்கொண்டு
வண்டனையாய் மிளகுசுக்குத் திப்பிலி யிந்துப்பு
வரிக் கடுக்காய் ரோகிணியு முக்காவேளை
கண்டபடி கழஞ்செடையா யரைத்துக் காய்ச்சிக்
கட்டியது பிழிந்து குடித்துப் பாரீர்
சண்டமென வயிறுவிடும் உதரவாதை தீரு
மதன் குடலில் வலி பொருமல் தாளுந்தானே. (20)

(இ-ள்) பிரண்டை வேண்டிய அளவு (சுமார் 10 பலம்)எடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன்றுகும் வரை வற்றவைத்துக் கொள்ளவும். இக்கஷாயத்தை யிறுத்து அதனுடன்

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| திப்பிலி | இந்துப்பு |
| கடுக்காய்த்தோல் | கடுகரோகிணி |
| முக்காவேளைவேர் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு மூட்டையாகக் கட்டி,முன் கஷாயத்துடன் போட்டு மறுபடியும் கொதிக்க வைத்து, மூட்டையைப் பிழிந்து கஷாயத்தை உட்கொள்ளவும்.

வயிறு பேதியாகும். வயிற்றுவலியுந் தீரும். குடல் வலி, பொருமல் முதலானவைகளும் நீங்கும்.

### பெருவயிறுக் குறிகள்.

கருவியு மந்தம் பத்திக காயமே லுடம்புவற்றிப்
பெருகிய உதரந்தானும் பெருகிடில் பொருமி விம்மி
மருவிய வுண்டிமாறி மலத்தையும் பறிப்பதென்னில்
பெருகிய வுதர தோஷம் பெருவயி றென்னலாமே. (21)

(இ-ள்) வயிற்றில் பசி குறைவடையும். உடம்பு இளைக்கும். வயிறு உப்பிசமாகும். சாப்பாடு சீரண வாகி மலச்சிக்கலேற்படும். இவை "பெருவயிறின்" லக்ஷணங்களாகும்.

**உதரதோஷம் நீங்கத் "திரிகடு எண்ணெய்"**

சுக்கு மிளகு திப்பிலியும் சோமனுப்பு வெள்ளுள்ளி
தக்கக் கடுக்கா யிவையுடனே சாத்திர வேரிக் களங்கநீர்
மிக்கத் தழலே வேப்பெண்ணெய் மீர்க்கக்
கூழ்போலெரித் தருந்தத்
துக்க மறவேயற மலமுந் தோன்றுதுதரத்
தோஷமுமே. (22)

(இ-ள்) சுக்கு மிளகு
திப்பிலி இந்துப்பு
பூண்டு கடுக்காய்த்தோல்

இவைகளுடன் தண்ணீர்விட்டான் சாறு விட்டு, நன்றாக வரைத்து வேப்பெண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு காசளவெடுத்துப் பாலுடனே உட்கொள்ளவும். மலம் வெளி வராமல் அவஸ்தை கொடுக்கும். உதர தோஷங்கள் தீரும்.

**வீரேசனத்திற்குத் "திரிகடு நேர்வாளவாள மாத்திரை".**

சுக்கு மிளகு திப்பிலியுந் துய்யகடுக்கா யிந்துப்பு
மிக்கக் கடுக்க ரோகிணியு மீருமல் கழஞ்சு
வொவ்வொன்று
ஒக்கச் சரிகொண்டு நேர்வாளம் ஒன்றுபடவே
யெலுமிச்சந்
தக்கப்பழத்தால் மிகவுண்டை தரியாதிடுக
வீரேசனமே. (23)

(இ-ள்) சுக்கு மிளகு
திப்பிலி கடுக்காய்
இந்துப்பு கடுகரோகிணி

| | |
|---|---|
| இவைகள் வகைக்கு | — $1\frac{1}{4}$ வராகனெடை |
| சுத்திசெய்த நேர்வாளம் | — $7\frac{1}{2}$ ,, |

இவைகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 4ஜாமங்கள் அரைத்து (முளகளவுள்ள) மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

ஒரு மாத்திரையையெடுத்து வெந்நீருடன் கொடுக்க நன்முகப் பேதியாகும்.

**சுரம், குளிர், இருமலுக்கு ''வாள மாத்திரை''**

இந்தக் கடுக்காய் மிளகு சுக்கு இதுயுங் கடுகரோகிணியு
முந்தநிறையே கழஞ்சுகொண்டு முதிருங்கூரியநேர்வாள
மந்தப்படியே வறுகழஞ்ச அறிய தேசிப் பழச் சாற்றில்
யிந்தப்படியே யரைத்துருண்டை யிடுவாய்
சூரைக்காயளவே. (24)

வெந்நீரிதற்குப் பரிகார மிகுந்து கழியில் பால் கஞ்சி
சொன்னுந்த்ருகா துண்மையிது சுரமுங்குளிரிருமல் பத்து
முன்னேருரைத்த மொழிகண்டு முயன்று கடவுளடி
போற்றி
யின்னேரப்படி செய்தக்கால் இதுபோல்சூல
மெனலாமே. (25)

| | |
|---|---|
| (இ-ள்) கடுக்காய்த்தோல் | மிளகு |
| சுக்கு | கடுகரோகிணி |
| இவைகள் வகைக்கு | — $1\frac{1}{4}$ வராகனெடை |
| சுத்திசெய்த நேர்வாளம் | — $7\frac{1}{2}$ ,, |

இவைகளையொரு கல்லுரலிலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்முக 1 நாள் கையோமல் அரைக்கவும். பின்னர் இதனைச்சூரைக்காயளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

இதிலொரு மாத்திரையெடுத்துக் காலை நேரத்தில் சுத்த ஜலத்துடன் உட்கொள்ளவும். நன்முகப் பேதி

யாகும். அதிகமாகப்போனால் வெந்நீர்சாப்பிடவும் பால் கஞ்சி குடிக்கவும்,

சுரம், குளிர், 10 வித இருமல் முதலான ரோகங்கள் தீரும்.

## வெப்புப்பாவைக் குறிகுணங்கள்.

அப்புங் காத்துமிக வுண்டாமந்தித்திருந்து வுடல்வற்றிக்
கைப்பம் புளிப்பும் மிகத்தேடிக் கனல்போல் மேலில்
வெதும்பல் செய்யு

முப்பும்வயிறு தனிப்புரளு மொருபக்கத்தேதான் கிடக்
வெப்புப்பாவை யிதுவென்று வியனுர் முனிவர் [கும்
விளம்பியதே. (26)

(இ-ள்) வயிற்றில் நீரும் வாயுவும், சேரும் மந்தம் ஏற்படும் தேகம் இளைக்கும் கசப்பு, புளிப்புச் சுவை யுள்ள பண்டங்களைச் சாப்பிட்டால் உடம்பில் எரிச்சல் உண்டாகும். வயிறு உப்பும் ஒரே பக்கமாகத்தான் படுப்பான், இவை "வெப்புப்பாவை"லக்ஷணங்களாகும்

## பேராமத்தின் லக்ஷணங்கள் (Droysy).

வீங்குஞ் சலமு மிக்கக்கோற்கு மிருந்தே பொருமு
முடலெங்கும்

தேங்கும் வாங்கு முகந்தன்னைத் தேடுமறுகித் துயர்
மிகுந்து

தாங்குங்கண்ணுவேல்மூச்சுஞ்சோபையும் பிணிதாபிக்கு
மெங்குமிகவேபேராமமிதுவேசெய்யுங்குணமாமே. (27)

(இ ள்) உடலெங்கும் வீக்கமுண்டாகும் நீர்க்கோர்வை அதிகரிக்கும். பொருமலுண்டாகும் முகம் வாட்டமுறும் வேதனையைத்தரும், மேல்மூச்சு வாங்கும் வீக்கத்துடன் கஷ்டத்தையும் தரும். இவை பேராமத்தின் லக்ஷணங்களாம்.

### வயிறு நீராமை ரோகக் குறிகுணங்கள்.

மார்பின் கீழ் வயறுந்தாளும் வகைபற வீக்கமாகி
நீர்த்த காயம் வற்றி நிறமது வெளுத்து நாவும்
நீர் வத்தித் தண்ணீர்தேடும் நினைவற்றுப்பரிவுங்கெட்டு
வார் கட்டி முலையாய்!சொன்னவயிற்றுநீராமையாமே.

(இ-ள்) மார்பிற்குக் கீழே வயறு தாள் முதலான இடங்களில் வீக்கமேற்பட்டுத் தேகம் இளைக்கும். உடல் வெளுக்கும். நாக்கு வறண்டுபோய் தண்ணீரைத்தேடும் நினைவற்றுப்போம். இவை "வயிற்று நீராமைக்" குறிகள்.

### இதுவுமது.

உடம்புலர்ந்து திமிருண்டாய் உதரம் வீங்கி நாவரண்டு
தடங்கண வெளுத்துப் புறங்காலுந் தடித்து வீங்கித்
தாகமுமாய்
அடந்தே மூச்சுத் தான்தோன்றி யனந்த மிகவு
முண்டாகு
மடந்தாய்! சொன்னோம் நீராமை வருத்துங் குணங்க
ளிவை கண்டாய். (29)

(இ-ள்) உடம்பு இளைக்கும். மதமதப்பு ஏற்படும் வயிறு வீங்கும். நாக்கு வறண்டுபோம். கண்கள் வெண்ணிறமாகும். புறங்கால்கள் தடித்து வீங்கும் தாகம் உண்டாகும். மேல்மூச்சு வாங்கும். இவைகளும் "நீராமையின்" குறிகளாகும்.

### மகோதர நோய் உண்டாகக் காரணங்கள் (Ascitis)

கம்பினுமியால் நெல்லுமியால் சுறிமுள் ளெலும்பால்
மயிரதனல்
அம்பு காடி திறந்ததிலே அரணையட்டை புகுந்ததனுல்
தும்பி தேரை யிடுநீரால் .... .... .... .... ....
வம்பார் குழலி யிடுமருந்தால் மகோதர நோய்கள்
வந்திடுமே. (30)

(இ-ள்) கம்பு தானியத்தின் மேலுள்ள உமி, நெல்லின் உமி, முள்ளெலும்பு, மயிர் முதலானவைகள் குடலில் சேருவதனுலும். தண்ணீர், காடி முதலியவைகளை அஜாக்கிரதையால் திறந்து வைத்து அதில், அரணை, அட்டை இவை விழுந்து இறந்து அதை சாப்பிடுவதாலும், தும்பி, தேரை முதலானவைகள் உடலில் மூத்திரம் விடுவதனுலும், பெண்கள் கொடுக்கும் இடு மருந்துகள் முதலானவைகளிலும் "மகோதர ரோகம்" உண்டாகும்.

## மகோதர நோய்க் குறிகள்.

அங்கமுமடைக்க வீங்கி வுரமெலிந் தாகமாகி
மங்கியே யுதரந்தன்னில் வாயுவுஞ் சலமுங் கோர்த்து
கங்குல் சேர் நேரமாகில் கடியதோர் வாதை பண்ணும்
மங்கைதன் குழலுமாதே மகோதர மென்னலாமே. (31)

(இ-ள்) அங்கங்களில் வீக்கமேற்படும், மார்புக்கூடு வற்றும். வயிற்றில் வாயுவும், நீரும் சேரும். இரவு நேரங்களில் வேதனை மிகத்தரும். இவை "மகோதரக்" குறிகளாகும்.

## மகோதரத்தின் அஸாத்தியக் குறிகள்.

மேலோடு வயறுமூதி மிகைக்கவே வீங்கும் போது
ஊசி போலுதர நொந்து உதரமுங் காலும் வீங்கிப்
பாசிபோல் கண் சிவந்து பசுந்துடல் நீலம் போலாய்க்
(கூறிடவேண்டா மிந்தக் குணமிது கண்டபோதே)
சாவதே திண்ணமென்று சடக்கென
விரைந்துபோமே. (32)

(இ-ள்) உடம்புடன் வயிறும் வீங்கும். வீக்கம் அதிகரிக்க அதிகரிக்க ஊசி குத்துவதைப் போன்ற வலி ஏற்படும். கால்களும் வீங்கும் கண்கள் சிவப்பாகும் உடல் நீலமாகும் இக்குறிகளேற்படில் நோயாளி இறப்பது நிச்சயம்.

### மகோதரக் குறிகளில் வேறு சில

மகோதர மானபோதே வாயுவு நேரே சூடா
மகோதரமான டின்னும் வயிற்றடி புறந்தாள் வீங்கு
மகோதரமானபோது வாடியே யூதி நிற்கு
மகோதர மானபோது வந்திடுங் குணங்கள்தானே (33)

(இ-ள்) வாயு சூடாகும் அடி வயிறு, புறந்தாள் முதலான இடங்கள் வீங்கும். உடல் வாட்டமுற்றுவீங்கி விடும். இவைகளும் மகோதரக் குறிகளாகும்.

### மகோதரத்திற்குச் ''சாறணையாதிக் கஷாயம்''

சாத்துஞ் சாறணை யெண்பலமாந் தளருஞ்சங்கு
முப்பலமாம்
போத்துஞ் சிவதை வக்கணத்தி புங்கு புன்னை
யெழு பலமாம்
வேத்துங்கள்ளி குருஞ்சாகம்வீழி கடுக்கா யெண்பலமாம்
தேச்சுக் காய்ச்சிக் குழம்பாக்கிச் சிறுகவெடுத்துத்தின்
பீராய்
மூச்சுப்போக்கு மகோதர முழுதுந் தசுகியும்
பேர்ந்திடுமே. (34)

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சாரணைக்கிழங்கு | 8 பலம் |
| | சங்கம்வேர் | 3 ,, |
| | சுத்திசெய்தசிவதைவேர் | 7 ,, |
| | வக்கணத்தி | 7 ,, |
| | புங்கு | 7 ,, |
| | புன்னை | 7 ,, |
| | கள்ளிக்கொழுந்து | 8 ,, |
| | வீழிவேர் | 8 ,, |
| | கடுக்காய்த்தோல் | 8 ,, |

இவைகளையொரு கல்லுரலிலிட்டு நன்ருக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு8மடங்கு சுத்தஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்து இறுத்து ஒரு பாத்திரத்திலிட்டு, மறுபடி அது நன்ருகக் குழப்பமாகும்

வரை வற்றவைக்கவும். இக்குழம்பில் ஒரு காலணு எடை யெடுத்துத்தினம் 2 வேளை உட்கொள்ளவும். மகோதரம் நீங்கும்.

### நீராமை, மகோதரம் முதலியவைகளுக்குப் ''புங்கம்பட்டைக் கஷாயம்''

புங்கந் தோல்லகத் தோல்வெட்டிப் பொருந்தும் புரத்
தோல்தனைப் போக்கி
தொங்கச் சற்றே நையிடித்துத் தோன்றத்துலா மொரு
பானையிட்டு
ஏங்கு முள்ளியோ டைம்பலமாம் வேண்டுஞ் சுக்கு மிளகு
திப்பிலியும்
பொங்கும் புரசு சவுக்கார மிவைதானே ரொன்றிரு
கழஞ்சே. (35)

மிஞ்சவரைத்துக் கரைத்துக் கூட்டி வெச்சென்னும்
பதந்தனிலே
எஞ்சு மெருமைத் தழங்கொடியு மிதுவே கள்ளிப்
புறந்தோலும்
கொஞ்சும் புங்கம்புறந்தோலுங் கூறுங் கொன்னைப்
புறந்தோலும்
மிஞ்சவெட்டிச் சுட்டுமிகவு மாழாக்கு வகைக்கொரு
சாம்பல் கொள்ளே. (36)

மோஞ்சு சீரகம்கருஞ்சீரகம் முன்னேயுழக் கோரொன்று
செஞ்சொல் நெல்லுக்குள் புழுக்கிவேறு கலக்கிக்
குடித்துவிடில்
பிஞ்சுமெள்ள விளிந்திடுமே பீலிகை நீராமை யிதுவுமது
துஞ்சு மெள்ள மகோதரமும் தோன்றுதிதுவுந்
தோன்றுதே. (37)

(இ-ள்) புங்கம்பட்டையின்மேல் தோலைச்சீவிவிட்டு உள்ளேயிருக்கும் பட்டையில் 1 துலாம் எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பானையிலிட்டு அதனுடன்பூண்டு 50 பலம் சேர்த்து,

| | |
|---|---|
| மிளகு | சுக்கு |
| திப்பிலி | புரசம்பட்டை |
| சவுக்காரம் | |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$வராகனெடையெடுத்து இடித்து அதனுடன் சேர்த்து இவைகளுடன் 18 மடங்கு சுத்த ஜலம் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். பின்னர் இக்கஷாயத்துடன்,

| | |
|---|---|
| எருமைத்தழங் கொடிச்சாம்பல் | 1 உழக்கு |
| கள்ளியின் மேல்தோலைச் சுட்டசாம்பல் | ,, |
| புங்கம்பட்டையின் சாம்பல் | ,, |
| கொன்னைப்பட்டைச் சாம்பல் | ,, |
| சீரகம் | ,, |
| கருஞ்சீரகம் | ,, |

இவைகளைச் சேர்த்துக்கொண்டு புழுங்கல் நெல்லுக்குள் வைத்துப் புழுக்கவும். இக்கஷாயத்தில் தினந்தோறும் 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை உட்கொள்ளவும். பீலிகை, நீராமை, மகோதரம் முதலானவைகள் நீங்கும்.

## மகோதரம், பொருமல் முதலியவைகளுக்குச் "சாணக நெய்"

சாணகப்பால் கோமிய நெய்யோரொன்று
நாணகஞ் சிவதை நாகரன் திரிபலைசமனுக
காண கள்ளிப் பாலுழக்குக் கதிக்க வெந்து தானுகரில்
பூணுநின்ற மகோதரம் பொருமலதுவும்
போய்விடுமே. (33)

(இ-ள்) சுத்தமான அப்போதேயிடப்பட்ட

| | | |
|---|---|---|
| சாணியின் பால் | — | 1 படி |
| பசுவின் நெய் | — | ,, |
| பசுவின் மூத்திரம் | — | ,, |

இவைகளை யொன்றாக்கி,

சுத்திசெய்த சிவதை வேர்

சுக்கு
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
தான்றிக்காய்த்தோல்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$வராகனெடையளவெடுத்து மூத்திரம் விட்டு நன்முகவரைத்து, முன்சொன்ன நெய்யுடனே குழப்பிக் கள்ளிப்பால் ஒரு உழக்கும்கூடவிட்டு, அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சி வடிக்கவும்.

இந்நெய்யில் $1\frac{1}{4}$வராகனெடையளவெடுத்துத்தினம் இருவேளை காலையிலும் மாலையிலும் உட்கொண்டுவர மகோதரம், பொருமல் முதலான நோய்கள் தீரும்.

## நீர்க் கோர்வைக்கு வாளக்குழம்பு

குறுணிக் கோமியத்தி லறுபது நேர்வாளமரைத்துக்
குழம்பாக்கி
மனுவத்த வேர்க்கொம் புகடுக்காய் மற்றும்
வெள்ளுள்ளி வெங்காரம்
யிறுகப் பதமாய்க் காய்ச்சியிவை தாஞேருபாக்
களவுகொள்ள
நிறுவித்த நீர்க்கோர்வை நெருப் பிலிடுதூருய்
நீக்கிடுமே. (39)

(இ-ள்) சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு 60 எண்ணிக்கையில் எடுத்து ஒரு அம்மியின் மேல்வைத்துப் பசுவின் மூத்திரம் (1சேர்) விட்டு நன்முக வரைத்துக் குழம்பாகச் செய்துகொண்டு, அதனுடன்,

| | |
|---|---|
| சுக்கு | கடுக்காய்த்தோல் |
| பூண்டு | வெங்காயம் |

இவைகளை வகைக்கு 1 வராகனெடையெடுத்துத் தூள் செய்து போட்டு, அடுப்பின்மேலேற்றி இறுகியபதத்தில்

இறக்கவும். இக்குழம்பில் ஒரு பாக்களவெடுத்து உட்கொள்ளவும். நீர்க்கோர்வைகள் தீரும்.

குறிப்பு:- இம்மருந்துபேதியாகும்குணமுள்ளதால்நிதானித்து உபயோகிக்கவும்.

## சித்திரமூலக் கிருதம்

கானகத்திற் கொடிவேலி பலம்நூறு தூணி
கதித்தபுன லெண்குறுணியெனக்காய்ச்சு
தானதற்குத் தயிர்குறுணி காடி நாகாழி
தன் பசுவினெய் படியுஞ் சாரித்துக் கற்க
மானதிப் பிலிமூலம் திப்பிலி செவ்வியம்
மதன் சத்தி யெவச்சார மெவச்சாரஞ் சுக்கு
மானனையாய்! மஞ்சள் மர மஞ்சள் வெங்கா
ரம்லரு பஞ்சலவணச் சீரகத்தோ
டெனபடி மிளகுவகைக் கொருகாசெடை
யரைத்தெரித் திடமகோத ரமிதற்கே. (40)

(இ-ள்) கொடிவேலிவேர் 100 பலம் எடுத்துச்சிறு சிறு துண்டுகளாகக் கைப்படாமல் வெட்டியொரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 8 மரக்கால்விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாகும்வரை வற்றவைக்கவும். இதனை வடிக்கட்டி, அதனுடன்,

| | |
|---|---|
| தயிர் | — 1மரக்கால் |
| காடி | — பெரியபடி 1 |
| பசுவின் நெய் | ,, |

இவைகளைக் கலந்து கொள்ளவும். பின்னர்,

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | திப்பிலி |
| செவ்வியம் | சத்திச்சாரம் |
| எவச்சாரம் | சுக்கு |
| மஞ்சள் | மரமஞ்சள் |
| வெங்காரம் | இந்துப்பு |

வளையலுப்பு    சோத்துப்பு
உவர்மண்ணுப்பு    கறியுப்பு
சீரகம்    மிளகு

முதலிய சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதம் எடுத்துக் காடி விட்டு நன்ருக அரைத்துக் கஷாயம் கூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதத்திலிறக்கி வடிக்கட்டவும்.

இந்நெய்யில் $\frac{1}{2}$ தோலா எடுத்துத் தினம் 2 வேளை காய்ச்சிய பசுவின் பாலுடன் உட்கொள்ளவும் மகோதரங்கள் தீரும்.

### மிசுக்கித் தைலம்

சிவதை திரிபலை கொன்னைசெம் புளிச்சைவேர்
பாதிரிகாட் டாமணக்கு
உவமையாயின் கூவிளையு முன்னையுமுயர்ந்த
முட்குமிழ் தூதளைமுள்ளி
நவைகொள் சாறணை தழுதாழை வாகைவேர்
நண்ணுகண்டங் காலியின்வே
ரிவைதன்னே டொருபலங்க ளிருதூணி வெந்த
நீர்குறுணியுங் காய்ந்தே, (41)

காய்ந்தேரண்ட வெள்ளெண்ணெய் நெய்யுடன்
கதித்தபாலும் வகைக்கொரு நாழியாய்
மாய்ந்தவே யனல்வைத்திடக் காய்ச்சி
வடிதெடு குடித்திடு தேனுடன்
போந்ததோர் வலிகுன்ம மகோதரம்
பொறுக்குமே யிது பூண்டவியாதியை
ஆய்ந்த வாகடஞ் செய்யும் மருந்தே
வாம் மிசுக்கித் தைலத்த னுட்பமே.

**(இ-ள்)** சுத்திசெய்த    கொன்னைப் பட்டை
சிவதைவேர்

| | |
|---|---|
| செம்புளிச்சைவேர் | பாதிரிவேர் |
| காட்டாமணக்கம் வேர் | வில்வவேர் |
| முன்னைவேர் | குமில்வேர் |
| தூதுவளைவேர் | முள்ளிவேர் |
| சாறணைக்கிழங்கு | தழுதாழைவேர் |
| வாகைவேர் | கண்டங்கத்திரிவேர் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 4மரக்கால் விட்டுஅடுப்பின்மேலேற்றிஒருமரக்காலாகும் வரை வற்றவைக்கவும் இதனுடன்,

| | |
|---|---|
| சுத்தமான ஆமணக்கெண்ணெய் — | பெரியபடி 1 |
| சுத்தமான நல்லெண்ணெய் | ,, |
| பசுவின் நெய் | ,, |
| பசுவின் பால் | ,, |

இவைகளையுமொன்று சேர்த்து ஒன்றுகலந்து அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும்.

இந்தஎண்ணெய் ஒருஸ்பூனளவெடுத்து அதனுடன் தேன் சிறிதுவிட்டுத் தினம் 2 வேளை காலையிலும் மாலையிலும் உட்கொண்டு வரவும்,

வலிகுன்மம் மகோதரம் முதலான நோய்கள்தீரும். இதன் பெயர் "மிசுக்கித் தைலம்" ஆகும்.

# அகஸ்தியர் இரண்டாயிரம்

## இரண்டாவது பாகம்

**பெரும்பாடு, எலும்புருக்கிக்கு "நறுவிலி எண்ணெய்"**

நறுவிலி நாவலத்தி நற்றெங்கின் பாளையிச்சில்
தருகிடா வரசால் மரவில்வச் சதைப்பட்டைச்
சாறோர் நாழி

குறுகிய சங்கின் வேரின் குலவிய சாறுநாழி
முறுகிய புளியாரைச்சா றோடுமுதல்நீர் கொள்ளே. (1)

முதல்தருபெருமரத்தோல் முத்தவெட் பாலைப்பட்டைச்
சதவிய கடுக்காய்க் காசுதன்வெள்ளைக் குங்கிலியனுகம்
பதவிய சாதிக்காய்சாதிப் பத்திரிபலமது
காலாய்க்கொண்டு

ளிதமுட னரைத்துயெண்ணெய் நேரிருநாழி
கொள்ளே. (2)

நேரது கலந்துசாறு கற்கமுயெண்ணெய் தானும்
பார்பெரு பதமாய்க் காய்ச்சிவடித்ததுஉள்ளேகொள்ள
நீர்விடு மேகம்வெள்ளை நிதம்பத்தி னெரிவுபாளம்
பெறபெரும் பெரும்பாட்டோடு பிணிபல
மாறுமன்றே. (3)

(இ-ள்)

| | |
|---|---|
| நறுவிலிப்பட்டை | நாகப்பட்டை |
| அத்திப்பட்டை | தென்னம்பாளை |
| இச்சிப்பட்டை | அரசம்பட்டை |
| ஆலம்பட்டை | வில்வப்பழச்சதை |
| வில்வப்பட்டை | சங்கம்வேர் |

இவைகளின் சாறு வகைகள் வகைக்குச் சின்னப்படி $\frac{1}{2}$
புளியாரைச் சாறு ,, $\frac{1}{2}$

இவைகளை யொன்றாகக் கலந்து,

| | |
|---|---|
| பெருமரத்தோல் | வெட்பாலைப்பட்டை |
| கடுக்காய்த்தோல் | காசுக்கட்டி |

வெள்ளைக்குங்கிலியம் சாதிக்காய்
சாதிப்பத்திரி

இவைகளை வகைக்கு $\frac{1}{4}$பலம் வீதமெடுத்து இடித்து முன் சொன்ன சாறு ஏதேனுமொன்று விட்டு நன்ருக வரைத்துச்

சுத்தமான நல்லெண்ணெய் பெரியபடி 1 விட்டு, எல்லாவற்றையு மொன்ருகக் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு சிறு தேக்கரண்டி யளவெடுத்து உள்ளே கொடுக்கவும் பிரமேகம்,வெள்ளை ஆசனஎரிவு பெரும்பாடு முதலான பற்பல நோய்களுந் தீரும்.

### எலும்புருக்கி, உதிரமேகத்திற்கு
### "அத்திப்பட்டையாதிக் கஷாயம்"

அத்திப்பட்டை வேப்பீர்க்கு ஆகுநாவல் மாவீர்க்கு
முத்தக்காசு மதுரமுடன் முந்திரிகைப்பழ மிருவேலி
சித்தமான வதிவிடையம் செம்பரத்தம்பூ விருகழஞ்சாய்
வத்திக் கஷாயஞ் சர்க்கரை தேன்மரு வெலும்புருக்கி
யுதிரமேக மறிபடுமே. (5)

(இ-ள்)

அத்திப்பட்டை வேப்பீர்க்கு
நாகப்பட்டை மாவீர்க்கு
கோரைக்கிழங்கு அதிமதுரம்
திராக்ஷைப்பழம் வெட்டிவேர்
அதிவிடயம் செம்பரத்தம்பூ

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடையளவெடுத்து இடித்துச் சுத்தஜலம் 8 மடங்கு விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகும் வரை வற்றவைத்துக் கஷாயத்தை இறுத்துச் சர்க்கரையும் தேனும் சேர்த்துப் பருக.

எலும்புருக்கி, உதிரமேகம் முதலானவை தீரும்.

## எலும்புருக்கி, மேகம், பெரும்பாட்டிற்குக் ''கட்டுக்கொடி மருந்து''

கட்டுக்கொடியிலைச் சாறுடனே கலந்து பசும்பால்
சர்க்கரையுந்
தட்டுப்படாதே நாளெட்டுத் தானே குடிக்கவல்லீராய்
முட்டுப் படுத்து மெலும் புருக்கி முதிர்ந்த மேகம்பெரும்
மட்டுப் படுங்காண் மானேகேள் ம்தத்தீர் கைப்புப்[பாடு
புளிதானே (5)

(இ ள்) கட்டுக்கொடியிலைச் சாற்றுடன் பசுவின் பாலும் சர்க்கரையுமிட்டுத் தினந்தோறும்காலை நேரத்தில்குடிக்கவும். இவ்வாறு 8 நாட்கள் பருகிவர

நாட்பட்ட பிரமேக ரோகங்கள், எலும்புருக்கி, பெரும்பாடு முதலானவை தீரும்.

**பத்தியம்:**

கசப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும், புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்கவும்.

**மேகம், பெரும்பாட்டிற்கு ''இலந்தைச்சாறுமருந்து''**

மாற்றீ ரிலந்தைச் சாறுழக்கு வடித்தேயாவின் பால்
கலந்து
ஆற்றயிலவம் பிசின்திப்பிலி அதன்மேல் தூவிக் குடிப்
பீராய்
தோற்றுதிதற்கு எலும்புருக்கி நுளிசேர் மேகம் பெரும்
பாடு
பாற்றல் குணமாகும் பத்தியமாம் படியேநடந்து
கொள்வீரே (6)

(இ-ள்)

இலந்தைப்பட்டைசாறு 1 உழக்குடன் பசுவின்பால் விட்டு, அதனுடன்

இலவம்பிசின் திப்பிலி $1\frac{1}{4}$ வராகனெடையும்

தூள் செய்து தூவிப் பருகவும்.

எலும்புருக்கி, பிரமேகங்கள், பெரும்பாடுமுதலான ரோகங்கள் தீரும்.

இதற்கும் கசப்புச் சுவையுள்ள பண்டங்களையும், புளிப்பையும் நீக்கிப் பத்தியமாயிருக்கவும்,

**ரத்தமேகம், பெரும்பாடு, மாங்கிஷவடைப்பு கல்லடைப்பிற்கு வெள்ளரிக்காய்ச்சாறு மருந்து.**

வெண்காரப்பொரி யெலிப்புழுக்கை வெள்ளரிக்காயி
ஞுள்ளிட்டு
மண்சீலை தன்னால் பொதிந்து காந்த லதனில் புதைத்
தெடுத்து மத்தித்து
நண்பா நீரேவடித் தருந்த ரத்தமேகம் பெரும்பாடு
மாங்கிஷ வடைப்பு
பண்பாங்கல்லடைப்புப்பாரீரேரெரிவும்பறந்திடுமே (7)
(இ-ள்)

| | |
|---|---|
| வெங்காரப் பொரி | $1\frac{1}{4}$ வராகனெடை |
| எலிப்புழுக்கை | ,, |

இவ்விரண்டையும் நன்றாகத் தூளாக்கி ஒருமுத்திய வெள்ளரிக்காயை குடைந்து அதற்குள்ளடைத்துச் சீலை மண் செய்து காயவைத்து, உலர்ந்தபின் அதை உமிக் காந்தலிற்குள் வைத்துச் சுட்டுவிடவும்.

பின்னர் அக்காயை யெடுத்து அம்மியில் வைத்து நசுக்கிச் சாறு பிழிந்து கொண்டு அதனைப் பருகவும்.

ரத்தமேகம், பெரும்பாடு, சதையடைப்பு, கல்லடைப்பு எரிச்சல் முதலானவைகள் தீரும்.

**கெற்பநிலையுடன் ஏற்படும் ரத்தரோகக் காரணங்கள்.**

வஞ்சிகுறை தன்னாலு மருந்தீடுதன்னாலு
மொஞ்சிய காயவெட்கை யுறுதிசெய் தெண்டிப்பாலு
மஞ்சவே பிள்ளைபெற்று அவதரித்திருந்ததாலும்
மஞ்சவே கெற்பகூரைக் கெடுக்குமே யிரத்தரோகம் (8)

(இ-ள்)

ஸ்திரீகளின் கவனக் குறைவினாலும். மருந்தீடு(கர விஷம்) முதலியவைகளினாலும். உடல் மிகவும் இளைத்துப் போவதாலும் அடிக்கடி பிள்ளைகள் பிறப்பதாலும், கெர்ப்பசூலையுடன் ரெத்தரோகமும் உண்டாகும்.

## இரத்த ரோகம் அல்லது பெரும்பாட்டின் லக்ஷணங்கள்

*இரத்த மொருக்கால் தகையாமல் லெனவெ யோடு
போல்வீழுந்
திருக்கும் சிரத்தில் கனப்புமுண்டாகுத் திதமாய்சிதகி
(றி) விழுமிரத்தம்
சாத்தரெத்த ரோகமெனச் சொல்லும்
நல்லவல்லோரே (9)

(இ-ள்)

இரத்தம் அதிகமாகக் கட்டிக்கட்டியாக வீழும் தலை வலி உண்டாகும் இரத்தம் சிதறிச்சிதறியும் வீழும்.

## பெரும்பாட்டிற்கு மருந்து

வெளிச்சைப்பிசினி மரமஞ்சள்மிளகுசுக்கு பெருங்காயம்
அழுத்த முடையசதகுப்பை அதனிலவங்கம்சீ தாரி
வழுத்தமொழியக்கிராம்பினுடன் மருவுஞ்சாதிக்காயிஞ்சி
பழுத்ததாம வசுவாசிபரு நேர் வாளமுதல்சரக்கே (10)
குறிப்பு:— இம்மருந்து முடிவடையவில்லை.

## பெரும்பாட்டிற்குச் சதாவரிக்களி

வந்தசதாவரி வாங்கியது நற் தண்டுலத்தைச்
சந்தமுடன் மாவாக்கித்தான் களியாய்-கந்தமுடன்
தாலவெல்லம் நல்லெண்ணெய் தன்னில் பெரும்பாடு
கோலமுடன் போமிதென்னக் கூறு (11)

* ஒரு சீர் குறைவாகவுள்ளது.

(இ-ள்)

தண்ணீர்விட்டான்கிழங்கைக்கொண்டுவந்து இடித்துச் சாறு பிழிந்து அதில்அரிசிமாவையிட்டுக்களியாகக் கிண்டிவைத்துக் கொள்ளவும், இதனுடன் பனவெல்லமும், நல்லெண்ணெயும் சேர்த்து உட்கொள்ளப்பெரும்பாடுகள் உடனே தீரும்.

## மஞ்சிட்டி நெய்

மஞ்சிட்டி சந்தங் கோட்டமரமஞ்சள் திரிபலாதி
விஞ்சுகஸ் தூரிமஞ்சள் மேவிடு தகரம் ஓமம்
வஞ்சியே கடுகரோகணி மதுரமுஞ் சுக்கு காய
மஞ்சவே அச்வகந்த மாசந்தி வேருமாமே. (12)

அந்நாயுருவி பாலைவேர் அரைத்து நாற்கழஞ்சுவீதம்
தானும்நா நாழிப்பாலுந் தனித்தாநா நாழிநெய்யுங்
கானலில் மூன்றுநாள் கலந்தூறி வடித்துக் கொள்ள
மானகூ தகத்துமா தம் வருரெத்த மத்திமேக மற்றுடன்
கெர்பமாமே. (13)

(இ-ள்)

| | |
|---|---|
| மஞ்சிஷ்டா | சந்தனத்தூள் |
| கோஷ்டம் | மரமஞ்சள் |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| நெல்லிவற்றல் | கஸ்தூரிமஞ்சள் |
| கிரந்திதகரம் | ஓமம் |
| கடுகரோகிணி | அதிமதுரம் |
| சுக்கு | பெருங்காயம் |
| அமுக்கிராக்கிழங்கு | ஆசந்திவேர் |
| நாயுருவி வேர் | பாலைவேர் |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்து இடித்துப் பசுவின் பால்விட்டு நன்றாக வரைத்துப்

| | |
|---|---|
| பசுவின் பால் | பெரியபடி 1 |
| ,, நெய் | ,, |

இவ்விரண்டுடன் சேர்த்துக் குழப்பியடுப்பின் மேலேற்றிச் சிறுகச் சிறுக எரித்து 3 வது நாள் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யில் $1\frac{1}{4}$ வராகனெடையளவெடுத்துத்தினம் 2 வேளை, பசுவின் பாலுடன் உட்கொள்ள தீட்டின் போது ஏற்படும் அதிகமான இரத்தப் போக்கு, பின் மேகம் முதலானவை தீரும்.

## எலும்புருக்கி, மேகம், ரத்தபித்தத்திற்கு ஆடாதோடை நெய்

ஆடாதோடை கம்பந்திராய் புடர்கொத்தான்சாறு
நாஞழி
தேடாமதுர மிருகழஞ்சு சேருங்கோஷ்ட முற்கழஞ்சு
வாடாலாமிச்சம் நாற்கழஞ்சுவருமுந்திரிகைக்கனியஞ்சு
நீடாக்குரும்பை முக்கழஞ்சு நீலோத்பலமுமுக் கழஞ்சே
(14)

பலமுடைய மருந்தரைத்துப் பாலும் நெய்யும் கூட்டி
நலமுடனேஅனலூறிநாலாநாள் வடித்துக்குலமுடையீர்
இருநேரங் கொண்டு மெருகிட்டு அலமுருக்கி
மேகரத்தப் பித்தமறு மென்றே (15)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆடாதோடையிலை | கம்பந்திராய் |
| புடல் | கொத்தான் |

இவைகளின் சாறு வகைக்கு பெரியபடி 1 எடுத்து ஒன்று கலந்து

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | $2\frac{1}{2}$ | வராகனெடை |
| உயர்ந்த கோஷ்டம் | $3\frac{3}{4}$ | ,, |
| இலாமிச்சம்வேர் | 5 | ,, |
| திராக்ஷப்பழம் | $6\frac{1}{4}$ | ,, |
| குரும்பை | $3\frac{3}{4}$ | ,, |
| நீலோத்பலக்கிழங்கு(அல்லி) | $3\frac{3}{4}$ | ,, |

இவைகளை முன் சாற்றில் ஏதேனுமொன்றை விட்டு நன்ருக வரைத்துப்

பசுவின் பால் பெரியபடி 1
பசுவின் நெய் ,,

இவைகளுடன் குழப்பியடுப்பின் மேலேற்றி மூன்று நாட்கள் சிறுகச் சிறுகக் காய்ச்சி நாலாவது நாளன்று பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யைத்தினம் $1\frac{1}{4}$ வராகனெடை வீதம் காய்ச்சிய பாலுடனே 2 நேரங்கள் உட்கொள்ளவும்.

எலும்புருக்கிநோய், மேகரோகம், இரத்தபித்தம் முதலான நோய்கள் நீங்கும்.

### வாதபித்தம், எலும்புருக்கிக்குச் "செங்கழுநீர் எண்ணெய்"

செங்கழுநீர் தாமரை சேர்ந்த நெய்தலாம்
யுலவைகளோரொன்று ஆனபலமேழிடித்துப்
பொங்கந் ரெண்குறுணி புனல்காய்ந்து நாநாழி
அங்கதனில் கடுதான்றி நெல்லியுடன்கூட்டே. (16)

நெய்தலுடனும்பல்நெங்கழுநீர்நீண்டதாமரைக்கிழங்கு
நெய்தேல மிலவங்கம் நுகர்சந்த மதிமதுரம்
கொய்த வெட்டிலாமிச்சங் குறும்பைசிறு நாகமுடன்
செய்த செண்பகங் கோட்டஞ் செலுத்துநாற்
கழஞ்செடையே (17)

அடவாக அங்கரைத்து ஆவின்பா லெண்ணெயுடன்
மடமாதே! நாழிவார்த்து தூறிக்காய்ச்சி பின்
லுடனுக வுட்கொண்டு உயரமுடியில் முழுகிவரில்
இடரான வாதபித்த மெலும்புருக்கி யுடன்போமே(18)

(இ-ள்)

செங்கழுநீர்ப்பூ தாமரைப்புஷ்பம்
நெய்தல் புஷ்பம்

இவைகளை வகைக்கு 7 பலம் வீதமெடுத்து இடித்து ஒருபாத்திரத்திலிட்டு8மரக்கால்சுத்தஜலம்விட்டுபெரிய படி அதாவது (பதினாறில் ஒன்றாகும் வரை) வற்றவைக்

கவும் பின்னர்,

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| நெல்லிவற்றல் | நெய்தல்கிழங்கு |
| ஆம்பல்கிழங்கு | செங்கழுநீர்கிழங்கு |
| தாமரைக்கிழங்கு | ஏலக்காய் |
| கிராம்பு | சந்தனத்தூள் |
| அதிமதுரம் | வெட்டிவேர் |
| இலாமிச்சம்வேர் | குறும்பை |
| சிறுநாகப்பூ | செண்பகமொட்டு |
| கோஷ்டம் | |

இவைகளை வகைக்கு 5 வராகனெடை யெடுத்துப் பசுவின் பால் விட்டு நன்ருக வரைத்துப்

| | |
|---|---|
| பசுவின் பால் | பெரியபடி 1 |
| நல்லெண்ணெய் | ,, |

இவைகளுடன் கலந்து அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கி வடிக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு கரண்டியளவெடுத்து உட்கொள்ளவும். இதையே தலையிலும் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்யவும்.

வாத பித்தங்கள், எலும்புருக்கி முதலான ரோகங்கள் நீங்கும்.

### முக்கில் ரத்தம் வருகிறதற்குக் "கற்ருழை எண்ணெய்"

கற்ருழை..............சீந்தில் கையாந்தகரை நரிப்பயறு
உற்ருர் கோவை நெல்லிக்காய் உதித்ததண்டா
மரையிலையுங்
கொற்ருந் தண்ணீர் மீட்டானுங் கொண்டோரொன்று
படிசாறும்
மற்ருேராவின் பால்படியு மெண்ணெய்
படியுமிரண்டாமே. (19)

எண்ணு மதுர மிலுப்பைப்பூ விருசந்தனம் பேரீச்சம்
நண்ணும் வெட்டிலாமிச்சம் நன்னாரிமுந்திரிகை
தக்கோலம்
குண்ணுமேல மஞ்சிட்டி கோட்டம் பச்சிலை தக்கோலம்
உண்ணுஞ் சீரகங் கருஞ்சீரக முரைத்த வரத்தை
மாஞ்சிலுமே. (20)

மாஞ்சஞாழல்த் தாதுடன் வருமிலவங்கஞ் சமதாகம்
காஞ்சமேதை தன்னேடு கழஞ்சிரண்டாக வரைத்திட்டு
வாஞ்சையுடனு மூறியது வடித்து முழுகி வருவீரால்
பாஞ்சமுக்கில் ரத்தபித்தம் பார்கண்ரோகம்
பத்தாதே. (21)

(இ-ள்)

| | |
|---|---|
| கற்றாழைச்சாறு | சீந்தில்கொடிச்சாறு |
| கையாந்தகரைச்சாறு | நரிப்பயற்றஞ்சாறு |
| கோவையிலைச்சாறு | நெல்லிக்காய்ச்சாறு |
| தாமரையிலைச்சாறு | தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு |

| | |
|---|---|
| இவைகள் வகைக்கு | சின்னப்படி ½ |
| பசுவின் பால் | ,, ½ |
| நல்லெண்ணெய் | ,, 1 |

இவைகளை யொன்று கலந்து

| | |
|---|---|
| அதிமதுரம் | இலுப்பைப்பூ |
| சந்தனத்தூள் | செஞ்சந்தனம் |
| பேரீச்சங்காய் | வெட்டிவேர் |
| இலாமிச்சம் வேர் | நன்னாரிவேர் |
| திராக்ஷைப்பழம் | தக்கோலம் |
| ஏலக்காய் | மஞ்சிட்டி |
| உயர்ந்த கோஷ்டம் | பச்சிலை |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| தக்கோலம் | சித்தரத்தை |
| சடாமாஞ்சில் | ஞாழல் |
| கிராம்பு | ஓமம் |
| காய்ந்த கையாந்தகரை | இலை |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடையெடுத்து இடித்துப் பால்விட்டுநன்ருகவரைத்துமுன் சொன்னசாறுகூட்டிய எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி நன்ருக எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டுபத்திரப் படுத்தவும்.

இத்தைலத்தைத் தினமுந் தலையில் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்துவர

மூக்கிலிருந்து வடியும் இரத்தம், கண்ரோகங்கள் முதலான நோய்கள் தீரும்.

குறிப்பு:-

தக்கோலம் இருதடவைகூறப்பட்டிருப்பதால் அதை இருமடங்கு கூட்டிக் கொள்ளவும்.

**மூக்குரத்தத்திற்கு ''எலிமிச்சம்பழ எண்ணெய்''**

கடுகு ஒரு சிறங்கை நிம்மக்காய்ச் சாறுபடி
விடுவதுஎண்ணெயீ ராழிவேர் மூக்கரட்டை
முடுகிய மிளகுங் கூட்டி முனிந்துடனரைத்துக் காய்ச்சி
அடுகிடமுழுகு மண்டை திருமூக்கி ரத்தம்போமே. (22)

**(இ-ள்)**

கடுகுஒருசிறங்கையெடுத்துச்சூரணித்து, அதனுடன் எலிமிச்சம் பழச்சாறு 1 படிவிட்டு சுத்தமான நல்லெண்ணெய் 2 படியும் கூடவிட்டுக் கொள்ளவும்.

இதனுடன்

ஆழிவேர் மூக்கரட்டை
மிளகு

இவைகளை வகைக்கு 1 பலமெடுத்து இடித்துச் சூரணித்துப் போட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத்தலைமுழுகிவரமூக்கிலிருந்துவடியும் இரத்தம் நிற்கும்.

## இரத்தம், சீழ் முதலானவைகள் நிற்க
## "அத்திப்பட்டைக் களி"

அத்திப்பட்டை நீர்ப்பூலா வாணிவேராம் வரப்பூலா
உத்தவர்சி ருலம்பட்டை வோரொன்றிருபலந்
தூள்கொண்டு
வற்றுங்காசுக்களிப்பாக்கு மருந்துவெள்ளைக் குங்குலியம்
மற்றொன்று பலமிரண்டு மானே உழுந்து
மாவாமே. (23)

மாவாங்குறுவை நெல்மாவும் வாரீரெருமைப்
பால்படிக்காய்த்
தூவாய்த் தூள்மா நல்லெண்ணெய் சுவறக்களியாய்க்
கிண்டியது
பாவாய்த் தின்றுவரும்போது பருகுமிரத்தச் சீயோடுந்
தாவாதகன்று போமென்று தானேவறிவோர்
விளம்பியதே (24)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| | அத்திப்பட்டை | நீர்ப்பூலா ஆணிவேர் |
| | வரப்பூலா வேர் | ஆலம்பட்டை |
| இவைகளின் | தூள் வகைக்கு | 2 பலம் |
| | காசுக்கட்டி | களிப்பாக்கு |
| | வெள்ளைக்குங்கிலியம் | |
| இவைகளும் வகைக்கு | | 2 பலம் |

இவைகளை நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்

| | |
|---|---|
| இதனுடன் உளுந்து மாவு | 2 பலம் |
| குறுவையரிசி மாவு | 2 ,, |

எடுத்துக் கொள்ளவும்.

எருமைப் பால் 2 படி யெடுத்து அடுப்பின் மேல் வைத்து நன்றாகக் காயவைத்து, முன்சொன்ன சூர ணங்களை யெல்லாம் போட்டுக்கிளறி நன்றாக இறுக வைத்துக் கொள்ளவும்.

இதனை நல்லெண்ணெயுடன் கூட்டி உட்கொண்டு வரவும். தினம் எலுமிச்சங்காயளவு 2 வேளைஉட்கொள் ளவும்.

சீழ் விழுதல், இரத்தம்விழுதல் முதலானநோய்கள் தீரும்.

### கெர்ப்ப விப்புருதி லக்ஷணங்கள்.

திரண்டு புழுக்கையுருண்டுவரும் தீராச்செயலும் பரிந்து விழும்
வறண்டு உடலம் வற்றிவரு மயமுங்கெட்டுத் தாதுக்கும்
திரண்டதனத்து மங்கையரே! தீராக்கெர்ப்ப விப்ருதி
யுருண்ட புழுக்கை யுழமூலி யுலேயுங் கெர்ப்ப ரோகமிதே (25)

பொருமித்திரண்டு கீழ்வயிற்றில் புண்போலாக மிகநொந்து
முருவக்குத்திக் குடைந்தெங்கு மொக்கச் சுரமுந் தலேவலியு
வெருவக்குத்திச்செயல்கட்டிவெடித்துப் புண்பட்டோடு பட்டுத்
திருவைப் பொருத மேனியரே செய்யுங் கெர்ப்ப ரோக மிதே (26)

(இ-ள்)

அடிவயிற்றில்கட்டியாகப்புரண்டுவரும்வீட்டுவேலே களைச் செய்ய இயலாது. தேகம் வரண்டு போய் மெலி வடையும். தாதுக்கள் கெடும்.

அடிவயறு பொருமி உருண்டையாகிப் புண்போல் வலி ஏற்படும். உடலில் குத்துவலி யுண்டாகும். சுரம் தலேவலி முதலானவைகளும் ஏற்படும். வேலேகளேச் செய்ய இயலாது.

இக்குறிகள் காணில் அது "கெர்ப்பரோக"மாம்.

### கெர்ப்ப சூலேக் குறிகள்.

திரண்டுகீழ் வயிற்றைப் பற்றிச் சிதகநின்றிரத்தம் விழ்ந்து
புரண்டுதான் வலிக்குமாகில் பொல்லாது கெர்ப்பசூலே
மருண்டுமேல் சத்தியாகி மயங்கிட வருமேயாகில்
புரண்டதின் வலியைப்போக்கு மருந்தினேப் புகலுவோமே (27)

(இ-ள்)

கீழ் வயிற்றில் உருண்டையாகத் திரண்டு புரளும், இரத்தம் விழும்வலி அதிகமுண்டாகும். வாந்தியும்உண்டாகும் மயக்கமேற்படும் இவை "கெற்ப சூலை"க்குறிகளாகும்.

**கெர்ப்பச்சுரோணிக் (கெர்ப்பசோணிதக்) குறிகள்**

உந்திக்கீ ழுதிரம்புக்கு மூலமும் போன்றிருக்குங்
கந்துடன் விருவிருத்துக் காலுடல் நடுங்கிவேர்க்கு
மந்தமா யுடலும்வற்றி மறுகியே சத்திதோன்று
மிந்தமெய்க் குணங்கள் கண்டா லிதுகெர்ப்ப சுரோணி
யென்றே (28)

(இ-ள்)

குறியிலிருந்து இரத்தம் கசியும் மூலமுளைபோலவும் தென்படும். கைகால்களில் நடுக்கமேற்பட்டு வியர்வை யரும்பும் தேகம் இளைக்கும். வாந்தியும் உண்டாகும்.

**கெர்ப்பசூரைக் குறிகுணங்கள்.**

திரண்டுகீழ் வயிற்றேற்றிச் சிற்றிடக் கட்டிப்பட்டுப்
புரண்டுதா னுதிரமெங்கும் பிள்ளைதானென வேயூறும்
மருண்டுதான் முக்கதாகில் தன்னுடல் வலியுந்தோன்றி
உருண்டிடுங்கெர்ப்பசூரைதானெனயுரைக்கலாமே(29)

(இ-ள்)

அடிவயிறு கட்டியாத் திரண்டு வரும். வயிறு முழுவதும் பிள்ளை புரளுவது போன்ற உணர்ச்சி உண்டாகும். முக்கினால் வலியுண்டாகும். இவை "கெர்ப்ப சூரைக்" குறிகளாகும்.

**கரச்சூரை (லை)க் குறிகள்.**

மாதேயுதரந் தனிரொண்டு வளையம்போலத்
திரண்டெழுந்து
வாலநாபி தன்கீழே யந்தப்படியே கிடந்துநொந்து
நூலேநுடங்குமுதுகுளைந்துநொந்துபத்திநோவுண்டாங்
காலே பத்திக் கரசூரைக் காண்பீர்........கண்டாரே (30)

(இ-ள்)

வயிற்றுக்குக் கீழே வளையம் போல் திரண்டு வரும். நாபிக்குக்கீழ் உள்ள பிரதேசங்களில் வலியுண்டாகும் முதுகிலும் உலைச்சலேற்படும். இது கரச்சூரைக் குறிகளாகும்.

குறிப்பு:— கரச்சூரை அதாவது கரச்சூலை என்பது கைகளில் ஏற்படும் வலியைக் குறிக்கும். ஆனால் இங்கு கால் வலியையே குறிப்பிட்டிருக்கிறார். காரணம் புலப்படவில்லை.

**கரச்சூரைக்குக் "கூவிளை வேராதிக்கஷாயம்"**

கூவிளை யரசில் கொடிவேலி நற்கடுக்காய்
தீவளர் வேர்க்கொம்பு திப்பிலி நன்மஞ்சளோடு
மேவுபல முள்ளவர் மிகவே கழஞ்சு கொள்ளத்
தாவுபலமற்றவர்க்குத்தானரையாய்க்கஷாயமிடே (31)

(இ-ள்)

| | |
|---|---|
| வில்வவேர் | அரசம்வேர் |
| கொடிவேலிவேர் | கடுக்காய்த்தோல் |
| சுக்கு | திப்பிலி |
| மஞ்சள் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை எடுத்து இடித்துத் தூளாக்கி, எட்டு மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நன்றாக எரித்து எட்டிலொன்றாக்கி உட்கொள்ளவும்.

நல்ல பலமுள்ளவர்கள் மேற்சொல்லியபடி கஷாயம் செய்து சாப்பிடவும். பலமில்லாதவர்கள் அதில் பாதியளவு தூளெடுத்து முன்போல் ஜலம் சேர்த்துக் கஷாயம் செய்து பருகவும்.

**கரச்சூரைக்குக் "கொன்றை யெண்ணெய்"**

கொன்றை கொடிவேலகில் கூவிளைச் சாறடைகடுக்காய்
குன்றி சுக்குத்திப்பிலியுங் கூர்மிளகு ரோகணியு
மன்றி வருநேர்வாளம் வளருள்ளி யிந்துப்பு
ஒன்றையாமுப்பலங்கடைச்சரககு மிருகழஞ்சே (32)

இருகழஞ்சு கூட்டி யிதமா யரைத்து
மருவிய சித்தாமணக் கெண்ணெய்—திறமாக
நாழியுரி விட்டு நல்லாய் வடித்துநக்க
யூழிவரும் கரச்சூரை போம் (33)

(இ-ள்)

| | |
|---|---|
| கொன்றைவேர் | கொடிவேலிவேர் |
| அகில்கட்டை | வில்வவேர் |
| சாறடைக்கிழங்கு | கடுக்காய்த்தோல் |

இவைகள் வகைக்கு 3 பலம்

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுகரோகிணி |
| சுத்திசெய்த நேர்வாளம் | பூண்டு |
| இந்துப்பு | |

இவைகள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை எடுத்து எல்லா வற்றையும் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணம் பண்ணிச் சித்தாமணக்கெண்ணெய் சின்னப்படி $\frac{3}{4}$ விட்டு அதனுடன் கலந்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயைத் தினம் 1 ஸ்பூனளவெடுத்து நக்கி வரவும். கரச்சூரைகள் போம்.

குறிப்பு:— இது பேதியாகும் தன்மையுடையதால் நிதானித்து உபயோகிக்கவும்.

## மஞ்சள் பற்பம் (சாம்பல்)

போமே நல்மஞ்சள் புடமிட்டு மென்பொடியாய்
ஆமே யதையுருந்த அன்றேதான்- தீமேவு
கரச்சூலே தீருங் கருத்தில் ச(ங்)கையுறு
மேற் சூதாஞ் சொன்னவிதம் (34)

(இ-ள்)

நன்ருகத் தேறிய மஞ்சளை ஒரு அகலில் வைத்து அதற்குத் தக்கபடி வேறொரு அகல்வைத்து மூடிச்சேலை மண்செய்து காயவைத்துப் புடமிடவும் இப்பற்பத்தை உட்கொள்ளச் கரச்சூலைகள் தீரும்.

## நிதம்ப சூலைக்குறிகள்.

நீர்புகவாயு கோர்த்து நிரம்பியே முளைத்தேங்காய்போல
யேர்கிய சவ்வுமுற்றி யிறுகியே யுதரம் நாளில்
.... .... .... .... .... .... .... ....
நீர்பொசிந் திருக்கதொரு நிதம்பத்தின்சூரைதானே (35)
பிள்ளைபெற்ற விடந்தன்னில் பெருக்கயோனி தலவாயு
வுள்ளேயடங்கிச் செலில்ரத்தம் மொதுங்கிப் புறப்பட்
டிருப்பதென்னில்
தள்ளிச் சலமேபோகாமல் தடைப்பட்டுடலிடைபட்டு
மெள்ளக்கனத்துள் புறமோடு மிகுந்தநிதம்ப சூரை
யிதே. (36)

(இ-ள்)

வயிற்றில் நீரும் வாயுவும்சேரும். தேங்காய் போல்வீக்க மேற்படும். சவ்வு முற்றி வயிறு இறுகும். குறியிலிருந்து நீர் பொசியும்.

குறியிற் வாயு அதிகரித்து, ரத்தத்தைக்கெடுத்துநீர் போகாமல் செய்து அது உடலிலே சேர்ந்து கனத்தைத் தரும்.

இவை "நிரம்ப சூரை"க் குறிகளாகும்.

குறிப்பு:—நிதம்பசூரை அல்லது நிதம்பசூலை–அதாவது பின் பாகத்திலுண்டாகும் வலியைக் குறிக்கும். ஆனல் செய்யுளில் அவ்வாறு காணப்படவில்லை. ஸ்திரீகளுக்கு மாத்திரமே உண்டாகும் ரோகம்.

### நிதம்பசூரைக்குப் ''பாம்புக்கண்ட புகை''

பாம்புக்கண்டங் குங்கிலியம் பருக்கையில்லாதே பொடி
செய்து
......... தூளாக்கித் தணலெடுத்துச் சட்டியிட்டோ
ரண்டை தன்னைத்
தூம்ப உரல்கொண் டதைக்கவிழ்த்துச் சுகமாயானை
யதிலிருத்துத்
தேம்பப் பொடியை யதில்தூவி விதமாய்ப் புகைக்கவலி
விடுமே (37)

(இ-ள்) பாம்புக்கண்டம்
குங்கிலியம்

இவ்விரண்டையும்நன்றாக இடித்துப் பொடியாகச்செய்து ஒரு அகலில் தணலைவைத்து அதிலிடவும். அதிலிருந்து புகை யெழும்பும். மேலும் கீழும் துவாரமுள்ள உரலை அந்த அகலின் மேல் கவிழ்த்தால் உரலின் மத்தியின் மூலமாகப் புகை வெளிவரும் அதன்மேல் நோயாளியை யிருக்கச்சொல்லி புட்டத்தில் அப்புகையைப் பிடிக்கவும் புகை குறையக் குறையப் பொடியை யிட்டுவரவும்.

நிதம்பசூலை தீரும்.

### நிதம்ப சூலைக்கு ''முடக்கொத்தான் எண்ணெய்''

முடக்கொத்தான் சாறு நல்லெண் ணெயுரியே
முசியாத வேர்க்கொம்பு வசம்புள்ளி பெருங்காயந்
திடுகற் கடுகுடனே யிந்துப்புச் சீனசாலை
சீதாரி தேவதாரஞ் சதகுப்பை யோரொன்று
அடுக்கிட்டு அரைக்கழஞ்சு அதில் கலக்கி யடைவாக
வெந்திறக்கி யானதினமுட் கொள்ள
நெடுக்கிட்டு மிகவலித்து வருநிதம்ப சூரை
நிச்சயமாய்த்தீருமென்றுநிகழ்த்தினர்நம்முனியே(38)

(இ-ள்)

| | |
|---|---|
| முடக்கொத்தான் சாறு | சின்னப்படி $\frac{1}{4}$ |
| நல்லெண்ணெய் | ,, $\frac{1}{4}$ |

இவைகளை யொன்று கலந்து

| | |
|---|---|
| சுக்கு | வசம்பு |
| பூண்டு | பெருங்காயம் |
| கடுகு | இந்துப்பு |
| சீனசாலே | சீதாரிவேர் |
| தேவதாரம் | சதகுப்பை |

இவைகளே வகைக்கு(5/8) அரையே அரைக்கால் வராக னெடையெடுத்து இடித்துச் சாறு விட்டரைத்துச் சாறு கூட்டிய எண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு தினம் ஒரு ஸ்பூனளவெடுத்து இருவேளேகள் உட்கொள்ளவும்.

அதிக வலியைத் தரும் நிதம்பசூலே தீரும்.

## கெர்ப்ப ரோகம், உதிரச்சூலே, பெரு வயிறுக்கு ''அத்திக் குழம்பு''

அத்தியிலேச் சாறுடனே நொச்சிச்சாறு
ஆனபேய்க் கொம்மட்டி யிலேயின்சாறு
சித்தர்தொழும் நிலவாகைச் சாறுகூட
சேர்க்கையாய் வகைவகையாய் நாழிச்சாருய்
மெத்தனவாம் பனேவெல்லம் பலமஞ்சாக
மிகக்கரைத்து வெள்ளுள்ளி பலமுஞ்சேர்த்து
சுத்தியாய் நேர்வாள மன்பதுவே கூட்டிச்
சூரணமா மருந்துவகை சொல்லுவோமே. (39)

சொல்லுஞ் சுக்கு திப்பிலிமிளகு நெல்லி
துலங்கு கடுதாணி சிறுநாக மேலம்
நல்ல யிலவங்கத்தோல் சிவதைவேரும்
நற்சீரக கருஞ்சீரக மதியுப்போடு
முல்லே நகையாய் விடங்கக் கடுகோடுரோகிணி
முதிர்பெருங் காயமுடன் மதுரஞ்சேர்த்து
அல்லலறை வகைக்கிரண்டு வராகனுக
ஆனபடி வஸ்திர காயம்பண்ணே. (40)

பண்ணுகின்ற சாறுவெல்லம் வத்தக்காய்ந்து
பதமாகில் மென்பொடியைப் பரிந்துதூவி
நண்ணுவிளக் கெண்ணெயுரி விட்டளாவி
நல்லவத்திக் குழம்புகழ வளவேகொள்ள
உண்ணவொரு போதுதிர வலிகவுசை
உட்சூரை நீராமைக் குன்மம்பீலி
கண்ணுதலா யிரத்த விலக்குக்கட்டிக்
குறையுமே பெருவயிறுங் கனப்பும்போமே. (41)

(இ-ள்)

| | |
|---|---|
| அத்தியிலைச்சாறு | நொச்சியிலைச்சாறு |
| பேய்க்கொமட்டியிலைச் சாறு | நிலவாகைச்சாறு |

இவைகள் தனித்தனியே சின்னப்படி ½
இதனுடன் பனைவெல்லம் 5 பலம் கரைத்துக்கொண்டு

பூண்டு 1 பலம்
சுத்தி செய்த
நேர்வாளப்பருப்பு 50 (எண்ணிக்கையில்)

இவைகளையும் நன்ருக வரைத்துக் குழப்பிக் கொள்ள வும். பின்னர்,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | நெல்லிவற்றல் |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| சிறுநாகப்பூ | ஏலக்காய் |
| லவங்கப்பட்டை | சுத்திசெய்த சிவதைவேர் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| இந்துப்பு | வாயுவிடங்கம் |
| கடுகரோகிணி | பெருங்காயம் |
| அதிமதுரம் | |

இவைகளை வகைக்கு 2 வராகனெடை யெடுத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு முன்சொன்ன சாறுகலந்த பனைவெல்லத்துடன் கலந்து அடுப்பின் மேலேற்றி நன்ருக எரித்து நன்கு இறுகியபின்

ஆமணக்கெண்ணெய் சின்னப்படி ½ விட்டுக் கலந்து குழம்பு பதத்தில் இறக்கவும்.

இந்தக் குழம்பில் ஒரு கழற்சிக்காயளவெடுத்துத் தினம் ஒரு வேளை உட்கொள்ளவும்.

வயிற்றுவலி, கவுசை, உடல்வலி, நீராமைக்கட்டி குன்மம், பீலிகை, இரத்த விலக்கு, இரத்தக் கட்டி, பெருவயிறு கனப்பு முதலானவைகள் நீங்கும்.

## சுரசூலைக் குறிகள்

உண்டியை அறித்திவாய்னீர் ஊறும்நெஞ் செரித்துப் பத்தி
மண்டியே சுரத்தோடொக்க வயிற்றினில் சுரந்து தோற்றுந்
தண்டியே புரட்ட வெப்பந் தணியவே அமைந்தடங்கு
மண்டர்தன் வேதம் பேசு(சுர)மதிர்(ல்) சூரையாமே(42)

(இ-ள்)

ஆகாரத்தைத் தள்ளிவிடும். வயிற்றில் நீர் ஊரும். நெஞ்செரிச்சலேற்படும். சுரம் உண்டாகும். வயிற்றில் நீர் சுரப்புக்காணும். உடலில் காங்கை உண்டாகிப் பின்பு தணிவடையும்.

இவை ''சுரசூரை'' லக்ஷணங்களாகும்.

## சுரசூரைக்குப் ''பங்கம்பாளைக் கஷாயம்''

பங்கம்பாளை வேர்க்கொம்பு பரிந்த முத்தக் காசுடனே
அங்கஞ்செறியு மதன்வேரு மடவேகாய்ச்சிப் பருகில்
பொங்குஞ் செறியுஞ் சுரசூரை பொல்லா தென்ன நே[illegible]
பங்கம்படாதே யிவைதீரும் பாரீர் நன்ருய்ப்ப[illegible]

(இ-ள்) ஆடுதீண்டாப்பாலைவேர்
கோரைக்கிழங்கு

இம்மூன்றையும் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்து இடித்துச் சுத்த ஜலம் 8 மடங்கு விட்டு அடுப்பின்மேல் ஏற்றிஎட்டிலொன்றாகும்வரைவற்றவைத்துப் பருகவும்.

சுரசூரை தீரும்.

### சுரசூரைக் குறிகள் (வேறு)

மக்கமாஞ் சூரை தோன்றில் பலபட வுதரந்தன்னில்
லொக்கவே சுரமுந்தோன்றி யுளவுபோக் குளதே
யென்னில்
மிக்கதோர் சூரையென்னு விதனமற் றிருப்பதென்னில்
தக்கதோர் சுரத்தின்சூரை தானெனப் பேசுவாமே (44)

(இ-ள்) பக்கங்களில் வலி உண்டாகும். வயிற்றிலும் வலியுண்டாகும். ஜ்வரம் அடிக்கும். இவை "சுர சூரை"க் குறிகளாகும்.

**குறிப்பு**:- சுரசூரை ஜ்வர சூலை.

### பெருஞ்சூரைக் குறிகள்

உற்றதோர் கீழ்வயிற்றி லுண்டுதான் வளையம்போலப்
பற்றியேவலித்துப்பின்னைப்பரந்துதான்பொருமுமாகில்
மற்றுள சூரையென்றும் மனத்துளக் கதுவேபாடம்
கற்பெருஞ் சூரையென்று கருதநீ கண்டுசொல்லே (45)

(இ-ள்) அடிவயிற்றில் வளையம்போல் திரண்டு வலி ஏற்படும். பின்னர் வயிற்றுப் பொருமல் உண்டாகும். இது பெருஞ் சூரைக் குறிகளாகும்

### சுரசூரைக்கு "வெள்ளுள்ளி எண்ணெய்"

வெள்ளுள்ளிச் சாறுநாழி விரவிய யிஞ்சிச்சாறும்
[illegible] தண்ணீர்விட்டா னுரைசெய்யாக் கண்ணி
நெல்லி
[illegible]ர் சாறுநாழி உரைப்பது அம்பல்நாழி
[illegible]கஷாயமுற்று மேவிடு மருந்துதானே. (46)

தானதே கொடிவேலி மூன்னைச் சாறணை வீழிமுற்றம்
ஆனவா தண்டைவேர் சித்தாமணக்கெண் ணெயிலிவை
யெரித்துத்
தானென்று புளித்தல்கைப்புத் தவிர்த்து தான்
கொள்வீராகில்
ஆனதோர் சுரமாஞ்சூரை அடவுடன் தீருமென்றே(47)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பூண்டுச்சாறு | சின்னப்படி | $\frac{1}{2}$ |
| இஞ்சிச்சாறு | ,, | $\frac{1}{2}$ |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | ,, | $\frac{1}{2}$ |
| பொன்னாங்காணிச் சாறு | ,, | $\frac{1}{2}$ |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, | $\frac{1}{2}$ |

இவைகளை யொன்று கலந்து வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | முன்னைவேர் |
| சாறணைவேர் | வீழிவேர் |
| கோரைக்கிழங்கு | ஆதண்டைவேர் |

இவைகளை வகைக்கு ($1\frac{1}{4}$ வராகனெடையளவெடுத்து) இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 8 மடங்கு விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி யிறக்கவும். இக்கஷாயத்துடன் சக்கையை நன்றாக வரைத்துக்கொண்டு முன் சாறுவகைகளையும் சேர்த்துச் சுத்தமான ஆமணக்கெண்ணெய் பெரியபடி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயைத் தினந்தோறும் ஒரு சிறு கரண்டியளவெடுத்துக் காலை நேரங்களில் உட்கொள்ளவும். நன்கு பேதியாகிச் சுர சூலைகள் நீங்கும்.

**பத்தியம்**:– புளிப்புச் சுவையுள்ள பண்டங்களையும், கசப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்கிவிடவும்.

## மூல ரோக நிதானம்.
## உற்பத்திக் காரணங்கள்.

மூலமுமிறைச்சி தானு முதிரவே தின்கையாலும்
பாலுடனினிய கண்டில் பரந்துடன் தின்கையாலுஞ்
சாலநெய் புசிக்கையாலுந் தையலர் வெட்கையாலு
மாலகேர் விழியினுளே! ஆகிய வரட்சியாமே (1)

வேகமாந் திரவியங்கள் மிகுகையால் நுவற்கையாலும்
சாகமாங் கொம்மட்டி தானவ ருண்கையாலுங்
காகியபன்றி மாங்கிஷம் கடுந்தினி துண்கையாலும்
நீதியிற்றறியா தோங்கி நிரந்தர மிருக்கையாலு
போதிய பகற்கண் தூங்கி யுயர்ந்திடு மூலந்தானே (2)

(இ-ள்)

இறைச்சியை யதிகமாகச் சாப்பிடுவதிலும், பால், கற்கண்டு, முதலியவைகளைச் சாப்பிடுவதினுலும், நெய்யை மிகுதியாகச் சாப்பிடுவனுலும், அதிகமான ஸ்திரீ போகத்தாலும் தேகத்தில் வரட்சி உண்டாவதாலும் ஏற்படும்.

மேலும் மிகுந்த காரமுள்ள சரக்குகளைச் சாப்பிடுவதாலும், கொம்மட்டிக்காய், பன்றி மாமிஸம், நீதியான மார்க்கங்களைக் கடைப்பிடிக்காமற் போவதாலும், பகலில் தூங்குவதனுலும் மனிதர்களுக்கு "மூல ரோகம்" சம்பவிக்கும்.

### மூல வாயு ஏற்படும் விதம்.

கடுத்திடு மெரிப்புத்தோணுங் கனக்கவே தினவு திண்ணுந்
திடுக்கிட வுதிரம்பாயுந் திண்ணிய மாங்கிஷமாகும்
வெடுத்துடல் வெளுத்துமெய்தான் மேவுவாய்நீரதாகுங்
கடுத்திடு மபானவா யைத்தச மூலங்கள்தானே (3)

உண்டசோற் றுதேநின்று ஓங்கியே புளித்தேக்கிட்டு
மண்டியே தண்ணீர்தாகம் வயிற்றினைட் பொருமிக் கொள்ளுங்
கொண்டிடு மழற்றிக்கண்கள் குறுகியே தூங்கல் சொருகல்
பண்டியில் மலமுந்தொங்கப் பற்றிய மூலந்தானே (4)

தானே மூல முள்ளுந்தக
மூனே கழியு முதிரம் பெருகி
வானே பொருமி வயிறுவலித்துச்
சீனேர் விழுந்து சிதமுகமாமே (5)

(இ-ள்)

ஆசனத்தில் எரிச்சலுண்டாகும். அரிச்சலும் ஏற்படும். திடீரென இரத்தமும்மாம்ஸமுளையும்வெளிவரும். தேகம் வெளுத்து, வாயில் உமிழ்நீர் ஊறும். இவ்வாறு அபான வாயுவின் பிரகோபத்தால் 10 விதமூல ரோகங்களுண்டாகும்.

சாப்பிட ஆகாரம் சீரணமடையாமல் புளித்த ஏப்பம்உண்டாகும் தண்ணீர்தாகம் ஏற்படும். வயிறுபொருமல், வயிற்றில் எரிச்சல், கண்கள் சுறுங்கிச் சொருகுதல் மலச் சிக்கல் முதலான குறிகளும் ஏற்படும்.

மூல முளைகளிலிருந்து ரத்தம் வெளிவரும். வயிறு பொருமலும், வலியுமுண்டாகும்.

## மூலங்களின் பொதுக் குறிகளும் உள்மூலமும்.

ஆகத்தடைத்துப் பொருமிவிடு மடைக்குங் கழியுங் காணுது
சாகத்தடைத்த யிருவகையால் தள்ளும்போது உள்ளே
வேகத்தடைத்தவாயுவரும்வேறேமலமும்வீழாதே[போம்
நாகத் தடைத்த உதிரம்விழும் நன்றுயுள்ளே பொருமிடுமே (6)

உள்ளிடு மூலந்தன்னையுரைக்கிலோர் மலத்தைத்தானுந்
தள்ளியே யெரித்துச்சீதந் தன்னுடனிரத்தம் வீழ்ந்து
துள்ளியே நாபி தன்னைச் சுற்றியே வலிக்குமாகில்
தெள்ளியன் சொன்னமூலந் தெரிந்துகொள் தெரிவைமாதே (7)

(இ-ள்)

மலச்சிக்கலுடன் வயிறு பொருமும். மூல முளையைத் தள்ளிவிட்டால் உள்ளே போய்விடும். வாயுப்பறியும்.

மலம்வெளிவராது இரத்தம்வெளிவரும். இவை 'மூலங்களின்' பொதுக் குறிகளாகும்.

மலம் வெளியாகும் போது அதனுடன் இரத்தமும் சீதமும் வெளிவரும் வயிற்றில் வலியுண்டாகும். இவை ''உள் மூலக்'' குறிகள்.

(இதுவுமது)

மலத்தை யிறுக்கிமந்தித்து வரண்டே யிரத்தம்வலத்தில் விழும்
மூலத்தில் வருவதுண்மையிது வுடனே வயிறும் வலித்திருக்குந்
தலத்தில்காணு துள்மூலந் தசையாதுளக்கிய பானத்துள்
பலத்தைக் குறைக்கும் வியாதியெனப் பெரியோர் சொன்ன முறைமையிதே (8)

(இ-ள்)

மலத்தைக்கட்டி வயிறு மந்தமாகி, வரட்சியுமேற்பட்டுஇரத்தம்மலம் எப்போது போகிறதோ அப்போது அதனுடன் கலந்துவிழும். உயிர் போகும் படியான வலியும் ஏற்படும். ஆஸனத்தின் வழியாக மூலமுளைகளும் வெளிவரும் தேகபலத்தைக் குறைக்கும்.

மூலத்தின் பொதுக் குறிகள்

திரண்டிடு மூலந்தன்னில் சேதியைச் சொல்லக் கேளீர்
புரண்டிடும்வயிற்றுக்குள்ளேபொருமிடுமலங்களெல்லாம்
வரண்டும் வாய்நீர்போலம் வளர்காற்று யிடியும்போலா
முருண்டுட லெங்குமெத்த உப்பிச மாகுந்தானே (9)

(இ-ள்)

வயிறு பொருமி, மலம் கட்டும், வாயில் நீர் ஊறும் உடலெங்கும் உப்பிசமுண்டாகும்.

(இதுவுமது)

மூன்றேகு மூல முளையது போலே
போன்றெழு காற்றுப் பொருமி வலிக்கும்
மீன்ற மலங்க ளெரித்துக் கருகித்
தோன்றிய சூடெனத் துலங்கி விழுமே (10)

(இ-ள்)

மூல முளை வெளிவரும். வயிற்றில் வாயு அதிகரிக்கும். பொருமலுடன் வலியுண்டாகும். மலச்சிக்கலேற்படும். உடலில் உஷ்ணமும் அதிகரிக்கும்.

### பிறமூலக் குறிகள்

மூலவாயு முடுகிப் பொருமிடில்
சாலக்கழியும் சடுதியிற் காத்துப்
பாலைக் கொண்டால் மந்தப்பசியில்லை
காலமே வயிறுகளுயர் கனக்குமே. (11)

கனக்கு மலத்தைத் திரிபோல் கழியுஞ்
சினக்குங் கனிபோ லாகு மலந்திடு
தனக்கும் பிறவாய் பிறமூலத் தன்மையை
மனக் குன்றுடைய மாமுனி சொன்னதே. (12)

(இ-ள்)

ஆஸனத்தில் வாயு அதிகரித்து வயிறு பொருமும் கழிச்சலுமுண்டாகும். பாலைச் சாப்பிட்டாலும் மந்தமாகும். காலை நேரங்களில் வயிறு கனக்கும். மலம் திரிபோல் வெளியாகும். இவை "பிறமூலக் குறிகளாகும்.

### உள்மூல லக்ஷணங்கள்

உண்மையாகுமுள் மூலத்தி னுட்பொருள்
செம்மை யிரத்தஞ் செலுத்திடுங்
கண்மையாக்க விழுந்திடுஞ் சுறுக்கிடுந்
திண்மையா மலஞ் சிக்கிக் கழியுமே. (13)

(இ-ள்)

உள்மூலமெனில் இரத்தம் ஆஸனத்தின் மூலம் வெளியாகும். மலம் சிக்கிச்சிக்கி வெளியாகும்.

### வாதக்கிரகணிக் குறிகள்

கழியுமூலக் கிராணிக் கனக்கவே
விழியிலே போந்த சீத மிரத்தமும்
சுழியாய் வாங்கிச் சுறுக்கென்று தொப்புளைக்
குழையும் வாதக் கிராணியின் கூறிதே. (14)

(இ-ள்)

அடிவயிற்றில் பார உணர்ச்சியுண்டாகும். சீதமும் இரத்தமும் வெளியாகும். தொப்புளைச் சுற்றிக் குத்துவலி யுண்டாகும்.

### பித்தக் கிரகணிக் குறிகள்

கூறும் பித்தக் கிராணியின் கூறதுசு
சீறும் மூலஞ் சிறுத்துக் கழியுமே
நாறும் பற்பல நாற்றம தாய்விடும்
மாறுமாவென மாத்திக் கழியுமே. (15)

(இ ள்)

மூலமுளை மிகச் சிறுக்கும். கழிச்சலுண்டாகும். மலம் அதிகமாக நாறும் அதிகமாகப் போகும்

### சேத்தும மூலக் குறிகள்

சேற்றுமத்தின் வருமூல மானது
ஊற்றுமெத்த உதிரமும் வெள்ளையும்
காற்றுச்சத்த மதாகக் கழிந்திடும்
மேற்று நீர்போ லிரைக்கு மிருமலே (16)

(இ-ள்)

ஆஸனத்திலிருந்து ரத்தமும், வெள்ளை நிறமுள்ள கசிவும் வெளிவரும். வாயு மிகவும் சத்தத்துடன் பறியும் இரைப்பும் இருமலும் உண்டாகும்.

### வாத பித்த மூலக் குறிகள்

இருக்கும் வாதபித் தத்தியல்புதான் கேளாய்
பருக்குங் கைகால்தான் வீங்கிப்பரந்துபதறிபறபறக்கும்
செருக்குமாகில் மலமும் விடாச்சீரணந் தானில்லை
பிரிக்கும் வித்தால் தள்ளுயிப்பேர்ந்து போகும்
பேசிடிலே. (17)

(இ-ள்) கைகால்களில் பரவலான வீக்கங் காணும் மலமும் கழியும், சூரணக் குறைவு ஏற்படும்.

### பித்தசிலேத்ம மூலக் குறிகள்

போகும் பயித்திய சேத்தும மூலமேதாக
மாகும் பொருமும் வலமிடர்
வேகுங் கால்கை மீறியனல்தாம்
போகங் குன்றும் பொரும்பசி யில்லையே (18)

(இ-ள்) அடிக்கடி தாகமேற்படும். வயிறுப் பொருமலுண்டாகுப். கைகால்களில் எரிச்சலுண்டாகும். பசியிராது. ஸ்திரீகளிடத்தில் இச்சையிராது.

### வாதசிலேத்ம மூலக் குறிகள்

இல்லை வாதசேற்றும மூலமே
வில்லைப்போல வலித்துமெய் வீங்கியே
எல்லையில்லா விருமலு மீறிடு
மல்லல் செய்திரு மாகங் கடுக்குமே. (19)

(இ-ள்)

உடல் வில்லைப்போலாகி, உடம்பு வீங்கும். இருமல் அதிகமாகும். கடுப்புவலியேற்படும்

### கடுக்கு மூலக் குறிகள்

கடுக்கு மூலத்தைக் கூடக் கலக்கிடு
மிடுக்குஞ் சூடு மிகுந்து வளைத்திடும்
நடுக்கும் வேர்க்கு மிருக்க வொண்ணுதுடன்
எடுக்கும் பொருமிருமலு மாகுமே. (20)

(இ-ள்) மூலத்தில் கடுப்பு வலியுண்டாகும். ஆஸனத்தில் சூடு மிகுந்து காணும். நடுக்கமெடுக்கும். வியர்வையதிகரிக்கும். பொருமலுண்டாகும்.

### (இதுவுமது)

நாவுமயிற்சீறு மிகவெளுத்து நடுக்கியுதரக் கனப்பு
முண்டாய்
ஆவுமபானங் கரகரத்து ஆழியதனுள் வலங்கருகியனல்
நாவுங் கண்ணுந் தான்வெளுத்துக் கண்ணும் புகைந்து
கடுப்புமுடன்
மேவு மலத்தை மிகக்கருக்கி மீறிமூலஞ் சிவப்பாமே (21)

(இ-ள்) நாக்கு வெளுத்துவிடும். நடுக்கலேற்படும். எரிச்சலுண்டாகும். ஆஸனம் கரகரக்கும் மலம் கருகும். கண்கள் வெளுத்துபோம். கண் புகைச்சலேற்படும். வயிறு கடுப்புயேற்படும். சிவப்பு நிறமாக மூலம் வெளியாகும்.

### மூலத்திற்கு "பஞ்சாக்கினிச் சூரணம்"

கன்னியிற் சருகுமுத்தங் கரணையும் பெருகுஞ்சுக்கும்
வன்னியாஞ் சித்ரமூல மருள்கிழங் கொடுகடுக்காய்
பன்னிய பிரண்டை கொன்றை பகர்புளி நரளைக்
காட்டில்
துண்ணிய கரணைப்பாலில் சூரணமூலம் போமே. (22)

(இ-ள்)

| | |
|---|---|
| கற்றாழைச் சருகு | கோரைக்கிழங்கு |
| கருணைக்கிழங்கு | வெருகங்கிழங்கு |
| சுக்கு | சித்திரமூலவேர் |
| மருள்கிழங்கு | கடுக்காய்த்தோல் |
| பிரண்டை | கொன்றைத்தோல் |
| புன்நரளைக்கிழங்கு | காட்டுக்கருணைக்கிழங்கு |

இவைகளை நன்றாக உலர்த்தி சிறுசிறு துண்டுகளாக்கி இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும்.

இதில் மூன்று விரல் கொள்ளுமளவு எடுத்துப் பசுவின் பாலுடன் உட்கொள்ளவும்.

### மூலரோகத்திற்குக் ''காட்டுக்கரணைக் கஷாயம்''

காட்டுக்கரணைக் கறிக்கரணை காரும்பிரண்டை
கொடிவேலி
கோட்டம்வெருகு வாராகிதும்பை யவையோர்கூட்டும்
புளிநரளைக்
கூட்டியிடித்துச் சாகமது குறுகக்காய்ச்சி தேன்கலந்து
நாட்டத்துடனேயருந்திடுநீநாடாமூலம்நடுங்கிடுமே(23)

(இ-ள்)

காட்டுக்கரணைக்கிழங்கு — கறிக்கரணைக்கிழங்கு
பிரண்டை — கொடிவேலிவேர்
கோஷ்டம் — வெருகங்கிழங்கு
நிலப்பனைக்கிழங்கு — தும்பைவேர்
புளிநரளைக்கிழங்கு

இவைகளைவகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துஇடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் **சுத்தஜலம் 8 மடங்கு** விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வெரித்து, வடிக் கட்டித் தேன் விட்டு அருந்தவும்.

மூலரோகங்கள் நீங்கும்.

### மூல வியாதிக்குக் ''காட்டுக்கருணை மருந்து''

காட்டுக்கரணைக்கல்வாழைகூடிய வெருகன் கிழங்குடனே
நாட்டில்படாத புளிநரளை நல்லபிரண்டைமருள்கிழங்கு
ஆட்டுமோரில் வேகவைத்து ஆவின் மோரிலுண்பீராய்
மூட்டிப்போட்ட வைக்கோல்போல் மூலவியாதி
பறந்திடுமே (24)

(இ-ள்)

காட்டுக்கருணைக்கிழங்கு — கல்வாழைக்கிழங்
வெருகன் கிழங்கு — புளிநரளைக்கிழங்
மருளங்கிழங்கு — பிரண்டை

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையளவெ
இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு ஆட்டுமோர்ஷெப

முழுகும் அளவு விட்டு அடுப்பின் மேலேற்றி வேக வைக்கவும். பின்னர் இதை பசுவின் மோருடன் அரைத்துக் கலக்கிப் பருகவும்.

மூல வியாதிகள் தீரும்.

### மூல வியாதிதீரக் ''கடுகுச்சூரணம்''

கடுகு பெருங்கா யங்காற்குந் திப்பிலி சாறனைடவேர்
நெடுக்கும் வசம்பு மிவையொக்க நேராய்க்கூட்டி யுண்பீராய்
விடுக விடுக வெனக் கலங்கி விரைந்தே மூலவியாதி யெல்லா
முடுகித்துலைந்து போமென்றே முனிவரி யம்பினரே (25)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுகு | பெருங்காயம் (பொரித்தது) |
| திப்பிலி | சாறனைடவேர் |
| வசம்பு | |

இவைகளைச் சரியெடை எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும் இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துச் சுத்த ஜலத்துடன் உட்கொள்ளவும்.

மூல வியாதிகள் தீரும்.

### இரத்த மூலத்திற்குச் ''சித்திரமூலாதிக் கல்கம்''

சித்திரமூல மிந்துப்புச் சிறக்குமோமம் பெருங்காய
முத்தச் சுக்குயிவை சரியாய் முதுநற்பிரண்டைச் சாற்றரைத்து
வைத்த வுருண்டை யெலுமிச்சங்காய் மருவாதி யெருமைத் தயிரிற்கொள்
ரத்துமிரத்த மூலமது பாகாயுருகும் பாரீரே (25)

இ-ள்)

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | இந்துப்பு |
| ஓமம் | பெருங்காயம் |
| சுக்கு | |

பகளை வகைக்கு $\frac{1}{2}$ தோலா அளவெடுத்து, ஒரு பின்மேல் வைத்து பிரண்டைச் சாறுவிட்டு, நன்

ளுக அரைக்கவும். இந்த விழுதை எருமைத் தயிருடன் குழப்பி உட்கொள்ளவும்.

இரத்த மூலங்கள் தீரும்.

**சீழ் மூலத்திற்குப் "பாகற் சாறு மருந்து"**

பாகற்சா றுரியெண்ணே பாதிகொள்
தாகத்தாலிவை சாரித் துட்கொள்
மோகத்தாஞ் சீமூல மானது
வேகத்தாலது விட்டு வாங்குமே. (27)

**(இ–ள்)**

| | | |
|---|---|---|
| பாகலிலைச்சாறு | சின்னப்படி | $\frac{1}{2}$ |
| நல்லெண்ணெய் | ,, | $\frac{1}{4}$ |

இவ்விரண்டையும் நன்ருகக் குலுக்கியுட்கொள்ளவும்.

சீழ் மூலங்கள் நீங்கும்.

**மூலம், மந்தம், "கிராணிக்கு அக்கினி கிருதம்"**

திப்பிலி மூலஞ்சுக்குஞ் செவ்வியஞ் சித்ரமூலம்
வெப்பிடு திப்பிலியு மீறுகாய மோமமும்
உப்பது வையெவகையுட னெவச்சாரஞ் சத்தி
யிப்படி சாரங்கொட்டைக் கரந்தையோர்
பலங்களாமே. (28)

கரைந்திடு தயிரின் தண்ணீர் காடிநீர் கழுநீரிஞ்சி
விரைந்துடன் வகைக்கீராழி மேவியே நெய்யீராழி
நிரைந்தர வரைத்துக்காய்ந்த நெய்யது கொள்வீரா
சுரந்திடு மூலமந்தங்கிராணி சுவாசமுங் குன்மம்
போமே

**(இ–ள்)**

| | |
|---|---|
| கண்டத்திப்பிலி | சுக்கு |
| செவ்வியம் | கொடிவே |
| திப்பிலி | பெருங் |
| ஓமம் | எவச் |
| சத்திச்சாரம் | கொ |

இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்து, இடித்து அம்மி யின் மேல் வைத்துக் காடி விட்டு நன்ருக வரைத்து

| | | |
|---|---|---|
| தயிரின் தெளிவுநீர் | சின்னப்படி | 1 |
| காடி | ,, | 1 |
| கழுநீர் | ,, | 1 |
| இஞ்சிச்சாறு | ,, | 1 |
| பசுவின் நெய் | ,, | 1 |

இவைகளுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத் துப் பசுவின் பாலுடன் தினம் 2 வேளை உட்கொண்டு வரவும்.

மூலம், மந்தம், கிராணி, சுவாசம், குன்மம் முதலிய வைகள் தீரும்.

### இரத்தமூலம். "பாண்டுவிற்கு அரிதகீகிருதம்"

கடுக்காய் நூறு புனல் பதக்கிட்டுக் காட்டுச் சீந்தில் கீழாநெல்லி
வடுக்குங் கொன்றைப் பட்டையிடித்து மேவிக்காய்ச்சி யெட்டொன்ருக்கி
முடுக்காங் கடுக்காய் முப்பது வெந்தது முதிர்ந்த மதுரங்கூட்டி யரைத்துக்
கொடுக்கும் நெய் நாழியுக்கிலகாச்சிக் கொள்வீரா
மாகில் ரத்தமூலபாண்டு மற்றிடுமே. (30)

(இ-ள்)

கடுக்காய் 100 (எண்ணிக்கையில்) எடுத்து இடித்து த்திரத்திலிட்டுச் சுத்தஜலம் 2 மரக்கால் விட்டு ர்,

காட்டுச்சீந்தில்
கீழாநெல்லி
கொன்றைப்பட்டை

வகைக்கு (1 பலம்) எடுத்து இடித்துச் லொன்ருக்கி இறக்கி வடிக்கட்டிக் நுடன்,

நெய் 1 படியும் விட்டு

30 (மூன்றிலொரு பங்கு) வெந்தகடுக்காய்களை முன் கஷாயச் சக்கையிலிருந்து எடுத்து அதனுடன் அதிமதுரம் 1 பலம் சேர்த்து அரைத்து முன் கஷாயம் சேர்ந்த கஷாயத்துடன் சேர்த்து, அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்து நெய்யை வடிக்கவும்.

இந்நெய்யைத் தினம்1 ஸ்பூனளவெடுத்துப் பசுவின் பாலுடன் 2 வேளை உட்கொள்ளவும்.

இரத்தமூலம், பாண்டு முதலானவை தீரும்.

### சீழ்மூலம் தீர ''உத்தரேணி நெய்''

நாயுருவி ஒரெடையும் கீழ்க்காய்நெல்லி
நன்வேரும் சீந்தில் வட்டுக் கிளர்வேரோடு
காயாருமுள் நெருஞ்சிறு பூளைசங்கு
கரித்தவுப் பிலிவேர் விழுதி வாகைவேரு
மேயுமோ ரொன்றுபல மிருபதுட
னஞ்செடுத்து நீர் தூணி காய்ந்து நாநாழி
ஆயுமது வதிமதுரங் கோட்டம் வெண் கடுகு
அசமதக மிலவங்க மரத்தைச் சிறுமூலம் (31)

சிறுதேக்குத் திப்பிலிமூல மரமஞ்சள்
சேற்றரக்கு பெருங்குறும்பை வகையும் நாற்
மறுவிலா பதக்குப்பா லதிலரைத்து [கழஞ்சு
வார்த்துநெய் நாழுழி காய்ந்து வடி கொண்டு
குறுகவே யிருநேரங் கொண்டு மண்டலங்
குற்றுமது சீழ்மூல மாறேழு விதமுந்
தறுகிடு மதுவே மூலமுங் கெட்டுத்
தான் போக்கு முத்திராணி நெய்யான
மெய்யே (32)

(இ-ள்)

| | |
|---|---|
| நாயுருவிவேர் | கீழாநெல்லிவேர் |
| சீந்தில்கொடி | நெருஞ்சிசமூலம் |
| சிறுபூளைவேர் | சங்கம்வேர் |
| உப்பிலாங்கொடிவேர் | விழுதிவேர் |
| வாகைவேர் | |

இவைகளை வகைக்கு 25 பலம் வீதமெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 4 மரக்கால் தண்ணீர் சேர்த்து, அடுப்பின் மேலேற்றிப் பெரிய படி ஒன்றாகும் வரை வற்றவைத்து வடிக்கட்டிக் கொள்ளவும். இதனுடன்,

| | |
|---|---|
| பசுவின் பால் | 2 மரக்காலும் |
| பசுவின் நெய் | பெரியபடி ஒன்றும் |
| சிறுதேக்கு | அதிமதுரம் [சேர்த்துச் |
| கோஷ்டம் | வெள்ளைக்கடுகு |
| ஓமம் | கிராம்பு |
| சிற்றரத்தை | திப்பிலி |
| திப்பிலிமூலம் | மரமஞ்சள் |
| அரக்கு | மருள்வேர் |

இவைகளை வகைக்கு 5 வராகனெடையளவெடுத்து பால் விட்டரைத்துக் கஷாயஞ் சேர்த்த நெய்யுடன் குழப்பி யடுப்பின் மேலேற்றி நன்றாக எரித்து, நெய்யை வடிக்கட்டிக்கொள்ளவும்.

இந்நெய்யில் 2ஸ்பூனளவெடுத்துக் காய்ச்சிய பாலுடன் தினம் 2 வேளை உட்கொள்ளவும். இவ்வாறு 40 நாட்கள் சாப்பிடவும்.

வலியுடன்கூடியசீழ்மூலங்கள் ஏழுவகைகளுந் தீரும்.

**"இரத்த மூலத்திற்கு நாயுருவி நெய்"**

நாயுருவி நூறுபலந் தூணிபுனலெட்டாய்
நன்பாலும் நெய்யும் வகை நாழியுழக்காக
பாயுநீர்வள்ளிச் சாறடை யிலாமிச்சுப்
பருத்தவாலமுகிள்வெள்ளிலோத்திரப்பட்டை
வாயுநீர் முள்ளி நன்னாரிவேரும்
வகைக்கழஞ்சரையாகவடித்து நெய்கொள்ளப்
போயுதிர மூலமுடன் ரோகமது விட்டுப்
பொறுத்துவிடு மென்னய........மானே (33)

(இ-ள்)

நாயுருவி ஸமூலம் 100 பலம் எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கி, இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 4 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி பெரியப் படி ஒன்ருகும் வரை வற்றவைக்கவும். இதனுடன்,

| | | |
|---|---|---|
| பசுவின் பால் | பெரியபடி | 1 |
| ,, நெய் | ,, | 1 |

இவைகளையொன்று கலந்து,

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்கு | சாறடைவேர் |
| இலாமிச்சம் வேர் | ஆலமொட்டு |
| வெள்ளிலோத்திரப்பட்டை | நீர்முள்ளி விதை |
| நன்னரி வேர் | |

இவைகளை வகைக்கு அரையேயரைக்கால் வராகனெடை வீதமெடுத்துப் பால்விட்டு நன்ருக அரைத்துச்சாறு கூட்டிய நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் வடிக்கட்டவும்.

இந்நெய்யில் 2 ஸ்பூனளவெடுத்து இடித்துப் பசுவின் பாலுடன் உட்கொள்ளவும்.

இரத்த மூலங்கள் தீரும்.

### மூலரோகத்திற்கு "வல்லாதிக்கிருதம்"

சேங்கொட்டை பலமெட்டு நாலாகவெட்டிச்
சேர் குறுணி நீர்காய்ந்து யிருநாழி வடித்துப்
பாங்குடனே பால்நாழியுடன் ........ஞசு
பாதி பசுவின் நெய்நாழி பதமாகவெரித்து
வாங்கியது தானியப்புட மரைமாதம்
வைத்தெடுத்துப் பாக்களவு நெய்கொள்ள
நீங்குமது மூலரோகமது வற்றும்
நினையாதெண்ணெய்புளிகைப்பும்மாகாதே(34)

(இ-ள்)

சுத்திசெய்த சேராங்கொட்டை 8 பலம் எடுத்து அவைகளை நாலாகப் பிளந்து, ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் ஒரு மரக்கால் விட்டு. அடுப்பின் மேலேற்றி சின்னப்படி ஒன்ருகும் வரை வற்றவைத்து, இறக்கி வடிக்கட்டிக் கொண்டு ஒரு பாத்திரத்திலிட்டு

| | | |
|---|---|---|
| பசுவின் பால் | சின்னப்படி | ½ யும் |
| பசுவின் நெய் | ,, | ½ |

விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய்யை வடிக்கட்டி ஒரு பாட்டிலில் இட்டு நெல்லிற்குள் 15 நாட்கள் புதைத்து வைக்கவும்.

இந்நெய்யில் ஒரு பாக்களவெடுத்துத் தினம்2வேளை பசுவின் பாலுடன் உட்கொள்ளவும்.

மூலரோகம் தீரும்.

**பத்தியம்:-** புளிப்பு,கைப்புப்பதார்த்தங்களைத்தள்ளவும்.

## சேராங்கொட்டை சுத்திக் கிரமம்.

நல்ல தேறின சேராங்கொட்டைகளைக் கொண்டு வந்து, அதன் மூக்குகளைக் கைப்படாமல் வெட்டிவிட்டு, பின்னர் அவைகளைச் சுண்ணும்புத் தண்ணீரில் போட்டு 1 நாள் முழுவதும் ஊற வைக்கவும். மறுநாள் இதனைக் கழுவியெடுத்துக் கொள்ளவும்.

## உள்மூலத்திற்குக் கொம்மட்டி யெண்ணெய்.

ஆனபெருங் கொமட்டிக்காய்ச் சாறுநாழி
சித்தாமணக்கெண்ணெய்
கானவல்லிச் சாறடைப் பிரண்டைநொச்சிக்
கதித்தவேர் பலங்களிரண் டசமதாகந்
தானதுவும் வெள்ளுள்ளி பலமரைகள் நேராய்த்
தருகாயந் திப்பிலியும் பலங்கள் காலாய்
மானனையாய் விடங்கமுட னரைத்துக் காய்ச்சி
வடித்துயெண்ணெய் கரண்டிகொள் உள்மூல
மாத்தே (35)

(இ-ள்)

கொம்மட்டிக்காய்ச்சாறு சின்னப்படி $\frac{1}{2}$
சித்தாமணக்கெண்ணெய் ,, $\frac{1}{2}$

இவைகளையொன்று கலந்து

சாறடைவேர் பிரண்டைவேர்
நொச்சிவேர்

இவை வகைக்கு 2 பலம்

ஓமம்
பூண்டு

| | | |
|---|---|---|
| இவை வகைக்கு | $\frac{1}{2}$ | பலம் |
| பெருங்காயம் | $\frac{1}{2}$ | ,, |
| திப்பிலி | $\frac{1}{2}$ | ,, |
| வாயுவிடங்கம் | $\frac{1}{4}$ | ,, |

இவைகளையிடித்து முன் சொன்ன சாறு விட்டு, நன்முக வரைத்து, எண்ணெயுடன் குழப்பி யடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்துப் பதத்தில் இறக்கி, வடிக்கட்டிக் கொண்டு வேளைக்கு 1 சிறுகரண்டியளவு எடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

உள்மூலங்கள் தீரும்.

**உள் மூலம், புறமூலத்திற்கு "அப்பைக்கிழங்கு நெய்"**

அப்பைக்கிழங்கு பலம்நாலு அரைத்து உள்ளியவ்வளவு
ஒப்புவசம்பு கூடவரைந்து உருக்கிநெய்யில் கரண்டி
கொள்ளத்
தப்பாமூலம் புறமூலஞ் சாறுமூலமுள்ள தெல்லாம்
வெப்பா மெழுகி னனல்போல விட்டேகரைந்துபோய்
விடுமே (36)

(இ-ள்)

அப்பைக் கோவைக்கிழங்கு — 4 பலம் எடுத்து நன்முக வரைத்து அதற்குச் சரியளவு பூண்டும், வசம்பும் தனித்தனியாக வரைத்தெடுத்துப் பசுவின் நெய் — பெரிய படி ஒன்றுடன் கலந்து அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கி வடிக்கவும்.

இந்நெய்யில் ஒரு கரண்டி அளவெடுத்து உட்கொண்டுவர (த்தினம் இரு வேளை) உள்மூலம், வெளி மூலம் முதலானவை தீரும்.

### சீழ்மூலத்திற்குத் "தேங்காய்பால் நெய்"

தேங்காய் மூணுதான் திருகிச்சேர்த்தே யிளநீர்நாநாழி
பாங்காய் நாயுருவி வேர்த்தோல் பதமாயிடித்து வதில்
பிசைந்து
ஆங்கா(க)மாவிநெய்யோடு அரைத்து யீருள்ளி
நாயுருவிலை
தேங்காயளவு யரைத்தெரித்துத் தின்னமூலச்
சீழறுமே (37)

(இ-ள்)

தேர்ந்த 3 தேங்காய்களை யெடுத்து உடைத்துத் திருவி நன்றாக அரைத்து வைத்துக்கொள்ளவும்,

| | | |
|---|---|---|
| இளநீர் | சின்னப்படி | 2 |
| சுத்தமான பசுவின் நெய் | ,, | 2 |

இவைகளை யொன்று கலந்து,

நாயுருவி வேர்த்தோல்
நாயுருவி யிலை
பூண்டு

இம்மூன்றும் சேர்த்து அரைத்த விழுது 1 தேங்காயள வெடுத்து முன்சொன்ன இளநீர் கலந்த நெய்யுடனே சேர்த்து ஒன்றாகக் கலந்து, அடுப்பின் மேலேற்றி, நனறாகக் கொதிக்கவைத்துப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யைக் கடுகுடனேயே வைத்திருந்து அப்படியே கலக்கி வேளையொன்றுக்கு, 1 ஸ்பூனளவெடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

சீழ்மூலம் நீங்கும்.

### உள்மூலரோகத்திற்குச் 'சிறுகுறட்டையெண்ணெய்'

சிறுகுறட்டை பிரண்டைவேர் நவச்சாரங்
கருஞ்சீரகம் சேர்வது பசுவினீரதிலரைத்துக்

குறுகு விளக்கெண்ணெய் நாழியது விட்டுக்
குணமுடனெரித்து வடித்ததே மேலாய்
மறுகு பெருங்காய மென்பொடியிட்டு
வைத்தது யிரண்டு காசிடையைக்கொள்ள
முறுகுவது முள்மூல ரோகம்விடுமென்ன
முன்னோர்கள் செய்தபடி
தன்னுகுமென்றே (38)

(இ–ள்)

| | |
|---|---|
| சிறுகுறட்டை | பிரண்டைவேர் |
| நவசாரம் | கருஞ்சீரகம் |

இவைகளை வகைக்கு 4 வராகனெடை வீதமெடுத்துப் பசுவின் மூத்திரம் விட்டு, நன்றாக வரைத்து

ஆமணக்கெண்ணெய் சின்னப்படி ½ யுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனுடன் 1 பலம் சுத்தமான பெருங்காயத்தைப் பொடி செய்து கலந்து வைத்துக் கொள்ளவும். இந்த எண்ணெயில் வேளைக்கு வராகனெடை யளவெடுத்துக் காலை வேளையில் உட்கொண்டு வரவும். 2 அல்லது 3 தடவை பேதியாகும்.

உள்மூலம் தீரும்.

### சீழ்மூலத்திற்கு "மாங்கொட்டைக் கடுகு"

மாங்கொட்டை திப்பிலி பொடுதலைக்காய்
களிப்பாக்கு
வகையரைப் பலமாம் மரிசமொருபலமு
மெங்குறுநாவிலைச் சாறு நாழியுடனரைத்து
இதுவுருட்டிக் கரையாமல் எருமைமோரூறி
வாங்கியது நல்லெண்ணெய் நாழியதுகூட்டி
மறுவிட யெரித்துக் கடுகுபாக்களவு
தாங்கொள்ளநாலு காசிடையு மெண்ணெய்
தள்ளிவிடு சீழ்மூல மெள்ளவது கெடுமே (39)

(இ-ள்)

| | |
|---|---|
| மாங்கொட்டைப்பருப்பு | திப்பிலி |
| பொடுதலேக்காய் | களிப்பாக்கு |
| இவைகள் வகைக்கு ½ பலம் | |
| மிளகு 1 பலம் | |

இவைகளை நாவலிலேச்சாறு விட்டு நன்ருக வரைத்து,

| | | |
|---|---|---|
| நாவலிலேச்சாறு | சின்னப்படி | ½ |
| எருமைமோர் | ,, | ½ |
| நல்லெண்ணெய் | ,, | ½ |

இவைகளுடன் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துக் கடுகுபதமாக இறக்கிக் கொள்ளவும். இந்தக் கடுகில் ஒரு பாக்களவும் அதன் மேலுள்ள எண்ணெய் 4 வராகனெடையும் 1 வேளைக்கு உட்கொள்ளவும். சீழ்மூலங்கள் தீரும்.

### சீழ்மூலத்திற்குத் ''தான்றிக்காய் கோவா''

தான்றிக்காய்த் திப்பிலி கருஞ்சீரக மிளகு
தருசுக்குப் புளியங் கொட்டையுமுடனே
ஆணிக்கொற் ருவின்பா லூறியது விடித்து
அரைத்துப்பா லிட்டே பழவெல்லம் பத்து
ஊணிக்காய்ந் தெண்ணெ யுறவிட்டுக் கிண்டி
உருண்டை பதங்கண்டு இறங்கவைத் தாறி
வேணிக்காலமே வெந்நீர் குளித்துப் புன்னேக்கா யளவுகொள்ள
மீருது சீழ்மூலம் விட்டகன் றிடுமே

(இ-ள்)

| | |
|---|---|
| தான்றிக்காய்த்தோல் | திப்பிலி |
| கருஞ்சீரகம் | மிளகு |
| சுக்கு | புளியங்கொட்டை |

இவைகளை யொருகல்லுரலிலிட்டு நன்ருக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டுப் பசுவின் பால் விட்டு நன்ருக ஊற வைக்கவும், இதனுடன்,

பசுவின்பால் சின்னப்படி $\frac{1}{2}$

பழய வெல்லம் 10 பலம்.

இவைகளைச் சேர்த்து அடுப்பின் மேலேற்றிக் கெட்டி யாகும் வரை நல்லெண்ணெய் விட்டு விட்டுக் கிண்டி லேகியபதமாக எடுத்துவைத்துக் கொள்ளவும். ஆறிய பின்னர் இதனை ஒரு ஜாடியில் பத்திரப்படுத்திக் காலை நேரத்தில் வெந்நீரில் ஸ்நானம் செய்து இம்மருந்தில் ஒரு புன்னைக்காயளவெடுத்து உட்கொள்ளவும்.

சீழ்மூலங்கள் தீரும்

**அதிசாரத்திற்குப் ''பாடாதி கஷாயம்''**

வட்டத்திருப்பி பெருமரத்தோல் மாதளையோடுவில் வக்காய்

மட்டமுத்தக் காசுக்கு வருமிலவங்க மதிவிடையந்
திட்டமுடனே யிருநாழி திருந்தக் காய்ந்த நீருழக்கு
இட்டகஷாயங் கொள்வீரா விதிலதிசார மறிபடுமே(41)

(இ-ள்)

| | |
|---|---|
| வட்டத்திருப்பிவேர் | பெருமரத்தோல் |
| மாதளையோடு | வில்வக்காய் |
| கோரைக்கிழங்கு | சுக்கு |
| கிராம்பு | அதிவிடையம் |

இவைகளைவகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்துக் கொள்ளவும்.

இக்கஷாயத்தைப் பருகிவர அதிஸாரங்கள் தீரும்.

**அதிஸாரந்தீரப் ''பெருமரப்பட்டையாதிக் கஷாயம்''**

பெருமரப்பட்டைபலமெட்டுபேணுக்குறுணிப்புனலிட்டு
உருவக்காய்ச்சி உழக்காக உதவுநாவல் நறுவிலியும்
வருவறப்பூலா மாதுளையு மதித்ததுடரி துவரையுடன்
அருகிடு அத்திவிடத்தேரிலை யரைகரை மிளகொட்டை
படுமே (45)

(இ ள்)

பெருமரப்பட்டை 8 பலம்

எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிச் சுத்த ஜலம் ஒரு மரக்கால் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக் காகக் காய்ச்சவும். இதனுடன்'

| | |
|---|---|
| நாகப்பட்டை | நறுவிலிப்பட்டை |
| வரப்பூலாவேர் | மாதுளையோடு |
| துடரியிலை | துவரை |
| அத்திப்பட்டை | விடத்தேரிலை |

இவைகளை வகைக்கு ஒரு சிறுகொட்டைப் பாக்களவெடுத்துமுன்சொன்ன கஷாயம்விட்டு நன்ருகவரைத்து அதிலேயே குழப்பியுட்கொள்ளவும்,

அதிஸாரங்கள் தீரும்.

## பிற மூலத்திற்கு மருந்து வகைகள்.

### * மூலமுளைக் கரைய "மிளகுக் குழித்தைலம்"

| | |
|---|---|
| உத்தாமணியிலைச்சாறு | சின்னப்படி 2 |
| மிளகு | சின்னப்படி ½ |

எடுத்து இடித்துச்சாற்றில் பிசறிச் பாண்டத்திலிட்டுப் பாதாளயந்திரமாகப்பூமிப்புடத்தைலம்வாங்கி இரும்புச் சிமிழில்அடைத்து வைத்துக் கோழியிறகில் தோய்த்துப் பவனத்திலுள்ளேகிட நீராய் விடும். அதாவது மூலமுளை கள் கரைந்து விடும்.

குறிப்பு:

**பாதாள யந்திரம்:** ஒரு சுத்தமான சட்டியை யெடுத்து அதனடியில் 5 அல்லது 6 சிறிய துவாரங்களிடவும், முன்கூறிய மருந்தையச் சட்டிக்குள்ளிட்டு, அச் சட்டி வாய்க்குத் தக்கபடி ஒரு அகலை வைத்து மூடிச் சீலைமண் செய்யவும், இதனைக்காய வைத்துக் கொள்ளவும்.

பூமியில்அச்சட்டிகொள்ளும்படியானகுழிவெட்டி, அதற் குள் இன்னெறு சிறுகுழியும் செய்து கொள்ளவும் இப்

* சுவடியிலுள்ளபடியே கொடுக்கப் பட்டிருக்கின்றன.

போது சின்னக்குழிக்குள் ஒரு பீங்கான் கோப்பையை வைக்கவும். அதற்குமேல் முன் கூறிய சட்டியின் அடியிலுள்ள துவாரங்கள் பீங்கான் கோப்பையின் வாயில் இருக்கும் வண்ணம்பெருத்தமாகவைத்து, அச்சட்டியை சுற்றிலும் ½ வாசிவரை மண்ணிட்டுப் புதைத்து விடவும்.

பின்னர் அச்சட்டியின் மேல்பாகத்தைச் சுற்றிலும் எருமுட்டைகளை யடுக்கிப் புடமிடவும் சட்டிக்குள்ளிருக்கும் மருந்திலிருந்து வெளிவரும் தைலம் பீங்கான்கோப்பைக்குள் இறங்கும். புடமாறிய பின்னர், சட்டியைச் சாக்ரதையாக எடுத்துத் தைலத்தைப் பத்திரப்படுத்தவும். இதற்குப் "பூமிப்புடத் தைலம்" அல்லது "குழித் தைலம்" என்று பெயர்.

## மூலத்திற்குக் "கரந்தையிலைத் திரி"

கரந்தையிலை, ஈர வெங்காயம் இவ்விரண்டையும் நசுக்கிப்பசுவின்நெய் விட்டுப் பொரித்து, ஒருவெள்ளைத் துணியில் ஒரே சீராகத் தடவிச் (சுருட்டி), விரலினறையளவு ஆசனத்திலேத்தவும், மூலம்புண்ணுனல் கெந்தகப் பொடியை சீலையிலுருட்டித் திரித்து விளக்கில் சுட்டுப் புகை காட்டவும். இத்திரியின் சாம்பலை விளக்கெண்ணெயுடன் குழப்பிப் புண்களுக்கிடவும்.

## பிறமூலத்திற்குப் பூச்சு மருந்தும் புகையும்.

சேவகனார்க்கிழங்கு
பெருங்காஞ்சோறியிலை

இவ்விரண்டையும்சமனாக யெடுத்தரைத்து வடைதட்டி உலர்த்தி,

ஆமணக்கம் பிஞ்சு
நுனி மஞ்சள்

கூட்டுச்சுட்டி இரண்டையும் விளக்கெண்ணெயில் சாரித்து மூலத்தில் பூசிப் பிறகு நீர்முள்ளிச் சமூலமும், எருக்கம்வேரும் பொடி பண்ணி வெருகடி பொட்டணங் கட்டி புளியந்தணலில் புகையிடவும். இப்படி 7 நாள் புகையிட்டு அடைப்பிலிருந்து தலை முழுகவும்.

### மூலம் கரைய "மஞ்சள் லேபம்"

மஞ்சள்
வாழைச்சரகு சுட்டசாம்பல்
சுண்ணும்பு

இம்மூன்றையும் நன்ருகக் கூட்டி மூலத்தில் சுத்த விழும்

### மூலத்திற்கு "பேய்த்தும்பை இலைப்பூச்சு"

பேய்த்தும்பையிலையை யரைத்துக் கட்ட கரைத்து விழும்.

### மூலத்திற்குக் "கருணைக்கிழங்கு வடகம்"

கருணைக்கிழங்கைத் தோல்நீக்கி கடலையளவாக வரிந்துஒரு சிறங்கை நல்லெண்ணெய் சட்டியில்வார்த்து வேகவைத்துப் பழய வெல்லம் சேர்த்துக் கூட்டிய்ரைத்துக் கிளறி, உருண்டையாக்கி, ஒரு உருண்டை பொரிமாவிலே புரட்டி எண்ணெய் தடவி 3 நாட்கள் தின்னவும்.

### மூலத்திற்கு "இலைக்கள்ளியிலைப்புகை"

செங்கல் காயப்போட்டு உரல் குழியில் வைத்து, இலைக்கள்ளியிலை வெதுப்பிக் காய்ந்த செங்கலில் தெளித்து அந்தப்புகைபிடிக்க உறங்கி அத்து விழும்

### மூலத்திற்குக் "கார மருந்து"

| | |
|---|---|
| சீனுக்காரம் | துருசு |
| சவுக்காரம் | சங்குசுட்டபற்பம் |
| பாஷாணம் | கொடிவேலிப்பட்டை |

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடியாக்கி 3 பண-வெடை தண்ணீரில் குழப்பி விரல் நுனியில் தடவி இரை மாத்திர மேத்திச் சுத்த, மூணு, நால்விரலதிகம் ஏருமல் பண்ணவும். அதிகமாளுல் மோசம்.

மூலம் கரைந்து நீராய் விழும்.

## மூலரோகத்திற்குப் புகை.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த ஈயம் | | அரப்பு |
| ,, | பாதரசம் | கள்ளிச்சாறு |
| ,, | கெந்தகம் | |

தவிடுபொடியாக்கி6பொட்டணங்கட்டிப்புகைகாட்டவும்

குறிப்பு:

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்தி விட்டு நன்றாக வரைத்துக் கஜ்ஜலியாக்கிப் பின்னர் ஈயத்தை ராவிப் பொடியாக்கிச் சேர்த்து மற்ற மருந்துகளையும் சேர்த்துப் பொடியாக்கவும்.

இத்தூளைத் தணலிலிட்டுப் புகைக்கவும். அப்புகையை மூலத்தில் படும்படிபிடிக்கவும்.மூலம் கரையும்

## மூலப்புண்ணாற மருந்து.

நல்லெண்ணெயில் வங்காளப் பச்சைப்பொடியும் மெழுகுமிட்டு எரித்துச் சீலையில் தடவிப் போட்டுவரப் புண்ணாறும்.

## மூலத்திற்குக் கள்ளிவேர்ப்புகை

| | |
|---|---|
| கள்ளிவேர் | எருக்கம்வேர் |
| பூதக்கரப்பான்பட்டை | கருஞ்சீரகம் |
| வசம்பு | வெள்ளுள்ளி |

வெவ்வேறு பொடியாக்கி ஆட்டெருவைச் சட்டியி லிட்டு நெருப்புப் போட்டுமேல்சட்டித்துவாரமிட்டுமூடி பொடி மருந்து போட்டு ஆளை மூட்டிவித்துப் பவன வாயில் புகை பிடிக்கவும் வெந்நீரானல் எரிவு குறையும் குளிர்ந்த தண்ணீர் எரிவு எடுக்கும். மருந்திட்ட வாயில் தண்ணீர் பட்டால் புண்ணாகும். படாமல்துணி பிடித்து ஒத்திடவும்.

குறிப்பு:

முன்சொன்ன மருந்துகளை இடித்துச் சூரணஞ் செய்து வைத்துக்கொண்டு, ஒரு வாயகன்ற சட்டியில் ஆட்டெருவையிட்டுத் தணலிடவும். அது நன்றாகப்

பற்றிக்கொண்டபின், அதில் ஒடி தூளையிட்டு புகையும் போது இன்னொரு துளையிட்ட சட்டியினல் அவற்றை மூடவும். துளை வழியாகப் புகைவரும். நோயாளியின் ஆஸனத்துவாரத்தில் இப்புகையைப் பிடிக்கவும்.

குளிர்ந்த தண்ணீர் படக்கூடாது, பட்டால் புண்ணாய்விடும். துணியை அனலில் காட்டி ஒத்தடம் கொடுக்கவும். வெந்நீரில் நனைத்துக் கொடுக்கக் கூடாது.

## எரிவுக்குக் கட்டும் மருந்து.

கற்றாழைச் சோறும் எள்ளும் எரித்துக் கத்தாழை மடல் வாட்டியதில் வைத்துக்கட்டவும். எரிவு நிற்கும்.

**குறிப்பு:-** எரிவு = எரிச்சல்.

## எரிவுக்குச் சீலை.

நல்லெண்ணெயிலே கெந்தகத் தைலம் தடவிச் சீலை போடலாம்.

## மூலமருந்தில் விழுந்ததுக்குக் கருவேலிலைக்களி.

கருவேலிலையும், அரிசியுமிடித்துப் பன்னி நெய்யில் களி கிண்டித் தின்னவும்.

## வலி, கடுப்பு, சீழுக்குக் "கருணை வடகம்"

கருணைக்கிழங்கு வேகவைத்துத் தென்னம்பாளைக் குறுத்து, வெள்ளுள்ளி, சுக்கு, அதிமதுரம், பெருங் காயம் கூட்டியரைத்து வெல்லம் பலம் 4 கூட்டித்தின்று வர வலி, கடுப்பு, சீழுள்படநிற்கும்.

## வஜ்ரவல்லிக் குழம்பு.

பிரண்டை துவைத்து ஒருபடி மோரில் கலக்கிப் பிழிந்து

| | |
|---|---|
| சுண்டைவேர் | சுக்கு |
| மிளகு | வெள்ளுள்ளி |
| ஓமம் | கடுகு |

வகைக்கிரு கழஞ்சரைத்துக் கலக்கிக் காய்ச்சிக் குழம் பாக்கி யெடுத்துவைத்து 3 நாள் கொடுக்கவும்.

## வஜ்ரவல்லிக் குழம்பு.

| | |
|---|---|
| ஓமம் | கருஞ்சீரகம் |
| மஞ்சள் | சுக்கு |
| கஸ்தூரிமஞ்சள் | இந்துப்பு |
| மிளகு | அக்கிராக்காரம் |
| பெருங்காயம் | பூண்டு |

இவைகளை நல்லெண்ணெயில் வறுத்துப் பொடியாக்கி, இளம்பிரண்டைகுழைத்து அதில்பொடியுங் கூட்டிக் குழப்பியொரு பாக்களவு கொண்டு காற்றுப்படாமலிருக்கவும்.

குறிப்பு:—

தினந்தோறும் ஒரு பாக்களவு உட்கொண்டுவரவும்.

## கருணைக் கிழங்கு லேகியம்.

| | | | |
|---|---|---|---|
| காந்தம் | 5பலம் | சுக்கு | 1பலம் |
| கடுக்காய்த்தோல் | 3 ,, | மிளகரணைவேர் | ,, |
| சீரகம் | 1 ,, | கொடிவேலிவேர் | ,, |
| மிளகு | ½ ,, | எவச்சாரம் | 2 ,, |
| திப்பிலி | ½ ,, | சேங்கொட்டை | 8 ,, |
| திப்பிலிமூலம் | ½ ,, | | |

சூரணம் பண்ணி இதற்குப்பாதி கருணைக்கிழங்குப் பொடி கூட்டி வெல்லம்25பலம் பாகாக்கி யதில் பொடி தூவி லேகியம்போல் கிளறித் தாணிக்காயளவு கொள்ளவும்.

குறிப்பு:—

காந்தம், சேங்கொட்டை இவ்விரண்டையும் சுத்தி செய்து கொள்ளவும்.

கருணைக்கிழங்கை உலர்த்திச் சூரணஞ் செய்து வைத்துக் கொள்ளவும்

### குக்குடச் சூரணம்.

| | |
|---|---|
| பிரண்டைவேர் | மருள்கிழங்கு |
| சாறணைவேர் | கொடிவேலிவேர் |
| காட்டுக்கருணைக்கிழங்கு | கறிக்கருணைக்கிழங்கு |
| வெருகங்கிழங்கு | பிளிமடலிக்கிழங்கு |

வகைக்கு பலம்.

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பெருங்காயம் |
| கருஞ்சீரகம் | கடுகு |
| நற்சீரகம் | ஓமம் |
| இந்துப்பு | |

வகைக்கு $\frac{1}{2}$ பலம்.

இது சூரணம் பண்ணிக் கருங்கோழி மாங்கிஷ மரிந்து சட்டியிட்டு நல்லெண்ணெய் விட்டுச் சூரணம் போட்டு, வறுத்துப் பொன்னிறமான பிறகு எல்லாம் ஒன்றாய்ச் சூரணம் பண்ணித் தினமொரு வெருகடி கொள்ளவும்.

கோழியாகத பேருக்கு எண்ணெயில் வறுத்துக் கொள்ளவும்.

குறிப்பு:—

பிளி மடலிக்கிழங்கு என்பது புளி நரளைக்கிழங்காக இருக்கலாமோ என்று தோன்றுகிறது.

### மூலக்கிராணி தீர "வெள்ளெரிப்பிஞ்சு வெதுப்பல்"

வெள்ளெரிப்பிஞ்சு யிரண்டை நடுவே கீறிப் பெருங் காயம் அரைக் கழஞ்சு வைத்து, மூன்று சீலைமண் செய்து,புடமிட்டெடுத்து, இந்துப்பு, எவச்சாரங் கூட்டி யரைத்து, வெள்ளாட்டு நெய்யில் எரித்து வடித்துப் பத்து நாள் தானியபுடம் வைத்து கொண்டு வர மூலக் கிராணி தீரும்.

குறிப்பு:—

இந்துப்பு எவச்சாரம் இவைகள் அரையேயரைக் கால் வராகனெடையும், வெள்ளாட்டு நெய் $1\frac{1}{4}$ சேரும் சேர்த்துக் கொள்ளவும்.

## மூலத்திற்குக் "கோழிக் கடுகு"

பிரண்டைவேர்ப் பொடி சின்னப்படி $\frac{1}{4}$ எடுத்துக் கோழியில் அடைத்து வேகவைத் தெடுத்து மாங்கிஷ மரிந்து,

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| கடுகு | வெள்ளுள்ளி |
| ஓமம் | கருஞ்சீரகம் |
| கருவேப்பிலை | பெருங்காயம் |
| இந்துப்பு | |

இவைகளை வகைக்கு கழஞ்சுகொண்டு பிரண்டைச் சாற்றிலரைத்து, நல்லெண்ணெயும் விட்டுக் குழம்பாக வெந்து கடுகு பண்ணித் தின்னவும்.

குறிப்பு:—

கோழியின் ஈரல் குடல் தலை, கால் முதலானவை களை நீக்கிவிட்டு, வயிற்றிற்குள் மருந்தை யடைத்து நன்றாக வேக வைத்துப் பின்னர் மாமிஸத்தைச் சிறு சிறு துண்டுகளாக அரிந்து காயப் போடவும். அதன் பிறகு சூரணம் செய்யவும்.

## மூலத்திற்கு மருதம்பட்டை பால்

| | |
|---|---|
| மருதம்பட்டை | வறள்சுண்டி |
| வில்வவேர் | மாவலிங்கை வேர் |
| தேத்தாங்கொட்டை | அத்திமுகிழ் |
| அரசமுகிழ் | புங்கம் விதையிற் |
| | புறந்தோல் விதை |

யரைத்து ஆட்டுப்பாலி லெரித்துக் கொடுக்கவும்.

### வயிறு கடுப்பின் குறிகள்.

இடுப்புக்கடுத்து வயிறுளைந்து இளகுஞ்சீத மத்தித்து
முடுக்குந்துயர மதிகமுமாய் முன்னமலமே கழிந்தடங்கு
மடுந்தோரன்னந் தனைத்தேடா யறவேயங்க மெலிந்து
வருந்
நொடுக்கும் வயிறு கடுப்பிதென்று சொன்னேஞ்
செய்யுந் துயர்கண்டே (1)

(இ-ள்)

இடுப்பில் கடுப்பு வலியேற்படும். வயிற்றில் வலியும், மலத்தில் சீதத்துடன் கழிச்சலுண்டாகும் மிகவும் வேதனையைக் கொடுக்கும். ஆகாரம் உட்செல்லாது. உடம்பு மிகவும் மெலிந்துபோம் இவை வயிறுகடுப்பின் லக்ஷணங்களாகும்

### வயிறு கடுப்பிற்குப் "பனிச்சை நெய்"

பனிச்சைத் துத்திமலை தாங்கி பருமவரப் பூலாமுத்த
மனிந்தசுக்கோ ரதிவிடயம் முதிர்ந்தநற் சீர்மோதகமுந்
தனித்தகைப்பிற் குந்திருக்கந் தானேகழஞ்சு கொண்டு
நெய்யில்
வனித்து வேகவைத்துருக்க மாதே வயிற்றுக்
கடுப்பறுமே (2)

| (இ ள்) | பனிச்சைவேர் | துத்திவேர் |
|---|---|---|
| | மலைதாங்கிவேர் | வரப்பூலாவேர் |
| | கோரைக்கிழங்கு | சுக்கு |
| | அதிவிடையம் | சீரகம் |
| | ஓமம் | குந்துருக்கம் பிசின் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து நெய்யில் வேகவைத்து உட்கொள்ளவும்.

வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

குறிப்பு:— பனிச்சை யென்பது அனிச்சையாக இருக்கலாமோ எனத் தோன்றுகிறது.

### குடல் கொதிப்பின் குறிகள்.

கடுப்பொடு ரெத்தஞ் சீலமலங் கள்உதர மந்திக்கும்
அடுக்குமபானங் கீழ்வயிறு அதுதன்னுடனே
சலங்கடுக்கும்

நடுக்குஞ் சுழத்தித் தலைகனப்பு நயனமதுதான் மஞ்ச
ணித்துக்
கொடுக்கு மசனமும் வாந்திக்கில் குடல்சேர் வீச்சிற்
கொதிப்பாமே. (3)

(இ-ள்)

இரத்தம் சீதம் இவ்விரண்டும்மலத்தில்வீழும்வயிறு மந்தமாகும் ஆஸனம், அடிவயிறு, இவ்விடங்களில் வலியுண்டாகும் நீர்க்கடுப்புஏற்படும், நடுக்கல், தலைச்சுற்றல் தலைகனம், கண்களில்மஞ்சள் நிறம், சாப்பிட்ட ஆகாரம் வாந்தியாதல் முதலான குறிகளேற்படில் அது 'குடல் கொதிப்பு' என்ற நோயாகும்.

## பித்தக்கொதிப்பிற்கு "முத்தக்காசு நெய்"

முத்தக்காசு மலைதாங்கி முதிர்ந்த துத்தி நிலப்பனைவேர்
கைத்தகாசு கடுநெல்லி கருவதிருக்க சீரகமும்
சுத்தமிகுமே சாதிக்காய் துலங்குமிலவம்பிசின்விடையம்
வைத்தேயெரித்துநெய்கொள்ள மயங்குபித்தக்கொதிப்
பறுமே (4)

(இ-ள்)

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | மலைதாங்கிவேர் |
| துத்தி | நிலப்பனங்கிழங்கு |
| கடுக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| கருஞ்சீரகம் | சாதிக்காய் |
| இலவம் பிசின் | அதிவிடயம் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யளவெடுத்து இடித்துத் தூளாக்கிப் பசுவின்நெய் சின்னப்படி $\frac{1}{2}$யுடன் கலக்கி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொண்டு,

தினம் 1 தேக்கரண்டி யளவெடுத்து, 3 வேளை உட்கொள்ளவும் பித்தக் கொதிப்புகள் தீரும்.

## வாயுக் கிராணிக் குறிகள்.

பொருமுமிரையுங் கழிந்திருக்கும் போதப்புறந்தாள
தைத்துவரு
மருவுமசனஞ் செய்யாது வரண்டே யுடம்பு வற்றிவரும்

ருநந் தண்ணீர் நாவறளும் பலகலனத்தல் கனவுமிகும்
மெருவு வாயுக் கிராணியென விரித்துப்பேச விளம்
பினரே (5)

(இ-ள்)

வயிற்றில் பொருமல், இரைச்சல் முதலியவைக ளுடன் கழிச்சலேற்படும். புறந்தாளில் வீக்கம் ஏற்படும் ஆகாரம் செல்லாது உடம்பில் வரட்சியேற்பட்டு மெலி வடையும் நாவரட்சி யேற்படும். தூக்கத்தில் கனவுகள் தோன்றும். இவை "வாயு கிராணி" லக்ஷணங்களாம்.

## வயிற்று வலி கடுப்பிற்கு வரப்பூலாச் சூரணமும் சந்தணக் குழம்பும்.

மிஞ்சாநல்ல வரப்பூலா மேவிநிற்கும் நீர்ப்பூலா
பஞ்சமாதனில்வேர்புறந்தோல்பகரும்நெல்லி நீர்முள்ளி
விரை
வஞ்சாயுலர்த்திப் பொடியாக்கி வருஞ்சந்தனக் குழம்
புடனே
மஞ்சார் குழலாய் நீ கொள் வயிற்றுக் கடுப்புவலி தீர்க்
கும் மருந்திதுவே (6)

(இ-ள்) வரப்பூலாவேர் நீர்ப்பூலாவேர்
நெல்லிமுள்ளி நீர்முள்ளி விதை

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து வஸ் திரகாயஞ் செய்து கொள்ளவும். இச்சூரணத்தைச் சந்தனக் குழம்புடன் சேர்த்துப்பருக,

வயிற்றுவலி, வயிற்றுக் கடுப்பு முதலானவை தீரும்.

**குறிப்பு:**

சந்தனக்கட்டையை யரைத்துக் கரைத்துக் குழம் பாக்கி அதனுடன் உட்கொள்ளவும்.

## வயிற்றுக்கடுப்பு தீரப் 'பெருமரப் பட்டைக்குடிநீர்'

பெருமரப்பட்டை நன்னாரி பெருத்தகுடசப் பாலையுடன்
வருமாதளையும்பொன்முசுட்டைமருவில்வம்வெட்டிவேர்
தருலாமிச்சமுத்த மொடுந் தேடுஞ்சீந்தி லதிவிடயம்
அருளாதி தன்னிற் காட்டாத்தி அத்தி கிராம்பு மருந்
திடுமே (7)

(இ ள்)

| | |
|---|---|
| பெருமரப்பட்டை | நன்னாரிவேர் |
| வெட்பாலை விதை | மாதளையோடு |
| பொன்முசுட்டைவேர் | வில்வவேர் |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| கோரைக்கிழங்கு | சீந்தில்கொடி |
| அதிவிடயம் | காட்டாத்திப்பூ |
| அத்திப்பட்டை | கிராம்பு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையளவெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப் படி 4 விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து சின்னப்படி அரையான பின்னர் இறக்கி வடிக்கட்டி இக்கஷாயத்தை பருகவும்.

வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## அசீரணம், விழுசி கிராணிக்கு
## ''ஓதியீர்க்குக் கஷாயம்''

விட்ட ஓதியீர்க்கு மேவுகரு வேப்பீர்க்கு
முட்டுசுக்கு சீரகமு மோதகமும்–தட்டியிட்டுக்
காய்ந்தே கஷயாங்கொள் காணுமசீர்ணம் விசூழி
பாய்ந்தே கிராணிபோம் பார் (8)

(இ-ள்)

| | |
|---|---|
| ஓதியிலை ஈர்க்கு | கருவேப்பிலை ஈர்க்கு |
| சுக்கு | சீரகம் |
| ஓமம் | |

இவைகளை நசுக்கியொரு பாத்திரத்திலிட்டுச்சுத்தஜலம் சமபங்கு விட்டு எட்டிலொன்றாகச் சுண்டவைத்து வடிக் கட்டிப் பருகவும்.

அசீர்ணம்,விழுசி, கிராணி முதலிய நோய்கள் தீரும்

## கிராணிக்குக் "கொத்தமல்லியாதிக் கஷாயம்"

தேர்ந்த கொத்தமல்லி சுக்குச்சீரி லாம்பிச்ச முத்தஞ்
சாய்ந்த வில்வப்பிஞ்சு சமனுக—கூந்த
சலவிட்டுக் காய்ச்சியுள்ளே சீக்கிரமாய்க்கொள்ள
பலனற்றுப் போங்கிராணி பேசு (9)

(இ-ள்)

கொத்தமல்லி விதை சுக்கு
இலாமிச்சம் வேர் கோரைக்கிழங்கு
வில்வப் பிஞ்சு

இவைகளே வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப் படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டி லொன்றாக்கி வடிக்கட்டி உட்கொள்ளவும்.

கிராணிகள் தீரும்.

## அதிஸாரத்திற்கு "மாதுளந்துளிக் மருந்து"

மாதுளந்துளிர் மாந்துளிர் நாவலுந்
தாதுவீழ்சடை யாருட னஞ்சனம்
விதிதன்னில் விளங்கிய நண்ணுணு
போதவெந்துணைப் போமதிசாரமே (10)

(இ-ள்)

மாதலந்துளிர் மாந்துளிர்
நாவல்துளிர் (சடாமாஞ்சின்)
நுணுக்கொழுந்து

இவைகளே வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் சிறிதுவிட்டு வேகவைத்து உட்கொள்ளவும்.

அதிஸாரம் தீரும்.

**வழும்பு ரத்தக்கழிச்சலுக்கு 'மாம்பட்டைக் கஷாயம்''**

மாவினிற் பட்டைசுக்கு வரள்சுண்டு பூலாவில்வம்
மேவிய முத்தக்காசு விளம்பிய கழஞ்சி ரண்டு
காவிய சலத்திற் காய்ச்சித் தான்குடித்திடுவீராகில்
தூவிய வழும்பு ரெத்தந் தூளேழுந்
தோடிப்போமே. (11)

(இ-ள்)

| | |
|---|---|
| மாம்பட்டை | சுக்கு |
| வரள்சுண்டிவேர் | பூலா |
| வில்வ வேர் | கோரைக்கிழங்கு |

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் பெரியபடி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றுகுமட்டும் வற்றவைத்துப் பருகவும்

வழும்பு, இரத்தக்கழிச்சல் முதலியவை தீரும்.

**அதிசாரம் பித்தக்கழிச்சலுக்கு ''அத்திப்பட்டைப் புட கஷாயம்''**

அத்திப்பட்டைவாழைப்பூவமாத்துவைத்துப்பிட்டாக்கி
பொத்திப் பிடித்துப் பிழிந்துகொண்டு புதியவிடய
மேல்விசிறி
மெத்தச்சீனி தனைக்கூட்டி மிகவும் பருகவல்லீராய்
பித்தக்கழிச்ச லதிசாம் பிறகியோடுங் கண்டீரே (12)

(இ-ள்)

| | |
|---|---|
| அத்திப்பட்டை | வாழைப்பூ |

இவ்விரண்டையும் சேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு வேகவைக்கவும். பின்னர் இதனைப் பிழிந்து கொண்டு அதனுடன், அதிவிடய சூரணம் இட்டுச்சீனி சேர்த்து உட்கொள்ளவும்

பித்தக் கழிச்சல் அதிஸாரம் முதலானவை தீரும்.

## பித்தக் கிரகணிக் குறிகள்.

நாளுவித மாய்க்கழியுநடுவே குலமெய்நோகு
மாளுர்விழியா ருணர்வுகற்றும் வயிறே யளேயுமந்திக்கும்
ஊனாய்விழுந்து கொதிப்பிக்கு முள்ளேகொடுத்த
மருந்திழியும்
பேனே தலைவிட்டூர்ந்துவரும் பித்தக்கிராணி
குணமதுவே (13)

(இ-ள்)

பலவகையாகக் கழிச்சலுண்டாகும். உடம்பு வலியேற்படும் உணர்ச்சி கெடும். வயிற்றில் உளேச்சல் ஏற்படும் பசி மந்தமாகும். ஊன் தண்ணீர் போல் பேதியாகும். உள்ளே சாப்பிட்ட மருந்துகள் பலனளிக்காது. தலையிலிருந்து பேன்கள் ஊர்ந்து வரும். இவை "பித்தக்கிராணி" லக்ஷணங்களாகும்.

## வாதக்கிரகணி லக்ஷணங்கள்.

வலந்தான் விடு நுரைபாயும் வாயு மிகவேயுண்டாகும்
கலந்தா னளிராய்க் காய்ச்சலுண்டங் கருதிமிகவு
மிளேப்பாகு
நிலந்தான் மகளீ ரோக்காளம் நினைவுதவிரும்
வயிறுளேயும்
பலந்தான் மிகுந்து துயிறக முண்டாம் பேசில்
வாதக்கழிச்சல் குணந்தானே (14)

நுரையுடனும், வாயுவுடனும் மலம் வெளியாகும். இலேசாகச் சுரமும் அடிக்கும். உடல் இளேக்கும். வாந்தி யுண்டாகும். நினைவு அழியும். வயிற்றில் உளேச்சல் ஏற்படும். இவை "வாதக் கழிச்சலின்" குறிகள்.

## கபச் கழிச்சலின் குறிகள்.

அய்யுங் கழியுங் குணங்கேளீ ரறவே வயிற்றில்
நோக்காடாம்
கையுங் காலும் பெச்செனவாங் கடியசுரமு மோடிவரும்
கையுங் குடல்போ லழுகல்விழு நக்குநீரும் வற்றிக்கும்
மொய்யு மறிவுங் குன்ருதுவிக்கலெடுக்குமீளாதே. (15)

(இ—ள்)

வயிற்றில் வலி ஏற்படும். கைகால்களில் பலமிராது ஜ்வரமடிக்கும். குடல் அழுகி விழுவதைப்போல் சீதம் மலத்தில் விழும். நாவறட்சி யுண்டாகும். நினைவு தப்பாது. விக்கலுண்டாகும். இவைகள் "கபக் கழிச்ச"லின் குறிகள்.

## அதிஸாரம், வாயுக்கிராணி, மூலம் சங்கிரக் கிராணிக்குத் தக்ர அரீதகீ லேகியம்.

சித்திரமூல முக்காவேளை சித்தமட்டி புங்கின்வேர்
முத்தினவேளை சாறணைவேர் முறையாயஞ்சு பலமாகப்
பத்திவளரும் பொன்முசுட்டை பதினைம்பலவேர்
ஒருமரத்தோல்
இத்தோடைந்து பலமிடித்து இனிச்சேர் கலநீர் தனில்
வார்த்தே (16)

கலந்தேயுள்ளி பலம்பத்து கடுகவிடித்துச்
சேர்த்தரைத்து
பலந்தான் குறுக வெட்டொன்றுய் பின்னுங் கஷாய
மதுவடித்து
துலந்தா னுவின் தயிர்பதக்கு நற்கடுக் காய்ப்பொடி
யரிகூடச்
சலந்தான் வற்றக் காய்ந்த பின்னுச் சமனுய்க்
குழம்பாய்க் கொதிப்பதுவே (17)

எத்தசுக்குத் திப்பிலி மிளகிருசீரக மதிவிடையந்
தொத்தவரத்தைச் செவ்வியந் துலங்குந் திப்பிலி
மூலமுடன்
பொத்துகிராம்பு சாதிக்காய் புகழ்கொடிவேலி
தாளீசமுஞ்
சத்தேயோமங் குராசாணி திரள்வெட்பாலே யரிசியுமே
(18)

சூரியகஸ் தூரிமஞ்சள் கார்போக வரிசியமுக்கிராவேர்
வாயுவிடங்கம்
பெரிய யிலவங்கப்பட்டை யிந்துப்புப் பெருங்காயஞ்
சாதிப்பத்திரி
வரிசே ரிலவங்கப்பத்திரி வகைக்கோர் பலங் கால்
பொடியாகச்

சரியாய்ப் பொடிமேல் தூவிநல் லெண்ணெய் சேர்த்துக்
கிண்டுவதே (19)

கிண்டியிறக்கி லேகியமாய்க்கிளர் புதுபாண்டந்தனிலிட்டு
விண்டிருநேரம் பாக்களவு வேண்டித் தின்று வருவீரால்
மண்டுக் கழிச்ச லதிசாரம் வாயுக்கிராணி மூலம்
பண்டுஞ் சங்கிர கிராணிக்குப் படர்தக்கிர அரிதகி
லேகியமே (20)

(இ-ள்) சித்திரமூலவேர் — முக்காவேளை வேர்
சித்தாமுட்டி வேர் — புங்கம் வேர்
வேளை வேர் — சாறணை வேர்
பெருமரத்தோல்

இவைகள் வகைக்கு 5 பலம்

பொன்முசுட்டை வேர் 15 பலம்

இவைகளைத் துண்டுகளாக வெட்டி யொரு பாத்திரத்தி லிட்டு 12 மரக்கால் சுத்தஜலம் விட்டு, அதனுடன்,

உள்ளிப்பூண்டு 10 பலம் எடுத்து நன்றுக அரைத்துக் கலக்கி, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றுகும் வரை வற்றவைக்கவும். இக்கஷாயத்தை யிறுத்து வைத்துக் கொள்ளவும்.

பசுவின் தயிர் — 2 மரக்காலுடன்
கடுக்காய்த்தூள் — சின்னப்படி ½

போட்டுப் பிசறி, கஷாயத்தையும் விட்டு அடுப்பின் மேலேற்றி நீர் சுண்டும்வரை வற்றவைக்கவும். குழம்பு பதமான பின்,

சுக்கு — திப்பிலி
மிளகு — சீரகம்
கருஞ்சீரகம் — அதிவிடயம்
சித்தரத்தை — செவ்வியம்
திப்பிலிமூலம் — கிராம்பு
சாதிக்காய் — கொடிவேலிவேர்
தாளிசபத்திரி — ஓமம்
குராசானயோமம் — வெட்பாலையரிசி
கஸ்தூரி மஞ்சள் — கார்போகரிசி

அமுக்கிராக்கிழங்கு — வாயுவிடங்கம்
லவங்கப்பட்டை — இந்துப்பு
பெருங்காயம் — சாதிப்பத்திரி
லவங்கப்பத்திரி

முதலான சரக்குகளை வகைக்கு ¼ பலம் வீதமெடுத்து, இடித்து வஸ்திரகாயஞ்செய்து, முன்சொல்லிய குழம் புடன் சேர்த்து நல்லெண்ணெய் விட்டுக்கிண்டி லேகிய பதத்தில் இறக்கவும்.

இதனையொருபுதுப்பாண்டத்தில்வைத்துப்பத்திரப் படுத்தித் தினம் இருவேளை, ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து உட்கொள்ளக்

கழிச்சல், அதிஸாரம்' வாயுக்கிராணி, மூலம், சங்கிரக்கிராணி முதலான நோய்கள் தீரும்.

## காச நிதானம்.

புகைந்தே யிருமல் வறட்சியது போதந் தாதுக் கிரந்தி
யெனத்
தகைந்தே கண்டிச் சிருமிமிக்கத் தறுகாவூனே பத்தி
நின்று
வகைந்தே மூச்சார் யிளைப்பனுமாய் வறண்டால் எலி
யால் வருமிதென்ன
மிருந்தோர் பேசும் வாகடத்தை வினவியறிந்து விளம்
பினரே. (21)

மாதர்தம் மயக்கில் மருந்தீட்டில் வந்தேயிருமல் லால்
நாறுஞ்
சேதமிகுந்தெ யதிகமுமாய்ச் செரியாதெரித்து யேப்ப
மிடும்
வாதைமிகுமே கடிவிஷத்தில் வருந்துமீளை யிருமலதாய்
நீதிபயில்சேர் சிரத்தில் மிகநின்றே மயக்கிக்கொண்
டிடுமே (22)

(இ-ள்)

வறட்சியினால் புகைந்த இருமலுண்டாகும். இருமல் மாமிஸத்தைப்பற்றி நிற்கும். மேல்மூச்சு, சரீர இளைப்பு இவைகளையும் உண்டாக்கும்.

இந்நோய் வறட்சியினாலும், எலி கடியினாலும் ஏற்படும்

மருந்திடு, அதிகப்புணர்ச்சி இவைகளினுல் இருமல் உண்டானுல், ஆகாரம் சீரணியாது. ஏப்பம் அதிகரிக்கும்.

எலிகடி விஷமாகில், கடித்த இடத்தில் அதிக வேதனையுண்டாகும். ஈளை, இருமல், தலையில் மயக்கம் முதலான குறிகள் காணும்.

## குவளை விப்புருதி லக்ஷணம்.

இருப்பிடமுள்ளந்தண்டு இருபுறம் விலாக்கள் நெஞ்சு
நடுக்கியே குளிரும் வேப்பு நய்யவே கொதித்துக்குத்தும்
மடுத்திடு முதரநோவு மயக்கமோ டிருமல்சீயுங்
குடிக்கொள விருந்த தென்னில் குவளைவிப்
புருதியாமே. (23)

(இ-ள்)

முதுகின் முள்ளந்தண்டு, விலாப்புறங்கள், நெஞ்சு, முதலான இடங்களில் குளிர்ச்சி யதிகரித்துக்குத்து வலியுண்டாகும். வயிற்றிலும்வலியேற்படும். மயக்கம், இருமலுடன் சீழைப்போன்ற கோழை வெளிவந்தால் "குவளைவிப்புருதி" என்று தெரிந்து கொள்ளவும்.

குவளைவிப்ருதிஎன்று கண்களின் இரப்பையில் உண்டாகும் வியாதியும் ஒன்றுளது. ஆகவே இதுவேறுகும்.

## காசரோகத்தில் மரண லட்சணம்.

இந்தநோய் நின்றநாளி விருமியேசெயலு முண்டாய்
வந்துதா னளிரும்வற்று மதித்திடுஞ் சோகலாக்கு
முந்தவே அய்யும் பித்து முடுகிடக் குளிர்ச்சி வெப்பும்
வந்துமூச்சேறிவற்றில் மரணமென் றுரைக்கலாமே (24)

(இ-ள்)

இருமல் அதிகமாகி வருத்தத்தையளிக்கும். கபமும் பித்தமும் அதிகமாகி அதனுல் குளிர்ச்சியும் உஷ்ணமும் தேகத்தில் மாறி மாறி வரும். மேல் மூச்சுண்டாகும். இவைகள் மரணக்குறிகளாகும்.

### சாத்யா சாத்யக் குறிகள்.

அண்டியே யிறுமல்குத்தி யடிக்கடி ரெத்தம் வீழ்ந்து
மண்டியே யுடலும்வற்றி வழுவழுத் துலர்ந்து வாயும்
பண்டியில் சுருங்கிநாளும் பத்துகெட வருமேயாகில்
உண்டில்லை யென்னரோக மென்றுரைக் கலாமே (25)

காசமிருமல் கட்டிவிழும் களைத்துச்சோரு மடிக்கடிதான்
நாசியனலாய்த் தணல்போலாம் நளிரு முடம்பு வற்றி
வரும்

ஊசநாறிப் பஞ்சவன்ன முதிரவீழும் வாந்திபண்ணும்
ஓசைக்குரலும்கம்மிவிடுமுறதுவெதுப்புமுரமிதுவே (26)

(இ-ள்)

இருமல் அடிக்கடி ஏற்பட்டு, அதனுடன் கோழையில் இரத்தம் விழும் உடம்பு இளைக்கும். வாய் உலரும்.

இருமலுடன் கோழை கெட்டியாக விழும். களைத்துச் சோர்ந்துவிடுவான், மூக்குச் சிவந்து அனல் வீசும். உடம்பு இளைக்கும். வாந்தி ஏற்படும் குரல் கம்மும் உஷ்ணம் மேலிடும்.

### ஈளை, காஸத்திற்கு "லசுனாதி நெய்"

உள்ளி மிளகு சீரகமும் முற்றக் கடுக்காய் திப்பிலியுந்
தள்ளுஞ் சுக்கு மோதகமுமச்சியி னுப்புங் கிராம்பதுவும்
கொள்ளுங் கற்கடுரோகிணியுங் கூட்டுந்தூதளைக் கனி
நாழி

கள்ளஞ் செய்யுஞ் சீர்களஞ்சோ ரொன்று தான்றி
யதே (27)

பதமாந்தூதளை வேரிரண்டு பலம் நெய்நாழி..........
.......சிறங்கையொக்கவிட்டுயடவேகலக்கியதிற்கரைத்து
விதமாய் வரவே யதைக்காய்ச்சி வெந்தபதத்தில்
வடிப்பீராய்

கதமா மீளை முதலான காசந்தீருங் காணிதுவே (28)

(இ-ள்)

| | |
|---|---|
| பூண்டு | மிளகு |
| சீரகம் | கடுக்காய்த்தோல் |

| | |
|---|---|
| திப்பிலி | சுக்கு |
| ஓமம் | இந்துப்பு |
| கிராம்பு | கற்கடசிருங்கி |
| கடுகுரோகிணி | தூதளைக்கனி |

இவைகளை வகைக்கு 1 ¼வராகனெடை வீதமெடுத்து இடித்து, அதனுடன் தூதுவேளைவேர் 2பலம் சேர்த்துத் தூள் செய்து வஸ்திரகாயஞ் செய்யவும்.

இதனுடன், பசுவின் பால் ¼ படிசேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யில் 1 ஸ்பூனளவெடுத்துத் தினம் 2வேளை காலையிலும் மாலையிலும்பசுவின்பாலுடன்சாப்பிடவும்.

சளை, இருமல்,காசம் முதலான ரோகங்கள் தீரும்.

### இருமலுக்கு "வாஸாதிச் சூரணம்,,

ஆடாதோடை தேள்க்கொடு தூதளை
வாடாசுக்குடன் வல்லிதன் கொன்றைவேர்
நீடாதிப்பிலி நீர்ப்பொடி யிட்டிட
ஓடாதாகிலு மோடுமிருமலே

(இ-ள்)

| | |
|---|---|
| ஆடாதோடைவேர் | தேள்கொடுக்குவேர் |
| தூதுவேளை வேர் | சுக்கு |
| கொன்றை வேர் | திப்பிலி |

இவைகளைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் காய வைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துச் சுத்த ஜலத்துடன் உட்கொள்ளவும். இருமல் தீரும்.

### காசத்திற்குக் "கோஷ்டாதிக் கஷாயம்"

கோட்டமுடனே சிறுதேக்கு கோரைக்கிழங்குநிலவேம்பு
தேட்டமாக மிகுசீந்தில் சேருங்கண்டங் காலிசுக்கு
நாட்டமாம் பற்படகநலதாஞ் சிறுகாஞ் சோறிதானும்
வாட்டமதாகத் திப்பிலியும் வளர்பாங்கிக் குடிநீரே(30)

(இ-ள்)

| | |
|---|---|
| கோஷ்டம் | சிறுதேக்கு |
| கோரைக்கிழங்கு | நிலவேம்பு |
| சீந்தில்கொடி | கண்டங்கத்திரிவேர் |
| சுக்கு | பற்பாடகம் |
| சிறுகாஞ்சோறிவேர் | திப்பிலி |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப் படி $\frac{1}{2}$விட்டு, அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன்றாகும் வரைவற்ற வைத்து வடிகட்டிப் பருகவும். இருமல் தீரும்.

**காசத்திற்கு "அழிஞ்சில் பட்டைக் கஷாயம்"**

பாரழிந்சில் பட்டை பலமொன்ற தனுடனே
உரமிளகுந் தான்பாதி கூட்டியே — சீர்பெறவே
வீசியநீரெட்டொன்றாய் மேவக்குடித்திடவே
காசமெல்லாம் நாசமறுங் காண் (31)

(இ-ள்)

| | |
|---|---|
| அழிஞ்சில்பட்டை | 1 பலம் |
| மிளகு | $\frac{1}{2}$ ,, |

இவைகளை ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்தி லிட்டுச் சுத்த ஜலம் 8 மடங்கு விட்டு, அடுப்பின் மேலேற்றி, எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கி, வடிக் கட்டி உட்கொள்ளவும். இருமல் தீரும்.

**சூதிகா காச லக்ஷணமும், மரண லக்ஷணமும்.**

பிள்ளைபெற்ற மாதர்க்குப் பெருத்த சுரமாய்த் தலைவலியாய்
உள்ள முழலைதவனமுடன் உற்றக் கழிச்சலுடன் பொருமல்
மெள்ளத்தொடர்ந்த உள்மூச்சும்விழி........கூட்டிருக்கில்
துள்ளித் துடித்த சுவாசகாசத் துளக்கி யுயிரைப் பறித்திடுமே. (32)

(இ-ள்)

பிள்ளைபெற்ற ஸ்திரீகளுக்குச் சுரமும் தலைவலியும். உண்டாகிச் சரீரத்தில் எரிச்சல், கழிச்சல் பொருமல், மேல்மூச்சு, கண்களில் சொருகல் இவைகளுடன்சுவாச காசமும் உண்டாகில் அது மரணத்தை விளைவிக்கும்

## சந்தனாதி உருண்டை.

..................திகுன்ருத மண்ணில் மிகுந்தசந்து முத்தங்
கொட்டிநெல்லி யதிவிடயம்.........லாமிச்சிருவேலி
தேட்டம் பெரிய தக்கோலஞ் சேரவரைத்து..........
...........கொள்ளவல்லீரே குளிருஞ்சந்தசந்தனாதியதே(33)

சந்து கோட்ட மதிமதுரா............(டே)லம்
மூந்து கோரோசனை முல்லை முற்றிலாமிச்சிரு வேலி
யிந்தவகையை யரை..............கொட்டையளவாக
அந்த உழலைக்கிடு மிளநீர் மதிக்குஞ் சந்தனாதியதே (34)

## மிருத்துவாதி உருண்டை.

முத்தமொடு திப்பிலியோ டொத்தமரிசுக்கு
முடகடுகுரோ.........டேல
மொத்த திருவேலிமிகு வொற்றதெலுமிச்ச
மோதவுகெ...........கம்
கொத்தமல்லி மொத்தமிது கோரோசினைகொள்
கொண்டிளநீர்...............யாத்தே
சுத்தபரி தாபசுர முட்டணமெடுத்தால்
நாடுபலன் காணு மிகுத்து வாதியது
போமோ.(35)

குறிப்பு:—

ஷை செய்யுட்களில் உள்ள ஓலைகளை செல்லரித்து விட்டபடியால், அந்த இடங்களை விடப்பட்டிருக்கிறது இருந்த போதிலும், கூடியவரை மருந்துகளை ஊகித்துப் பொருள் கூறப்பட்டிருக்கிறது.

## சந்தனாதி உருண்டை

சந்தனத்தூள் — கோரைக்கிழங்கு
நெல்லிமுள்ளி — அதிவிடயம்
இலாமிச்சம்வேர் — வெட்டிவேர்
தக்கோலம்

இவைகளைச் சமனெடுத்துச் சுத்தஜலம் விட்டரைத்து சுண்டக் காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டிவைத்துக்கொள்ளவும். இதில் ஒரு மாத்திரை எடுத்து உட்கொள்ளவும். தேககாங்கை தீரும்.

## சந்தனாதி உருண்டை (வேறு)

சந்தனத்தூள் — கோஷ்டம்
அதிமதுரம் — ஏலக்காய்
கோரோசனை — முல்லைவேர்
இலாமிச்சைவேர் — வெட்டிவேர்

இவைகளைச் சமனெடுத்துச் சுத்த ஜலம் விட்டு நன்றாக வரைத்துக் கொட்டைப் பாக்களவுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலில்உலர்த்து வைத்துச்கொள்ளவும்

தேக காங்கைக்கு இம்மாத்திரை யிலொன்றை யெடுத்து இளநீருடன் உட்கொள்ளவும்.

## மிருத்வாதி உருண்டை

கோரைக்கிழங்கு — திப்பிலி
மிளகு — சுக்கு
கடுகரோகிணி — ———
ஏலக்காய் — வெட்டிவேர்
——— — கொத்தமல்லிவிதை
கோரோசனை

இவைகளைச் சரியெடையெடுத்து இடித்துவஸ்திரகாயஞ் செய்து ஒரு கல்வத்திலிட்டு, இளநீர் விட்டு நன்றாக வரைத்துக்(கொட்டைப்பாக்களவுள்ள)மாத்திரைகளாகச்செய்து நிழலில் காயவைத்துக் கொள்ளவும்

தாபசுரம், உஷ்ணம் முதலானவைகளுக்கு இம்மாத்திரையைத் தினம்2வேளை உட்கொள்ளவும்.

**தாபசுரம், உஷ்ணத்திற்கு ''மருத்வாதி உருண்டை''**

கொத்தமல்லியதிமதுர மேலமிலவங்கங் கோட்ட
செண்பகமிலாமிச்சுக் கோரோசனை [மொடு
மற்ற மரிசத்தினொடு ஒத்த இருவேலி
முற்றிய கரும்பிளநீர் முப்பழமோடொக்க
வைத்ததொரு முந்திரிகை யுத்தபேரீச்சுவகை
யுடனிறுத்தோ ரொன்றுடன்வைத்து
ஒத்தபரி தாபசுர முட்டிண மெடுத்தலொடு
பலன் காணுமிருத்தி வியாதியது போமே (36)

(இ-ள்)

| | |
|---|---|
| கொத்தமல்லிவிதை | அதிமதுரம் |
| ஏலக்காய் | இலவங்கப்பட்டை |
| கோஷ்டம் | செண்பகப்பூ |
| இலாமிச்சம்வேர் | கோரோசனை |
| மிளகு | வெட்டிவேர் |

இவைகளைச் சரியெடை யெடுத்துச் சூரணித்து ஒரு கல்வத்திலிட்டுக்

| | |
|---|---|
| கருப்பஞ்சாறு | திராக்ஷைச்சாறு. |
| இளநீர் | பேரீச்சைக் கஷாயம் |

இவைகளைத் தனித்தனியே விட்டு ஒரு நாளரைத்துச் சுண்டைக் காயளவுள்ளமாத்திரைகளாக உருட்டிவைத்துக் கொண்டுத் தாபஜ்வரம், உஷ்ணம் இவைகளுக்கு வேளை யொன்றுக்கு ஒரு மாந்திரை வீதமெடுத்து உட்கொண்டு வரவும்.

**தாபம் உஷ்ணத்திற்குக் ''கையாந்தகரை அடை''**

கையாந்தகரை தூதுவளை கருந்தக்காளி நாயுருவி
மேயாமெருக்கம்பூவுடனே வேலிட் பருத்தியிலை கூட்டி

நோயர்மரிசிமட்டாகநெருங்கவிடித்துஅடைசுட்டுக்
கையால் வாங்கித் தின்பீராய் களைக்கவேண்டாங்
கண்டீரே (37)

(இ-ள்)

| | |
|---|---|
| கையாந்தகரையிலை | தூதுவேளையிலை |
| கருந்தக்காளியிலை | நாயுருவியிலை |
| எருக்கம்பூ | வேலிப்பருத்தியிலை |

இவைகளை வகைக்கு ஒரு பிடி யெடுத்து அரிசி சின்னப் படி ½யுடன் சேர்த்துநன்ருக விடித்துத் தண்ணீர் விட்டு றவைத்து (தக்கபடிகாரம்,உப்புச்சேர்த்து) அடையாகத் தட்டி உட்கொள்ளவும்.

தாபம், உஷ்ணம் முதலானவை தீரும்.

### காசரோக லக்ஷணங்கள்

விண்ணிற் சுழலுந்துயரமிகுவெளுத்து வத்தித்திமிர்த்
தெங்குங்
கண்ணைப்பார்க்க மஞ்சணித்துக் களைத்தமுகமும்
வெளுத்ததனல்
லெண்ணிக் கரும மொண்ணுசெய்யி லிளைப்புமுட்டுத்
துயருண்டாய்
நண்ணிப் பெரிய தாதுகெடும் நவிலுங்காச
ரோகமிதே (38)

(இ-ள்)

தலைமயக்கம், வருத்தம் இவைகளேற்படும் உடல் வெளுத்துப்போம், மத மதப்புண்டாகும். கண்கள் மஞ்சள் நிறமடையும், முகம் வெளுக்கும் ஒரு காரியத்தைச் செய்யும் போது அதிக சிரமமும் மேல் மூச்சும் அதிகமாகும். தாதுக்கள் கெட்டுப்போம்.

குறிப்பு: —

காச ரோகத்தின் குணங்களாக ஷ்டி செய்யுட்களிலிருந்து பொருள்கொள்ள முடியவில்லை. காச(அதாவது க்ஷய) ரோகக் குறிகாளகத் தோன்றுகின்றன.

**காசத்திற்கு மருந்து.**

கையாந்தகரை யுப்பிலி கடியநொச்சி யாடாதோடை
செய்யவளனுமா மணக்குச் சிறக்கவிலையி னிற்சாறு
பொய்யா திதுவே நாழியதாய் ............... பொடிசெய்து
மெய்யா நாழிப்பொடி போடவிதுமீளச் சுவரவெய்யில்
வையே (39)

குறிப்பு:—

இச்செய்யுளுக்குச் சரியான பொருள் விளங்கவில்லை.

**மந்தார காசக் குறிகள்.**

மந்தாரகாசம் வந்தால் வாங்கிடுஞ் சுவாசமேலா
யித்தாரமெய்ச்சுரமேகாணுமிளைத்திடுமிருமல்மெத்துஞ்
சந்தாவுடம்பு தலையுடம்பு தளரவலிக்கு மிளைப்பாகும்
பந்தாதுடம்பு நெஞ்சுமுகம் பத்திவலிக்கும்
பண்பிதுவே (40)

இக்கண மதனேடொக்க விருமலு மிளைப்புமுண்டாய்
சிக்கென நெஞ்சிகட்டிச் சீறிடு மிறுகிப் பற்றி
பக்கமந் தாரந் தன்னில் பற்றிய காசமாமே (41)

(இ-ள்)

மேல் மூச்சுவாங்கும்சுரமடிக்கும். இருமல் ஏற்படும் உடம்பு தலை முதலான இடங்களில் வலியுண்டாகும். இளைப்பு ஏற்படும், நெஞ்சு, முகம் இவ்விடங்களிலும் வலி ஏற்படும்.

இருமல், இளைப்பு, நெஞ்சுக்கட்டு வயிறு பொருமல் முதலான குறிகளும் காணும். இவை "மந்தார காசத்தின்" லக்ஷணங்களாகும்.

**"காசத்திற்குத் திரிகடாதிக் கஷாயம்"**

சுக்குத்திப்பிலி மிளகு தூதுவளை வட்டுச் சீந்தித்
தக்கவோரொன்று தானுஞ் சமனது சரியாய்க்கொண்டு
ஒக்க முன்னுழி தண்ணீர் ஒன்ற தாயரைத்துக்காய்ச்சி
நக்கவேநறுநெய்தேனில்நன்றதாயக்காசம் போமே (42)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | தூதுவேளைவேர் |
| சீந்தில்கொடி | |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை யளவெடுத்து, ஒன்றிரண்டாக விடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி $1\frac{1}{2}$ விட்டு, அடிப்பின் மேலேற்றி, நன்ருக எரித்து எட்டிலொன்ருக்கி வடிக்கட்டித் தேன், நெய் இவ்விரண்டும் சிறிதளவு விட்டுப் பருகவும்.

மந்தார காசங்கள் தீரும்.

## காசத்திற்குச் ''சாறடையெண்ணெய்''

சாறடைக்கிழங்குதானுஞ்சதாவரிக்கிழங்குதானும்
வீறுள சீந்தில் வட்டு வெருவிய ஆடாதோடை
மாறிய பிரமிதூதுளை மரு கரிசாலங் கண்ணி
ஆறிய வமுக்கிராவு மதுகளோர் பலங்கொள்
தானே. (43)

கொள்ளறு நாழித்தண்ணீர் குமுறவே கொதிக்க
விட்டு
மெள்ளவே காய்ந்ததூறி வெந்துதா ழுழியாக்கி
எள்ளதி லெண்ணெய் தானு மீதுடன் கூட்டி
யொக்கத்
துள்ளவே துளவிக்காய்ச்சிச் சொல்லிய சரக்கு
கூட்டேன் (44)

சொல்லிய சரக்கு சுக்குத் திப்பிலி மிளகிந்துப்பு
நல்ல சீரக மோமம் நன்றுகற்கடக சிங்கி
மெல்லிய காரம் வெள்ளை வெண்காயங் கடுகு
ரோகிணி
சொல்லமுக் கழஞ்சு கொண்டு செலுத்திடக் காசம்
போமே (45)

(இ-ள்)

| | |
|---|---|
| சாரணைக்கிழங்கு | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| சீந்தில்கொடி | ஆடாதோடைவேர் |
| பிரமி | தூதுவேளைவேர் |
| கரிசாரங்கண்ணி | அமுக்கிராக்கிழங்கு |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து ஒன்றிரண்டாக விடித்து, ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி 3 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்ற வைக்கவும்.

இதனுடன் சுத்தமான எள்ளெண்ணெய் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு |
| சீரகம் | ஓமம் |
| கற்கடகசிருங்கி | வெங்காரம் |
| பூண்டு | கடுகரோகிணி |

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை யெடுத்து இடித்துச் சூரணித்து கஷாயம் சேர்ந்த எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் எரிந்து வடிக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ளக் காசரோகங்கள் தீரும்.

### பித்த காசக்குறிகள்

பித்தகாச மிருமல் மிகப்புரட்டி முறுக்கியுப்பு ரைக்
சத்தியெடுக்குமிருமலுண்டா ந்தலையுமுடம்புந் [குஞ்
தான் வலிக்குந்
குத்தியிருமும்குரல்கம்மும் குலவு சரீரமி கவிளைக்குந்
தித்தித்திருக்கும் வாயூறல் சிவந்தநீரோ
தாஞறும் (46)

(இ-ள்)

இருமலுடன் வயிற்றை வலித்து வாந்தியெடுக்கும். தலை வலி உடம்பு வலி இவைகளும் உண்டாகும். குரல் கம்மும். சரீரம் இளைத்துவிடும். வாயில் தித்திப்புச் சுவை காணும். உமிழ்நீர் சிவப்பாக வெளிவரும். இக்குறிகள் பித்தகாசத்தில் ஏற்படும்.

### வாத காசத்தின் லக்ஷணங்கள்

வாதமேலுடம்பு முளைவாக வயிற்றை முறுக்கு
வலியெடுக்கும்
போதவிருமி யிரத்தம் விழும் புண்ணுமிடறு புகை
யெடுக்குங்

காதுந் கண்ணு வலியெடுக்கும் கடுக்குமுடம்பு
கணுக்களெல்லாம்
பாதிநேரம் பாக்கடுக்கும் பாயில்
படுக்கவொட்டாதே (17)

(இ-ள்)

உடம்புவலி யேற்பட்டு, வயிற்றில் பிழிவகைப் போன்ற வலியும் உண்டாகும். இருமும் போது கோழையில் இரத்தம் விழும் நெஞ்சுப் புகைச்சலுண்டாகும். காதில்வலி, கண்களில் வலி, உடம்புக் கடுப்பு, கணுக்களில் குத்துவலி, முதலான குறிகளும் காணும். பாயில் கூடப் படுத்திருக்க முடியாது.

**கபமந்தார காச லக்ஷணங்கள்.**

துய்யதோர் நாசிதன்னில் தும்மலு மிகவுண்டாகி
நொய்யு நீராய் விழுந்து நெஞ்சு நோவுட
னீழைவாங்கு
அய்யின்மந் தாரகாசத் தடவிதுதானே நீகேள்
செய்யுமா முனிவர் சொன்ன குணமிது தெரிந்து
கொள்ளே (48)

(இ-ள்)

தும்மல் ஏற்பட்டு நீராய்ப் பொசியும், நெஞ்சில்வலி யேற்படும். மேல் மூச்சு ஏற்படும். இவை கப மந்தார காசத்தின் குறிகளாகும்.

**கச ரோகத்தின் குறிகள்.**

இருமியே செயலுங்கெட்டுயிடையிடைசுரமும்தோன்றி
யருவியே மிடருங் கண்ணு மற்பமே வாந்தியாகி
மருவிய அசனந்தானு மறுத்துள்ளந் தாளும் வற்றிக்
கருவியைக் குறைத்து வாடுங் கசரோக
மென்னலாமே (49)

(இ-ள்)

இருமல் உண்டாகும். அடிக்கடி ஜ்வரம் உண்டாகும். வாந்தி கொஞ்சமாக எடுக்கும், ஆகாரத்தைத்

தள்ளிவிடும். உடம்பு இளைக்கும். இவை கசரோகக் குறிகளாகும்.

குறிகள்:— க்ஷ்ம் = க்ஷயம்.

## உளமாந்தைக் குறிகள்.

நெஞ்சுமே லுடம்புவற்றி நிலைபெறநரம்பு தோன்றிப்
பஞ்சுபோல் நாவுங்கண்ணும் பாண்டமும்
வெளுத்துக்கண்டு
அஞ்சவே அய்யும்பித்து மசனமும் சிறுத்து வந்தால்
துஞ்சுவ துண்மையென்று சொலலாஞ்
சொல்லலாமே. (50)

இருமிச் சுரமுந் தலைவலியு மிறங்கா தன்னம்
விஷம் போலாம்
பெருகக் குத்தி யுடம்புளையும்பிதற்றுமரிய வாய்வெருவு
முருகிசசெயலுங்கெட்டுமிகவுறக்கமறவேவிழந்திருக்கும்
மொருமைப்படவே வருத்திவிக்கு முளைமாந்தை
யென்னலாமே. (51)

(இ–ள்)

நெஞ்சு வற்றும் உடம்பு இளைத்து நரம்புகள் புடைக்கும். நாக்கு மிருதுவாகும் கண்கள் பஞ்சடையும், உடல் வெளுத்துவிடும். ஆகாரம் குறைந்துவிடும். பித்தமும் கபமும் கோளாறடையும்.

இருமல், ஜ்வரம், தலைவலி இவைகளுண்டாகும். ஆகாரம் விஷம் போலாகும். அதாவது ஆகாரத்தைத் தள்ளிவிடும் உடம்பில் கடுப்பு வலி யேற்படும். தூக்கம் வராது.

இவை உளைமாந்தைக் குறிகள்.

குறிப்பு:—

உளமாந்தை என்பது க்ஷயரோகம் ஏற்படுவதற்கு முன் ஏற்படும் நிலமை. ஆரம்பத்தில் உளமாந்தையில் ஆரம்பித்து க்ஷய ரோகத்தில் கொண்டு சேர்க்கும் தன்மையுள்ளது.

## உளமாந்தைக்கு மருந்து.

இந்தநோய் வந்தநாழி விரைத்திடு கயரோகமாம்
முந்தநோய் அய்யும்பித்தும் முடுகிடு குளிர்ச்சிவெப்பு

வந்ததோர் தினங்கள் கண்டால் வந்திடு
மெனவே நாளும்
பைந்தொடி யாவின்பாலுஞ் சீனியுங்
கொள்ளலாமே. (52)

(இ-ள்)

இந்நோய் கயரோகத்திற்குக் காரணமாகும் பித்த மும் கபமும் கோளாறடைவதால் தேகத்தில் குளிர்ச்சி யும் உஷ்ணமும் மாறி மாறித் தோன்றும். இந்நோய் கண்ட சில தினங்கள் வரை பசுவின் பாலும் சீனியும் சேர்த்துப் பருகிவரவும் தீரும்.

### உளமாந்தைக்கு மருந்து.

குன்றி முசுட்டைக் கொடிவேலி கொடிய வேலிப்
பருத்தியுடன்
நின்றேர் நிலத்தில் குமிழிலையும் நீர்திப்பிலியும் பீலியிலே
சென்றே பிடிக்குஞ் சித்தமல்லி .... .... .... ....
.... .... .... .... .... .... .... .... (53)

குறிப்பு:

இச்செய்யுள் முழுவதும் காணப்படவில்லை.

### உளமாந்தைக்கு ''நிலக்குமிழ் எண்ணெய்''

நிலக்குமிழ் துடரிபூலா நிலத்தினில் நிம்புஞ் சம்பு
பலப்பட வஞ்சு கொள்ள பலசரக் கதனைக்கேட்க
நிலப்படு கோட்டமுள்ளி நற்கடு தாணிநெல்லி
குலப்படு மதுரம் வெம்பாடல் கூட்டிநீ யெண்ணெய்
கொள்ளே (54)

(இ-ள்)

நிலக்குமிழ் துடரிவேர்
பூலாவினே நிலவேம்பு
நாவலிலே

இவைகளுடன்

உயர்ந்த கோஷ்டம் உள்ளிப்பூண்டு
கடுக்காய்த்தோல் நெல்லிவற்றல்
அதிமதுரம் வேம்பாடம்பட்டை

இவைகளையும் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துத் தண்ணீர்விட்டு நன்ருக வரைத்துச் சுத்தமான நல்லெண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கித் தினந்தோரும் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொண்டு வரவும். உளமாந்தை தீரும்.

### உளமாந்தைக்குக் "குறிஞ்சியிலைக் களி"

குறிஞ்சியிலை யிடித்துக் குருவை நெல்லி........ரலில்
செறிந்த களி யெண்ணெயுடன் தின்ன
வறிந்த உளமாந்தை மூச்சிருமல் நோவு
பறிந்துவிடு தீர்ந்துக் கண்ணடைக்குங்காணே. (55)

(இ-ள்)

குறிஞ்சியிலை ஒரு பிடி எடுத்துக் குறுவையரிசி, ஒரு பிடியுடன் சேர்த்துத் தண்ணீர் விட்டூறவைத்து அரைத்துக் களியாகக் கிண்டி நல்லெண்ணெய் சேர்த்துத் தின்னவும்.

உளமாந்தை, மேல் சுவாசம், இருமல் முதலானவை நீங்கும்.

### உளமாந்தை ரோகத்திற்கு "வேங்கைப் பட்டைக்கிளி"

வேங்கைமரத் தோலுடனே மென்குருவை நெல்மாவை
யாங்கதனைப் பிட்டாக வாங்கியே—பாங்குடனே
எண்ணெய்தனில் சேர்த்தருத்த யென்று முளமாந்தையத்துப்
புண்ணிருமல் சீயொடுவும் போம் (56)

(இ-ள்)

வேங்கைமரப்பட்டையுடன் குறுவையரிசி மாவைச் சேர்த்துச் சிறிது தண்ணீர் விட்டு நன்ருக விடித்து, அடுப்பின்மேல் வேட்டில் வைத்துப் பிட்டாகச் சுட்டு, நல்லெண்ணெயுடன் சேர்த்து உட்கொள்ளவும்.

உளமாந்தை, புண்கள், இருமல், சீழ், ஓடுவு முதலான நோய்கள் தீரும்.

**உளமாந்தைக்கு ''உப்பிலிக் கல்கம்''**

உப்பிலியு முருமுகந்த விடத் தேரிலையும்
மொப்பு முசுமுசுக்கை முட்குமிழும் — விப்படியே
கோவின் பாலில் குடிக்கவிழுந் தோடுமே
மேவு முள மாந்தையதுவே (57)

(இ-ள்)

| | |
|---|---|
| உப்பிலாங்கொடி | விடத்தேரிலை |
| முசுமுசுக்கையிலை | முட்குமிழ்யிலை |

இவைகளை வகைக்கு 1 சுண்டைக்காயள வெடுத்து, அம்மியின் மேல் வைத்துத் தண்ணீர் சிறிது விட்டுக் கல்கமாக அரைத்துப் பசுவின் பாலுடன் குழப்பி உட்கொள்ளவும். உளமாந்தை தீரும்.

**உளமாந்தைக்குச் ''சிவனார் வேம்பு எண்ணெய்''**

சித்தரருந்து சிவன் வேம்புந் திருந்தநிலத்தின் குமிழ் வேரும்
கொத்தங் கோட்டம் வேம்பாடங் குலவுகருஞ் சீரகம் துரம்
மெத்தமிளகு சீரகமும் வெந்தே யெண்ணெய் விழுங்கி ஞக்கால்
பத்தேயெட்டா ளைதனிற் பறந்தேயோடுமுளமாந்தை (58)

(இ-ள்)

| | |
|---|---|
| சிவனார்வேம்பு | நிலக்குமிழ்வேர் |
| கொத்தான் | கோஷ்டம் |
| மேம்பாரம்பட்டை | கருஞ்சீரகம் |
| அதிமதுரம் | மிளகு |
| சீரகம் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சூரணம்செய்துச் சுத்தமான நல்லெண்ணெய் 1 சேருடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கித் தினம் 1 ஸ்பூனளவெடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

8 அல்லது 10 தினங்களுள் உளமாந்தை தீரும்.

## க்ஷயம், உளைமாந்தை, ஈளை, விப்புருதிக்கு "சங்கெண்ணெய்"

இயற்பெரிய சங்கிஞெடு மின்புரல் சாறணை
 வல்லியிப் படியாடா தொடை
மியல்புடைய தூதுவளை கக்குளைகை யாந்
 தகரை குமிழின் வேருடனே
மயக்கறுவா ராகியொடு சித்தமட்டி
 மாகாளி வலியதோர் புலிதுடைவேர்
மருவுமுக்காவேளை சீதேவி யோரிதழ்
 நல்லணை முத்தமுதவல்லி
செயற்பெரிய செவ்வல்லி கொத்தமல்லிசெய்சீர
 சேருங்கற் கடகமுட
னெய்யதோ ரதிமதுரம் நெல்லிதிப்பிலி கருஞ்
 சீரகம் செறிகுப்பை வேம்பாடல்
நயப்பொடுவடித்தெண்ணெய்நக்கிலோக்ஷயரோகம்
 நாறுமூள மாந்தையுடனே
நெய்யீளை விப்புருதி முதலான ரோகமிது
 நலந்து நொந்தே தீருமே. (59)

(இ-ள்)

| | |
|---|---|
| சங்கம்வேர் | இப்புரல்வேர் |
| சாறணைவேர் | ஆடாதோடைவேர் |
| தூதுவளைவேர் | கையாந்தகரைவேர் |
| குமிழம்வேர் | நிலப்பனங்கிழங்கு |
| இண்டம்வேர் | முக்காவேளைவேர் |
| நெய்ச்சட்டிவேர் | ஓரிதழ்தாமரைவேர் |
| கோரைக்கிழங்கு | சீந்தில்கொடி |
| செவ்வல்லிக்கொடி | கொத்தமல்லிவிதை |
| சீரகம் | கற்கடசிங்கி |
| அதிமதுரம் | நெல்லிவற்றல் |
| திப்பிலி | கருஞ்சீரகம் |
| சதகுப்பை | வேம்பாடம்பட்டை |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு

நல்லெண்ணெய் 2 சேர் விட்டு ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினம் 2 வேளை அருந்திவர

க்ஷயரோகம், உளமாந்தை, ஈளை, விப்புருதி முதலான வை தீரும்.

## மூக்குநீர்ப் பாய்ச்சல் குணம்.

கண்டமுகமுந் காதுங் காகாத் தூர்வதே போலத்
துண்டமுந் தினவும் பத்தித்தும்மியே தண்ணீர் வீழ்ந்து
மண்டையுங் கனத்து நொந்துவாதமும் பகைக்குமாகில்
முண்டகமதிக்குமாதே! மூக்குநீர்ப்பாய்ச்சல்போமே (61)

(இ-ள்)

தொண்டை, முகம், காதுமுதலான இடங்கள்காற்று ஊறுவதைப் போன்ற உணர்ச்சி யேற்படும் அரிப்புமுண்டாகும். அதிகமான தும்மலுடன், நீரும் வெளியாகும். தலை கனக்கும். வாதம் அதிகரிக்கும்.

இவை 'மூக்குநீர்'' பாய்ச்சல் குறிகளாகும்.

## பித்தம், பாண்டு, வெப்புப்பாவை, கயரோகத்திற்கு ''எருக்கம் பால் சூரணம்''

வைத்தே யெருக்கம் பால்சிறங்கை மணக்குங் கிராம்பு திரிகடுகு
மெத்தநிலவி னுப்புடனேமேவுங் கருஞ்சீரகப்பொடியும்
நெய்த்த வுள்ளி சமனுகை நிறையோரொன்றுமுக்கழஞ்சு
கைத்தகரை பிரமியிலை கரைந்தே சாத்திவரைத் துவைத்தே (62)
உலர்த்திப்பொடிசெய்து ஒன்றுபடவோர்நாள்வெருகடி கொள்
பலத்த பித்தம்பாண்டு வெனில்ப் பேணிநறுநெய் யதிற் கொள்ளு
நலக்கும் வெப்புப் பாவையெனில் நன்ருயெண்ணெய் சீனியிற்கொள்
கலக்குங் கயரோகமெனில் காயும் பசும்பாற்தனில் கொள்ளே (63)

(இ-ள்)

| | |
|---|---|
| எருக்கம்பால் | ஒரு சிறங்கை |
| கிராம்பு | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| இந்துப்பு | கருஞ்சீரகம் |
| பூண்டு | |

இவைகளை வகைக்கு $3\frac{3}{4}$ வராகனெடை வீதமெடுத்து, இடித்துச் சூரணஞ்செய்துக் கையாந்தகரைச் சாற்றிலும், பிரமியிலைச் சாற்றிலும் 1 நாள் தனித்தனியே ஊற வைத்து உலர்த்தவும். இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளவும்.

பித்தம், பாண்டு முதலான ரோகத்திற்குப் பசுவின் நெய்யில் சாப்பிடவும்.

வெப்புப்பாவைக்கு நல்லெண்ணெயிலோ அல்லது சீனியிலோ உட்கொள்ளவும்.

கயரோகத்திற்குக் காய்ச்சிய பசுவின் பாலுடன் உட்கொள்ளவும்.

### கபால வறட்சிக் குறிகள்.

தலையுங் கனத்துக் காது வலித்திறுகிக்
களிபோல் வயிற்றில் திரண்டு விழும்
மலையுமோடுப் போலொக்கச் சய
மதிகப் பாண்டிநீர் மாறுது
நிலையுங் கெடவே பரிகார
நீதியிப்படியே செய்து வரில்
துலையுஞ் சொன்னோம் பீனிசமுஞ்
சொல்லுங் கபால வறட்சியுமே. (64)

(இ-ள்)

தலை கனக்கும், காதில் வலியேற்படும். களிபோல் வெளியாகும் வயிற்றில் வாயு சஞ்சரிக்கும். பீனசத்திற்குள்ள பரிகாரங்கள் கபால வறட்சிக்கும் இதமளிக்கும்.